பகிர்தலும் புரிதலும்

ஞானம் சஞ்சிகை ஆசிரியத் தலையங்கங்கள்

தி. ஞானசேகரன்

ஞானம் பதிப்பகம்

பகிர்தலும் புரிதலும்

‘ஞானம்’ சஞ்சிகை

ஆசிரியத் தலையங்கங்கள்

தி. ஞானசேகரன்

ஞானம் பதிப்பகம்

55ஆவது வெளியீடு

நூல்
பகிர்தலும் புரிதலும்
'ஞானம்' சஞ்சிகை
ஆசிரியத் தலையங்கங்கள்

Book
Pakirthalum Purithalum
'Gnanam'
Magazine Editorial

ஆசிரியர்
தி. ஞானசேகரன்

Author
T. Gnanasekaran

பதிப்பு
முதலாம் பதிப்பு, 2018

Edition
1st Edition, 2018

நூல் வடிவமைப்பு
சுதா கோபி

Designed By
Sudha Gooby

பதிப்பகம்
ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6
இலங்கை
தொலைபேசி: + 94 11 2586013
தொலைநகல்: + 94 11 2362862
மின்னஞ்சல்: editor@gnanam.info
இணையத்தளம்: www.gnanam.info

Publisher
Gnanam Pathippakam
3B, 46th Lane, Colombo 6
Sri Lanka
Tel: + 94 11 2586013
Fax: + 94 11 2362862
Email: editor@gnanam.info
Web: www.gnanam.info

அச்சுப்பதிப்பு
குமரன் அச்சகம்,
கொழும்பு–6, இலங்கை

Printed By
Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo 06, Sri Lanka.

Pages
(xxvi + 418)

Price
Rs. 750/=

ISBN
978-955-8354-88-9

This licensed work is free to use, share, remix, and redistribute with attribution to Gnanam Pathippakam, but not permit for any commercial work

முன்னுரை

காலவெளி கடந்து நிலைக்கும் கருத்துநிலை:

இருதசாப்தகால சமூகப்போக்கின் பதிவாக 'ஞானம்' ஆசிரியத் தலையங்கங்கள்

இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன்
முதுநிலை விரிவுரையாளர்
துறைத்தலைவர், சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஈழத்தில் தொடர்ச்சியாக பதினெட்டு வருடங்களாக வெளிவந்துகொண்டிருக்கும் "ஞானம்" எனும் கலை இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர் தி.ஞானசேகரன் அவர்கள் இந்த நூலை வெளியிடுவதன் மூலம் தனது படைப்பாக்க ஆளுமைக்கு அப்பால் சென்று ஒரு சிற்றிதழ் ஆசிரியராக அவரது சிந்தனைத் தளத்தினைப் பற்றிய ஆய்வுக்கு வழிசமைக்கின்றார். கலை இலக்கிய சஞ்சிகை ஒன்றின் ஆசிரியராகத் தொடர்ந்து இலக்கியப் பணி ஆற்றிவரும் ஞானசேகரன் அவர்களால் மாதாந்த இதழ்களுக்கு எழுதப்பட்டுவந்த ஆசிரியத் தலையங்கங்களை தெரிவுசெய்து இலக்கியம், சமூகம், அரசியல் மற்றும் பல்துறை எனும் நான்கு தலைப்புக்களின்கீழ் தொகுத்துத்தரும் "பகிர்தலும் புரிதலும்" எனும் இந்த நூலில் எல்லாமாக நூற்றொரு ஆசிரியத் தலையங்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இருநூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியத் தலையங்கங்கள் வெளிவந்தபோதிலும் நூற்றொரு ஆசிரியத் தலையங்கங்களே இங்கு நூலாக்கப்படுகின்றன. இந்நூல் ஞானசேகரனின் இலக்கியம், சமூகம் மற்றும் அரசியல் பற்றிய கருத்துநிலைகளை வெளிக்காட்டும் ஆவணமாக நிலைபெறப்போகின்றது.

இலங்கைத் தமிழ்ச் சூழலில் வாழ்ந்துவரும் படைப்பாளிகளில் தி.ஞானசேகரன் அவர்களின் படைப்பாளுமையின் பரிமாணங்கள்

பலவாகும். ஞானசேகரன் அவர்கள் சிறுகதைப் படைப்பாளி, நாவலாசிரியர், கலை இலக்கியச் சஞ்சிகையின் ஆசிரியர், கட்டுரையாளர், வெளியீட்டாளர், பயண இலக்கியகர்த்தா என்று விரியும் படைப்பாற்றல்கள் மிகுந்த படைப்பாளி. ஒரு படைப்பாளியின் படைப்பாற்றலின் திறத்தினைப் படைப்பின் பல்வேறு கூறுகளை மையப்படுத்தி வெளிக்கொணர்வது வெகுசாதாரண விமர்சனப் பாணியாக நிலைத்துவிட்டது. படைப்பின் வடிவம், மொழி, உத்திமுறைகள், பாத்திரவார்ப்பு என்று நீட்சிபெறும் பட்டியலைக் கடந்து படைப்பாளியின் கருத்துநிலை தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதுண்டு. ஞானசேகரன் அவர்களின் 'கருத்துநிலை' தொடர்பாக அவரால் படைக்கப்பட்ட சிறுகதைகள், நாவல்கள் வாயிலாக தெளிவான உசாவல்கள் செய்யப்படமுடியும்; செய்யப்பட்டுமுள்ளன. ஆயினும், 'ஞானம்' என்ற கலை இலக்கியச் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து 200 இதழ்களுக்குமேல் மாதாந்த இதழாக வெளிக்கொணர்ந்த ஒரு சிற்றிதழ் ஆசிரியரின் கருத்துநிலைத்தளம் என்பது வெறுமனே ஒரு படைப்பாக்க கர்த்தாவின் கருத்துநிலைத் தளமாகச் சுருங்கிவிட முடியாதது. அது மிக விரிவாக ஆராயப்படவேண்டியது. மிக விரிவான தளத்துக்கு இட்டுச்செல்லப்படவேண்டியது.

'கருத்துநிலை' (Ideology) என்பது என்ன? என்ற வினாவுக்கான விடைகாண முற்படுவது விரிவான தேடலுக்கு எம்மை இட்டுச் செல்லும். பண்பாட்டுக்கும் கருத்து நிலைக்கும் இடையிலான தொடர்பினைக் குறித்து எழுதும்போது பேராசிரியர் சிவத்தம்பி (2011) அவர்கள் 'Ideology என்பது, அதாவது நாம் உலகத்தை விளங்கிக்கொள்வதற்கு, உலகத்தின் நடவடிக்கைகளில் சில அர்த்தங்களைக் கண்டுகொள்வதற்கு உதவுகின்ற ஒரு விஷயம் அல்லது கட்டமைப்பாய் இருக்கின்ற பிரமாணங்கள், கருத்துக்கள், நிறுவனங்கள் இவை யாவும் சேர்ந்துதான் ideology. இந்த ideologyஐ வைத்துக் கொண்டுதான் நாம் உலகத்தை விளங்கிக்கொள்ள முடியும். இந்த ideology என்பதுதான் cultured, புறவேர்.....' என்று குறிப்பிடுகின்றார். தொடர்ந்து குறிப்பிடும் போது 'Ideology என்பது உலக நோக்கோடு சம்பந்தப்பட்டது (world view). ஒரே நேரத்தில் ஒரு சமூகத்தில் ஒரு ideologyதான் இருக்கும் என்பது இல்லை. ஒரு framework ற்குள் இரண்டு மூன்று ideologies இருக்கலாம். அப்படி இருந்திருக்கிறது.....' என்றும் எழுதுகின்றார். இதனை ஓர் அடிப்படையான விளக்கமாகக்கொண்டு நோக்குகின்றபோது, ஒரு

படைப்பாளியின் கருத்துநிலை என்பது அவனது பண்பாடுபற்றிய ஆழமான புரிதலின் விளைவாகவும், தன்பண்பாடு தன் சமூகம் தொடர்பான விமர்சனங்களாகவும் வெளிப்படுகின்றது. அத்துடன், ஒரு படைப்பாளி தான் காணும் சமூகப் போக்குகளின் நேர்நிலை மற்றும் எதிர்நிலை அனுபவங்களுக்கு கொடுக்கும் அர்த்தங்கள் மற்றும் எதிர்வினைகளின் வழி உருவாக்கப்படுகின்றது. இவற்றின் வழியாகப் படைப்பாளியிடத்தில் ஒரு இலட்சியநிலை உருவாகின்றது. அந்த இலட்சியநிலை மீண்டும் மீண்டும் சமூக இயங்கியலுடனும், நிகழ்போக்குகளுடனும் பொருத்திப் பார்க்கப்படுகின்றது. இதன்வழி உலகம் பற்றிய படைப்பாளியின் நோக்குநிலை அல்லது கண்ணோட்டம் (perspective) ஒன்று உருவாகின்றது. இது படைப்பில் வெளிப்படும்போது படைப்பாளியின் கருத்து நிலையாகின்றது. இதற்கு அந்தப் படைப்பாளியின் வாழ்க்கைத் தடம், வாழ்வனுபவங்கள், அரசியல் வயப்பாடு, கல்விப் புலம், வரித்துக்கொண்ட தத்துவப் பின்னணிகள் போன்ற பலவிடயங்கள் பின்புலக் காரணிகளாக நின்று தொழிற்படும். ஞானசேகரன் என்ற புனைகதைப் படைப்பாளியின் கருத்து நிலைகளும், சஞ்சிகை ஆசிரியரின் கருத்து நிலைகளும் இந்த வரன்முறைகளைப் பிரமாணமாகக்கொண்டு ஆராயப்படும் நிலையில் தெளிவான புரிதல்கள் ஏற்படும்.

'ஞானம்' கலை இலக்கியச் சஞ்சிகையின் ஆசிரியத் தலையங்கங்கள், ஞானசேகரன் அவர்கள் கொண்ட தத்துவப் பின்புலம், இலக்கியக் கொள்கை, அரசியல் பார்வைகள், சமூக விமர்சனங்கள், கலை பற்றிய நோக்குகள், முதலிய பல விடயங்களை வெளிக்கொணர்பவையாக அமைந்துள்ளன. கால நகர்ச்சியுடன் ஒருங்குவைத்துப் பார்க்கும் நிலையில் ஒரு படைப்பாளியிடத்தில் மாற்றமின்றி நிலைத்துவிட்ட கருத்தியல் தொடர்ச்சி என்ன? சமூக நகர்வின் வழியே அவன் மாற்றிக் கொள்ள எண்ணும் கருத்துநிலைகள் எவை? என்பன பற்றிய மிக நுணுக்கமான புரிதல்களுக்கும் வழிவகுப்பவையாகின்றன. சஞ்சிகையில் வெளியான அனைத்து ஆசிரியத் தலையங்கங்களும் புலப்படுத்தும் ஞானசேகரனின் கருத்துநிலைகளை ஓரளவுக்கு இலக்கியம், இலக்கிய கர்த்தாக்கள் மற்றும் இலக்கியச் சூழமைவுகள் தொடர்பான கருத்து நிலைகள், கலைகள் தொடர்பான கருத்து நிலைகள், நூலாக்கம், பதிப்பு முயற்சிகள், விநியோக முறைகள் தொடர்பான கருத்து நிலைகள், சமகாலத்து சமூகப் பிரச்சினைகள்

தொடர்பான கருத்து நிலைகள், இன முரண்பாடு, தேசியம், இன நல்லிணக்கம் தொடர்பான அரசியல் ரீதியான கருத்து நிலைகள், கல்வி மற்றும் மொழிக்கல்வி தொடர்பான கருத்து நிலைகள், இலக்கியத்தின் எதிர்கால செல்நெறி தொடர்பான கருத்து நிலைகள் என்று வகைப்படுத்திப் பார்க்கமுடியும். இவற்றை இந்த நூலில் இலக்கியம், சமூகம், அரசியல், பல்துறை என்ற பெரும்படியான வகுதிகளுக்குள் தொகுப்பாக்க முனைந்துள்ளார்.

ஞானத்தின் ஆசிரிய தலையங்கங்கள் ஓர் இலக்கிய சஞ்சிகை என்ற வகையில் இலக்கியப் போக்குகள், இலக்கியக் கருத்தாக்கங்கள், இலக்கியச் சூழமைவுகள் குறித்து அதிகளவு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. இலக்கியம் என்ற வகுதியில் தொகுக்கப்பட்டுள்ள இருபத்தாறு ஆசிரிய தலையங்கங்களிலும் இவற்றைக் காணலாம். முதலாவது தலையங்கம் முதலாவது இதழில் வெளிவந்ததால் தவிர்க்கப்படாமல் சேர்க்கப்பட்டுள்ளதால் இந்தப்பகுதியில் இருபத்தாறு தலையங்கங்கள் வந்தமைந்துள்ளன.

ஞானசேகரன் 'கலை இலக்கிய உலகில் மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளிப்போம்' என்ற தலைப்பில் பெப்ரவரி 2003இல் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில்,

"பாரம்பரிய சிந்தனை மரபுகள், கோட்பாடுகள் முதலியவை பின் நவீனத்துவக் கோட்பாட்டாளரால் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. மரபுவழிச் சிந்தனைகளின் கட்டுமானத்தை அவர்கள் நிராகரிக்கின்றனர். அச்சிந்தனைகளில் மேலாதிக்கப் பண்பு, ஒன்று திரட்டிய பண்பு (Totalising) **முதலியன காணப்படுவதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். மாற்றுக் கருத்துக்களை அவர்கள் வரவேற்கின்றனர்."**

என்று குறிப்பிட்டமை இலக்கிய முயற்சிகளிலே மாற்றுக் கருத்துக்கள் மற்றும் மாற்றுச் சிந்தனைகளின் அவசியம் குறித்த ஞானசேகரனின் கருத்து நிலையினைச் செறிவாகத் தருகின்றது.

புலம்பெயர் இலக்கிய வகைமையின் முதன்மையை ஏற்றுக்கொண்டு அதற்கெனத் தனியானதொரு பெருந்தொகுப்பை உருவாக்கியவர் ஞானசேகரன் அவர்கள். 'ஞானம்' சஞ்சிகையில் புலம்பெயர் இலக்கிய கர்த்தாக்களின் படைப்புக்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருபவர். எனினும், புலம்பெயர் இலக்கிய உலகில் வெளிவந்த சஞ்சிகைகளின் செயற்பாடுகளை விமர்சனம்செய்து ஜூலை 2003 : இதழ் 38 இல் அவர் எழுதிய தலையங்கத்தில்,

“இதேவேளை எமது அவதானிப்பிற்பட்டதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். தமிழ்ப் பண்பாட்டுக்கு ஒவ்வாத ஆக்கங்களைச் சில சஞ்சிகைகள் முக்கியம் கொடுத்துப் பிரசுரிக்கின்றன. இவற்றில் சில அருவருக்கத்தக்க விடயங்களாகவும் இருக்கின்றன. சில சஞ்சிகைகள் தெருச்சண்டை போல் அநாகரிகமான சொல்லாடலில் தனிப்பட்டவர்களைத் தாக்குவதும், அவற்றில் சிலர் தாமே கூத்தாடி தாமே மெச்சிக் கொள்ளும் – தங்கள் பணியைத் தாங்களே புகழும் – கோமாளித்தனமும் நடைபெறுகின்றன.”

என்று குறிப்பிடுவது தன்காலத்து இலக்கியச் சூழமைவில் நிகழும் கண்டிக்கத்தக்க விடயங்களை விமர்சனம் செய்யும் இவரின் கருத்து நிலையினைப் புலப்படுத்துகின்றது. மாற்றத்தை உள்வாங்குதல் என்ற பேரில் நடைபெறுகின்ற மலினமான படைப்பாக்க முயற்சிகள் குறித்த இவரின் கண்ணோட்டம் தெளிவாக வெளிப்பட்டுள்ளது.

இலக்கியமானது காலத்தின் தேவை உணர்ந்து கருத்துக்களை சமூகப் பயன்மிக்கதாகத் தரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு சமூகப்பயன் நோக்கிலான எந்தவொரு படைப்பாளியிடத்திலும் உள்ள எதிர்பார்ப்பு - இலக்கியம் சமூகத்துக்கு ஏதாவது நன்மை தரவேண்டும் என்ற இந்தக் கருத்து நிலையை ஞானசேகரன் சிறுவர் இலக்கியம் தொடர்பாக வெளிப்படுத்தும்போது,

“வெறும் பாப்பா பாடல்கள் நீதிக்கதைகள் மட்டும் சிறுவர் இலக்கியமாகிவிடாது. இலக்கியம் மொழியாலானது. சிறுவர் இலக்கியத்தின் மொழி தனித்துவமானது. எளிமையானது. ஓசை நயம் மிக்கதாகவும் கருத்துக் கவர்ச்சியுள்ளதாகவும் அது அமைய வேண்டும். புதிய சவால்களை இன்று சிறுவர் சமூகம் எதிர்நோக்கியுள்ளது. நிற, இன, மத பாரபட்சம், பாலியல் ரீதியான வன்முறை, வர்க்க ரீதியான சுரண்டல், போர்ச் சூழலால் உருவாகிய பாதிப்புக்களான அகதி, அநாதை நிலைமைகள். இவைகள் பற்றிய சிறுவர்களின் சிந்தனை வெளிப்பாடுகள், செயற்பாடுகள் கருப்பொருளாக வேண்டும்”

என்று ஒக்டோபர் 2003 : இதழ் - 41இல் எழுதுகின்றார். இக்கருத்து உண்மையில் ஒரு மரபார்ந்த இலக்கியப்போக்கு சமகால சூழமை வில் எவ்வாறான கருத்து நிலைகளைத் தன்னமைவாக்கம் செய்யவேண்டும் என்பது பற்றிய ஞானசேகரனின் சிந்தனையாக அமைகின்றது.

ஞானசேகரன் அவர்கள் முற்போக்கான கருத்துக்களைத் தன் சிறுகதைகள், நாவல்களில் வெளிப்படுத்தியவர். சமூகத்தில் மிக நலிவுக்குட்பட்ட மலையகத் தமிழ் மக்களின் வாழ்வின்

துயரங்களை விலாவாரியாக வெளிப்படுத்தியவர். எனினும், முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் எழுத்தாளர்களில் தன்னை ஒருவராக அடையாளப்படுத்திக் கொள்ளாதவர். எப்போதுமே முற்போக்கு அணிமீதான விமர்சனங்களை முன்வைக்கும் இவர் ஏப்ரல் 2004 : இதழ் - 47இல் வரும் ஆசிரிய தலையங்கத்தில்,

"எமது சிந்தனை முற்போக்கானது, செயற்பாடுகள் நடுநிலைமையானவை. முற்போக்கான ஒரு தத்துவத்தை, யானை தடவிய குருடர்களாக எமது பார்வையே முழுமையானது, நாமே அதனைப் பூரணமாகப் புரிந்து கொண்டவர்கள் என எண்ணி அணிசேர்த்து மற்றவர்களை எதிரிகளாக வரித்துக்கட்டிக் கொண்டு வாதிட்டும், முட்டைஎறிந்தும், குட்டை குழப்பியும், இலக்கிய ஆற்றல் மிகுந்தவர்களை, ஆரவாரமின்றி இலக்கியப்பணி செய்பவர்களைப் புறந்தள்ளியும், கௌரவிக்காது ஓரங்கட்டியும், இளந்தளிர்களைக் குருத்திலே கருகவைக்கும் செயல்களைப் புரிந்து செயற்பட்டவர்கள் இன்று வீழ்ச்சியுற்று, எழும்பமுடியாது தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். கருத்தியலைச் சரிவரப் புரிந்து செயற்படாததன் விளைவே இவர்களது வீழ்ச்சி. இதன் பின்னரும் இவர்களில் ஒரு சிலருக்குத் தெளிவு பிறக்கவில்லையென்றால், இவர்களை எதில் சேர்ப்பது?

நடுநிலைமை என்று ஒன்று உலகில் இல்லை என எண்ணுவது வரலாற்றைப் புரிந்து கொள்ளாத தெளிவற்ற கருக்கட்டலின் பிள்ளைப்பேறே"

என்று எழுதுவது ஈண்டு கவனிக்கத்தக்கது. இந்த விமர்சனம் முற்போக்கு அணியினர் மீதான தீவிர விமர்சனக் கருத்து நிலையாக வெளிப்படும் அதேவேளை, நடுநிலை இலக்கியச் செயற்பாடுகளின் மீதான இவரின் நம்பிக்கை வெளிப்பாட்டைக் காட்டுகிறது.

டிசம்பர் 2007 இல் வெளியான 91வது இதழில் எழுதிய 'ஏற்று"மதி" - இறக்கு"மதி"! என்ற ஆசிரியர் தலையங்கம் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களுக்கும் தமிழக எழுத்தாளர்களின் நூல்களுக்கும் விலை நிர்ணயத்தில் ஏற்படும் பாரிய வேறுபாடுகளுக்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்கின்றது. அதில்,

"நமது நாட்டு நூல்களைத் தமிழ்நாட்டு வாசகர்கள் வாங்கினால்தான் எங்களால் வாழ முடியும் என்ற நிலை இல்லை, 'அள்ளு கொள்ளையாகப்' பணம் சம்பாதிக்கும் அவாவும் எங்களிடமில்லை, அது சாத்தியமுமில்லை. அப்படியொரு விற்பனைப்பெருக்கை நாம் கற்பனையிற் கூட காண்பதில்லை"

என்று குறிப்பிடுவது ஈழத்துப் புத்தகச் சந்தையின் நிலைபற்றிய ஞானசேகரனின் ஒரு தெளிவான பார்வையினைக் காட்டுவதுடன், அதுகுறித்த வேதனை வெளிப்பாடாகவும் அமைவதைக் காணலாம்.

ஒரு சஞ்சிகை ஆசிரியன் என்ற வகையில் சமகாலத்தில் சமுதாயத்தின் எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினைகள் குறித்த ஞானசேகரனின் கருத்துக்கள் அவரது ஆசிரியத் தலையங்கங்களில் வெளிப்படுவதைக் கவனிக்கலாம். இளையோர் நடத்தைப் பிறழ்வுகள், சிறுவர் துஷ்பிரயோகம், சமூக வலைத்தளம் தொடர்பான பிரச்சினைகள், பெண் ஒடுக்குமுறை சார்ந்த கருத்துக்கள் எனப் பல்வேறு சமூக விவகாரங்கள் தொடர்பாகத் தனது கருத்துநிலையினை தகுந்த தருணங்களில் தெளிவாக விளக்கியுள்ளார். சமூகப் பிரச்சினைகளின் போக்குகள், அவற்றுக்கான காரணங்கள், சமூகப் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு, அவற்றைத் தீர்ப்பதற்கான உபாயங்கள் என்பன குறித்து ஞானம் ஆசிரியரின் அக்கறையை அத்தகைய ஆசிரியத் தலையங்கங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. ஞானத்தின் டிசம்பர் 2011இல் வெளியான 139ஆவது இதழ் இணையப் பயன்பாட்டின் இன்றைய போக்குகளை விரிவாக சிலாகிக்கின்றது.

“இன்று நமது சமூகத்தில் இணையத்தளப் பாவனையால் இளைஞர்கள் வழிதவறிப் போகாமல் இருக்கப் பல்வேறு மட்டங்களில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தவேண்டிய தேவை பெரிதும் உணரப்படுகிறது. இதனைப் பாடசாலை மட்டத்திலேயே ஆரம்பிக்க வேண்டும். அதேவேளை பெற்றோர்களும் இணையத் தொழினுட்பங்கள் பற்றிய அறிவை ஓரளவாவது தேடிக்கொள்ள முயற்சிப்பதோடு தமது பிள்ளைகளைச் சிறந்த கண்காணிப்பின் மூலமும் ஆற்றுப்படுத்தல் மூலமும் இணையத்தை நல்லமுறையில் பயன்படுத்த வழிகாட்ட வேண்டும்”

என்று இணையப் பயன்பாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உபாயங்களை நடைமுறை ரீதியாகச் சிந்திக்கின்றார். ‘மூத்தோர்க்கும் இளையோர்க்குமான இடைவெளியை நிரப்புதல்தான்’ இளையோர் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழியாக முடியும் என்பதை யதார்த்தமாக வெளிப்படுத்துகின்றார். அவ்வாறே ‘கைத்தொலைபேசியும் இன்றைய இளைஞர் சமுதாயமும்’ என்ற தலைப்பிலான ஆசிரியர் தலையங்கம் ஜனவரி 2012இல் 140வது இதழில் வெளியானது. அதில்,

“எந்தவொரு ஆணும் பெண்ணும் நேரில் சந்திக்கும்போது அவர்களது வெட்க உணர்வுகள் அவர்களிடமிருந்து வார்த்தைகள் வருவதைத் தடுத்துவிடும். அத்தோடு சமுதாயத்தின் கழுகுப் பார்வைகள், சமூகக் கட்டுப்பாடுகள் பெரிய திரைகளாகநின்று பெரும் தீமைகள் ஏற்படாமல் காக்கின்றன. ஆனால் இந்த வெட்கத் தடைகளையும் சமூகத் தடைகளையும் கைத்தொலைபேசிகள் தகர்த்தெறிந்து தங்குதடையற்ற செக்ஸ் பேச்சுக்களைப் பரிமாற்றம் செய்வதற்குத் துணை புரிகின்றன.”

என்று மிக இயல்பானதும் தீவிரமான சிந்தனைக்குரியதுமான காரணங்களைப் பகுப்பாய்வு செய்கின்றார்.

கிராமியக் கலைகள், பிராந்தியக் கலைகள் என்பவற்றின் புத்துயிர்ப்பை மீள மீள வலியுறுத்தும் இவர், அவற்றின் நலிவுக்குப் பின்புலமான காரணிகளை விரிவாக ஆராய்ந்து வெளிப்படுத்துகின்றார். “கிராமிய மட்டத்தில் நாட்டுக் கூத்துக்குப் புத்துயிரளிப்போம்” என்ற தலைப்பில் ஜுன் 2004: இதழ் - 49 இல் எழுதிய ஆசிரிய தலையங்கத்தில் கிராமிய சமூகங்களில் நாட்டுக்கூத்துக் கலையானது வலுவிழந்து வருவதற்கான காரணங்களையும் அவை வளர்த்தெடுக்கப்படவேண்டியதன் அவசியத்தினையும் வலியுறுத்துகின்றார்.

“மண்ணுடன் இணைந்த கிராம மக்களின் வாழ்வியலின் கலை இலக்கிய வெளிப்பாடாகக் கிராமிய நாடகம் மிளிர்கிறது. இது நாட்டுக்கூத்தென நயம்பட அழைக்கப்பட்டது. காலவோட்டத்தில் மேலைத்தேயக் கல்வி, பண்பாட்டுக் கலாசாரத் தாக்கத்தால் நாட்டுக்கூத்துக் கலைவடிவம் களையிழந்து, பூகோளமயமாகும் சூழலில் காலத்தோடு முரண்பட்டு நிற்பதாகக் கொள்ளப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது....”

என்று கிராமிய சமுதாயங்களின் கலைப்பாரம்பரியங்களை பாது காக்கவேண்டியதன் அவசியத்தினைக் கருத்தாடுகின்றார்.

ஞானம் சஞ்சிகையின் பெரும்பாலான மார்ச் மாத இதழ்களோ அல்லது அதற்கு அண்மித்த இதழ்களோ பெண்கள் மீதான அடக்குமுறைகள் பற்றியும் பெண் விடுதலை சார்ந்த கருத்து நிலைகளையும் பேசாதுவிட்டதில்லை. மார்ச் 2004இல் வெளியான இதழ் - 46

“பெண்களுக்கு இழைக்கப்படும் அக்கிரமங்கள் பத்திரிகைகளில் செய்திகளாக வரும்போதும், பாலியல் பலாத்காரம் பற்றிய விவரணம்

வெளியிடப்படும்போதும் அவை சித்திரிக்கப்படும் விதம், இடப்படும் தலையங்கம், பயன்படுத்தப்படும் மொழிப்பிரயோகம் ஆகியவை பணம் பண்ணும் நோக்கினைக் கொண்டதாகவும், பலாத்காரத்தை ஊக்குவிப்பதாகவும் அமைந்து விடுவதைக் காண்கின்றோம். கலை இலக்கியங்களில் காட்டப்படும் பெண்களும், ஆணாதிக்கத்தின் பிம்பத்தையே பெரும்பாலும் பிரதிபலிப்பதாகவும் பெண்ணியவாதிகள் வாதாடுகின்றனர்.”

என்று குறிப்பிடுகின்றார்.

மேற்கண்ட விடயங்களுடன் சிறுவர் உரிமை சார்ந்த பிரச்சினைகள், முன்னாள் போராளிகளின் பிரச்சினைகள், காணிச் சுவீகரிப்பு, ∴பேஸ்புக் விபரீதங்கள், நிலச்சரிவில் சிக்கிய லயத்து வாழ்வின் கோரமுகங்கள், இயற்கை இடர்களை முகாமை செய்தல், போதைப்பொருள் பாவனை சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்ளல் முதலான பல எரிந்து கொண்டிருக்கும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் சமூகப் பொறுப்புணர்வுடன் கூடிய சில கருத்து நிலைகளைப் பதிவாக்கம் செய்துள்ளார்.

ஞானத்தின் ஆசிரியத் தலையங்கங்கள் அரசியல் நிலவரங்களை வெளிக்கொணர்வதில் அதிக அக்கறை கொண்டிருந்தன. குறிப்பாக இலங்கையின் அரசியல் போக்கில் அவ்வப்போது பதிவுசெய்யப்பட வேண்டிய விடயங்கள் விமர்சனப் பண்புடன் எழுதப்பட்டுவந்துள்ளன. இலங்கையில் நிலவும் இனமுரண்பாடு, தேசியம், இன நல்லிணக்கம் தொடர்பான தமது அரசியல் நிலைப்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையினைக் காணலாம். இந்த விடயம் தொடர்பான பதிவுகள் மிக அதிகமாக இடம்பெற்றுள்ளன. வரலாறு காணாத மனிதப் பேரழிவு, நல்லிணக்கப் பாதையில் அரசு பயணிக்குமா, 13ஆவது திருத்தச் சட்டமூலமும் இலங்கை அரசியலும், தீர்வுத்திட்டத்திற்கு முன் தீர்க்கப்பட வேண்டியது, அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட தமிழரின் காணிகளை மீளப்பெற வழிதான் என்ன?, ‘நடந்து முடிந்த பொதுநலவாய மாநாடும், 2014 மார்ச் மாதத்தில் இடம்பெற இருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத் தொடரும், ஜனாதிபதித் தேர்தலும் ஒரு மும்முனைக் காய்நகர்த்தல்,’ வடக்கு மாகாணத் தேர்தலும் தமிழரின் எதிர்காலமும், தமிழ்நாட்டில் ஈழத்தமிழர் விடுதலைப் போரின் நினைவாலயம் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம், ‘சர்வதேச விசாரணை வேண்டும்’ என்ற வடமாகாண சபையின் தீர்மானம் ஜெனிவா மாநாட்டில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம், சிறுபான்மையின மக்களிடையே ஒற்றுமையும் புரிந்துணர்வும் அவசியம், இலங்கை

இனப்பிரச்சினை தொடர்பான இந்தியாவின் அணுகுமுறை "பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன், நல்லாட்சி மலரட்டும், தாய்மொழியில் தேசிய கீதம், உதவிக்கரம் வேண்டி நிற்கும் புனர்வாழ்வுபெற்ற முன்னாள் போராளிகள், மக்கள் எதிர்பார்க்கும் நல்லாட்சி, அனர்த்தமும் அநீதியும், போரே போ, மீண்டும் வேண்டாம், செஞ்சோலைப் படுகொலைகள், புரிந்துணர்வும் இனப்பிரச்சினையும், கெடுகுடி சொற்கேளாது, கிழக்கு உதயம்?.....!, சர்வதேச சமூகத்தின் அறிவுரையை அரசு செவிமடுக்குமா? முதலான பல ஆசிரியத் தலையங்கங்கள் ஞானத்தின் அரசியல் நிலைப்பாட்டினைத் தெளிவுறக் காட்டுவன. அந்தக் காலத்தில் வெளியான ஆசிரியத் தலையங்கக் கருத்துக்களுக்கும் அவை எழுதப்பட்ட காலத்துக்கும் இடையில் ஒரு வரலாற்றுப் பார்வையில் நேரடித் தொடர்பு உள்ளது. காலத்தைப் பிரதிபலிக்கும் அரசியல் வெளியை ஞானசேகரன் தனது ஆசிரியத் தலையங்கங்களில் கொண்டுவந்துள்ளார். இத்தகைய ஆசிரியத் தலையங்கங்களைத் தனித்துப் பகுப்பாய்வு செய்வதன் வழி இலங்கையில் தமிழர்களின் உரிமை, போராட்டம், அரசியல் தீர்வுமுயற்சிகள், இன மேலாண்மை, சர்வதேச சமூகத்தின் அரசியல், பிராந்திய அரசியல் நிலவரங்கள் போன்ற பல விடயங்கள் பற்றி மிக ஆழமாக நோக்க முடியும். இவை ஞானசேகரனின் ஒட்டுமொத்தமான அரசியல் பார்வையையும் கண்ணோட்டத்தினையும் வெளிப்படுத்தின. அதற்கான பதப்பருக்கைகளாக இந்த நூலினுள்ளமைந்த அரசியல் சம்பந்தமான இருபத்தைந்து கட்டுரைகள் அமைகின்றன.

இன மேலாண்மைக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான குரலாக சில ஆசிரியத் தலையங்கங்கள் அப்பட்டமாக வெளிவந்துள்ளன. மே 2006இல் வெளியான இதழ் 72இல் போரே போ மீண்டும் வேண்டாம்! எனும் தலையங்கத்தில்,

"வங்கக் கடலின் தாழமுக்கம் காரணமாக வடக்கு கிழக்கு மக்கள் அடிக்கடி அந்தரங்களுக்கு – அவலங்களுக்கு – அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்து அவர்களின் வாழ்க்கை அல்லாடிக் கொண்டிருக்கும் நிலையில், வங்கத்திலிருந்து வந்தோர்கள் எனக் கூறப்படுவோரின் இன்றைய வாரிசுகள் – மூத்த குடியினர் தாமே என்ற மூர்க்கத்தனமான நோக்கோடு சிறுபான்மையினத்தினரைக் காலில் போட்டு மிதிக்கும் கைங்கரியத்தை – இனச் சுத்திகரிப்பு முயற்சிகளை அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக மும்முரமாக முடுக்கி விட்டுக் கொண்டே வருகின்றனர்."

என்று கூறுவதை எடுத்துக்காட்டலாம்.

சில சம்பவங்கள் சரித்திரமாகி நின்று பாதிக்கப்பட்ட மக்களின் மீதான உலகத்தினதும் பிராந்தியத்தினதும் கவனத்தை ஈர்க்கும். செஞ்சோலைப் படுகொலைகள் பற்றி எழுதும் போது,

"முன்னைய காலங்களில் அரசு கூறுவதையே நம்பி அதற்கு ஆதரவாகச் சர்வதேச சமூகம் கருத்துக்களை வெளியிடும் ஒரு நிலைமை இருந்தது. அத்தகைய அரசுமையப்பட்ட பார்வையை செஞ்சோலைப் படுகொலைகள் மாற்றியமைத்துள்ளன என்றே கூற வேண்டும்." *(செப்டெம்பர் 2006 : இதழ் 76)*

என்று குறிப்பிடுகின்றார். செஞ்சோலைப் படுகொலைகள் தொடக்கம் இறுதியில் முள்ளிவாய்க்கால் படுகொலைகள்வரை எத்தனையோ நிகழ்ந்தேறியுள்ள போதிலும் தீர்வின்றித் தொடரும் பிணக்காக தொடர்வதைக் காணலாம். இதனால் இன்றும் இந்தக் கருத்துக்களுக்கான தேவை உள்ளமை உணரப்படுகின்றது.

புரிந்துணர்வும் இனப்பிரச்சினையும் தொடர்பாகக் கருத்தாடு கின்ற ஞானசேகரன் அவர்கள்,

"இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒரு சரத்து பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு முழுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதை வலியுறுத்துகிறது. அதற்கு ஆதரவும் வழங்கப்படவேண்டும் எனவும் கூறுகிறது.

இந்தச் சரத்து புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றிய சந்தேகத்தை தமிழ்பேசும் மக்களிடையே ஏற்படுத்தக் கூடியது. விடுதலைப் போராட்டத்தை ஒரு பயங்கரவாத நடவடிக்கையாகப் பார்க்கும் நிலையே பெரும்பான்மை மக்கள் பலரிடம் உள்ளது." *(நவம்பர் 2006 : இதழ் -78)*

என்று குறிப்பிடுவது உலகில் விடுதலைக்காகப் போராடியவர்களை பயங்கரவாதத்துக்கு எதிரான போர்கள் அழித்துவரும் யதார்த்தத்தை உணர்த்தி நிற்கின்றது. 'சமாதானத்துக்கான யுத்தம்' செய்பவர்கள் உள்ள தேசங்களில் விடுதலைப் போராட்டங்கள் பயங்கரவாதங்களாவது வியப்பானதல்ல.

'கிழக்கு உதயம்?!' *(ஆகஸ்ட் 2007 : இதழ் 87)* என்ற ஆசிரியத் தலையங்கம் ஒரு தேசத்தில் வாழும் ஒரு இனத்தின் பாரம்பரிய வாழ்விடத்தை இன்னொரு மேலாண்மை இனம் வெற்றி கொண்டு வெற்றிவிழாக் கொண்டாடும் நிலைமையை விமர்சனம் செய்கிறது.

‘தொப்பிகல’ (குடுமி மலை) என்ற பகுதியை இராணுவம் வெற்றிகொண்டு வெற்றிவிழா எடுத்தமை தொடர்பாக,

“யுத்தத்தைக் கொண்டாட வேண்டியதில்லை. யுத்தத்தின் முடிவையே கொண்டாட வேண்டும். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். இத்தகைய கொண்டாட்டங்கள் இன நெருக்கடிக்கு இராணுவத் தீர்வையே காணவேண்டுமென்கிற பேரினவாதச் சக்திகளையே பலப்படுத்தும், அரசியல் தீர்வு காணப்படவேண்டியதன் அவசியம் மழுங்கடிக்கப்படும்.” (ஆகஸ்ட் 2007 : இதழ் 87)

என்று தெரிவித்த கருத்தானது ‘அரசியல் தீர்வு’ குறித்தான அவாவை வெளிப்படுத்துகின்றது. இன்று அரசுபெற்ற இராணுவரீதியான வெற்றி கொண்டாடப்படும் உற்சாகத்திலும் தீர்வுக்கான உற்சாகம் குறைந்துள்ளமை அவதானிக்கத்தக்கது. இது இந்தக் கருத்தின் தேவையினை உணர்த்தியுள்ளது.

2009ஆம் ஆண்டில் வெளிவந்த ஞானம் இதழ்களில் மே, ஜூன், ஜூலை, ஓகஸ்ட் இதழ்கள் வன்னியில் நடந்த மனிதப் பேரழிவுகள் பற்றி விரிவாகப் பதிவுசெய்துள்ளன. அதன் பின்னர் வந்த அரசியல் மாற்றங்களில் சர்வதேச சமூகத்தின் தலையீடு, இந்தியாவின் வகிபாகம், முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு, தமிழர்களின் காணிகளின் மீட்பு போன்ற பல விடயங்கள் பதிவாக்கம் செய்யப்பட்டுள்ளன. ஒக்டோபர் 2016இல் வெளியான 197ஆவது இதழில் “எழுகதமிழ்” என்? என்ற தலைப்பில் எழுதப்பட்ட ஆசிரிய தலையங்கம் போரின் பின்னான சமூகம் ஒன்றின் அபிலாசைகளில் போருக்கு அடிப்படைக் காரணமாகிப்போன விடயங்களும் மாற்றமின்றித் தொடர்வதன் அபத்தத்தை எடுத்துக்காட்டுகின்றது.

இந்த நூலின் பல்துறை எனும் பகுதி தனித்துவமானது. ஏனெனில் அவ்வப்போது நிகழ்ந்த பல்வேறு நிகழ்வுகள், நினைத்துப் பெருமை கொள்ளவேண்டிய முதன்மையான ஆளுமைகள், சிறப்புவாய்ந்த ஊடகங்களின் முதன்மை, தமிழ்மொழியின் பெருமை, சில நிறுவனங்களின் பணிகள், மனிதன் செய்த சூழல்சார் இடர்கள் என்று பல்வேறு விடயங்களையும் சிலாகிக்கும் வகையில் எழுதப்பட்ட ஆசிரியத் தலையங்கங்களை தொகுத்து பல்துறை எனும் தனி வகுதி சேர்க்கப்பட்டுள்ளது.

மாமனிதன் மண்டேலா, பாரதரத்னா அப்துல் கலாம், பேராசிரியர் சிவத்தம்பி, முத்தையா முரளிதரன் முதலிய முதன்மையான

ஆளுமைகள் தொடர்பான தகவல்கள் உள்ளன. கொழும்பு கம்பன் கழகம், கொழும்புத் தமிழ்ச்சங்கம், கொடகே நிறுவனம் முதலிய நிறுவனங்களின் கலை, இலக்கியப் பணிகள், தமிழை மையப்படுத்திய உலகளாவிய மாநாடுகள், தமிழ் ஊடகவெளியில் வீரகேசரி, தினக்குரல் முதலிய ஊடகங்களின் இடம் முதலிய பல்வேறு விடயங்கள் சிலாகிக்கப்படுகின்றன.

பொதுவாகவே ஞானத்தின் ஆசிரியத் தலையங்கங்கள் பலவற்றிலும் மொழிக்கல்வி பற்றிய விவாதங்கள் இடம்பெற்று வந்துள்ளன. தாய்மொழிக்கல்வி, இரண்டாம் மொழிக்கல்வி, மொழிகற்பித்தல் பிரச்சினைகள் முதலான பல விடயங்கள் கருத்தாடப்பட்டன. 'மீண்டும் ஆங்கிலமா?' என்ற தலையங்கத்தில் தாய்மொழிக்கல்வி இலங்கைச் சமூகத்தில் ஏற்படுத்திய நேர்முகமான சமூக மாற்றங்களை விளக்குகின்ற அதேவேளை ஆங்கில மொழிமூலக் கல்வியின் பாதக விளைவுகளையும் விமர்சனப் பகுப்பாய்வு செய்கின்றார்.

"ஆங்கிலத்தைப் போதனா மொழியாகச் சில கல்லூரிகளில் மட்டும் அனுமதிப்பதன்மூலம் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் ஒருவித ஏற்றத்தாழ்வையும் சமவாய்ப்பின்மையையும் அரசாங்கமே ஏற்படுத்தப் போகிறதா?..... ஆங்கிலத்தின் அவசியத்தை நாம் உணர்ந்து தான் இருக்கிறோம். அம்மொழியைப் போதனாமொழி ஆக்குவதன் மூலம், அம்மொழியிற் பாண்டித்தியம் அடையலாம் என்பதை நாம் முற்றாக மறுக்கவில்லை.

ஆனால், விடய ஞானம் – பாட அறிவு எல்லோருக்கும் கிடைக்குமா?....." *(ஏப்ரல் 2008 : இதழ் 95)*

என்று இருதரப்பு நியாயங்களையும் விவாதிப்பதன் மூலமாக, "சக்தி வாய்ந்த இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தைப் போதிக்க முடியாதா?" என்ற வினாவை முன்வைக்கின்றார். தாய்மொழிக் கல்விதான் எமது சமூகத்துக்குப் பயன்மிக்கதாக அமையும் என்பது இவரின் கருத்துநிலையின் அடிப்படையாக அமைந்துள்ளது.

மே 2017இல் எழுதிய ஆசிரியத் தலையங்கம் மீதொட்ட முல்லையில் குப்பைமேடு சரிந்து மனித உயிர்கள் காவுகொள்ளப்பட்டமை தொடர்பில் பல கேள்விகளை எழுப்பியிருந்தது. அரசின் அசமந்தப்போக்கினை விமர்சனம் செய்கிறது. அதில்,

“தமக்கு ஏற்படப்போகும் அழிவைப்பற்றி பத்தாண்டுகளுக்கு மேலாக அப்பகுதி மக்கள் அரசுக்கு எடுத்துக்கூறி தம்மைக் காப்பாற்றுமாறு போராடி வந்துள்ளனர். ஆட்சியில் இருந்த அரசு தனது இரும்புக் கரங்களைக்கொண்டும் சண்டியர்களைக்கொண்டும் அப்போராட்டங்களை நசுக்கிவந்துள்ளது”

என்று வெளிப்படுத்தும் துணிச்சல் ஞானசேகரனுக்கு எப்போதும் இருந்தே வந்துள்ளது. இத்துணிச்சல் இலக்கிய சர்ச்சைகளை எழுதும்போதும், அரசியல் போக்குகளை விமர்சனம் செய்யும்போதும், சமூகப் பிரச்சினைகளை வெளிக்கொணரும்போதும் ஞானம் ஆசிரியத் தலையங்கங்களில் வெளிப்பட்டுவந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

நூலாக்கம், பதிப்பு முயற்சிகள் மற்றும் விநியோக முறைகள் தொடர்பான ஞானசேகரனின் கருத்துக்கள் அதிகளவில் அவரது ஆசிரியர் தலையங்கங்களில் அமைந்ததைக் காணலாம். பொதுவாகவே எழுத்தாளர்கள், சஞ்சிகை ஆசிரியர்கள் இவை தொடர்பில் திருப்தியான நிலைகொள்ளும் சூழலமைவு எங்கள் இலக்கியச் சூழலில் இல்லை என்ற கருத்தாடல் தொடர்ந்த வண்ணமே உள்ளது. நூல்களின் விலை நிர்ணயம், நூல் ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கைகள், எழுத்தாளர் ஊக்குவிப்புச் செயற்றிட்டங்கள், நூல்களின் வரவு குறித்த இருப்புக் கணக்கெடுப்பு என்பன தொடர்பாக ஞானசேகரன் எழுதிய தலையங்கங்கள் தனித்துக் கவனம் பெறவேண்டியவையே. ‘சர்வதேசப் புத்தகக் கண்காட்சி - 2005 - ஈழத்து இலக்கிய நூல்களின் விநியோகம் பற்றிய ஒரு விசாரம்’ என்ற தலைப்பிலமைந்த ஆசிரியர் தலையங்கம்.

“கல்வி உயர்கல்வி அமைச்சு முன்னைய காலங்களில் செய்தது போன்று ஒவ்வொரு வருடமும் வெளிவரும் சிறந்த நூல்களை ஒரு குழுவின் மூலம் தெரிவு செய்து அவற்றைக் கொள்வனவு செய்து பாடசாலைகளுக்கு விநியோகிக்க ஆவன செய்யலாம்” *(ஒக்டோபர் 2005 : இதழ் - 65)*

என்று தொடரும் பல ஆலோசனைகளை வழங்குகின்றது. அத்துடன், பெரும்பான்மையின மக்களின் புத்தகப்பண்பாட்டுக்கும் தமிழர்களின் புத்தகப்பண்பாட்டுக்கும் வேறுபாட்டைக் காணவும் விழைகின்றார். இவ்வாறாகப் பல்வேறு விடயங்களை இந்த நூலின் பல்துறை எனும் பகுதி உள்ளடக்கியுள்ளது.

பொதுவாகவே ஞானத்தின் ஆசிரியத் தலையங்கங்கள் ஒவ்வொன்றிலும் ஒருவகை பல்துறை சார்ந்த அலசல்

வந்தமைந்துவிடுவதும் குறிப்பிடத்தக்கது. இலக்கியம்பற்றி எழுதும்போது அரசியலும், அரசியல்பற்றி எழுதும்போது சமூக விவகாரங்களும், சமூகம்பற்றி எழுதும்போது இலக்கிய கர்த்தாக்களின் பொறுப்புணர்வு பற்றியும் துறையிடைத்தொடர்புடன் வெளிவந்த தலையங்கங்களாகவே அமைந்துள்ளன. இதனால் ஞானசேகரனின் ஆசிரியத் தலையங்கம் வெளிப்படுத்தும் கருத்துக்களின் அடிப்படையில் அவரின் சமூக, பண்பாட்டு, அரசியல், இலக்கிய, கல்வி, கலைகள் தொடர்பான சிந்தனைகளை பாரம்பரியமான வாழ்வின் தடத்தில் ஆழமாகக் கால்பதித்த நிலையில் இருந்தவாறே, அதனைக் கடந்த உலக ஓட்டங்களின் தடங்களைத் தொட எத்தனிக்கும் ஈழத்து இலக்கியகாரர் ஒருவரின் கருத்து நிலைகளாக நோக்கலாம். ஒரு படைப்பாளி என்ற நிலையிலும் சஞ்சிகை ஆசிரியன் என்ற நிலையிலும் சமூகப்பெறுமானம் மிக்க கருத்து நிலைகளை வெளிப்படுத்தியுள்ளார். ஞானசேகரனின் பவள விழா மலரில்(2017) “இத்தகைய ஆசிரியர் தலையங்கங்கள் அவை வெளிப்படுத்தும் கருத்துநிலை வெளிப்பாட்டு வகைப்பாடுகளுக்கு முதன்மை கொடுத்துத் தொகுக்கப்படும் நிலையில் ஒரு காலவரலாற்றின் குறுக்கு வெட்டினைத் தரும் என்பதில் சந்தேகமில்லை” என்று இந்த முன்னுரையை எழுதுபவர் ஏற்கனவே குறிப்பிட்ட விடயத்தை மீள நினைவுறுத்துவதுடன், இதுபோன்ற ஆசிரியத் தலையங்கங்களின் தொகுப்பாக்கங்களும், அவைபற்றிய விரிவான ஆய்வுகளும் எங்கள் சமூகப் போக்கை அறிந்துகொள்வதற்கான முதன்மையான தரவுமூலங்களாக எதிர்காலத்தில் விளங்கவல்லவை என்பதை உறுதியாக நம்பலாம்.

இந்த நம்பிக்கையை உறுதிசெய்வதாகவே “புரிதல்” எனும் தலைப்பில் வரும் பதிவுகள் அமைந்துள்ளன. ஞானசேகரன் ஆசிரியத் தலையங்கங்களின் வழியாக பகிரும் விடயங்களை பல்துறை சார்ந்த வாசகர்கள், எழுத்தாளர்கள், மற்றும் புலமையாளர்கள் எவ்வாறு புரிந்துகொண்டு தங்கள் அபிப்பிராயங்கள், ஆலோசனைகள், விமர்சனங்கள், விளக்கங்கள், புரிதல்கள் என்பவற்றை வெளிப்படுத்தினர் என்பதையும் ஒருங்கே பதிவாக்கியமை இந்த நூலின் தொகுப்பில் தனித்துவமாக கவனிக்கப்படவேண்டிய ஒரு விடயம். ஞானம் சஞ்சிகையில் வெளியான படைப்புக்கள்பற்றி எழுதப்பட்ட வாசகர் கடிதங்கள்தான் அவை. எனினும் வாசகர் கடிதங்கள் பலவற்றில் கிளர்த்தப்படும் விவாதங்களும்,

கருத்தாடல்களும் அவற்றை வாசகர் கடிதம் என்ற நிலைகடந்து கவனிக்கவைக்கின்றன. கழிவிரக்கப்படுதல், மஹாலட்சுமி யாருடைய பெயர்?, மூன்று குறிப்புகள், உரியவரோடு மட்டும் சர்ச்சை செய்யுங்கள்! முதலிய விவாதங்கள் கவனிப்புக்குரியவை. புரிதல்கள் எனும் பகுதியில் அமைந்த பெரும்பாலான குறிப்புக்களில் ஞானத்தின் ஆசிரியத் தலையங்கங்களில் பகிரப்பட்டுள்ள விடயங்களுக்கான பாராட்டுக்களும், அவற்றை முன்வைத்த கருத்துக்களும் அடங்கியுள்ளன. உலகளாவிய ரீதியில் நன்கறியப்பட்ட எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், கலைஞர்கள், வாசகர்கள் என்று பல தரப்பினரதும் கருத்துக்கள் "பச்சையாகவே" தொகுக்கப்பட்டுள்ளன. வரதர், சிற்பி, நந்தி, கே.கணேஷ், வல்லிக்கண்ணன், கா.சிவத்தம்பி முதலான அமரராகிப்போன படைப்பாளிகள், விமர்சகர்கள் வாழும் காலத்தில் எழுதிய கருத்துக்கள் பதிவாகியுள்ளன. மேலும், தமிழகத்து ஆய்வாளர்கள், புலம்பெயர்நாடுகளின் படைப்பாளிகள் போன்றோரின் கருத்துக்களும் இதனுள் அடங்குகின்றன. இவை யாவற்றையும் ஞானத்தின் ஆசிரியத் தலையங்கங்களுடன் சேர்த்துப் படிக்கும்போது அத்தலையங்கங்களின் கனதியை மேலும் அதிகரிக்கச்செய்கின்றன.

ஓர் இலக்கிய சஞ்சிகையில் வெளியாகும் கவிதைகள், சிறுகதைகள், தொடர் நவீனங்கள், கட்டுரைகள், நூல் மதிப்பீடுகள் முதலான படைப்பாக்கங்களின் வழியாக அந்தச் சஞ்சிகையின் இடத்தை மதிப்பிடுதல் என்ற வாலாயமாகிப்போன மரபிலிருந்து சற்று விலகி ஆசிரியத் தலையங்கங்கள் வாயிலாகவும் வாசகர் குறிப்புக்கள் வாயிலாகவும் அந்தச் சஞ்சிகையினதும், அதன் ஆசிரியரதும் கருத்துநிலைபற்றி ஆராய்தல் சுவாரஸ்யமானது என்பதை இந்த நூலைப் படிப்பவர்கள் நிச்சயம் உணர்வர். இந்த நூலில் தொகுக்கப்படாத, மேலுமுள்ள நூற்றுக்கும் மேலான ஆசிரியத் தலையங்கங்களையும் இந்த நூலுடன் ஒருங்கே வைத்துப் படிப்பவர்களுக்கு கிடைக்கும் அனுபவம் நிச்சயமாக ஏறத்தாழ கடந்த இருபதாண்டுகால சமூகப் போக்கின் பதிவுகளாகவே அமைகின்றன. இது சஞ்சிகைகள், பத்திரிகைகளின் ஆசிரியத் தலையங்கங்களை பகுப்பாய்வுசெய்து கடந்தகால சமூகத்துக் கருத்தோட்டங்களைக் கண்டறிதலுக்கான வாயில்களைத் திறக்கும் முயற்சியாகின்றது.

❑

என்னுரை

ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் என்றமுறையில் என்னால் எழுதப்பட்ட 101 ஆசிரியத் தலையங்கங்கள் அடங்கிய தொகுப்பு இது.

2000ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஆறாம் திகதி ஞானம் சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்டது. 2018 டிசம்பர்வரை வெளிவந்த 224 இதழ்களில் இருந்து இந்தத் தலையங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியத் தலையங்கங்கள் பொதுவாக சமகாலப் பிரச்சினைகளையும், சர்ச்சைக்குரிய நாட்டுநடப்புகளையும் சமுதாயச் சிறப்புகளையும் - சீர்கேடுகளையும் அலசி ஆராய்ந்து விளக்கமாகவும் விமர்சனமாகவும் தெரிவிப்பதோடு சிலவேளைகளில் பரிந்துரைசெய்வதும் வழக்கம்.

ஆனாலும் சிறுசஞ்சிகையில் எழுதப்படும் ஆசிரியத் தலையங்கங்கள் மேற்குறிப்பிட்ட வரையறைக்குள் மட்டும் நின்று விடுவதில்லை.

சிறுசஞ்சிகை ஆசிரியரின் பணி வழமையான செய்திப் பத்திரிகைகள், ஜனரஞ்சக இதழ்களின் பணியிலிருந்து வேறானது. சிறுசஞ்சிகையாளன் வழமையான சஞ்சிகை வெளியிடும் பணிகளோடு ஏனைய இலக்கியகாரர்களை இயக்குபவனாகவும் அதன்மூலம் ஒரு காலகட்ட இலக்கியப் போக்கை நெறிப்படுத்துபவனாகவும் இருத்தல்வேண்டும். அத்தோடு புதிய எழுத்தாளர்களைத் தோற்றுவிப்பதும், பலதரப்பட்ட எழுத்தாளர்களின் வளர்ச்சிக்குக் களமமைத்துக் கொடுப்பதும், சோம்பலுறும் மூத்த எழுத்தாளர்களை எழுத ஊக்குவிப்பதும் சிறுசஞ்சிகையாளனின் ஏனைய பணிகளாகின்றன.

எனவே ஒரு சிறுசஞ்சிகையில் எழுதப்படும் தலையங்கங்களில் ஏனையவகைப் பத்திரிகைகளின் ஆசிரியத் தலையங்கங்களில் எழுதப்படும் விஷய உள்ளடக்கங்களோடு மட்டும் நின்றுவிடாது சிறுசஞ்சிகையின் பணிகளோடு அமைந்த விஷயங்களையும் உள்ளடக்கவேண்டிய தேவை ஆசிரியருக்கு ஏற்பட்டுவிடுகிறது.

'பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்' என்பது ஞானம் சஞ்சிகையின் மகுடவாசகம். இது ஞானம் சஞ்சிகையின்

இலக்கு - அதன் இதழ்க்கொள்கை என்பவற்றை விளக்குவதாக அமைந்துள்ளது.

எந்தவொரு பத்திரிகையிலோ அல்லது சஞ்சிகையிலோ முக்கிய பகுதியாக விளங்குவது ஆசிரியத் தலையங்கம். அது, காலத்தின் கண்ணாடியாக விளங்கும் சிறப்புக்கொண்டது. அதனாலேதான் வாசகர்களால் முதலில் விரும்பிவாசிக்கப்படும் பகுதியாக ஆசிரியத் தலையங்கங்கள் விளங்குகின்றன.

ஞானம் சஞ்சிகையின் உள்ளடக்கங்கள், ஆசிரியத் தலையங் கங்கள் மூலமும் ஏனைய இலக்கிய வகைமைகள் மூலமும் வாசகர்களுக்கு 'பகிர்தல்' செய்யப்படுகின்றன. இத்தகைய பகிர்தல் வாசகர்மத்தியில் எத்தகைய 'புரிதல்'களை ஏற்படுத்துகின்றன என்பதை வாசகர்கள் தமது கடிதங்கள்மூலம் ஞானத்திற்குத் தெரியப்படுத்துகின்றனர்.

படைத்தல் மட்டும் இலக்கியம் ஆகாது. அவை பகிரப்படுதலும் அவசியம். பகிர்தலின் போது சுவைஞன் கற்பிக்கும் அர்த்தங்களும் அதாவது புரிதல்களும் இணையும்போதுதான் ஓர் இலக்கியம் முழுமைபெறுகிறது. எனவேதான் 'பகிர்தலும் புரிதலும்' இலக்கி யத்தின் பிரிக்கப்படாத அம்சங்கள் ஆகின்றன.

இந்நூலின் பிரதான நோக்கம் ஞானம் சஞ்சிகையின் பல்வேறு இதழ்களில் உறங்கிக்கிடக்கும் ஆசிரியத் தலையங்கங்களை ஒன்றுசேரத் தொகுத்து ஒரு நூற்கட்டமைப்புக்குள் கொண்டு வருவதன் மூலம் அதற்கு ஓர் ஆவணப் பெறுமானத்தை ஏற்படுத்துவதாகும்.

இத்தொகுப்பில் இலக்கியம், சமூகம், அரசியல், பல்துறை சார்ந்து ஒவ்வொரு பிரிவிலும் தலா 25 ஞானம் சஞ்சிகையின் ஆசிரியத் தலையங்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவற்றோடு, ஞானம் சஞ்சிகையில் பகிர்தல் செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பாக, கலாநிதிகள் - பேராசிரியர்கள் 25பேரினதும் எழுத்தாளர்கள்-இலக்கியச் சுவைஞர்கள் 25பேரினதும் புரிதல்கள் பின்னிணைப்பாகத் தரப்பெற்றுள்ளன.

இந்த நூலுக்கு சிறந்ததொரு முன்னுரையை யாழ்.பல்கலைக் கழக சமூகவியல் துறைத்தலைவர் திரு.இ.இராஜேஸ்கண்ணன் வழங்கியுள்ளார். அவர் ஆரம்பகாலத்திலிருந்தே ஞானம் சஞ்சிகையுடன் இணைந்திருப்பவர். தனது தரமான படைப்புகளைத்

தந்து தன்னை ஒரு சிறந்த இலக்கியவாதியாக இனங்காட்டியவர். அவர் இந்த நூலுக்கு முன்னுரை வழங்கியிருப்பது சாலவும் பொருத்தமுடையதே. அவருக்கு எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'பகிர்தலும் புரிதலும்' என்ற இத்தொகுப்பு கடந்த இரண்டு தசாப்தகால அரசியல், சமூக, பொருளாதார, கலை இலக்கிய விடயங்களின் ஒரு வெட்டுமுகத்தை வாசகர்களுக்குத் தருவதோடு இலக்கிய ஆர்வலர்களுக்கும் ஆய்வு மாணவர்களுக்கும் பயனுடையதாக அமையும் என நம்புகின்றோம்.

தி. ஞானசேகரன்
பிரதம ஆசிரியர்

25-12-2018

❑

பகிர்தலும் புரிதலும்

இலக்கியம்

1. அன்புள்ள இலக்கிய நெஞ்சங்களே... 03
2. இலக்கியப் பரிவர்த்தனை மூலம் புரிந்துணர்வு 05
3. கலை இலக்கிய உலகில் மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளிப்போம் 07
4. ஈழத்து ஆக்க இலக்கியத்துறையில் பெண்கள் 09
5. ஈழத்து நவீன இலக்கியத்தின் இருப்புக் கணக்கெடுப்பு 11
6. புலம்பெயர் இலக்கிய உலகில் புலரும் இலக்கிய சஞ்சிகைகள் தமிழுக்கு வளம் சேர்க்கட்டும் 14
7. மணிவிழாப் பருவ ஆக்க இலக்கியவாதிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் நூலுருவம்பெறட்டும் 17
8. எமது சிறுவர் இலக்கியத்தை மேம்படுத்த பரந்துபட்ட முயற்சிகள் எடுக்கப்படவேண்டும் 20
9. பெண்விடுதலை, உரிமைக்குரல் ஆகியன ஆக்க இலக்கியத்தில் உரிய அர்த்தத்துடன் ஒலிக்க வேண்டும். 23
10. மலையக இலக்கியம் புத்தூக்கம் பெறவேண்டும் 27
11. பெருகிவரும் நூல்வெளியீட்டு முயற்சி? 30
12. விமர்சனப்புகழுரைகள் 34
13. ஏற்று "மதி" - இறக்கு "மதி"! 40
14. எழுத்தாளர்களே! உங்களால் முடியும்! 45
15. இந்த மண்ணின் இலக்கியம் 48
16. இளந்தலைமுறை சிறுகதைப் படைப்பாளிகளின் கவனத்திற்கு 51
17. முறைதவறும் பதிப்பு முயற்சிகள் 54
18. சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011இல் 'ஞானம்' இலக்கிய இயக்கத்தின் பங்கு 60
19. மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியது வேதாளம்! 65
20. தமிழ் இலக்கிய வரலாற்றில் ஈழத்துப்போர் இலக்கியம் 69
21. போரின் பின்னரான இலக்கியம் 82
22. மல்லிகை ஜீவாவுக்கு கனடிய தமிழ் இலக்கியத் தோட்டத்தின் விசேட இயல்விருது 84
23. ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம் 87
24. 'மறுமலர்ச்சி' இதழ்களின் தொகுப்பு - ஒரு பெரும்பணி 106
25. சாகித்தியரத்னா விருது படைப்பாளிகளுக்கே உரியது 109
26. ஈழத்துத் தமிழ் நவீன இலக்கிய வெளி 114

சமூகம்

27. உழைப்பும் கலை இலக்கியமும் 127
28. கல்விக் கூடங்களில் கலை இலக்கிய உணர்வை வளர்ப்போம் 130
29. கிராமிய மட்டத்தில் நாட்டுக்கூத்துக்குப் புத்துயிரளிப்போம் 133
30. இயற்கையின் சீற்றம் ஏற்படுத்திய அனர்த்தம் 136
31. மாணவப் பருவத்தில் வாசிப்புப் பழக்கத்திற்கான தூண்டல் 140
32. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் 143
33. மலையகப் பாரம்பரியக் கலைகள் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும் 146
34. மலையகத்தில் தமிழ்க் கல்வி 149
35. இனி ஒரு விதி செய்வோம்! 152
36. அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் மறைவு - தமிழ்ச் சமூகத்திற்குப் பேரிழப்பு 155
37. நடப்பவன் சொன்னால்...! 159
38. நாடகம் - சினிமா பண்பாடு 162
39. சர்வதேச மகளிர் தினமும் மலையகப் பெருந்தோட்டப் பெண் தொழிலாளர்களும் 166
40. இணையமும் இளஞ்சந்ததியினரும் 170
41. கைத்தொலைபேசியும் இன்றைய இளைஞர் சமுதாயமும் 173
42. சிறுவர் துஷ்பிரயோகம் 177
43. உதவிக்கரம் வேண்டிநிற்கும் புனர்வாழ்வுபெற்றமுன்னாள் போராளிகள் 179
44. அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட தமிழரின் காணிகளை மீளப்பெற வழிதானென்ன? 181
45. 'ஃபேஸ்புக்' விபரீதங்கள் 184
46. சிறுபான்மையின மக்களிடையே ஒற்றுமையும் புரிந்துணர்வும் அவசியம் 187
47. மண்ணில் புதையுண்ட 'லயத்துச் சிறைகள்' 189
48. ஒக்டோபர் - 1, சர்வதேச சிறுவர் தினத்தை அர்த்தமுள்ளதாக்குவோம் 192
49. வெள்ள அனர்த்தமும் இடர் முகாமைத்துவமும் 195
50. போரினைத் தொடர்ந்து கடன் சுமைக்குள் சிக்கிப் போராடும் வடபகுதி மக்கள் 198
51. போதைப் பொருள் வியாபாரமும் மரண தண்டனையும் 201

அரசியல்

52. போரே போ மீண்டும் வேண்டாம்! 207
53. செஞ்சோலைப் படுகொலைகள் 210
54. புரிந்துணர்வும் இனப்பிரச்சனையும் 214
55. “கெடுகுடி சொற்கேளாது” 218
56. கிழக்கிலங்கை வரலாறு காணாத பாரிய இடப்பெயர்வும் மனித அவலங்களும் 222
57. சர்வதேச சமூகத்தின் அறிவுரையை அரசு செவிமடுக்குமா? 224
58. இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு அரசியல்வாதிகள்அந்தரங்க சுத்தியுடன் செயற்படவேண்டும் 228
59. கிழக்கு உதயம் ? ! ... 231
60. வரலாறு காணாத மனிதப் பேரழிவு! 233
61. 13ஆவது திருத்தச் சட்டமூலமும் இலங்கை அரசியலும் 237
62. தீர்வுத்திட்டத்திற்கு முன் தீர்க்கப்படவேண்டியது... 240
63. வடமாகாணத் தேர்தலும் தமிழரின் எதிர்காலமும் 244
64. ‘சர்வதேச விசாரணை வேண்டும்’ என்ற வடமாகாண சபையின் தீர்மானம் ஜெனிவா மாநாட்டில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் 247
65. “மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுகிறது” 250
66. இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான இந்தியாவின் அணுகுமுறை‘பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்’ 253
67. நல்லாட்சி மலரட்டும்! 256
68. தாய்மொழியில் தேசியகீதம் 259
69. புதிய இனவாதக் கொடி! 261
70. ‘எழுகதமிழ்’ ஏன்? 264
71. தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் அரசுக்கு ஏன் இந்த அசமந்தம்! 268
72. புதிய அரசியல் அமைப்பு- தமிழர்கள் மீண்டும் ஏமாற்றப் படுவார்களா? 272
73. தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் 275
74. யுத்தவெற்றியின் கதாநாயகன் யார்? 280
75. இலங்கை அரசியல் பிரச்சினையில் சர்வதேசத்தின் தலையீடு அவசியம் 283
76. இன்றைய அரசியல் பிரச்சினையின் ஆணிவேர் 286

பல்துறை

77. நம்மவருக்குத் தமிழக அரசின் விருது 291
78. மானுடத்தின் தமிழ் செய்வோம் 293
79. புத்தகக் கலாசாரத்தை வளர்த்தெடுப்போம் 297
80. அவுஸ்திரேலிய நான்காவது தமிழ் எழுத்தாளர் விழா 300
81. சிறுபான்மை இனத்தின் கலை இலக்கிய மேம்பாட்டுக்கான ஊக்குவிப்பினைப் புறக்கணிப்பதும் மனித உரிமை மீறலே 303
82. செம்மொழியாகும் தமிழ் 306
83. கொழும்புக் கம்பன் கழகத்தினரின் இசைவேள்வி 309
84. எழுத்து, பதிப்பு,விநியோகம். 313
85. பவளவிழாக்காணும் வீரகேசரி 319
86. சர்வதேசப் புத்தகக் கண்காட்சி -2005- ஈழத்து இலக்கிய நூல்களின் விநியோகம் பற்றிய ஒரு விசாரம் 323
87. ஊடக சுதந்திரம் எதை நோக்கிச் செல்கிறது? 327
88. போரினால் சீரழியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்மாணவர் கல்வி 330
89. மீண்டும் ஆங்கிலமா ? 333
90. தேமதுரத் தமிழோசை உலகமெலாம்... 337
91. ஸ்ரீசுமண கொடகே வழங்கும் நவீன தமிழ் இலக்கியப் பணியாளருக்கான கௌரவம் 341
92. முரளியின் அரும்பெரும் சாதனை 344
93. பதினைந்தாவது அகவையில் தினக்குரல் 347
94. தலைநகரில் தமிழ்மக்களின் கலாசாரக் கேந்திரம் 350
95 இலண்டனில் நடைபெற்ற உலகத் தமிழியல் ஆய்வுமாநாடு 2013 353
96. மாமனிதன் மண்டேலாவிடமிருந்து அரசியல்வாதிகள் கற்றுக்கொள்ளவேண்டிய அணுகுமுறைகள் 357
97. 'பாரதரத்னா' அப்துல் கலாம் 360
98. யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கொலை இனவாதத்தைத் தூண்டும் தீயசக்திகளின் திட்டமிட்டசெயலா? 363
99. உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு 2016 ஆய்வுப் பொன்விழா

100. அரசுகளின் அலட்சியத்தால் குப்பைக்குள் புதையுண்ட மனித உயிர்கள் 369
101. கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் வெள்ளிவிழா 373

புரிதல்கள் சில... 376

மேலும் சில புரிதல்கள்... 392

இலக்கியம்

01



அன்புள்ள இலக்கிய நெஞ்சங்களே...

வணக்கம்.

தரமான இலக்கியச் சஞ்சிகை ஒன்றினைத் தொடர்ந்து வெளியிடுவது என்பது மிகவும் சிரமமான பணி. இதனை நன்கு தெரிந்த பின்னரே இந்த ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையை வெளிக்கொணர்கின்றோம்.

நிதிப்பற்றாக்குறை, எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்களைப் பெறுவதில் உள்ள சிரமம், ஜனரஞ்சக சஞ்சிகைகளின் ஆக்கிரமிப்பு, மக்களி டையே வாசிப்புப் பழக்கம் அருகி வருதல் ஆகிய காரணிகள் ஒரு தரமான இலக்கியச் சஞ்சிகையின் இருப்பினைப் பெரிதும் பாதிக்கும் காரணிகளாக அமைகின்றன.

இருப்பினும், காலத்துக்குக் காலம் தரமான சஞ்சிகைகள் தோன்றியவண்ணமே இருக்கின்றன. இலக்கியத் தாகமும் ஈடுபாடும் அர்ப்பணிப்பு உணர்வும் கொண்டவர்களால் இத்தகைய சஞ்சிகைகள் வெளிக்கொணரப்

படுகின்றன. தரமான வாசகர்கள் இத்தகைய சஞ்சிகைகளைத் தேடி வாசிக்கின்றனர்.

இலக்கியப் பாரம்பரியங்கள், இலக்கிய உலகில் ஏற்படும் மாற்றங்கள், வளர்ச்சிப் போக்குகள், கருத்தோட்டங்கள் போன்றவற்றின் காலக்கண்ணாடியாக இச்சஞ்சிகைகள் மிளிர்கின்றன. தரமான எழுத்தாளர்கள் இச்சஞ்சிகைகள் மூலமாகவே இனங்காட்டப்படுகின்றனர்.

ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை மூலம் இலக்கிய உலகிற்கு எம்மாலான பணியைத் தொடர விழைகின்றோம். இச் சீரிய பணிக்குத் தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் தமது பேராதரவினை நல்க வேண்டுமென அன்புடன் வேண்டுகின்றோம்.

ஞானம்–1 (ஜூன் 2000)

-

02



இலக்கியப் பரிவர்த்தனை மூலம் புரிந்துணர்வு

இன்று நமது நாட்டில் இனங்களுக் கிடையிலான புரிந்துணர்வு எப்போதும் இல்லாத அளவுக்கு உணரப்படுகிறது. யுத்தபூமியில் அழிவுகளையும் இழப்புகளையும் சந்தித்த நாம் இனப் புரிந்துணர்வுடன் செயற்படும் காலகட்டமிது.

தமிழிலும் சிங்களத்திலும் மலர்ந்துள்ள சமகால ஆக்க இலக்கியப் படைப்புகளில் - தரமான பலவற்றில் பகைப்புலமாக போரின் தாக்கம், அது ஏற்படுத்திய அனர்த்தம் ஆகியவை உருவாக்கிய நெஞ்சை அள்ளும் நிகழ்வுகள் கருப்பொருளாய் அமைந்துள்ளன. இவற்றை நாம் பரஸ்பரம் மொழிப்பரிவர்த்தனை செய்யவேண்டும்.

புனைகதை இலக்கியத்திலுள்ள பாத்திரங் களுடன் பரிச்சயமாவதன் மூலம் மனித நடத்தையை நுனித்து நோக்கவும், ஆழமாகப் புரிந்து கொள்ளவும் வாசகர்களுக்கு வாய்ப்பு

ஏற்படுகிறது. பாத்திரங்களின் குணசித்திரங்களையும் சூழலையும் அறிந்து கொள்வதன் மூலம் நம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்தின் இயக்கப்பாட்டை உணர்ந்துகொள்கிறோம். பாத்திரங்களுக்கு ஏற்படும் இன்ப துன்ப அநுபவங்கள் எம்மையும் பாதிக்கின்றன. சிந்தனையைத் தூண்டி செயலூக் கத்தையும் ஏற்படுத்துகின்றன.

அரிச்சந்திர புராணம்தான் காந்தியை மகாத்மா ஆக்கியது.

எமது போர்க்கால இலக்கியம் இளைஞ - இளைஞிகளின் தியாக உணர்வுடன் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்ட வரலாற்றையும் எதிர்கொண்ட அனர்த்தங்களையும் கூறுகின்றன. சோதர இன இலக்கியம் வயிற்றுப் பிழைப்புக்காக சிங்களக் குக்கிராமங்களிலிருந்து இராணுவத்தில் சேர்ந்து உயிரை இழந்த, ஊனமான சோகக் கதைகளைப் பேசுகின்றன. பரஸ்பரம் இரு இன மக்களும் இவற்றைப் படித்தால் புரிந்துணர்வு இயல்பாகவே ஏற்பட இடமுண்டு.

ஒருவழிப்பாதையாக அமையாது இருமொழிவாரியான, இனங்களுக்கிடையே ஏற்படும் ஆக்க இலக்கியப் பரிவர்த்தனை, நம்நாட்டில் புரிந்துணர்வு உருவாக வழி வகுக்கும். இரு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்கள், இத்துறையில் ஈடுபாடுள்ளவர்கள் இப்பணியை முன்னெடுத்துச் செல்லவேண்டுமென வேண்டுகிறோம்.

ஞானம் – 27(ஆகஸ்ட் 2002)

03



கலை இலக்கிய உலகில் மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளிப்போம்

மாற்றுக் கருத்துக்களைச் செவிமடுப்பதும் மதிப்பளிப்பதும் சனநாயக வழிமுறையில் முக்கியமானதோர் அம்சமாகும். ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒரு காலகட்டத்தில் விமர்சகர்களின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது. மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்படாமல் ஒதுக்கப்பட்டது. கருத்துத் தெரிவித்தவர்கள் ஓரங்கட்டப்பட்டார்கள். மேலாதிக்கம் செலுத்தியவர்களின் தலைவர்களை மூலஸ்தானத்தில் வைத்துச் சிறுதெய்வ வழிபாடு நடந்தது. இத்தலைவர்களின் குறைகளை யாரும் தப்பித் தவறிச் சுட்டிக்காட்டிவிட்டால் பக்தர்கள் சன்னதம் கொள்வர். குரு பெருந்தன்மையுடன் செவிமடுத்தாலும் சீடர்கள் கருத்துக் கூறியவர்களை விட்டுவைக்க மாட்டார்கள்; விரோதிகளாகக் கொள்வர்.

சீசரின் மனைவி விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவளாம்!

இத்தகைய பண்பின் எதிர்வினையே பின்நவீனத்துவத்தின் கருத்தியலுக்குக் கால்கோளாக அமைந்தது போலும்.

பாரம்பரிய சிந்தனை மரபுகள், கோட்பாடுகள் முதலியவை பின்நவீனத்துவக் கோட்பாட்டாளரால் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. மரபுவழிச் சிந்தனைகளின் கட்டுமானத்தை அவர்கள் நிராகரிக்கின்றனர். அச்சிந்தனைகளில் மேலாதிக்கப்பண்பு, ஒன்று திரட்டிய பண்பு (Totalising) முதலியன காணப்படுவதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். மாற்றுக் கருத்துக்களை அவர்கள் வரவேற்கின்றனர்.

மாற்றுக் கருத்துக்கு மதிப்பளிக்கப்படும்போது தெளிவு பிறக்கிறது. நிலைப்பாடுகளின் நம்பகத்தன்மையும் உறுதிப்பாடும் மீளாய்வு செய்யப்படுகின்றன. விழிப்புணர்வு உருவாகிறது.

கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டுமல்லவா!

ஈழத்து இலக்கியம் ஆரோக்கியம் பெறவேண்டுமெனில் மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டுமென 'ஞானம்' வலியுறுத்துகிறது. நாம் செல்லும் வழியும் அதுவே.

ஞானம் 33 (பெப்ரவரி 2003)

புரிதல்

✦ ஞானம் பெப்ரவரி (2003)இதழ் கிடைத்தது ஆசிரியர் தலையங்கம் அற்புதம். ஆணித்தரம் எனும் சொல்லின் அசல் வார்ப்பு. இலக்கியத்துறையில் மட்டுமல்ல, எந்தத்துறையிலும் யாரும் 'சீசர்' மனைவியல்ல என்பதுதான் யதார்த்தம். கி.பி. 2ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றதாகச் சொல்லப்படும் திருக்குறளிலும் காலத்திற்கொவ்வாத கருத்துக்கள் உண்டு. கம்பன் கவிச்சக்கரவர்த்திதான். ஆனால், சாதாரண ஒரு அரச குமாரனை - அயோத்தி இராமனை கடவுளின் (திருமாலின்) அவதாரமாகக் காட்டியமை அவன் செய்த பெரும் வரலாற்று மோசடி. இப்படி எத்தனையோ உண்மைகள். கருத்துச் சுதந்திரத்தைப் பெரிதும் போற்றும் ஞானத்தைக் கைகூப்பி வரவேற்கிறேன்.

– **வாகரைவாணன். (ஞானம்–34–மார்ச் 2003)**

04



ஈழத்து ஆக்க இலக்கியத்துறையில் பெண்கள்

1964ஆம் ஆண்டு ஈழத்து இலக்கிய வளர்ச்சியை மதிப்பிட்ட இரசிகமணி கனக செந்திநாதன் 'எழுத்துத் துறையில் பெண் களுடைய முயற்சி திருப்தி தருவதாக இல்லை' எனக் குறிப்பிட்டுள்ளார். இன்று இக்கூற்று பொருத்தமற்றதாகி, ஆக்க இலக்கியத்துறையில் பெண்களின் பங்கு விதந்து பாராட்டப் படுமளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது. எடுத்துக் காட்டாக, பெண் எழுத்தாளர்கள் பலர் தனித்தொகுதிகளாகவும் பிரதேச ரீதியில் கூட்டாக இணைந்தும் சிறுகதை, கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளனர். இளைய தலைமுறைப் பெண் எழுத்தாளர்கள் வீறுடனும் வீரியத்துடனும் எழுதுகிறார்கள்.

நேர்மை நியாயத்தின் ஒளியில், இன்றைய காலகட்டத்தில் பெண்ணியத்தை முன்னிலைப்

படுத்துவது காலத்தின் தேவையாக உள்ளது. பெண்ணியம் இன்று தத்துவத்தளமாக கொள்கை கோட்பாடுகளின் கொத்தளமாக வளர்ந்துள்ளது. மரபுவழிச் சிந்தனைகள், மதச் சித்தாந்தங்கள், சமூக ஆய்வாளர்களின் கோட்பாடுகள், அரசியல் தத்துவங்கள், சிந்தனையாளர்களின் கோட்பாடுகள் ஆகியவை மட்டுமன்றி, கலாசார விழுமியங்களும் மீளாய்வுக்கு உட்பட்டு நிற்கின்றன. அடிமைத் தளைகளை அறுத்தெறிந்து விடுதலை வேண்டிநிற்கும், அமுக்கப்பட்ட குரலின் எதிரொலியாகப் பெண்களின் குரல்கள் ஒலிக்கின்றன.

சமகால வரலாற்றைப் படைக்கும் ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் சத்திய வேட்கையுடன், பெண்ணியப் பார்வை யுடன் புதிய சிந்தனைத் தெளிவுடன் தார்மீகக் கடமையுடன் சமூதாயத்தை நோக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பெண்களின் அக உணர்வுச் சிக்கல்களை, புற உலகத் தாக்கத்தை தத்ரூபமாக வடித்தெடுக்கிறார்கள் பெண் எழுத்தாளர்கள். தலித் இலக்கியத்தை தலித் எழுத்தாளர்கள் மட்டுந்தான் உயிர்த் துடிப்புடன் எழுதமுடியும் எனக்கூறு வதைப்போல பெண் எழுத்தாளர்கள்தான் உயிர்த்துடிப்புடன் பெண் கதாபாத்திரங்களைப் படைக்கமுடியும் எனும் கருத்தியலை, பெண்ணியத்தை முன்வைக்கும் சில படைப் பாளிகளின் ஆக்கங்களில் தரிசிக்க முடிகிறது.

சர்வதேச மகளிர் தினம் மலரும் இந்த மார்ச் மாதத்தில் 'ஞானம்' இக்கருத்துக்களை இலக்கிய நெஞ்சங்களுடன் பகிர்ந்துகொள்கிறது.

ஞானம் –34 (மார்ச் 2003)

05

ஈழத்து நவீன இலக்கியத்தின் இருப்புக் கணக்கெடுப்பு

அன்பான வாசக நெஞ்சங்களுக்கு ‘ ஞானம்’ உளங்கனிந்த தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறது.

மலரும் புத்தாண்டை நம்பிக்கையுடனும் எதிர்காலத் திட்டங்களுடனும் எதிர்கொள்ளும் நாம், கடந்த வருட வெற்றிகளையும் செயற் பாடுகளையும் மதிப்பீடு செய்வது வழக்கம். புத்தாண்டில் இருப்புக் கணக்கெடுப்பது வாணிபத் துறையின் மரபாகும். இருப்புக் கணக்கெடுத்தல் வாழ்க்கையிலும் வாழ்க்கையுடன் அத்தியந்தத் தொடர்புடைய கலை இலக்கியத்திலும் வேண்டற்பாலது.

கடந்த வருட அறுவடையாகக் கிடைத்த நூல்கள், அவற்றை வெளியிட்ட பதிப்பகங்கள், பெற்றுக் கொள்ளக்கூடிய வியாபார நிலை யங்கள் இவையடங்கிய ஒரு இருப்புக் கணக்கெடுப்பு கலை இலக்கிய உலகில் பிரயோசனமான செயற்பாடாக அமையும். இது ஈழத்து இலக்கிய உலகின் ஆரோக்கியமான

வளர்ச்சிக்கு அவசியமானதொன்றாகும். இம்முயற்சி இத்துறைகளில் ஈடுபாடுடையவர்களால் சிரத்தையுடனும் சீரியமுறையிலும் மேற்கொள்ளப்படவேண்டும். இதனைப் பல்கலைக்கழகங்களும், கலாசார அமைச்சும், சுவடிகள் திணைக்களமும் இணைந்து செய்தல் சுலபமானதாக அமையும். இது இன்றைய இலக்கிய மாணவர்களின் தேடலுக்கு உறுதுணையாக இருக்கும். சில ஆண்டுகளுக்கு முன்னர் கலாசார அமைச்சின்கீழ் இயங்கும் இலக்கியக்குழு, இலக்கியச் செய்திமடல் ஒன்றினை வெளியிட்டு இலக்கிய உலகில் விநியோகித்ததை இங்கு சுட்டிக்காட்டலாம். சில துறைகளில் தனிப்பட்ட முயற்சிகளும் நடைபெற்றன.

நவீன இலக்கியத்தின் முன்னோடி முயற்சியாக கனக செந்திநாதன் வெளியிட்ட 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' நூலும், சில்லையூர் செல்வராசன், நா.சுப்பிரமணிய ஐயர், பேராசிரியர் அருணாசலம் ஆகியோர் நாவல்துறை பற்றி எழுதிய நூல்களும், மலையகச் சிறுகதைத்துறை பற்றி தெளிவத்தை ஜோசப் எழுதிய நூலும், ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிபற்றி செங்கை ஆழியானின் நூலும் விதந்துரைக்கப் படவேண்டியவை.

பத்தி எழுத்துத்துக்கள், விமர்சனக் கட்டுரைகள் எழுதிய வர்களில் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, மு.தளையசிங்கம், முகம்மது சமீம், ம.மக்கீன், கே.எஸ்.சிவகுமாரன், புலோலியூர் ஆ.இரத்தினவேலோன், வரதர், அன்புமணி, முல்லைமணி, முருகையன், மு.பொன்னம்பலம், செ.யோகநாதன், செ.யோகராசா, துரை.மனோகரன், அ.யேசுராசா, செம்பியன் செல்வன், சி.தில்லைநாதன், சோ.சந்திரசேகரன், சி.சிவசேகரம், எம்.ஏ.நு.ஃமான், சித்திரலேகா மௌனகுரு, வ.இராசையா, எம். கே.முருகானந்தன், சி.வன்னியகுலம், ஏ.இக்பால், அந்தனிஜீவா, சாரல்நாடன், அன்னலட்சுமி இராசதுரை, தேவகௌரி, விஜயன், லொரன்ஸ் செல்வநாயகம், வி.செல்வநாயகம், ந.இரவீந்திரன், சத்யா ஆகியோருடன் இன்னும் சிலரின் முயற்சிகளும் கணக்கெடுப்பில் கொள்ளப்படவேண்டியவை.

குரும்பசிட்டி கனகரத்தினத்தின் உலகத்தமிழர் ஆவணக் காப்பகத்தின் பணி மிகச்சிறந்ததும் காலத்தின் தேவையுமாகும்.

இலைமறைகாயாக இருந்து இலக்கிய ஆர்வத்துடன் நூல்களைச் சேகரித்து சேமித்து வைத்திருக்கும் இலக்கிய ஆர்வலர்களின் பணியை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து இலக்கிய உலகம் பிரயோசனப்படுத்தவேண்டும்.

இலக்கிய இருப்புக்கணக்கெடுப்பானது நாம் எங்கு நிற்கிறோம், எந்தப்பரப்பில் பின்தங்கியுள்ளோம் - இவற்றை எவ்வாறு எதிர்கொண்டு ஆவன செய்தல்வேண்டும் என்ற சீரிய சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும் உந்துசக்தியாக அமையும். நூல்நிலையப் பொறுப்பாளர்கள், இத்துறையில் சீரிய பணியினை நல்கலாம். கலை இலக்கியச் சிற்றேடுகள் காலத்துக்குக்காலம் வரும் நூல்களைத் தத்தம் ஏடுகளின் மூலமாக இலக்கிய உலகிற்கு அறியத்தரவேண்டும். சென்ற ஆண்டு ஈழத்தில் அதிக தொகையான நூல்கள் வெளிவந்ததாக ஒரு மதிப்பீடு கூறுகிறது.

நமது நூல் விநியோகமுறை ஆரோக்கியமானதாக இல்லை. ஒருபுறம் நூலாசிரியர்கள் பெருந்தொகையான பணத்தை முதலீடு செய்து நூல்களைத் தயாரித்துவிட்டு அவற்றை விநியோகம் செய்யமுடியாத நிலையில் தத்தளிக்கிறார்கள். மறுபுறம் புதிய நூல்களைப் பெற விரும்புகிறவர்கள் அவற்றை எங்கே பெறுவது எனத் தெரியாது திண்டாடுகிறார்கள். இந்நிலை மாறவேண்டும். இதற்குப் படைப்பாளிகள், பதிப்பாளர்கள், அரசியல் அமைப்புகள், அரசுசார்பற்ற நிறுவனங்கள், பத்திரிகைகள், கலை இலக்கியச் சிற்றேடுகள் கூட்டுமுயற்சி செய்து புதிய செயற்திட்டங்களை உருவாக்கவேண்டும். உதாரணமாக இந்தியாவில் கூட்டுமுயற்சியாக ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் நடைபெறுவது போன்று, நம்நாட்டிலும் நூல் கண்காட்சியும் விற்பனையும் செய்யலாம்

'ஞானம்' புத்தாண்டுச் சிந்தனையாக இலக்கிய உலகிற்கு இதனைச் சமர்ப்பிக்கிறது.

ஞானம் –35 (ஏப்ரல் 2003)

06

புலம்பெயர் இலக்கிய உலகில் புலரும் இலக்கிய சஞ்சிகைகள் தமிழுக்கு வளம் சேர்க்கட்டும்

இன்று தமிழர்கள் வரலாற்று நிர்ப்பந்தத்தால் புகலிடம் தேடி, வாழ்வுக்கு வருமான வாய்ப்பினை நாடி, தொழில்தேடி உலகத்தின் எட்டுத் திக்கும் புலம் பெயர்ந்துள்ளனர். அவர்கள் சென்ற இடமெல்லாம் தமது கலை இலக்கியப் பாரம்பரியத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர். புலம்பெயர் நாடுகளில் எழுந்துள்ள கோயில் களும் அங்கு நடைபெறும் கலை இலக்கிய நிகழ்வுகளும் இதற்கு நல்ல எடுத்துக் காட்டாகின்றன. பாரம்பரியமாகத் தமிழ் வழங்கும் நாடுகளைவிட, புலம்பெயர் நாடுகளில் நடைபெறும் இலக்கியச் செயற்பாடுகள் ஆரோக்கியமாக உள்ளன. புலம்பெயர் இலக்கியத்திற்கு தனிவீறு உண்டு. இருபத்தி யோராம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாற்றில் அதற்குப் பெரும்பங்கு உண்டு என நம்பப்படுகின்றது. புலம்பெயர் இலக்கியம் தமிழ் இலக்கியத்திற்குச் சர்வதேச பரிமாணத்தைக் கொடுக்கிறது.

புகலிடத்து வாழும் பலரின் இலக்கிய ஆர்வமும், ஈடுபாடும், அக்கறையும் எம்மைப் புல்லரிக்க வைக்கின்றன. அன்புடனும் மரியாதையுடனும் அவர்களை ஆரத்தழுவ மனங்கொள்கின்றது. அவர்களின் இலக்கியச் செயற்பாடுகளில் முக்கியமானதொன்றாகக் கலை இலக்கியச் சஞ்சிகைகள் வெளியிடுவதைக் குறிப்பிடலாம். புலம்பெயர்ந்த நாடுகளி லிருந்து வெளிவரும் சஞ்சிகைகளாக காலம், தேடல், பொதிகை, தாயகம், நான்காவது பரிமாணம், செந்தா மரை, தமிழ் எழில், புன்னகை, மலர் போன்றவை கனடாவி லிருந்தும் ஓசை, மௌனம், கண், சமர், எக்ஸில், எரிமலை, உயிர்நிழல், போன்ற சஞ்சிகைகள் பிரான்ஸி லிருந்தும் பனிமலர், தாகம், நாழிகை, போன்ற சஞ்சிகைகள் இங்கிலாந்திலிருந்தும் மரபு, அக்கினிக்குஞ்சு போன்ற சஞ்சிகைகள் அவுஸ்திரேலியாவிலிருந்தும் சுவடுகள், சக்தி போன்ற சஞ்சிகைகள் நோர்வேயிலிருந்தும் தூண்டில், நமது குரல், புதுமை, தேன், சிந்தனை, ஊதா போன்ற சஞ்சிகைகள் ஜேர்மனியிலிருந்தும் ஆகுதி எனப்படும் சஞ்சிகை நெதர்லாந்திலிருந்தும் வெளிவருகின்றன. இவற்றை விட ழகரம், புலம், அம்மா, அசை, மஞ்சரி போன்ற சஞ்சிகை களும் புலம்பெயர்ந்த இலக்கிய ஆர்வலரால் வெளியிடப் படும் சஞ்சிகைகளாகும்.

இந்நாடுகளிலிருந்து கையெழுத்துப் பிரதிமுதல் அச்சுப் பத்திரிகை வரை நூறு இதழ்கள் இதுவரை வெளிவந்துள்ளன எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இச்சஞ்சிகைகளில் சில இடைநடுவில் தமது பயணத்தை முடித்துக்கொண்டன.

இச்சஞ்சிகைகளில் பல காத்திரமான இலக்கியப் படைப்புகள், இலக்கியப் பரிசோதனைகள், விமர்சனங்கள் வெளியாகியுள்ளன. இலக்கியச் சர்ச்சைகளும் நடை பெற்றுள்ளன. புகலிடத்து வாழும் மக்களின் வதிவிடத்தைப் பகைப்புலமாகக் கொண்டு பல ஆக்க இலக்கியப்படைப்புகள் வெளியாகியுள்ளன. இலக்கியச் சிந்தனையாளரின் தேடலுக்குத் தீனியாகவும், புது அனுபவப் பகிர்வாகவும் இவை அமைந்துள்ளன. புலம்பெயர் இலக்கியத்தின் செல்நெறியைப் புலம்பெயர் இலக்கியச் சிற்றேடுகள் காட்டி நிற்கின்றன.

இதேவேளை எமது அவதானிப்பிற்பட்டதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். தமிழ்ப் பண்பாட்டுக்கு ஒவ்வாத ஆக்கங்களைச் சில சஞ்சிகைகள் முக்கியங்கொடுத்துப் பிரசுரிக்கின்றன. இவற்றில் சில அருவருக்கத்தக்க விடயங் களாகவும் இருக்கின்றன. சில சஞ்சிகைகள் தெருச்சண்டை போல் அநாகரிகமான சொல்லாடலில் தனிப்பட்டவர்களைத் தாக்குவதும், அவற்றில் சிலர் தாமே கூத்தாடி தாமே மெச்சிக்கொள்ளும் - தங்கள் பணியைத் தாங்களே புகழும் - கோமாளித்தனமும் நடைபெறுகின்றன. பின்நவீனத்துவம் என மேற்கு நாடுகளில் உருவாகிய புதிய கோட்பாடுகளைச் சரிவரப் புரிந்துகொள்ளாது, புரிந்துகொண்டது போலப் பாசாங்கு பண்ணிச் சித்து விளையாட்டும் மாயாவாதமும் செய்யும் கட்டுரைகளும் ஆய்வுகளும் ஆக்கங்களும் சில சஞ்சிகைகளில் வெளியாகின்றன.

புலம்பெயர் கலை இலக்கியச் சஞ்சிகைகளின்முன் விரிந்துள்ள பணி சில உண்டு. நமது பண்பாட்டு வேர்களிலிருந்து அறுந்துபோகாதவாறு அவை இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும். பூகோளமயமாக்குதலால் பண்பாட்டுச் சங்கமங்களில் ஏற்படும் எதிர்விளைவுகளுடன் போராடி விழிப்புணர்வுகளை ஊட்டவல்ல படைப்புக் களை வெளியிடவேண்டும். புலம்பெயர்ந்து வாழும் மூத்த இலக்கிய அறிஞர்களை ஊக்குவித்து இயங்கவைத்து நல்ல இலக்கியங்களைப் படைக்கத் தூண்டவேண்டும். புதிய எழுத்தாளர்கள் சர்வதேசப் பரிமாணங்களை உள்வாங்கி சர்வதேசப் புகழ் தரவல்ல இலக்கியம் படைக்கக்களம் அமைத்துக் கொடுக்கவேண்டும்.

மெல்லத் தமிழ் இனி சாகவிடாது, புவியில் எட்டுத்திக்கும் சென்றுள்ள புலம்பெயர் கலை இலக்கியவாதிகள், 'கலைச்செல்வங்கள் யாவையும் கொண்டிங்கு சேர்ப்பீர்' எனப் பாரதி வேண்டிநின்றதைத் தங்கள் கலை இலக்கிய சஞ்சிகைகள் மூலம் செயற்படுத்த வேண்டுமென வேண்டுகிறோம்.

ஞானம் 38 (ஜூலை 2003)

07



மணிவிழாப் பருவ ஆக்க இலக்கியவாதிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் நூலுருவம்பெறட்டும்

1960களில், பொங்கிவரும் இலக்கிய ஆர்வத்துடனும் இளமைத் துடிப்புடனும் ஆக்கஇலக்கிய உலகில் அடியெடுத்து வைத்து தொடர்ந்து இத்துறையில் ஈடுபட்டுவரும் இலக்கியவாதிகள் பலர் வயது அறுபதினை எய்தியுள்ளனர். இருபது வயதளவில் எழுதத் தொடங்கி முப்பது வயதுகளில் பிரகாசித்த இவர்களில் சிலர், சாதனைகளும் படைத் துள்ளனர். ஈழத்தின் சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களை யதார்த்தமாக, அழகாக, ஆணித்தரமாகப் பிரதிபலிக்கும் ஆக்க இலக்கியம் தோன்றிய அறுபதுகளில் இலக்கிய உலகில் பிரவேசித்த இவர்கள், தொகையிலும் தரத்திலும் முன்னணியில் நிற்கின்றனர் என்பது இன்று இலக்கிய வரலாறாகியுள்ளது. இதற்குத்

தாய்மொழிமூலமான கல்வியும், ஈழத்து விமர்சனத்துறையில் ஏற்பட்ட விழிப்பும் வழிகாட்டலும் பகைப்புலமாக அமைந்தன எனலாம். அரசியல் மாற்றம் தேசிய உணர்வுக்குக் கொடுத்த பரிமாணம், தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் எமது படைப்புகள் பத்தாண்டு பின்தங்கியவை என்று குருட்டு மதிப்பீடு செய்தமை போன்ற அக்காலகட்டத்தில் ஏற்பட்ட சில நிகழ்வுகள் உந்து சக்தியாக எழுத்தாளர்களைச் செயற்பட வைத்தன. சுயமொழிக் கல்வி காரணமாக பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி மூலம் கல்விகற்று தாய்மொழியில் ஆரோக்கியமாகச் சிந்தித்து நவீன இலக்கியம் படைக்கத் தொடங்கினர் பலர். பல்கலைக்கழகத்தைவிட வெளியே பல துறைகளிலிருந்தும் பலர் ஆக்க இலக்கியம் படைத்தனர். தேசிய இலக்கியம் புதிய பரிமாணமாகிய மண்வாசனையுடன் பிரதேசப் பண்புதுலங்க தேசிய ரீதியில் திரட்சி பெற்றது. மலையகம், மட்டக்களப்பு, தலைநகர், முஸ்லிம்கள் செறிந்து வாழும் சில மாவட்டங்கள் ஆகியவற்றில் இருந்து பல எழுத்தாளர்கள் பிரதேச இலக்கியம் படைத்தனர். ஆக்க இலக்கிய எழுத்தாளர்களின் ஆற்றல் பீரிட்டெழுந்தது. ஐம்பதுகளின் பிற்பகுதியில் முளைவிட்ட முற்போக்கு இலக்கிய சித்தாந்தம் சமூக முரண்பாடுகளுக்குரிய காரண காரியத் தொடர்புகளைத் தெளிவாக்கியது. வீறாப்புடனும் வீரியத்துடனும் இயங்கிய விமர்சர்களுக்கிடையே கருத்து மோதல் ஏற்பட்டது. கோஷ்டி சேர்ந்து கருத்துக் கலகம் உருவாகியது. பேராசிரியர்கள் கைலாசபதியும் சிவத்தம்பியும் ஒரு கோஷ்டியின் முன்னணியிலும், பேராசிரியர் ஆ.சதாசிவம், கனக செந்திநாதன், எஸ்.பொ, தளையசிங்கம் ஆகியோர் எதிர்த்தரப்புகளிலும் நின்று வாதிட்டனர். கலகம் பிறந்தபோது நியாயம் பிறந்தது. ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் தங்கள் அறிவுக்கும் ஆற்றலுக்கும் அநுபவத்திற்கும் ஏற்ப நியாயத்தைப் புரிந்து செயற்பட்டனர். ஈழத்தின் இலக்கியச் செல்நெறி கம்பீர நடைபோட்டது. அன்று இலக்கிய அணியில் பட்டாளமாகச் சேர்ந்து இன்றும் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் தனித்துவத்தைப் பாதுகாத்துவரும் இந்த எழுத்தாளர்கள் பலர்

இன்று மணிவிழாக் கண்டுள்ளனர். சிலரின் மணிவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளன. மணிவிழா மலர்களும் வெளியிடப்பட்டுள்ளன. சமீபத்தில் தெணியானின் மணிவிழா கொண்டாடப்பட்டு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. நாம் ஏற்கனவே டொமினிக்ஜீவா, நந்தி, சொக்கன், சோமகாந்தன் போன்றோரினதும் இன்னும் சிலரினதும் மணிவிழா மலர்களைக் கண்டிருக்கிறோம். இவற்றுள் பெரும்பாலானவை இலக்கிய கர்த்தாக்களின் பன்முக ஆக்க ஆளுமைகளைப் பல கோணங்களிலும் நோக்கியுள்ள அதேவேளையில் வெறும் புகழ்பாடும் கைங்கரியங்களையும் செய்துள்ளன.

மணிவிழாக்காணும் ஆக்க இலக்கியவாதிகள் அவர்தம் வாழ்நாளில் எழுதிய தேர்ந்தெடுத்த படைப்புகளான மலர்களைத் தொகுத்து மாலையாக்கி நூலாக வெளியிடுவது ஓர் ஆரோக்கியமான செயற்பாடாக அமையும் என்ற கருத்தினை ஞானம் இலக்கிய உலகிற்குச் சமர்ப்பிக்கிறது. இம்மாலை சூடும் விழாவாக மணிவிழா அமையவேண்டும்.

மணிவிழாக் கோலம்கொண்ட அனைத்துக் கலை இலக்கியவாதிகளையும் நாம் மனமார வாழ்த்தி பவளவிழாக் காணவேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

ஞானம் –39 (ஒகஸ்ட் 2003)

புரிதல்

✦ ஞானம் 39வது இதழ் கிடைத்தது. மணிவிழாக் காணும் எத்தனையோ படைப்பாளிகளின் ஆக்கங்கள் இன்னும் நூலுருப்பெறாமலும் நம்மிடையே உள்ளன. ஞானத்தின் ஆசிரியர் கருத்து இதனை வலியுறுத்தியிருப்பது வலிமையே.

– ஒட்டமாவடி அறபாத். (ஞானம்–40–செப்ரெம்பர் 2003)

08

எமது சிறுவர் இலக்கியத்தை மேம்படுத்த பரந்துபட்ட முயற்சிகள் எடுக்கப்படவேண்டும்

அக்டோபர் முதற் திகதி சர்வதேச சிறுவர் தினமாகும். சிறுவர்கள் பற்றிய சிந்தனை சமூக மேம்பாட்டின் ஆரோக்கிய அம்சமாக இன்று கருதப்படுகிறது. சமூகமாற்றம் (Social Transformation) சிறுவர்களிடமிருந்து ஆரம்பிக்க வேண்டுமெனக் கல்வி உளவிய லாளர்கள் வலியுறுத்துகின்றனர். சமூக மாற்றத் திற்கு அத்தியந்த பங்களிக்கும் அலகுகளில் ஒன்றாகிய கலை இலக்கியத்தில், 'சிறுவர் இலக்கியம்' பற்றிச் சிந்திப்பது இவ்வேளையில் வெகு பொருத்த மானது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைப்பட்டயம் சிறுவர்கள் என 18 வயதுக்கு உட்பட்டோரையே குறிப்பிடுகிறது. கல்வி உளவியலாளர்கள் சிறுவர் களின் உடல் உளவளர்ச்சியை மனங்கொண்டு உப பிரிவுகளாக குழந்தைப்பருவம், பிள்ளைப்

பருவம், கட்டிளம்பருவம் என வகுத்துக் கூறுவர். ஒவ்வொரு காலகட்டங்களிலும் இவர்களது வளர்ச்சி நிலைகள் வேறானவை. முதல் ஐந்தாண்டுகளில் மனித மூளைவளர்ச்சியின் வேகம் மிகத் துரிதமானது. குழந்தை தன்னை மையமாக வைத்துச் சூழலைப் புரிந்துகொள்ள ஆரம்பிக்கிறது. படிப்படியாகச் சிந்தனை வளர்ச்சியடைகிறது. துருவித் துருவி ஆராய்ந்து, சுவைத்து, அனுபவித்து, விநோதங்களைக் கண்டுகளிக்க ஆவல் கொள்கிறது. புதுமையாக எதையும் நோக்குகிறது. அடுத்த படிவளர்ச்சியான கட்டிளம் பருவத்தில் மேற்குறிப்பிட்ட வளர்ச்சியின் அடித்தளத்தின் தொடர்ச்சியில் ஆக்கத்திறனை விருத்தியாக்குகிறது. தலைமைதாங்கும் பண்பு உருவாகிறது. ஆளுமைகளுக்கு அத்திவாரம் இடப்படுகிறது.

ஆகவே சிறுவர் இலக்கியக்களத்தின் பரப்பும் கருவளத்தின் வீரியமும் கனமும் காத்திரமானவை என்பது புலனாகிறது. வெறும் பாப்பாப்பாடல்கள் நீதிக்கதைகள் மட்டும் சிறுவர் இலக்கியமாகிவிடாது. இலக்கியம் மொழியிலானது. சிறுவர் இலக்கியத்தின் மொழி தனித்துவமானது. எளிமையானது. ஓசை நயம்மிக்கதாகவும் கருத்துக் கவர்ச்சியுள்ளதாகவும் அது அமையவேண்டும்.

புதிய சவால்களை இன்று சிறுவர் சமூகம் எதிர்நோக்கியுள்ளது. நிற, இன, மத பாரபட்சம், பாலியல் ரீதியான வன்முறை, வர்க்கரீதியான சுரண்டல், போர்ச்சூழல் உருவாக்கிய பாதிப்புகளான அகதி, அநாதை நிலைமைகள் இவைகள் பற்றிய சிறுவர்களின் சிந்தனை வெளிப்பாடுகள், செயற்பாடுகள் கருப்பொருளாகவேண்டும். மறுபுறம் நவீன துரித விஞ்ஞான முன்னேற்றத்தின் விளைவாலும் பூகோள மயமாதலாலும் சிறுவர் சிந்தனையில் தாக்கம் ஏற்பட்டுள்ளது. கடந்த காலத்தை மட்டுமே நோக்காது எதிர்காலத்தை விஞ்ஞான முன்னேற்றக் கற்பனையில் கண்டுகளிக்கின்ற மனப்பாங்கு உருவாகியுள்ளது. இதனைத் தொலைக் காட்சியில் சிறுவர்கள் காண்கிறார்கள். ஆனால் எமது இலக்கியங்களில் காணமுடிவதில்லை.

நவீன விஞ்ஞான சிந்தனைக்கு வளம் சேர்க்கும் science fiction - விஞ்ஞானப் புனைகதைகள் செய்து தருவோர் சிறுவர் இலக்கியத்திற்கு புதிய உயிர் தருவோராகிறார்கள். சிறுவர் இலக்கிய வடிவங்கள் குழந்தை, பிள்ளை, கட்டிளம் பருவம் ஆகிய நிலைகளுக்குத் தகுந்த வகையிலும், சிறுவர்களைக் கவரும் இசையும் அசைவும் கலந்த நடிப் புடைய நாடகங்களாகவும், சிறுவர் பாடல்களுடைய ஒலி நாடாக்களாகவும் பரிணமிக்கவேண்டும். இதேவேளையில் எமது பாரம்பரிய விழுமியங்கள் பிறழாது காலத்துக்கேற்ற மாற்றங் களை உள்வாங்கிய உயிர்ப்புடன் சிறுவர் சிந்தனைகள் வேர்பதிய வேண்டும். எமது சிறுவர் இலக்கியத்தில் உதிரியாகப் பல பாராட்டப்படக்கூடிய முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆயினும் உலக சிறுவர் இலக்கிய நீரோட்டத்தில் எமது சிறுவர் இலக்கியம் பரிணமிக்க வேண்டுமாயின் இத்துறையில் ஈடுபாடு உள்ளவர்கள் ஆசிரிய சமூகம், பெற்றோர், நூற்பதிப்பாளர்கள், நுகர்வோர் ஆகிய சகலரும் இணைந்து பொறுப்புடனும் ஆழ்ந்த சிந்தனையுடனும் செயற்பட வேண்டும்.

ஞானம்–41 (ஒக்ரோபர் 2004)

09



பெண்விடுதலை, உரிமைக்குரல் ஆகியன ஆக்க இலக்கியத்தில் உரிய அர்த்தத்துடன் ஒலிக்க வேண்டும்.

பெண்கள் பற்றிய சிந்தனைகள், அவர்களது பிரச்சினைகள், உணர்வுகள் வெகுஜன ஊடகங்களில் இன்று குறிப்பிடக்கூடியளவு வெளிப்படுத்தப்படுகின்றன. பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் பெண்களுக்கெனத் தனியான பகுதிகள் ஒதுக்கப்பட்டு பெண்கள் தொடர்பான அம்சங்கள் வெளிவருகின்றன. தனிப்பகுதி ஒதுக்கும் பான்மை, மகளிர் பிரச்சினைகள் மகளிருக்கு மட்டுமே உரியவை - அவை பொதுவானவை அல்ல என்ற தொனியில் 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்பதைப் போன்ற தோரணையில் அமைந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பொதுப் பிரச்சினைகள் மகளிருக்குத் தேவையற்றவை என்ற மறைமுக நிலைப்பாட்டை இது உருவாக்கு

கின்றது. அழகுக்குறிப்புகள், சமையல் குறிப்புகள், இல்வாழ்க்கைக் குறிப்புகள், வீட்டு நிர்வாகம், குழந்தை வளர்ப்பு போன்றவையே பெரும்பாலும் இவற்றில் பேசு பொருளாக அமைந்துவிடுகின்றன. பெண்களின் ஒடுக்கப்பட்ட - உரிமை மறுக்கப்பட்ட வாழ்வியலின் உட்கட்டமைப்புப் பற்றிய அணுகுமுறையில் - ஆய்வுநோக்கில் விடயதானங்கள் அமைவதில்லை. பெரும்பாலும் மரபுச்சிந்தனைகளைக் கட்டிக்காக்கும் பாங்கிலேயே அவை அமைகின்றன.

இன்று விழிப்புணர்வுபற்றி, மறுக்கப்படும் உரிமைகள் பற்றி ஆழமாகச் சிந்திக்கவேண்டிய காலம் கனிந்துள்ளது. தகர்ந்துவரும் சமூகக் கட்டமைப்பில் பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள், எதிர்கொள்ளும் சவால்கள் பலவாகியுள்ளன. இவற்றை வெளிப்படுத்தும் களமாக - பெண்களின் உணர்வு அலைகளின் வடிகாலாக கலை இலக்கியத்தின் சிந்தனைத் தடம் அமையவேண்டும்.

பெண்களுக்கு இழைக்கப்படும் அக்கிரமங்கள் பத்திரி கைகளில் செய்திகளாக வரும்போதும், பாலியல் பலாத்காரம் பற்றிய விவரணம் வெளியிடப்படும்போதும் அவை சித்திரிக்கப் படும் விதம், இடப்படும் தலையங்கம், பயன்படுத்தப்படும் மொழிப்பிரயோகம் ஆகியவை பணம்பண்ணும் நோக்கினைக் கொண்டதாகவும், பலாத்காரத்தை ஊக்குவிப்பதாகவும் அமைந்துவிடுவதைக் காண்கிறோம். கலை இலக்கியங்களில் காட்டப்படும் பெண்களும் ஆணாதிக்கத்தின் பிம்பத் தையே பெரும்பாலும் பிரதிபலிப்பதாகப் பெண்ணிய வாதிகள் வாதாடுகின்றனர். உண்மைதான் பெண்களின் போகத்தன்மையை ஆண்பார்வையில் அணுகுவதும், பாலுணர்வு முலாம்பூசி பெண்களின் உணர்வுகளை மலினப்படுத்துவதும் ஆக்க இலக்கியங்களில் பரக்கக் காணலாம். திரைப்படங்களிலும் தொலைக்காட்சிகளிலும் இவை உச்சக்கட்டத்தில் உள்ளன. அடக்கம், பொறுமை, தியாகம் ஆகிய குணவியல்புகள் நிறைந்த பெண்கள் உயர்ந்தவர்களாகவும், சுயமான போக்கும் துணிவும் கொண்டவர்கள் வித்தியாசமானவர்களாகவும் காட்டப்

படுவதையும் பார்க்கின்றோம். காலமாற்றத்தைக் கணக்கில் கொள்ளாது பழம்பெரும் இலக்கியப் பாத்திரங்களின் பண்புகளே இன்றும் இலட்சியப் பெண்களின் குணவியல்பு களாகக் கொண்டாடப்படுகின்றன. அவை மறுவார்ப்புச் செய்யப் படுகின்றன.

காலத்துக்கேற்ற இலக்கியம் படைத்த பாரதி பாஞ்சாலியை உருவாக்கியதைப்போல, புதுமைப்பித்தன் அகலிகையின் கதையை மறுவாசிப்புச் செய்ததுபோல ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் தொழிற்படவேண்டும். பெண்களும் ஆக்க இலக்கியமும் என்று நோக்கும்போது ஆக்க இலக்கியத்தில் பெண் பாத்திரங்கள், ஆக்க இலக்கியங்களைப் படைக்கும் பெண்கள் என இரு பரிமாணங்கள் உள்ளன. எந்தச் சமூகத்திலும் ஒடுக்கப்பட்ட நிலையில் உள்ளவர்கள் தமது அனுபவங்களை - தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைத் தாமே எழுதும்போதுதான் அதில் உயிர்த்துடிப்பு இருக்கும். பெண்களின் அகஉணர்வுச் சிக்கல்களை, புறவுலகத் தாக்கங்களைப் பெண் எழுத்தாளர்களால்தான் தத்ரூபமாக வடித்தெடுக்கமுடியும். ஆண் எழுத்தாளர்கள் பெண்ணியச் சிந்தனைகளைப் பொறுப்புணர்வுடன் சரியான முறையில் அணுகவேண்டும்.

மலினப்படுத்தப்பட்டுவரும் மகளிர் விடுதலை உணர்வும், உரிமைக்குரலும் ஆக்க இலக்கியத்தில் அர்த்த புஷ்டியுடன் வெளிக்கொணரப்படவேண்டும். சர்வதேச மகளிர் தினம் மலரும் மார்ச் மாதத்தில் 'ஞானம்' இச்சிந்தனைகளை வலியுறுத்துகின்றது.

ஞானம்–46 (மார்ச் 2004)

10



மலையக இலக்கியம் புத்தூக்கம் பெறவேண்டும்

“இலங்கையின் தமிழ் இலக்கியத்திற்குப் புதிய இரத்தம் பாய்ச்சுவது மலையக இலக்கியமே” என்று குறிப்பிட்டார் மூத்த எழுத்தாளரான எஸ்.பொ. 60களில் மலையகத்தில் எற்பட்ட விழிப்புணர்ச்சியையும் அதன் பேறாகத் தோன்றிய இலக்கிய எழுச்சியையும் அவதானித்த பின்னரே அவர் அவ்வாறானதொரு கணிப்பினை முன்வைத்தார். அக்காலத்தில் வெளிவந்த சிறுகதைகளே மலையக இலக்கியத்தின் செழுமைக்கும் அங்கீகாரத்துக்கும் ஆதாரமாய் அமைந்தன.

மலையக இலக்கியத்தின் முன்னோடி இலக்கிய கர்த்தாவாக தேசபக்தன் கோ. நடேசையர் கருதப்படுகிறார். அவர் 1931இல் எழுதிய ‘திரு ராமசாமி சேர்வையின் சரித்திரம்’ மலையகத்தின் முதலாவது சிறுகதையாகக்

கொள்ளப்படுகிறது. அடுத்து வந்த காலப்பகுதியில் சி.வி. வேலுப்பிள்ளை, கே. கணேஷ் ஆகியோர் மலையகத்தின் முக்கிய படைப்பாளிகளாகக் கணிக்கப்பட்டனர்.

1961இல் கல்கி நடத்திய சிறுகதைப் போட்டியில் திருச்செந்தூரன் எழுதிய 'உரிமை எங்கே' என்ற சிறுகதைக்குப் பரிசுகிடைத்தது. அந்நிகழ்வானது இலக்கிய ஆர்வலர்களை மலையகத்தின் பக்கம் திரும்பிப் பார்க்கவைத்தது. அச்சிறுகதைக்குக் கிடைத்த பரிசு மலையக எழுத்துலகிற்கு ஓர் உந்து சக்தியாக அமைந்தது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இலக்கிய விழிப்பின் திடீர்க்குமுறலாகத் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் தோன்றினர்.

என். எஸ். எம். ராமையா, இரா. சிவலிங்கம், தெளிவத்தை ஜேசப், சாரல் நாடன், மு. சிவலிங்கம், மு.நித்தியானந்தன், மல்லிகை சி. குமார், மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன், மலரன்பன், மொழிவரதன், சி. பன்னீர் செல்வம், நூரளை சண்முகநாதன், பி. மரியதாஸ், நயிமா ஏ. சித்திக், பூரணி, ஏ.வி.பி.கோமஸ், கே. கோவிந்தராஜ், பரிபூரணன், அல் அஸுமத், அந்தனி ஜீவா, சடகோபன், அன்புச்செல்வன், பாலா சங்குப்பிள்ளை எனப்பட்டியல் நீளும்.

தெளிவத்தை ஜோசப்பின் நாமிருக்கும் நாடே, என்.எஸ்.எம். ராமையாவின் ஒரு கூடைக் கொழுந்து, மு. சிவலிங்கத்தின் மலைகளின் மக்கள், மலரன்பனின் கோடிச் சேலை ஆகிய மலையகச் சிறுகதைத் தொகுதிகள் சாகித்திய மண்டலப் பரிசில்களைப் பெற்றன.

60களில் ஏற்பட்ட எழுச்சியின் இன்னொரு உடனடி விளைவாக 1965இல் 'குறிஞ்சிப்பூ' என்ற கவிதைத் தொகுதி வெளியாகியது. இதுவே மலையகத்தின் முதலாவது கவிதைத் தொகுதியாகும். நாற்பதுக்கும் மேற்பட்ட கவிஞர்களின் கவிதைகள் இத்தொகுப்பிலே இடம்பெற்றன.

கவிஞர்களில் குறிஞ்சித்தென்னவன், சு.முரளிதரன், தமிழோவியன் பண்ணாமத்துக் கவிராயர், குறிஞ்சிநாடன், பானா தங்கம், லிங்கதாசன், மரியதாசன், புசல்லாவை

இஸ்மாலிகா, இரா. நித்தியானந்தன், செல்வராஜ், அன்புச் செல்வன், இராகலை பன்னீர்செல்வம், ராம சுப்பிரமணியம், மூக்கன், ஈழக்குமார், மலைத்தம்பி, ராம்ஜி, உலகநாதன், வெலிமடை றபீக் இப்படியாக இன்னொருபட்டியல்.

'தமிழோவியன் கவிதைகள்' கவிதைத்தொகுப்பு சாகித்தியப் பரிசினைப் பெற்றது.

60களில் தோன்றிய இலக்கிய எழுச்சி 80களின் பிற்பகுதியிலிருந்து படிப்படியாக வீழ்ச்சியடைந்து தற்போது கீழ்நிலையை அடைந்துள்ளது. 80க்குப் பின்னர் தோன்றிய சிறந்த மலையகப் படைப்பாளிகள் என்று ஒரு பட்டியலைத் தரமுடியாத நிலை தோன்றியுள்ளது. கடந்த இருபது வருட காலப்பகுதியில் மலையக மண்ணிலிருந்து ஒரு சிறந்த சிறுகதையாசிரியரோ கவிஞரோ தோன்றவில்லை. மலையக மண்ணிலிருந்து ஒருநாவல் வெளிவரவில்லை. இவை கசப்பான உண்மைகள். விரல்விட்டு எண்ணக்கூடிய புதுக் கவிதையாளர்கள் தோன்றியிருப்பினும் அவர்களும் வளர்ச்சியடைய வேண்டிய நிலையிலேயே இருக்கின்றனர்.

இந்நிலை ஏற்படக் காரணமென்ன?

இலக்கிய வளர்ச்சிப்போக்கு என்பது ஒரு சங்கிலித் தொடர் அஞ்சல் ஓட்டம் போன்றது. ஒரு தலைமுறை எழுத்தாளர்கள் அடுத்துவரும் தலைமுறையினருக்கு எழுத்தின் தொடர்ச்சியைக் கையளிக்கவேண்டும். இன்றைய மூத்த தலைமுறை எழுத்தாளர்கள் புதிய தலைமுறை எழுத்தாளர்களுக்கு வழிகாட்டவோ ஊக்கங் கொடுக்கவோ எவ்வித முயற்சிகளும் எடுப்பதில்லை. தம்மைப்பற்றியே பேசிக் கொண்டும் எழுதிக்கொண்டும் இருக்கிறார்கள் என்ற குரல் மலையகத்தின் இளந் தலைமுறையினரிடமிருந்து ஓங்கி ஒலிக்கிறது.

மலையகக் கல்விக் கூடங்களில் ஆசிரியர்கள் இலக்கிய உணர்வை மாணவர்களிடையே வளர்த்தெடுக்கக்கூடிய தகுதியற்றவர்களாக இருக்கின்றனர் என்பது மற்றொரு குற்றச்சாட்டு. மலையகத்தின் மூத்த எழுத்தாளர்கள் பலருக்கு ஆசிரியர்களே இலக்கிய உணர்வை எற்படுத்தினார்கள் என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

வாசிப்புப் பழக்கம் அருகி வருகிறது. ஒலி, ஒளி ஊடகங்களின் ஆதிக்கம் மலையகத்திலேயே அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பது பிறிதொரு குற்றச்சாட்டு.

சமுதாயவளர்ச்சியில் தேக்கநிலை தோன்றும்போது இலக்கியத்திலும் 'களப்பிரர் காலம்' தோன்றும் என்பது வரலாற்று நியதி.

எது எவ்வாறாயினும் மலையகப் படைப்பாளிகள், கல்விமான்கள், புத்திஜீவிகள் இதுபற்றிச் சிந்தித்து, இதற்கான காரணங்களைக் கண்டறிந்து காத்திரமான நடவடிக்கை எடுக்கவேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது என்பதை ஞானம் அழுத்திக் கூறவிரும்புகிறது.

ஞானம் –53 (ஒக்டோபர் 2004)

11



பெருகிவரும் நூல்வெளியீட்டு முயற்சி?

இப்போதைய காலகட்டத்தை அவசர யுகம் என்று கூறும் அளவுக்கு எதையும் உடனேயே நிறைவேற்றிவிட வேண்டும் என்ற முனைப்பு அநேகமாக எல்லாத்துறைகளிலும் காணப்படுகின்றது. அதனை ஊக்குவிக்கும் வகையில் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் வெகுவாக வளர்ந்துள்ளன. இந்நிலையில் இன்றைய ஆக்க இலக்கியப் படைப்பாளர்கள் கைகட்டிக் கொண்டு வெறுமனே இருக்க முடியாது என்பது உண்மையே. பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதிவரும் புதியதலைமுறை எழுத்தாளர்களின் எண்ணிக்கையும், முன்னரைக் காட்டிலும் பெருகியுள்ளது வரவேற்கப்பட வேண்டிய விஷயமே. ஆனால், அவர்களின் ஆக்கங்கள் அச்சில் வெளிவந்து, அந்த அச்சுமை காய்வதற்கு முன்னரே, சம்பந்தப்பட்ட எழுத்தாளரினால் அவசர அவசரமாக நூலாக்கப் பெற்று, தடபுடலாக வெளியீட்டு விழாக்களும் ஏற்பாடாகி விடுகின்றன.

தினப்பத்திரிகைகளைப் பார்க்கும்போது, தலைநகரில் மட்டுமல்லாமல் வெளியூர்கள், கிராமங்கள் ஆகிய இடங் களிலும் நூல் வெளியீட்டு விழாக்கள் பற்றிய செய்திகளை வாசித்து அறிந்துகொள்ள முடிகிறது. தலை நகரில், திருமணம் போன்ற நிகழ்ச்சிக்குத்தான் போட்டி போட்டுக் கொண்டு மண்டபங்களை முற்கூட்டியே பதிவு செய்வார்கள். கொழும்பில் வார மொன்றுக்கு ஒரு புத்தக வெளியீட்டு விழா என்ற நிலைமை மாறி, தற்போது வார இறுதி நாட்களில் மூன்று, நான்கு நூல் வெளியீட்டு விழாக்கள் என வெவ்வேறு மண்டபங்களில் நடைபெறுகின்றன. இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொள்வதற்கு வசதியான மண்டபங்களை முன்கூட்டியே பதிவு செய்வதில் எத்தனை போட்டிகள்! ஏன் இந்த அவசரம்? எழுதுவதெல்லாம் இலக்கியமாகிவிடுமா?

அரை நூற்றாண்டுக்கு முன்னர், எமது நாட்டில் ஆண்டொன்றுக்கு, ஆக்க இலக்கிய நூலொன்று வெளி வருவதே அரிதாக இருந்தது. அக்கால எழுத்தாளர்கள் தாம் எழுதியவற்றை, தம்மோடு ஒத்த இலக்கிய நண்பர்களுக்குப் படித்துக் காண்பித்து, குறைகளிருப்பின் திருத்தங்கள் செய்த பின்னரே, பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு அனுப்பிவைப்பர். பிரசுரமான பின்னர் கூட, குறிப்பிட்ட படைப்பைப் பற்றிக் கலந்துரையாடல்கள் இடம்பெறுவதுண்டு. பல ஆக்கங்களைச் சிருஷ்டித்து, அவை பத்திரிகைகளில் வெளிவந்திருந்த போதிலும், அவற்றையெல்லாம் அவசரப்பட்டு நூலாக்கும் முயற்சியில் அவர்கள் இறங்கிவிடுவதில்லை. பல தடவை கள் படித்து, ஆழ்ந்து சிந்தித்து, 10, 12 சிறுகதைகளையோ, 15, 20 கவிதைகளையோ பொறுக்கி எடுத்து, நூலுருவில் வெளியிட்டனர். அதன் காரணமாகவே மூத்த படைப்பாளி களான வரதர், கனக செந்திநாதன், இலங்கையர் கோன், சம்பந்தன், சொக்கன், மகாகவி, அ. ந. கந்தசாமி, வ. அ. இராசரத்தினம், நீலாவணன், முருகையன், சு. வே. முதலியோரின் படைப்புகள் அரை நூற்றாண்டுக்குப் பின்னர் இன்றுகூடச் சிறந்தவை எனப் பேசப்படுகின்றன.

நூல்களின் பெருக்கத்தால் மட்டுமே இலக்கியம் வளர்ந்துவிட்டது எனக் கொள்ளமுடியாது. நூல்களின் தரத்தைக் கொண்டே ஈழத்து இலக்கியம் செழிப்புற்றோங்கமுடியும். நூல்களின் தரத்தைத் தீர்மானிப்பவர்கள் யார்? இலக்கிய ஆர்வம் மிக்க வாசகர்களே என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

ஆனால், இப்பொழுது நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் வெளிவருகின்ற நூல்கள் வெளியீட்டு விழா மண்டபத்துடன் நின்று விடுகின்றன. வெளியே பரவலாக கிடைக்கக்கூடிய ஏற்பாடு எதுவும் செய்யப்படுவதில்லை. நூலின் தரத்தைத் தீர்மானிக்கக் கூடிய இலக்கிய வாசகர்களின் கரங்களை இவை எட்ட முடியாமலிருப்பதால், அபிப்பிராயங் கூற முடியாத தத்தளிப்பான நிலைமையிலேயே வாசகர்கள் வாய்பொத்திக் கொண்டிருக்க வேண்டியுள்ளனர் என்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும்.

ஞானம்–71 (ஏப்பிரல் 2006)

புரிதல்

✦ ஞானம் ஏப்ரல் மாத இதழ் கிடைத்தது. அதன் 'பெருகிவரும் நூல் வெளியீட்டு முயற்சி' - என்ற தலையங்கத்தில், நீங்கள் மூத்த படைப்பாளிகள் என்று சிலரது பெயர்களைத் தந்து, அவர்களது நூல்கள் இன்றுகூடச் சிறந்தவை என்று பேசப்படுகின்றன என்று உங்கள் அபிப்பிராயத்தையும் கூறி முடித்திருக்கிறீர்கள்.

மூத்த எழுத்தாளர்கள் அவர்கள் மட்டுமல்ல, இன்னும் பலர் இருக்கிறார்கள் என்பதை முதலில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அந்த மூத்த எழுத்தாளர்களில் குறைகள் கண்டுபிடிப்பது எனது நோக்கமல்ல. நீங்கள் எழுதியதற்குப் பதில் கூறுவதற்காகவே இக் கடிதத்தை எழுதுகிறேன். எனக்கு வயது 72. ஐம்பது வருடங்களுக்கும் மேலாக இலக்கியம் படைத்து

வருகிறேன். கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை வானொலி ஊடாக, இலங்கையர் எல்லோருக்கும் நாடக விருந்தளித்து வருகின்றேன். நான் இதுவரை எழுதி வெளியிட்ட நூல்கள் 20. அவற்றில் 52 நவீன நாடகங்களைக் கொண்ட, பதினொரு நாடக நூல்களும் அடங்கும். இவ்வளவு தொகையான நாடகங்களையும் நாடக நூல்களையும் இலங்கையில் வேறு யாராவது அச்சிட்டு வெளியிட்டிருக்கிறாரா?

உங்களது பட்டியல்தான் இறுதிப் பட்டியலல்ல. இருந்தாலும் இப்படியாக அவசரப்பட்டு பட்டியலிட்டுக்காட்டி, "ஞானத்தின்" மதிப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டாம் என்று உங்களுக்குச் சொல்வதற்காகவும்தான் இக் கடிதத்தை வரைகிறேன்.

கலாபூஷணம் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை
(ஞானம்–72– மே –2006)

✦ ஏப்ரல் 2006 இதழ் கிடைத்தது - ஆசிரியர் தலையங்கத்தில் சம்பந்தன் போன்ற மூத்த எழுத்தாளர்கள் தங்களது சிறந்த சிறுகதைகளையே புத்தகமாக வெளியிட்டார்கள் என்று எழுதியிருந்தீர்கள். சம்பந்தன் இறக்கும்வரை தனது சிறுகதை தொகுதியை வெளியிடவில்லை. இறந்தபின் செங்கை ஆழியான்தான் வெளியிட்டார்.

சி. குமாரலிங்கம், நல்லூர். (ஞானம்–72– மே –2006)

12



விமர்சனப்புகழுரைகள்

வாராவாரம் நூல் வெளியீடுகள் பெருகிய வண்ணம் இருக்கின்றன.

கவிதைத்தொகுதிகள், சிறுகதைத் தொகுதி கள், சமயநூல்கள், வரலாற்று நூல்கள் பல்சுவை நூல்கள் எனப் பல்வகையான நூல்களும் நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கின்றன. கணினியின் வரவும், அச்சுத்தொழிலின் முன்னேற்றமும், நூல் வெளியீடுகளைச் சுலபமாக்கி இருக் கின்றன. ஒருவர் விரும்பினால் ஒரு வாரத்திலேயே ஒரு நூலை வெளிக்கொணர வசதிகள் வந்துவிட்டன.

வெளியிடப்படும் நூல்களில் கவிதைநூல் களின் தொகையே அதிகமாகக் காணப் படுகின்றது. முன்பெல்லாம் கவிதை எழுது வதற்கு ஓரளவாவது கவிதை இலக்கணம் தெரிந்திருக்கவேண்டி இருந்தது. புதுக்கவிதை வரவின்பின் இன்று நிலைமை அப்படியல்ல. யாரும் கவிதை எழுதலாம். இதுவும் கவிதை நூல்களின் வெளியீட்டுப் பெருக்கத்திற்கு ஒரு காரணம் போலத் தெரிகிறது.

புற்றீசல்கள்போல் வெளிக்கிளம்பும் நூல்கள் பல வற்றின் தரம் பெரிதும் கவலையளிப்பதாகவே உள்ளது. நூல்களில் எழுத்துப்பிழைகள், இலக்கணப்பிழைகள் மலிந்து கிடக்கின்றன. அருமையாக ஓரிரு நூல்கள் இதற்கு விதி விலக்காகவும் இல்லாமல் இல்லை.

இந்த நூல்களின் வெளியீட்டு விழாக்களுக்குச் சென்றாலோ சலிப்புத்தான் ஏற்படுகிறது. மாலை மரியாதைகள், பொன்னாடைகள், புகழ்மாலைகள் ஒருபுறமிருக்க நூல் விமர்சனம் என்ற பெயரில் நிகழும் அளவுக்குமீறிய புகழுரை களும், புனைவுரைகளும் கவலைதரும்படி இருக்கின்றன.

நூல் விமர்சனத்தினை யார் செய்வது என்ற விவஸ்தையே இல்லாது விமர்சன உரைகள் 'எடுப்பார் கைப்பிள்ளையாக' மாறியிருக்கும் ஒரு நிலையைக் காணக்கூடியதாக இருக்கிறது. தமக்கு வேண்டப்பட்டவர்களைக் கொண்டு, பாராட்டுரைகளை நூல் விமர்சனம் என்ற பெயரில் செய்விக்கும் நிலைமையே பெரும்பாலும் உருவாகிவருகிறது. இத்தகு புதிய விமர்சகர்கள் மேடை கிடைத்ததும் நன்றிக்கடனாக படைப்பாளியைப் பற்றியும் அவரது படைப்பைப் பற்றியும் அளவுக்குமீறிப் புகழ்ந்து தள்ளுகின்றனர்.

இத்தகைய விமர்சனப்புகழுரைகளால் எவரும் பயன டையப் போவதில்லை. சம்பந்தப்பட்ட எழுத்தாளரோ அத்தகு விமர்சனங்களைக் கேட்டுக்கொண்டு இருப்பவர்களோ இவ்விமர்சனங்களால் எவ்வித சிந்தனைத்தெளிவையும் பெறுவதில்லை.

குறிப்பாக விமர்சனத்தின் நோக்கமாகிய படைப்பாளி தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்ளும் பயன்பாடு இத்தகு விமர்சனங்களால் நிகழ்வதில்லை. ஒரு படைப்பைவிட எழுத்தாளனின் அடுத்த படைப்பு வளர்ச்சி கண்டிருக்கவேண்டும். சமூக இயக்கத்தை நுட்பமாய் அவதானித்து உள்நுழைந்து குறைநிறைகளை வெளிக்கொண்டுவருகிற தன்மையை விமர்சன உரைகள் என்ற பெயரால் நிகழ்த்தப்படும் இத்தகைய தவறான புகழ் உரைகள் மழுங்கடித்துவிடுகின்றன. படைப்பாளியின் வளர்ச்சியை தேங்கவைத்து விடுகின்றன.

இது ஒரு ஆபத்தானநிலை. விமர்சனங்களால் தகுதியான ஆக்கங்களும் மறைக்கப்பட்ட ஒருகாலம் போய் இன்று

விமர்சனங்களால் தகுதியற்ற ஆக்கங்களும் உயர்த்தப்படுகிற மிக ஆபத்தானநிலை ஏற்பட்டுள்ளது.

ஏன் இத்தகையநிலை ஏற்பட்டது?

நமதுநாட்டுவிமர்சனத்துறையில், முன்னர் குழுமனப்பாங்கு, தனிப்பட்ட விருப்பு வெறுப்பு, பிரதேசமனப்பான்மை என்பன அமைந்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது. ஆனாலும் அக்காலத்தில் ஓரிருவர் நேர்மையுடன் செயற்படவே செய்தனர் என்பதை மறுப்பதற்கில்லை.

அக்காலகட்டத்தில், படைப்பு என்பது வெறும் கலைவடிவு மாத்திரமாய் அல்லாது சமூகம் சார்ந்ததாயும், சமூக முன்னேற்றத்திற்கு வழிவகுப்பதாயும் அமைந்திருக்க வேண்டு மென்ற கருத்தினை அவ் உண்மை விமர்சகர்கள் எடுத்துக்காட்டி ஈழத்து இலக்கியச் செல்நெறியை சரியானவழிக்குத் திருப்பியுள்ளனர். இப்பெருமை அவ்விமர்சகர்களுக்கே உரியது என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஆனால் இன்று இந்தநிலைமை முற்றிலும் மாறியுள்ளது. இந்நிலைமையை எவ்வாறு மாற்றியமைப்பது என்பது பற்றி நமது நாட்டிலுள்ள உயர்கல்விப்பீடங்களும் பொறுப்புள்ள இலக்கியவாதிகளும் தீவிரமாய்ச் சிந்திக்க வேண்டும்.

தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்கும் மாணவர்கள் இன்று விமர்சனமும் பயில்கிறார்கள். இவர்கள் இன்றைய தவறான விமர்சனங்களை முன்னுதாரணங்களாய்க் கொண்டுவிடலாம். அது வருங்கால இலக்கியவுலகில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தும். எனவே இந்நிலையை மாற்றி கல்விமுறையினூ டாக தகுதிவாய்ந்த விமர்சகர்கள் உருவாகுவதை அறிவுலகம் உறுதி செய்ய வேண்டும்.

தகுதி வாய்ந்த, தகுதியற்ற நூல்கள் வெளிவரும்போது அவற்றை நேர்மையான முறையில் இனங்காட்டுவது விமர்சகர்களின் கட்டாயக்கடமை. நேர்மையான விமர்சகர் களும், விமர்சனங்களும் தோன்றாதவரை நமது நாட்டின் படைப்பிலக்கியம் உயர்வடையும் என எதிர்பார்க்க முடியாது.

ஞானம்–74 (ஜூலை 2006)

புரிதல்

✦ ஞானம் 74ஆவது இதழில் (ஜூலை 2006) ஆசிரியத் தலையங்கத்தில் விமர்சனப் புகழுரை பற்றியும், புற்றீசல் போல வெளிக்கிளம்பும் தரமற்ற நூல்கள் பற்றியும் நூலை விமர்சனம் செய்வோரின் தகுதிப்பாடுபற்றியும் குறிப்பிட்டிருந்தார்கள்.

இன்று திறனாய்வாளரின் தகுதிப்பாடு பற்றி எவரும் கவலைப்படுவதில்லை. எழுதித் தோற்றவர்களும், எவருக்கும் விளங்காத இரண்டு மூன்று புதுக்கவிதைகளை எழுதியோரும் தமக்குத்தானே 'திறனாய்வாளர்' முத்திரை குத்திக்கொண்டு வலம் வருகின்றனர். நடுநிலையில் நின்று இலக்கியப் படைப்பின் சிறப்புக்களையும் குறைபாடுகளையும் சான்று காட்டித் திறனாய்வு செய்வோரைக் காண்பது மிக அரிது. ஒரு காலகட்டத்தில் (1960 - 80) திறனாய்வு நாட்டாண்மை செய்தோர் சார்புநிலை விமர்சகர்களாகவே இருந்தனர். "மார்க்சிய அறிக்கை நிலைப்படாத திறனாய்வு பலங்குன்றியதும் ஆழம் குன்றியதும் நொதுமலானதுமான வியாக்கியானத்தையே தரமுடியும்" எனத் திருவாய் மலர்ந்துள்ளனர். மார்க்சியவாதிகள் இலக்கியத்தை கலாரீதியாகவும், சித்தாந்தரீதியிலும் முற்போக்கு இலக்கியம், பிற்போக்கு இலக்கியம் என வகைப்படுத்தினர். மார்க்சிய பொருள்முதல் வாதத்தின் அடிப்படையில் இலக்கியத்தை நோக்குவதே சரியான அணுகுமுறை, ஏனைய அணுகு முறைகள் தவறானவை என உரத்துக்கூறினார். காலங்காலமாகச் சுரண்டலுக்குள்ளான மக்களின் சிந்தனையைப் பிரதிபலிக்கும் இலக்கியங்களே முற்போக்கு இலக்கியம் எனப் பிரசாரம் செய்யப்பட்டது. காலப்போக்கில் இதன் போதாமையை உணர்ந்து மனிதனை நேசிக்கின்ற அனைத்துப் படைப்புக்களும் முற்போக்கு இலக்கியம் என்ற நிலைப்பாட்டிற்கே வரவேண்டியிருந்தது.

மனித சமூக முன்னேற்றத்தினை சித்தரிக்கும் இலக்கியங்கள் சமூகக் குறைபாடுகளைச் சாடும் இலக்கியங்கள், மனிதனின் ஒளிமயமான வாழ்க்கையைக் கற்பனை செய்பவை எல்லாமே முற்போக்கு இலக்கியங்கள்தான் என ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த நிலைப்பாட்டைத்தான் மார்க்ஸ், ஏங்கல்ஸ் லெனின் ஆகியோர் மேற்கொண்டனர். மார்க்ஸ் ஷேக்ஸ்பியரைப்பற்றி மிக உயர்வாக எழுதினார். லெனின் டால்ஸ்டாயை ரஷ்யப் புரட்சியின் கண்ணாடி என்று அழைத்தார்.

ஆனால் எமது நாட்டு முற்போக்கு விமர்சகர்கள் இவற்றையெல்லாம் கருத்தில் கொள்வதில்லை. பாட்டாளி வர்க்கச் சார்பில்லாதவை எல்லாம் பிற்போக்கு இலக்கியம் எனக் கருதுகின்றனர். பொறியியல் துறைப் பேராசிரியர் ஒருவர் தன்னை ஒரு முற்போக்கு விமர்சகர் எனக் கருதிக் கொண்டு சிறுகதைத் தொகுதியொன்றை விமர்சனம் செய்யும் போது "நூலாசிரியரிடம் இடதுசாரி

சமூகச் சிந்தனை இருந்ததற்கான ஆதாரம் எதுவும் இக்கதைகளில் இல்லை" என்று கூறியிருக்கிறார். இடதுசாரிச் சிந்தனை இல்லாத எந்தக்கதையும் தரமானதாக இருக்கமுடியாது என்பதே அவரின் கருத்தாகும். வேடிக்கை என்னவென்றால் முற்போக்கு அணியைச் சாராத எழுத்தாளர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் சிந்தனையைப் பிரதிபலிக்கும் கதைகளை எழுதினாலும் அவற்றை அவர்கள் கண்டு கொள்வதில்லை.

மஹாகவியையும் நீலாவணனையும் இந்த விமர்சன நாட்டாண்மைக்காரர் வேண்டுமென்றே புறக்கணித்த போதும் இன்று அவர்கள் கவிதையுலகில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கத்தான் செய்கிறார்கள். சூரியனைக் குடையால் மறைக்க முடியாது.

தரமில்லாதவற்றை விமர்சகர்களால் உயர்த்திவிடவோ தரமானத்தைத் தாழ்த்தி நசுக்கவோ எந்த விமர்சகராலும் முடியாது. இதனால் விமர்சகரின் அபிப்பிராயங்கள் பற்றிப் படைப்பாளிகள் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை.

– முல்லைமணி (ஞானம்–75–ஆகஸ்ட் –2006)

✦ விமர்சனங்கள் தொடர்பாகவும் விமர்சகர்கள் தொடர்பாகவும் உண்மையை சொன்னீர்கள் (ஆசிரியர் தலையங்கம்). இந்தக்காலத்தில் சரியான விமர்சனங்களையோ விமர்சகர்களையோ பார்க்க முடியாதுள்ளது.

இது புலம்பெயர் நாடுகளுக்கும் தகும். லண்டனில் மு. நித்தியானந்தன் விமர்சனத்துறையில் நன்றே விளாங்குகின்றார். எனக்கு வேறு ஒருவரையும் ஞாபகம் கொள்ள வருகுதில்லை.

இது எமக்கெல்லாம் ஒரு வறுமையே. ஆண்டாண்டு காலமாக பல்கலைக் கழகங்களின் மெத்தெனப் போக்கும் அவர்களைக் கேள்வி கேட்காத போக்கும் தொடர்ந்தே வருகிறது.

கம்பவாரிதி இதனையெல்லாம் உடைத்தெறிந்திருப்பது உண்மையில் தமிழுக்கு நல்லது. கம்பவாரிதியோடு கதைத்துக் கொண்டிருந்த பொழுது மிகவும் கவலைப்பட்டார். எமது பல்கலைக் கழகங்கள் யுத்தம் என்ற திரைக்கு பின்னால் நின்று கொண்டு எதுவுமே செய்யாமல் ஒதுங்கிக் கொள்கிறது. யுத்தம் ஒன்றும் செய்ய முடியாது என்பது வெறும் பேச்சு.

பல்கலைக்கழகத்தில் இருந்து வீரியமாக ஒருவரை சுட்டிக்காட்டட்டும் சமூகத்துக்கு ஏதாவது செய்கிறார்களென்று, இன்னும் கைலாசபதியையும் சிவத்தம்பியையும் மட்டுமே சொல்லிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் காலம் என்று.

அதற்கு பின்னால் யார்? எமக்கு அகெடமிக் லெவலில் யாரை சுட்ட முடியும். உருவாக்க முடியாமல் போய்விட்டதெனில் யார் பொறுப்பு? சொல்லுங்கள் பல்கலைக்கழகங்களே!

இந்த ஜெயராஜ்ஜின் தொடர் தேசிய பத்திரிகைகளில் வந்திருக்குமானால் அழுத்தங்கள் காரணமாக நின்று போயிருக்கும் இடைநடுவில், ஞானத்தில் என்பதனால் ஒரு நம்பிக்கை தெரிகிறது.

– இளய அப்துல்லாஹ (ஞானம்–75–ஆகஸ்ட் –2006)

✦ 2006, யூலை மாதத்து ஞானம் பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கமாக, ஒரு அருமையான கட்டுரை எழுதியிருக்கிறீர்கள். அது எல்லா அறிஞர்களாலும் வரவேற்கத்தக்கது.

கவிதை, சும்மா வராது தாராளமாக, இலக்கியங்கள் நீதி நூல்கள் ஒரு கவிஞனுக்கு அடித்தளமாக இருக்க வேண்டும். பல நூல்களில் சிறப்பாக, கம்பர், நளவெண்பா, தனிப்பாடல்களில் ஆழமான பயிற்சி வேண்டும். தமிழ் இலக்கியங்களை நன்றாக அறிதல் வேண்டும். அன்றி - கடவுள் பக்தி கட்டாயம் இருக்க வேண்டும். மேலும் யாப்பிலக்கணம் ஓரளவாவது வேண்டும்.

மற்றும் பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன் கவிதைகளையும் படித்து கவிதை எழுத வேண்டும்.

மரபு, இலக்கணமறிந்துதான், பெரியார்கள் புதுக்கவிதையும் படைத்திருக் கிறார்கள் என்பது படிப்பவர்க்குப் புலனாகும்.

எதுகை மோனை இல்லாமலும் சொல்லுடைவுகள், எச்சங்கள், முடியுமிடந் தெரியாமலும் செய்கிற புதுக்கவிதை உப்பில்லாப் பண்டம் போன்றது.

படித்தவர்கள் பார்த்து நன்றென, தலையசைக்க வேண்டும். அதுதான் கவிதை.

புதுக்கவிதை, செய்ய விரும்புவோர் ஆரம்பத்தில், ஒரு மரபுக் கவிஞனுடன் தொடர்பு கொண்டு அவர் புத்தியையும் கேட்டால் பின்னுக்கு உயரலாம்.

வை. க. சிற்றம்பலம் (ஞானம்–77– ஒக்டோபர் –2006)

13



ஏற்று “மதி”
இறக்கு “மதி”!

சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் – கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

இது மறுமலர்ச்சிக் கவிஞன், மகாகவி பாரதியின் அறிவுரை என்பதையும், இந்த அறிவுரை தமிழ்நாட்டு கல்விமான்கள், அறிஞர்கள், புலவர்கள் முதலியோருக்கு வழங்கப் பட்டது என்பதையும் நாங்கள் சொல்லித்தான் வாசகர்கள் விளங்கிக் கொள்ளவேண்டும் என்ப தில்லை.

ஆனால் -

கலைச்செல்வங்கள் என எவற்றைக் குறிப்பிட்டான் என்பதைப்பற்றி நாம் சிறிது விளக்கத்தான் வேண்டும்.

புத்தம் புதிய கலைகள் – பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே – அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

- முதலிய அடிகளைத் தொடர்ந்தே

இந்த அறிவுரை இடம்பெற்றதால், விஞ்ஞான - தொழில் நுட்ப உயர்தொழில் நுட்பம் சம்பந்தமானவற்றையே 'கலைச் செல்வங்கள்' எனப் பாரதி குறிப்பிட்டான் என, பாரதியின் குறிக்கோளைக் குறுக்குகின்றார்கள் சிலர்.

அதே வேளையில் -

பாரதியின் தமிழ் மூச்சையும் கற்பனை வீச்சையும் கவிப் பிரவாகத்தையும் காதாரக் கேட்டு, நாவாரப் பாடி நெஞ்சார உணர்ந்து நினைவாரப் போற்றுபவர்கள் -

'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவன் போல் இளங்கோவைப் போல், பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை' என்ற பாரதியின் ரசனைத் திறனை நன்குணர்ந்த வர்கள் -

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்க்கப் பெற்று இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்றப்பெற்று -

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப் பெருக்கும் கவிப் பெருக்கும் மேவுமாயின் -

பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம் விழிபெற்றுப் பதவி கொள்வர் என்ற பாரதியின் இதயத்தையும் இலட்சிய வேட்கையையும் நன்கு தெரிந்து வைத்திருப்பவர்கள் -

பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்களை மட்டுமல்லாமல், நெஞ்சை அள்ளும் காவியங்களையும் சேர்த்தே கலைச் செல்வங்கள் எனப் பாரதி குறிப்பிட்டான் என்பதைப் பட்டும்படாமலும் என்றில்லால் தெட்டத்தெளிவாகவே கூறுகின்றார்கள்!

மறுக்க முடியாத இந்த விளக்கத்தை மனமுவந்து ஏற்றுக் கொள்ளும் நாம், பாரதியாரின் இந்த அறிவுரைகளுக்கு ஆதாரசுருதியாக இருந்த ஒன்றையும் சற்று அழுத்திக்கூற விழைகின்றோம்.

நாடுகளுக்கிடையேயான கலை இலக்கியத் தொடர்பு என்றுமே இருவழிப் பாதையாகவே இருக்க வேண்டும்

என்பதில் அவன் அசையா நம்பிக்கை கொண்டிருந்தான் அதனாலேதான்,

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்

சொல்வதிலோர் மகிமை இல்லை

திறமான புலமையெனில் வெளிநாட்டோர்

அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்

- என கலை இலக்கிய ஏற்று 'மதி'யை வலியுறுத்திய அதே வேளையில்,

சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் – கலைச்

செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

- என அவற்றின் இறக்கு 'மதி' யையும் வலியுறுத்தினான்.

ஆனால் 'தொப்பூழ் கொடி' உறவுடைய இந்தியா இலங்கை நாடுகளுக்கிடையே - திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றுகின்றோம் எனச் சொல்லிக் கொள்வதிலே பெருமைப்படும் இந்த நாடுகளுக்கிடையே 'இலக்கியம்' என்பது இன்னமும் ஒரு வழிப் பாதையிலேயே பயணம் செய்துகொண்டிருக்கின்றது!

இந்தியத் தமிழக நூல்கள் - சஞ்சிகைகள் இந்த நாட்டிலே தாராளமாக இறக்குமதி செய்யப்படுகின்றன. அதேவேளை, இந்த நாட்டிலே இந்த நாட்டு எழுத்தாளர்களால் வெளியிடப் பெற்ற நூல்கள் தமிழ் நாட்டிலே இறக்குமதி செய்யப் படுவதில்லை. அதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எத்தனையோ ஆண்டுகளின் முன்னர், தூர நோக்கற்ற யாரோ சிலரால் உருவாக்கப்பட்ட சட்ட விதிகளே இந்தத் தடையின் அடிப்படையாம்!

மேடை நிகழ்ச்சிகளில் பொன்னாடை போர்த்துவதையும் பூமாலை சூட்டுவதையும் தவிர்த்துவிட்டு, அறிஞர்களுக்கும் கலைஞர்களுக்கும் அருமையான தமிழ் நூல்களை அன்பளிப்பாக வழங்கவேண்டும் என்ற ஆலோசனையைக் கூறி அதை நடைமுறைப்படுத்தியும் வருகின்ற தமிழ் நாட்டின் முதல்வர் கவிஞர் கலைஞர் கருணாநிதி முயற்சி செய்தால் -

தமிழ் நாட்டுக் கல்விமான்களும் கலைஞர்களும் அறிஞர்களும் எழுத்தாளர்களும் அவருக்குக் கைகொடுத்தால்

இந்தத் தடையை நீக்குவதில் தடை ஏதும் ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏதும் ஏற்படாதென்பது சர்வ நிச்சயம்!

நமது நாட்டு நூல்களைத் தமிழ்நாட்டு வாசகர்கள் வாங்கினால்தான் எங்களால் வாழமுடியும் என்ற நிலை இல்லை. 'அள்ளு கொள்ளை'யாகப் பணம் சம்பாதிக்கும் அவாவும் எங்களிடமில்லை. அது சாத்தியமுமில்லை. அப்படியொரு விற்பனைப் பெருக்கை நாம் கற்பனையிற் கூடக் காண்பதில்லை.

நாங்களும் தமிழர்கள்தான். நாம் வாழும் பிரதேசமும் தமிழ்கூறும் நல்லுலகத்தின் ஒரு பகுதிதான். எங்களிடமும் தமிழ்ப்பற்று உண்டு, இனப் பற்றுண்டு, நாட்டுப் பற்றுண்டு.

சங்கப் புலவன் ஈழத்துப் பூதன்தேவன் வாழ்ந்த நாடு எங்கள் நாடு.

'வசன நடை கைவந்த வல்லாளன்' எனப் பரிதிமாற் கலைஞராற் பாராட்டப்பெற்ற ஆறுமுகநாவலர் வாழ்ந்த நாடு எங்கள் நாடு.

தமிழ் மக்களுக்கே உரியதான யாழ். என்ற இசைக் கருவியைப் பற்றி ஆராய்ந்து அதன் அமைப்புக்கு அடியிட்டவரும், பாரதியார் உண்மையிலேயே ஒரு மகாகவிஞன் என்பதை முதன்முதலிற் பகிரங்கமாகத் தெரிவித்தவருமான சுவாமி விபுலானந்தர் வாழ்ந்த நாடு எங்கள் நாடு.

தமிழ் ஏடுகளைத் தேடி, ஆராய்ந்து அச்சுவாகனம் ஏற்றிய முன்னோடியான சி.வை. தாமோதரம்பிள்ளை வாழ்ந்த நாடு எங்கள் நாடு.

அண்மைக்கால ஆராய்ச்சியின்படி தமிழ்ச் சிறுகதையின் முன்னோடியென முடிவுகட்டப் பெற்றுள்ள ஆணல்ட் சதாசிவம்பிள்ளை எங்கள் நாட்டிற்குரியவர்தான்.

தமிழின் முதலாவது நாவல் எனப் பலரும் குறிப்பிடும் 'பிரதாப முதலியார் சரித்திரம்' வெளிவருவதற்கு இருபது

ஆண்டுகளின் முன்னரே எங்கள் நாட்டிலிருந்து 'காவலப்பன் கதை' என்ற நாவல் வெளிவந்துவிட்டது.

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான பள்ளுப் பிரபந்தம் முதன் முதலில் எங்கள் நாட்டிலேதான் வெளிவந்தது.

இன்றுங்கூட எங்கள் நாட்டில் நவ நவமான சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள், காவியங்கள் வெளிவந்த வண்ணமே உள்ளன.

வாழ்க்கை என்பது எங்களுக்கு விளையாட்டு அன்று. பொழுதுபோக்கு அன்று. அது ஒரு போராட்டம்.

இல்லாமைக்கும் கல்லாமைக்கும் எதிரான போராட்டம்.

அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான போராட்டம்.

அநீதிக்கும் அக்கிரமத்துக்கும் எதிரான போராட்டம். ஆபாசத்துக்கும் அசிங்கத்துக்கும் எதிரான போராட்டம்.

சின்னத்தனத்துக்கும் சீர்குலைப்புக்கும் எதிரான போராட்டம்.

இன்றைய எங்கள் கவிதைகள், காவியங்கள், சிறு கதைகள், நாவல்கள், நாடகங்கள் எல்லாமே இந்தப் போராட்டத்தின் வடிவங்கள்தாம். தமிழை எழுதப்படிக்கத் தெரிந்த அத்தனை பேரும் இவற்றை வாசிக்க வேண்டும் எங்கள் ஆத்மாவைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே எங்கள் அவா, அபிலாஷை எல்லாம்!

இதற்காகத்தான் பல்லாண்டுகளின் முன்னர் பாரதி கூறிய அறிவுரையை பாரதி பிறந்த இந்த டிசெம்பர் மாதத்தில் மீண்டும் நினைவூட்டுகின்றோம்!

கல்விமான்களே! அறிஞர்களே! புலவர்களே! எழுத்தாளர்களே! சிந்தியுங்கள்! செயற்படுங்கள்!

கடல் பிரித்தாலும் கருத்தாற் பிரியாமல்
நாம் வாழலாம் வாருங்கள்!

ஞானம் –91 (டிசம்பர் 2007)

14



எழுத்தாளர்களே! உங்களால் முடியும்!

நாட்டின் நாளிதழ்களைப் பார்த்தால் -ஆட்கடத்தல், காணாமற் போதல், பட்டப் பகலில் நடக்கும் படுகொலைகள், நட்ட நடுநிசியிற் செய்யப்படும் திட்டமிட்ட திருட்டுக்கள், பாலியல் வல்லுறவுகள் போன்ற செய்திகள் பயமுறுத்தி நடுங்க வைக்கின்றன.

பல்கலைக்கழகங்கள் - உயர்கல்வி நிலையங்கள், பகிடிவதை என்ற பெயரில் நடக்கும் காட்டுமிராண்டிச் செயல்கள், பழிக்குப் பழி வாங்குதல், வகுப்புக்களைப் பகிஷ்கரித்தல் போன்றவற்றால் தம் வடிவிழந்து வளமிழந்து வாடிக்கொண்டிருக்கின்றன!

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம், பணிப்புறக்கணிப்பு முதலியவை நடத்தப்படுவதும் அவற்றை அடக்கி, அழிக்கின்ற முனைப்புடனான, அடிதடி, கண்ணீர்ப்புகை, கைது, சித்திரவதை - இடம் பெறுவதும் ‘புதினம்’ என்ற நிலையிலிருந்து ‘வழமை’ என்ற போக்காகப் பரிணாமம் பெற்றுள்ளன.

தவறுகளைச் செய்து குவித்துவிட்டு, தண்டனையிலிருந்து தப்புவதற்காகச் செய்யப்படும் தில்லுமுல்லுகள், உயிர் அச்சுறுத்தல்கள் அருவருப்பைத் தருகின்றன. ஆத்திரத்தையும் தூண்டுகின்றன.

தாம் செய்யாத தவறுகளுக்காக அகதிகளாக, அநாதைகளாக 'ஆக்க'ப்படுவோரின் தொகை, முடிவில்லா நிலை நோக்கி முழு வேகத்திற் பாய்ந்து கொண்டிருக்கின்றது!

அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி, விண்வெளியை நோக்கி விஸ்வரூபம் எடுத்துக் கொண்டிருக்கின்றது!

பொறுப்பில் இருப்போர் பொறுப்பற்ற பதில்களாற் பூசி மெழுக அன்றாடங் காய்ச்சிகளும் அடிமட்டத்திலுள்ளோரும் பட்டினிச் சாவை எதிர்கொள்ளும் பரிதாபத்துக்கு உள்ளாக்கப் படுகின்றார்கள்!

'கூச்சலும் குழப்பமும் இல்லாத நாள் கூட்டம் நடைபெறாத நாளே' என்று சொல்லும் அளவுக்குத் தன் தரத்தையும் தகுதியையும் தவறவிடுவதற்குத் தயாராகி வருகின்றது, நம்மை ஆள்வதற்காக நாம் தெரிவு செய்துள்ள நமது 'பிரதிநிதிகள்' சங்கமிக்கும் மன்றம்!

ஆளை ஆள் திட்டுதல், சவால் விடுதல், சண்டை பிடித்தல், ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது ஏராளமானோர் குறுக்கிட்டுக் குழப்புதல், மேசையைத் தட்டி ஆர்ப்பாட்டஞ் செய்தல் போன்றவை எப்போதோ ஒரு நாள் நடக்கும் நிகழ்ச்சிகள் அல்ல. எப்போதுமே நடக்கும் நிகழ்ச்சிகள்!

மாற்றத்துக்காகவும் மனத் தேற்றத்துக்காகவும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்போமென்று போனால் வெளியே நடப்பவை வீட்டிற்குள்ளேயே படையெடுத்து வந்துவிட்டனவோ என்று பயப்படுமளவுக்கு மெகா நாடகத் தொடர்களும், சினிமாக் காட்சிகளும் பாடாய்ப்படுத்துகின்றன!

சாதாரண மக்களின் பலவீனத்தைப் பயன்படுத்திப் பணம் 'பண்ண'முயலும் தயாரிப்பாளர்கள்

மனைவி மக்களுடன் சேர்ந்திருந்து பார்க்க முடியாத அளவுக்கு 'பச்சை'யாகப் பலவற்றைக் காட்டிக் குடும்ப

அமைப்பைக் கொச்சைப் படுத்துகின்றார்கள் குலைத்து வருகின்றார்கள்!

இவற்றையும் இவைபோன்றவற்றையும் அடிக்கடி பார்த்துக் கொண்டிருக்கின்ற - கேட்டுக் கொண்டிருக்கின்ற

சிறுவர்கள், மாணவர்கள், முதிரா இளைஞர்கள் இவையெல்லாம் நமக்கு நல்லவையா? நாட்டுக்கு நல்லவையா?

என்று பட்டிமன்றம் நடத்தும் 'பக்குவத்தை' அடைய முன்னரே, சுற்றியுள்ள 'பெரியவர்'களைப் பிரியமுடன் பின் பற்றத் தொடங்கிவிடுகின்றனர்!

இவர்களின் எதிர்காலம் எப்படி இருக்கும்? இவர்கள் வாழ்கின்ற நாட்டின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

பதிலை அறிவதற்குப் பஞ்சாங்கங்களில் வெளியாகும் பலன்களைத் தேடத்தேவையில்லை, சோதிட நிபுணர்களை நாடத் தேவையில்லை.

மிகச் சாதாரணமானவர்களாலேய மிகச் சரியாகப் பதில் சொல்லப்படக்கூடிய மிக இலகுவான கேள்விகள் இவை!

இந்த நிலையில் வாள் முனையைவிடப் பேனா முனையே வலிமை மிக்கது என்பதிலும்

உள்ளப் புரட்சியால் மட்டுமே உன்னதத்தை உருவாக்க முடியும் என்பதிலும்

ஆழமான - நியாயமான அநுபவபூர்வமான நம்பிக்கை வைத்துள்ள எழுத்தின் வேந்தர்களே! உங்களைக் கேட்கின்றோம்.

நாட்டின் போக்கு உங்கள் நெஞ்சங்களிலே தாக்கத்தை ஏற்படுத்தவில்லையா?

சிறுமைகளும் கொடுமைகளும் சீற்றத்தைத் தரவில்லையா?

துன்பங்களும் துயரங்களும் உங்களைத் துளைத்தெடுக்க வில்லையா?

இழிவு நிலை அழியவும் விழுமியங்கள் வளரவும் உங்கள் எழுதுகோலை எவ்வாறு பயன்படுத்தப் போகின்றீர்கள்?

இந்தக் கேள்விகளுக்குச் சரியான - கருத்தைச் சுண்டி இழுக்கின்ற - கலாபூர்வமான கதைகளாக - நாவல்களாக - கவிதைகளாக உங்களால் கொடுக்க முடியும்!

ஞானம் –92 (ஜனவரி 2008)

15

இந்த மண்ணின் இலக்கியம்

இலட்சியம் என்பதே தமிழில் இலக்கியம் ஆகியுள்ளதாகக் கருதுவோர் பலர் -

இலக்கை உடையது இலக்கியம் என விளக்குவோரும் பலர் - இலக்கு நல்லதாக - சிறந்ததாக - உயர்ந்ததாக இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துவோர் அவர்களும் பலர் -

இலக்கியம் சம்பந்தமான சில சிந்தனைகள் இவை -

கொள்ளப்படவேண்டிய இலக்குகளை - தள்ளப்படவேண்டிய விலக்குகளை -

கூர்மையாகவும் நேர்மையாகவும் - சுருக்கச் சுவையுடனும் பெருக்கத் தெளிவுடனும் சுட்டிக் காட்டுகின்றார் தெய்வப் புலமைத் திருவள்ளு வனார் -

வான்மீகியின் காவியச் சுவையில் ஊறித் திளைத்த கம்பர் - ஆசை பற்றியே தமிழில் அதை அறையலுற்றதாகக் கூறியபோதிலும் -

முக்கியமான சில கட்டங்களில் -

வான்மீகியின் கதையைத் தன்வசப்படுத்தி - தமிழ் வசப்படுத்தி - தமிழ் மக்களுக்கேற்ற சீலங்களையும் கோலங்களையும் சீராகக் காட்டியுள்ளார் -

அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாகும் என்பதையும்-

உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்பதையும் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதையும் -

நாட்டு மக்களுக்கு காட்டுவதே சிலப்பதிகாரத்தை ஆக்குவதன் நோக்கம் என்பதை மிகத் தெளிவாகவே சொல்லியுள்ளார் இளங்கோ அடிகள்.

எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் இந்நாட்டு மன்னர் -

தனி ஒருவனுக் குணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம் -

இல்லை என்ற சொல்லை இனி இல்லையாக வைப்பேன் -

ஈரமும் வீரமும் நிறைந்த - இத்தகைய எண்ணற்ற கவிதைகள் மூலம் -

நாட்டு மக்களை நலமுடன் வாழவைக்கின்ற -

நானிலத்தவரை மேனிலை அடையச் செய்கின்ற -

பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திடுகின்ற

தன் இலட்சியப் பொறியை ஊதி மூட்டுகின்றார் மகாகவி பாரதியார் -

நாடு போற்றுகின்ற இந்த நாற்பெரும் கவிஞர்களுள் -

ஒருவராலோ - இருவராலோ - எல்லோருமாலோ -

ஏதோ ஒரு வகையில் - ஏதோ ஓர் அளவில் -

பாதிக்கப்படாத - ஆட்கொள்ளப்படாத - நவீன தமிழ் எழுத்தாளர் யாருமே இல்லை என்பதை மறுத்துரைப்பார் யாருமே இல்லை!

ஆகவே -

அவர்கள் என்ன சொன்னார்கள் - ஏன் சொன்னார்கள் - எப்படிச் சொன்னார்கள் -

என்பவற்றை மீளச் சிந்திப்போம்.

நம் மண்ணின் வாசனையை முகர்ந்து - நமது வேரின் ஆழத்தை உணர்ந்து -

நமது மக்களின் ஆசாபாசங்களை - வாழ்க்கைப் போக்குகளை - இதய வேட்கைகளை -

இலட்சியக் கனவுகளை -

வளர்க்கப்பட வேண்டிய குணங்களை - அகற்றப்பட வேண்டிய பலவீனங்களை -

இனிய தமிழில் - உரிய நடையில் - கலை நயத்துடன்

கதைகளாக்குவோம் - கவிதைகளாக்குவோம் - காவியங்களாக்குவோம் -

உலகத் தரத்திலான உயர் இலக்கியம் தமிழில் இல்லையே என்ற தாழ்வுச் சிக்கலால் தடுமாறிக் கொண்டிராமல் -

முழுமனதுடன் முயற்சி செய்வோம் - முறையான வெற்றியைப் பெறுவோம் -

வெற்றி கிடைக்காவிட்டால் -

முயல்வோம் - மேலும் முயல்வோம் - மேன்மேலும் முயல்வோம்!

ஞானம்–104 (ஜனவரி 2009)

16



இளந்தலைமுறை சிறுகதைப் படைப்பாளிகளின் கவனத்திற்கு

இன்றைய இளந்தலைமுறைச் சிறுகதைப் படைப்பாளிகளில் பலர் சிறுகதை ஆக்கம்பற்றிய பூரணத் தெளிவின்றியே தமது படைப்புகளை வெளிக்கொணர்வதை அவதானிக்க முடிகிறது.

சமீபகாலங்களில் பரிசுபெற்ற சிறுகதை களை எடுத்துநோக்கினால் அக்கதைகள் பரிசு பெற்றமைக்கு எடுத்தாளப்பட்ட கதைக் கருக்களே காரணமாய் அமைந்திருக்கின்றன.

'வடிவம்' பற்றிய பிரக்ஞை இன்றைய இளந்தலை முறையினரிடையே மிகவும் குறை வாகவே இருப்பதை அவதானிக்க முடிகிறது.

இன்றைய எழுத்தாளர்கள் பலர் ஒரு கரு கிடைத்துவிட்டால் அவசர அவசரமாக அதனைக் கதையாக்கிப் பத்திரிகைகளுக்கு அனுப்பிவிடுகிறார்கள்.

எந்தவொரு விடயத்தையும் உரைநடையில் தரும்போது அதனை செய்தியாக அல்லது

கட்டுரையாக அல்லது சிறுகதையாகத் தந்துவிடலாம். பலருடைய சிறுகதைகளில் நடுவிலே சில பகுதிகள் செய்திகள்போல அல்லது கட்டுரைப் பாங்கில் அமைந்துவிடுவதை அவதானிக்க முடிகிறது. இதனால் அப்படைப்பின் அழகியல் அம்சம் சிதைவடைந்துவிடுகிறது. செய்திக்கும் கட்டுரைக்கும் சிறுகதைக்கும் இடையே உள்ள வித்தியாசம் இவர்களுக்கு தெரியவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஒரு படைப்பாளி, தான் கூறவந்த விடயத்தை தனித்தன்மையுடனும் கலைநேர்த்தியுடனும் அழகியல் உணர்வைப் பதிக்கவும் துணையாக நிற்பது அவனது படைப்பின் வடிவக் கூறுகள்தான்.

ஒரு கதைக் கருவை வெவ்வேறு படைப்பாளிகள் வெவ்வேறுவிதமாகக் கையாளலாம். ஆனால் படைப்பாளி அக்கருவின்மீது தனது பார்வையைச் செலுத்தி சிறந்ததொரு வடிவம் கொடுப்பதிலேதான் அவன் வெற்றிபெறுகிறான். தனது ஆளுமையை நிலைநிறுத்திக் கொள்கிறான். அவனது மேதமை என்பது அவன் தனது அனுபவ வெளிப்பாட்டிற்கு எத்தகைய வடிவத்தை தேர்வு செய்கிறான் என்பதிலேதான் பெரிதும் தங்கியிருக்கிறது. அவனது வடிவத்தேர்வில் அவனது ஆட்சி, அதன் வேகம், சொற்கள் பெறும் அழுத்தம், வெளிப்பாட்டுத்திறன், கற்பனைவீச்சு, கலாநேர்த்தி இப்படிப் பலகூறுகள் இடம்பெறுகின்றன.

இன்னொருவிதமாகக் கூறுவதானால் ஒரு கருவை பல எழுத்தாளர்கள் பல்வேறு விதமாகக் கையாளலாம். ஆனால் எந்த எழுத்தாளன் அக்கருவுக்கு சிறந்த வடிவத்தை (உருவத்தை) கொடுக்கிறானோ அவனே அக்கருவை சிறந்த படைப்பாக வெளிக்கொணர்வதில் வெற்றி பெறுகிறான்.

இன்றைய இளந்தலைமுறை சிறுகதை எழுத்தாளர்கள் வடிவத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில் தமது கவனத்தைச் செலுத்துவது அவசியமாகிறது. அப்போதுதான் காலத்தால் அழியாத சிறுகதைகளைப் படைக்கமுடியும்.

ஒரு படைப்பை எழுதி முடித்தவுடன் பத்திரிகைகளுக்கு அனுப்புவதில் அவசரம் காட்டக்கூடாது. அப்படைப்பை 'ஊறப்போட்டு' மீண்டும் மீண்டும் செதுக்கி சிறந்த ஒரு கலைப்படைப்பாக்கிய பின்னரே அனுப்புவதை வழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். தாம் எழுதியவற்றை பிறரிடம் வாசித்துக்காட்டி அபிப்பிராயம் பெறுவதும் மூத்த எழுத்தாளர்களிடம் அவற்றைக் கொடுத்துச் செவ்விதாக்கம் செய்வதும் மிகவும் பயனுடையதாக அமையும்.

ஞானம்–119 (ஏப்பரல் 2010)

17

முறைதவறும் பதிப்பு முயற்சிகள்

நூல் பதிப்பாக்க முயற்சிகள் இப்போது அதிகரித்தவண்ணம் இருக்கின்றன. கணினியின் பயன்பாடும் நவீன அச்சுத்தொழில்நுட்ப விருத்தியும் இந்தப் பதிப்பாக்க முயற்சிகளைப் பரம்பலாக்கியிருக்கின்றன.

இலக்கியத் துறையைப் பொறுத்தவரை பெரும்பாலான நூல்கள் கவிதைத் தொகுதி களாகவும், சிறுகதைத் தொகுதிகளாகவும் வெளி வருகின்றன.

சமீபகாலங்களில் வெளிவருகின்ற பெரும் பாலான தொகுதிகளில் சில மரபுரீதியான நெறிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை என்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

சிறுகதைகளையோ, கவிதைகளையோ அல்லது ஏனைய இலக்கியப் படைப்புகளையோ நூல் வடிவத்தில் தொகுக்கப்படும்போது சில நடைமுறைகள் பின்பற்றப்படுதல் மரபாகும். அப்படைப்புகள் முன்னர் எந்தச் சஞ்சிகையில், பத்திரிகையில் அல்லது வேறெந்த ஊடகத்தில்

வெளிவந்தன என்ற விபரங்களையும் வெளிவந்த ஆண்டுகளையும் குறிப்பிடுதல் வேண்டும்.

இவ்வாறு குறிப்பிடப்படவேண்டிய தேவைக்கு சில முக்கிய காரணங்கள் இருக்கின்றன. அந்தப் படைப்புக்குச் சொந்தக்காரரான எழுத்தாளர் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்போது அந்த எழுத்தாளர் குறிப்பிட்ட சஞ்சிகையில் அல்லது பத்திரிகையில் வேறு ஏதாவது படைப்புக்களைக் தந்திருக்கின்றனரா? அவைபற்றி வாசகர்கள் ஏதாவது கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றனரா? பதிப்பாக்கம் செய்யும்போது அந்தப் படைப்பில் அவர் எதாவது மாற்றங்கள் செய்துள்ளாரா? அந்த எழுத்தாளரின் முந்திய படைப்புகளுக்கும் பிற்பட்டகாலப் படைப்புகளுக்குமிடையில் வளர்ச்சிப்போக்குகள் தென்படுகின்றனவா போன்ற விடயங்களை ஆய்வுசெய்து அறிவதற்கு அப்படைப்புகள் வெளியான சஞ்சிகையின் பெயரும், வெளிவந்த ஆண்டுகள் பற்றிய குறிப்புகளும் முக்கியமாகின்றன.

இத்தகைய குறிப்புகளின் முக்கியத்துவம் பற்றி நன்கு அறிந்த எழுத்தாளர்களின், பதிப்பாளர்களின் நூல்களிலும் இத்தகைய தவறுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. எனவேதான் இத்தகைய தவறுகள் திட்டமிட்டே இடம்பெறுகின்றனவோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஞானம் சஞ்சிகையில் வெளியான படைப்புகளை மட்டும் இங்கு உதாரணத்திற்கு எடுத்துக் காட்டலாம்.

2008ஆம் ஆண்டுக்கான தேசிய சாகித்திய விருது பெற்ற நூலான 'ஆத்ம விசாரம்' சிறுகதைத் தொகுதியின் சொந்தக்காரர் அ. ச. பாய்வா. இவரது இத்தொகுதியில் உள்ள மகுடக்கதையான 'ஆத்ம விசாரம்' சிறுகதையும் 'புற்றுநாவல்' என்ற வெறொரு கதையும் ஞானத்தில் வெளியானவை. ஆனால் இவைபற்றிய குறிப்பு ஏதும் அந்தச் சிறுகதைத் தொகுதியில் இடம் பெறவில்லை.

மலையக எழுத்தாளர் பிரமிளா செல்வராஜாவின் 'பாக்குப்பட்டை' என்ற சிறுகதைத் தொகுப்பு இவ்வாண்டில் வெளிவந்துள்ளது. இந்தச் சிறுகதைத் தொகுப்பின் மகுடக்

கதையும் ஏனைய இரண்டு கதைகளும் ஞானம் சஞ்சிகையில் வெளிவந்தவை. ஆனால் இந்தத் தொகுப்பில் அந்த விபரங்கள் காணப்படவில்லை. 'மல்லிகைப் பந்தல்' வெளியீடான இந்தத் தொகுப்பில் இத்தகைய தவறுகள் இடம்பெறுவது பெரும் வியப்பாக இருக்கிறது. ப. ஆப்டீனின் சிறுகதைத் தொகுப்பில் உள்ள 'காயப்பட்டவன்" என்ற கதை ஞானம் சஞ்சிகையில் வெளிவந்தபோதும் அத்தகவலும் அவரது மல்லிகைப் பந்தல் பதிப்பில் குறிக்கப்படவில்லை.

இந்த ஆண்டு வெளிவந்த கல்வயல் வே. குமாரசாமியின் ' முறுகல் சொற்பதம்' என்ற கவிதைத்தொகுதியின் சில கவிதைகள் அதே மகுடத்தில் ஞானம் சஞ்சிகையில் வெளியானவை. அந்த முதுபெரும் கவிஞரது தொகுப்பிலும் இதே தவறு காணப்படுகிறது. ஞானம் சஞ்சிகையில் வெளிவந்த கவிதைகள் என்ற குறிப்பு எங்கும் காணப்படவில்லை.

எதிர்வரும் காலத்தில் இத்தகைய தவறுகள், இருட்டடிப்புகள் இடம்பெறாமல் பார்த்துக் கொள்வது ஆரோக்கியமான செயற்பாடாக அமையும். இதனை எழுத்தாளர்களும் பதிப்பாளர்களும் கருத்தில்கொள்ளவேண்டுமென வேண்டு கிறோம்.

ஞானம்–124 (செப்டெம்பர் 2010)

புரிதல்

✦ முறைதவறும் பதிப்பு முயற்சிகள் பற்றிய உங்கள் ஆசிரியர் தலையங்கத்தைப் பார்வையிட்டதும் அது தொடர்பான சில கருத்துக்களை பரிமாறிக்கொள்ளும் ஆவல் ஏற்பட்டது.

ஒரு படைப்பாளியின் படைப்பினை மீள்பிரசுரம் செய்யும்போது அதன் மூல வெளியீட்டையும் நன்றியுடன் குறிப்பிடவேண்டும் என்பது காலம்காலமாக இன்றளவுவரை எழுதாச்சட்டமாகவே இருக்கின்றது. அன்று ஒரு சஞ்சிகையினூடாக வளர்க்கப்பட்ட படைப்பாளி அச்சஞ்சிகையின் பின்னணியிலேயே தன் ஆக்க இலக்கியத்தைப் பட்டைதீட்டிக்கொள்வது இயல்பாக இருந்தது. பின்னாளில் புற்றீசல்போல சஞ்சிகைகள் கிளர்ந்தெழுந்த சூழலில் இது சாத்தியமாகவில்லை. இன்று புதியதொரு தளத்தை நாம் கண்டுள்ளோம். நாடுகடந்தரீதியில் ஈழத்துத் தமிழ்ப் படைப்புலகம் விரிந்துவிட்டது. நீங்கள் குறிப்பிட்ட அந்த மூலப்படைப்பின் விபரத்தைக் குறிப்பிடும் மரபினை மீறுபவர்கள் படைப்பாளிகள் மாத்திரமல்ல. குறிப்பிட்ட படைப்பாளியின் படைப்பினை அவரறியாமலே மீள்பிரசுரம்செய்யும் வெளியீட்டாளரும்தான். இதனை தெரிந்தோ தெரியாமலோ மீறுகின்றார். பெரும்பாலும் அறியாமையும் அக்கறையின்மையுமேயன்றி காழ்ப் புணர்ச்சியோ இருட்டடிப்போ காரணமாகவிராது. அந்தகாலம் மலையேறி விட்டதென்றே கருதுகின்றேன்.

இன்றைய மின்னியல்சார் தமிழ்ப்படைப்புலகச் சூழலில் ஒரு படைப்பாளி தனது படைப்பினை மின்னஞ்சலில் அனுப்பிவைக்கும்போது ஒன்றுக்கு மேற்பட்ட பிரசுரகர்த்தாக்களுக்குத் தன் படைப்பினை ஒரே நேரத்தில் அனுப்பிவைப்பது வழமையாகும். பரவலாகத் தனது படைப்புக்கள் பல நாடுகளிலும், பல வட்டங்களிலும் அறியப்பட வேண்டும் என்ற அவா முக்கிய காரணமாகின்றது. அதனைப் பெற்றுக்கொள்ளும் பிரசுரகர்த்தாக்களுக்கும் குறிப்பிட்ட பிரசுரம் ஏற்கனவே பிரசுரமாகியதா என்பதை படைப்பாளியின் மூலமாகவன்றி வேறு வழிகளில் அறியும் வாய்ப்பும் இல்லை. ஆங்கில ஆக்கங்களை குறிப்பாக அறிவுசார் ஆக்கங்களைப்பற்றிய வெளியீட்டுத் தரவுகளை ஒரு பொதுச்சுட்டியாக (INDEX) பதிவு செய்துவைக்கும் வழமை ஐரோப்பிய நாடுகளிலுண்டு. ஒரு கட்டுரையில் தலைப்பை அல்லது ஆசிரியரை வைத்து அவரது கட்டுரை எந்தப் பிரசுரத்தில் வந்திருக்கிறது என்று இவ்வுசாத்துணை ஆவணங்களினூடாகப் பார்த்துக்கொள்ள முடியும். ஒவ்வொரு சஞ்சிகையும் தமது படைப்புகளுக்கான சுட்டிகளை ஆண்டுதோறும் தயாரித்து இவ்வமைப்புக்கு அனுப்பிவிடுவார்கள். இவை பாடவாரியாகத் தொகுக்கப்பெற்று பாரிய சுட்டித் தொகுப்பாக உசாத்துணை நூலாக அவை பிரசுரமாவதுண்டு. இது நிறுவனரீதியாக மேற்கொள்ளப்படும்

ஒரு உசாத்துணை முயற்சி. இது இணையத்தளங்களாக இன்று விரிவுகண்டுள்ளது. இத்தகைய அறிவுசார் முயற்சிகள் எதுவும் ஈழத்துத் தமிழ்ப்படைப்புலகச் சூழலில் மேற்கொள்ளப்படுவதாகத் தகவல் ஏதுமில்லை. அதற்கான அக்கறையும் எவரிடமும் இல்லை.

ஞானம் உட்பட ஈழத்து சஞ்சிகைகள் எவையும் இத்தகைய எளிமையான சுட்டி மரபைத் தமிழ்ப்படைப்புலகச் சூழலிலே இன்றுவரை மேற்கொள்ளத் தவறிவிட்டன. இதை இன்றைய இலங்கை நூலகச்சங்கத்தின் இடைநிலைப் பயிற்சி மாணவர்களின் மூலம் இலவசமாகவே செய்துகொள்ளும் வாய்ப்பிருந்தும் ஏனோ தானோ என்று இவர்கள் இருந்துவிடுகின்றார்கள். காலம்காலமாகத் தமது வரலாற்றை ஆவணப்படுத்தத்தவறிய பரம்பரையினர் தானே நாங்கள். எமது வரலாற்றை அடுத்தவன் எழுதிவைக்கட்டும் என்றிருந்தவர்களல்லவா? எமது சமூகத்தில் இதனை எப்படி எதிர்பார்க்க முடியும்?

மற்றது ஒரு படைப்பினை புத்தம்புதிய படைப்பாகவே ஒவ்வொரு சஞ்சிகையும் பிரசுரிக்கவேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பு இன்றைய காலக்கட்டத்தில் பழமையானதென்றே கருதவேண்டும். சன்மானமாகப் பணம்கொடுத்து ஒருவரின் படைப்பைப் பெற்றுப் பிரசுரிக்கும் பதிப்பக நிறுவனங்களுக்குத் தமது பதிப்பாக வெளியிடப்பட்ட ஒரு படைப்பினை தமது அனுமதியின்றி வேறோரு பதிப்பாளர் பயன்படுத்தினால் சட்டபூர்வமாக அவரிடம் நட்டஈடும்கோரும் உரிமையுண்டு. அந்தச் சட்டச் சிக்கலிலிருந்து மீளவே அனைவரும் நன்றியுடன் மூலப்பதிப்பினை தெளிவாகக் குறிப்பிடுவது வழக்கம். எமது மரபில் இத்தகைய சன்மானம் வழங்கும் முறை இல்லாததால், படைப்பாளி தவிர்ந்த, மூல வெளியீட்டாளருக்குத் தமது சஞ்சிகையில் இடம்பெற்ற படைப்பொன்றை மீள்பிரசுரம் செய்வதைத் தடுப்பதற்கு எவ்வித உரிமையும் இல்லை. இதுவே இன்றைய படைப்புலகச் சூழலின் யதார்த்தநிலை.

இதேவேளை இங்கு ஆசிரியர் தலையங்கம் குறிப்பிடாத மற்றொரு பதிப்புலகத் தவறையும் ஞானம் வாசகர்களுக்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இலங்கையில் முதலாவது பதிப்பாக வெளியிடப்பெற்ற பல பிரபலமான தமிழ்நூல்கள் இன்று தமிழகத்தில் மீண்டும் முதலாவது பதிப்பாக வெளியிடப்படும் அவலத்தையும் என்னால் காணமுடிகின்றது. இதில் இன்னுமொரு கவலைக்குரிய விடயம் என்னவென்றால் தமது ஈழத்து முதற்பதிப்பு நூலின் தலைப்பை மாற்றிவிட்டுத் தமிழகத்தில் மீண்டும் முதற்பதிப்பாக அதனை வெளியிடுவதாகும். இத்தகைய குளறுபடிகளை நூல்தேட்டத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளேன். இத்தவறுகளை மேற்கொள்பவர்கள் யார் என்பதை நூல்தேட்டப்பதிவுகளிலிருந்து வாசகர்கள் எளிதில் தெரிந்துகொள்ளலாம். நான் இங்கு அதனைக் குறிப்பிட விரும்பவில்லை. தமிழகப் பதிப்பாளர்களின் வர்த்தக ஆதாயத்திற்காகப் பலியாகும் ஈழத்துப் படைப்பாளிகள் இதனால் எவ்வித வருவாயையும் பெற்றுக்கொள்ளாமல் தமது படைப்புக்கள் தமிழக நூலகங்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படலாம் என்ற ஒரே காரணத்துக்காகத் தமது முதன்மையான தாயகப் பதிப்பின் உரிமையை

அந்நிய வியாபாரிகளிடம் தாரைவார்த்து வருகின்றனர். இதில் முன்னணிப் படைப்பாளிகளே அதிகமாக ஈடுபடுவதும் தாயகப் பதிப்புலகச் சூழலுக்கு நீண்ட காலநோக்கில் காயத்தை ஏற்படுத்தும் என்பதும் கவனிக்கத்தக்கது.

– என். செல்வராஜா, லண்டன்.

ஞானம் 125, (ஒக்டோபர் 2010)

✦ "செப்டெம்பர்" மாத ஞானம் சஞ்சிகை படித்தேன். அனைத்தாக்கங்களும், வழமைபோல் காத்திரமான படைப்புக்களாக உள. "முறை தவறும் பதிப்பு முயற்சிகள்" எனக் குறிப்பிடப்பட்ட ஆசிரியர் உரை அகத்தில் அமர்ந்து விட்டது.

'தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழி நாணுவார்"

என்பது செந்நாப் புலவரின் செம்மொழியாகும்.

உங்களால் குறிப்பிடப்பட்ட நாலாம்பந்தியில் உள்ள கருத்துக்கள் யாவும் "யதார்த்தமானதும். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதுமாகும்." 1982ஆம் ஆண்டு காலப்பகுதியில் கல்முனைப் பிரதேச சாய்ந்த மருதில் இருந்து வெளிவந்த 'கோகிலம்' சஞ்சிகையில் துணையாசிரியர் என்ற வகையில் கீழ்வரும் கருத்தைத் தெரிவிக்கின்றேன்.

வளரக்காத்திருக்கும் எழுத்தாளர்கள் எழுத்துத்துறையில் காலடி எடுத்துவைத்த ஆரம்ப காலத்தில் தங்களது ஆக்கங்களைச் சஞ்சிகைக்கு அனுப்பி விட்டு "எனது ஆக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டதா? தரமானதா? எப்போது பிரசுரமாகும்? எனமென்மேலும் வினாக்கணை தொடுத்து மடல் வரைந்தார்கள். இது இளம் எழுத்தாளர்களின் ஆதங்கந்தான். ஆக்கங்கள் பிரசுரமானதும் தங்களை வளர்த்துவிட்ட, களமமைத்துத்தந்த சஞ்சிகையை மறக்கக் கூடாது. இது ஏறிச்செல்ல உறுதுணையான ஏணியை எட்டி உதைப்பது போலாகும். இது அதர்மமாகும். எல்லாவற்றிலும் நுண்மாண் நுழைபுலத்தார் போலல்லாது மனச்சாட்சிப்படி செயற்படுவார்கள் என நம்புகின்றேன்.

ஜெ. நாதன், சாய்ந்தமருது.

ஞானம் 125, (ஒக்டோபர் 2010)

18

சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011இல் 'ஞானம்' இலக்கிய இயக்கத்தின் பங்கு

சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு முதன் முதலில் இலங்கையில் நடைபெறுவதையிட்டு இலங்கையர் என்ற வகையில் நாம் எல்லோருமே பெருமை கொள்ளலாம்.

இப்படியான ஒரு சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு ஒன்றினை நடத்தவேண்டும் என்ற எண்ணக்கரு ஐந்து வருடங்களுக்கு முன்னரே தோன்றியது. புலம்பெயர்ந்து அவுஸ்தி ரேலியாவில் வாழும் எழுத்தாளரான லெ. முருக பூபதி கடந்த பத்து வருடங்களாக எழுத்தாளர் விழாக்களை அந்நாட்டில் நடத்தி வருபவர். அவர் இலங்கைக்கு வந்திருந்த ஒரு சந்தர்ப்பத்தில் மல்லிகைப் பந்தலில் அவருக்கு ஒரு தேநீர் விருந்துபசாரம் நடைபெற்றது. அப்போது மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்கள் அவுஸ்திரேலியாவில் வருடாவருடம் எழுத்தாளர்

விழாக்களை நடத்திவரும் நீங்கள் ஏன் சர்வதேச ரீதியில் ஓர் எழுத்தாளர் விழாவை இலங்கையில் நடத்தக்கூடாது? என்ற கேள்வியை முன்வைத்தார். அந்த எண்ணக்கருவே தற்போது நடைபெறும் சர்வதேச எழுத்தாளர் மாநாடு நடைபெறுவதற்குக் காரணமாக அமைந்தது.

இந்தச் சர்வதேச தமிழ் எழுத்தாளர் விழாவை நடத்து வதற்கான முன்னோடிக் கலந்துரையாடல் 2010 ஜனவரி மூன்றாம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றது. அதில் நாட்டின் நாலாபுறத்திலிருந்தும் 180ற்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் கலந்து கொண்டு தத்தமது கருத்துக்களை தெரிவித்தனர். சர்வதேச எழுத்தாளர் விழாவை நடத்துவதற்கான ஓர் நிர்வாகக் குழுவும் அன்று தெரிவுசெய்யப்பட்டது. இந்தக் குழுவில் உலகளாவிய ரீதியிலும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

அந்தத் தெரிவில் தி. ஞானசேகரனுக்கு இலங்கை இணைப்பாளர் என்ற பதவி ஏகமனதாக வழங்கப்பட்டது. உண்மையில் இது ஞானசேகரன் என்ற தனிமனிதனுக்கு வழங்கப்பட்ட பதவியல்ல, ஞானம் சஞ்சிகை ஆசிரியருக்கு வழங்கப்பட்ட பதவி.

ஞானம் சஞ்சிகை தொடங்கி பத்துவருடம் நிறைவுற்ற நிலையில் 'ஞானம்' ஓர் இலக்கிய இயக்கமாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. சர்வதேச ரீதியில் அறிமுகம் பெற்றிருக்கிறது. ஞானத்தின் பின்னால் அதன் எழுத்தாளர்கள், சந்தாதாரர்கள், விளம்பரதாரர்கள், ஆர்வலர்கள் என ஓர் அணி இருக்கிறது. இவர்களின் ஒன்றிணைந்த பலம் ஞானம் ஆசிரியராகிய என்னை உற்சாகத்துடன் இயங்க வைத்தது.

சர்வதேச ரீதியில் மாநாடு ஒன்றை நடத்துவதானால் அதற்கு ஒரு காரியாலயம் வேண்டும். அங்கு பணியாற்ற ஒரு லிகிதர் வேண்டும், தொடர்பாளர் வேண்டும். இது பற்றிய எந்தவொரு ஒழுங்கும் செய்யப்படாத நிலையிலேதான் நான் இயங்க வேண்டியிருந்தது. 'ஞானம்' காரியாலயம் சர்வதேச எழுத்தாளர் மாநாட்டுக் காரியாலயமாக இயங்கத் தொடங்கியது. உலகெங்கிலும் உள்ள கலை இலக்கியவாதிகள் எந்நேரமும்

தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஞானத்தின் தொலைபேசி, மின்னஞ்சல், தொலைநகல், தொடர்புகள் பாவிக்கப்பட்டன. அவுஸ்திரேலியாவில் இருக்கும் பிரதம அமைப்பாளருடன் எந்த நேரமும் தொடர்புகொள்ளக்கூடிய வகையில் ஞானம் காரியாலயத்திலிருந்து தனியானதொரு நேரடித் தொலைபேசி வசதியும் ஒழுங்கு செய்யப்பட்டது. மாநாட்டினை நடத்துவதற்கென ஒரு செயற்குழு கொழும்பில் அமைக்கப்பட்டது. அதில் உலக இஸ்லாமியத் தமிழ் மாநாட்டை ஏற்கனவே இலங்கையில் நடத்தி (2002) அநுபவம் பெற்ற எழுத்தாளர்களான ஜின்னாஹ் ஷரிபுத்தீன், அஷ்ரப் சிஹா.ப்தீன் ஆகியோரையும் இணைத்துக்கொண்டேன். மாநாட்டிற்கான செயற்குழுக் கூட்டங்கள் ஞானம் காரியாலயத்தில் ஒவ்வொருவாரமும் இடம்பெற்றன.

மாநாடு நடத்துவதற்கான இடமாக கொழும்புத் தமிழ்ச்சங்கம் தெரிவு செய்யப்பட்டது. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் செயற்குழு அங்கத்தவர்கள் பலர் மாநாட்டுச் செயற் குழுவிலும் முக்கிய அங்கத்துவம் வகித்து மாநாட்டை சிறப்புற நடத்த ஏற்பாடு செய்தனர். தமிழ்ச்சங்கத்தில் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் நூலகச் செயலாளராகவும் இருந்து நான் ஆற்றிவரும் பணியின் தொடர்பில் தமிழ்சங்க ஆட்சிக்குழுவினர் பலரை இதில் இணைத்தல் சாத்தியமாக இருந்தது.

வெளிநாட்டு பேராளர்களுக்கான தங்குமிட வசதி மாநாட்டு ஆய்வரங்குகள், கலைநிகழ்ச்சிகள் யாவும் ஒழுங்கு செய்யப்பட்ட நிலையில் சில விஷமப் பிரசாரங்கள் தமிழகத்திலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டன. அதற்குக் காழ்ப்புணர்ச்சியே காரணம் என்பதைப் புரிந்துகொள்ளமுடிந்தது. சர்வதேச ரீதியில் ஒரு தமிழ் எழுத்தாளர் விழாவினை நடத்திய பெருமை ஏற்பாட்டாளரான முருகபூபதிக்கோ அல்லது களத்திலிருந்து இந்த மாநாட்டு ஒழுங்குகளை மேற்கொண்ட ஞானசேகரனுக்கோ கிடைத்துவிடக்கூடாது என்ற எண்ணத்துடன் சிலர் இயங்கினர். இந்த மாநாட்டை எப்படியாவது தடுத்து நிறுத்திவிட வேண்டும் என முயற்சிகளை மேற்கொண்டனர்.

இந்த மாநாட்டின் பின்னணியில் இலங்கை அரசு இருந்து

இயங்குகின்றது. அரசு கொடுத்த பணத்திலேயே இந்த மாநாடு நடக்கப்போகிறது என இவர்கள் பொய்ப்பிரசாரம் செய்தனர். இந்த மாநாட்டை பகிஷ்கரிக்கும்படி எழுத்தாளர்களிடையே பரந்தரீதியில் கையெழுத்து வேட்டை நடத்தினர். இந்த மாநாட்டில் பங்குபற்றுவோரின் எழுத்துக்களைப் பகிஷ்கரிக்கப் போவதாகப் பயங்காட்டினர். இந்தப் பொய்ப் பிரசாரங்களை முறியடிப்பதிலும் நாம் முனைப்புடன் செயற்படவேண்டியிருந்தது. திரு. லெ. முருகபூபதி வெளிநாட்டு ஊடகங்களில் இப்பொய் பிரசாரத்தை முறியடிப்பதில் திறமையாகச் செயற்பட்டார்.

இணைப்பாளர் என்ற முறையில் நானும் பொய்ப்பிரசாரங்களை முறியடிக்க முயற்சிகளை மேற்கொண்டேன். ஏறத்தாழ இருபத்தைந்துக்கு மேற்பட்ட இணையத் தளங்களில் எனது நேர்காணல்கள் களத்திலிருந்து பேசுகிறோம் என்ற தலைப்பில், பொய்ப் பிரசாரங்களை முறியடிக்கப் பயன்படுத்தப்பட்டன.

தமிழக எழுத்தாளர்களிடையே நிலவிய எதிர்ப்பலைகளை முறியடிப்பது சற்றுக்கடினமாக இருந்தது. தமிழகத்தில் இருக்கும் எழுத்தாளர் ஒருவராலேயே இது சாத்தியமாகும் என்பதனை உணர்ந்து கொண்டோம். 'யுகமாயினி' சித்தன் அவர்கள், எழுத்தாளர் கோவை ஞானியுடன் தொடர்பு கொண்டு உண்மையை எடுத்தியம்பினால் பொய்ப் பிரசாரங்களை முறியடிக்கலாம் என ஆலோசனை வழங்கினார். கோவை ஞானி முதுபெரும் எழுத்தாளர். 'தமிழ்நேயம்' என்ற அமைப்புத் தலைவராக விளங்குபவர். இந்த அமைப்பில் நூற்றுக்கணக்கான எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். நான் தொலைபேசியில் கோவை ஞானியுடன் தொடர்பு கொண்டேன். அரைமணிநேரம் அவருடன் பேசி அவருக்கிருந்த ஐயங்களைத் தீர்த்துவைத்தேன். அவர் உண்மை நிலைமையைப் புரிந்துகொண்டு, நடக்கவிருக்கும் தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக்குத் தனது ஆதரவை நல்குவதாக வாக்களித்ததோடு நல்வாழ்த்தையும் தெரிவித்தார். தனது 'தமிழ்நேயம்' அமைப்பினர்கள் யாவருக்கும் சுற்றுநிருபம் அனுப்பி இந்தமாநாட்டுக்கு ஆதரவு அளிக்கும்படி வேண்டினார். இந்தச் செயற்பாட்டால் தமிழக எழுத்தாளர்களின் எதிர்ப்பு அலைகள் ஓய்ந்துபோயின.

இது தொடர்பாக இங்கிலாந்தில் வாழும் பிரபல எழுத்தாளரான இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் 19-12-2010 தினக்குரல் வார மஞ்சரியில் எழுதிய கட்டுரையில் பின்வருமாறு தெரிவிக்கிறார். 'காழ்ப்புணர்ச்சிக்காரரின் இலங்கை ஒன்று கூடலுக்கான கடிதத்திற்கு கையெழுத்திட்ட - இலக்கியத் துறையில் நான் மிகப்பெரிய மதிப்பு வைத்திருக்கும் கோவைஞானி ஐயா அவர்களைத் தொடர்புகொண்டபோது, 'அம்மா நான் இதுபற்றிக் கலாநிதி ஞானசேகரத்திடம் விளக்கம் கேட்டேன். அவர் சொன்ன பதில்கள் திருப்தியாக இருந்தன. பலநாடுகளிலுள்ள தமிழ் எழுத்தாளர்கள் முழுச் சுதந்திரத்துடனும் பங்கு பற்றும் இந்த மாநாட்டுக்கு எனது வாழ்த்துக்கள்' என்று சொன்னார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பொய்ப்பிரசாரங்களும் எதிர்ப் பிரசாரங்களும் சர்வதேச ரீதியில் எழுத்தாளர் மாநாட்டுக்குப் பெரும் விளம்பரத்தை அளித்தன. இந்த மாநாட்டை நடத்துவதற்குப் புலம்பெயர்ந்த எழுத்தாளர்களிடையே 50லட்சம் ரூபாய் சேகரிக்கமுடியும் என முருகபூபதி முதற்கூட்டத்திலேயே அனுமானம் தெரிவித்திருந்தார். ஆனால் அத்தொகையில் ஐந்திலொரு பகுதியையே சேகரிக்க முடிந்தது. அந்த ஒரு விடயத்தில் மட்டும் பொய்ப்பிரசாரகர்கள் வெற்றி பெற்றுள்ளனர் என்றே கூறவேண்டும்.

எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு மத்தியில் இந்தச் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு மிகவும் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடுகளைக் களத்திலிருந்து மேற்கொள்ள எனக்கு உறுதுணையாக நின்ற சகலருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்க இந்த ஆசிரியர் பக்கத்தை உரிமையுடன் பயன்படுத்துகிறேன். இந்த உரிமையை எனக்களித்த ஞானம் இலக்கிய இயக்கத்தினருக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துத் தமிழன்னையின் பாதங்களில் இந்தச் சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டுச் சிறப்பு மலரினைச் சமர்ப்பிக்கிறேன்.

ஞானம் –128 (ஜனவரி 2011)

19

மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியது வேதாளம்!

வருடாவருடம் அரச தேசிய சாகித்திய விழா பரிசளிப்பு நிகழ்வுகள் நடைபெற்று முடிந்த கையோடு பரிசளிப்பிற்கான நூற்தேர்வுகளில் இடம்பெறும் மோசடிகள், பித்தலாட்டங்கள் பற்றிய செய்திகள் கசிவது வழக்கமாகியுள்ளது.

இது தொடர்பாக கடந்த சிலவருடங்களாக அவ்வப்போது ஞானம் ஆசிரியத் தலையங் கங்களில் சுட்டிக்காட்டி வந்துள்ளோம். நடந்து முடிந்த தேசிய சாகித்திய நூற்பரிசுத் தேர்வுகளிலும் பல முறைகேடுகள் இடம்பெற்றதாக அறிய முடிகிறது.

23-01-2012 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் மல்லிகை 47ஆவது ஆண்டுமலர் வெளியீட்டின்போது, பல பத்திரிகையாளர்களும், சஞ்சிகையாளர்களும், இலக்கியவாதிகளும், ஊடகவியலாளர்களும் குழுமியிருந்த கூட்டத்தில் நான் பேசும்போது, பரிசுத் தேர்வுகளில் இடம்பெறும் மோசடிகளுக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற எனது ஆதங்கத்தை வெளியிட்டேன்.

எனக்குப் பின்னர் பேசிய 'கொழுந்து' சஞ்சிகை ஆசிரியர் அந்தனி ஜீவா, நடந்து முடிந்த தேசிய சாகித்திய பரிசுத் தேர்வில் சில தவறுகள் நடந்திருப்பதாகவும் அவை தொடர்பாக இப்பொழுது விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் கூறினார்.

அதேவேளை, ஒரு துறை சார்ந்த நூல்களின் பரிசுத்தேர்வில் நடுவராகக் கடமையாற்றிய எனது நண்பர் ஒருவர், தன்னால் மிகக் குறைந்த புள்ளிகள் வழங்கப்பெற்ற நூல் ஒன்றினை வேறொரு நடுவருக்கு அனுப்பி அதிக புள்ளிகள் போடவைத்து அந்த நூலுக்குப் பரிசு அளிக்கப்பட்டிருக்கிறது என்று என்னிடம் குறைபட்டுக் கொண்டார்.

தேசிய சாகித்திய மண்டல நூற்தேர்வுகளில் மட்டுமன்றி வேறு பரிசுத் திட்டங்கள் சிலவற்றிலும் இத்தகைய முறைகேடுகள் இடம்பெறுவதாகப் பிரபல எழுத்தாளர் அல் அஸுமத் 'படிகள்' சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார். 'அண்மையில் நடத்தப்பட்ட கு. சின்னப்பபாரதி அறக்கட்டளை பரிசுப் போட்டிபற்றி அவர் தனது கருத்துக்களைத் தெரிவித் துள்ளார். 'ஒரு மாதத்தின் முப்பதாம் திகதியைக் குறிப்பிட்டு போட்டி முடிவுத் திகதி என்று அறிவித்தார்கள். ஆனால் அந்த மாதம் முடிய மூன்று வாரங்கள் இருக்கும்போதே போட்டி முடிவு வெளிவந்துவிட்டது. கடந்த ஆண்டும் இதுதான் நடந்தது' ஏன் இந்தப் பித்தலாட்டம்' எனக் குறிப்பிட்டுள்ளார். அவர்குறிப்பிடும் மூன்று வாரம் முன்பே முடிவு வெளிவந்து விட்டது என்ற உண்மை உலகளாவிய ரீதியில் பலருக்கும் தெரிந்ததொன்று.

சமீபத்தில், தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய கு. சின்னப்பபாரதி அவர்கள், தனது உரையில் 'திரு. அந்தனி ஜீவாவும் திரு. கலைச்செல்வனும் தனக்குப் பல ஆலோசனைகள வழங்கியதாகக் குறிப்பிட்டார். குறிப்பாக, பரிசளிப்புப் பரப்பினை உலகளாவிய அளவில் விரிவு படுத்தி புலம்பெயர் எழுத்தாளர்களின் படைப்புக்களுக்கும் பரிசு வழங்கவேண்டும் என்பதை இவர்களே முன்மொழிந்தார்கள்' எனவும் குறிப்பிட்டார்.

இவர்கள் இருவரும் ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார்கள். இது போன்ற நல்ல காரியங்களே இலக்கிய உலகிற்கு வேண்டப்படுவன.

மேலும், சின்னப்பபாரதி தனது உரையில் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்ட நூல்கள் சிலவற்றிற்கு எதிர்மறையான விமர்சனங்கள் கிடைத்தன என்றும் ஆனால் தான் களத்திற்குச் சென்று பார்த்தபோது அந்த விமர்சனங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை எனவும் குறிப்பிட்டார்.

உண்மையில் நடப்பது என்ன?

கொழும்பில் சில இலக்கியத் தரகர்கள் குழுவாக இயங்குகிறார்கள். இவர்களை அணுகினால் பரிசு பெற்றுவிடலாம் என்ற ஒருநிலை இருப்பதாகப் பலரும் பேசிக் கொள்கிறார்கள். இவர்கள் தேசிய சாகித்திய மண்டல உயர்மட்ட தேர்வுக்குழுவினர் சிலரையும் வேறு சில பரிசுத் திட்டங்களை நடத்துபவர்களையும் தமது கைக்குள் போட்டு வைத்துள்ளார்கள். இந்தத் தரகர்களை அணுகி ஏதோ ஒருவகையில் அவர்களைச் சந்தோசப்படுத்தினால் இலகுவாகப் பரிசு பெற்றுவிடலாம் என அரசல்புரசலாகக் கதை அடிபடுகிறது.

இந்த நிலைமை மாறும்வரை பரிசு பெறும் சிறந்த படைப்புகள் கூட சந்தேகக் கண்களோடு நோக்கப்படும் துர்ப்பாக்கியம் நீண்டு கொண்டே போகும்.

பரிசுப்போட்டியை நடத்துபவர்களது நல்ல நோக்கமும் வீணாகிவிடும்.

இத்தகைய தரகுச் செயற்பாடுகள் ஆரோக்கியமானவையல்ல.

இவை நிறுத்தப்பட வேண்டும்

பூனைக்கு மணிகட்டுவது யார்? - **ஞானம் 141 (பெப்ரவரி 2012)**

புரிதல்

✦ ஞானம்141 ஆவது இதழின் ஆசிரியத் தலையங்கம் மிகத் துணிச்சலானது. சொல்லப்பட வேண்டிய விசயங்கள் சிறப்பான முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய நமது இலக்கிய உலகைப் பீடித்துள்ளநோய், சாஹித்திய விருதுகள் மற்றும் எனைய விருதுகளுக்கிடையில் புகுந்துள்ள இடைத்தரகர்களின் இலக்கியங்களே! இதற்கு உடந்தையாகப் படித்த கௌரவத்துக்குரிய சிலரும் இருப்பதே பெரிய அவலத்துக்குரிய நிலையாகும். ஞானம் ஆசிரியத்தலையங்கம் இந்த அவலத்தை உடனடியாக நீக்குவதற்கான வழியை ஏற்படுத்தும் என நினைக்கிறேன்.

–மு.பொ. (ஞானம்–142– மார்ச் –2012)

✦ ஞானம் கலை இலக்கிய பெப்ரவரி சஞ்சிகையில் “வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது” என்ற ஆசிரியத் தலையங்கத்தில் சாகித்திய விழா பரிசளிப்புகளில் மோசடிகள் பற்றிய செய்தி கசிவது வழக்கமாகியுள்ளது. “மல்லிகை” சஞ்சிகை 47 ஆவது ஆண்டு மலர் வெளியீட்டு விழாவில் தேர்வுகளில் காணப்படும் மோசடிகளுக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற ஆதங்கத்தை வெளியிட்டீர்கள்.

மற்றும் தலையங்கத்தில் “எனக்கு பின்னர் பேசிய கொழுந்து சஞ்சிகை ஆசிரியர் அந்தனிஜீவா நடந்து முடிந்த தேசிய சாகித்திய பரிசுத்தேர்வில் சில தவறுகள் நடந்திருப்பதாகவும் அவை தொடர்பாக இப்பொழுது விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் கூறினார்” என எழுதியுள்ளீர்கள். அந்த மலர் வெளியீட்டு விழாவில் இது பற்றி சுருக்கமாக எழுதி வெளியிட்டேன். விரிவாக இன்னொருவருடைய மலர் வெளியீட்டு விழாவில் சொந்தக் கருத்துக்களை கூறமுடியாது அல்லவா?

சாகித்திய விழாவை நடத்தும் கலாசாரத்திணைக்கள பணிப்பாளரிடம் “ஞானம்” ஆசிரியத் தலையங்கத்திற்கு போட்டோ பிரதி ஒன்றையும் கொடுத்துள்ளேன்.

அரசு நடாத்தும் சாகித்திய தேர்வில் நூல்களில் I.S.B.N இடம்பெற்றிருக்க வேண்டும். அப்படி இல்லாத ஒரு நூலுக்கு எப்படி பரிசளித்தார்கள். சாகித்திய இலக்கிய குழுவில் 15 பேர் இடம் பெற்றுள்ளார்கள். அதில் ஒரு தமிழன்பர் இடம்பெற்றுள்ளார். அவரும் தன் கடமை நிமித்தம் வெளியூர், வெளிநாடு சென்றுவிடுவார். அந்தக்குழுவின் செயலாளராக அமைச்சின் திணைக்களத்தில் பணியாற்றும் ஒரு தமிழ்ப்பெண்மணி உள்ளார். அவரால்தான் பல தவறுகள் இடம்பெறுகின்றன. இவர் திணைக்களம் நடாத்தும் விழாக்களுக்குகூட நாடறிந்த இலக்கிய வாதிகளுக்கு அழைப்பு அனுப்புவது இல்லை.

அது மாத்திரமல்ல கொடகே என்ற தனியார் நிறுவனம் நடத்திய நாவல் தேர்விலும், நாமக்கல் சின்னப்ப பாரதி அறக்கட்டளை நடத்திய தேர்விலும் எழுத்தாளர் உதயணனின் “பால்நிலவு” சிறந்த நாவலாக தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் தேசிய சாகித்திய விழாவின்போது வேறு ஒரு நாவல் தெரிவு செய்யப்பட்டது. ஆனால் தனது நாவலுக்கு பரிசு கிடைக்கவில்லை என்பதற்காக எழுத்தாளர் உதயணனோ அவரது நண்பர்களோ அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

நாமக்கல் சின்னப்பபாரதி அறக்கட்டளை ஒரு தேர்ந்த குழுவினரை வைத்து அதற்குரிய நூல்களை தெரிவு செய்கிறது. அந்த அறக்கட்டளையின் இலங்கைப் பிரதிநிதியாக செயல்படுகிறேன். பரிசுத் தேர்வுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தனிஜீவா, ஆசிரியர் கொழுந்து.20
(ஞானம்–142– மார்ச் –2012)

20



தமிழ் இலக்கிய வரலாற்றில் ஈழத்துப்போர் இலக்கியம்

ஞானம் சஞ்சிகை ஜூன் 2000ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

'இக் கலை இலக்கியச் சஞ்சிகை மூலம் இலக்கிய உலகிற்கு எம்மாலான பணியைத் தொடர விழைகிறோம்' என்ற அடக்கமான பிரகடனத்துடன் ஆரம்பித்த நாம், அன்றிலிருந்து நிதானமாகப் பயணித்து 50ஆம் இதழை 'பொன் மலரா'கத் தருவித்தோம். 100ஆவது இதழை 'ஈழத்து நவீன இலக்கியச் சிறப்பிதழாக' வெளிக்கொணர்ந்ததன் மூலம் எம்மை விரிவாக்கிக்கொண்டோம். தற்பொழுது 150ஆவது இதழை 'ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழாக' உலகத் தமிழ் இலக்கியத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலம் எம்மை நாங்கள் மேலும் விரிவுபடுத்திக் கொண்டுள்ளோம்.

சுதந்திரம் என்பது அடக்கு முறையின் அனைத்துக் கரங்களையும் எதிர்த்து வாழ்தலில்

இருந்து சாதல் வரைக்குமான இயல்பு நிலை மீறாப் பெருந்தளை நீக்கமாகும். மானுடத்தின் மிகப் பெரும் பரவசமும் இதுவே. இதற்காகத்தான் உலகெங்கிலும் கந்தகம் காற்றில் கலக்கிறது. ஈழத்துப் போர்க்காலத்தில் மொழியையும் அதன்வழியான இலக்கியத்தையும் கலாசார ஆயுதமாக ஏந்திய பேனா மன்னர்களின் போரிலக்கியம் தொடர்பான படைப்பு - ஆய்வு - மதிப்பீடு கருத்தாடல் - ஆவணம் பற்றிய பெருந்தொகுப்பாக ஞானம் சஞ்சிகையின் 'ஈழத்துப் போர் இலக்கியம்' எனும் இச் சிறப்பிதழ் வெளிவருகிறது.

உலகப் போரிலக்கியம்:

உலக வரலாற்றில் எங்கெல்லாம் போர்கள் நடைபெற்ற னவோ அங்கெல்லாம் உன்னதமான போரிலக்கியங்கள் தோன்றின. முதலாம் உலகமகாயுத்தம், இரண்டாம் உலக மகாயுத்தம் ஆகியவற்றின் விளைவுகள் மட்டுமன்றி அதன்பின்னர் உலகெங்கிலும் நடைபெற்ற பல புரட்சிகளின் போதெல்லாம் போர் இலக்கியங்கள் மலர்ந்தன. பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்ய இலக்கியங்களில் போரிலக்கியங்களே உலகப் பிரசித்திபெற்றவை. உரிமையும், உரிமை மறுப்பும், ஆயுதமும் ஆயுத எதிர்ப்பும், சமாதானமும் சமாதான மீறலும் மட்டுமன்றிக் காட்டிக் கொடுத்தலிலிருந்து பொருளாதாரத் தடைவரைக்கும் பழிவாங்கலிலிருந்து பண்பாட்டு அழிப்பு வரைக்கும் போரிலக்கியங்கள் பேசுகின்றன. ஒரு நாட்டுக்குள் இன, மத, ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் தமது உரிமைகளுக்காகக் கிளர்ந்தெழுந்து போராடிய உள்நாட்டுப் போர்களிலிருந்தும் பல உன்னத இலக்கியங்கள் தோன்றியதை ஐரிஷ், பலஸ்தீன இலக்கியங்கள் காட்டிநிற்கின்றன.

தமிழில் போரிலக்கியம்:

தமிழில் போரிலக்கிய மரபின் ஆரம்பமாகச் சங்கப் புறத்திணை நூல்களைக் கொள்ளலாம், புறநானூற்றி லிருந்து பதிற்றுப்பற்று வரையான புறத்திணை நூல்கள் போரை மட்டுமன்றி அதற்கான மன்னராட்சி அரசியலையும் முன்னிறுத்தின. காவியங்களின் பெரும் பகுதியான காண்டம்கூட

‘யுத்த காண்டம்’ எனும் பெயர்த்தன்மையுடையதாய் அமைந்தது. சிற்றிலக்கிய மரபிலும் இந்நிலையைக் காணமுடியும். குறிப்பாகப் பரணி முதலிய சிற்றிலக்கியங்களின் தோற்றுவாய் போர் மற்றும் வெற்றியின் அரசியலைச் சார்ந்ததாக அமைந்தது.

இருபதாம் நூற்றாண்டில் மகாகவி பாரதியின் வருகையானது நவீன தமிழ் இலக்கியத்தில் ஆழமும் அகலுமான அரசியலுக்கான ஒரு பெருவெளியை ஏற்படுத்திவிடுகிறது. இந்திய சுதந்திர விடுதலைப் போராட்டம் சார்ந்த தமிழ் நிலைப்பட்ட இலக்கியப் பிரதிகளையும் நவீன தமிழின் போர் இலக்கியங்களின் ஆரம்பமாகக் கொள்ள முடியும்.

ஈழத்தில் போர் இலக்கியத்தின் வரலாற்றுப் பின்னணி:

‘ஈழத்தில் போர் இலக்கியம்’ எனுந் தொடர், தமிழ்த் தேசியத்தை முதன்மைப்படுத்திய ஆயுதப் போராட்டம் சார்ந்தது. எல்லை வரையறுக்கப்பட்ட ஒரு நாட்டை அரசியல் பொருளாதார நலன்கருதி காலனிய அரசுகள் கைப்பற்றியபோது இடம்பெற்ற விடுதலைப் போராட்டத்திற்கும் நாட்டுக்குள்ளேயே பாரம்பரிய, தார்மீக உரிமைகள் நசுக்கப்பட்டபோது இடம்பெற்ற போராட்டத்திற்கும் உணர்வுசார் வேறுபாடுகள் நிறையவேயுள்ளன. பொதுவாக ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும் இடையிலான போரில் சுதேசிகள் மொழி, இன, மத பேதமற்று ஒன்றிணையும் உணர்வினைக் காணமுடியும்.

ஆனால் ஒரு நாட்டிற்குள் பெரும்பான்மைச் சமூகமொன்று சிறுபான்மைச் சமூகமொன்றை அடக்கும்போது அதற்கெதிராக, வெடிக்கும் போராட்டத்தின் உணர்வுநிலை இனம், மொழி, மதம் மற்றும் பண்பாட்டு வேறுபாடுகள் காரணமாகக் கொதிநிலை உடையதாய் அமையும். அடக்குமுறைக்கு உட்பட்ட சிறுபான்மைச் சமூகத்தின் எதிர்ப்பு உணர்வில் அச்சமூகம் இறுகப்பற்றிய இன உணர்வு மொழியுணர்வு, மதவுணர்வு மற்றும் பண்பாட்டு உணர்வுகள் மிகக் கூர்மையுடன் காணப்படும். இந்த உணர்வுக் கொதிநிலையைத் தமிழ்த் தேசியத்தை முதன்மைப்படுத்திய ஈழத்துப் போர்இலக்கியப்

பிரதிகளில் அதிகமாகக் காணமுடிகிறது. இந்த உணர்வுக் கொதிநிலைதான் இப்பிரதிகள் தோன்றுவதற்கான பிரதான ஊக்கியுமாகிறது.

1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றது. எனினும் உடனடியான அரசியல் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. 1955இன் பின்னரேயே அம்மாற்றம் மெல்ல மெல்ல ஏற்படுகிறது.

1956 வரையும் இலங்கையின் பாரம்பரிய அரசியல் வரலாற்று மூலங்களிலிருந்து காலனிய காலத்திலும் அதற்கு முன்னரான காலத்திலும் தமிழ் - சிங்கள இன முரண்பாடு மன்னர்களின் ஆட்சிபிடிப்பதற்கான போரில் வெளிப்படத் தொடங்கியதை அறியமுடிகிறது. ஆனால் 1956 இல் இனமுரண்பாடு உக்கிரமடைந்தமைக்கான ஆரம்பப் புள்ளியாகத் தனிச் சிங்களச் சட்ட அமுலாக்கத்தைக் குறிப்பிடலாம். இதைத் தொடர்ந்து பல எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றன. 'நண்டெழுத்து வேண்டாம் நமக்கு' போன்ற மொழியுணர்வு சார்ந்த போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. 'காலிமுகத்திடற் சத்தியாக்கிரகம்', 'ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம்' முதலானவற்றையும் இங்கு குறிப்பிடலாம். மொழிரீதியான அடக்குமுறை, தமிழர்களை வெகுவாகப் பாதித்தது. 56, 57, 58, 77, 83களில் நடைபெற்ற சிறுபான்மையினருக்கெதிரான கலவரங்களும் தமிழ் மக்களின் வாழ்வியல் உரிமைகளைப் பெரிதும் பாதித்தன. பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தலை மேற்கொண்டதன் மூலம் தமிழர்களின் அறிவாளுமையை நிறுவனக் கல்விரீதியாக ஒடுக்கும் முறையையும் அரசு மேற்கொண்டது. இது மட்டுமன்றி அரசியல் மதமாக பௌத்தம் முதன்மை பெற்றதுடன் மதரீதியான சமத்துவ நிலையும் பாதிப்புக்குள்ளானது. இன, மொழி, மத, பண்பாட்டுசார் உரிமைகள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் ஈழத்தமிழர் தமக்குரிய அரசியலை ஸ்திரப்படுத்துவதும் உரிமைக்காகப் போராடுவதும் தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவையாக அமைந்தது.

தொடர்ச்சியாக ஏற்பட்ட இனக்கலவரங்கள், அதன் விளைவாக நிகழ்ந்த இனப் படுகொலைகள் அகிம்சை வழியிலிருந்து ஆயுதவழிக்கு தமிழர்களைத் திருப்பியது. விடுதலை இயக்க அமைப்புக்கள் பல பிறநாட்டு போராட்ட அமைப்புகளின் கொள்கைகளைத் தழுவி தமிழருக்கான உரிமைகளை வென்றெடுக்கும் போரில் ஈடுபட்டன. இயக்கங்களுக்கிடையேயான உள்முகமான ஒற்றுமை யின்மையும், மக்களை விருப்புடன் கூடிய அரசியற் பங்கேற்குனர்களாகக் கொள்ளாத நிலையும், பழுத்த அரசியற் தலைமைகளினதும் புத்திஜீவிகளினதும் வழிகாட்டல்களையும் எதிர்வு கூறல்களையும் ஏற்றுக்கொள்ளாத தன்மையும் போராட்ட முன்னெடுப்பில் ஆரம்பத்திலிருந்தே விமர்சனங்களைப்பெறும் நிலைக்கு விடுதலை அமைப்புக்களை உள்ளாக்கின. அறிவுஜீவிகளின் படுகொலை, அரசியல் தலைமைகளின் படுகொலை மட்டுமன்றி விடுதலைக் குழுக்களில் அங்கம் வகித்த உறுப்பினர்களின் படுகொலை, ஒன்றிவாழ்ந்த சகோதரச் சிறுபான்மை இனம் ஓர் இரவில் வெளியேற்றப்படல் என விடுதலைக்குப் புறம்பான செயற்பாடுகளும் காணப்பட்டன.

பெரும்பான்மையின் இன ஒடுக்கு முறையானது உயிரில் இருந்து பண்பாட்டு அழிப்புவரை நீண்டு சென்றது. யாழ் நூலக எரிப்பு பண்பாட்டு அழிப்பின் பெருங்கொடுமையானது. உள்நாட்டுப் படையினரின் ஆக்கிரமிப்பு மட்டுமன்றி அமைதிப் போர்வையில் இலங்கை வந்த இந்திய இராணுவப் படையினரின் அட்டூழியங்களும் சொல்லிமாளாப் பெருந் துயரங்களாகின.

ஏறத்தாழ மூன்று தசாப்தங்கள் கொண்ட விடுதலைப் போர், ஆயுத ரீதியாக முள்ளிவாய்க்காலில் முற்றுப் பெற்றது. இம் முப்பெருந் தசாப்தங்களில் ஈழத்துத் தமிழ்ச்சமூகத்தின் போரின் வலி சுமந்த 'பாடுகளின் பயணம்' எந்த நூற்றாண்டிலும் முற்றுப்பெறாதது. உள்நாட்டு இடப் பெயர்வுகள், கண்டந் தாண்டிய புலப்பெயர்வுகள் மட்டுமன்றி அகதி முகாம் வாழ்க்கை, பொருளாதாரத்தடை முதலாய இன்னல்கள் தொடர்கதையாயின.

அமைதிச் சூழலிலிருந்து கற்பதற்கான கல்விச் சூழல் வரை மோசமாகப் பாதிப்படைந்தது. இப்போரின் விளைவுகள்

போர்சார்ந்த கருத்து நிலைப்பாடுகள் பற்றிய மதிப்பீடுகள் அனைத்துத் தளங்களிலும் நடைபெறுதல் ஆரோக்கியமானது. இதுதான் தமிழ்த்தேசிய அரசியலை நேர்த்திசை வழிக்கு இட்டுச் செல்லும். மேற்குறிப்பிட்ட தமிழ்த் தேசியப் போரின் அடிப்படைகளும் அவை வழியான விளைவுகளுமே ஈழத்துப் போர் இலக்கியங்களுக்குத் தோற்றப் பின்னணியாயின.

போர் இலக்கியம்:

நவீன தமிழ் இலக்கியத்தில் 'போர் இலக்கியம்' என்றவொரு தனியான பகுப்பை உருவாக்கிய பெருமை ஈழத்தமிழ்ப் படைப்பாளிகளையே சாரும். இவ்விலக்கியம் உலகெங்கிலும் தோன்றிய பெரும் போர் இலக்கியங்களுக்கு இணையானதாக மதிக்கப்படுகிறது. ஆங்கில மொழியில் நடைபெற்றுள்ள ஈழத்தமிழ்ப் போரிலக்கியம்பற்றிய ஆய்வுகள் இதனை மெய்ப்பிக்கின்றன.

விடுதலை அமைப்புகளின் கொள்கை பற்றிய ஆரம்பகால வெளியீடுகள், பிரசுரங்கள், சுவரொட்டிகள், மொழி, உணர்ச்சி சார்ந்த படைப்புகள், முதலியனவும் பன்னூற்றாண்டு மரபுத் தமிழ் இலக்கியச் செழுமையும் ஒன்றிணைந்து உருவ உள்ளடக்கப் புதுமைகொண்ட உயிர்ப்பும் வீச்சும் மிக்க ஈழத்துப் போர் இலக்கியம் தோன்றியது. 1985இல் வெளிவந்த 'மரணத்துள் வாழ்வோம்' என்ற கவிதைத் தொகுப்பு போரைப் பதிவு செய்த முதலாவது இலக்கியத் தொகுப்பாகும். இதனைத் தொடர்ந்து போரையும் போரின் வலிகளையும் பிரதிபலிக்கும் பல கவிதைத் தொகுதிகளும் சிறுகதைத் தொகுதிகளும் நாவல்களும் நாடகங்களும் வெளிவந்துள்ளன.

இராணுவ அடக்குமுறைகள், அழிப்புகள், அவற்றுக் கெதிரான போராட்டங்கள், பதுங்குகுழி நாட்களாகக் கழியும் மக்களின் வாழ்நாட்கள், இடம்பெயர்ந்து இரவுநேரப் பயணிகளாகும் மக்கள், மரணங்கள் மலிந்த பூமியாக மாறிய மண், சாற்று கவிகளின்றிச் சரமகவியே பாடும் உணர்வுநிலை, காற்றுவெளியாகிய கிராமங்கள், வாசல் ஒவ்வொன்றிலும் ஒலித்த அன்னையர்களின் ஒப்பாரி, நிலத்திற்கடியில்

புதைக்கப்பட்ட இளைஞர் யுவதிகளின் உடல்கள், காணாமற் போனோரின் உறவினரின் கதறல்கள், உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் கையகப் படுத்தப்பட்டு விதைப்பாரற்றுப் போன விளைநிலங்கள், பார்வையைக் குருடாக்கும் கொடூரக் கொலைகள், செவிக்குள் சென்று முடியாத ஓலங்கள், இதயத்தால் தாங்கொணா இன்னல்கள், ஊசலாடித்திரிந்த உறவுகளின் உயிர்கள், உணவும் மருந்தும் அற்று உருகிச்செத்த குழந்தைகள், உலைக்களமான மனங்கள், மண்ணில் விழுந்து தேய்ந்துபோன மானுட நேயங்கள், தலைகளற்ற கற்பக தருக்கள், முகடுகளற்ற வீடுகள், முகங்களும் முகவரிகளும் இல்லாத மக்கள் எனப் பெரும் பாடுபொருள் வெளியை போர் இலக்கியங்கள் தமதாக்கிக் கொண்டன.

போர் இலக்கிய எழுத்தாளர்கள் போர்க்காலத்தில் முன்னர் எழுதி வந்த மூத்த தலைமுறை எழுத்தாளர்கள் மட்டுமன்றி புதிய தலைமுறை எழுத்தாளர்களும் எழுதினர். கவிஞர்கள், சிறுகதையாசிரியர்கள், நாவலாசிரியர்கள், பத்திரிகையாளர்கள், நாடகவியலாளர்கள் எனப்பலர் எழுதிக்குவித்தனர். இவர்களில் ஆண்களும் பெண்களு மடங்குவர். போர்க்கால எழுத்தாளர்களை, போர்நடைபெறும் களத்தில் நின்று போராடிக்கொண்டே எழுதிய போரா ளிகள், போர்க் களத்துக்கு வெளியே இருந்து போரின் நியாயப்பாட்டையும் இழப்புகளையும் எழுதிய படைப் பாளிகள், புலம்பெயர்ந்து சென்று ஈழப்போரின் இழப்புகளை எழுதிய புலம்பெயர்படைப்பாளிகள், முஸ்லிம் தேசியத்தை முதன்மைப்படுத்திய முஸ்லிம் படைப்பாளிகள், ஈழப்போராட் டத்திற்கு ஆதரவாகத் தமிழகத்திலிருந்து எழுதிய தமிழகப் படைப்பாளிகள் என வகைப்படுத்தலாம். பெரிதும் சிறிதுமாக வெளிவந்த பல்லாயிரக் கணக்கான படைப்புகளைப் பார்த்தால் போர் இலக்கியத்தின் பல்பரிமாணப் போக்குப் புலப்படும். தேசவிடுதலை, இனவிடுதலை மொழிவிடுதலை, பண்பாட்டு விடுதலை, பெண்விடுதலை, சமூக விடுதலை முதலிய பல போக்குகளை இவ் இலக்கியங்கள் காட்டிநிற்கின்றன.

ஆறாந்திணை

பாரம்பரியத் தமிழ் இலக்கியங்கள் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என ஐந்து திணைகளைப் பிரதி பலிப்பனவாக அமைந்தன. போரின் விளைவாய் ஈழத்தமிழரின் மேலை நாடுகளுக்கான புலப்பெயர்வு புதியதொரு திணை வெளியான ஆறாந்திணையையும் ஏற்படுத்தியது. ஐரோப்பிய, ஸ்கன்டினேவிய நாடுகளின் ‘ பனிநிலம்’ புதியதொரு திணையாகி அதனை அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்கள் தோன்றின. ஆறாந் திணை என்ற கருத்துநிலை ஈழத்தமிழரால் தமிழ் உலகிற்குக் கையளிக்கப் பட்டது. இப் போர் இலக்கியங்கள் தமிழ் ஐவகை நிலங்களின் பகைப்புலங்களை மட்டுமல்லாது மேலைத்தேய நாடுகளின் பகைப்புலங்களையும் அடிப்படையாகக் கொண்டு தமது அனுபவத் தேட்டத்தை வெளிப்படுத்தின.

ஞானம் போர் இலக்கியச் சிறப்பிதழ் – தேவையும் பின்னணியும்

கடந்த கால இலக்கியச் செயற்பாடுகளை விமர்சிப்பதும் உரையாடுவதும் காலத்தின் தேவையாகும். இலக்கியத்தினை மதிப்பிடுவது என்பது தனியே இலக்கியத் தரத்தினை மதிப்பிடுவது மட்டுமல்ல. இலக்கியம் பேசும் பண்பாட்டை, கருத்தியலை, அதன் தோற்றக் காரணிகளை, அதன் அரசியற் பின்புலத்தை எல்லாம் மதிப்பிடுவதாகும். இந்த மதிப்பீடு தமிழ் இலக்கியத்திற்கு ஈழத்தமிழர் புதிதாக வழங்கிய இலக்கிய நன்கொடையாக அமையும். இன்னும் எதிர்கால ஈழத்தமிழ்ச் சந்ததிக்கு தமிழினம் உரிமைக்காக நடத்தியபோரின் இலக்கியச் சாட்சியங்களாக இப்பிரதிகள் இருக்கும். கால ஓட்டத்திலும், திட்டமிடப்பட்ட இலக்கிய இருட்டடிப்புகளில் இருந்தும் இவ் இலக்கியங்களைப் பாதுகாக்க வேண்டிய தேவையும் உள்ளது. இதற்கான ஒரு தொடக்கமாக இச்சிறப்பிதழ் உருவாகியது.

போரிலக்கியம் மேலை நாடுகளில் உள்ளது போன்று இங்கும் அது ஒரு கற்கை நெறியாக மாறக்கூடிய தேவையும் இருக்கிறது.

ஒரு சமுதாயத்தின் உரிமைக்கான போரின்போது இதழியல் துறையின் பங்களிப்பை உணர்ந்து ஞானம் செயற்பட்டு

வந்துள்ளது. ஞானம் முதலாவது இதழில் சிறுசஞ்சிகைகளின் பணி பற்றிக் குறிப்பிடும்போது, 'இலக்கியப் பாரம் பரியங்கள், இலக்கிய உலகில் ஏற்படும் மாற்றங்கள், வளர்ச்சிப் போக்குகள், கருத்தோட்டங்கள் போன்றவற்றின் காலக் கண்ணாடியாக இவை மிளிர வேண்டுமெ'னக் குறிப்பிட்டிருந்தோம். இக்கூற்றுக்கு அமையவே ஞானம் செயற்பட்டு வந்திருக்கிறது. ஈழத்து இலக்கியத்தின் தாரதம்மியங்களையும் அரசியல் வரலாற்று நிலைகளையும் அவ்வப்போது ஞானம் வெளிப்படுத்தி வந்துள்ளது. ஞானம் இதழ்களும், ஞானம் பதிப்பக வெளியீடுகளும் இதற்குச் சான்றுபகரும். ஞானத்தின் முதலாவது இதழிலிருந்து ஒவ்வொரு இதழிலும் போர்இலக்கியக் கவிதைகள், சிறுகதைகள், விமர்சனங்கள், பத்தி எழுத்துக்கள் வெளிவந்துள்ளன. பல ஆசிரியத் தலையங்கங்கள் போரக்கால இலக்கிய அரசியல் குறித்துப் பேசியுள்ளன. போரின் நெருக்கடியான வேளைகளிலும் உண்மைகளை வெளிக்கொணரும் வரலாற்றுக் கடமையிலிருந்து ஞானம் தவறியதே இல்லை. தென்னிலங்கையில் வெளிவந்த போர் இலக்கியப் படைப்புகள் மற்றும் மேலைநாட்டில் ஆங்கில மொழியில் வந்த போர்க்காலப் படைப்புகள் போன்றவற்றின் தமிழ் மொழிபெயர்ப்புகள் ஞானத்தில் வெளியாகின. ஞானத்தின் தனித்துவமாக, ஞானம் முதல் 50 இதழ்களில் வெளிவந்த போர்க்காலச் சிறுகதைகளில் 20 கதைகளைத் தெரிவு செய்து 'போர்க்காலக் கதைகள்' என்ற மகுடத்தில் 2007இல் வெளியிட்டதையும், தலைநகரில் இருந்து கொண்டு பலதரப்பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் எந்தவொரு சிற்றிதழும் செய்யத் துணியாத பணியாக இது அமைந்ததனையும் சுட்டிக் காட்டலாம். அதேபோன்று சிங்கள மொழியில் எழுதப்பட்ட போர்க்காலக் கதைகளை தமிழில் மொழிபெயர்த்து ஞானத்தில் தொடராக வெளியிட்டதோடு, அவற்றை 'யுத்தத்தின் சாபம்' என்ற மகுடத்திலும் நூலாக வெளிக் கொணர்ந்தோம். இதன் உச்சமாக ஞானத்தில் வெளிவந்த 'காரணங்கள்' என்ற கவிதை இலங்கைப் பாராளுமன்றத்தில் ஈழத்தமிழரின் இலக்கியச் சாட்சியாக

வாசித்துக் காட்டப்பட்டதும் ஹன்சாட்டில் பதியப்பட்டதும் ஞானம் இலக்கியப்பணியின் முக்கிய மைல்கல் என்றால் அது மிகையாகாது.

ஈழத்தின் மூத்த தலைமுறை மற்றும் இளைய தலைமுறை எழுத்தாளர்கள், புலம்பெயர் எழுத்தாளர்கள், தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் மட்டுமன்றி போராளிகளின் படைப்புகளையும் ஞானம் வெளியிட்டுள்ளது.

ஞானம் 150 – ஈழத்துப் போர் இலக்கியம்

ஞானம் 150ஆவது நிறைவு இதழ் 'ஈழத்துப் போர் இலக்கியம்' எனும் சிறப்பிதழாக இப்போது உங்கள் கரங்களில் தவழ்கிறது. போர் இலக்கியத்தின் பல்பரிமாணத்தையும் இலக்கிய வாசகருக்கு உணர்த்தும் தேவைகருதி ஞானம் இதழ்களில் வெளிவந்த சில படைப்புகளும் ஏனைய இலக்கிய இதழ்களிலும் படைப்பிலக்கிய நூல்களிலும் வெளியான சிறந்த சிறுகதைகள், கவிதைகள் சிலவும் இங்கு மீள்பிரசுரமாகின்றன.

உலகளாவிய ரீதியில் தமிழாய்வு நிறுவனங்களால் வெளியிடப்படும் சிறப்பு மலர்களே 500க்கும் அதிகமான பக்கங்களைக் கொண்டு வெளிவரும் நிலையில், ஞானம் இலக்கியச் சஞ்சிகையானது ஒரு தனிமனித முயற்சியாக, இந்த ஈழத்துப் போர்இலக்கியச் சிறப்பிதழை 600பக்கங்களில் வெளிக்கொணர்வதில் எமக்கு ஒரு தயக்கம் இருந்தது. ஆனால் உலகத் தமிழ் இலக்கியத்திற்கு 'ஈழத்துப்போர் இலக்கியம்' என்ற புதிய பகுப்பினை வழங்கும்போது இது தவிர்க்க முடியாததாகிவிட்டது. இந்தப் புதிய பகுப்பினை நாங்கள் கீழ்க்கண்டவாறு வகுத்தளித்துள்ளோம்.

கவிதைகள்: ஈழப்போரின் தொடக்கத்துக்கான பின்புலங் களை வெளிக்கொணரும் 'இரண்டாவது சூரிய உதயம்' என்ற கவிதையை முதலாவதாகவும் அதன்பின்னர் பல்வேறு காலப்பகுதியில் வெளிவந்த போரின் வலிகளை வெளிக்கொணரும் கவிதைகளையும், ஆயுதப்போர் முடிவைக் காட்டிநிற்கும் 'காடாற்று' எனும் கவிதையை இறுதியாகவும் உள்ளடக்கி 43 கவிதைகளைப் பிரசுரித்துள்ளோம்.

சிறுகதைகள்:

ஆயுதப் போரின் தொடக்க காலத்தில் இளைஞர்கள் போராட்டத்திற்குச் சென்றபோது அவர்களது குடும்பங்களில் ஏற்படுகின்ற மனவலிகளையும் சிதைவுகளையும் படம் பிடித்துக் காட்டி நிற்கும் 'கோசலை' என்னும் கதையை முதலாவதாகவும், தொடர்ந்துவந்த காலப்பகுதியில் போர் ஏற்படுத்திய காயங்களைக் காட்டும் படைப்பாளிகளின் சிறுகதைகளையும், போர்க்களத்தில் நின்றெழுதிய போராளிப் படைப்பாளிகளின் கதைகளையும் உள்ளடக்கி இறுதிக் கதையாக போரின் பின் விளைவுகளைக் காட்டிநிற்கும் 'வோர் சின்ட்றோம்' கதையையும் பிரசுரித்து மொத்தம் 26 சிறுகதைகளுக்கு இச்சிறப்பிதழில் இடமளித்துள்ளோம்.

கட்டுரைகள்: போர் இலக்கியத்தை அறிமுகப்படுத்தும் 'போரும் இலக்கியமும்' என்ற கட்டுரையை முதலாகக் கொண்டு போர் இலக்கியத்தின் பல்வேறு பரிமாணங்களையும் வெளிக்கொணரும் விதமான விடயங்களை உள்ளடக்கிய 42 ஆளுமைகளின் கட்டுரைகளையும் உள்வாங்கியுள்ளோம். இறுதிக் கட்டுரையாக போர் இலக்கிய நூல்களைத் தொகுத்துக்கூறும் 46 பக்கங்கள் கொண்ட 'ஈழத்தமிழரின் போர்க்காலப் பிரசுரங்களும் போராட்ட இலக்கியங்களும்' என்னும் சிறப்புக் கட்டுரையையும் தந்துள்ளோம்.

நிகழ்த்து கலைகள்: போரின் வலிகளைப் பன்முகப்பட்ட பார்வையில் காட்டிநின்ற 'மண்சுமந்த மேனியர்' நாடகத்தின் தொடர்முயற்சிகள் பற்றிய நேர்காணலையும் போர்க்காலத்தில் எழுந்த திரைப்படங்கள், குறும்படங்கள் பற்றிய கட்டுரைகளையும் போர்முடிந்த பின்னர் சிங்களத் திரைப்படங்கள் அவைகுறித்த எத்தகைய பதிவுகளைமேற்கொண்டு வருகின்றன என்பது பற்றிய கட்டுரையையும் ஆவணப்படுத்தியுள்ளோம்

பாடல்கள்: போர் எழுச்சிப் பாடல்கள் தொடங்கி ஈழத்துப் போர்க்கால மெல்லிசைப் பாடல்கள், வாய் மொழிப்பாடல்கள் பற்றிப் பேசும் கட்டுரைகளையும் உள்ளடக்கியுள்ளோம்.

ஓவியம்: போராட்டத்தின் வலிகளைச் சித்திரிக்கும் நவீன ஓவியங்களும், ஓவியம் பற்றியகட்டுரையொன்றும் இடம்பெற்றுள்ளன.

மேலும், வடக்கில் - யாழ்ப்பாணம், மன்னார், வன்னிப் பிரதேசங்களில் போர் ஏற்படுத்தியதாக்கங்கள், கிழக்கில் - திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பில் போர் ஏற்படுத்தியவலிகள், மேற்கில் - கொழும்புவாழ் தமிழ் மக்கள் சந்தித்த இனத்துவேச நெருக்கடிகள் தெற்கில் - சிங்களவர்கள் போரினைப் பார்த்த பார்வைகள், மத்தியில் - மலையகத்தில் போர்ஏற்படுத்திய அதிர்வுகள் என்று இலங்கை பூராவும் எழுந்த போரின் பிரதிபலிப்புகள் அடங்கிய ஆக்கங்களை இந்தச் சிறப்பிதழில் தொகுத்துத் தந்துள்ளோம். இது, ஈழத்துப் போரிலக்கியத்தின் ஒரு வெட்டு முகத்தை வழங்கும் என நம்புகிறோம்.

ஞானத்தின் நன்றிகள்

இந்தச் சிறப்பு மலரில் மீள் பிரசுரம் செய்வதற்கென நாம் பலரது சிறந்த போர்க்காலச் சிறுகதைகளையும் கவிதை களையும் சேகரித்திருந்தோம். இருப்பினும் பக்க விரிவு காரணமாக அவற்றை எம்மால் மீள்பிரசுரம் செய்ய முடியவில்லை. அதேவேளை இச்சிறப்பிதழுக்கென புதிதாக ஆக்கங்களை எழுதி அனுப்பிய பலரது படைப்புகளையும் சேர்த்துக் கொள்ளமுடியவில்லை. ஆயினும் எமது வேண்டுகோளை ஏற்று சிறந்த படைப்புக்களை அனுப்பிய அத்தனை நெஞ்சங்களையும் ஞானம் தலைசாய்த்து வணங்கு கிறது.

ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழை வெளிக்கொணரும் எண்ணத்தை நாம் வெளியிட்டபோது இந்தச் சிறப்பிதழுக்கென படைப்புகளைப் பெற்றுத் தருவதில் மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்ட பேராசிரியர் செ. யோகராசா அவர்களுக்கும் திரு.சி.கருணாகரன் அவர்களுக்கும் ஞானத்தின் நன்றிகள் என்றும் உரியது. நண்பர் திரு. செ.சுதர்சன் அவர்களும் இந்த ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழை வெளிக் கொணர்வதில் தனது சிறப்பான பங்களிப்பை வழங்கி யுள்ளார். நண்பர் திரு. சி. விமலன் அவர்களும் பல வழிகளில் உதவியுள்ளார். போர் இலக்கியம் பற்றிய பின்புலத்தை வெளிக்கொணரும் நோக்கத்துடன் கருத்தாடல்

ஒன்றை இச்சிறப்பிதழில் வெளியிட எண்ணினோம். இந்தக் கருத்தாடலில் பங்கேற்ற திரு. வீ. தனபாலசிங்கம், திரு. மு. பொன்னம்பலம், திரு.தெ.மதுசூதனன் அவர்களுக்கும் ஈழத்து இலக்கிய உலகு சார்பிலும், தனிப்பட்ட முறையிலும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஞானம் இதழின் நிர்வாக ஆசிரியர் திரு.ஞா. பாலச்சந்திரன் அவர்கள், 'ஞானம்' அழகோடும் இளமையோடும் இலக்கிய உலகில் வலம்வர தோள்கொடுத்து வருபவர். இணையத்தினூடாக உலகமெங்கும் பரந்து வாழும் வாசகர்கள், ஞானம் சஞ்சிகையை வாசிக்க வழிசெய்பவர். இந்த இதழின் ஒவ்வொரு பக்கமும் அவர் உழைப்பின் கதை பேசும். அவருக்கு நான் எப்படித்தான் நன்றி சொல்வேன்!

ஞானம் –150 (நவம்பர் 2002)

புரிதல்

✦ 150ஆவது இதழ் என்பது 12 1/2 வருட வரலாற்றைக் குறிக்கிறது. இந்த ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழ் 600பக்கங்களையும் சிறந்த உள்ளடக்கங்களையும் கொண்டது. இவ்வாறான ஒரு சிறப்புமலர் இதற்கு முன்னும் வெளிவரவில்லை. இனிமேலும் வரப்போவதில்லை

அன்புமணி, மட்டக்களப்பு (ஞானம்–152–ஜனவரி 2013)

21

போரின் பின்னரான இலக்கியம்

ஆயுதப் போர் ஓய்ந்து ஏறத்தாழ மூன்று வருடங்கள் ஆகின்றன. ஆனால் எதற்காகப் போர் நடைபெற்றதோ அதற்கான காரணங்கள் மட்டும் அப்படியே உள்ளன. அத்தோடு இந்தப்போர் புதிய காரணங்கள் பலவற்றையும் உருவாக்கியுள்ளது. நமது சமூகக் கட்டுமாணங்கள் சிதறுண்டு போயுள்ளன. போர், சமூகத்தில் ஏற்படுத்திய வலிகள் ஆழமாகவே பதிந்துள்ளன. பெருவாரி உயிர்கள் காவுகொள்ளப்பட்டு விட்டன. பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், கணவனை இழந்த விதவைகள், வாழ்வாதாரங்களை இழந்து நிற்கும் பெருவாரியான மக்கள், உதவிக்கரம் வேண்டிநிற்கும் புனர்வாழ்வுபெற்ற முன்னாள் போராளிகள், கைகால்களை இழந்து ஊனமுற்றோர். வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்

பட்டு அந்த நினைவுகளை சுமந்து கலங்கி நிற்கும் பெண்கள், திருமணம் செய்ய ஆண்கள் கிடைக்காது தவிக்கும் பெண்கள், அகதி முகாம்களில் ஆதரவின்றித் தவிக்கும் அநாதைகள், மனோரீதியாகப் பாதிப்புற்றோர், மனப்பிறழ்வு அடைந்தோர் என இவர்களையெல்லாம் மனதிலிருத்தி மீள்கட்டுமாண இலக்கியங்களைப் படைக்க வேண்டிய தேவை - ஒரு சமூகப் பொறுப்பு இன்று படைப்பாளிகளுக்கு உள்ளது. போருக்குப் பின்னரான இலக்கியம் இந்தத் திசையிலேதான் நகர வேண்டும்.

ஞானம் 151 (டிசம்பர் 2012)

22



மல்லிகை ஜீவாவுக்கு கனடிய தமிழ் இலக்கியத் தோட்டத்தின் விசேட இயல்விருது

வருடா வருடம் கனடிய இலக்கியத் தோட்டத்தால் வழங்கப்படும் சர்வதேச தரத்திலான வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனைக் கான விசேட இயல் விருது இவ்வருடம் திரு. டொமினிக் ஜீவா அவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

50,60கள் இலங்கையில் இடதுசாரி மார்க்சிய அரசியல், முற்போக்கு இலக்கிய இயக்கம், முன்னணிக்கு வந்த காலகட்டம். அடிநிலை மக்களின் அரசியல் விழிப்புணர்ச்சி, சாதாரண மக்களின் பேச்சு மொழி, சாதி, வர்க்க ஒடுக்கு முறைகளில் இருந்து விடுதலை போன்ற கருத்தோட்டங்களின் பின்னணியில் முகிழ்ந்தவர் டொமினிக் ஜீவா.

48வருடங்களாக மல்லிகை என்ற சிற்றிதழை வெளியிட்டு அதனூடாக ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றியவர். முற்போக்கு வாதமும் அணிசேர் ஆதரிப்பும் உச்சத்தில் இருந்த காலத்தில் அதற்காகவே மல்லிகை தொடங்கப்பட்டது.

மல்லிகையின் முதலாவது இதழ் 1966 ஆகஸ்ட் 15இல் வெளியாகியது. அன்றிலிருந்து ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு மல்லிகை தொடர்ந்து பெரும் பங்கினை அளித்து வந்துள்ளது.

விடா முயற்சி, தற்துணிபு, அர்ப்பணிப்பு, உழைப்பு இவை ஜீவாவின் தாரக மந்திரங்கள். அவரது வெற்றி என்ற மாளிகையின் நான்கு தூண்கள் என்றும் சொல்லலாம்.

சஞ்சிகை தயாரிப்பின்போது அதன் ஆசிரியராக இருக்கும் டொமினிக் ஜீவா சஞ்சிகைக்கான விலை குறிக்கப்பட்டபின் வியாபாரியாகத் தொழிற்பட்டார். அச்சடித்த மல்லிகை பிரதிகளை எவ்வித கூச்சமுமின்றி தெருத்தெருவாகக் கொண்டு சென்று விற்றார். மல்லிகை வாசகர்கள், சந்தாதாரர்கள், விளம்பரதாரர்கள், இலக்கிய ஆர்வலர்கள் ஆகியோரை நேர்முகத்தில் சந்தித்து மல்லிகையை விநியோகித்தார். இப்படியாக அவர் மல்லிகை அபிமானிகளுடன் மாதா மாதம் நேரடி உறவைப் பேணிவந்தார். இத்தகைய விநியோகச் செயற்பாட்டின் மூலம் அடுத்துவரும் இதழுக்கான பொருளாதாரத்தைத் தேடிக்கொண்டார். இந்த விநியோக முறையே ஈழத்தில் ஒரு சிற்றிதழைத் தொடர்ந்து வெளியிட சரியான வழிமுறை என்பதை அவர் உணர்த்தினார்.

மல்லிகையின் பணிகளில் குறிப்பிட்டுக் கூடிய பணிகளாக அமைபவை, அதன் ஆரம்ப காலங்களில் மார்க்சியம், தேசியம், இலக்கிய வடிவங்கள் போன்ற விவாதங்கள் வெளியாகி, ஈழத்து இலக்கியம் பற்றிய தனித்துவத்தையும் தெளிவையும் இலக்கிய வாதிகளுக்கு எற்படுத்தியமையாகும்.

பல பிரதேசச் சிறப்பு மலர்களை வெளியிட்டு ஈழத்தின் பல பிரதேங்களை ஜீவா இலக்கிய வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தார்.

சிங்கள எழுத்தாளர்களை, அவர்களது படைப்புகளை தமிழுக்கு அறிமுகப்படுத்தியதில் மல்லிகைக்குப் பெரும் பங்குண்டு. சிங்கள - தமிழ் எழுத்தாளர்களிடையே டொமினிக் ஜீவா ஓர் இலக்கியப்பாலத்தை ஏற்படுத்தினார்.

அதிகமான முஸ்லிம் எழுத்தாளர்கள் மல்லிகை மூலமே தோன்றினர்.

டொமினிக் ஜிவாவின் மல்லிகை 401 இதழ்களுடன் நின்று விட்டது. அவரது 88 வயது வயோதிபம் மல்லிகையை முடங்க வைத்து விட்டது. ஆனாலும் அவர் எந்த நோக்கத்துடன் மல்லிகை இதழை ஆரம்பித்தாரோ அந்த நோக்கத்தில் வெற்றி பெற்றுள்ளார் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

ஈழத்தில் முதல்முதல் தேசிய சாகித்திய மண்டலப் பரிசினைத் தனது 'தண்ணீரும் கண்ணீரும்' என்ற சிறுகதைத் தொகுதிக்காகப் பெற்றவர் டொமினிக்ஜீவா. அத்தோடு இலக்கியவாதிகளுக்கு வழங்கப்படும் உயர் அரசவிருதுகளான 'சாஹித்திய இரத்தினா', 'தேசத்தின்கண்' ஆகிய விருதுகள் உட்பட அதிக விருதுகளைப்பெற்ற இலக்கியவாதி என்ற பெருமைக்கும் உரியவர் டொமினிக் ஜீவா.

கனடிய தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இயல் விருது பெற்ற டொமினிக் ஜீவாவை ஞானம் பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தி மகிழ்கிறது.

ஞானம்–171 (ஆகஸ்ட் 2014)

புரிதல்

✦ அதிக முஸ்லிம் எழுத்தாளர்களை உருவாக்கிய பெருமை 'மல்லிகை" இதழுக்கு உண்டு என ஆசிரியர் அவர்கள் கூறியுள்ளதை நான்மறுக்கவில்லை. என்றாலும் கூடுதலான முற்போக்கு முஸ்லிம் எழுத்தாளர்களை உருவாக்கிய பெருமை ஏறக்குறைய ஐந்து தசாப்த காலங்களுக்கு முன்வெளிவந்த 'இன்ஸான்' என்ற வார ஏட்டையே சாரும். சோஷலிச சிந்தனையுள்ள- அபூதாலிப் அப்துல் லரீப் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த அப்பத்திரிகையானது அரசியல் சார்பான ஏடாக இருந்தாலும் கலை, கலாசார, இலக்கியங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கியது.

–பாணந்துறை எம். பி. எம். நிஸ்வான் (ஞானம்172 செப்டெம்பர்2014)

23



ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம்

“ஞானம்’ சஞ்சிகையானது இதழியல்சார் தார்மீகக் கடமையுடன், ஈழத் தமிழினத்தின் இலக்கியக் குரலாக 2000ஆம் ஆண்டுமுதல் வெளிவரத் தொடங்கியது.

தமிழியலில் நாட்டங்கொண்ட அனைவரும் ஏற்றுப் பயன்கொள்ளும் விதத்தில் காலத்துக்குக் காலம் ஞானம் பலதரப்பட்ட இலக்கியப் பங்களிப்புகளை வழங்கிவந்துள்ளது. அவற்றுள் முக்கியமானதாக ஞானத்தின் சிறப்பிதழ் வெளியீடுகள் அமைந்துள்ளன என்பதை அனைவரும் அறிவர்.

ஈழத் தமிழினத்தின் உரிமைக்கான போர் உக்கிரம்பெற்று விளங்கிய காலகட்டத்தில் வெளிவரத் தொடங்கிய ஞானம், தனது 50ஆவது இதழை இலக்கியத்தரம்மிக்க பொன்மலராகவும், 100ஆவது இதழை ஈழத்து நவீன இலக்கியச் சிறப்பிதழாகவும், 150ஆவது இதழை ஈழத்துப் போர் இலக்கியச்

சிறப்பிதழாகவும் வெளியிட்டது. தற்போது இந்த 175ஆவது இதழை 'ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம்' என்னும் மகுடத்தில், சிறப்பிதழாக வெளியிடுகிறது.

தமிழர் புலம்பெயர்ந்து கண்டங்களெங்கும் வாழ்வின் இருப்பைவேண்டி அலைந்ததும், உழன்றதும் ஈழத்தில் இடம்பெற்ற பெரும்போரினாலேதான் நிகழ்ந்தது. எம்ம வர்களின் புலம்பெயர்வு அவர்கள் தமிழ் வாழ்வின்மீது கொண்ட தீராப்பெருவிருப்பால் 'புலம்பெயர் இலக்கியம்' என்ற மகுடத்தில் தமிழியலை அகலச்செய்தது. ஈழத்தமிழினம் தமிழியலுக்கு அளித்த இலக்கியப் பெருங்கொடையைப் பாதுகாப்பதும் ஆவணப்படுத்துவதும் நமது வரலாற்றுக்கடமை. வருமொரு பெருங்காலத்துத் தமிழ்ச்சந்ததிக்கு எப்போதோ அளிப்பதற்காய் காலத்தின் கரங்களில் இப்போதே நாம் ஆக்கி அளிப்பதுதான் 'ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம்' எனும் இப்பெருந்தொகுப்பு.

போர் இலக்கியமும் புலம்பெயர் இலக்கியமும்

போர் இலக்கியமும் புலம்பெயர் இலக்கியமும் ஒரே சூலில் கருக்கொள்ளும் இரட்டைக் குழந்தைகள்.

போர் இலக்கியம்

உலக வரலாற்றில் எங்கெங்கெல்லாம் போர்கள் இடம்பெற்றனவோ அங்கெல்லாம் போர் இலக்கியங்களும் புலம்பெயர் இலக்கியங்களும் தோன்றியிருக்கின்றன. முதலாம் உலக மகாயுத்தம், இரண்டாம் உலக மகாயுத்தம் ஆகியவற்றின் விளைவுகள் மட்டுமன்றி அதன்பின்னர் உலகெங்கும் நடைபெற்ற பல புரட்சிகளின்போதெல்லாம் இத்தகைய இலக்கியங்கள் தோன்றியுள்ளன. பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்ய இலக்கியங்களில் இத்தகைய இலக்கியங்களே பிரசித்தி பெற்றன.

போர் இலக்கியம் என்ற தனியான பகுப்புமுறை முதலாம் உலக மகாயுத்தத்திலிருந்தே ஆரம்பமாகியது. முதலாம் உலக மகாயுத்தத்தில் ஈடுபட்ட அமெரிக்க, பிரித்தானிய படைகளில்

கடமையாற்றிய படைவீரர்களில் சிலர் தமது அனுபவங்களை இலக்கியங்கள் ஆக்கினர். இவை 'போர் இலக்கியம்' (War Literature) என்றே வழங்கப்படுகின்றன.

போரிலக்கியங்களின் முக்கிய பரிமாணம் அவை போரின் சாட்சியங்களாக அமைவதுதான். போர்க்காலத்தில் இடம்பெற்ற பெரும்பாலான விடயங்கள் போர் இலக்கியங்கள் மூலமே வெளிக்கொணரப்படுகின்றன. அவை போர்க்கால நிலைமைகளை வெளியுலகிற்கு தெரியப்படுத்துவதோடு எதிர்காலச் சந்ததியினருக்கும் கையளிப்பனவாய் அமை கின்றன. காலங் கடந்துநின்று மக்களின் துயரங்களையும் இழப்புகளையும் வெளிப்படுத்தி உலகின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பியவண்ணம் யுத்தத்தின் சாட்சியங்களாக அமை கின்றன.

புலம்பெயர் இலக்கியம்

போர் இடம்பெறும் வேளையில் உள்நாட்டில் இருப்பது தமது உயிர்ப் பாதுகாப்பிற்கு ஏற்றதல்ல என்று அஞ்சிப் பல்வேறு நாடுகளுக்குச் சிதறுண்டு சென்றவர்கள் தமது நாட்டினைப் பிரிந்துசென்ற ஏக்கத்தினையும் சென்றடைந்த நாடுகளில் தமக்கு ஏற்பட்ட துன்பம் நிறைந்த அனுபவங்களையும் பதிவுசெய்யும் இலக்கியங்கள் புலம்பெயர் இலக்கியங்கள் என வகைப்படுத்தப்பட்டன. இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஹிட்லரின் நாசிப்படைகள் ஜேர்மனியில் மேற்கொண்ட யூத இன அழிப்புக் காரணமாக யூதர்கள் தமது உயிரைக் காப்பாற்ற உலக நாடுகள் பலவற்றிற்கும் சிதறிப்போனார்கள். தங்களின் அடையாளத்தை மீட்கவும் தங்களுக்கு ஒரு நாடு இல்லையென்றும் பேசிய அந்தப்பின்னணியைக் குறிக்கும் சொல்லாக Diaspora என்ற சொல் ஆங்கிலத்தில் உபயோகிக்கப்படுகிறது.

Diaspora என்பது Dispersion எனும் கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்தது. புலம்பெயர் இலக்கியத்தைச் சிலர் Exile Literature, Expatriate Literature, Emigrant Literature என்றெல்லாம் குறித்தாலும் Diaspora Literature

என்பதே பெருவழக்காக உள்ளது. தமிழில் புகலிட இலக்கியம், புலம்பெயர் இலக்கியம், புலச்சிதறல் இலக்கியம், அலைந்துழல்வு இலக்கியம், எனப் பல வாறாக அழைத்தாலும் 'புலம்பெயர் இலக்கியம்' என்பதே நிலைபேறாக்கம் பெற்றுள்ளது.

1948இலும் 1967இலும் நடந்த யுத்தங்களினாலும் பலஸ் தீனப் பிரச்சினைகளாலும் பெருந்தொகையான பலஸ்தீன மக்கள் அகதிகளாகப் புலம்பெயர்ந்தனர். இந்த மக்களின் பலஸ்தீன அரபு இலக்கியங்களும் புலம்பெயர் இலக்கிய வகை சார்ந்தவையே.

ஈழத்தமிழரின் புலம்பெயர் இலக்கியமும் இவ்வகைமை சார்ந்த எழுத்துக்களே.

தமிழர்களின் புலம்பெயர்வு

தமிழர்களின் புலம்பெயர்வு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகால வரலாற்றைக் கொண்டது.

சங்க காலத்தில் ஏற்பட்ட புலம்பெயர்தலை புறநா னூற்றுப் பாடல்களில் காண்கிறோம். போர் காரணமாகப் பிற இடங்களுக்குச் சென்றதை முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை ஆகிய இலக்கியங்களில் காணலாம். ஆற்றுப்படை நூல்கள் பெரும்பாலும் புலம்பெயர் மக்களைப் பற்றியதாக இருக்கிறது.

பட்டினப்பாலை என்னும் நூலில் பூம்புகார் நகரானது வெளிநாடுகளிலிருந்து வந்த "புலம்பெயர் மாக்கள் கலந்தினிது உறையும்' (அடி:215) நகராகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'அவண் உறை முனிந்த ஒக்லொடு புலம்பெயர்ந்து' என்று நற்றிணை கூறுகிறது.

'கலம்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்' எனக் கடலாடு காதையில் (வரி - 136) இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்நாட்டில் புலம்பெயர்ந்து வாழ்ந்ததாக அவரது பெயரில் உள்ள அடைமொழி எமக்குக் காட்டுகிறது.

இவை பழந்தமிழ் இலக்கியங்களில் நாம் காணும் புலம்பெயர்வு பற்றிய செய்திகள்.

தமிழர்களின் அடுத்தகட்டப் புலம்பெயர்வு 18, 19ஆம் நூற்றாண்டுகளில் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றது. தமிழகத்திலிருந்து தமிழர்கள் புலம்பெயர்ந்து மிகுதியாக இலங்கை, மலேசியா, பர்மா, இந்தோனேசியா, தென் ஆபிரிக்கா, பீஜித்தீவுகள், மொரீஷியஸ், ரீயூனியன் முதலிய நாடுகளுக்கு ஒப்பந்தத் தொழிலாளர்களாகத் தேயிலை, இறப்பர், கரும்புத் தோட்டங்களுக்குப் பெருந்தொகையாக அழைத்துச் செல்லப்பட்டனர். சிறுதொகையினர், இந்நாடு களுக்கு வியாபாரத்தின் பொருட்டும் சென்றனர்.

ஈழத் தமிழர்களின் முதலாவது புலம்பெயர்வு மலாயாவை நோக்கியதாக 1870இல் அமைந்தது. இது பெரும்பாலும் பொருளாதார நோக்கம் கொண்டதாக இருந்தது. இப்புலப் பெயர்வானது உலகமகாயுத்த காலம்வரை நீடித்தது. அதையொட்டிய காலப்பகுதியில் தமிழ் மொழியைப் பேண எண்ணியவர்களும் தமிழ் மொழிப்புலமை பெற விழைந்தோரும் தமிழ் நாட்டிற்குப் புலம்பெயர்ந்து சென்றனர். சி.வை. தாமோதரம்பிள்ளை, நா. கதிரைவேற்பிள்ளை, காசிவாசி செந்திநாதையர் உள்ளிட்ட பல தமிழ்ப் புலமையாளர் அவ்வாறு சென்றதை அறியமுடிகிறது. இது புலமைத்துவம்சார் புலம்பெயர்வாக அமைந்தது.

1960களில் அடுத்தகட்டப் புலம்பெயர்வு நிகழ்ந்தது. 1956இல் சிங்களமொழி மட்டுமே ஆட்சிமொழி என்ற சட்டம் இலங்கையில் இயற்றப்பட்டபோது, ஆங்கிலப்புலமையுடைய கல்விகற்ற சமூகத்தினர், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வழக்கறிஞர்கள், எழுது வினைஞர்கள் போன்ற தொழில்களைப் பெற்று ஆங்கில நாடுகளான பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் சென்றனர்.

ஈழத்தமிழரின் அடுத்தகட்டப் புலம்பெயர்வு 1980களின் பின்னர் தொடங்கியது.

1974இல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாடு துயரில் முடிந்தது. பின்னர் 1977இலும் 1983இலும்

இடம்பெற்ற இனவன்முறைகளும் தமிழர்களின் வாழ்வில் துயரம் நிறைந்ததாகவே அமைந்தன. இதன்போதே பெரும் அலையாக மேற்கு நாடுகளுக்கு இளைஞர்கள் புலம்பெயரத் தொடங்கினார்கள். இலங்கையில் கூர்மையடைந்து வந்த இனப்பகை காரணமாகப் போராளி அமைப்புகளுடன் பெருமளவான தமிழ் இளைஞர்கள் இணைந்து செயற் பட்டபோது இலங்கை அரச படைகளால் தேடப்பட்ட நிலையிலும், கைது, சித்திரவதை என்ற நிலையிலும் புலம்பெயரவேண்டியோராய் ஆயினர். இப்புலம்பெயர்வுக் குள்ளானவர்களில் பெரும்பான்மையானோர் ஏதோ ஒரு காரணத்துக்காக தமிழ் சம்பந்தமான பிரச்சினையால் புலம் பெயர்ந்தவர்கள். அதில் சென்றவர்களில் 75 சதவீதமானவர்கள் இளைஞர்கள். அவர்கள் ஏதோ ஒருவகையில் போராட்டத்துடன் சம்பந்தப்பட்டு, சம்பந்தப்பட்டவர்களோடு தொடர்புபட்டு இந்தச் சூழலிலிருந்து விலகவேண்டுமென புலம்பெயர்ந்தவர்கள்.

தமிழர்களின் முன்னைய புலம்பெயர்வுகளிலிருந்தும் மேற்குறிப்பிட்ட 80களுக்குப் பின்னரான ஈழத்தமிழர்களின் புலம்பெயர்வானது தனித்துவமானது. புலம்பெயர் இலக்கியத்திற்கான பொருட்பரப்பைக்கொண்டு அமைவதும் இதுவே!

80களுக்குப் பின்னர் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தோர் பேணிய 'தமிழர்' அடையாளம்

80களிலும் அதற்குப் பின்னரும் புலம்பெயர்ந்தவர்கள் தாம் புலம்பெயர்ந்த நாடுகளில் காட்டிய சுய அடையாளப் பேணுகை என்பது அதற்குமுன்னைய காலகட்டங்களில் புலம்பெயர்ந்தவர்களின் அடையாளப் பேணுகையிலிருந்து பெரிதும் மாறுபட்டது. 80களுக்கு முன்னர் புலம்பெயர்ந்தவர்கள் 'இலங்கையர்' என்ற அடையாளத்தைக்காட்ட, 80களின் பின்னர் புலம்பெயர்ந்தவர்கள் - இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இருந்து புலம்பெயர்ந்தமையால் தமது இன அடையாளமாகிய 'தமிழர்' என்பதை அதிகம் முதன்மைப்படுத்தினர். இதன் காரணமாகத்தான் 80களின்

பின்னரான Tamils Diaspora என்பது அதிகம் இனத்துவ அடையாளம் (Ethnic Identity) கொண்டதாக அவதானிப்புப் பெறுகிறது. நாடற்றவன் என்ற நிலையில் புலம்பெயர்ந்த தமிழர்கள் தம்மை இலங்கையராகக் காட்டாது தமிழர்களாக அடையாளப்படுத்த முனைந்தமை முக்கியமான ஒரு விடயமாகும்.

ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம்

புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்ற பதப்பிரயோகத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்திய பெருமை ஈழத்தின் மூத்த எழுத்தாளரான அமரர் எஸ். பொன்னுத்துரை அவர்களையே சாரும். 1989இல் இந்தக் கனதியான சொற்றொடரை அவர் மெல்பனில் நடந்த இலக்கிய விழாவில் முன்மொழிந்தார். இச் சொற்றொடர் தமிழிலக்கியப் பரப்பில் முன்னர் ஒருபோதும் பயிலப்படவில்லை என்பது இங்கு கவனத்துக்குரியது.

புலம்பெயர்ந்தோர் இலக்கியம்தான் 21ஆம் நூற்றாண்டின் சர்வதேசத் தமிழ் இலக்கியத்திற்குத் தலைமை தாங்குமெனத் தன் குரலை ஓங்கி ஒலித்தார், எஸ்.பொ!.

தமிழ் நாட்டிலிருந்து வெவ்வேறு காரணங்களால் புலம்பெயர்ந்து சென்றவர்கள் படைக்கும் இலக்கியங்களையும் புலம்பெயர்ந்தோர் இலக்கியம் எனக்கொள்ளப்படல் வேண்டும் என்ற வாதமும் சிலரால் முன்வைக்கப்படுகிறது. ஆனாலும் ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம் அவ்விலக்கியங்களிலிருந்து வேறுபட்டது; தனித்துவமானது. அதன் உள்ளடக்கம் வேறானது என்பதை இங்கு கருத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

ஈழத்தமிழர்களின் புலம்பெயர்வு தனியே புகலிடம் கோரலுக்கு உரிய ஒன்றாக மட்டுமல்லாமல் புகலிடம் கோரலின் ஊடாக சுய அடையாளப் பேணுகையையும் வலியுறுத்துவதாக இருந்தது. பனிபடர்ந்த நாடுகளுக்கு தூக்கி வீசப்பட்ட தமிழ்மக்கள் தமது இருப்புக்கான எத்தனிப்பை மொழியினூடும் இலக்கியத்தினூடும் சமயம் முதலிய பண்பாட்டு அம்சங்களோடும் ஏற்படுத்தலாம் என்று எண்ணத் தலைப்பட்டதன் விளைவாகவும் அவர்களது அனுபவத்தின்

விசாலத்தைப் பதிவுசெய்வதற்கான முயற்சியாகவும் படைப்பிலக்கியத்தைக் கண்டடைந்தனர். தாம் வீசப்பட்ட கண்டங்களில் தமது வேரை மொழி முதலிய பண்பாட்டு அம்சங்களினூடாக ஸ்திரப்படுத்திக்கொள்ள முனைந்தனர்.

இவர்கள் தாம்சென்றடைந்த நாடுகளில் தமிழ் அடையாளத்துடன் வாழ்ந்து தமது அனுபவங்களையும் எண்ணங்களையும் படைப்புக்களாக வெளிக்கொணரத் தொடங்கினர். அவர்களில் பலர் தமிழைத்தவிர வேறு எந்த மொழிகளும் தெரியாதவர்களாக இருந்தனர். அவர்களது படைப்பிலக்கியங்களில் ஈழத்தமிழ் மொழிப்பிரயோகங்களே மேலோங்கிநின்றன. ஈழத்து இலக்கிய வரலாற்றுப் பரப்பில் வேறெந்தக் காலத்திலும் இல்லாதவாறு பெருந் தொகையான இலக்கியப்படைப்பாளிகள் தோன்றியது இக்காலகட்டத்திலேதான். பெருந்தொகையான இலக்கியச் சிற்றேடுகள் தோன்றியதும் இக் காலகட்டத்திலேதான். இலக்கியப் படைப்பு முறைகளில் இலக்கண விதிமுறைகள் உடைக்கப்பட்டு உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் புதியவகை இலக்கியப் படைப்புமுறைகள் அறிமுகமாகின. எவ்வித சுயதணிக்கைகளுமின்றி சுதந்திரமாகப் புலம்பெயர் இலக்கியவாதிகள் தமது கருத்துக்களை வெளியிட்டனர். ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்தின் நீட்சியாக அவை அமைந்தன.

புலம்பெயர் படைப்புக்களில் பயண அவலங்கள், தாயக நினைவு, புலம்பெயர் வாழ்வின் அவலம், கலாசாரக் கலப்பு மற்றும் முரண்பாடு, அகதிநிலை, நிறவாதம், புதிய சூழல்சார் வெளிப்பாடுகள், பெண்களின் விழிப்புணர்வு மற்றும் விடுதலை, அனைத்துலக நோக்கு, அரசியல் விமர்சனம் முதலியவற்றைப் பிரதான உள்ளடக்கக் கூறுகளாக அவதா னிக்க முடியும்.

புலம்பெயர் தமிழர்கள் தமது அனுபவ நிலையை வெளியிடும் களமாகச் சஞ்சிகைகளைக் கொண்டிருந்தனர். குழுநிலைப்பட்ட வாசிப்புக்காகத் தமக்குள்ளேயே கையெழுத்துச் சஞ்சிகை களை நடாத்தியதிலிருந்து புலம்பெயர் இதழியற்செயற்பாடு

ஆரம்பிக்கின்றது. 1981 நவம்பர் மாதம் பிரான்சிலிருந்து வெளியாகிய 'தமிழ்முரசு' என்னும் சஞ்சிகையே முதற் சஞ்சிகையாக அறியப்படுகிறது. எனினும் மேற்கு ஜேர்மனியில் இருந்து 1985இல் மாத இதழாக வெளிவந்த 'தூண்டில்' சஞ்சிகையே இதழுக்குரிய கட்டமைப்புடன் வெளிவந்த கலை இலக்கியச் சஞ்சிகை என்றும் கருதப்படுகிறது. புலம்பெயர் நாடுகளில் அச்சுவடிவத்தில் 170ற்கும் மேற்பட்ட சஞ்சிகை மற்றும் பத்திரிகைகள் வெளிவந்தமை தமது படைப்புகளை வெளியிடும் மிகப்பெரிய வெளியீட்டுக் களமாகப் புலம்பெயர் படைப்பாளிகளுக்கு அமைந்தது. அதுமட்டுமன்றி விரிந்து பரந்த அவர்களது அலைந்துழலும் அனுபவங்களை வெளியிடுவதற்கு ஏற்ப விரிந்து பரந்த ஒரு பிரசுரகளம் இருந்தமையும் அவதானிக்கத்தக்கது. இவற்றில்தான் கவிதைகள், கதைகள், தொடர்கதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள், பத்தி எழுத்துக்கள் முதலிய பலவும் வெளிவந்தன.

ஐரோப்பியத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் 1986இல் சில படைப்பாளர்களின் 11 சிறுகதைகளை 107 பக்கங்களைக் கொண்ட நூலாக 'மண்ணைத் தேடும் மனங்கள்' என்ற பெயரில் தொகுத்து வெளியிட்டிருந்தது. இவ் ஆண்டிலேயே பார்த்திபனின் 4 சிறுகதைகளைக் கொண்ட 'நிஜங்கள்' என்ற தொகுப்பைத் தென்னாசிய நிறுவனம் வெளியிட்டது. இவையிரண்டினையும் ஈழத்துப் புலம்பெயர் இலக்கியத்தின் முதல் சிறுகதைத்தொகுப்புகளாகக் குறிப்பிடலாம். எஸ். பொ. மற்றும் இந்திரா பார்த்தசாரதி தொகுத்த 'பனியும் பனையும்' என்ற சிறுகதைத்தொகுப்பு 39 படைப்பாளிகளின் கதைகளைத்தாங்கி 1994இல் வெளிவந்தது. பல நாடுகளிலும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் பல்வேறு அனுபவங்களைப் புலப்படுத்தும் ஒரு குறுக்குவெட்டுமுகத் தோற்றமாய் இத்தொகுப்பு அமைந்தமை சிறப்பிற்குரியது.

70களில் புலம்பெயர்ந்த இராஜேஸ்வரி பாலசுப்பிர மணியத்தின் 'ஒரு கோடை விடுமுறை' என்ற நாவல் 'அலை' வெளியீடாக யாழ்ப்பாணத்தில் 1981இல் வெளிவந்தது.

எனினும் புலம்பெயர் தேசத்திலிருந்து வெளிவந்த முதலாவது நாவல் என்ற வகையில் 1987இல் வெளிவந்த பார்த்திபனின் 'வித்தியாசப்படும் வித்தியாசங்கள்' என்ற நாவல் அமைகிறது.

கவிதையைப் பொறுத்தவரையில் அவை சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளனவெனினும் புலம்பெயர் நாட்டில் இருந்து வெளிவந்த முதற்தொகுப்பு என்றவகையில் 7 கவிஞர்களின் 23 கவிதைகளை உள்ளடக்கி நோர்வே சுவடுகள் பதிப்பகம் 1989இல் வெளியிட்ட 'துருவச் சுவடுகள்' என்ற தொகுதியைக் குறிப்பிடலாம்.

மேற்குறிப்பிட்ட யாவும் ஆரம்பகால முயற்சிகள். இதன்பின்னர் இற்றைவரை நூற்றுக் கணக்கான புலம்பெயர் இலக்கியப் படைப்புகள் நூலுருவம் பெற்றுள்ளன.

இவை மட்டுமன்றி ஆற்றுகைக் கலைகள், குறும்படங்கள், முழுநீளப் படங்கள், வானொலிகள், தொலைக்காட்சிகள் முதலிய ஈழத்தமிழரின் முயற்சிகளையும் புலம்பெயர் தேசத்தில் அவதானிக்கமுடிகிறது.

அத்தோடு புலம்பெயர் நாடுகளில் பல்வேறுபட்ட இலக்கிய அமைப்புகளூடாகவும் இலக்கிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

இலக்கியச் சந்திப்பு மலர்கள், புனைவுசாராப் படைப்புகள், மொழிபெயர்ப்பு முயற்சிகள், இலக்கியத் தொகுப்பு முயற்சிகள் எனப் பன்முகத்தன்மையான இலக்கியப் பண்பாடொன்றை புலம்பெயர் நாடுகளில் அவதானிக்க முடிகிறது.

தொகுப்பு முயற்சிகளாக, 'கிழக்கும் மேற்கும்', 'இன்னுமொரு காலடி', 'யுகம் மாறும்', 'கண்ணில் தெரியுது வானம்' ஆகிய நான்கு தொகுப்புகளை லண்டன் தமிழர் நலன்புரிச் சங்கத்தினூடாக பத்மநாபஐயர் வெளிக் கொணர்ந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவை தவிர 'தோற்றுத்தான் போவோமா', 'இனியும் சூல்கொள்', 'ஊடறு', பெண்கள் சந்திப்பு மலர்கள், இலக்கியச்சந்திப்பு மலர்கள், 'திருச்சி புலம்பெயர்ந்த தமிழர் நல மாநாட்டு மலர்', யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 41ஆவது இலக்கியச் சந்திப்பு மலர் 'குவர்னிகா' முதலியவை

வெளிவந்துள்ளன. இவற்றில் புலம்பெயர் படைப்பாளிகளின் கவிதை, கதை, கட்டுரை முதலியவை இடம்பெற்றன. சர்வதேச ரீதியாக இம்மலர்கள் புலம்பெயர் தமிழர்களின் பண்பாட்டு நெருக்கடியையும் அவர்கள் நிலைநிறுத்த முனையும் சுய அடையாளத்தையும் படைப்புக்களினூடாகப் புலப்படுத்தின.

அச்சு ஊடகங்களிலிருந்து படைப்பிலக்கியத்தின் பிரசுரகளத்தை மின்னியல் ஊடகத்திற்கு மாற்றியபெருமை புலம்பெயர் தமிழர்களுக்கேயுரியது. இணைய இதழ்கள் / மின்னிதழ்கள் (e-journals / e-zines), இணையத்தளங்கள் (Website), வலைப்பூக்கள் (Blogspot) முதலியவற்றினூடாகப் பலர் தமது படைப்புகளை வெளியிட்டு வருகின்றனர். இத்தகைய மின்னியல் ஊடகங்களினூடாகப் புலம்பெயர் இலக்கியம் பற்றிய மிகப்பெரும் உரையாடல் வெளியை ஈழத்தமிழர்கள் ஏற்படுத்தினர். கணத்துக்குக் கணம் நிகழும் மாறுதல்களை, வெளிவரும் படைப்புகளை, சிந்தனைகளை மின்னியல் ஊடகங்களினூடாக பகிர்ந்து உலகத்தமிழ் இலக்கியப் பரப்பில் புலம்பெயர் இலக்கியத்துக்கான வகிபாகத்தை உணரச் செய்தனர்.

புலம்பெயர் படைப்பாளிகளினுடைய படைப்புக்களைப் பதிப்பித்து வெளியிட்டு அவர்களுக்கான இலக்கிய அந்தஸ்த்தை ஏற்படுத்தும் வகையில் பலர் பதிப்பகங்களை உருவாக்கினர். இதன் முன்னோடியாக எஸ்.பொ. அவர்களைக் குறிப்பிடலாம். அவரின் 'மித்ர' பதிப்பகம், புலம்பெயர் படைப்புகளை பரவலாக்கம் செய்து அவற்றுக்கான பரந்த வாசக தளத்தை உருவாக்கிக் கொடுத்தது. இதனைத் தொடர்ந்து பலர் பதிப்பகங்களை உருவாக்கி இம்முயற்சியில் ஈடுபட்டனர்.

புலம்பெயர் தமிழர்களின் நூல்கள் மற்றும் சஞ்சிகைகளை ஆவணப்படுத்தியும் காட்சிப்படுத்தியும் சிலர் பங்களிப்பு செய்துவருகின்றனர். அவர்களில் நூலகர் என். செல்வராஜா, முல்லை அமுதன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

புலம்பெயர்ந்த படைப்பாளிகளில் சிலர் புகலடைந்த நாடுகளின் மொழியை, பண்பாட்டை, வாழ்வியல் அம்சங்களை

உள்வாங்கி மொழிபெயர்ப்பு முயற்சியிலும் ஈடுபட்டனர். இது தமிழ்நிலைப்பட்ட அனுபவம் வேற்றுமொழிக்கு கையளிக்கப்படுவதும் வேற்றுமொழிநிலைப்பட்ட அனுபவம் தமிழ்மொழிக்கு கையளிக்கப்படுவதுமான இலக்கிய நிலைப்பட்ட அனுபவப்பகிர்வாகும். இதனால் தமிழ்ப் படைப்புலகின் எல்லை புதிய தளங்களை நோக்கி விரிந்து செல்லக்கூடிய சாத்தியம் ஏற்பட்டது. தமிழகம், ஈழம் என்ற புவியியல் மற்றும் அனுபவ எல்லைகளைத் தாண்டிய சர்வதேசமயப்பட்ட தமிழ்ப்படைப்புலகப் பரிமாணத்தினை தமிழ் எட்டியது.

இவர்கள் அனைவரதும் பங்களிப்பும் ஈழத்துப் புலம்பெயர் இலக்கியத்தில் வளம் சேர்த்தமையை நாம் மறந்துவிடலாகாது.

புலம்பெயர்ந்த தமிழர்களின் இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறையினர் படைப்புச் செயற்பாட்டில் ஈடுபடும்போது தாம் வாழும் நாட்டின் புவியியல் பண்பாட்டு அமைவுகளுக்கு ஏற்ப தமது அனுபவத்தை தமிழில் படைப்புக்களாக வெளியிட நேர்கையில் அத்தமிழ் இலக்கியப் படைப்புக்கள் குறித்த நாட்டின் பெயர்கொண்டு அழைக்கப்படும். அதாவது கனடியத் தமிழ் இலக்கியம், ஜேர்மனியத் தமிழ் இலக்கியம், அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கியம் என்றவாறு அவை அமையும்.

இதழின் கட்டமைப்பு

இந்தச் சிறப்பிதழானது கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், பத்திகள், ஓவியங்கள், ஒளிப்படங்கள், நேர்காணல்கள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ளது. புலம்பெயர் அனுபவத்தின் பன்முகத்தன்மையை உள்ளடக்கிய 125 கவிஞர்களின் கவிதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இத் தொகுப்பில் அடக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஞானத்தில் ஏலவே வெளிவந்த 13 புலம்பெயர் கவிஞர்களின் கவிதை களும் புலம்பெயர் வாழ்வனுபவம் மற்றும் கவித்துவச் சிறப்புக் காரணமாக இச்சிறப்பிதழில் மீள்பிரசுரமாகின்றன.

தேர்ந்தெடுத்த 85 புலம்பெயர் சிறுகதைகள் இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு முகத்தைக் காட்டுவதாய், புலம்பெயர் வாழ்வின் ஒவ்வொரு அனுபவத்தைப் பகிர்வதாய் அமைந்துள்ளது. உள்ளடக்க மற்றும் உருவ அமைதிகளால் சிறந்து நிற்கும் கதைகளே வகைமாதிரிக்காக இத்தொகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. இக்கதைகளில் பல வரலாற்றைப் பதிவு செய்தலின் தேவைகருதி இங்கு மீள்பிரசுரம் செய்யப் படுகின்றன. இவற்றுள் ஞானத்தில் ஏலவே வெளிவந்த புலம்பெயர் படைப்பாளிகள் 26 பேரின் சிறுகதைகள் அவற்றின் முக்கியத்துவம் கருதி இச்சிறப்பிதழில் மீள்பிரசுரமாகின்றன.

இந்த இதழில் இடம்பெறும் 50 கட்டுரைகளும் இச்சிறப்பி தழுக்காகவே எழுதப்பெற்றவை. புலம்பெயர் இலக்கியம், அதன் வரலாறு, புலம்பெயர் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் புனை கதைகள், கவிதைகள், ஆய்வுகள், திரைப்படங்கள் முதலியவை பற்றியவையாகக் கட்டுரைகள் அமைந்துள்ளன. புலம்பெயர் தேசங்களில் நடைபெற்ற இலக்கிய முயற்சிகள் தொடர்பாக ஒவ்வொரு நாட்டினதும் இலக்கிய முயற்சிகள் பற்றிய கட்டுரைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

மேலும் கலை இலக்கியம் சார்ந்த இருவரின் நேர்காணல் களும் ஓவிய/ ஒளிப்படக் கலைஞர்களின் 22 படைப்புக்களும் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன.

இத்தொகுப்பின் முக்கியத்துவம்

'ஞானம்' சஞ்சிகையின் முதலாவது இதழிலிலிருந்தே தொடர்ச்சியாகப் போர் இலக்கியம், புலம்பெயர் இலக்கியம் சார்ந்த எழுத்துக்களுக்கு நாம் முன்னுரிமை கொடுத்து வந்துள்ளோம். இவ்விலக்கியங்கள் இருபதாம் நூற்றாண்டில் ஈழத்தமிழரால் தமிழிலக்கியத்துக்கு வழங்கப்பட்ட இலக்கிய வகைமைகள் ஆகும். ஈழத்திலிருந்து வெளிவருகின்ற இலக்கிய சஞ்சிகை என்ற நிலையில் இவற்றைத் தொகுப்பாக்கித் தமிழ் உலகிற்கு அளிக்க வேண்டிய தார்மீகக் கடமை எமக்கிருப்பதாக உணர்ந்தோம். அதன்காரணமாகவே ஞானம்

சஞ்சிகையின் 150ஆவது இதழை நாம் ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழாக வெளிக்கொணர்ந்தோம். தற்போது 175ஆவது இதழ் ஈழத்துப் புலம்பெயர் இதழாக வெளிக் கொணர்கின்றோம்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுதப்படும் இலக்கியங்கள் தொகுக்கப்படல்வேண்டும். தொகுக்கப்படாத இலக்கியங்கள் காலவெள்ளத்தில் அழிந்துபோகும். Anthology எனப்படும் இத்தொகுப்புமுறை சங்ககாலம் தொடக்கம் சமகாலம்வரை தமிழில் இருந்துவருவதை ஆதாரங்கள் காட்டிநிற்கின்றன. சங்ககாலத்து தொகைநூல்கள் தொடங்கி இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தொகுக்கப்பெற்ற பதினெண்சித்தர் பாடல்கள்வரை இரண்டாயிரம் ஆண்டுகளாக இடம்பெற்றுவரும் தொகுப்புமுயற்சிகளைத் தமிழிலே நாம் காணலாம்.

இத்தகைய பாரம்பரியத்திலே தொகுக்கப்பட்டதுதான் 'ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம்' என்னும் இப்பாரிய தொகுப்பாகும்.

எந்தவொரு தொகுப்பு முயற்சியும் நூற்றுக்கு நூறு வீதம் முழுமையடைவதில்லை என்பதை நாம் அறிவோம். இத்தொகுப்பின் முழுமையை நோக்கிய பயணத்தின் எல்லைக்கோட்டை அண்மிக்க 976 பக்கங்களுடன் முயற்சித்துள்ளோம் என்பதை நாம் இங்கு அடக்கத்துடன் பதிவு செய்கின்றோம்.

ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம் என்னும் இத்தொகுப்பிலே இருபதாம் நூற்றாண்டு ஈழத்தமிழரின் புலம்பெயர்வின் பின்னர் வெளிவந்த ஆரம்பகால இலக்கியங்களிலிருந்து இற்றைவரையான இலக்கியங்கள்வரை வகைமாதிரியான படைப்புகள் இடம்பெற்றுள்ளன.

புலம்பெயர் இலக்கியம் பற்றிய முழுமையான படைப்புலகப் பரிமாணத்தை இவ்விதழ் வழங்கும். உதாரணமாக, கவிதைகளை எடுத்துக்கொண்டால்:

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் தனித்தமிழிலான தலைப்பைக்கொண்ட கவிதையும், "ஒரு Academic இன் ஆதங்கம்" என்ற மொழிக்கலப்புடன்கூடிய தலைப்பிலான

கவிதையும், தமிழ் மொழிக்கூறுகளே இல்லாத “ஸ்கோல்!” என்னும் வேற்றுமொழியினாலான தலைப்பில் அமைந்த கவிதையும் உள்ளடங்கியமையைக் குறிப்பிடலாம்.

புலம்பெயர் சந்ததியினர் எதிர்காலத்தில் வேற்றுமொழிச் சூழலில் வாழ நேரிடுமெனினும் தமது மூதாதையரின் இலக்கிய வேர்களைத் தேடும்பொழுது அம்மூதாதையர்களின் இலக்கியச் சாட்சியமாக இத்தொகுதி காட்சியளிக்கும்.

ஈழத்தமிழன் தனது அடையாளத்தை மொழியிலும் இலக்கியத்திலும் பனியுறையும் நாடுகளில் தக்கவைத்தான் என்பதற்கான சான்றாக இத்தொகுதி நிலைபெறும்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தஞ்சம்கோரி பாதுகாப்பாக இருந்தார்கள் என்ற சாதாரண சூத்திரத்திற்கு அப்பால், தொழில் செய்து பணம் சேர்த்தார்கள் என்ற வாய்ப்பாட்டுக்கு அப்பால், தமிழ்மொழிக்கும் தமிழினத்திற்கும் தமிழிலக்கியத்திற்கும் எத்தகைய பணி செய்தார்கள் என்பதை இத்தொகுதி பறைசாற்றி நிற்கும்.

இணையத்தில் தமிழும் இலக்கியமும் உலாவர புகலிடத்தமிழர்கள் ஆற்றிய பங்களிப்பை இத்தொகுதி கூறிநிற்கும்.

நவீன தமிழ் அரசியல் சமூகப் பண்பாட்டு முகத்தை உலகவெளியில் தெரிவிக்கும் முதலாவது பெருஞ்சிறப்பிதழாக வெளிவரும் இவ்விதழ் கவிதைதொடக்கம் கதைவரையும் கல்வி தொடக்கம் கலைவரையும் அரசியல் தொடக்கம் சமூகம்வரையுமான புலம்பெயர் தமிழர்களின் பன்முகக் கலாசாரத்தை, பிறகலாசாரங்களினூடான தமிழின் ஊடாட் டத்தைக் காட்டிநிற்கும். எதிர்காலத்தில் புலம்பெயர் நாடுகளில் ஈழத்தமிழர்களின் இனவரைபை வரையத் தொடங்குவோருக்கு இலக்கிய மூலாதாரங்களில் ஒன்றாக இச்சிறப்பிதழ் அமையும். எல்லாவற்றுக்கும் மேலாக ‘புலம்பெயர் இலக்கியம்’ என்ற தமிழ் இலக்கிய வகைமையினை ஈழத்தமிழர் உருவாக்கினர் என்பதையும் உலகத் தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு ஈழத்தமிழர் இலக்கிய ஒளிபாய்ச்சினர் என்பதையும் இவ்விதழ் வலுவாகக் காட்டிநிற்கும்.

ஞானத்தின் நன்றிகள்

இந்தச் சிறப்பிதழில் மீள்பிரசுரம் செய்வதற்கென நாம் பலரிடம் சிறுகதைகளையும் கவிதைகளையும் கேட்டிருந்தோம். உரிய நேரத்தில் அவை எம்மை வந்துசேராத தால் அவற்றில் சிலவற்றை எம்மால் சேர்த்துக்கொள்ள முடியவில்லை. அதேபோன்று இச்சிறப்பிதழுக்கெனப் புதிதாக ஆக்கங்களை எழுதிய சிலரது படைப்புக்களையும் சேர்த்துக்கொள்ளமுடியவில்லை. எமது வேண்டுகோளை ஏற்று தமது படைப்புகளை அனுப்பிவைத்த அத்தனை படைப்பாளிகளையும் ஞானம் தலைசாய்த்து வணங்குகிறது.

இந்த ஈழத்துப் புலம்பெயர் இலக்கியச் சிறப்பதழை வெளியிடும் எண்ணத்தை நாம் வெளியிட்டபோது, கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் செ. யோகராசா அவர்கள் மிக்க ஆர்வத்துடன் இந்த இதழுக்கான பல ஆக்கங்களைப் தேடிப்பெற்று எமக்கு அனுப்பிவைத்தார்.

ஈழத்தமிழ் புலம்பெயர் இலக்கியத்தை ஆய்வு செய்துவரும் திரு. சு. குணேஸ்வரன், இந்தச் சிறப்பிதழுக்கெனப் பலரிடமிருந்து படைப்புகளைப் பெற்றுத்தந்ததுடன் இதழின் தயாரிப்பின்போது உடனிருந்து ஆலோசனை வழங்கிப் பலவழிகளிலும் எமக்கு உதவி புரிந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராகப் பணிபுரியும் திரு. செல்லத்துரை சுதர்சன் ஞானம் இலக்கியக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இந்த இதழுக்கென தமது சக விரிவுரையாளர்களிடமிருந்தும் சிறப்புத்துறை மாணவர்களிடமிருந்தும் கட்டுரைகளைப் பெற்றுத் தந்ததோடு இதழாக்கத்தின்போது கூடவிருந்து சகல வழிகளிலும் எமக்கு உதவியதோடு ஆக்கமும் ஊக்கமும் தந்தவர்.

இந்தச் சிறப்பிதழுக்கென இலண்டனில் இருந்து திருவாளர்கள் பத்மநாப ஐயர், இளைய அப்துல்லாஹ், நூலகர் என். செல்வராஜா, வவுனியூர் இரா உதயணன், டென்மார்க்கிலிருந்து வி. ஜீவகுமாரன் ஆகியோரும் ஆக்கங்களைப் பெற்றுத்தந்து உதவினர்.

இச்சிறப்பிதழின் ஆக்கங்களுக்கான ஓவியங்களை வரைந்து உதவியவர்கள் தவம், புஷ்பா, அமரர் கௌதமன் ஆகியோர்.

திரு. மா. குலமணி அவர்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ள சிறுகதைகளை மூலப்பிரதிகளுடன் ஒப்புநோக்கித் திருத்தங்களை மேற்கொள்ள உதவியவர்.

இந்தச் சிறப்பிதழுக்கான கணினி வடிவமைப்புச்செய்ய உதவியவர் திருமதி சுதர்சினி கோபிரமணன்.

இவர்கள் யாபேருக்கும் எமது இதயங்கனிந்த நன்றி என்றும் உரியது.

மேலும், இச்சிறப்பிதழில் சேர்த்துக்கொள்வதற்கென நாம் முன்னர் வெளிவந்த நூல்களிலிருந்தும், இலக்கியச் சஞ்சிகைகளிலிருந்தும், மாநாட்டு மலர்களிலிருந்தும், தொகுப்புக்களிலிருந்தும், இணைய இதழ்களிலிருந்தும் ஆக்கங்களைப் பெற்றுள்ளோம். அவ் ஆக்கங்களை எவற்றி லிருந்து பெற்றோம் என்ற விபரங்களை இயலுமானவரை படைப்புகளின் இறுதியில் குறிப்பிட்டுச் சம்பந்தப்பட்ட வர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளோம்.

ஞானம் இதழின் நிர்வாக ஆசிரியர் ஞா. பாலச்சந்திரன், ஞானம் இதழ்கள் ஒவ்வொன்றும் அழகோடும் இளமையோடும் மிளிரச்செய்து, இணையவழி உலகவலம்வர ஊக்கமுடன் உழைப்பவர். ஞானம் இதழின் முதுகெலும்பாக இருப்பவர். ஞானத்தின் நிமிர்வு அவரது உழைப்பு. இந்தச் சிறப்பிதழின் ஒவ்வொரு பக்கமும் அவரது உழைப்பின் கதைபேசும்.

ஞானம் 175 (டிசம்பர் 2014)

புரிதல்

✦ தங்களின் 'ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம்' என்ற மாபெரும் படைப்பு எங்களின் கைகளில் கிடைத்தது. பார்த்தவுடன் பிரமித்தோம். மகிழ்ச்சியடைந்தோம். இது ஒரு மிகப்பெரிய வேலைத்திட்டம். புதிய ஆக்கங்களுடன் எத்தனையோ எழுத்தாளர்களின் தொகுப்புகளை வாசித்து அதிலிருந்து சிறந்தவற்றை வடிகட்டி எடுத்து தொகுப்பாக்குதல் என்பது நீண்ட பயணங்களின் பெருமுயற்சி. தங்களின் இந்த முயற்சிக்கு காலமே நற்சான்றிதழை வழங்கும். இலக்கியம் என்பது காலத்தைப் பிரதிபலிப்பதாகும். இன்று நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கையின் பெரும் பகுதி இத்தொகுப்பில் பதிவாகி இருப்பதைப் பார்க்கும்போது தங்கள் இலக்கிய முயற்சியை நாம் மனதாரப் பாராட்டுகின்றோம். வரலாறுகள், இலக்கியங்கள் அந்தந்தக் காலங்களில் பதிவாகவேண்டும். இப்படி இருந்திருக்கலாம் என்று ஊகிப்பதற்குப் பெயர் வரலாறல்ல? இப்படித்தான் இருந்தது என்று அறுதியிட்டுக் கூறவேண்டும். நாம் வாழும் கால இலக்கியங்கள் வருங்காலத்தில் உண்மைகளைப் பேசவேண்டும். இது எங்கள் கடமையும் கூட. வரலாறுகளை இன்றுநாம் தேடிக்கொண்டிருக்கிறோம்.

தங்களின் இந்த முயற்சி வரலாற்று முக்கியம் வாய்ந்த தொன்றாகும். தமிழ் இனத்தையும், தமிழ் இலக்கிய உலகத்தையும் பெருமைப்பட வைத்திருக்கிறது. தங்கள் எண்ணத்திற்கும் செயற்பாட்டிற்கும் இனியும் பூரண வெற்றிகிடைக்கும். இதற்கான வாழ்த்துக்களை எமது எழுத்தாளர்சங்கம் மீண்டும் மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றது. எங்களைப் பொறுத்தமட்டில் இது எல்லாவற்றாலும் கனதியானது. தங்கள் முயற்சிக்கு உதவுமுகமாக எமது எழுத்தாளர் சங்கம் பத்துப்பிரதிகளை எழுத்தாளர் திரு. ஜீவகுமாரனிடம் இருந்து பெற்றுக்கொண்டது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம்.

தமிழ் எழுத்தாளர் சங்கம், யேர்மனி

– தலைவர் சிவராசா, செயலாளர் பொன். புத்திசிகாமணி.

ஞானம்–178 (மார்ச்–2015) 175 இலக்கியம்

✦ ஈழத்து இலக்கிய வரலாற்றில், 'ஈழத்துப் போர் இலக்கியம்', 'ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம்' என்ற இலக்கிய வகைமைகளை இந்த நூற்றாண்டில் இலக்கிய உலகிற்குக் கொண்டுவந்த பெருமை ஞானம் ஆசிரியர் டாக்டர். தி ஞானசேகரனையே சாரும். இந்த இலக்கியப் பதிவு ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் ஒரு பிரிவாக எதிர்காலத்தில் பேசப்படும் என்பதில் ஐயமில்லை. எதிர்காலச் சந்ததியினருக்காக, வாசகர்களுக்காக, இலக்கிய ஆய்வாளர்களுக்காக பல்கலைக்கழகங்களில் தேடலுக்காகத் தமது

முழுமூச்சையும் செலவிட்டு முன்முயற்சியாக இந்த ஆவணப்பதிவை முன்வந்து செய்திருப்பதானது ஞானம் ஆசிரியரது தீர்க்கதரிசன எண்ணக் கருவாகக் கொள்ளலாம். ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம் என்றால் என்ன? ஈழத்துப் போர் இலக்கியம் என்றால் என்ன? இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன? என்பதைப்பற்றி அவர் தனது நேர்காணலில் குறிப்பிட்டிருந்தார். ஞானம் 177ஆவது இதழில் இந்த நேர்காணல் இடம் பெற்றிருக்கிறது.. ஞானம் தனது 175 ஆவது இதழை ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம் என்ற வகைக்குள் உள்ளடக்கி 976 பக்கங்களில் கனதியான ஒரு சிறப்பிதழை வெளியிட்டு சாதனை படைத்திருக்கிறது. அதேபோன்று வடக்கு கிழக்கு உட்பட நாட்டில் இடம்பெற்ற போர் காரணமாக தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை இலக்கியமாக்கி அதனை ஞானம் தனது 150ஆவது இதழை ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழாக வெளியிட்டுப் பெருமை சேர்த்தது. இவ்விரண்டு ஆவணக் கோவைகளும் ஈழத்து இலக்கியத்துக்குக் கிடைத்த இலக்கிய வகைமைகளாகும். கடந்த 22-02-2015 அன்று கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் இந்த 'ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம்' வெளியீட்டு விழா நிகழ்வு இடம்பெற்றபோது, இந்த வெளியீட்டு வைபவத்தில் நான்கு தமிழ்ப் பேராசிரியர்கள் தமது கருத்துக்களைப்பதிவு செய்தனர். அறிஞர்கள், இலக்கியவாதிகள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளிகள் எனப்பலரும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலைநாடு, திருகோணமலை, கண்டி, உடப்பூர், மாவனல்லை, திக்வல்லை உட்பட நாட்டின் நாலாபுறம் இருந்தும் கொழும்புக்கு வந்து கலந்து கொண்டதை அவதானிக்க முடிந்தது. அந்த வகையில் ஞானம் சஞ்சிகைக்கு வாசகர்கள் மத்தியில் உள்ள அபிமானத்தையும் காணக்கூடியதாக இருந்தது. அந்த விழா சிறப்பாக நடைபெற்று மறக்கமுடியாத ஒரு விழாவாக அமைந்துவிட்டது

– கலாபூஷணம் எம். எம். மன்சூர், மாவனல்லை

24

‘மறுமலர்ச்சி’ இதழ்களின் தொகுப்பு – ஒரு பெரும்பணி

ஈழத்தின் முதலாவது இலக்கியச் சிற்றிதழ் என்ற சிறப்புக்குரிய மறுமலர்ச்சி இதழ்களின் தொகுப்பு 2016 மார்ச் மாதம் 6ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மரபுப்பாதையில் காலூன்றிநின்ற ஈழத்து இலக்கியச் செல்நெறியை நவீனத்துவப் பாதையில் திசைதிருப்பிய பெருமை மறு மலர்ச்சிக்கு உரியது. முதுபெரும் எழுத்தாளர் வரதரால் வெளிக்கொணரப்பட்ட மறுமலர்ச்சி சஞ்சிகையில், முதலில் அவருடன் இணைந்து அ. செ. முருகானந்தனும் பின்னர் ச. பஞ்சாட்சர சர்மாவும் இணையாசிரியர்களாகப் பணியாற்றி னர்.

1946ஆம் ஆண்டுமுதல் 1948ஆம் ஆண்டு வரை வெளிவந்த 23 இதழ்கள் அடங்கிய இச்சஞ்சிகைத் தொகுப்பை 70ஆண்டுகள் கடந்த நிலையில் இப்போது கோப்பாய் சிவம் அவர்களும் செல்லத்துரை சுதர்சன் அவர்களும் இணைந்து வெளியிட்டுள்ளார்கள்.

மறுமலர்ச்சி சஞ்சிகையின் இலக்கியப்பணி இத்தனை ஆண்டுகளின் பின்னரும் ஆய்வாளர்களால் விதந்து பேசப்படுகிறது. தமிழகத்தில் வெளியாகிய "மணிக்கொடி"யுடன் ஒப்பிட்டு மறுமலர்ச்சியும் நோக்கப்படுகிறது. மணிக்கொடி, சிறுகதைக்கு எப்படி உத்வேகம் அளித்ததோ அதேபோல ஈழத்தில் சிறுகதைத் துறைக்கு மறுமலர்ச்சி புத்தூக்கம் அளித்தது.

ஈழத்து நவீன எழுத்தாளர்களில் இரண்டாவது பரம்பரை யினர் எனக்குறிப்பிடப்படுபவர்கள் பலர் மறுமலர்ச்சி உருவாக்கிய எழுத்தாளர்களே. வரதர், சோ. நடராஜன், நாவற் குழியூர் நடராசன், அ. செ. முருகானந்தன், சம்பந்தன், பொ.கிருஷ் ணன். து. உருத்திரமூர்த்தி, சு. வேலுப்பிள்ளை, யாழ்ப்பாணன், சொக்கன், கி. சுப்பிரமணியம், ச. பஞ்சாட்சரசர்மா, அ.வி. மயில்வாகனன். க.சி. குலரத்தினம், சு. ராஜநாயகன், முதலியார் குலசபாநாதன், கு. பெரியதம்பி, பா. கதிராயத்தேவி, பத்மா துரைராஜா, மா. பீதாம்பரன், நடனம், கா.பொ. இரத்தினம், கார்த்திகேயன், பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை, தயா, புரட்சிதாசன், சு.வித்தியானந்தன், வித்துவான் வேந்தனார், சோ. தியாகராஜா, போன்றோர் இவர்களுள் அடங்குவர்.

ஆக்க இலக்கியப் படைப்பாளிகளின் உருவப்படங்களை அட்டைப்படத்தில் வெளியிட்டு கௌரவிக்கும் பணியை முதன்முதலில் ஆரம்பித்ததும் மறுமலர்ச்சி சஞ்சிகையே.

ஏற்கனவே மறுமலர்ச்சி தொடர்பான இரண்டு நூல் கள் வெளிவந்துள்ளன. செங்கை ஆழியான் தொகுத்த மறுமலர்ச்சிக் கதைகள், செ.சுதர்சன் தொகுத்த மறுமலர்ச்சிக் கவிதைகள் என்பனவே அவை.

மறுமலர்ச்சிக் கதைகளின் தொகுப்புப்பற்றி பேராசிரியர் கா. சிவத்தம்பி ஞானம் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியொன்றில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்:

"முற்போக்கு இலக்கியம் இவ்வளவு மிகச் செழிப்பாக தொடங்கி வளர்வதற்குக் காரணமாக இருந்தது என்ன வென்றால், ஏற்கனவே இருந்த சூழல். அந்தச் சூழல் மறுமலர்ச்சி இயக்கத்தினால் ஏற்படுத்தப்பட்டது. ஈழத்தின் தன்மைகளைக்கொண்டு இலக்கியம் வளருகின்ற ஒரு

தொடக்கத்தைக் காண்கிறோம்.... இந்த மறுமலர்ச்சி சஞ்சிகையின் வருகையும், மறுமலர்ச்சியின் போக்கும் எனக்கு ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒரு முக்கியமான காலகட்டமாய்ப் படுகிறது..”

செ. சுதர்சன் தொகுத்த மறுமலர்ச்சி கவிதைத் தொகுப்பும் ஈழத்தின் நவீன இலக்கியக் கவிதை வளர்சிப்போக்கின் முக்கியமான ஒரு காலகட்டத்தை வெளிக்கொணர்வதாய் அமைந்துள்ளது.

இவற்றுடன், மறுமலர்ச்சி இதழ்கள் ஏற்படுத்திய திறனாய்வு வளர்ச்சி, சிறுவர் இலக்கிய வளர்ச்சி, மொழி, இலக்கணம், நாட்டுப்புறவியல், ஏனைய இலக்கியம்சார்ந்த அம்சங்கள் பலவற்றையும் ஒன்றுசேரப் பார்ப்பதற்கு தற்போது வெளிவந்திருக்கும் தொகுப்பு அரிய வாய்ப்பினைத் தருகிறது.

இத்தொகுப்பினை வெளிக்கொணர்ந்த கோப்பாய் சிவம், செ. சுதர்சன் ஆகிய இருவரும் போற்றுதற்குரிய பெரும்பணியைச் செய்துள்ளார்கள். இவர்கள் இருவரும் தமிழ்கூறு நல்லுலகின் பாராட்டுக்குரியவர்கள்.

ஞானம் 191 (ஏப்பிரல் 2016)

25



சாகித்தியரத்ன விருது படைப்பாளிகளுக்கே உரியது

கல்விமான்களுக்கா? படைப்பாளிகளுக்கா? சாகித்தியரத்ன விருது உரியது? என்ற வாதப் பிரதிவாதங்கள் வருடாவருடம் தோன்றுவதும் பின்னர் மறக்கப்படுவதும் வழக்கமாகிவிட்டது. முதன்முதலில் சாகித்தியரத்ன விருது பெற்றவர் படைப்பாளியான வரதர். அவருக்கு இவ்விருது 2002ஆம் ஆண்டு செப்டெம்பர் 30ஆம் திகதி வழங்கப்பெற்றது. அதன்பின்னரும் தொடர்ந்து இந்த விருது படைப்பாளிகளுக்கே வழங்கப் பெற்று வந்தது. சாகித்திய விருது படைப்பாளிகளுக்கே உரியது என்பதை இது உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

சாகித்தியரத்ன விருதைத் தீர்மானிக்கும் உயர்மட்டக் குழுவில் இருப்பவர்கள் கலாநிதி களும் பல்கலைக்கழத்தினருமாக இருக்கின்ற நிலையில் அவர்கள் இந்த விருதுக்குத் தாங்களும் உருத்துடையர் எனத் தீர்மானித்து விருது வழங்கல் முறையில் மாற்றத்தை

ஏற்படுத்தி கல்விமான்களுக்கும் சாகித்தியரத்ன விருது வழங்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தை உட்புகுத்தினார்கள். இதனால் சாதனைகள் படைத்த படைப்பாளிகள் பலர் உரியகாலத்தில் பரிசைப் பெறாமல் பின்தள்ளப்பட்டனர், சிலர் மாண்டு மடிந்தனர்.

சிலகாலத்திற்கு முன்னர் பேராசிரியர் துரை மனோகரன் அவர்கள் சாகித்தியரத்ன விருது படைப்பாளிகளுக்கே உரியது என்று ஞானம் சஞ்சிகைக்கு எழுதிய பத்தியொன்றில் குறிப்பிட்டிருந்தார். அதன் பின்னர் படைப்பாளிகளான தெணியான், தெளிவத்தை ஜோசப், முல்லைமணி ஆகிய படைப்பாளிகளுக்கு அடுத்தடுத்து கடந்த மூன்று வருடங்களில் சாகித்தியரத்ன விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த நிலையில் கலாநிதிகள், பல்கலைக்கழகக் கல்விமான்கள் தமக்குரிய விருதை இழந்தார்களா என்று சிந்திக்க வேண்டியுள்ளது. கலாநிதிகள் கல்விமான்கள் இந்த நாட்டின் கல்வி மேம்பாட்டிற்கும் தமிழ் வளர்ச்சிக்கும் பெரும்பங்கு ஆற்றிக்கொண்டிருப்பவர்கள். பல ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றை நூல்களாக்கித் தருபவர்கள். வாழ்நாளின் பெரும்பகுதியை கல்வி வளர்ச்சிக்காக அர்ப்பணிப்பவர்கள். இந்தப்பணிகள் அவர்களது தொழிலின் ஓர் அங்கமாகவும் அமைந்துவிடுகிறது. இவர்கள் புறக்கணிக்கப் பட்டால் படைப்பாளிகளுக்கு நேர்ந்த அதேகதி கல்விமான் களுக்கும் நேர்ந்துவிடும். இவர்கள் உரிய முறையில் கௌரவம் பெறவேண்டும். இந்த ஆசிரியர் பக்கத்தை எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் விருதுக்குத் தகுதியிருந்தும் கவனிப்பைப் பெறாத பேராசிரியர்கள் பலர் என் மனத் திரையில் தோன்றிக்கொண்டிருக்கிறார்கள்.

கல்வியாளர்களைக் கௌரவிக்க பலதரப்பட்ட விருதுகள் நடைமுறையில் இருந்தன; இருக்கின்றன. பேராசிரியர் தில்லைநாதன் அவர்களுக்கு 1993இல் இந்துகலாசார அமைச்சு 'இலக்கியச் செம்மல்' விருதினை வழங்கிக் கௌரவித்து. 1994இல் ஜனாதிபதி விஜேதுங்கா இவருக்கு 'கலாகீர்த்தி' விருதினை வழங்கிக் கௌரவித்தார். 2007இல்

தேசிய கலை இலக்கியப் பெருவிழாவில் இவர் 'தேசத்தின் கண்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கல்விமான்களுக்கென இத்தகைய உயர்விருதுகள் இருக்கும்போது அவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு படைப் பாளிகளுக்கு உரிய விருதை அவர்களுக்கு வழங்க ஏன் முயற்சிக்கவேண்டும்?

இதில் கவனிக்கவேண்டிய விடயம் என்னவென்றால் 2007இல் கவிஞர் இ. முருகையனுக்கு சாகித்தியரத்ன விருது வழங்கப்பட்ட அதே ஆண்டிலேதான் பேராசிரியர் தில்லை நாதன் தேசத்தின்கண் விருதைப்பெற்றார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பிக்கு சாகித்தியரத்ன விருது அறிவிக்கப்பட்டபோது, அவர் கொழும்பில் தனது இல்லத்தில் இருந்தபோதும் அவர் அதனைச்சென்று பெற்றுக்கொள்ள வில்லை. பேராசிரியர் எம்.ஏ. நு.ஃமான் ஒரு படைப் பாளியாக இருந்தபோதும் சாகித்தியரத்ன விருதுக்கு 2013இல் அவர் தெரிவாகியபோது அவர் அதனை ஏற்கமறுத்து விட்டார். இவற்றிற்கான காரணங்களை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த விருது வழங்கல் விடயத்தில் சரியான நடைமுறை பின்பற்றப்படாவிட்டால் பாதிக்கப்படுபவர்கள் படைப்பாளிகள் மட்டுமல்ல, கல்விமான்களும்தான். கல்விமான்களுக்கு வழங்கப் படவேண்டிய விருது சாகித்தியரத்ன அல்ல. அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய விருதுகள் வேறாக உள்ளன. அவர்களுக்கு 'ரத்ன' விருதுதான் வேண்டுமெனில், 'வித்தி யாரத்ன' என்ற விருதினைப் புதிதாகச் சேர்த்துக்கொள்ளலாம்.

நமது நாட்டில் நடைமுறையில் உள்ள விருதுகளான தேசத்தின்கண், தேசமான்ய, தேசபந்து, சாகித்தியரத்ன போன்று 'வித்தியாரத்ன' விருதும் ஓர் உயர்விருதாக அமையும்.

ஞானம் 196 (செப்டெம்பர் 2016)

புரிதல்

சாகித்தியரத்ன விருதும் சர்ச்சைகளும்

✦ ஒரு முறை எனது நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றிய பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்கள் தனதுரையில் “நாங்கள் ஆய்வாளர்கள். பல நூல்களைக் கற்று அவற்றை ஆய்ந்தறிந்து கொண்ட ஞானத்தால் அவற்றிலிருந்து பெற்ற மேற்கோள்களோடு ஒரு நூலை எழுதிவிடுவோம். ஆனால் ஆக்க இலக்கியவாதிகள் அவ்வாறல்லர். அவர்கள் தாங்களாகவே ஒரு கருவைச் சிந்தித்து அவர்கள் கற்பனையில் சொந்தமாக ஒரு சிருஷ்டியைத் தருகின்றார்கள். இது கடினமான ஒரு முயற்சியாகும்” என்னும் பொருள்படப் பேசினார். இதிலிருந்து ஆக்க இலக்கியத்தின் பெறுமானம் புரியும்.

பல்கலைக்கழகப் போதனாசிரியர்கள். அறிஞர்கள். துறைசார்ந்து ஆழக்கற்று, அவற்றில் ஆய்வுசெய்யும் கல்விப்புலத்தில் மேம்பட்டோர். அவர்கள் கழகங்களில் கற்பித்தல் தவிர்ந்து பிறர்தம் அறிவுத் தேடலுக்காய் ஆக்கியளிக்கும் கோத்தளிப்புத் தவிர்ந்த உருவாக்கங்களுக்காய் அரசாங்கத்தால் விருதளித்துக் கௌரவம் செய்யப்பட வேண்டியவர்கள். இங்கே பேராசிரியர் துரைமனோகரனின் தொடர்ச்சியான போராட்டம் மனங்கொள்ளத்தக்கதாகும்.

தமிழ்ச்சொல் அகராதியின்படி ‘சாகித்தியம்’ என்பதற்கு முறைப்படி பாடும் சங்கீதம் புலமை செய்யுள் எனப்படும். புலமை என்பதற்கு கவிஞர் வித்தாண்மை எனக்கூறும். இவ்வாறிருக்கையில் “சாகித்தியரத்ன” என்னும் பதம் பெரும்பாலும் ஆக்க இலக்கியப் படைப்பாளிகளுக்கே மிகப் பொருந்தும். கல்வியாளர்களுக்கு இதனிலுஞ் சிறப்பாய் அவர்தம் ஆக்கங்களின் தரமறிந்து கௌரவம் செய்வதே மேன்மையாகும். தவிர்த்து, பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்கள் வரையறை செய்வதற்கிணங்க படைப்பாளிகளுக்கென்றுருத்தான “சாகித்தியரத்ன” என்ற விருதை அளிப்பது பொருத்தப்பாடற்றதாகும். இதனையே பேராசிரியர் துரைமனோகரனும் ஞானம் ஆசிரியரும் பேசுகின்றனர்.

தவிர, மேலுமொரு குளறுபடியும் அரசாங்க, தனியார் நிறுவனங்களில் பரிசுக்கான நூல் தேர்வுகளில் நடைபெறுகின்றது. படைப்பிலக்கியங்களுக்கு பரிசு தரும் தேர்வுக் குழுக்களிலும் சம்பந்தமில்லாதவர்களின் வகிபாகம், வாழ்வில் ஒரு சிறுகதையேனும் எழுதிய அன்றேல் குறைந்தது அத்துறைசார்ந்த தேடலனுபவமுமற்ற சிலர் சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுக்குங் குழுக்களில் அங்கம் வகிப்பதாகும். இது மற்றத் துறைகளுக்கும் பொருத்தப்பாடாகும். கல்வித் தகைமை வேறு படைப்பாற்றல் திறன்வேறு. துறை சார்ந்த ஒருவர் உதாரணமாய் கவிதையெனில் ஈழத்தில் கவிஞர் “சோப” பத்து நூல்களில் ஒரு

கவிதைநூலைத் தேர்ந்தெடுப்பதற்கும் அத்துறையில் எந்த அனுபவமுமற்ற ஒருவர் தேர்ந்தெடுக்க முயலுவதற்கும் பாரிய ஏற்றத்தாழ்வுண்டு. இங்கேதான் தேர்வில் குளறுபடிகளேற்பட்டு தப்பான தேர்வுகள் நடைபெறுகின்றன.

சில இடங்களில் கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, சிறுவர் இலக்கியம் என்ற பல்வேறு துறைகளுக்கும் ஓரிருவரே நடுவராயிருப்பது. இதில் வியப்பு என்னவெனில் இவர்கள் இத்துறைகளில் எதிலும் எச்சாதனையும் படைக்காதவர்கள். அனுபவ முதிர்ச்சியும் அற்றவர்கள். ஒருவர் ஒன்றோ இரண்டோ துறைகளில் பாண்டித்தியம் உள்ளவர்களாக இருக்கவே வாய்ப்புண்டு. அனைத்துத் துறைகளிலும் ஆளுமை கொண்டிருப்பதென்பது சாத்தியப்பாடற்றதாகும். அவ்வாறான ஒருவர் இந்த இலங்கைத் திருநாட்டில் இன்னும் பிறக்கவில்லை. அவ்வாறிருக்க இங்கு இது எவ்வாறு நடைபெறுகின்றது என்பது ஆச்சரியத்துக்குரியதாகும். அழைகின்றார்களே என்பதற்காகப் பொருத்தப்பாடற்ற இருக்கைகளில் போயமர்ந்து தர்மத்தைப் பிழைப்பது சத்தியத்தின் பாற்பட்டவர்களின் சாபத்திற்குட்படுத்தும்.

தமிழ்மொழிக்கும் சாகித்தியப்பரிசுகள் வழங்கப்படத் தொடங்கிய காலத்திலிருந்தே அவற்றைத் தீர்மானிப்பவர்களாக பல்கலைக்கழகம் சார்ந்தவர்களே இருந்துவந்துள்ளனர். பரிசுத்தேர்வுக்கு எதிரான போராட்டம் கூழ்முட்டை அடிப்பதில் ஆரம்பமாகியது. அச்சுவாகனம் ஏற்றப்படாத நூலுக்கு செ.யோகநாதன் பரிசுபெற்ற வரலாறு உண்டு. தெளிவத்தை ஜோசப்பின் காலங்கள் சாவதில்லை நாவல் பரிசுக்குத் தேர்வாகி பின்னர் மாற்றப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். திரு. சோமகாந்தனின் ஆகுதி சிறுகதைத் தொகுதி பரிசுக்குத் தேர்வாகி மறுநாள் அந்த முடிவு மாற்றப்பட்டதாக அவர்பதிவு செய்துள்ளார். மு.பொ. தனது சிறுகதைத் தொகுதி பரிசுக்குத்தேர்வாகி பின்னர் அது வேறொருவருக்கு வழங்கப்பட்டதாகப் பதிவு செய்துள்ளார். குறிஞ்சித் தென்னவனின் நூலுக்கு உரிய பணப் பரிசு சாரல்நாடனுக்கு வழங்கப்பட்ட வரலாறும் உண்டு. மேலிடத்தில் உள்ளவர்கள் தான்தோன்றித்தனமாக தமக்கு வேண்டியவர்களுக்கு பரிசு வழங்குவதாக குற்றச்சாட்டு தொடர்கிறது. வல்லான் வகுத்ததே வழி என்ற தோரணையில் தேர்வாளர்கள் அட்டகாசம் புரிகிறார்கள். அதேபோன்று சாகித்தியரத்ன விருதை தாம் விரும்பியவர்களுக்கு வழங்கிவிட்டு அதனை நியாயப்படுத்தவும் செய்கிறார் கள்.

தேர்வுக் குழுவைத் தேர்ந்தெடுப்பவர்கள் வள்ளுவனின் குறளைத் தேர்ந்தி ருந்தால் தப்பானவர்களைத் தேர்ந்தெடுக்க மாட்டார்.

> “இதனை இதனால் இவன்முடிக்கு மென்றாய்ந்
> ததனை யவன்கண் விடல்.”

– ஜின்னாஹ் ஷரிபுத்தீன் (197–ஒக்டோபர் 2016)

26



ஈழத்துத் தமிழ் நவீன இலக்கிய வெளி

ஞானத்தின் இருநூறாவது இதழைச் சிறப்பிதழாக வெளியிடுவதில் பெருமிதம் அடைகின்றோம். ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றில் மாதந்தவறாது வெளிவந்து இருநூறாவது இதழை எட்டிய ஒரு மாசிகை என்றால் அது ஞானம் மட்டும்தான் என்பதில் எமக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

ஈழத்துத் தமிழ் கலை இலக்கியச் சஞ்சிகை என்ற அடையாளத்துடன் 2000ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பெற்ற ஞானம், கால ஓட்டத்தில் படிநிலைவளர்ச்சிகண்டு ஈழத்தின் சமகாலத் தமிழ் இலக்கியச் செல்நெறியையும், உலக நிலையிலான தமிழிலக்கியச் செல்நெறிகளையும் தொடர்புபடுத்தி இயங்கும் ஓர் இலக்கிய இயக்கமாகப் பரிணமித்திருக்கிறது என்பதில் எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றில் மாதத்தின் முதல் வாரத்திலேயே இணைய இதழாகவும்,

அச்சு இதழாகவும் வெளிவரும் சஞ்சிகை என்ற பெருமையும், ஈழத்தில் முதன்முதலாக இணையம் ஏறிய (2002) கலைஇலக்கியச் சஞ்சிகை என்ற சிறப்பும், முதன்முதலாகத் தமிழ் மொழியில்(2013) தனது இணைய முகவரியை அமைத்துக்கொண்ட தகைமையும்(தளம்.ஞானம்.இலங்கை) ஞானம் சஞ்சிகைக்கே உரித்தானவை. தமிழ் - கணினி இணைப்பு முறைமையில் ஞானத்தின் செயற்பாடு உலகத்தமிழ் இலக்கிய ஆர்வலர்களிடத்தில் ஈழத்து இலக்கிய நலத்தையும், வளத்தையும், விரித்தும் விரைந்தும் செல்ல உதவிற்று. மாதந்தோறும் பெருந்தொகையான வாசகரையும், படைப்பாளிகளையும் சென்றுசேரும் சஞ்சிகையாகவும் ஞானம் விளங்குகின்றது.

ஈழத்துத் தமிழ் இலக்கியம் தொடர்பான பெருந்தொகுப்புக் களாக ஞானத்தின் மூன்று சிறப்பிதழ்கள் இதுவரை வெளி வந்தமை யாவரும் அறிந்ததே.

ஞானம் 100ஆவது இதழ், நூறு எழுத்தாளர்கள் எழுதிய நூற்றுக்கும்மேற்பட்ட எழுத்துக்கள் அடங்கிய **ஈழத்து நவீன இலக்கியச் சிறப்பிதழாக** வெளிவந்தது. **ஈழத்து நவீன இலக்கியம்** தொடர்பான ஆய்வுசார் கட்டுரைகளையும், படைப்புக்களையும் இத்தொகுதி உள்ளடக்கியிருந்தது. இது ஈழத்து நவீன இலக்கியம் சார்ந்த புரிதலுக்கான தொகுப்பாகப்பயன்படுத்த வாய்ப்பாகியது.

ஞானம் 150ஆவது இதழ் **ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழாக** வெளிவந்தது. 600பக்கங்களில் ஈழத்துப் போர் தொடர்பான **இலக்கிய ஆவணமாகவும்**, ஆய்வுசார்மதிப்பீடாகவும் இப்பெருந் தொகுதி கணிக்கப்பெற்றது. ஈழத்துப் போரின் இலக்கிய சாட்சியமாகவும் இது திகழ்கிறது.

ஞானம் 175ஆவது இதழாக **ஈழத்துப் புலம்பெயர் இலக்கியச் சிறப்பிதழ்**, 976 பக்கங்களில் வெளிவந்தது. தமது பிறந்த நாட்டினைப் பிரிந்துவாடும் நம் தமிழ்ப் படைப்பாளிகளின் ஏற்றம்மிக்க படைப்புக்களையும் அப்படைப்புகள் பற்றிய ஆய்வுகளையும் உள்ளடக்கிய பெருந்தொகுதியாய் இது வெளிவந்தது. கண்டம்விட்டுக் கண்டம் பரவிய நவீன தமிழ்

இலக்கியத்தின் புதிய திசைவழிகளின் தனித்துவத்தை அடையாளம் காட்டும் தொகுதியாகவும் இது கணிப்புப்பெற்றது.

ஈழத்துப் போர் இலக்கியம், ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம் ஆகிய இரண்டும் தமிழிலக்கியத்துக்கு ஈழத்தவர் வழங்கிய இலக்கிய வகைமைகள் என்பதனை மேற்குறித்ததொகுதிகளை வெளிக்கொணர்ந்ததன் மூலம் ஞானம் வெளிச்சமிட்டுக்காட்டியது. தற்போது ஞானம் 200ஆவது இதழ், **ஈழத்துத் தமிழ் நவீன இலக்கிய வெளி – புரிதலும் பகிர்தலும் – (நேர்காணல்கள்)** எனும் மகுடத்தில் அதிக பக்கங்களுடன் சிறப்பிதழாகவெளிவருகின்றது.

தமிழ் சஞ்சிகை வரலாற்றில் அதிக பக்கங்களுடன் கூடிய சிறப்பிதழ்களை வெளியிட்ட பெருமையும் ஞானம் சஞ்சிகைக்கே உரியது என்பதை இச்சிறப்பிதழ்கள் எடுத்தியம்புகின்றன.

ஈழத்துப் பழந்தமிழ் இலக்கிய வரலாறு ஆரம்ப காலத்திலிருந்தே விடுபாடுகளுடனும் இடைவெளி களுடனும் கிடைக்கப்பெறுவதை ஆய்வுலகம் பல சந்தர்ப்பங்களில் பதிவு செய்துவருவதை நாம் அறிவோம். இந்த நிலைமை ஈழத்துத் தமிழ்நவீன இலக்கியத்துக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற பிரக்ஞையுடனேயே ஞானம் இயங்கிவந்துள்ளது.

ஞானம் சஞ்சிகையின் தனித்துவங்களில் ஒன்று, அதில் வெளிவந்தநேர்காணல்களாகும். ஈழத்துத் தமிழ் நவீன இலக்கியத்தின் ஆரம்பம் 1930களில் எனக்கொண்டால், அக்காலப்பகுதியிலிருந்து இற்றைவரையான ஈழத்து நவீன இலக்கியத்தின் வளர்ச்சிப் போக்குகளை அறிந்து கொள்ளக்கூடிய வகையில் இந்த நேர்காணல்கள் அமைந்து வரலாற்றுப் பதிவுகளாகின்றன.

ஞானத்தின் முதலாவது இதழில் இருந்து 200ஆவது இதழ்வரை இடம்பெற்ற நேர்காணல்கள், வெளிவந்த கால ஒழுங்கில் அடங்கிய பெருந்தொகுதி இது. இந்நேர்காணல்கள் வெளிவந்த காலத்தைப்போலவே எதிர்காலத்திலும் இவை வரலாற்று முக்கியத்துவமுடையவை.

ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியுடன் தொடர்புடைய ஆளுமைகளாக விளங்கும் கதாசிரியர்கள், கவிஞர்கள், இதழாசிரியர்கள், விமர்சகர்கள், பத்திஎழுத்தாளர்கள், பேராசிரியர்கள், புலம்பெயர்ந்த படைப்பாளிகள், பெண்ணிலைவாதிகள், பத்திராதிபர்கள், ஒலி ஒளி ஊடகவியலாளர்கள், நாடகக் கலைஞர்கள், நடனக் கலைஞர்கள், ஆய்வறிஞர்கள், கல்வியாளர்கள், கவிஞர்கள், இலக்கிய இயக்கச் செயற்பாட்டாளர் என இலக்கியத்தின் பலதளங்களில் இயங்கிய பலரையும், அவர்களின் துறைசார் வாண்மைகளையும் ஈழத்துக் கலை இலக்கிய மேம்பாட்டிற்கான அவர்களின் பங்களிப்புகளையும் இந்த நேர்காணல்களில் விரிவாக அவதானிக்கமுடியும்.

இந்த நேர்காணல்களில், வெவ்வேறு கருத்துநிலை கொண்டோரையும் அவரவர்நிலைநின்று தத்தமது கருத்துக்களை முழுமையாக வெளிக்கொணர்வதற்கு இடமளித்துள்ளோம்.

சிலரது நேர்காணல்கள் இலக்கியம் தொடர்பான வரலாற்றுத் தவறுகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தன. ஈழத்து இலக்கிய வரலாற்றின் சரியான பதிவுகள் வெளிவர இவை உதவின.

ஈழத்து நவீன இலக்கிய சஞ்சிகை வரலாற்றில் ஆரம்பகர்த்தாக்கள் வரிசையில்வைத்துப் போற்றக்கூடிய கே. கணேஷ், வரதர், பஞ்சாட்சரசர்மா போன்றோரது நேர்காணல்களும் ஈழத்து இலக்கிய வரலாற்றில் அதிகூடிய புகழ்பெற்ற எழுத்தாளர்களை உருவாக்கியவரும், ஈழத்தின் முதலாவது சிறுகதைத் தொகுப்பினை வெளிக்கொணர்ந்தவருமான சிற்பி அவர்களின் நேர்காணலும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவை கிடைத்தற்குரிய பொக்கிஷங்கள் ஆகும்.

முற்போக்கு இலக்கியத்தின் பிதாமகர்களில் ஒருவர் எனப் போற்றப்படும் பேராசிரியர் கா. சிவத்தம்பி, முதிர்ந்த அனுபவமும் புலமைத்துவமும் உடையவராகத் திகழ்ந்தவர். ஈழத்து இலக்கியம் பற்றியும் தமிழ் இலக்கிய வரலாறு எழுதுகைபற்றியும் இயம்பும் இவரது நேர்காணல் மிகவும்

பயனுடையதாக அமைந்தது. பழந்தமிழ் இலக்கணம், இலக்கியம், நவீன இலக்கியம், தமிழ் நாடகம், இலக்கிய வரலாறு, தமிழர் பண்பாடு, அரசியல், தொடர்பாடல் ஆகிய துறைகளில்ஆய்வுகளை மேற்கொண்டவர் இவர். முற்போக்கு இயக்கத்திலும் அதன் செயற்பாடுகளிலும் பெரும்பங்கு ஆற்றியவர். முற்போக்கு இயக்கத்தில் இவரது செல்வாக்கு, விமர்சனமுறையில் இவர் ஏற்படுத்திய மாற்றங்கள், ஊடகத்துறையிலும் கலைத்துறையிலும் இவரது பங்களிப்பு, பிற்பட்ட காலத்தில் முற்போக்கு நிலையிற் இவரில் ஏற்பட்ட கருத்துநிலை மாற்றங்களுக்குரிய காரணங்கள், இப்படிப் பலவிடயங்கள் இவரது நேர்காணலில் அடங்கியுள்ளன.

ஏறத்தாழ ஐம்பதுகளின் பிற்பகுதியிலிருந்து அவரது அந்திம காலம்வரையிலான ஐந்து தசாப்த காலப்பகுதியின் இலக்கிய இயங்கியல் வரலாற்றினையும், அக்காலப்பகுதியில் இடம்பெற்ற கருத்தியல் சார்ந்த முன்னெடுப்புகளையும் அவரது நேர்காணல் பதிவாக்கியுள்ளது. பேராசிரியர் அவர்கள் ஒரு விமர்சகர் என்ற நிலையில் அவரது முக்கியத்துவம் முன்னிலைப்படுகிறது.

எழுத்தாளர் எஸ்.பொ. தடம்பதிக்காத இலக்கியத்துறைகள் இல்லை எனலாம். சிறுகதை, நாவல், நாடகம், வானொலி நாடகம், கட்டுரை, உருவகக் கதை, கவிதை, புனைவுக்கட்டுரை, ஆய்வு, மொழிபெயர்ப்பு, பத்தி எழுத்து, பதிப்பு முயற்சிகள் எனச் சகல துறைகளிலும் தடம்பதித்த எழுத்தாளர்களில் முதன்மையானவர் இவர். முற்போக்கு அணியுடன் முரண்பட்டு இவர் முன்வைத்த நற்போக்குக் கோட்பாடு பெரும் சர்ச்சைக்குள்ளாக்கியது. புலம்பெயர் இலக்கியம் என்ற சொற்றொடரை அறிமுகப்படுத்தியவரும் இவரே. இத்தகைய திறமைகள் வாய்ந்த எஸ்.பொ.வை ஓரங்கட்ட முயன்றவர்கள் முற்போக்கு அணியினர். ஆனாலும் தனது வல்லபத்தால் தன்னை இலக்கிய உலகில் திடமாக நிலைநிறுத்திக் கொண்ட இவர், தனது நேர்காணலில் இவற்றை விபரித்துள்ளார்.

ஒரு படைப்பாளி என்ற நிலையில் தனது காட்டமான கருத்துக்களால் பேராசிரியர் சிவத்தம்பியின் கருத்துக்களை நிராகரித்தவர் எழுத்தாளர் எஸ். பொ.

ஈழத்து நவீன இலக்கிய வரலாற்றில் நான்கு தசாப்தங்கள் ஆதிக்கம் செலுத்திய முற்போக்கு, அதனை எதிர்த்து எஸ். பொ. முன்வைத்த நற்போக்கு ஆகிய கருத்தியல் சர்ச்சைகள் இடம்பெற்ற காலகட்டத்தின் வெட்டுமுகங்களாக இவ்விரு நேர்காணல்களும் அமைகின்றன.

மேற்குறிப்பிட்ட இந்த இருவரது நேர்காணல்களும் கருத்து நிலையில் எதிரும்புதிருமாக இயங்கி இலக்கிய வரலாறு சார்ந்த சிந்தனைத் தெளிவை செப்பனிட வாய்ப்பளிக்கின்றன.

ஈழத்து எழுத்தாளர்களில் அதிக படைப்புகளைத் தந்தவர், அதிக இலக்கியச்செயற்பாடுகளில் ஈடுபட்டவர், செங்கை ஆழியான். இவருக்கு ஈழத்து நாவல் வரலாற்றில் உன்னத இடம் உண்டு. ஏறத்தாழ 46 நாவல்களை எழுதியுள்ளார். இவரது நாவல்களில் சில, பல்வேறு பிரதேச சமூகங்களை ஈழத்து நாவல் இலக்கியத்துக்கு அறிமுகம் செய்துள்ளன. போர்க்கால நிகழ்வுகளை அதிகளவில் சிறுகதைகளாகவும் நாவல்களாகவும் ஆக்கியவர் இவரே. தொகுப்பு நூல்களாக மறுமலர்ச்சிச் சிறுகதைகள், முன்னோடிச் சிறுகதைகள், ஈழகேசரிச் சிறுகதைகள், ஈழநாட்டுச் சிறுகதைகள், மல்லிகைச் சிறுகதைகள் போன்றவற்றைத் தொகுத்து வெளியிட்டவர். இந்தத் தொகுப்பு முயற்சிகள் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு பங்களித்தபத்திரிகைகள், சஞ்சிகைகள் செய்த பணிகளையும் படைப்பாளிகளின் படைப்பாக்க முயற்சிகளையும் வெளிக் கொணர்ந்தன. அத்தோடு இலக்கியச் செல்நெறியில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்குகளையும் வரலாற்றுத் தவறுகளையும் சரிசெய்வதற்குப் பெரும்பங்காற்றியுள்ளன. பல்லாயிரக் கணக்கான சிறுகதைகளை தேடிப்படித்து 'ஈழத்துச் சிறுகதை வரலாற்றை' எழுதியவர். இவரது 46 நாவல்களும் 15குறுநாவல்களும் 200க்கும் மேற்பட்ட சிறுகதைகளும் ஈழத்தின் சமூக அரசியல் பொருளாதார வரலாற்றுடன் பின்னிப்பிணைந்துள்ளன.

இத்தகைய பேராளுமைகொண்ட படைப்பாளியும் தொகுப் பாசிரியருமான செங்கை ஆழியானின் நீண்ட நேர்காணலானது, ஈழத்து நவீன இலக்கியத்தின் புனைகதை வரலாற்றை ஆதாரபூர்வமாக முன்னிறுத்துவதில் முனைப்புடன் விளங் குகிறது.

மேற்குறிப்பிட்ட கா. சிவத்தம்பி, எஸ்.பொ., செங்கை ஆழியான் ஆகியோர் இத்தொகுப்பு வெளிவரும் இவ்வேளையில் அமரத்துவம் அடைந்துவிட்டனர். இருப்பினும் ஞானத்துக்கு வழங்கிய நீண்ட நேர்காணல்களின் வாயிலாக இவர்கள் என்றென்றும் எம்முடன் உரையாடிக்கொண்டிருப்பர்.

தெளிவத்தை ஜோசப், மலையக இலக்கியத்தின் அடையாளத்திற்கும், தனித்துவத்துக்கும் தனது எழுத்துக்கள் மூலம் பெரும்பங்காற்றி மலையக இலக்கியத்தின் தலைமைப் படைப்பாளியாகத் திகழ்பவர். இவரது மலையகச் சிறுகதை வரலாறு இவரை ஒரு சிறந்த ஆய்வாளராக இனங்காட்டியது. துரைவி பதிப்பகத்தினூடாக இவர் வெளிக்கொணர்ந்த மலையகச் சிறுகதைகள், உழைக்கப்பிறந்தவர்கள் ஆகிய இரு பெரும்தொகுப்புகள் மலையக இலக்கியத்திற்கு இவர் அளித்த செல்வங்களாகும். இவ்விரு தொகுப்புகளிலும் எழுபது வருடகால மலையகச் சிறுகதைகளைத் தேடி எடுத்து இவர் தொகுத்துள்ளார். சிறுகதை, நாவல், விமர்சனம், ஆய்வு, திரைப்படக் கதை, தொலைக்காட்சி, வானொலி நாடகம் ஆகிய துறைகளில் இவர் இயங்கியவர்.

'ஈழத்து இலக்கியத்துக்கு மலையக இலக்கியம் புதுரத்தம் பாய்ச்சுகிறது'

என்பார் எழுத்தாளர் எஸ்.பொ. அந்த வகையில் தெளிவத்தை ஜோசப்பின்நேர்காணல், ஈழத்து இலக்கியத்தின் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கூறாக விளங்கும் மலையக இலக்கியத்தின் தனித்துவத்தை எடுத்துக் காட்டும் வரலாற்றுப் பதிவாக அமைகிறது.

மேலே குறிப்பிட்ட நான்கு நேர்காணல்களும் நீண்ட தொடர் நேர்காணல்களாக அமைந்தமைக்கான காரணங்கள் இவைதான்.

இவற்றுள் பேராசிரியர் கா.சிவத்தம்பியுடன் நிகழ்த்திய நேர்காணல்‘இலக்கியமும் வாழ்க்கையும்’ (2005) எனுந் தலைப்பில் நூலாக வெளிவந்தது. எஸ்.பொ.வுடன் நிகழ்த்திய நேர்காணல் ‘தீதும் நன்றும் பிறர் தரவாரா’ (2007) எனும் தலைப்பில் நூலாகியது. செங்கை ஆழியானுடன் நிகழ்த்திய நேர்காணல் ‘சாகித்தியரத்னா செங்கை ஆழியான் - நேர்காணல்’ (2013) எனும் தலைப்பில் நூலாக வெளிவந்தது. இவை காலத்தேவை கருதி நூல்களாக முன்னர் வெளிவந்திருப்பினும் ஞானத்தில் வெளிவந்த நேர்காணல்கள் என்பதால் இத்தொகுதியிலும் இடம்பெறுகின்றன. தெளிவத்தை ஜோசப்புடன் நிகழ்த்திய நீண்ட நேர்காணலும் இத்தொகுதியில் இடம்பெறுகிறது. இத்தகைய மிக நீண்டநேர்காணல்கள் தமிழ்ச் சஞ்சிகை வரலாற்றில் இதற்கு முன்னர் இடம்பெறவில்லை. இதனை சிற்றிதழ்களின் செவிலித்தாய் என்று தமிழ் உலகம் போற்றும் தமிழக முதுபெரும்எழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்கள்,

‘வேறு எந்தத் தமிழ்ச் சஞ்சிகையும் இப்படி நேர்காணல் ஒன்றைத் தொடர் அம்சமாக வெளியிட்டதில்லை. இது ஞானம் இதழுக்குத் தனிப் பெருமை சேர்ப்பதாகும்’

என்று பதிவு செய்திருப்பதும் ஞானம் நேர்காணல்களுக்குக் கிடைத்த பெருமைகளுள் ஒன்றாகும்.

இந்த நேர்காணல்கள், வரலாற்றில் இடம்பிடித்தோரின் வாக்குமூலங்கள். இலக்கிய உலகில் தாம் கண்டறிந்த உண்மையின் தரிசனத்தைக் காய்தல் உவத்தலின்றித் தமது வாக்குமூலங்களாக இவர்கள் பதிவுசெய்துள்ளனர். இவை நேரடியான சாட்சியங்கள். வேறொருவர் கூறுவதைவிட சம்பந்தமுடையோர் கூறுவது வலிமையுடையது. அந்த வகையில் எழுத்தாளன் அகவயப்பட்டு அவனே கூறும் அதிகார பூர்வமான அகச்சான்றுகள் இவை.

சில ஆய்வறிஞர்களதும் படைப்பாளிகளதும் தன்வரலாறு எழுதப்படாத சூழலில்,அவர்கள் இவ்வுலகை நீத்த இன்றைய நிலையில், அவர்களின் தன் வரலாற்றுப்பதிவுகள் இந்த நேர்காணல்களில் அடங்கியிருப்பதென்பது பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. அந்தவகையில் இந்த

நேர்காணல்கள் வாழ்ந்து மறைந்த எழுத்தாளர்கள் சிலரின் தன்சரித்திரமாயும் அமைகின்றன.

தன்சரித்திரத்தைக் கூறும் ஒருவர் சமூக வரலாற்றோடு தன்னை இணைத்து, தன்னையே ஒரு சமூக வரலாற்றுப் பாத்திரமாகக் காணும் நிலையினையும் அச்சமூக வரலாற்றோடு தான் எவ்வாறு இணைந்தும் பிணைந்தும் ஊடாடினார், எதிர்வினையாற்றினார் எனும் செயற்பாடுசார் நிலையினையும் இந்நேர்காணல்களூடாக அறியமுடிகிறது.

இந்த நேர்காணல்கள் வெளிவந்துகொண்டிருந்தபோது சில வாசகர்களும்,படைப்பாளிகளும், விமர்சகர்களும் கடிதங்கள் மூலமாக எதிர்வினையாற்றினார்கள். அவர்களது எதிர் வினைகள், நேர்காணல்களை நெறிப்படுத்துவதாயும் அவற்றுள் கூறப்பட்ட கருத்துக்களை தேவையானபோது செம்மை செய்வதாயும், வாதவிவாதத்துடன் கருத்தியலைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதாயும் அமைந்திருந்தன. எனவே நேர்காணல்களின்போது ஏற்பட்ட எதிர்வினைகளும், பாராட்டுக்களும் அவைதொடர்பான வாசகர் கடிதங்களும் இத்தொகுப்பில் முக்கியத்துவம் கருதி ஒருங்கே சேர்க்கப் பெற்றுள்ளன.

நிறைவாக...

தமிழில் நேர்காணல்கள் என்ற இலக்கிய வகையில் முதன்முதலில் அதிக கவனம் செலுத்தி இயங்கிய சிற்றிதழ் தமிழக சுபமங்களா ஆகும். அதில் வெளிவந்த நேர்காணல்களின் தொகுப்பு 1997இல் 'கலைஞர்முதல் கலாப்பிரியா வரை' என்ற மகுடத்தில் வெளிவந்தது. இதில் 37 நேர்காணல்கள் அடங்கியிருந்தன. நேர்காணல் என்ற இலக்கிய வகையில் தமிழுக்கு இதுதான் முத்தாரம் எனக் குறிப்பிடுகிறார் அதற்கு முன்னுரை எழுதிய இளையபாரதி.

ஈழத்தில் இருந்து வெளிவந்த மூன்றாவது மனிதன் சஞ்சிகையின் ஆசிரியரான எம். பௌஸர் வெளியிட்ட 11 நேர்காணல்கள் அடங்கிய தொகுப்பு 'ஈழத்து இலக்கியத்தின்

சமகால ஆளுமைகளும் பதிவுகளும்' என்ற பெயரில் 2001இல் வெளிவந்தது.

மேற்குறிப்பிட்ட இரண்டு நூல்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வெளிவரத்தொடங்கிய ஞானம் (2000ஆம் ஆண்டு) தனது முதலாவது இதழிலிருந்து இந்த இருநூறாவது இதழ்வரை நேர்காணல்களுக்குக் கணிசமான முக்கியத் துவத்தை அளித்து வந்துள்ளதென்பதை இத்தொகுப்பு வெளிக்காட்டுகிறது.

தற்போது ஞானம் வெளியிடும் இப்பெரும் தொகுப்பில் 60 நேர்காணல்கள் அடங்கியுள்ளன. இந்நேர்காணல் தொகுதி 1000 பக்கங்களில் வெளிவருகிறது. ஈழத்து இலக்கிய வரலாற்றில் இத்தகைய பாரியதொரு நேர்காணல் தொகுப்பு இதற்குமுன்னர் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் இலக்கிய வரலாற்றில் இத்தொகுப்பின் முக்கியத்துவம் எதிர்காலத்தில் துணியப்பெறும் என நம்புகின்றோம். இலக்கியம்சார் கருத்தியல் மற்றும் அழகியல் தொடர்பான சிந்தனைமிகு உரையாடல் தளத்தை இலக்கிய வெளி (Litterary Space) எனக் குறிப்பர். ஞானம் நேர்காணல்கள் என்னும் இப்பெரும்தொகுதி ஈழத்துத் தமிழ் நவீன இலக்கியம் தொடர்பான கருத்தியல் மற்றும் அழகியல்சார் இலக்கிய வெளியை வலுவும் வளமும் பெறச் செய்வதோடு தொடர்ச்சியான உரையாடல் முன்னெடுப்புக்குமான பல வெளிகளைத் திறந்திருக்கிறது. ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் காத்திரமான சிந்தனைப் போக்குகள் தம்முள் தாம் முடங்கிவிடாமல் அகன்ற ஓர் இலக்கிய வெளியில் விவாதிக்கப்பட்டுப் பகிரப்படல் வேண்டும் என்ற வரலாற்றுத் தேவையை இத்தொகுதி உணர்த்தி நிற்கின்றது.

இந்த நேர்காணல்களில் பெரும்பாலானவை ஞானம் ஆசிரியரால் பெறப்பட்டவை. ஏனைய நேர்காணல்களைப் பெற்றுத்தந்த செல்லத்துரை சுதர்சன், கலாநிதி ஸ்ரீகணேசன், திருமதி பத்மா சோமகாந்தன், இளைய அப்துல்லாஹ், முருகபூபதி, கவிஞர் பெரிய ஐங்கரன், திருமதி ஞானம்

ஞானசேகரன், வதிரி சி. ரவீந்திரன், கா. தவபாலன், ம.நவீன், கார்த்தியாயினி சுபேஸ், புலோலியூர் ஆ. இரத்தினவேலோன், த. மேகராசா ஆகியோருக்கும் இத்தொகுப்பில் இடம்பெற்ற நேர்காணல்களை அளித்த ஆளுமைமிக்க அறிஞர்களுக்கும் எமது பணிவான நன்றிகள்.

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்...!

ஞானம்–200 (ஜனவரி 2017)

புரிதல்

✦ ஈழத்தில் இலக்கியத்துறையில் 'ஞானம்' சஞ்சிகை காத்திரமான பல வேலைகளை செய்து வருகின்றது என்பதற்கு இருநூறாவது (200) இதழை சிறப்பிதழாக வெளியிட்டதன் மூலமும் அதற்கு முன்னைய கால சிறப்பிதழ்களின் மூலமும் நிரூபித்துள்ளது.

ஈழத்து இலக்கிய வானில் சஞ்சரிக்கும் நட்சத்திரங்களான பல இலக்கிய ஜாம்பவான்களின் நேர்காணல்கள் பல்கலைக்கழகங்களுக்கும், ஆய்வாளர் களுக்கும், இலக்கிய ஆர்வலர்களுக்கும் கையில் வைத்து பேணக்கூடிய 'பொக்கிஷம்" எனில் தவறில்லை.

ஈழத்தில் இவ்வாறான முயற்சிகளுக்கு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், புத்திஜீவிகள் தமிழ் பற்றாளர்கள், சமூக சிந்தனை உடையோர் ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும். பணிகள் தொடர வாழ்த்துகிறேன்.

மொழிவரதன் (205–ஜூன் 2017)

சமூகம்

27



உழைப்பும் கலைஇலக்கியமும்

உழைப்புக்கும் கலை இலக்கியத்திற்கும் உள்ள பிணைப்பு உயர்ந்தது. உற்று நோக்கப்பட வேண்டியது.

மனித வரலாற்றில் கலை நிகழ்வின் ஆரம்பம் சுவையானது. சுவாரசியமானது. கலையுணர்வு மனிதனோடு பிறந்தது. ஆதிகாலமனிதர் கூட்டமாக கையிலே அம்பு, வில்லு, ஈட்டி, தடிகள் சகிதம் கானகத்தே வேட்டையாடச் சென்றனர். வேட்டையாடுதலில் வெற்றிகண்ட அவர்கள், வெற்றிக்களிப்பு மேலிட வேட்டைக் கருவிகளால் பேரொலி எழுப்பி பேருவகை கொண்டனர். வெற்றிக்களிப்பு கலை உணர்வாகப் பிரவாகித்தது. குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்டவர் களால் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சியல்ல அது. ஆனால் அதுவே முதன் முதலில் தோன்றிய கலை நிகழ்ச்சி என்பர் சமூகவியலாளர்.

கலையும் வாழ்வும் ஒன்றிணைந்தது. உழைப்போடு பிணைந்து உந்து சக்தியாக விளங்குவது. ஓடம் வலிக்கும் மீனவர்கள் 'ஏலேலோ' பாடுவதும், வயலில் உழைக்கும் விவசாயிகள் ஏர்ப்பாட்டு இசைப்பதும், நீர் இறைக்கும்போது துலா மிதிக்கும் விவசாயிகள் துலாப் பாட்டுப் பாடுவதும் இதனாலேயே.

உலகம் மாற்றமடைந்தது. உற்பத்தி உறவுகளில் பிறழ்வு ஏற்பட்டது. பிரபுத்துவ சமுதாயம் உருவாகி, தொழில்புரட்சி தோன்றி, முதலாளித்துவ சமுதாயம் ஏற்பட்டு இன்று பூகோள மயமாக்கலினால் புதிய சமுதாயம் ஒன்று தோற்றமளிக்கிறது. கலை இலக்கியமும் நோக்கிலும் போக்கிலும் மாற்றமடைந்துள்ளது. உற்பத்திச் சாதனங்களை ஆள்பவனே கலையைக்கட்டுப்படுத்துகிறான். கலைகளின் உருவமும் உள்ளடக்கமும் இதனால் பாதிக்கப்படுகின்றன. பூகோளமய சமுதாயத்தில் இது பூதாகரமாகி உள்ளது. பரந்த சந்தையை நோக்கிக் கலைப்படைப்புகளைப் படைக்கும்படி கலைஞன் ஊக்கப்படுத்தப்படுகிறான். இதனால் கலை உணர்வு மலினப்படுத்தப்படுகிறது. பாலுறவு, வன்செயல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இதனை இன்று மிகப்பெரிய மக்கள் தொடர்பு சாதனமான சினிமாவில் காண்கிறோம்.

கலை கற்பனாவாத நிலையில் உள்ளது. அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளைக் காட்டி, சாதாரண உழைக்கும் மக்கள் அவற்றிலிருந்து விடுபட்டு முன்னேறும் உணர்வை ஏற்படுத்தும் வகையில் அமையாது, காதல், ஆடம்பரவாழ்வு, அதீத பாச உணர்வுகள் போன்றவற்றைக்காட்டி கற்பனை உலகில் மனிதனைச் சஞ்சரிக்கவைக்கும் கைங்கரியமே நடைபெறுகிறது.

கலைவடிவங்கள் பலம் வாய்ந்தவை. அவை பொய்மையை நம்பவைக்கும் சக்தியாக, போலிக்கற்பனையில் மயங்கிப் போதை உணர்வு தருவதாக இருக்கக்கூடாது. கலை இலக்கியங்கள் விழிப்புணர்வை ஊட்டுவதாக

அமையவேண்டும். ஆனால் இன்று அவை விழிப்புணர்வை மழுங்கடிப்பதாக, திசை திருப்புவதாக அமைந்து வருவது கவலைக்குரியது; கண்டிக்கப்படவேண்டியது.

மேதினக் கொண்டாட்டங்களில் பிரபல பாடகர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறுவதும் தொழிற்சங்க மாநாடுகளில் கோடிக்கணக்கான செலவில் இந்திய சினிமாப்பாடகர்களின் கலை நிகழ்வுகள் நடைபெறுவதும் சுட்டிக் காட்டப்பட வேண்டியவை.

கலை இலக்கியத்தின் பண்பும் பயனும் உழைக்கும் மக்களின் உயர்வுக்கு உகந்த வழிவகைக்கான செயற்பாட்டினை உடையதாக அமையவேண்டும் என்பது கலை இலக்கியத்தில் ஈடுபாடுள்ளவர்களின் மேதினச் சிந்தனையாக அமைவதாகுக.

ஞானம்–36 (மே 2003)

28

கல்விக் கூடங்களில் கலைஇலக்கிய உணர்வை வளர்ப்போம்

இன்று கலை இலக்கியத்துறை சார்ந்த கற்கை நெறிகள் கல்விக் கூடங்களில் விரும்பிப் படிக்கப்படுவதும் ஊக்குவிக்கப்படுவதும் குறைவாகவே உள்ளன. உயர்வகுப்புகளில் ஏனைய துறைகளுக்கு உகந்தவர்களல்லர் என ஒதுக்கப் பட்டவர்களே கலை இலக்கியப் பாடங்களைக் கற்கிறார்கள். பாடநெறிகளில் கடைசித் தேர்வாகவே இவை உள்ளன. பெரும் பான்மையான பெற்றோரின் விருப்பமும், பல ஆசிரியர்களின் வழிகாட்டலும் ஆலோசனையும்கூட இதற்குச் சார்பாகவே அமைகின்றன. யதார்த்தமாகச் சொல்வதாயின், சமூகத்தினரிடையே கலை இலக்கியத் துறை சார்ந்த கற்கை நெறிகளில் நாட்டம் குறைந்துள்ளது.

சமுதாய மேம்பாட்டிற்கும் தனிமனித ஆத்மபலத்திற்கும் கலை இலக்கியத்தின்

பங்கினையும் பயன்பாட்டினையும் சமூகத்தால் சரிவரப்புரிந்து கொள்ளப்படவில்லை. ஆழ்ந்து நோக்குகையில் கலை இலக்கியம் வாழ்க்கைக்கு அர்த்தம் கற்பிக்கிறது. வாழ்வியலை விளக்குகிறது. கம்பனும் வள்ளுவனும் படைத்த இலக்கியங்கள் வாழ்க்கையின் விளக்கங்களாக அமைந்துள்ளன. பாரதியும் கண்ணதாசனும் பாடிய பாடல்கள் வாழ்வியலுக்கு அர்த்தம் கற்பிக்கின்றன. புனைகதை இலக்கியத்தில் சிறுகதை சாளர தரிசனமாக வாழ்க்கையை நோக்குகிறது. நாவல் முற்று முழுதாக வாழ்வியலை ஆய்வு செய்கின்றது. 'மனிதன் சம்பந்தமான எதுவுமே இலக்கியத்திற்கு புறம்பானதல்ல' என்கிறார் இலக்கிய மாமேதை மார்க்ஸிம் கார்க்கி. மனிதனை மானிட நேயம் உள்ள மனிதனாக உருவாக்குவது கலை இலக்கியம்.

எமது கற்கை நெறிகளும் கல்விக் கூடங்களும் இதனை உற்று உணரவில்லை. ஆகவேதான் இன்று கல்வி நிறுவனங்கள் நற்பிரஜைகளை உருவாக்குவதில்லை எனக் கருதப்படுகின்றது. கல்விக்கூடங்கள் தொழில் வல்லுனர்களையும், பொருள் தேடும் வணிக மனப்பான்மை உள்ளவர்களையுமே உருவாக்குகின்றன. இவர்களுக்கும் சமூகத்திற்கும் அத்தியந்த உறவோ ஆத்மார்த்தமான பிணைப்போ இருப்பதில்லை. யந்திரமயமான பிணைப்பு வாழ்க்கையையே யந்திரமயமாக்கிவிடுகிறது. பாரதி கூறியது போல 'வேடிக்கை மனிதர்களா'கவே நம்மில் பலர் வாழ்கிறோம்.

கல்வித்துறையில் - கற்கை நெறியில் உருவாகியுள்ள இந்த முரண்பாடு களையப்பட வேண்டும். இதனைக் கல்வித் திட்டங்களைத் தீட்டுபவர்கள், அதற்கான தீர்மானங்களை எடுப்பவர்கள, செயற்படுத்துபவர்கள் சற்று ஊன்றிச் சிந்திக்க வேண்டும்.

இதற்கு, கலை இலக்கியவாதிகளின் பங்கும் பணியும் மிக முக்கியமானவை. இலக்கியம் வாழ்க்கைக்குப் பயன் படும் வகையில் படைப்புக்கள் படைக்கப்பட வேண்டும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

‘தேசங்களை உருவாக்குபவர்கள் கவிஞர்களும் கலைஞர் களும்தான். வணிகர்களும் அரசியல் வாதிகளுமல்ல’ என்று உலகப் புகழ் பெற்ற கலைஞானி ஆனந்தகுமாரசாமி அவர்கள் கூறியதை அர்த்தபுஷ்டியுடன் சமூகத்திற்கு எடுத்துச்செல்லவேண்டும்.

கல்விக் கூடங்களில் விஞ்ஞான மாணவர்கள் உட்பட உயர் வகுப்பு மாணவர்களுக்கு இலக்கியச் செயல்அமர்வுகள், இலக்கியப் போட்டிகள் நடத்தப்படவேண்டும். கலை இலக்கியச் சஞ்சிகைகள் இப்பணியினைச் செய்யலாம்.

ஆரவாரமின்றித் தன்பணியைச் செய்துவரும் ‘ஞானம்’ நான்காவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இவ்வேளையில், புதிய செயற்திட்டமாக முனைப்புடன் இதனை முன்னெடுத்துச் செல்ல விழைகிறது. வாசகர்கள் தொடர்ந்து நமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பார்களாக.

ஞானம்–37 (ஜூன் 2003)

29



கிராமிய மட்டத்தில் நாட்டுக்கூத்துக்குப் புத்துயிரளிப்போம்

எமது நாட்டில் பாரம்பரிய பண்பாட்டு அம்சங்களைப் பேணிக்காக்கும் பெருமை கிராமங்களுக்குரியதாகவே இருந்துள்ளது. மண்ணுடன் இணைந்த கிராம மக்களின் வாழ்வியலின் கலை இலக்கிய வெளிப்பாடாகக் கிராமிய நாடகம் மிளிர்கிறது. இது நாட்டுக்கூத்தென நயம்பட அழைக்கப்பட்டது. காலவோட்டத்தில் மேலைத்தேயக் கல்வி, பண்பாட்டு கலாசாரத் தாக்கத்தால் நாட்டுக்கூத்துக் கலைவடிவம் களையிழந்து, பூகோளமயமாகும் சூழலில் காலத்தோடு முரண்பட்டு நிற்பதாகக் கொள்ளப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இன்று பூகோளமயத்தின் எதிர்விளைவான கலாசாரச் சீரழிவைத் தடுக்க ஒவ்வொரு இனமும் புதிய சிந்தனையை உருவாக்கிச் செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

நம் நாட்டில் பதவியேற்றுள்ள புதிய கலாசார அமைச்சின் கருத்தியல் கிராமிய மட்டத்துக்கலைகளை, நாட்டாரியலை ஊக்குவிக்கும் பணியினைக் கொண்டது. நாட்டாரியலில் நல்லதோர் அம்சமான நாட்டுக்கூத்தின் கலை மதிப்பும் நாடக உலகில் இவற்றுக்குள்ள முக்கியத்துவமும் உணரப்பட வேண்டியுள்ளது. ஆட்டக்கலை, இசைக்கலை, ஒப்பனைக்கலை, நாடகக்கலை ஆகியவற்றின் அம்சமாக உள்ளது கூத்துக்கலை. இன்று நம்நாட்டில் நாட்டாரியல் கற்கை நெறியாகவும், கலை இலக்கியச் சிந்தனையாளருக்கு மறுவாசிப்பினை ஏற்படுத்துவதாகவும் இருக்கும் சூழலில் கூத்துக்கலையை வளர்த்தெடுக்கக்கூடிய வாய்ப்புண்டு.

சென்ற வருட இறுதியில் வடபுலத்தில் திருமறைக் கலாமன்ற ஏற்பாட்டில் நடந்த நாடகப் பெருவிழாவும், இரண்டு மாதங்களுக்கு முன்னர் 'பாரம்பரியக்கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின்' பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி 500க்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்குகொண்டு 11நாட்கள் நடைபெற்ற கிராமியக் கலையிசை நாடக கூத்துப் போட்டியும் நம்பிக்கைதரும் முயற்சிகளாகும். நாடகப் பெருவிழாவில் பகலில் கருத்தரங்கும் இரவில் வெவ்வேறு பிரதேசங்களின் கூத்து அளிக்கைகளும் நடந்தன. இதேகாலத்தில் கொழும்பில் தேசிய சமாதானக் கவுன்சிலின் அனுசரணையில் திரிகோணக் கலாஷேத்திரம் லயன்ஸ்வென்ற் திரையரங்கில் நடத்திய கூத்து நாடக விழாவும், கொழும்பு பிஷப் கல்லூரி கேட்போர்கூடத்தில் நடைபெற்ற பாரம்பரிய கூத்துநாடகம் பற்றிய நாடகப் பயிற்சிப்பட்டறையும் கருத்தரங்கும் ஆரோக்கியமான கலையிலக்கிய நிகழ்வுகளாகும். இந்நிகழ்வில் ஆய்வரங்குகள் வெறும் ஆய்வுக்கட்டுரை வாசிப்பதாக இருக்காது களநிகழ்வுகளுடன் நடைபெற்ற மையும், நாடகங்கள் வெறும் பொழுது போக்கு நிகழ்ச்சியாக இல்லாது செயல்முறை ஆய்வு செய்யும் நிகழ்ச்சியாக இருந்தமையும் சுட்டிக்காட்டப்படவேண்டியவை. தலைநகரில் நடைபெற்ற கலைநிகழ்வில் சிறப்பான அம்சம் சிங்களக் கலை இலக்கிய சோதரர்கள் நிகழ்வுகளில் பங்குகொண்டமையும்

பெருமளவு சிங்கள ரசிகர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்கியமையுமாகும். சிங்களக் கூத்து நாடக வடிவங்கள் தமிழில் இருந்து வந்தன என்பதைப் பெருந்தன்மையுடன் மனங்கொண்டு ஆய்வுசெய்து ஏற்று, நமது நாடக மரபு உத்திகளைப் புகுத்தி சிங்கள நாடகக் கலையைச் செழுமைப்படுத்தியவர் சிங்கள நாடக உலகின் தந்தை எனப்போற்றப்படும் மறைந்த பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர என்பதனை இளந்தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லியது அன்றைய நிகழ்வுகள். தமிழ் சிங்கள கூத்துகளில் ஒற்றுமையை இரு இனக்கலைஞர்களும் மொழியை மறந்து கலையால் இணைந்து கலைமொழியே இனத்தைக் கடந்தது என்பதை உணர்ந்து நின்றனர். இந்நிகழ்வினை நினைவுபடுத்தி தேசிய ரீதியில் கலை இலக்கியவாதிகள் சமாதானம், புரிந்துணர்வு ஆகியவற்றுக்கு தமது ஆக்கங்களையும் செயற்பாடுகளையும் பயன்படுத்த வழிசமைக்கவேண்டும். மாற்றாந்தாய் மனப்பான்மை இன்றி தமிழ்க்கலை இலக்கிய முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டுமென கலாசார அமைச்சினை வேண்டி நிற்கிறது ஞானம்.

ஞானம்–49 (ஜூன் 2004)

30



இயற்கையின் சீற்றம் ஏற்படுத்திய அனர்த்தம்

26. *12.2004* அன்று, ஆண்டின் இறுதிப் பகுதியில் நமது நாட்டில் நிகழ்ந்த கடல் கொந்தளிப்புக் காரணமாக 30,000க்கும் மேற்பட்ட மக்கள் உயிர் இழந்துள்ளனர். இலட்சக் கணக்கானோர் இடம் பெயர்ந்துள்ளனர். பலகோடி பெறுமதிமிக்க பொருட்கள் சேதமடைந் துள்ளன.

கடலில் எழுந்த இராட்சத அலைகள் நாட்டுக்குள் புகுந்து எண்ணற்ற உயிர்களைக் காவுகொண்ட வேளையில், 'இறைவா இது வென்ன சோதனை? எங்களால் எதுவுமே செய்ய முடியவில்லையே' என்று இறஞ்சிக் கதறுவதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியாத கையறு நிலையில் மனிதகுலம் தத்தளித்தது.

இந்த இயற்கை அனர்த்தம் மலேசியா, சிங்கப்பூர், மாலைதீவு, இந்தோனேஷியா,

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளின் கரையோரப் பகுதிகளில் பாரிய சேதங்களை ஏற்படுத்தியுள்ள போதிலும், இதுவரை சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி இலங்கையில் ஏற்பட்ட அழிவுகளே அதிகமானதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவின் சுமத்திரா தீவின் வடபகுதியில் தரையிலிருந்து ஏறத்தாழ 150 கிலோமீற்றர் தூரத்தில், 9.0 ரிச்டர் அளவில் ஏற்பட்ட பூகம்பம் காரணமாக உருவாகிய 'சுனாமி' என்னும் இராட்சதக் கடலலைகள் இந்தப் பாரிய அழிவுகளுக்குக் காரணமாயின.

கரையோர மாவட்டங்களான யாழ்ப்பாணம், முல்லைத் தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, மூதூர், களுத்துறை, மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை போன்ற கரையோரக் கிராமங்களிலேயே அதிக அழிவுகள் ஏற்பட்டுள்ளன. தெய்வாதீனமாக சிலாபம், மன்னார், புத்தளம் போன்ற கரையோரக் கிராமங்கள் இந்த அழிவிலிருந்து தப்பியுள்ளன.

இப்பேரழிவினை நாட்டின் 'தேசியப் பேரழிவு' என ஜனாதிபதி பிரகடனப் படுத்தியுள்ளார். அத்தோடு 'இயற்கையைப் போன்று இனபேதங்களை மறந்து செயற்படுவோம் நாட்டு மக்களைக் காப்போம்.' எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். இனம், மதம், மொழிகளைக் கடந்து எல்லோரும் ஒற்றுமை யாக இயற்கையின் சீற்றத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலைமையை அவரது கூற்று உணர்த்தியுள்ளது.

மீட்புப் பணிகளும் நிவாரணப் பணிகளும் நாடளாவிய ரீதியில் மக்களால் ஒற்றுமையாக முன்னெடுக்கப்படுகின்றன. ஆனாலும் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளுக்கு நிவாரணம் சென்றடைவதில் தாமதம் ஏற்படுகின்றது எனவும், தமிழ்ப் பகுதிகளுக்குச் செல்லும் நிவாரணம் ஒரு சிலரால் திசை திருப்பப்படும் எத்தனிப்பு முயற்சியும் நடைபெறுவதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன. இந்நிலையில் தமிழ்த் தேசியத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் தமது நிதியத்தி லிருந்து முப்பது கோடி ரூபா பணத்தை நிவாரணப் பணிக்காக

அளித்துள்ளார். தக்க தருணத்தில் கொடுத்துதவிய இந்தப் பெருநிதி மக்களுக்கு ஆறுதல் அளிப்பதாகவும், வரவேற்கக் கூடியதுமான விடயமாக அமைந்துள்ளது.

இயற்கையின் அழிவுக்கு எதிரான போராட்டமே மனிதகுலத்தின் போராட்டமாக அமைய வேண்டும் என்பது யாவராலும் உணரப்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளும், பல்வேறு நிறுவனங்களும் பாராட்டக்கூடிய வகையில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளன. பாதிப்பற்ற பகுதிகளில் உள்ள மக்களின் சேவைகள், உதவிகள் அளவுக்கதிகமாகக் கிடைத்துள்ளன. இதில், சக்தி - சிரச ஊடகங்களின் பணிகள் குறிப்பிட்டுக் கூறக்கூடிய வகையில் அமைந்துள்ளன.

இத்தகைய கடற்கோள்களால் ஏற்படும் பேரழிவுகள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் ஏற்பட்டதாகப் பழந்தமிழ் இலக்கியங்களான புறநானூறு, சிலப்பதிகாரம் ஆகியவற்றில் சான்றுகள் உள்ளன. ஆதிகாலத்தில் தென்கிழக்கு ஆசிய நாடுகள், அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா யாவும் ஒரே நிலப்பரப்பாக இருந்தன எனவும், இதனை லெமூரியாக் கண்டம் என அழைக்கப்பட்டது எனவும், இது 'கடல் கொண்ட தென்னாடு' எனவும் குறிப்புகள் உள்ளன. லெமூரியாக் கண்டத்தின் பல பகுதிகள் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட கடற் கோள்கள் காரணமாக கடலில் அழிந்து போயின. இவ்வாறான கடற்கோள்கள் முன்னர் நான்கு தடவைகள் ஏற்பட்டுள்ளதாகவும், இவற்றால் 49 நாடுகள் அழிந்து போயுள்ளன எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அவ்வாறானதோர் கடற்கோள்தான் இம்முறையும் ஏற்பட்டதோ என எண்ணத் தோன்றுகிறது. இம்முறை ஏற்பட்ட அனர்த்தத்தில் பர்மாவின் நிலப்பரப்பு 40 அடி உயர்ந்து விட்டது எனவும், சுமத்திரா தீவு தெற்கு நோக்கி 100 அடி நகர்ந்து விட்டது எனவும் கூறப்படுகிறது.

இத்தகைய பாரிய அழிவுகளை முன்கூட்டியே அறிவதற்கு இப்போது நவீன கருவிகள் உள்ளன. அமெரிக்கா, ஜப்பான், இந்தோனேஷியா, கனடா உட்பட உலகின் 26

நாடுகளில் இத்தகைய கருவிகள் உள்ளன. இக்கருவிகளின் உதவியால் அந்நாட்டினர் தமது நாடுகளைப் பாதுகாத்துக் கொள்கின்றனர். நமது நாட்டிலும் இத்தகைய கருவிகளை அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற 'சுடலை ஞானம்' இப்போதுதான் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

இம்முறை ஏற்பட்ட அழிவுகள் இதுவரை சரியான முறையில் கணக்கிடப்படவில்லை, இன்னும் அதிகமாக இருக்குமோ என்று அஞ்சும் நிலையே காணப்படுகிறது.

நம் நாட்டிலும், மற்றும் இந்தியா உட்பட்ட ஆசிய நாடுகளிலும் இப்பேரழிவால் பாதிப்புக்குள்ளான அத்தனை மக்களின் துயரங்களிலும் ஞானம் பங்குகொள்கிறது. அழிந்துபோன உயிர்களுக்காகக் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது.

புதிய ஆண்டை நாம் எல்லோரும் ஒரு சவாலான ஆண்டாகவே எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு நிர்பந்திக்கப் பட்டுள்ளோம். பேரழிவால் தவித்து நிற்கும் நம் மக்களுக்கு எம்மாலான உதவிகளை வழங்கவேண்டும், ஆதரவுடன், இன, மத பேதமின்றி எல்லோரும் கைகொடுக்க வேண்டும், மீண்டும் நமது மக்கள் பழைய வாழ்க்கை நிலைக்கு வர எம்மாலானா உதவிகள் புரிய வேண்டும், இதுவே புதிய ஆண்டின் சங்கற்பமாக அமைய வேண்டுமென ஞானம் யாவரையும் பணிவன்புடன் வேண்டுகிறது.

ஞானம்–56 (ஜனவரி 2005)

31



மாணவப் பருவத்தில் வாசிப்புப் புழக்கத்திற்கான தூண்டல்

சக்தி தொலைக்காட்சியில் பாடசாலை மாணவர்களின் பேச்சுத் திறனை வெளிக் கொணரும் 'களம்' என்ற விவாத அரங்கு நிகழ்ச்சி பிரதி சனிக்கிழமை தோறும் நடைபெற்று வருகிறது.

சமீபத்தில் பதினாறு பாடசாலைகள் பங்குபற்றிய இறுதிக்கட்ட நிகழ்ச்சியில் நடுவ ராகப் பணியாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. என்னுடன் வேறு இரு கல்வி மான்களும் நடுவர்குழுவில் இருந்தனர். அந்த விவாத அரங்கில் கொழும்புப் பாடசாலையைச் சேர்ந்த மூன்று மாணவர்களும் மலையகப் பாடசாலையைச் சேர்ந்த மூன்று மாணவிகளும் பங்கேற்றனர்.

'புகலிட இலக்கியம் ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது'

என்பது விவாதத்தின் தலைப்பு. இதனை ஒட்டியும் வெட்டியும் மாணவர்கள் விவாதித்தனர்.

இருபகுதியினரும் பெரும் ஆவேசமாகப் பேசினர். ஆணித்தரமாகத் தமது கருத்துக்களை முன்வைத்தனர். உணர்ச்சி பொங்க மேசையில் குத்தினர். நெற்றி வியர்வை யைக் கைக்குட்டையால் ஒற்றியபடி 'நடுவர்களே' என அடிக்கடி விளித்துத் தமது நியாயங்களை முன்வைத்தனர்.

நானும் என்னுடன் சக நடுவர்களாகக் கடமையாற்றி யவர்களும் அசடுவழிய ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்துக் கொண்டிருந்தோம். காரணம், கொடுக்கப்பட்டிருந்த தலைப்பைப் பற்றிய விளக்கம் அந்த ஆறு மாணவர்களுக்கும் இருக்கவில்லை.

விவாதத்தின்போது புகலிட இலக்கியம் என்றால் என்ன? நவீன இலக்கியம் என்றால் என்ன? எனக் கேள்விகளை எழுப்பி அவர்களுக்குத் தெரிந்த புதுப்புது வியாக்கியானங்களைக் கொடுத்துத் தமது வாதங்களை முன்வைத்தனர்.

புகலிட இலக்கியம் என்பது தமிழ் நாட்டிலிருந்து நமது நாட்டுக்குள் புகுந்து கொண்ட இலக்கியம் என்ற கருத்தை ஒரு மாணவி கூறினார். எதிரணியில் பேசிய மாணவன் நவீன இலக்கியம் பற்றிக் குறிப்பிடும்போது கடந்த பத்து வருடங்களில் நமது நாட்டில் தோன்றிய இலக்கியங்களே நவீன இலக்கியங்கள் என்றான்.

பதினாறு பாடசாலைகள் கலந்துகொண்ட விவாத அரங்கில் இறுதிச் சுற்றுவரை தேர்வான மாணவர்களின் சமகால இலக்கியம் பற்றிய அறிவு இத்தகையதாக இருந்தது. குறிப்பிட்ட இந்தக் 'களம்' நிகழ்ச்சியைப் பலரும் பார்த்திருக் கக்கூடும்.

இது ஒரு சாதாரண விடயம் அல்ல. அதிர்ச்சி தரும் விடயம். ஈழத்து இலக்கியத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டிய எதிர்காலச் சந்ததியினர், சமகால இலக்கியம் பற்றி எதுவுமே தெரியாதவர்களாகத் திகழ்கின்றனர்.

இதற்குக் காரணம் என்ன?

மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் முற்றுமுழுதாக அருகிவிட்டது. பாடத்திட்டத்தில் உள்ள நூல்களைவிட வேறு

நூல்களை மாணவர்கள் வாசிப்பதாகத் தெரியவில்லை. வாசிக்கவேண்டிய ஒரு 'தேவை' ஏற்பட்டால் மட்டுமே ஒன்றை வாசிப்பது என்ற நிலைமை இன்று தோன்றியுள்ளது. இது ஓர் ஆரோக்கியமான சூழல் அல்ல.

வாசிப்பு என்பது அறிவை வளர்ப்பதற்கு ஆளுமையை வளர்ப்பதற்கு என்ற உண்மை மாணவ மட்டத்திலேயே உணர்த்தப்படவேண்டும். 'கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்' என்ற முதுமொழி மாணவர் மனங்களில் ஆழமாக ஊன்றப்படவேண்டும்.

இதில் ஆசிரியர்களின் பங்கு மிகமுக்கியமானது. ஆசிரியர்கள் கூறுவதை மாணவர்கள் ஓரளவாவது கேட்டு நடப்பர். வாசிக்கத் தகுந்த சிறந்த நல்ல நூல்களை எடுத்துக் கூறி அவற்றை வாசிக்கும்படி மாணவர்களைத் தூண்ட வேண்டும். மறுமுறை அவர்களைச் சந்திக்கும்போது அந்த நூல்களை வாசித்தீர்களா எனக் கேட்கவேண்டும். அந்த நூல்களில் அவர்கள் கண்ட சிறப்புக்கள் ரசித்த பகுதிகள் பற்றிக் கேட்கவேண்டும். இப்படிச் செய்வது மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு தூண்டலாக அமையும். இத்தகைய தூண்டல்கள் வாசிப்பதற்கான 'தேவை'யை ஏற்படுத்தும். இதேவேளை சிறந்த நல்ல நூல் களைப் பாடசாலை நூல் நிலையங்களில் மாணவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளையும் செய்து கொடுத்தல் வேண்டும்.

ஆசிரியர்கள் வருங்காலச் சமுதாயத்தை உருவாக்கு பவர்கள். தமது பொறுப்பை அவர்கள் நன்கு உணரவேண்டும். பாடசாலை வகுப்பறைகளில் தினமும் ஐந்து நிமிடமாவது இத்தகைய தூண்டல்களை ஏற்படுத்த அவர்கள் முயற்சி செய்யவேண்டும். மாணவ சமுதாயத்தை நல்வழிப்படுத்திய ஆசான்கள் என்றும் மாணவர்களால் நினைவு கூரப்படுவர்

பாடசாலை மட்டத்தில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கான தூண்டல்கள் இன்று ஒரு கட்டாய சமூகத்தேவையாகியுள்ளது என்பதை ஆசிரிய சமூகத்திற்கு ஞானம் வலியுறுத்திக்கூற விரும்புகிறது.

ஞானம் 62 (ஜூலை 2005)

32



பெண்களுக்கு எதிராகப் பெருகிவரும் வன்முறைகள்

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் அமெரிக்கத் தொழிற்சாலையொன்றில் பணியாற்றிய பெண்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் கோரியும், அடக்கு முறைகளுக்கெதிராகவும் ஒன்று திரண்டு போர்க்கோஷம் எழுப்பி வெற்றிபெற்றனர். இதுவே 1913 இலிருந்து, மார்ச் 8ஆந் திகதியை சர்வதேச மகளிர் தினமாகப் பிரகடனப்படுத்தி ஆண்டுதோறும் அனுஷ்டிப்பதற்கான முன் னோடிச் சம்பவமாக அமைந்தது.

உலகின் சனத்தொகையில் 53 சதவீத மானவர்கள் பெண்கள். எனினும் சட்டங்கள், சம்பிரதாயங்கள், சடங்குகள் என்னும் தளை களால் இறுகக்கட்டி, அவர்களுக்கு மனுஷி என்றரீதியில் இருக்க வேண்டிய உரிமை களை மறுத்து, ஒடுக்கி வைத்து அடக்கு முறை களுக்கும், வன்முறைகளுக்கும் உட்படுத்த

வருவது முழுமையாக இன்னும் ஒழியவில்லை. அநேகமாக உலகின் எல்லா நாடுகளிலும் இவை ஏதோ ஒரு வகையில் நிகழ்ந்தபடியேயுள்ளன என்பது மறைக்கப்பட முடியாத உண்மை.

நமது நாட்டில் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கொடுமைகளை துன்புறுத்தல்களை வன்முறைகளை பாலியல் ரீதியான குற்றங்களை அன்றன்றாடு தினப் பத்திரிகைகளில் படிக்கும்போது மனிதநேயம் கொண்டவர்களின் நெஞ்சம் பதறுகின்றது. இந்த அடாத்தனமான செயல்களை கொடுமை களைக் கண்டு, மனம் கொதித்து எழுகின்றது. பெண்களைத் தாயாக, மனைவியாக, மகளாக அன்பும் ஆதரவும் அளித்து சம உரிமையுள்ளவர்களாக மதிக்கவேண்டிய நமது சமுதாயம், இவ்வளவு கீழ்த்தரமான நிலைக்கு இறங்கிவிட்டதே என அஞ்சவேண்டியுள்ளது. வெட்கப்பட வேண்டியுள்ளது.

பெண்கள் வெளியே பயணிக்கும்போது, வேலைத்தலங் களில் பணியாற்றும் இடங்களில், ஏன் - பாடசாலைகளில் கூட, பாலியல் சேட்டைகளுக்கும், பலவகை வன்முறைகளுக்கும் ஆளாகி வருகின்றனர். வீட்டு வன்முறைகளுக்கும் குறை வேயில்லை.

பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களையும் வன்முறை களையும் ஒழிப்பதற்கான அனைத்துலக உடன்படிக்கையை எம்நாடு 1981இலேயே ஏற்றுக் கொண்டிருக்கிறது. பாலியல் தொல்லை, தாக்குதல் முதலியவை, குற்றத்துக்குரிய செயல் கள் 1995, 1998 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு குற்றவியல் சட்டத்திருத்தங்களில் மூலமாகக் கூறப்பட்டி ருக்கின்ற போதிலும், இலங்கைச் சனத்தொகையில் 51 சதவீதமானவர்களாக விளங்கும் பெண்களில், 60 சதவீத மானவர்கள் வன்முறைகளுக்குள்ளாகி வருகின்றனர் என்பது இச்சட்டங்களை நடைமுறைப் படுத்துவதிலுள்ள பலவீனத்தையும், ஓட்டை உடைசல்களையும், சட்டங்களைச் செயற்படுத்துவோரின் அக்கறையின்மையையுமே அம்பலப் படுத்துவதாயுள்ளன.

இலங்கையில் நிலவரம் இவ்வாறிருக்க, சென்ற சிலவாரங்களாக கட்டுநாயக்க விமான நிலையத்தில், கலங்கிய உள்ளமும், கண்ணீரும் கம்பலையுமாக, வெட்கத்தினாலும் துக்கத்தினாலும் முகங்களை மூடிமறைத்தபடி தாம் அனுபவித்த கொடுமைகளை நினைத்து வெடித்து அழுதபடி வந்திறங்கும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு, பணிப் பெண்களாகச் சென்ற பெண்களின் அவலக்காட்சிகளை சின்னத் திரையில் காணும்போது, எமது நாட்டுப் பெண்கள் வெளிநாடுகளில் அனுபவிக்கும் பாலியல் வன்முறைகளை உணரமுடிகின்றது. அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொள்ள ஆசைப்பட்டு அரசாங்கம் இப்படியும் ஒரு இழி தொழிலில் ஈடுபட்டிருக்கிறது என ஆத்திரமுற வேண்டியுள்ளது.

வருடந்தோறும் ஆண்டில் ஒருநாள் - மார்ச் 8 அன்று மட்டும், சர்வதேச மகளிர் தினத்தை, பெண்கள் அமைப்புகளும், மனித உரிமை ஆர்வலர்களும், தலைநகரிலும் மற்றும் நகரங்களிலும், ஆர்ப்பாட்டம், ஊர்வலம், உரிமைக்கோஷம் கருத்தரங்கு என நடத்தினால் மட்டும் போதாது, ஏனைய 364 நாட்களிலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டிய உரிமைப் போராட்டம் இது. கல்வி அறிவுள்ள, நகரங்களில் வாழும் பெண்கள் மத்தியில் மாத்திரமல்லாமல், கிராமப் பகுதிகளையும் தோட்டப் பிரதேசங்களையும் வாழ்விடமாகக் கொண்ட கல்வியறிவில்லாத அடிமட்ட மக்களிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் போதே பெண்களுக்கு எதிரான வன்முறைகளையும் இழிசெயல்களையும் ஓரளவுக்கு குறைக்கமுடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஞானம்–70(மார்ச் 2006)

33



மலையகப் பாரம்பரியக் கலைகள் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும்

இருநூறு வருடங்களுக்கு முன்னர் தமிழகத்திலிருந்து இலங்கைக்குக் குடிபெயர்ந்த மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தங்களது உழைப்பை மட்டும் இங்கு கொண்டு வரவில்லை. தமது பாரம்பரியக் கலைகளையும் இங்கு கொண்டுவந்தார்கள்.

சமீப காலம்வரை இக்கலைகள் மலையக மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந் திருந்தன; அவர்களால் பேணிப் பாதுகாக்கப் பட்டன.

காலையில் அவர்களைத் 'தப்பு' ஓசை துயிலெழுப்பியது அது 'காலைத்தப்பு' (முரசம்). பின்னர் வேலைத்தலத்திற்குச் செல்வதற்குப் 'பிரட்டுத்தப்பு'. வேலை முடிந்து வீடு செல்வ தற்கு மாற்று ஓசையுடன் கூடிய தப்பு. காவடி ஆட்டம், கரகாட்டம், திருவிழாக்கள், சமயக் கிரியைகள், சடங்குகள் போன்றவற்றிற்கு

வெவ்வேறு சுருதிகொண்ட தப்பு. இப்படியாகப் பதினாறு வகைத் தப்பு ஓசைகள்.

மாலைமயங்கி இரவு தொடங்கி விட்டால் தொழிலாளர் வாழும் லயங்களில் ஏதாவது ஒரு காம்பராவில் ஒருவர் பெரிய எழுத்து மகாபாரதம் அல்லது நல்லதங்காள் கதையை இராகத்துடன் வாசிக்க மற்றவர்கள் சூழ்ந்திருந்து இரசிக்கும் காட்சி.

சமய உணர்வும் கேளிக்கையும் உடற்பயிற்சியும் சார்ந்த சிலம்பாட்டம், கோலாட்டம், கும்மி, கரகாட்டம், காவடி, பொய்க்கால்குதிரை, ஒயிலாட்டம், குறவஞ்சி...

இவற்றைவிட உடுக்கு, தமூர், செஞ்சனக்கட்டை, சங்கு, தண்டை இன்னோரன்ன வாத்தியங்கள்...

அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் கூத்து, காமன் கூத்து... என மாசி பிறந்து விட்டால் கூத்துக்கள் குதூகலிக்கும்.

இன்று இக்கலைகள் பல பேணுவாரின்றி மறைந்து வருகின்றன. இக்கலைகளைப் பேணிப் பாதுகாத்து வந்தவர்கள் பலர் வறுமையிலும் முதுமையிலும் வேறு காரணங்களாலும் இக்கலைகளை வளர்த்தெடுக்கமுடியாத நிலையில் உள்ளனர்.

மலையகத்தின் இளந்தலைமுறையினருக்கு இவற்றி லெல்லாம் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. இன்றைய நவீன வாழ்க்கை முறையும் பிற பண்பாட்டு அம்சங்களின் தாக்கங்களும் இவர்களைத் தமது பாரம்பரியக் கலைகளைக் பேணிக் காக்காது விலகிச் செல்ல வைக்கின்றன.

லயக்காம்பராக்களை ரீ. வி. க்களும் வானொலிகளும் ஆக்கிர மிக்கின்றன. இவை இளந்தலைமுறையினரின் ஆர்வங்களை வேறு திசைகளுக்கு இட்டுச் செல்லத் தொடங்கியுள்ளன. 'தப்பு' போன்ற வாத்தியக் கலைகள் கீழ்மட்ட மக்களுக்கு உரியவை அவற்றைப் பழகுவது தமக்குக் கௌரவக் குறைவு என்ற தப்பான எண்ணமும் இளைய தலைமுறையினரிடையே நிலவுகிறது.

ஒரு சமூகம் அழிந்துவிடாமல் நிலைப்பதற்கு அச்சமூகத்தின் கலை கலாசாரம் பண்பாடு ஆகியன பாதுகாக்கப்படவேண்டும். அச்சமூகத்தின் தனித்துவம் பேணப்பட வேண்டும். இல்லை யெனில் அச்சமூகம் காலப்போக்கில் தனது அடையாளத்தை

இழந்துவிடும். தமது மூத்த தலைமுறையினர் தமக்கு அளித்த அரிய செல்வங்களான கலைகளைப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்கு வழங்கவேண்டியது தமது தலையாய கடமை என்பதனை மலையகத்தின் இன்றைய தலைமுறையினர் உணர்ந்து கொள்ளவேண்டும்.

மலையகத் தலைமைகள் இவ்விடயத்தில் அக்கறையுடன் செயற்படவேண்டும். இக்கலைகளைப் பாடசாலை மட்டத்தி லேயே அறிமுகஞ்செய்ய ஆவன செய்ய வேண்டும். மலையகப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள், மலையகக் கல்விமான்கள் இதுபற்றிச் சிந்திக்கவேண்டும்.

கலாசார அமைச்சராக கௌரவ லக்ஷமன் ஜெயக்கொடி இருந்த காலகட்டத்தில் 'மலையகக் கலை மேம்பாட்டுக்குழு' என்ற அமைப்பு அரசமட்டத்தில் இயங்கி மலையகக் கலைஞர்களுக்கு விருதுகளும் பணப்பரிசில்களும் கொடுத்துக் கௌரவித்தது. இப்படியான நிலைமையை மீண்டும் உருவாக்குவதற்கு மலையக அரசியல் சக்திகள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

மாகாணமட்டத்திலும் பாரம்பரியக் கலைஞர்களை ஊக்கு விக்கும் திட்டத்தை மத்திய மாகாண, ஊவாமாகாண சபைகள் முன்னெடுக்கவேண்டும்.

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் நாடகமும் அரங்கியலும் தனியான துறைகளாக இயங்கி அங்குள்ள வடமோடி, தென்மோடி கூத்துக்கள் பாடநெறிகளில் அடங்கியுள்ளன. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அதிகமான மலையக மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அங்கு நாடகமும் அரங்கியலும் ஒரு துறையாக ஆரம்பிக்கப்பட்டு மலையகக் கூத்துக்களான பொன்னர் சங்கர் கூத்து, அருச்சுனன் தபசு, காமன் கூத்து போன்றவை பாடநெறிகளில் உள்ளடக்கப்படலாம். அதேபோன்று மலையகத்தில் புதிதாகத் தொடங்கவிருக்கும் பல்கலைக்கழகத்திலும் இப்பாடநெறிகள் இடம்பெறுவதை உறுதிசெய்ய சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகத்தினரும், மலையக அரசியற்தலைமைகளும் மலையகக்கல்விமான்களும் முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும்.

ஞானம் 75 (ஆகஸ்ட் 2006)

34



மலையகத்தில் தமிழ்க் கல்வி

மலையகத்தில் தமிழ் மொழிக் கல்வியின் தரம் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களின் தரத்தைவிடத் தாழ்ந்து காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருப்பினும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் காணப்படும் குறைபாடுகள் உடனடியாகவே சீர் செய்யப்பட வேண்டியவை.

மிகச் சாதாரணமான இலகுவான தமிழ் வசனங்களைக்கூடச் சரியாக எழுதத்தெரியாத ஆசிரியர்கள் பலர் இன்று மலையக ஆரம்பப் பாடசாலைகளில் கடமையாற்றுவதை அவதானிக்க முடிகிறது. இவர்களிடம் கல்வி கற்கும் மாணவர்களும் தமிழைப் பிழையாக எழுதக் கற்றுக் கொள்கின்றனர். குறிப்பாக ‘லகர ளகர’ பேதங்கள், ‘ரகர றகர’ பேதங்கள் தெரியாத ஆசிரியர்கள் பலர் மலையகப்

பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்றனர். லகர, ளகர பேதத்தை உச்சரிப்பு மூலம் பிரித்தறிய முடியாதவர்களாகவும் இவர்கள் இருக்கிறார்கள். உதாரணமாக 'வலம்' என்ற சொல்லை எழுதப்புகும் மாணவன் அதில் வரும் லானா குண்டு லானாவா? கால்லானாவா? என அருகில் இருக்கும் மாணவனைக் கேட்பான். இப்படியான குண்டுலானா, கால்லானா சொற்பிரயோகம் மலையகத்தில் மாத்திரமே காணப்படுகிறது. அதேபோன்று மரம் என்ற சொல்லை எழுதப் புகும் மாணவன் அதில் வரும் ரானா சின்னரானாவா? பெரியரானாவா? எனத் தடுமாறுவான். இவ்வுதாரணங்களில் கால்லானா என்பது 'ள'வையும், பெரியரானா என்பது 'ற'வையும் குறிக்கும்.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பார்கள். இவர்கள் சிறுவயதிலே கற்றுக் கொண்டதைப் பெரியவர்களான பின்னரும் திருத்திக் கொள்ள அக்கறைப்படுவதில்லை. இவர்களிற் பலர் ஆசிரியர்களாகி அடுத்த தலைமுறைக்கும் இந்தத் தவறுகளைக் கடத்துகின்றனர்.

மலையகத்தில் பத்தனைச் சந்தியில் பலவருடங்களாக 'னாவலப்பிட்டி' என்னும் பெயர்ப்பலகை உள்ளது. இங்கு தான் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையும் உள்ளது. தமிழ்ப் பிரதேசம் ஒன்றில் தமிழ் ஊர்ப் பெயர் இப்படி எழுதப்பட்டிருப்பதை தினமும் பார்த்துச் செல்லும் இங்குள்ள மாணவர்கள் தாமும் இப்படி எழுத ஆரம்பித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

'வந்து போனான்' என்ற வசனத்தை எழுதும் போது வந்துப்போனான் என 'ப்' மிகுந்து எழுதப்படுவது மலையகத்தில் மிகவும் சாதாரணமாகக் காணப்படுகிறது.

இது போன்று சொற்களைப் புணர்த்தி எழுதும் போது தேவையற்ற முறையில் எழுத்துக்கள் மிகுந்து காணப்படுவது படித்தவர் மட்டத்திலும் காணக்கூடியதாக உள்ளது.

கண்டியில் உள்ள உயர் கல்லூரி ஒன்றில் எனது மகன் கல்வி பயின்றான்.

‘உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு’

என்ற திருக்குறளை அவனது ஆசிரியை கற்பிக்கும் போது ‘உடுக்கை’ என்ற சொல்லுக்கு ‘உடுக்கு’ என்ற வாத்தியக் கருவி எனப் பொருள் கூறிக் கற்பித்தார். வீட்டில், நான் உடுக்கை என்பது வாத்தியக்கருவி அல்ல, அது உடையைக் குறிக்கும் என்று கூறியதை அவன் ஏற்கத் தயாராக இருக்கவில்லை. ஏனென்றால் ஆசிரியர் கூறினால் அது சரியாகத் தான் இருக்கும். ஆசிரியர் பிழைவிடமாட்டார் என்ற நம்பிக்கை.

நீண்ட நேரம் யோசித்து விட்டு மகன் கூறினான். திருவள்ளுவர் ‘உடுப்பை இழந்தவன் கை போல’ என்று கூறவில்லையே, உடுக்கை இழந்தவன் என்றுதானே கூறியி ருக்கிறார் என்றான். இதனைக் கேட்ட அவனது சகோதரியும் அவன் பக்கம் சேர்ந்து கொண்டாள். என்பாடு தர்ம சங்கடமாகிப் போய்விட்டது. ஆசிரியர் கற்பிக்கும் விடயங்கள் எவ்வளவு தூரம் பசுமரத்தாணிபோல மாணவர் மனதிலே பதிந்து விடுகிறது என்பதற்கு மேலே கூறப்பட்ட விடயம் ஒரு உதாரணம் மட்டுமே.

மலையகச் சிறார்களின் கல்வி முழுக்க முழுக்க மலையக ஆசிரியர்களின் கையிலேயே தங்கியுள்ளது. மலையக ஆசிரியர்கள் தமது பொறுப்பை நன்குணர்ந்து செயலாற்ற வேண்டும். குறைந்த பட்சம் இலகு தமிழ் வாக்கியங்களை யாவது மாணவர்கள் சரியாக எழுதுவதற்குக் கற்பித்தல் வேண்டும். இதற்கு மாணவர்களிடையில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும்.

மலையகக் கல்விமான்கள் இவ்விடயத்தில் அக்கறை யுடன் செயற்பட்டால் மட்டுமே மலையகத் தமிழ்ப் பிள்ளைகளின் மொழிப்பிரயோகம் எதிர்காலத்திலாவது சிறப்புற அமையும் என்பதனைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

ஞானம் 88 (செப்டெம்பர் 2007)

35



இனி ஒரு விதி செய்வோம்!

‘அரங்கில் தோன்றுபவரை வாழ்த்திப் பாராட்டும் வகையில் அவருக்கு மாலை சூட்டுவதற்குப் பதிலாக நல்ல தமிழ் நூல்களை அன்பளிப்பாக வழங்குங்கள்’ என்கின்றார் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி.

‘விசேட வைபவங்களில் மற்றையோருக்குப் பரிசளிக்க விரும்புபவர்கள், ஈழத்து எழுத்தாளர் களின் நூல்களைப் பயன்படுத்துங்கள்’ என்கின்றார் மல்லிகை ஜீவா

‘நமது நண்பர்கள், உறவினர்கள் முதலியோருக்கு, அவர்களின் பிறந்த தினம், திருமண விழா மற்றும் மங்கல நிகழ்ச்சிகளின் போது பரிசுப் பொருட்களைக் கொடுக்கின் றோமல்லவா? அப்பொழுது, இலங்கை எழுத்தாளர்கள் எழுதிய நல்ல நூல்களையும் பரிசளிப்போம் என இனி ஒரு விதி செய்வோம்’

என்று கூறியது யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான ‘கலைச் செல்வி’யின் 1962 ஆடி இதழ்.

இது கட்டளைச் சட்டம் அன்று. காத்திரமான ஒரு புத்திமதி.

புதுமனை புகும் விழா, பிறந்தநாள் விழா, பூப்புனித நீராட்டு விழா, திருமண விழா போன்ற மங்கல விழாக்களுக்குச் செல்ல இருப்பவர்களின் கவனத்துக்கு.

அன்பளிப்பாகப் பணத்தை வழங்குவதா? பண்டத்தை வழங்குவதா? பணமென்றால் எவ்வளவு? பண்டமென்றால் எது? என மனதிற்குள்ளே பட்டிமன்றம் நடத்தி நடுவர் இல்லாத காரணத்தினால் சரியான - பொருத்தமான முடிவை எடுக்க முடியாமல், தடுமாறித் தத்தளிப்பவர்களின் கவனத்துக்கு.

சமர்ப்பிக்கப்பட்ட கனதியான வேண்டுகோள்! காலத்துக்குத் தேவையான அறிவுரை! கண்ணியமான ஆலோசனை!

இந்த ஆலோசனைக்குக் காதுகொடுத்து - அதைக் கருத்தில் எடுத்து எத்தனை பேர் செயற்படுத்துகின்றார்கள்? யார் யாருடைய நூல்களை வழங்குகின்றார்கள்? என்பவை பற்றி இதுவரை யாருமே ஆராய்ந்ததாகத் தெரியவில்லை.

ஆனால் -

அமரர் வரதர், நாவலாசிரியர் செங்கை ஆழியான் போன்ற சிலர் இத்தகைய அன்பளிப்பைச் செய்துள்ளார்கள் என்பது சிலர் மட்டும் அறிந்த சங்கதி! இப்படி ‘அங்கொன்றும் இங்கொன்றும்’ என்ற மனநிலை வளர்ந்து ‘எங்கெங்கும் - எல்லோரும்’ என மலர வேண்டும் என்பதே ‘ஞானம்’ இதழின் ஆசை - எதிர்ப்பார்ப்பு - இலட்சியம்!

ஏனெனில்

அறியாமையாலோ ஆர்வமின்மையாலோ எங்கள் நாட்டு எழுத்தாளர்களின் நூல்களை வாசிக்காதிருந்தவர்கள் அவற்றை வாசித்துப் பார்ப்பதற்கு

எழுத்தாளர்கள் - பத்திரிகையாளர்கள் - விமர்சகர்கள் போன்றோரைக் கொண்ட குறுகிய வட்டத்தைக் கடந்து எழுதப் படிக்கத் தெரிந்த எல்லோரையும் இந்த நூல்கள் எட்டுவதற்கு.

காலப்போக்கில் இந்தச் சாதாரண வாசகர்கள், இலக்கியப் பிரக்ஞையுடைய வாசகர்களாகவும், அதனைத் தொடர்ந்து மண்வாசனை வீசும் எழுத்தாளர்களாகவும் பரிணமிப்பதற்கு.

பணத்தையும், ஒப்புக்காக ஏதோ சில பொருட்களையும் அன்பளிப்பாக வழங்குவதைவிட, தரமான நூல்களை வழங்குவதே பெறுமதி மிக்கது - பெரும் பயன் தருவது - கௌரவம் மிக்கது என்ற உணர்வு பரவுவதற்கு எழுத்தாளர்களுக்கும் வாசகர்கட்குமிடையே ஆரோக்கியமான - கனதியான நல்லுறவு ஏற்படுவதற்கு-

இந்த நாட்டு எழுத்தாளர்களைப் பாராட்டிப் போற்றிக் கௌரவிக்கும் பண்பு சாதாரண மக்களிடையே உருவாவதற்கு.

நல்ல தரமான நூல்களை - பரிசுக்குகந்த நூல்களை மேன்மேலும் உருவாக்க வேண்டும் என்ற உற்சாகமும் உத்வேகமும் எழுத்தாளர்களிடம் ஏற்படுவதற்கு -

பணத்தைப் போல் விரைவிலே செலவாகாமல், பாத்திரம் பண்டங்களைப் போல் தேய்ந்து, சிதைந்து, உருமாறி அழியாமல் -

உங்கள் ஆழ்ந்த அன்பின் அடையாளச் சின்னமாய் மகிழ்ச்சிப் பெருக்கின் மங்காத வெளிப்பாடாய் நேசப் பிணைப்பின் நிரந்தர நினைவூட்டியாய் -

காலாதி காலமாக நின்று நிலைப்பதற்கு -

இந்த நூல் அன்பளிப்புக்களே - அன்பளிப்புக்கள் மட்டுமே உதவும் என்பது உண்மை. மறுக்க முடியாத உண்மை.

ஆகவே-

'இனி ஒரு விதி செய்வோம் – அதை
எந்த நாளும் காப்போம்'

நனி சிறந்த நம்மவரின் நூல்களை
நல்ல பரிசுகளாய்க் கொடுப்போம்.

ஞானம்94 (மார்ச் 2008)

36



அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் மறைவு தமிழ்ச் சமூகத்திற்குப் பேரிழப்பு

ஓர் ஆசிரியராகத் தன் பணியை ஆரம்பித்து, ஒரு சமயவாதியாக, சொற்பொழிவாளராக, ஆலய அறங்காவலராக, இறைபணியாளராக, சமூகப் பணியாளராக ஐந்து தசாப்தங்களுக்கு மேலாகத் தனது வாழ்வைப் பொதுப் பணிகளில் அர்ப்பணித்த செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் கடந்த 15-06-2008இல் அமரத்துவம் அடைந்தார் என்ற செய்தி தமிழ்கூறு நல்லுலகைப் பெரும் துயரில் ஆழ்த்தியுள்ளது.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் 1925ஆம் ஆண்டு தைமாதம் 7ஆம் திகதி பிறந்த தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், தனது ஆரம்பக்கல்வியை மல்லாகம் அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும் விசாலாட்சி வித்தியால யத்திலும் அளவெட்டி சதானந்த வித்தியால யத்திலும் பெற்றார். இடைநிலைக் கல்வியை

இராமநாதன் கல்லூரியில் பெற்று பின்னர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்று ஆசிரியரானார். ஆசிரியர் தொழிலில் இருக்கும்போதே சைவப் புலவர் தேர்விலும் பண்டிதர் தேர்விலும் சித்திபெற்றார்.

இவரது இருபத்தியோராவது வயதில் ஆசிரியர் நியமனம் பெற்று மட்டக்களப்பு சென்ற் சிசிலியா ஆங்கிலப் பாடசாலையில் பணிபுரிந்த காலத்திலேயே சமூகம்பற்றிய சிந்தனை அவரிடம் துளிர்விடத் தொடங்கியது. அக்காலத்தில் முஸ்லிம் சமூகத்தில் பெண் பிள்ளைகள் வயதானதும் கல்வியைத் தொடரவிடாது வீட்டுக்குள்ளேயே முடக்கிவிடும் வழக்கம் காணப்பட்டது. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியவர்கள் அப்பெண்பிள்ளைகளின் வீடுகளுக்குச் சென்று பெற்றோருடன் கதைத்து அப்பிள்ளைகளின் கல்வியைத் தொடரவைத்தார். 1949இல் இடமாற்றம் பெற்று கொழும்பு பாத்திமா கல்லூரியில் பணிபுரிந்த காலத்திலும், பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம் பெண்பிள்ளைகள் உயர்கல்வி கற்பதை ஊக்குவித்தார். இவ்வாறு இவரால் ஊக்குவிக்கப்பட்ட பல முஸ்லிம் பெண்கள் இன்று உயர்பதவிகளில் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

கொழும்பில் ஆசிரியையாகப் பணிபுரிந்த காலத்திலே இலங்கை வானொலி மாதர் பகுதியில் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தி மாதர் முன்னேற்றத்துக்கான கருத்துக்களை வெளியிட்டார்.

1964இல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு இடமாற்றம் கிடைத்தது. அதன் பின்னர் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்துடன் தன்னை இணைத்துக் கொண்டார்.

தமிழ் நாடு சிதம்பரத்திலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் இவருக்கு உரையாற்றும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. மதுரை ஆதீனம் இவருக்கு 'செஞ்சொற் செம்மணி' என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது. தென்னிந்தியாவில் திருவுடை மருதூரில் நடைபெற்ற திருமுறைக் கருத்தரங்குக்குத் தலைமை தாங்கும் சந்தர்ப்பமும் இவருக்குக் கிடைத்தது.

தமிழ் நாடு ஆரணியில் நடைபெற்ற மங்கையர் மாநாட்டுக்கும் இவர் தலைமை தாங்கினார். மலேசியா, சிங்கப்பூர், லண்டன் ஆகிய நாடுகளுக்கும் சென்று சமயச் சொற்பொழிவுகள் ஆற்றினார்.

1978இல் இவருடைய கந்தபுராணச் சொற்பொழிவு நூலுக்கு இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது.

இவர் துர்க்காதேவி ஆலய நிர்வாக சபைத் தலைவர் பதவி ஏற்றபின்னர் சித்திரத்தேர்த் திருப்பணி, துர்க்காதேவி ஆலய மகாகும்பாபிஷேகம், துர்க்கா புஷ்கரணி தீர்த்தக்குளம் பிரதிஷ்டை போன்ற இன்னோரன்ன முக்கிய பல திருப்பணிகள் இடம்பெற்றதுடன் இவ்வாலயம் உலகரீதியில் பிரபல்யமும் பெறத் தொடங்கியது.

சோழர் காலத்தில் ஆலயங்களை மையமாக வைத்துச் சமூகப் பணிகள் இடம்பெற்றதைப் போன்று அன்னை அவர்களும் துர்க்காதேவி ஆலயத்தை மையமாகக் கொண்டு பல சமூகப் பணிகளை ஆற்றினார்.

1992இல் அநாதரவான பெண்பிள்ளைகளுக்கு ஓர் இல்லம் அமைத்து அவர்களைப் பராமரிக்கத் தொடங்கினார். யுத்த அனர்த்தம் காரணமாக இடம்பெயர நேரிட்டபோது மகளிர் இல்லப் பிள்ளைகளோடு மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் சென்று தங்க நேர்ந்தது. பின்னர் 1995இல் ஏற்பட்ட இடப் பெயர்வின்போது கைதடி சைவச் சிறுவர் இல்லத்திலும் உசன் கந்தசாமி கோயில் வளாகத்திலும் தங்க நேர்ந்தது. ஒரு பூனை தனது குட்டிகளை இடத்துக்கிடம் காவிச் சென்று காப்பது போன்று அம்மையார் இந்த அநாதரவான பிள்ளைகளை இடத்துக்கு இடம் காவிச் சென்று காப்பாற்றினார்.

1990இல் சிவத்தமிழ் செல்வி பிறந்தநாள் அறநிதியம் இவரால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அறநிதியத்தினூடாக அறிஞர்களைக் கௌரவித்தல், இடம்பெயர்ந்த இந்துக் குருமாருக்கு உதவி வழங்கல், யாழ். போதனா

வைத்தியசாலைக்கு சளி இழுக்கும் இயந்திரம் கொள்வனவு செய்யப் பணம் வழங்கல், கைதடி முதியோர் இல்லத்திற்குப் பணம் வழங்கல், யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்குப் பணம் வழங்கல், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தில் உயர்தர வகுப்பில் கல்விகற்கும் மாணவர்கள் பலருக்கு பாடசாலைக் கல்விக்கான உபகரணங்கள் வழங்கல், கண் சத்திர சிகிச்சை மேற்கொண்டோருக்கு மருந்துகள் கொள்வனவு செய்யப் பணம் வழங்கல், யாழ் அரசாங்க வைத்திய சாலையில் சுத்தம் பேணும் பணிக்குப் பணம் வழங்கல், தீவகக் கல்வி வலயப் பிரிவில் க. பொ. த. சாதாரண வகுப்பில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு உதவி வழங்கல், வன்னி மாவட்ட மாணவர்களுக்கு அறக் கொடை, யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடத்துக்கு அறக் கொடை, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை புனர்நிர்மாணத்துக்கும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கும் அறக்கொடைகள், யாழ் போதனா வைத்தியசாலை இருதயநோய் சிகிச்சைப் பிரிவுக்கு அறக்கொடை என இவரது சமூகப் பணிகள் தொடர்ந்தன. ஒரு சமுதாயத்துக்கு எவ்வெப்போது என்னென்ன தேவையோ அவற்றை அறிந்து உதவும் கரம் அன்னையினுடையதாக இருந்தது.

அன்னை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் மறைந்துவிட்டாலும் அவரது அறப் பணிகள் தொடர்வதற்கான அடித்தளத்தை அவர் இட்டுவிட்டே சென்றுள்ளார். தமிழ் மக்களின் இதயங்களில் அவர் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்.

ஞானம்–98 (ஜூலை 2008)

37



நடப்பவன் சொன்னால்...!

தம் சொந்த விருப்பங்கள் -கனவுகள் - கற்பனைகள் - இலட்சியங்கள், - எதிர்ப்பார்ப்புகள் முதலியவற்றுடன் தாமாகச் சென்று குடியேறியவர்களும் -

தமது சக்திக்கும் கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்ட தவிர்க்கவோ தடுக்கவோ முடியாத அரசியல், சமூக பொருளாதாரக் காரணங்களால் குடியேற நிர்ப்பந்திக்கப்பட்டவர்களுமாக -

ஆயிரமாயிரம் தமிழ் மக்கள் தம் அன்னை மண்ணைத் துறந்து அன்னிய மண்ணிற் புகுந்து-

அறியாத மொழி பேசுவோர் மத்தியில் வித்தியாசமான வாழ்க்கை முறையையும் விசித்திர சில போக்குகளையும் வேறுபட்ட பழக்க வழக்கங்களையும் கொண்டுள்ளோர் மத்தியில்-

வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய தமிழ் மக்களை மனத்திற் கொண்டு

'நீங்கள் எந்த நாட்டில் - எத்தகைய சூழ்நிலையில் எத்துணை கஷ்டங்களுடன் வாழ்ந்தாலும்

ஒரு தனி மனிதனாகவோ ஒரு பெருங்கூட்டமாகவோ வாழ்ந்தாலும்

நீங்கள் தமிழர்கள் என்பதை மறவாமல்

உலகின் மிகச் சிறந்த பண்பாட்டின் பொறுப்புமிக்க வாரிசுகள் என்பதை ஒரு கணமும் மறவாமல் -

தமிழராக தமிழ்ப் பண்பாட்டுடன் வாழவேண்டும் - வாழ்ந்துகாட்ட வேண்டும் எனச் சொல்வோர் நம்மிடையே பலருளர் !

சொல்லப்படவேண்டிய நல்லுரைதான்

சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆலோசனைதான்

வலியுறுத்தப்படவேண்டிய அறிவுறுத்தல்தான்.

ஆனால்,

அவர்களுக்கு மட்டுந்தான் - அன்னிய நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம்மவர்களுக்கு மட்டுந்தான் - இவை சொல்லப்பட வேண்டுமா?

இங்கு வாழ்கின்ற - தமிழ் மக்களின் பூர்வீகத் தாயகம் என ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்ட இலங்கையிலும் இந்திய தமிழ் நாட்டிலும் வாழ்கின்ற இலட்சோப இலட்சம் தமிழ் பேசும் மக்களுக்கு இவை தேவையில்லையா?

நாலு சுவர்களுக்குள் நடக்க வேண்டிய இல்லற இனிமைகளை -

அசிங்கப்படுத்தி ஆபாசப்படுத்தி கலை என்ற பெயரிற் காட்சிப்படுத்தி மக்களின் கீழான உணர்ச்சிகளைக் கிளர்ந்தெழச் செய்பவர்களும்

ஊழல் புரிந்தாற்றான் உயிர் வாழலாம் என்பதை

இலஞ்சம் வாங்காவிட்டால் நஞ்சையே தஞ்சமடைய வேண்டும் என்பதை -

தம் பாதகச் செயல்களால் 'பரப்புகை' செய்பவர்களும்

கொலையையும் கொள்ளையையும் தம் கூட்டு முயற்சியாகக் கொண்டுள்ளவர்களும்

கையாட்கள் மூலம் கயமைத்தனம் புரிந்து கொண்டே கனவான்களாக வேடம் போடுபவர்களும்

பணம் கிடைக்குமென்றால் எந்த விதமான பலாத் காரத்தையும் எத்தகைய பழிச் செயல்களையும் செய்வ தற்குத் தயங்காதவர்கள் மட்டுமல்லாமல் முனைப்புடன் முந்துபவர்களும்,

இந்த நாடுகளிலேதான் தமிழர்களின் சொந்த நாடுகளிலேதான் இருக்கின்றார்கள்.

சிலராக அல்ல - பலராக பற்பலராக இருக்கின்றார்கள்.

இவர்களுக்குத்தான் இந்த நல்லுரைகள் - ஆலோசனைகள் - அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும் முதன் முதலில் வழங்கப்படவேண்டும் !

காரணம்...?

நாம் திருந்திய பின்னர்தான் நம்மவர் திருந்திய பின்னர்தான் மற்றவர்களைத் திருத்த முயல வேண்டும்.

ஆகவே

முதலில் நம்மை நாமே திருத்திக் கொள்வோம்.

தமிழ்ப் பண்பாடு இதுதான் என்பதை

நமது நாளாந்த வாழ்க்கையில் நடைமுறைப் படுத்துவோம்.

பின்னர் அவர்கள் பின்பற்றுவார்கள் !

நடப்பவன் சொன்னால் நாடு மட்டுமல்ல,

இந்த நானிலமே கேட்கும் - நடக்கும் !

ஞானம்–102 (நவம்பர்–2008)

38

நாடகம் – சினிமா பண்பாடு

கலை, இலக்கியம் என்பவை வெறும் பொழுதுபோக்குச் சாதனங்கள் அல்ல -

கிளுகிளுப்பை ஊட்டி - மக்களின் கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டி - அதீத கற்பனைக் கனவுகளுக்குத் தீனி போட்டு - அவர்களின் சிந்தனையை மழுங்கடித்து சுறுசுறுப்பற்ற சோம்பேறிகளாக அவர்களைச் சிதைக்காமல் -

அப்பழுக்கற்ற - ஆனந்தமான - சூழ் நிலையில் - அவர்களின் மனநிலையை மேம்படுத்தி - விழுமியங்களின் செழுமையை - இலட்சியங்களின் மகிமையை - இவற்றை உள்ளீடாகக் கொண்ட பண்பாட்டைப் பாது காத்துப் பரிமளிக்கச் செய்வதிலிருந்து அவை தவறவே கூடாது.

நாடகம் என்பது கலைகளுள் ஒன்று -

இசையைப் போல் - ஓவியத்தைப் போல் - 'மூத்த' கலைகளுள் ஒன்று -

எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு இலக்கியம் ஆற்றும் சேவையை -

ஏழைப் பாமர மக்களுக்கு நாடகத்தால் மட்டுமே சிறப்பாக ஆற்ற முடியும் -

நாட்டுக்கு வேண்டிய நல்ல கதை - எளிமையான உரையாடல் - பொருத்தமான ஒப்பனை - இயல்பான நடிப்பு - முதலியவை நிறைந்துள்ள நாடகங்கள் -

உயர்ந்த சிந்தனைகளை - நல்ல தத்துவங்களை - நடைமுறைப்படுத்த வேண்டிய ஒழுக்க நெறிகளை - அம்மக்களின் உள்ளங்களிற் பதியச் செய்வதில் பெருவெற்றி கண்டுள்ளன -

தமிழ் உட்பட்ட இந்திய நாடகங்கள் பல இந்த உண்மைக்குச் சான்றாக உள்ளன -

சாதாரணமான - சராசரிச் சிறுவனாக - இருந்த மோகனதாஸ் கரம்சந்த் காந்தியை -

சத்தியத்தின் காவலனாக - அஹிம்சா மூர்த்தியாக மஹாத்மா காந்தியாகப் பரிணமிக்கச் செய்ததில் -

சின்னஞ்சிறு வயதில் அவர் பார்த்த அரிச்சந்திரன் நாடகத்திற்குப் பென்னம்பெரிய பங்கு உண்டு -

இன்றைய மக்களின் - குறிப்பாக இளைஞர் யுவதிகளின் - இதயங்களை ஆக்கிரமித்து - தனிக்கோலோச்சும் 'சினிமா' என்பது -

அடிப்படையில் நாடகமே!

இரசிகர்களின் முன்னிலையில் - மேடையில் நடிக்கப்பட்ட நாடகம் -

விஞ்ஞான, தொழில் நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி வெள்ளித் திரைக்குப் 'புலம்' பெயர்ந்து -

சினிமா என்ற கவர்ச்சிப் பெயரிலே கலகலக்கத் தொடங்கிய போதிலும் -

நிசமான நடிகர்கள் நிழலாகத் தோற்றமளிக்கத் தொடங்கிய போதிலும் -

அதன் ஆரம்ப காலங்களில் -

பண்பாட்டைப் பிரதிபலித்து - அதைப் பாதுகாக்கின்ற பாரிய பொறுப்பிலிருந்து அது நழுவவில்லை - வழுவவில்லை

ஆனால் -

கடந்த சில ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் தமிழ்ச் சினிமாப் படங்களைப் பார்க்கும்போது -

நாம் தமிழ் நாட்டிலேதான் இருக்கின்றோமா -

தமிழ்ப் படங்களைத்தான் பார்க்கின்றோமா -

தமிழ்ப் பாடல்களை - தமிழ் வசனங்களைத்தான் - கேட்கின்றோமா -

தமிழ் நடிகர்கள்தான் நடித்துக்கொண்டிருக்கின்றார்களா -

என்பன போன்ற பயங்கரமான சந்தேகங்கள் - நம் உள்ளங்களிலிருந்து படைபடையாய்க் கிளம்புகின்ற பரிதாபத்துக்கு முற்றுப்புள்ளி போட முடியாமல் மூச்சுத் திணறுகின்றோம் -

அன்பின் ஆற்றலை - பக்தியின் பரவசத்தை தியாகத்தின் மகத்துவத்தைக் காட்டிய கதைகளுக்குப் பதிலாக -

முரட்டும் பிடிவாதமும் - பழிக்குப் பழி வாங்கும் மனோபாவமும் - அதிரடித் தாக்குதல்களும் அடுக்கடுக்காக வந்து அச்சமூட்டும் கதைகள் -

கற்கண்டுத் தமிழில் அமைந்த கருத்தாழம் மிக்க வசனங்களுக்குப் பதிலாக -

சர்வ மொழிச் 'சாம்பராய்க்' கொட்டப்படும் சத்தற்ற கூச்சல்களும் -

காதுகளில் இன்பத் தேனைப் பாய்ச்சிய பாடல்களின் இடத்தில், அந்தரங்கங்களை அம்பலப்படுத்தும் அசிங்கமான வரிகள் -

நமது கலாசாரம் பண்பாட்டுக்கு அமைய - கண்ணியமாகத் தயாரிக்கப்பட்டுக் கருத்தைக் கவர்ந்த கறுப்பு வெள்ளைப் படங்கள் எங்கே -

'மஞ்சள்' கதையும் 'பச்சை' வசனங்களும் 'நீலக்' காட்சிகளும் 'சிவப்பு' ஆறும் நிரம்பி வழியும் இன்றைய வர்ணப் படங்கள் எங்கே?

நடிகர்கள் தம் திறமையைக் காட்டி மக்களைத் திருப்திப்படுத்தியது - அந்தக் காலம் -

தம் உடை வறுமையை - உடம்பின் வெறுமையைக் காட்டி - மக்களைத் திசை திருப்பி வருவது - இந்தக் காலம்!

கலை என்ற நிலையிலிருந்து தொழில் என்ற நிலைக்குக் குத்துக்கரணமடித்த பின்னர் - நாடகம் என்ற 'சினிமா'வால் கோடி கோடியாகப் பணத்தைக் குவிக்க முடிந்ததே தவிர -

குன்றுமணியளவு கூட மக்களின் பண்பாட்டைக் காப்பாற்ற முடியவில்லை -

தரணி போற்றும் தமிழ்ப் பண்பாடே!

வெள்ளித்திரை என்று வரும்போது மட்டும் நீ கள்ளத்தனம் பண்ணுவதேன் -

மக்களைக் கலங்கவைத்துக் கசக்குவதேன்?

ஞானம்–114 (நவம்பர் 2009)

புரிதல்

✦ "ஞானம்" நவம்பர் 2009 இதழின் ஆசிரியர் உரையைப் (நாடகம் சினிமா பண்பாடு) படித்தேன். அப்போது தமிழ் மறையின் குறளில் ஒன்றும், தெய்வீகப் புலவர் பாரதியாரின் பாடல்களில் ஒன்றும் என் நினைவுக்கு வந்தன. அவைகள், பொய்யா மொழியாரின் "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும், ஓம்பப்படும்." (131) பாரதியாரின் "ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்...." என்னும் பாடல்களுமாகும்.

ஒழுக்கத்தை உயிரினும் மேலாக பேணிப் பாதுகாத்து வருவது தமிழர் பாரம்பரியமாகும்.

அண்மைக் காலங்களில் வெளிவருகின்ற சில தமிழ்ச் சினிமாப் படங்களிலும், சில நாடகத் தொடர்களிலும் எமது ஒழுக்க நெறிகளைச் சிதைத்துச் சீரழிக்கக் கூடிய பல காட்சிகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவைகள் போதையூட்டும் செயற்பாடுகளாகவே கருதப்படுகின்றன. இவைகள் தேவையானவைகள் தானா? இல்லவேயில்லை.

"கலை" என்பது புனிதமானது. அதில் ஆபாசத்தைப் புகுத்திக் களங்கம் ஏற்படுத்தக் கூடாது. இது கண்டித்தலுக்குரியதாகும். போதைப் பொருளைக் கொடுத்துவிட்டு "அது உடம்புக்கும், உள்ளத்துக்கும் தீங்கு விளைவிக்கும்" என்று எச்சரிக்கை செய்வதைவிட, ஆரம்பத்திலேயே அதைக் கொடுக்காதிருப்பது அறிவுடமை அல்லவா? தமிழ் சினிமாப் படங்கள், நாடகத் தொடர்கள் தயாரிப்பாளர்கள் இதனைக் கவனத்துக்கு எடுத்துக் கொள்வார்களா?

கல்வி, அறிவு, தெளிவு, நல்லொழுக்கம் எனப் பொருள் தரும் "ஞானம்" சஞ்சிகை தனது பெயருக்கு மகுடம் சூட்டும் வகையில் "பண்பாடு காக்கும் பணி"யில் முன்னின்று உழைத்து வருவது கண்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

அன்புடன், ஆரையூர் இளவல். (ஞானம்–116– ஜனவரி–2010)

39

சர்வதேச மகளிர் தினமும் மலையகப் பெருந்தோட்டப் பெண் தொழிலாளர்களும்

நமது நாட்டில் வருடா வருடம் சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டங்கள் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலேயே நடைபெறுகின்றன. இக் கொண்டாட்டங்களில் ஈடுபடுவோரும் நகர்ப் புற மேல் தட்டுப் பெண்களாகவும் நடுத்தர வர்க்கப் பெண்களாகவுமே காணப்படுகின்றனர். இந்த, சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுவதற்கு மூலகாரணமானவர்கள் உழைக்கும் கீழ்த்தட்டுப் பெண்வர்க்கமே என்பதனை உணர்ந்து கொள்ளாத வகையிலேதான் இக் கொண்டாட் டங்கள் நடைபெறுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

சர்வதேச மகளிர் தினம் எவ்வாறு தோற்றம் பெற்றது?

பிரான்சிய அரசியற் புரட்சியின்போது அந்நாட்டின் தலைநகரிலுள்ள உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் கிளர்ச்சியில்

ஈடுபட்டார்கள் - சமுதாயத்தில் ஆணுக்கு நிகராகப் பெண்ணுரிமை, வேலைக்கேற்ற ஊதியம், எட்டுமணிநேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, அடிமைத்தளையிலிருந்து விடுதலை போன்றவை தமக்கு வேண்டுமெனக் கையில் கிடைத்த ஆயுதங்களுடன் தெருக்களில் அணிதிரண்டார்கள்.

கொதித்தெழுந்த பெண்களைச் சமாதானப்படுத்த முயன்ற அந்நாட்டு அரசன் லூயிஸ் பிலிப், முடியாது போகவே முடிதுறந்தான். இக்கிளர்ச்சியில் அரசனின் மெய்ப் பாதுகாவலர்கள் இருவர் கொல்லப்பட்டனர். இச் செய்தி ஐரோப்பா எங்கும் பரவி அங்கெல்லாம் பெண்களின் கிளர்ச்சிகள் வெடித்தன.

ஜெர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க், இத்தாலி நாடுகளைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் பிரான்ஸில் இரண்டாவது குடியரசை நிறுவிய அரசன் லூயிஸ் பிளாங், அரசவை ஆலோசனைக் குழுவில் பெண்களை இடம்பெறச் செய்யவும், பெண்கள் வாக்குரிமை பெறவும் ஒப்புதல் தந்தான். அந்தநாள் 1848 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதியாகும்.

போராடினால்தான் உரிமைகள் கிடைக்கும் என்ற சிந்தனை உலகெங்கும் உள்ள பெண்களிடம் வலுப்பெறத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து சர்வதேச மகளிர் அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. இந்த அமைப்பின் சார்பில் 1911ஆம் ஆண்டு மார்ச் 19ஆம் திகதி ஹேகன் என்ற இடத்தில் பல்வேறு நாட்டு மகளிர் பிரதிநிதிகள் கூடி முதலாவது சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடினார்கள். அங்கு நடைபெற்ற கூட்டத்திலேதான் அரசன் லூயிஸ் பிளாங் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்க உடன்பட்ட நாளான மார்ச் 8 ஐ நினைவு கூரும் வகையில் அந்த நாளை ஆண்டு தோறும் சர்வதேச மகளிர் தினமாகக் கொண்டாடுவதற்கு முடிவு செய்யப்பட்டது.

எமது நாட்டில் நடைபெறும் சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டங்களில், மலையகத் தோட்டப்புறப் பெண்

தொழிலாளர்கள் பங்குபற்றுவது மிகமிகக் குறைவாகவே இருக்கிறது. அவர்களில் பெரும்பாலானோர் இந்த மகளிர்தினம் பற்றி அறிந்தவர்களாகவோ அலட்டிக் கொள்பவர்களாகவோ தெரியவில்லை.

இவர்கள் இன்றும் உரிமை மறுக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றார்கள். சுய ஆளுமை அற்றவர்களாக தந்தை, கணவன், சகோதரன் ஆகியோரைச் சார்ந்தே வாழ்கிறார்கள். ஆணாதிக்க ஒடுக்கு முறைக்கு உட்பட்டவர்களாக இருக்கின்றனர். பதினைந்து வயதிலிருந்தே தொழிலாளர்களாகிவிடும் இவர்கள் கொழுந்துக் கூடைகளை முதுகில் சுமந்து மலை மலையாக காலை முதல் மாலைவரை கடினமாக உழைப்பவர்கள். வெய்யிலிலும் மழையிலும் அட்டைக் கடியிலும் உழல்பவர்கள். குடும்பச் சுமையை தலையில் சுமப்பவர்கள். வீட்டுக்குள்ளும் வெளியிலும் வேலைசெய்ய நிர்ப்பந்தப்பட்டிருக்கும் பிறவித் தொழிலாளர்கள். குறைந்த கூலிக்காக வியர்வை சிந்துபவர்கள். தாம் பெற்றெடுத்த குழந்தையை பிள்ளை மடுவத்தில் விட்டு விட்டு வேலைக்குப் போனால்தான் தனது குடும்பம் வாழும் என்பதற்காக ஓடாகத் தேய்பவர்கள். குறைந்த கூலிக்கும், மிரட்டி வேலை வாங்குவதற்கும் இவர்களே வாய்ப்பானவர்கள் என்ற நிலையில் உள்ளவர்கள். வர்க்க ரீதியில், பால்ரீதியில், சமூக ரீதியில், இனரீதியில் அடிமட்டத்திற்குத் தள்ளப்பட்டவர்கள். இவர்களின் பணத்தில் குடித்துக் கும்மாளமடிக்கும் கணவன்மார்களே அதிகம்.

இவர்களைப் பற்றி இன்றைய பெண்ணியவாதிகள் உரத்துச் சிந்திக்கவேண்டும்.

ஆசியாக் கண்டத்திலே பெண்களுக்கு வாக்குரிமை கொடுத்த முதலாவது நாடு எமது நாடு.

உலகிலேயே முதலாவது பெண்பிரதமரைத் தெரிவு செய்த நாடும் எமது நாடுதான்.

இருந்தும் என்ன? சகல துறைகளிலும் மிகவும் அடிமட்ட நிலையில் உள்ள மலையகப் பெண் தொழிலாளர்களைக்

கொண்ட நாடும் எங்களது நாடுதான் என்பதைச் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படும் இந்த மார்ச் மாதத்தில் கருத்தில் கொண்டு இந்தப்பெண் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த சகல தரப்பினரும் முன் வரவேண்டும்.

இந்த ஆண்டின் சர்வதேச மகளிர் தினத்தை நகரப்புறங்களில் கொண்டாடுவதை விடுத்து, மலையகப் பெண்கள் மத்தியில், தோட்டப் பகுதிகளில் கொண்டாடுவதன் மூலம் இந்தப் பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த மகளிர் இயக்கங்கள் முன்வரவேண்டும். அப்போதுதான் சர்வதேச மகளிர் தினம் அர்த்தமுள்ளதாக அமையும்.

ஞானம்–118 (மார்ச் 2010)

புரிதல்

✦ மார்ச் 2010 இதழில் உள்ள ஆசிரியர் தலையங்கத்தில்

(அ) மலையக பெருந்தோட்டப் பெண் தொழிலாளர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது மகிழ்வையளிக்கிறது. தலை நகரின் 'ஏசி' பொருத்தப்பட்ட அறைகளில் உட்கார்ந்து பெண்ணியம் பேசுவோர் மலையகப் பெருந்தோட்டம் பெண் தொழிலாளர் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

(ஆ) இலங்கையில் ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் பற்றியும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். இலங்கைக்கு அந்நியச் செலாவாணியைச் பெற்றுத்தரும் பெருந்தோட்ட துறை, ஆடைத் தொழிற்சாலை என்பவற்றில் பணியாற்றும் பெண்களைப் பற்றி பெண்ணிலைவாதிகள் சிந்திக்க வேண்டும்.

தேவமுகுந்தன், கிருலப்பனை.[ஞானம்–119– ஏப்ரல் 2010]

40



இணையமும் இளஞ்சந்ததியினரும்

இன்று நாம் தகவல் தொழில்நுட்ப யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். 'இன்ரநெற்' எனப்படும் இணையம் இந்தப் புரட்சிக்கு வழிகோலியிருக்கிறது. இணையம் ஓர் அற்புதமான கண்டுபிடிப்பு. மனித இனத்தின் வளர்ச்சிப்பாதையில் ஒரு முக்கியமான பாய்ச்சலை இணையம் ஏற்படுத்தியிருக்கிறது.

உலகில் எந்த மூலைக்கும் கண்மூடித் திறப்பதற்குள் தொடர்பு கொள்ளக்கூடிய வசதி ஏற்பட்டுள்ளது. உலகின் எல்லாப் பக்க வாசல்களையும் இந்த இணையத் தளங்கள் திறந்து வைத்திருக்கின்றன. முழு உலகையும் இந்தத் தொழில்நுட்பம் வீட்டுக்குள் கொண்டுவந்துவிடுகின்றது. புதிய கலை கலாசாரங்கள், வாழ்க்கை முறைகள், அரசியல் சமூக பொருளாதாரம் போன்ற பல்துறைச் சங்கம வழிகாட்டியாக இந்தத் தொழில் நுட்பம் விளங்குகிறது.

‘எட்டுத் திக்கும் சென்று கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்த்திடுவோம்’ என்ற பாரதியின் கனவை நனவாக்கும் கருவிகளில் ஒன்றாக இணையம் விளங்குகிறது.

குறுகிய காலத்தில் கணினி அறிவுத் தகவல் தொழில் நுட்பம் வேகமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் இலங்கை ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளதாக அறிய முடிகிறது. கடந்த ஐந்து வருட காலத்தில் கணினி அறிவு நான்கு சதவீதத்தில் இருந்து 37 சதவீதமாக உயர்வடைந்துள்ளதாக கணிப்பீடுகள் காட்டுகின்றன. 2016இல் கணினி அறிவை 75சதவீதமாக உயர்த்த அரசாங்கம் பல திட்டங்களை முன்னெடுத்துவருகிறது.

இவையெல்லாம் மகிழ்ச்சிதரும் விடயங்கள்தான். ஆனால் இதன் மறுபக்கம் மிகவும் கவலை அளிப்பதாக புத்திஜீவிகள் பலரும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

இன்றைய இளஞ்சந்ததியினர் பெரும்பாலும் தமது ஓய்வு நேரங்களை இணையத்தளத்தின் முன்னே செலவிடுகிறார்கள், இதில் எத்தனைபேர் ஆக்க பூர்வமான வழிகளில் தமது நேரத்தைச் செலவழிக்கிறார்கள் என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

இணையத்தளப் பயன்பாட்டில் எந்தளவுக்கு நன்மை யுண்டோ அந்தளவுக்குத் தீமையுமுண்டு. இணையத்தள வாயிலாக கிறடிற்கார்ட் மோசடிகள், வைரஸ் தாக்குதல், பாலியல் குற்றங்கள், லொத்தர் சீட்டு மோசடிகள், வங்கிக்கணக்கு மற்றும் Password திருடுதல்கள், இணையத் தளங்களை முடக்குதல், சமூக வலையத்தளங்களிலிருந்து அந்தரங்க விபரங்களைத் திருடுதல், உள்ளிட்ட பலவாறான குற்றங்கள் உலகெங்கும் நடைபெறுவதாக தரவுகள் உள்ளன.

இணையத்தளத்தில் காணப்படும் மிகவும் ஆபத்தானதும் இளைஞர்களை மிகவும் இலகுவாகக் கெடுக்கக் கூடிய தீமையாக இருப்பது சமூகவிரோதிகளால் பரப்பப்படும் ஆபாசப்படங்களாகும். இது இளைஞர்களைப் பாரிய கலாசார சீரழிவுக்கு இட்டுச் செல்லக்கூடியது.

அடுத்தது, இணையம் உலகில் உள்ள வெவ்வேறு பிரதேசங்களில் உள்ளவர்களை இணைக்கக் கூடியதாக

வுள்ளது. இது இணைய நண்பர்களை உருவாக்குகிறது. முகப்புத்தகம் (Face Book) போன்ற Social networks ஆண்பெண் உறவுகளை உருவாக்குவதற்கான Dating Sites, Chat Servers, Internet Messengers, மின் அஞ்சல் என்பன பாவனையில் உள்ளன. இவற்றின் மூலம் இளைஞர்கள் நல்ல நண்பர்களை உருவாக்க முடியும். அதேபோன்று தீய நண்பர்களின் வலையில் சிக்கிக்கொள்ளவும் முடியும்.

தீய நட்புகளில் பல இளைஞர்கள் மாட்டிக்கொண்டு உளரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாவதைப் பலரும் இன்று சுட்டிக்காட்டிவருகிறார்கள். இங்கு மிகவும் விழிப்பாக இருக்கவேண்டியது ஆண்- பெண் உறவு. எங்கே ஓர் ஆணும் பெண்ணும் தனித்து இணையத்தில் Chat இருக்கிறார்களோ அங்கே இத்தகைய பிரச்சினைகள் உருவாகின்றன. தனித்திருந்து முகந்தெரியாதாரோடு இணையத்தில் செய்வதால் தறிகெட்டுப் போகும் சம்பவங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. தேவையற்ற இளம் நண்பர்கள் தொடர்பால் பல ஆண்களும் பெண்களும் தமது பாலியல் தேவைகளை பூர்த்திசெய்துகொள்கிறார்கள் என்ற திடுக்கிடும் தகவல்களும் வெளியாகியுள்ளன.

திருமணம் ஆன இளம் வயதினர் சிலர் தமது குடும்பத்துக்கு வெளியே ஏற்படுத்தும் இணைய நண்பர்கள் தொடர்பால் குடும்ப உறவு முறிவடைந்து விவாகரத்தில் முடிவடைவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

இன்று நமது சமூகத்தில், இணையத்தளப் பாவனையால் இளைஞர்கள் வழிதவறிப்போகாமல் இருக்க பல்வேறு மட்டங்களில் விளிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தவேண்டிய தேவை பெரிதும் உணரப்படுகிறது. இதனைப் பாடசாலை மட்டத்திலேயே ஆரம்பிக்க வேண்டும். அதேவேளை பெற்றோர்களும் இணையத் தொழில் நுட்பங்கள் பற்றிய அறிவை ஓரளவாவது தேடிக்கொள்ள முயற்சிப்பதோடு தமது பிள்ளைகளைச் சிறந்த கண்காணிப்பின் மூலமும் ஆற்றுப்படுத்தல் மூலமும் இணையத்தை நல்ல முறையில் பயன்படுத்த வழிகாட்ட வேண்டும்.

ஞானம் 139 (டிசம்பர் 2011)

41



கைத்தொலைபேசியும் இன்றைய இளைஞர் சமுதாயமும்

இன்றைய காலகட்டத்தில் கைத்தொலை பேசியின் பாவனை அதிகரித்துள்ளது. குறிப்பாக ஒவ்வொரு இளைஞரிடமும் இன்று கைத்தொலை பேசி இருக்கிறது.

இணையம் உலகை வரி(எழுத்து) வடிவத்தில் சுருக்கியது என்றால், கைத்தொலைபேசி உலகை ஒலி (பேச்சு) வடிவத்தில் சுருக்கி ஒரு பெரும் புரட்சியையே செய்திருக்கிறது. மனிதகுலத்தின் ஆறாவது புலனாக இது மாறியிருக்கிறது. ஆரம்பத்தில் பேச உபயோகிக்கப்பட்ட கைத் தொலைபேசி இன்று கையடக்க கணினியாக மாறிவிட்டிருக்கிறது.

நவீன விஞ்ஞான வளர்ச்சியில் கைத்தொலை பேசி மூலம் ஒருவர் இருக்கும் இடத்தில் இருந்துகொண்டு உலகில் எந்த மூலையில் இருப்பவருடனும் எந்த நேரத்திலும் தொடர்பு கொண்டு பேசமுடியும். இதன் மூலம் கதைப்பது மட்டுமல்லாமல் செய்திகள் அனுப்பவும்,

ஒளிப்படங்கள் எடுக்கவும் அதை இன்னொருவருக்கு அனுப்பவும், பாடல்கள் செய்திகள் கேட்பதற்கும் கூடப் பயன்படுத்தலாம்.

அவசர தேவைகளின்போது, உதாரணமாக விபத்துக்கள் ஏற்படும்போது, பொலிஸையோ அம்புலன்ஸையோ அழைப் பதற்கு இது முக்கியமாக உதவுகிறது. இவற்றைவிட சமூக விரோதச் செயல்கள் நடைபெறும்போது அவற்றைக் கைத்தொலைபேசியில் பதிவுசெய்து பொலிஸில் ஒப்படைப் பதன்மூலம் குற்றச் செயல்களைக் குறைக்கவும் இது உதவுகிறது.

இவற்றைவிட இன்றைய நவீன கைத்தொலைபேசிகளில் வேறும் பல நன்மைகள் இருக்கின்றன. உதாரணமாக இணையத் தொடர்புகளை ஏற்படுத்தி எமக்கு வரும் மின்னஞ்சல்களைப் பெற்றுக்கொள்ளலாம், புகைப்படம் எடுக்கலாம், வீடியோ எடுக்கலாம் Voice Recording செய்யலாம். பாடல்கள் கேட்கலாம். அலாரம் வைக்கலாம், Torch Light ஆகக் கூட பாவிக்கலாம். கல்குலேற்றர், நாட்காட்டி, நேரசூசி, குறிப்பெழுத வசதி, ஆகியவற்றோடு உறவினர்களதும் நண்பர்களதும் முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், அவர்களது பிறந்தநாள் மற்றும் முக்கியமான நாள்களையும் இலகுவாக இதில் பதிவு செய்து கொள்ளலாம்.

இவ்வாறான நன்மைகள் இருந்தாலும் கைத்தொலை பேசியினால் பலவித தீமைகளும் ஏற்படுகின்றன. குறிப்பாக இளஞ்சந்ததியினர் கைத்தொலைபேசியைத் தவறான வழிகளில் பயன்படுத்தி ஒழுக்கக் கேட்டுக்கும் பண்பாட்டுச் சீரழிவுகளுக்கும் ஆளாகிறார்கள்.

பெண்கள் கடைகளுக்குச் சென்று தமது கையடக்கத் தொலைபேசியை 'றீலோட்' செய்துவிட்டுத் திரும்பும்போது, அவர்களது தொலைபேசி இலக்கங்களை இளைஞர்கள் சிலர் குறித்து வைத்துக் கொள்கிறார்கள். பின்னர் இவர்கள் அந்தப் பெண்களுடன் அழைப்பை ஏற்படுத்திக் கதைக்கும்

அளவுக்கு கைத்தொலைபேசியின் பயன்பாடு இன்று மிகவும் மோசமாகிவருகிறது.

பொருந்தாக் காதலைக்கூட ஏற்படுத்துவது இந்தத் தொலைபேசி மயக்கம்தான். முகம் தெரியாத நண்பர்களுடன் தொடர்புகொண்டு சீரழிந்துபோகும் இளம்பெண்கள் சிலரை நாம் இன்று பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

நீலப் படங்கள் (Blue Films) பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவை கைத்தொலைபேசிகளில் பதிவிறக்கம் செய்யப்பட்டு இளசுகளிடையே பரிமாற்றம் செய்யப்படுகின்றன.

அழகான பெண்கள் அவ்வப்போது நேர்முகமாகவோ மறைமுகமாவோ படம் எடுக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு பல நண்பர்களிடையே பார்வைக்கு விருந்தாகப் படைக்கப் படுகின்றன.

SMS மூலம் ஆபாசச் செய்திகள் பரிமாறப்படுகின்றன. Short Message Service என்பது இன்று Sex Message Service என சில இளவட்டங்களால் மாற்றப்பட்டுள்ளன.

எந்த ஒரு ஆணும் பெண்ணும் நேரில் சந்திக்கும்போது அவர்களது வெட்க உணர்வுகள் அவர்களிடமிருந்து வார்த்தைகள் வருவதைத் தடுத்துவிடும். அத்தோடு சமுதாயத்தின் கழுகுப் பார்வைகள், சமூகக்கட்டுப்பாடுகள் பெரிய திரைகளாக நின்று பெரும் தீமைகள் ஏற்படாமல் காக்கின்றன. ஆனால் இந்த வெட்கத் தடைகளையும் சமூகத் தடைகளையும் கைத்தொலைபேசிகள் தகர்த்தெறிந்து தங்குதடையற்ற செக்ஸ் பேச்சுக்களைப் பரிமாற்றம் செய்வதற்குத் துணைபுரிகின்றன.

இன்றைய இளம் சமுதாயத்தினரிடையே கைத்தொலை பேசியின் பாவனையால் நன்மைகளைவிடத் தீமைகளே அதிகமாகக் காணப்படுவதாகப் பலரும் தமது அவதானிப்பை பதிவு செய்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் மட்டும் சமீபத்தில் 86 மணமாகாத கன்னிப் பெண்கள் கருவுற்றிருப்பதாகவும் கருக்கலைப்பில்

ஈடுபட்டதாகவும் சமீபத்திய பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

இந்நிலையில் பெற்றோர்கள் தம்பிள்ளைகளுக்கு கைத் தொலைபேசி வாங்கிக் கொடுப்பதைத் தவிர்க்கவேண்டும். அத்தோடு அவர்களது நடவடிக்கைகளின் மீது முழுக்கவனம் செலுத்த வேண்டும். இதனை ஒரு சமூகக் கடமையாக எண்ணிச் சகலரும் செயற்படவேண்டிய காலம் ஒன்று தற்போது ஏற்பட்டுள்ளது என்பதை ஞானம் வலியுறுத்திக்கூற விரும்புகிறது.

ஞானம்–140 (ஜனவரி–2012)

42



சிறுவர் துஷ்பிரயோகம்

சமீபகாலங்களில் நாம் செய்திப் பத்திரிகைகளைத் திறந்தாலே எங்கோ ஒரு மூலையில் சிறுவர் துஷ்பிரயோகம்பற்றிய செய்தியைக் காணக்கூடியதாய் இருக்கிறது.

கடந்த ஆறுமாத காலத்தில் சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகள் துரிதகதியில் அதிகரித்துச் செல்வதாகவும் இக்காலப் பகுதியில் 700 சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் வெள்ளவத்தையில் இடம்பெற்ற பாலியல் படுகொலை கொழும்பு நகரத்தையே உலுக்கியிருந்தது. ஆறே வயது நிரம்பிய துஷ்யந்தினி என்ற சிறுமியை பதினாறு வயது உறவினன் ஒருவன் வேறு இரு சகாக்களுடன் சேர்ந்து பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கிவிட்டு சாக்கடையில் வீசிச்சென்றிருக்கிறான்.

பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக சிறுவர் மற்றும் மகளிர் பிரிவிற்கு தினம்தினம் முறைப்பாடுகள் நாட்டின் எங்கோ ஒரு மூலையில் கிடைத்த வண்ணம் இருக்கின்றன எனவும் அறியமுடிகிறது.

கால அடிப்படையில் பார்க்கும்போது இத்தகைய பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கைகளின் அதிகரிப்புக்குக் கையடக்கத் தொலைபேசியின் பாவனை, கணினிப்பாவனை போன்றவை காரணமாகின்றன எனவும் அறியமுடிகிறது.

சிறுவர் துஷ்பிரயோகங்களில் அச்சிறுவர்களின் உறவினர்களே அதிகம் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் கண்டறியப் பட்டுள்ளது. இத்தகைய மிகக் கேவலமான சமூகமாக இன்றைய சமூகம் மாறிவருகிறது.

பெற்றோர்களின் கவலையீனமும் கல்வியறிவின்மையும் கூட இத்தகைய குற்றச்செயல்கள் அதிகரிக்கக் காரண மாகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது. பெற்றோரின் பராமரிப்பின்மை பிள்ளைகளுக்கு முன்பாகத் தவறாக நடந்து கொள்ளல் போன்றவிடயங்கள் சிறுவர்களின் தவறான பழக்க வழக்கங்களுக்கு வழிவகுக்கின்றன எனவும் தெரிவிக்கப் படுகிறது.

சிறுவர்மீதான துஷ்பிரயோகங்களை இல்லாதொழிக்க சமூக மட்டத்தில் அது தொடர்பான விழிப்புணர்வுகள் ஏற்படுவது மிகமிக அவசியம். பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் பாதுகாப்பில் உன்னிப்பாகக் கவனம் செலுத்துவதும் முக்கியம். இத்தகைய நடவடிக்கைகளே சிறுவர் துஷ்பிரயோகத்தைக் குறைக்க ஓரளவுக்கேனும் உதவும்.

ஞானம்–146 (ஜூலை2012)

43

உதவிக்கரம் வேண்டிநிற்கும் புனர்வாழ்வுபெற்ற முன்னாள் போராளிகள்

'அன்றும் போராளி, இன்றும் போராளி' என்ற தலைப்பில் 'பதிவுகள்' என்ற இணையத் தளத்தில் பதிவாகியிருந்த ஒரு சிறுகுறிப்பை அவுஸ்திரேலிய நண்பர் முருகபூபதி ஞானத்துக்கு அனுப்பியிருந்தார். பெயர் குறிப்பிடப்படாத ஒருவர் அதனை எழுதியிருந்தார். அவர் விடுமுறையில் மட்டக்களப்புக்கு வந்தபோது, அங்கிருந்து 25 கி. மீ. தொலைவில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில், தான் சந்தித்த புனர்வாழ்வுபெற்ற ஒரு சில முன்னாள் போராளிகள் மற்றும் மனிதர்களின் சோகம் பற்றியதாக அந்தக்குறிப்பு இருந்தது.

'விபச்சாரம் செய்யும் முன்னாள் பெண் போராளிகள்'

'ஏழ்மையினால் குழந்தைகளுக்கு ஒரு வேளை உணவு வழங்க முடியாது முகாம்களில் தவிக்கும் முதுகெலும்பு பாதிக்கப்பட்ட முன்னாள் போராளி'

‘தொடைக்கு மேற்பகுதியுடனேயே காலை இழந்து, மனைவி குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காக வீதியோரத்தில் சுண்டல் விற்கும் முன்னாள் போராளி’

‘திருமணமாகி பத்தே மாதத்தில் கடல் மோதல் ஒன்றில் காணாமல்போன கேர்ணல் தரத்திலான தனது கணவன் இன்னும் உயிருடன் இருப்பார் என்னும் நம்பிக்கையுடன் தனது 4 வயதுப் பெண்குழந்தையுடன் வாழ்வாதாரம் இன்றி தம்பி தங்கையுடன் முகாமில் தவிக்கும் பெண்போராளி’

‘இருகைகளையும் தோள்மூட்டுடன் இழந்த முன்னாள் போராளியான மகனை பராமரிக்கும் வயதான தந்தை’

‘இருகண்களையும் இழந்த முன்னாள் போராளி’

‘குழந்தைப் போரளியாய் இயக்கத்தில் இணைக்கப்பட்டு இறுதிப்போரில் பெற்றோர் சகோதரிகளை இழந்த முன்னாள் போராளி’

புனர்வாழ்வு பெற்றிருந்தாலும் இவர்களின் வாழ்வில் அமைதியில்லை. மகிழ்ச்சி என்பது எள்ளவும் இல்லை. எப்பொழுதும் கண்காணிக்கப்டுகிறார்கள். எவ்வித கொடுப் பனவுகளும் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. தொழில் வாய்ப்புகள் குறைவு. கூலிவேலைகளும் இவர் களுக்குக் கிடைப்பதில்லை. வயல் வேலைகள், அறுவடை இயந்திரங்கள் அறிமுகப்பட்டிருப்பதால் குறைந்துள்ளது. இவ்வாறு இருப்பவர்களிடம் அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துப் போகிறோம் என்று பணம் பிடுங்கும் மனிதர்களுக்கும் குறைவில்லை.

இப்படியான போராளிகள் வடக்கு கிழக்கு எங்கும் நிறைந்திருக்கிறார்கள்.’

மேற்குறிப்பிட்ட பதிவினை வாசித்தபோது, பல்வேறு வகைகளில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டத்தினரில் உடனடியாக உதவிக்கரம் வேண்டிநிற்கும் ஒருசாரார் பற்றிய உணர்வு மேலோங்கியது.

மேற்குறிப்பிட்டவர்களின் வாழ்வாதாரத்தை அரசாங்கம் கவனிக்கும் என்று இன்னும் காத்திருக்கத் தேவையில்லை. சமூக அமைப்புக்களும், அரசு சார்பற்ற நிறுவனங்களும், புலம் பெயர்ந்த தமிழர்களும்தான் இவர்களது உயிரோசையைக் கேட்க வேண்டும். இவர்களுக்கு உதவிக்கரம் நீட்டவேண்டும்.

ஞானம்–148 (செப்டெம்பர் 2012)

44



அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட தமிழரின் காணிகளை மீளப்பெற வழிதானென்ன?

வலிகாமம் வடக்கு மற்றும் கிழக்கில் அரசாங்கம் 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணியை சுவீகரித்து தமிழ்மக்களின் இனப்பரம்பலை மாற்றி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. தமிழ் மக்களின் இன அடையாளங்களை அழித்து, இலங்கையை ஒரு சிங்கள பௌத்த நாடாக்கும் முயற்சியை மேற்கொள்கிறது.

இதன்காரணமாகப் பத்தாயிரம் குடும்பங் களைச்சேர்ந்த 20,000 மக்கள் மீளக் குடியேற முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இந்தியாவில் 80 ஆயிரம் பேரும் வலிவடக்கில் 10 ஆயிரம் பேரும் அகதி முகாம்களில் இருக்கிறார்கள் என ஐ. நா. அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இதற்கும் மேலாக பல இலட்சம் மக்கள் அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களது சொந்த இடங்களிலிருந்து இராணுவம் வெளியேறி இவர்களை மீளக் குடியேற அனுமதிக்கவேண்டும்.

இப்பிரதேசங்கள் செம்மண்ணைக்கொண்ட விவசாயம் செய்யக்கூடிய நிலப்பரப்புகளாகும். முன்னர் இக்காணிகளில் ஏற்றுமதிப் பயிர்கள் பல பயிரிடப்பட்டு இதனால் மக்கள் வாழ்வும் நாட்டின் பொருளாதாரமும் உயர்வடைந்திருந்தன. மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளக்கூடிய துறைமுகவசதிகளையும் இப்பிரதேசங்கள் கொண்டுள்ளன.

அரசாங்கம் இவற்றை இராணுவம் மூலம் தம்வசப்படுத்தி சிங்களக் குடியேற்றங்களை அமைத்து சிங்கள மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

2003ஆம் ஆண்டு உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 2006இல் இடைக்காலத் தீர்ப்பு ஒன்று வழங்கப்பட்டது. அதன்படி இராணுவம் அபகரித்த நிலங்களை மக்களுக்கு விட்டுக் கொடுக்கவேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை. கடந்த ஆண்டிலும் இந்த ஆண்டிலும் சர்வதேசத்தின் மத்தியில் ஐ. நா. பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முதலாவது ஷரத்தில் எந்த மண்ணில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டார்களோ அந்த மண்ணிலேயே அவர்கள் குடியேற்றப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் இத்தீர்மானத்தில் உள்ளதுபோல் எதுவும் நடைபெறவில்லை.

இது தொடர்பாக மக்கள் திரண்டெழுந்து அடிக்கடி போராட்டங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். ஆனால் அரசாங்கம் எதற்கும் மசிந்து கொடுப்பதாயில்லை. செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் முடிகிறது.

தற்போதுள்ள ஒரேவழி, வலிகாமம் வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த மக்களில் காணி உறுதிகள் வைத்திருப்போர் அனைவரும் அரசாங்கத்தின் காணி சுவீகரிப்புக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவேண்டும். ஆயிரக்கணக்கான வழக்குகள் தாக்கல் செய்யப்படவேண்டும். இதனை ஓர் இயக்கமாக முன்னெடுத்துச் செயற்படவேண்டும். அப்போது தான் அது சர்வதேசத்தின் பார்வையை இப்பிரச்சனையின் பக்கம் திருப்பும் என்பதும் தமிழரின் காணிசுவீகரிப்புப்

பிரச்சினை தொடர்பாக சர்வதேசம் கவனத்தில் கொள்ளும் என்பதும் இன்றைய சட்டவல்லுனர்கள் பலரின் கருத்தாக உள்ளது.

உள்ளூர் நீதிமன்றத்தில் நியாயம் கிடைக்கவில்லை என்றால் சர்வதேச நீதிமன்றத்திற்கு இவ்வழக்குகளைக் கொண்டு செல்லவும் வழிமுறைகள் இருக்கின்றன.

இதன்மூலம் எழும் குரல்கள், இலங்கை அரசாங்கத்தின் மீது உலக நாடுகள் அழுத்தங்களை ஏற்படுத்த வழிவகுத்து நீதியான முடிவொன்று கிட்ட வகைசெய்யும்.

ஞானம் – 156 (மே 2013)

45



‘∴பேஸ்புக்’ விபரீதங்கள்

இன்றைய உலகின் நவீன கண்டு பிடிப்பு களில் மனித குலத்திற்குப் பெரும் பயன் தரும் கண்டுபிடிப்புகளில் ஒன்றாகத் தொடர் பாடல் தொழில்நுட்பம் அமைந்துள்ளது. இத்தொடர் பாடல் தொழில்நுட்பத்தில் சமூக வலையத் தளங்களே அதிக ஆதிக்கம் செலுத்துகின்றன.

உலக நடப்புகள், வர்த்தகம், விளம்பரம், கல்வி, கலாசாரம், சுகாதாரம், ஆன்மிகம், விளையாட்டு, உடையலங்காரம், திருமணம் போன்ற இன்னும் பலதுறைகளில் தேவைப்படும் விடயங்களை அறிவதற்கும், ஆராய்வதற்கும், செய்தி, கடிதப்பரிமாற்றம் போன்றவற்றிற்கும் இந்த வலையத்தளங்கள் அதிகளவில் பாவிக்கப் படுகின்றன.

தமது எண்ணங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கும், உலக நடப்புகளை நொடிப்பொழுதில் அறிந்து கொள்ளவும் இந்த வலையத் தளங்கள் அளப்பரிய சேவை புரிகின்றன.

கையடக்கத் தொலைபேசியில் நாள்முழுவதும் இணைய உதவியுடன் இந்த சமூக வலைய அமைப்பைப் பயன் படுத்தக்கூடிய வசதியும் இன்று ஏற்பட்டுள்ளது.

தொடர்பாடல் யுகத்தின் அதீத வளர்ச்சியில் முகநூல் - '∴பேஸ்புக்' சமூக வலையமைப்பு ஒரு மைல்கல்லாகக் கருதப்படுகிறது. அந்த அளவுக்கு முகநூலானது உலகின் மூலை முடுக்கெல்லாம் விரிந்து வியாபித்திருக்கிறது.

∴பேஸ்புக் ஸ்தாபகரான அமெரிக்காவைச் சேர்ந்த மார்க் ஸுகர்பேர்க், சக மாணவர்களிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தத் தனது நண்பர்களுடன் சேர்ந்து ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் ஒரு சிறிய அறையில் 2004ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி பேஸ்புக் இணையத் தளத்தைத் தொடங்கினார். அதுவே இந்தப் பத்து வருட காலத்தில் விஸ்வரூபமெடுத்து உலகெங்கும் வியாபித்திருக்கிறது.

ஒரு பொருள் எதற்காகப் பயன்படுத்த உருவாக்கப்பட்டதோ அதனைவிடுத்து வேறு ஒன்றுக்கு அதிகமாகப் பயன் படுத்துவது மனிதச் செயற்பாடுகளில் என்றும் நிகழ்ந்து கொண்டிருப்பது வரலாறு.

இன்று ∴பேஸ்புக்கை சில இளைஞர்கள் தவறாகப் பயன்படுத்தி வழிதவறிப் போகிறார்கள். ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படவேண்டிய ∴பேஸ்புக் பெரும்பாலும் இளைஞர்களால் தவறாகப் பயன்படுத்தப்படும் நிலை உருவாகியிருக்கிறது. அதனால் பெரும் விபரீதங்களும் நடந்தேறியிருக்கின்றன.

கடந்த பெப்ரவரி மாதத்தில் மாத்திரம் ∴பேஸ்புக்குடன் சம்பந்தப்பட்ட இரு பாடசாலை மாணவிகளின் தற்கொலைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. முறைகேடான ∴பேஸ்புக் பாவனையே இதற்குக் காரணமாகும். கடந்த வருடங்களிலும் பல்வேறு வெளிவந்த, வெளிவராத சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

13 வயது முதல் 25 வயது வரையிலான மாணவர்களே அதிகமான நேரத்தைப் ∴பேஸ்புக் பாவனையில் செலவழிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வயதுப் பிரிவினர் சமூக ஊடகப் பாவனையில் இருக்கவேண்டிய அறிவு முதிர்ச்சியும் விவேகமும் இல்லாமல் இதனைப் பாவிப்பதாலேயே பல்வேறு அவமானங்கள், மனவுழைச்சல்கள், திருமண உறவுகள் முறிவடைதல், தற்கொலைகள் போன்ற விபரீதங்கள், இடம்பெறுகின்றன.

ஆரம்பக் கட்டிளமைப்பருவமும் ஆரம்ப இளமைப் பருவமும் மனிதவாழ்வில் மாற்றம் ஏற்படுத்தும் பருவமாகவும் மனப்புயல் ஏற்படுத்தும் பருவமாகவும் உளவியலாளர்கள் கருதுகின்றனர்.

இந்தப் பருவ வயதினரிடையே பல்வேறு பருவவிருத்தித் தேவைகளும் பருவவிருத்திப் பிரச்சினைகளும் காணப்படும். அத்தேவைகளையும் பிரச்சனைகளையும் உரிய முறையில் அடையாளங் காண்பதும் அதற்கான பரிகாரங்களை வழங்குவதும் பெற்றோர்களினதும் பாதுகாவலர்களினதும் ஆசிரியர்களினதும் முக்கிய கடமையாகும். இதற்கான தொடர்ச்சியான கண்காணிப்பும் வழிகாட்டலும் நெறிப்படுத்தலும் அவசியமாகும்.

∴பேஸ்புக் தொடர்பான விழிப்புணர்வும் அவற்றைப் பயன்படுத்துவது தொடர்பான அறிவூட்டல்களும் இளைஞர்களுக்கு இன்று அவசியமாகின்றன.

பாடசாலை மாணவர்கள் தங்களது கல்வி நடவடிக்கைகள் முடியும்வரை ∴பேஸ்புக் போன்ற சமூக இணையத் தளங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் இவற்றிற்கான ஒரு மாற்றுவழியாகவும் கருதப்படுகிறது.

பிள்ளைகளின் கையடக்கத் தொலைப்பேசிப் பாவனை மற்றும் சமூக ஊடகப்பாவனை தொடர்பாக அவர்களைக் கண்காணித்தலும் விழிப்புடன் இருத்தலும் முக்கியமாகும். தனி அறைகளில் கணினிகளை வைக்காது தமது பார்வைக்குட்பட்ட இடத்தில் அவற்றை வைப்பதும் பிள்ளைகளைப் பாதுகாக்க உதவும்.

ஞானம் 166 (மார்ச் 2014)

46

சிறுபான்மையின மக்களிடையே ஒற்றுமையும் புரிந்துணர்வும் அவசியம்

இந்தநாட்டில் கடந்தகாலங்களில் முஸ்லிம் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டுவந்த சம்பவங்களை பலரும் அறிவர். அதன் உச்சக்கட்டமாக கடந்த ஜுன் 15ஆம் திகதியும் அதன்பின்னரான சில நாட்களிலும் அளுத்கமை, தர்காநகர், மற்றும் பேருவளை ஆகிய பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. பள்ளி வாசல்கள் வர்த்தக நிலையங்கள், வீடுகள், வாகனங்கள், என்பன தீயிட்டுக் கொளுத்தப் பட்டதுடன் முஸ்லிம்கள் வாள் வெட்டுக்கும் உள்ளாகியுள்ளனர்.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, முஸ்லிம்கள் பள்ளிவாசல்களில் தஞ்சம் அடைந்து இருந்த வேளையில், மின்சாரம் செயலிழக்கப்பட்டு இச்சம்பவங்கள், இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து இலங்கையின் முன்னணி ஆடைவிற்பனை நிலையமான 'நோலிமிட்' பாணந்துறையில் எரிந்து சாம்பலாகியது.

150க்கும் மேற்பட்ட வீடுகள், 200க்கும் மேற்பட்ட வாகனங்கள், சேதப்படுத்தப்பட்டதாகவும் சேதாரம் 580 கோடியைத் தாண்டியுள்ளதாகவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

முஸ்லிம்கட்சிகள் பெரும்பாலனவை அரசுக்கு ஆதரவு கொடுத்த நிலையிலும் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்வதைத் தடுக்கமுடியாத நிலைமை காணப்படுகிறது.

இந்தக்கலவரத்தின் பின்னணியில் இருந்து செயற்படும் குழுவினர் தொடர்பாக பகிரங்கமாகப் பலரும் சுட்டிக் காட்டியபோதும் அவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாதது பலவிதமான சந்தேகங் களைத் தோற்றுவித்துள்ளன.

இந்த நாட்டில் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்தும் நடந்த வண்ணம் இருக்கின்றன. இதனை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமெனில், இன்று சுயநல அரசியல் நோக்குடன் செயற்படும் சிறுபான்மைச் சமூகங்களைச் சார்ந்தோர் சிலர் எதிர்காலத்திலாவது தமது செயற்பாடுகளை மாற்றியமைக்கவேண்டும். தமது சமூக நலன்கருதி இன ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்ற நிதர்சனத்தை நடந்து முடிந்த சம்பவங்கள் தெட்டத் தெளிவாக்கியுள்ளன.

அத்தோடு சிறுபான்மை இனமக்களான தமிழ் முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் செயற்பட்டு தம்மைப் பலப்படுத்துவதும் அவசியமானதாகும்.

ஞானம்–170 (ஜூலை 2014)

47



மண்ணில் புதையுண்ட ‘லயத்துச் சிறைகள்’

பதுளை மாவட்டத்தில் உள்ள கொஸ்லந்தை மீரியபெத்த தோட்டத்தில் 29-10-2014 அன்று காலை 7.15க்கு ஏற்பட்ட பாரிய மண்சரிவினால் உண்டான மனிதப் பேரவலம் மலையகம் எங்கும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டு மலைகளுக்கு நடுவில் இந்த மீரியவத்த தோட்டம் அமைந்துள்ளது. அந்த இரண்டு மலைகளில், 300 அடி உயரமான மலையே இந்த லயக் குடியிருப்புகளின்மேல் சரிந்து பல உயிர்களைக் காவுகொண்டுள்ளது.

இதில் ஏழு ‘லயங்களை’ உள்ளடக்கிய 128 குடியிருப்புகள், பால் சேகரிக்கும் நிலையம், கடைகள், வாசிகசாலை, எழுபது வருடப் பழமைவாய்ந்த மாமுனி ஆலயம் என்பன மண்ணிற்குள் புதையுண்டன.

இந்த மீரியபெத்த தோட்டம் குடியிருப் பதற்கு ஆபத்தான பகுதி என்று 2005ஆம்

ஆண்டிலும் அதன்பின்னர் 2011ஆம் ஆண்டிலும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டதாக அறிய முடிகிறது. இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையிலும் இங்கிருந்த மக்களை வெளியேற்றி பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்த தோட்ட நிர்வாகமோ, அரசாங்கமோ அல்லது தொழிற்சங்கங்களோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது பொதுவான குற்றச்சாட்டாகவுள்ளது.

மயைகத்தில் காலத்துக்குக் காலம் சிறிய - பெரிய அளவுகளில் மண்சரிவுகள் ஏற்படுவதும் அது தொடர்பான எச்சரிக்கைகள் விடுக்கப்படுவதும் பின்னர் அவை மறந்து போகப்படுவதுமான நிகழ்வுகள் தொடர்கதையாகவுள்ளன.

இது ஒரு இயற்கை அனர்த்தம் என்றாலும், இந்த 'லயத்துக் குடியிருப்பு' முறைதான் இந்தப்பாரிய உயிரிழப்புகளுக்குக் காரணம் என்பது நிதர்சனமாகவுள்ளது. ஏறத்தாழ 250 வருடங்களுக்கு முன்னர் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில், அன்றையகாலத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அமைக்கப்பட்டவையே இந்த 'லயத் தொடர்' வீடுகள். இந்த அமைப்பு பலகுடும்பங்கள் ஓரிடத்தில் குவிக்கப்பட்டு வாழும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகிறது.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு தனித்தனியான காணிகளும் வீடுகளும் பாதுகாப்பான இடங்களில் அமைக்கப் படவேண்டும் என்பதனையே இந்த மண்சரிவுச் சோகச் சம்பவம் வலியுறுத்துகிறது.

இந்த நாட்டுக்குப் பெருந்தொகையான வருமானத்தை ஈட்டித்தரும் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வது அரசாங்கத்தின் கடமை. அரசாங்கம் அதனைச் செய்ய வேண்டும்.

இருந்தபோதிலும் எதற்கெடுத்தாலும் தோட்டம் செய்து தரவேண்டும் அரசாங்கம் செய்து தரவேண்டும் என மலையக மக்கள் பிறரில் தங்கி வாழும் நிலைமையில் இருந்து விடுபட்டு சொந்தக்காலில் நிற்கவேண்டிய காலம் தற்போது கனிந்துள்ளது. பல தோட்டங்களில் தொழிலாளர்கள் தமது

சேமலாப நிதியை உத்தரவாதமாக வைத்து வங்கிகளில் கடன்பெற்று தங்களுக்கான வீடுகளைத் தாமே அமைத்து சுதந்திரமாக வாழும் நிலைமை உருவாகி வருவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. வசதியுள்ளவர்கள் இந்த லயத்து வாழ்க்கையில் இருந்து தங்களைத் தாங்களே விடுவித்துக் கொள்ளுதலே சகல வகையிலும் சிறந்த எதிர்காலத்தையும் பாதுகாப்பையும் அவர்களுக்கு வழங்கும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

ஞானம் 174 (நவம்பர் 2014)

48

ஒக்டோபர் – 1, சர்வதேச சிறுவர் தினத்தை அர்த்தமுள்ளதாக்குவோம்

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்னும் நோக்கோடு அவர்களைப் பாதுகாப் பதற்கு ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதி சர்வதேச சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அதற்கமைய யுனிசெப், யுனெஸ்கோ மற்றும் 'சேவ் த சைல்ட' போன்ற அமைப்புக்கள் பல்வேறு செயற்திட்டங்களை முன்வைத்துச் செயற்பட்டுவருகின்றன. 18 வயதுக்குட்பட்ட அனைவரும் சிறுவர்கள் என ஐக்கியநாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சாசனம் வரையறை செய்துள்ளது.

இதனிடையே சிறுவர்கள் உடல் ரீதியான துஷ்பிரயோகம், உளவியல் ரீதியான துஷ் பிரயோகம், பாலியல் ரீதியிலான துஷ்பிர யோகம், உணர்வு ரீதியான துஷ்பிரயோகம், புறக்கணிப்பு ரீதியான துஷ்பிரயோகமெனப் பலவழிகளில் அவர்கள் துஷ்பிரயோகத்திற்கு

உட்படுத்தப்படுகின்றனர். உலகில் வாழ்கின்ற மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் சிறுவர்களாவர். இவ்வாறு எதிர் காலத்தை நோக்கிய பயணத்தில் இருக்கும் சிறுவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாதிக்கப்படுகின்றனர்.

எமது இலங்கையைப் பொறுத்த வரையில் சமீபகாலமாக நாளேடுகளைத் திறந்தால் தினம் தினம் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய செய்திகள் அதிகரித்துச் செல்வதைக் காணமுடிகிறது.

கடந்த 2014 ஆம் ஆண்டு இலங்கையில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 10,315 புகார்கள் பதிவாகியதாக தேசிய சிறுவர் பாதகாப்புச் சபை அறிக்கை தெரிவிக்கிறது. இந்த வருடத்தில் 11-09-2015 திகதிவரை கிடைத்த தகவல்களின்படி சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 6499 புகார்கள் கிடைத்துள்ளதாக அறியமுடிகிறது.

நான்கு மாதங்களுக்கு முன்னர் புங்குடுதீவில் வித்தியா என்ற மாணவி கூட்டுப்பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து கொட்ட தெனியாய பகுதியில் 10 வயதுச் சிறுமி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். சமீபத்தில 5 வயதுச் சிறுமி இவ்வாறே கொல்லப்பட்டார்.

சிறுவர்களுக் கெதிரான வன்முறைகள் அதிகரிப்பதற்கான காரணம் என்ன?

இலங்கையில் பாலியல் கல்வி மாணவர்களுக்கு வழங்கப்படாமையே இதற்கான காரணம் என ஒரு சாரார் கூறுகின்றனர். போதிய பாலியல் கல்வி சிறுவர்களுக்கு அளிக்கப்படுமானால் அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறைகளை மேற்கொள்வார்கள் என நம்பப்படுகிறது.

அடுத்தது, இலங்கையில் உள்ள சட்ட ஏற்பாடுகள் சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்தப் போதுமானதாக இல்லை. பொதுவாக சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் இழுத்தடிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நியாயம் கிடைக்காத நிலைமையே காணப்படுகிறது.

சிறுவர் துஷ்பிரயோக வன்முறைகளைத் தடுக்கும் நோக்கில் பல்வேறு விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுக்க வெண்டிய தேவை இன்றுள்ளது. அதேவேளை சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரான தண்டனை அதிகரிக்கப்படவேண்டும். குற்றவாளிகள் தப்பிக்க முடியாதபடி சட்டத்தில் உள்ள ஓட்டைகள் அடைக்கப்பட வேண்டும். சிறுவர் பாலியல் தொடர்பான குற்றவாளிகளுக்கு அதிகபட்ச ஆயுள்தண்டனை வழங்கப்படவேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாகப் பெற்றோர்கள் தமது சிறுபிள்ளைகளின் மேல் கண்ணுங் கருத்துமாக இருந்து அவர்களது ஒவ்வொரு நடவடிக்கைகளிலும், குறிப்பாகப் பாடசாலை நடவடிக்கைகளில் கண்காணிப்புச் செலுத்த வேண்டும். அத்தோடு அவர்களுக்கு இதுதொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்கள் இத்தகைய சிக்கல் களுக்குள் அகப்பட்டுக் கொள்ளாமல் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வகைசெய்தல் வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில், சிறுவர் துஷ்பிரயோகத்தில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதே, சர்வதேச சிறுவர் தினத்தை அர்த்தபுஷ்டியுடன் அனுஷ்டிக்கும் முதன்மைச் செயற்பாடாக அமையும்.

ஞானம்185 (ஒக்டோபர்-2015)

புரிதல்

✦ சர்வதேச சிறுவர்தினத்தை அர்த்தமுள்ளதாக்குவோம் என்ற 185ஆவது இதழ் ஆசிரியத்தலையங்கம் அர்த்தமுடையது. இன்று சிறுவர் துஷ்ப்பிரயோகங்கள் மலிந்து செல்லும் வேளையில் இத்தகைய ஆசிரியத் தலையங்கங்கள் முக்கியமானதாகிறது.

– எஸ் கமலநாதன், பதுளை 187 (டிசம்பர்-2015)

49



வெள்ள அனர்த்தமும் இடர் முகாமைத்துவமும்

இவ்வருடம் மே 24ஆம் திகதி முதல் தொடரும் அடைமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு கடுங்காற்று மற்றும் மண் சரிவு காரணமாக இற்றைவரை 200க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 93 பேர் காணாமல் போயுள்ளனர். 63 பேர் காயமடைந் துள்ளனர். 1000 கிராமங்கள் வரை பாதிக்கப் பட்டுள்ளன. 6 22 510 பேர் வரை பாதிப்புற்றுள் ளார்கள். 8000 வீடுகள் அழிந்துபோயுள்ளன. 84,555 பேர் முகாம்களில் தங்கியுள்ளனர். நாடாளவிய ரீதியில் 15 மாவட்டங்கள் இந்த வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளன. அதிகமான உயிரிழப்புகளும் பாதிப்புகளும் இரத்தினபுரி மாவட்டத்திலேயே பதிவாகி யுள்ளன.

நமது நாட்டில் இத்தகைய வெள்ள அனர்த்தம் அடிக்கடி ஏற்பட்டு வருவதைப் பலரும் அறிவர். 1947ஆம் ஆண்டிலும்

இத்தகைய பாரிய வெள்ள அனர்த்தம் ஏற்பட்டது. 2003ஆம் ஆண்டு பாரிய வெள்ள அனர்த்தம் ஏற்பட்டு 260க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அத்தகைய ஓர் அனர்த்தமே இந்தவருடமும் நிகழ்ந்திருக்கிறது.

கடந்த 2016 மே 15ஆம் திகதி ஏற்பட்ட சூறாவளி, வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவினால் 22 மாவட்டங்களைச் சேர்ந்த 104 பேர் கொல்லப்பட்டதுடன் 99 பேர் காணாமல் போயிருந்தனர்.

இவ்வாறு கடந்தகால அனர்த்தங்களைப் படிப்பினையாகக் கொண்டு இடர்முகாமைத்துவமானது இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் எப்போதுமே விழிப்புடன் இருத்தல் வேண்டும். முன்கூட்டியே திட்டமிடல்களை மேற்கொண்டு மக்களை அப்புறப்படுத்தி பாதிப்புகளை ஓரளவேனும் குறைத்திருக்கலாம்.

கடந்த வருடத்தில் பாதிக்கப்பட்ட பெரும்பாலான பகுதிகள் தற்போதும் பாதிக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் வாழும் மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இது அனர்த்த முகாமைத்துவத்தின் அசமந்தப் போக்கையே தெளிவாகக் காட்டுகிறது.

கற்றுக்கொண்ட பாடங்களில் இருந்து தெளிவைப் பெற்று மீண்டும் அவ்வாறானதோர் அனர்த்தம் ஏற்படாதவாறு வருமுன் காத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்க வேண்டும். ஆனால் அத்தகைய தூரநோக்கு, மாறி மாறி வரும் நமது அரசாங்கங்களிடையே இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

வெள்ள அனர்த்தம் ஏற்படுவதற்கு இயற்கையின் சீற்றம் மட்டும் காரணமாக இருப்பதில்லை. சரியான முறையில் வடிகால்கள் அமைக்கப்படாமை, நீர் வடிந்தோடும் இடங்களை மறித்துக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுதல், அத்தகைய நிர்மாண வேலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டமை, சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டடங்களை அகற்றாமை போன்ற காரணங்கள் வெள்ள அனர்த்தத்தைப் பன்மடங் காக்குகிறது.

அரசாங்கத்திலுள்ள கையூட்டுப் பெறுபவர்களும் மோசடிக்காரர்களுமே இதற்குப் பிரதான காரணர்களாக விளங்குகின்றனர் எனக் கூறப்படுகின்றது. சென்ற மாதம் வெள்ளவத்தையில் மூன்று மாடிக் கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்து மூவர் உயிரிழந்தமைக்கும் இத்தகைய மோசடிக்காரர்களின் செயற்பாடுகளே காரணமாகப் பார்க்கப் படுகின்றன.

தற்போதைய அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது. மீட்புப்பணியில் முப்படையினரும் களம் இறக்கப்பட்டுள்ளனர். நிவாரணப் பணிகளும் துரிதகதியில் இடம்பெறுகின்றன. இது பாராட்டப்படவேண்டியது.

மேலும், இத்தகைய அனர்த்தங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்க சில திட்டங்களை அரசாங்கம் வகுக்க வேண்டியது அவசியமாகிறது. நமது நாட்டின் நில அமைப்பு, காலநிலை என்பவற்றைக் கருத்திற்கொண்டு ஆபத்தான பகுதிகள் அடையாளங் காணப்படல் வேண்டும். வடிகால் அமைப்புத்திட்டங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும். அனர்த்த வேளைகளில் பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்களிலிருந்து மக்களைத் துரிதமாக வெளியேற்றுவதற்குரிய திட்டங்களை வகுக்க வேண்டும். இவற்றின் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புக்களை பெருமளவு தவிர்க்கலாம்.

பாடங்களைக் கற்றுக்கொள்ளும் கடைசி அனர்த்தம் இதுவாகக் கொண்டு, எதிர்காலத்தில் இடர்முகாமைத்துவச் செயற்பாடுகள் அரசாங்கத்தினால் திறமைமிக்க திட்டமிடலுடன் அமைய வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

ஞானம் 205 (ஜூன் 2017)

50



போரினைத் தொடர்ந்து கடன் சுமைக்குள் சிக்கிப் போராடும் வடபகுதி மக்கள்

போரினால் பாதிப்படைந்த வடபகுதி மக்களை தற்போது மிக மோசமாகப் பாதித் திருக்கும் விடயங்களில் ஒன்றாக அம்மக்களில் பெரும்பாலானோர் பாரிய கடன் சுமைக்குள் சிக்கித் தவிப்பதாக அறியமுடிகிறது.

2009 மே மாதத்தில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் போர்க்காலத்தில் தமக்கு ஏற்பட்ட அழிவுகளிலிருந்து மீண்டு எழுவதற்குப் பணம் தேவைப்பட்டபொழுது மக்கள் கடன் நிறுவனங்களை நாடினர். தாம் இழந்த பொருட்களைக் கொள்வனவு செய்யவும் கைத்தொழில் முயற்சிகளை மேற்கொள்ளவும் பெரும்பாலானோர் கடன்பெற்றனர். வேறு சிலர் திட்டம் ஏதுமின்றி மற்றவர்களைப்போல தாமும் வாழவேண்டும் என்ற எண்ணத்தில் யுத்தத்தினால் தாம் இழந்த செல்வங்களை விரைவாகவே சேர்த்துக்கொள்ள வேண்டும்

என்ற ஆவலுடன் தமது வருமானத்துக்கும் அதிகமாகக் கடன் பெற்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மீற்றர் வட்டி, பிரமிட் வட்டி கொடுக்கும் நபர்களும் சில கடன் கொடுக்கும் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் சூழ்நிலையைப் பெரு மளவில் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். கடன்பெற்ற பலர் தாம்பெற்ற கடனை எந்த நிபந்தனையின்கீழ் பெற்றோம் என்ற விபரம் தெரியாமலே கடன் பெற்றிருக் கிறார்கள்.

கடன்சுமையால் பெண்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். யுத்தத்தின் காரணமாக வடக்கு கிழக்கில் 80 ஆயிரம் விதவைகள் இருப்பதாக ஒரு கணிப்பீடு கூறுகின்றது. இப்பெண்களில் பலர் குடும்பத்தலைவிகளாவர். கடன் பெறும் நிறுவனங்கள் தங்கள் இலக்காளர்களாக இந்தப் பெண்களையே அதிகமாகக் கொண்டுள்ளனர் எனவும் அறிய முடிகிறது. இவர்களில் அதிகமானோர் தங்களது குடும்பத்தைக் காப்பாற்றவேண்டித் தொழில் முயற்சிகளுக்காகக் கடன் பெற்றவர்கள்.

இப்படியாகக் கடன் பெற்றவர்கள் தாங்கள் அதிக வட்டிவீதத்திற்குக் கடன் பெற்றிருக்கிறார்கள் என்பதனையும் அதனைத் திருப்பிச் செலுத்துவற்கு அதிக காலம் எடுக்கும் என்பதனையும் அறியாதவர்களாகவே இருந்துள்ளனர். வழங்கிய கடனைத் திருப்பி அறவீடு செய்வதற்குச் செல்லும் முகவர்கள் சிலர் பெண்களுடன் அநாகரிகமாக நடந்து கொள்வதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் குடும்பங்களில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இப்படியான கடன் பிர்ச்சினையால் கடந்த ஒக்டோபர் மாத இறுதிநாட்களில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த நால்வர் பலியாகியுள்ளனர். அந்தக் குடும்பத் தலைவரும் சில காலத்துக்கு முன்னர் இதேகாரணக்காகத் தற்கொலை செய்துள்ளார். வடமராச்சி செம்பியன்பற்று பகுதியில் ஒரு பெண் கடன்வசூலிப்பவர்களது பார்வையிலிருந்து

தப்பித்துக்கொள்ள நான்கு மணிநேரம் கிணற்றுக்குள் பதுங்கியிருந்த சம்பவமும் அதேபோன்று முல்லைத்தீவில் ஒரு பெண் கடன் பிரச்சினையால் வேறு ஊருக்குச் சென்று தலைமறைவாக வாழ்ந்து வரும் சம்பவமும் இடம்பெற்றுள்ளன.

சமீபத்தில் ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்குச் சென்ற பொழுது அங்குள்ள விவசாயிகள் அவரைச் சந்தித்து தம்மை வங்கிக்கடன்களிலிருந்து மீட்டுத்தருமாறு கேட்டுள்ளனர்.

சமீபத்தில் யாழ். நீதிமன்ற நிதிபதி மா. இளஞ்செழியன் மீற்றர் வட்டி (கந்து வட்டி) வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். மீற்றர்வட்டி, பிரமிட் வட்டி என்பன சட்டத்துக்கு முரணான செயற்பாடுகள் எனவும் இதற்குப்பணம் கொடுப்பவரும் குற்றவாளி, வாங்குபவரும் குற்றவாளி எனவும் இத்தகைய மீற்றர் வட்டியானது யாழ்ப்பாணத்தில் ஒரு குடும்பத்தையே கொன்றுள்ளது, ஒன்றுமே அறியாத பச்சிளங்குழந்தைகள் இறந்து போனார்கள் இது ஒரு வாழ்க்கைப்பாடம் என நிதிமோசடி வழக்கின் தீர்ப்பு ஒன்றின்போது கூறியுள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாத முற்பகுதியில் இலங்கை மத்திய வங்கி ஆளுனர் இந்திரஜித் குமாரசுவாமி வடபகுதிக்குப் பயணம் மேற்கொண்டு அங்கு பொதுமக்கள் மத்தியில் கடன்சுமை அதிகரித்திருப்பது குறித்தும் அப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்தும் ஆராய்ந்துள்ளார். ஆனால் அதன்பின் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் வடக்குக் கிழக்கு போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதி என்பதையும் அங்குள்ள மக்கள் உயிர், உடமை இழப்புக்களை அதிகளவில் சந்தித்தவர்கள் என்பதையும் கருத்தில்கொண்டு கடன் சுமையால் பாதிக்கப்பட்ட அங்குள்ள மக்களின் நெருக்கடிகளைத் தீர்த்து வைக்கவும் அப்பகுதியின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பவும் அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஞானம் 211 (டிசம்பர் 2017)

51



போதைப் பொருள் வியாபாரமும் மரண தண்டனையும்

எமது நாட்டில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவதை தினம்தினம் பத்திரிகைச் செய்திகளில் பார்க்கிறோம்.

போதைப்பொருள் பாவனையால் தனிமனித வாழ்விலும் சமூகத்திலும் பெரும் சீரழிவுகள் ஏற்படுகின்றன.

போதைப் பொருளுக்கு அடிமையானவன் தன்னிலை மறந்து உடல் உளப்பாதிப்புக்கு உள்ளாகின்றான். அவன் தனது அறிவை இழக்கிறான். அவனது உடல் பலவீனப்படுகிறது. உள்ளம் கெட்டுவிடுகிறது. போதை தலைக்கேறியவன் உறுதி தளர்ந்து நிற்கமுடியாமல் ஆடிஅசைந்து விழுந்து விடுகிறான். அதன்பின் அவன் எதையும் உணர்வதில்லை. இளைஞர்கள் திடகாத்திரமாக, ஆரோக்கியமாக, ஆளுமையுள்ளவர்களாகத் திகழ்வதற்கு போதைப்பொருள் பாவனையும் அதனால் ஏற்படக்கூடிய தீய நடத்தைகளும்

தடையாக மாறிவிடுகின்றன. இளைஞர்களின் எதிர்காலக் கனவுகள் இலட்சியங்கள், நாசமாகின்றன. வாழ்வு சீரழிந்து விடுகின்றது. பலர் பல்வேறு நோய்களுக்கும் ஆளாகி விடுகின்றனர்.

இவர்களால் குடும்பத்திலும் சமூகத்திலும் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன. குடும்பத்துக்குள் ஒற்றுமை குறைந்து முரண்பாடுகள் தோன்றுகின்றன. வீண்செலவுகளால் வறுமை ஏற்படுகிறது. குடும்பத்தின் மானம், மரியாதை, கௌரவம் இழக்கப்படுகிறது.

இதுவரை காலத்தில் நடைமுறையிலுள்ள போதைப் பொருள் தடுப்பு ஏற்பாடுகள், விழிப்புணர்வுக் கருத்தாடல்கள், எவ்வித தாக்கத்தையும் சமூகத்தில் ஏற்படுத்தவில்லை. மாறாக போதைப்பொருள் பாவனை அதிகரித்துச்செல்வதைக் காணமுடிகிறது. இந்நிலையில் போதைப்பொருள் பாவனை யைத் தடுப்பதற்கு ஒரேவழி போதைப்பொருள் நாட்டுக்குள் வராமல் தடுப்பதேயாகும்.

இந்த முறையையே பல்வேறு நாடுகளும் தற்போது பின்பற்றுகின்றன.

நமது நாட்டில் போதைப்பொருள் கடத்தல்காரருக்கு சட்டத்தின்படி சிறைத்தண்டனை அல்லது மரணதண்டனை விதிக்கப்படுகிறது. அவர்கள் சிறையில் அடைக்கப்படுகின்றனர். ஆனால் மரணதண்டனை விதிக்கப்பட்டோருக்கு அது நிறைவேற்றப் படுவதில்லை. அவர்கள் சிறையின் உள்ளே இருந்தபடியே மீண்டும் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவதாக அறிய முடிகிறது.

அண்மையில் மீட்கப்பட்ட *152* கோடி பெறுமதியான *133* கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடையவர் தற்போது மரணதண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருப்பவர் என்பது தெரியவந்துள்ளது. மரண தண்டனை விதிக்கப்பட்ட சிறைக்கைதிகள் வெளியில் உள்ளவர்களுடன் கைத்தொலைபேசித் தொடர்புகளை ஏற்படுத்தி போதைப்பொருள் வியாபாரம்செய்வது தெரிய

வந்துள்ளது. சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகள் மத்தியில் காணப்படும் பலவீனத்தையே இது எடுத்துக்காட்டுகிறது. சில அரசியல்வாதிகளின் தொடர்பும் இதன் பின்னணியில் இருப்பதாகவும் செய்திகள் கசிந்திருக்கின்றன. போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பில் தற்போது 10535 பேர் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர். ஆயுட்தண்டனை பெற்றவர்கள்கூட இன்று சிறைச்சாலைகளில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். போதைப்பொருள் சிறைச்சாலைகளில் தாராளமாகக் கிடைப்பதாகவும் அறிய முடிகிறது.

அரச தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி இந்த விடயத்தில் தற்போது கூடுதல் அக்கறை எடுத்துள்ளார். போதைப் பொருள் வியாபாரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அமைச்சரவைக் கூட்டத்தில் மீண்டும் மரணதண்டனையை நடைமுறைப் படுத்துவதற்கான யோசனையை முன்வைத்துள்ளார். அது அமைச்சரவையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இருப்பினும் தற்போது மரணதண்டனை நிறைவேற்றுவதற்கு எதிர்ப்புகள் தோன்றியுள்ளன. நாட்டில் பலதரப்பட்ட கோஷங்கள் தொடங்கியுள்ளன. எல்லாவற்றையும் அரசிய லாக்கி தமக்கு சுயலாபம் தேடுவதே இன்று பல அரசியல் வாதிகளின் போக்காக உள்ளது.

போதைப்பொருள் வியாபாரத்தை உடனடியாகத் தடுப்பதற்கு சகலரும் கூட்டுப்பொறுப்புடன் இயங்குவதே இன்றைய தேவையாகும். அதுதான் சகலருக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது.

ஞானம் –218 (ஜூலை 2018)

அரசியல்

52



போரே போ
மீண்டும் வேண்டாம்!

இலங்கை நாட்டைக் கருமேகங்கள் சூழ்ந்துள்ளன. இடியும், கொடிய மின்னலும் முழக்கமும், தமிழ் மண்ணில் எந்நேரமும் நெருப்பு மழையாகக் கொட்டுவதற்குக் கட்டியம் கூறுவதை நாட்டு நடப்புகள் உணர்த்தி நிற்கின்றன.

வங்கக் கடலின் தாழமுக்கங்காரணமாக வடக்கு - கிழக்கு மக்கள் அடிக்கடி அந்தரங் களுக்கு - அவலங்களுக்கு - அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்து அவர்களின் வாழ்க்கை அல்லாடிக் கொண்டிருக்கும் நிலையில், வங்காளத்திலிருந்து வந்தோர்கள் எனக் கூறப்படுவோரின் இன்றைய வாரிசுகள் - மூத்த குடியினர் தாமே என்ற மூர்க்கத்தனமான நோக்கோடு சிறுபான்மையினத்தினரைக் காலில் போட்டு மிதிக்கும் கைங்கரியத்தை - இனச்சுத்திகரிப்பு முயற்சிகளை அரை நூற் றாண்டு காலத்துக்கும் மேலாக மும்முரமாக

முடுக்கிவிட்டுக்கொண்டே வருகின்றனர். ஒப்பாசாரப் பேச்சுவார்த்தைகள் - ஒப்பந்தங்கள் - சூழ்ச்சிகரமான வலைப்பின்னல்கள் முதலியவற்றினால் பேராண்மைவாதம் சிறுபான்மையினரைக் கட்டிப் போட்டு, முதுகில் சவாரி செய்ய மேற்கொண்ட எத்தனங்கள் பல. இந்தப் பொறிகளில் சிக்கிக் கொள்ளாமல், உறுதியுடன் துணிவாக எதிர்த்து நின்ற காரணத்தால், வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் மீது அநாகரிகமான முறையில் கட்டவிழ்த்துவிட்ட இருபதாண்டு கால யுத்தம், ஏற்படுத்திய அழிவுகளிலிருந்து அப்பகுதி மக்கள் இன்னும் மீளவில்லை. ஏராளமான எண்ணிக்கையினர் - தமது உறவுகளைப் பறிகொடுத்துவிட்டு இன்னமும் அகதி முகாம் வாழ்க்கையையே நடத்திக் கொண்டிருக்கின்றனர். 'தேசத்தை மீளக் கட்டி எழுப்புவோம்' எனத் தேர்தல் காலத்தில் ஆர்ப்பரித்து அரசு கட்டிலில் ஏறியவர்களின் பார்வையில் வடக்கு - கிழக்குப் பகுதிகளும் இருப்பது இன்னும் கண்களில் படவேயில்லை. அவை ஒரே தேசத்திலடங்கியவை அல்ல என்பதை அவர்களாகவே உணர்ந்துவிட்டனரோ என ஆச்சரியப்படவே வேண்டியுள்ளது.

சித்திரைப்புத்தாண்டை வரவேற்றுச் சிங்களப் பகுதிகளில் மகிழ்ச்சியுடன் கொளுத்தி எறியப்பட்ட சீனவெடிகள், வடக்கு-கிழக்கில் புதிய பரிமாணமெடுத்து துப்பாக்கி வேட்டுகளாக, கண்ணி வெடிகளாக, நாளொன்றுக்குச் சராசரி 7,8 அப்பாவி பொதுமக்களையாவது சங்காரஞ் செய்து வருகின்றன. வெள்ளை வான் என்ற எமனின் எருமைக்கடா வாகனத்தில், சிவில் உடையணிந்த படையினரும், துணைக்குழுகளும் மனித வேட்டை வெறி கொண்டலைவதை, யுத்த மீறல் கண்காணிப்புக் குழு, மனிதஉரிமை அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், மதப்பெரியார்கள் உறுதிப்படுத்தியும், அரசாங்கம் அவர்களை இனங்காணப்படாதவர்களென இருட்டடிப்புச் செய்து வருகி றது!

போர் நிறுத்த உடன்படிக்கையால் சில காலமாக ஓய்வுற் றிருந்த துப்பாக்கிகளின் வேட்டொலி மீண்டும் காதுகளைச் செவிடாக்குகிறது. கூடவே கத்தியும் வாளும் ஈவிரக்கமின்றி அப்பாவிகளை வெட்டிச்சரிக்கிறது. பேரினவாதக் கும்பல்

களும் - அவர்களுக்கு ஒத்தூதும் நாளேடுகளும் தமிழர்க் கெதிரான துவேஷத்தை உக்கிரமாகத் தூண்டிவருகின்றன. அன்றாடம் ஊடகச் செய்திகளைப் பார்க்கும்போது, அடுத்து என்னாகுமோ என்ற அச்சத்தில் நெஞ்சம் பதறுகிறது. தமக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன், அவ்வாறான பகுதிகளை நோக்கி, எரிந்து எஞ்சிய பொருட்களை ஏற்றிக் கொண்டு வடக்கு - கிழக்குப் பகுதி மக்கள், மாட்டு வண்டிகளிலும், சைக்கிள்களிலும் கால்நடையாகவும் பயணிப் பதைப் பார்க்கும்போது சென்ற தொண்ணூறுகளின் பாரிய இடப்பெயர்வுகள் கண்முன் தோன்றிப் பயமுறுத்துகின்றன.

'போர் நிறுத்த உடன்படிக்கை உடையக் கூடாது. பேச்சு வார்த்தை ஒன்றே பிணக்குகளைத் தீர்க்கும் வழி' எனச் சர்வதேசநாடுகள் அழிவிலிருந்து தப்பிக் கொள்வதற்கான யதார்த்த உண்மையை அழுத்திக் கூறிவருகின்ற போதிலும், அது செவிடன் காதில் விழாத சங்கொலியாகவேயுள்ளது.

அரசுத்தலைமையைச் சுற்றியிருப்பவர்கள் போர் நோக்கிய உத்திகளை வகுப்பதிலேயே நாட்டம் கொண்டிருக் கிறார்கள். பேரினவாதக் கூச்சங்களுக்குத் தலையசைத்துக் கொண்டிராமல், சிறுபான்மையினங்களின் அபிலாஷை களுக்குட்பட்ட அரசியல் தீர்வொன்றை முன்வைத்து அரசுத் தலைமை பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதே அவசரமும் அவசியமான உடனடிப்பணியாகும்.

ஏ 9 வீதியை மூடுவதாலேயோ, விமான - கடற்படைக் குண்டு வீச்சுகளாலேயோ பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது என்பது ஏற்கனவே கற்ற பாடம். அவற்றால் முழு நாடுமே எதிர்கொள்ளப்போவது பேரழிவே!

'போரே பேர் மீண்டும் வராதே' என்பதே அதன் கொடுமை களை அனுபவித்த பொதுமக்களின் அபிலாஷை, ஏக மனதான பிரார்த்தனை.

ஞானம்–72 (மே 2006)

53



செஞ்சோலைப் படுகொலைகள்

இரண்டாவது உலக மகாயுத்தத்தில் கூட நடைபெறாத கொடுமை செஞ்சோலை வளாகத்தில் நடந்தேறியிருக்கிறது. அதி சக்திவாய்ந்த நான்கு யுத்த விமானங்கள் வீசிய பதினாறு குண்டுகள் 61 பாடசாலைச் சிறுமிகளின் உயிர்களைப் பறித்துள்ளன. இவர்கள் உடல் சிதறிய நிலையில் பரிதாபமாக மரணத்தைத் தழுவியுள்ளனர். 155க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். இவர்களில் 25க்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இந்தக் கொலைகளை அரசு நியாயப் படுத்துகிறது. 'செஞ்சோலை என்பது புலிகளின் பயிற்சிமுகாம். அங்கு சிறுவயதுப் போராளிகளே பயிற்சிக்காக இருந்தனர். அரசுக்கு எதிராகச் செயற்படும் எவராயினும் வயது, பால் வேறுபாடின்றி கொல்வோம்' என்று கூறியி ருக்கிறார் அரசாங்கத்தின் பேரில் பேசவல்ல அதிகாரி.

உண்மை நிலை என்ன?

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் நெருக்கமாக வுள்ள பகுதி வல்லிபுனம் கிராமம். இந்தக் கிராமத்தில் அமைந்திருக்கிறது செஞ்சோலை வளாகம். வளாகத்தின் சுற்றாடலில் அநாதை இல்லம், நலன்புரி நிலையம் போன்றவையும் அமைந்துள்ளன. செஞ்சோலை வளா கத்தில் வதிவிடப் பயிற்சிகள் அவ்வப்போது நடைபெறுவது வழக்கம். அனர்த்தம் நடைபெற்றவேளையில், முல்லைத்தீவு மகாவித்தியாலயம், புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம், விஸ்வமடு மகாவித்தியாலயம், உடையார்கட்டு மகாவித்தி யாலயம், குமுளமுனை மகாவித்தியாலயம், முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரி, செம்மலை மகாவித்தியாலயம், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், முருகானந்தா மகா வித்தியாலயம், பிரமனந்தாறு மகா வித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவிகளும் வேறுசில பாடசாலைகளைச் சேர்ந்த மாணவிகளுமாக பதினெட்டுப் பாடசாலைகளைச் சேர்ந்த உயர்வகுப்பு மாணவிகளும், வேறு கல்வி நிலையங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உயர்வகுப்பு மாணவிகளுமாக 500 மாணவிகள் இருந்துள்ளனர். இப்பயிற்சிப் பட்டறை கிளிநொச்சி கல்வி வலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கு பெண்கள் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நிலையம் நிதியுதவி வழங்கியிருந்தது. இப்பயிற்சிப் பட்டறை முதலுதவி, பால்சமத்துவம், நேரமுகாமைத்துவம், குழுவேலை போன்ற வற்றில் மாணவிகளுக்குப் பயிற்சியளிப்பதற்காக ஏற்படுத்தப் பட்டது. பத்து நாட்களுக்கு நடைபெற ஏற்பாடாகி இருந்த இந்தப் பயிற்சியின் மூன்றாம் நாளான 14.08.2006 அன்று காலை 7 மணியளவில் மாணவிகள் சிலர் தற்போதைய போர்நிலைமைகளை அறிய வானொலியைச் சூழ்ந்திருந்தனர். அவர்களில் அதிகமானோரும் பயிற்சி அளிக்க வந்த அலுவலர்களுமே இந்தத் தாக்குதலில் பலியானார்கள்.

இந்தச் சம்பவத்தை நேரில் சென்று விசாரணை செய்த யூனிசெப் அதிகாரிகளும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும், ஐக்கியநாடுகள் சபையின் சிறுவர்களுக்

கான பிரிவினரும் கொல்லப்பட்டவர்கள் அப்பாவிப் பள்ளி மாணவர்கள். போர்ப் பயிற்சி பெற்றதற்கான தடயங்கள் அங்கு இருக்கவில்லை என்று கூறியுள்ளனர்.

இந்தக் கொலைகளும் அதற்கான அரசின் நியாயப்படுத்தலும் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களின் நெஞ்சங்களைப் புண்படுத்தியதோடு கொதிப்படையவும் செய்துள்ளன. ஆயுதப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சிறுவர்களையே அழித்தோம் என்று அரசு திரும்பத்திரும்பக் கூறிய போதும் சர்வதேச சமூகம் அதனை நம்புவதாக இல்லை. தமிழ்ப்பிரதேசங்களில் அரச படைகள் பொதுமக்களைக் குறிவைத்துத் தாக்கி அழிக்கின்றன என்ற உண்மை வெளியுலகிற்குத் தெரிய வந்துள்ளது. பல நாடுகளும் இச்சம்பவம் குறித்துக் கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளன. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் இறந்த மாணவிகளுக்காகக் கண்ணீர் அஞ்சலி செலுத்திக் கொண்டிருக்கின்றனர். தாங்கொணாத் துயரில் மூழ்கியிருக்கும் தமிழர்களின் உணர்வலைகளுடன் உலகமே இணைந்துள்ளது. அரசாங்கப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மோதலில் ஒரு லட்சத்துப் பதினையாயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்களும் நாற்பத்தையாயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம்களும் இடம்பெயர்ந்துள்ளனர். எங்கு போவதென்றும் தெரியாது மக்கள் அலைந்து திரியும் நிலைமை ஏற்பட்டுள்ளது. பலர் இறந்தும் பலர் காயமடைந்தும் உள்ளனர். 'மோசமான மனித உரிமை மீறல்களும் ஆட்கடத்தல்களும் பாரிய மனிதப்படு கொலைகளும் நிகழும் நாடாக இலங்கை மாறியுள்ளது' என்று ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மனிதப் படுகொலைகளுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் எதிராக எந்த விதமான விசாரணைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை எனவும் இந்த ஆணைக்குழு குற்றம் சாட்டியுள்ளது.

முன்னைய காலங்களில் அரசு கூறுவதையே நம்பி அதற்கு ஆதரவாகச் சர்வதேச சமூகம் கருத்துக்களை வெளியிடும் ஒரு நிலைமை இருந்தது. அத்தகைய அரசு மையப்பட்ட பார்வையை செஞ்சோலைப் படுகொலைகள்

மாற்றியமைத்துள்ளன என்றே கூறவேண்டும். தமிழ் நாட்டில் செஞ்சோலைப்படுகொலைகள் ஏற்படுத்திய உணர்வுகள் பல பரிமாணங்களை ஏற்படுத்தியுள்ளன. ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகத் தமிழகத்தில் மக்கள் திரண்டெழுந்து தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். தமிழக சட்ட சபையிலும் இச்சம்பவம் எதிரொலித்துள்ளது. எதிரும் புதிருமாகச் செயற்பட்டுவந்த தமிழக முதல்வரும் எதிர்க்கட்சித்தலைவியும் தமது கண்டனத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித் துள்ளனர்.

தமிழகமக்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளித்துச் செயற்படவேண்டிய நிலைமை இந்திய மத்திய அரசுக்கு ஏற்பட்டுள்ளது. ராஜீவ் காந்தி கொலையுண்டதைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தூரவிலகிநின்ற இந்தியா, தற்போது அவ்வாறு இருக்கமுடியாத நிலைமையை உள்ளக அரசியல் தோற்றுவித்திருக்கிறது.

சர்வதேச சமூகம் என்னதான் பேசினாலும் பிராந்திய வல்லரசான இந்தியாவின் கருத்தினை அனுசரித்தே போகவேண்டியுள்ளது. இவற்றையெல்லாம் நோக்கும்போது ஈழத்தமிழர் பிரச்சனையின் தீர்வுக்கான காலகட்டம் நெருங்கியுள்ளது என்றே தோன்றுகின்றது. நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

ஞானம்–76 (செப்டெம்பர் 2006)

54



புரிந்துணர்வும் இனப்பிரச்சனையும்

சமாதானம், நல்லாட்சி, அபிவிருத்தி ஆகியவற்றோடு தொடர்புடைய தேசியப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு இந்நாட்டின் பிரதான கட்சிகளான சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் புரிந்துணர்வு உடன் படிக்கை ஒன்றில் 23. 10. 2006 அன்று கைச்சாத்திட்டுள்ளன. நாட்டின் நலன் கருதியே இருகட்சிகளும் இந்தப் புரிந்துணர்வு உடன் படிக்கையை செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

உலகின் அபிவிருத்தி அடைந்த நாடுகள் சிலவற்றில் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் ஒன்றிணைந்து நாட்டின் நலன் கருதிச் செயற் பட்ட சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அதே போன்று தற்போது நமது நாட்டிலும் உக்கிர மடைந்துள்ள இனப்பிரச்சனைக்கான தீர்வினை அடைவதற்கு இந்த உடன்படிக்கை உதவும் எனக்கூறப்படுகிறது.

ஆளும் கட்சி இனப்பிரச்சனைக்கான தீர்வினை நோக்கி நகரும்போது எதிர்க்கட்சி அதனை எதிர்க்கும் வரலாறே நம்நாட்டில் நிலவிவந்துள்ளது. முன்னர் பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் போன்றவை கைச்சாத்திடப்பட்டபோது எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் எதிர்த்த வரலாற்றை எவரும் மறந்திருக்கமாட்டார்கள்.

இவ்விரண்டு கட்சிகளும் மாறி மாறி அரசாட்சி செய்து தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையை 50 வருடங்களுக்கு மேலாக இழுத்தடித்திருக்கின்றன. போராட்ட நிலைமையை உக்கிரம் அடையச்செய்திருக்கின்றன.

நாட்டில் பாரிய உயிர்ச்சேதங்கள், பொருட்சேதங்கள், இழுபறிகள் ஏற்பட்டபின்னர் இவ்விரு கட்சிகளும் இணைந்து செயற்பட உத்தேசித்திருப்பது இவர்களின் தன்னிச்சையான முடிவல்ல. சர்வதேச அழுத்தங்கள் காரணமாகவே இரு கட்சியினரும் இணைந்து செயற்பட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளார்கள். இரு கட்சியினரதும் இத்தகைய புரிந்துணர்வு இன்றி இனப்பிரச்சினையைத் தீர்க்கவும் முடியாது என்பதும் ஒரு நிதர்சனமான நிலைமையாகும்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பூர்வீகத் தாயகம் என்பது வரலாற்று ரீதியாகவும் பூகோள ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. இனப் பிரச்சனைக்குத் தீர்வு ஒன்றை ஏற்படுத்தும் முகமாக 19 வருடங்களுக்கு முன்னர் 1987இல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இவ்விரு மாகாணங்களும் இணைக்கப் பட்டன. ஆனால் 16. 10. 2006 அன்று பிரதம நீதியரசரான சரத் என் சில்வா தலைமையிலான ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உச்ச நீதிமன்றம், வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பு சட்டத்திற்கு முரணானது என்றும், இரு மாகாணங்களும் தனியான நிர்வாகங்களுக்குரியவை என்றும் தீர்ப்பு வழங்கியுள்ளது.

சர்வதேச சமூகங்கள் வடக்கு-கிழக்கைப் பிரிக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டை வலியுறுத்துகின்றன. அமெரிக்கா வெளிப்படையாகவே வடக்கு கிழக்கைப் பிரிப்பதை எதிர்த்துள்ளது.

வடக்கு - கிழக்கு இணைப்பைப் பிரிப்பது இனங்களுக் கிடையே தற்போது நிலவிவரும் பிரிவினையை மேலும் அதிகரிக்கும், போர்ச் சூழலை மோசமாக்கும் என்பது சர்வதேச சமூகத்தின் கருத்தாகும்.

வடக்கும் - கிழக்கும் இணைந்த தீர்வே இனப்பிரச்சி னைக்கான தீர்வின் அடிப்படையாகும். இதனையே பெரும் பாலான தமிழ்பேசும் மக்களும் ஏற்றுக்கொள்வர்.

சட்ட அடிப்படையிலேயே உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கியுள்ளது. வடக்கு கிழக்கு இணைப்பைத் தொடர்வதற்கான சட்ட நடவடிக்கைகளை ஏற்படுத்த வேண்டுமெனில் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும்.

மாகாணசபைகள் சட்டமூலத்தை மாற்றுவதன் மூலமே வடக்கு - கிழக்கு இணைப்பைத் தொடரமுடியும். இதற்கான முன்னெடுப்புக்களை அரசாங்கம் ஏற்படுத்தினால் இந்த விடயத்தில் அரசாங்கத்திற்குத் தாம் உதவுவதாக ஐக்கிய தேசியக்கட்சி கூறியுள்ளது.

வடக்கு கிழக்குப் பிரச்சனைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வை ஏற்படுத்தி நாட்டில் நல்லாட்சி மலர்வதற்காகவே இருபிரதான கட்சிகளும் தேசிய பொது வேலைத்திட்டத்தின் கீழ் இணைத்திருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார். இந்நிலையில் வடக்கு - கிழக்கு இணையச் செய்ய வேண்டிய பொறுப்பு இப்போது அரசாங்கத்தின் கையிலேயே உள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒரு சரத்து பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு முழுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதை வலியுறுத்துகிறது. அதற்காக ஆதரவும் வழங்கப்படவேண்டும் எனவும் கூறுகிறது.

இந்தச் சரத்து புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றிய சந்தேகத்தை தமிழ்பேசும் மக்களிடையே ஏற்படுத்தக்கூடியது. விடுதலைப் போராட்டத்தை ஒரு பயங்கரவாத நடவடிக்கை யாகப் பார்க்கும் நிலையே பெரும்பான்மை மக்கள் பலரிடம் உள்ளது.

எது எவ்வாறாயினும் இந்த உடன்படிக்கை இனப் பிச்சினைத் தீர்வுக்கு உதவக்கூடியது. பாராளுமன்றத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வேண்டிய சட்டங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய மூன்றில் இரண்டு பெரும் பான்மையைப் பெறுவதற்கு இந்த உடன்படிக்கை உதவும். மேலும் முன்னைய காலங்களில் நடைபெற்றது போல இனப்பிரச்சனைக்கான தீர்வு உடன்படிக்கைகள் கிழித் தெறியப்படாமல் இருப்பதற்கும் இந்தப் புரிந்துணர்வு தேவை.

நம் நாட்டு அரசியலில் நம்பிக்கெட்ட வரலாறுகள்தான் தமிழ் பேசும் மக்களுடையது. இனியும் அவர்களை ஏமாற்ற முடியாது. அவர்கள் பெற்ற பட்டறிவு அத்தகையது. ஒட்டுமொத்தமாகச் சூழ் நிலைகளை அவதானிக்கும் போதும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒளிக்கீற்று ஒன்று தெரிகிறது. காத்திருப்போம்.

ஞானம்–78 (நவம்பர் 2006)

55



“கெடுகுடி சொற்கேளாது”

யாழ் குடாநாட்டுக்கான போக்குவரத்து வீதி கடந்த *11.08.2006* அன்றுடன் மூடப்பட்டுவிட்டது. இதனால் யாழ்ப்பாணத்திலுள்ள ஆறுலட்சம் மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கிய வண்ணம் இருக்கின்றனர். உணவினை ஒரு யுத்தக் கருவியாகப் பாவிக்கும் முறையை உலகில் போர் நடந்த நாடுகள் சில பின்பற்றிய வரலாற்றைப் பார்த்திருக்கிறோம். அதேபோன்று நமது நாட்டிலும் நடைபெறுகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. கடந்த மூன்றரை மாதங்களாகச் சரியான உணவு விநியோகம் இல்லாததால் போஷாக்கு நிலைமை தாழ்ந்து மக்கள் பலதரப்பட்ட நோய்களுக்கும் ஆளாகி வருவதாக அறியப்படுகிறது. வயோதிபர் ஒருவர் பட்டினியால் மரணமடைந்துள்ளார். அரசு வழங்கும் நிவாரண உணவுப் பொருட்களை வாங்குவதற்கு அதிகாலை முதல் கொட்டும் மழையில் ‘கியூ’ வரிசையில் தவம் கிடக்கவேண்டியுள்ளது.

பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் 4000 வர்த்தக நிலையங்கள் இயங்கிவந்த யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது 400 வர்த்தக நிலையங்களே இயங்குகின்றன. இந்த வர்த்தக நிலையங்களிலும் மக்களுக்குத் தேவையான பொருட்கள் கிடைப்பதில்லை. கள்ளச் சந்தை விலைகளில் விற்பனை செய்து வந்த இந்த விற்பனை நிலையங்களும் விற்பனை செய்யப் பொருட்கள் இன்றி இன்னும் சில தினங்களில் மூடப்பட்டுவிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

பணத்தட்டுப்பாடு நிலவுவதால், கூட்டுறவுக் கடைகளில் கிடைக்கும் நிவாரணப் பொருட்களை கூடிய விலைக்கு விற்று, வயிற்றை ஒறுத்து தமது ஏனைய தேவைகளுக்கு பணம் பெறும் நிலை உருவாகியுள்ளது.

உணவுப் பொருட்கள் முன்னூறுசதவீத விலை அதிகரிப்பில் விற்கப்படுவதால் பணம் இல்லாதவர்கள் பட்டினி கிடக்க நேரிடுகிறது. எவ்வளவு காலத்துக்குத்தான் அதிக விலை கொடுத்துப் பொருட்களைப் பெறமுடியும்?

இந்நிலையில் இராணுவத்தினர் சில விற்பனை நிலையங் களைத் திறந்து உணவு விநியோகம் செய்கின்றனர். கௌர வமாக வாழ்ந்த யாழ் குடாநாட்டு மக்கள் இவர்களது விற்பனை நிலையங்களுக்கு முன்னால் கூனிக்குறுகி பிச்சைக்காரர்கள் போலக் கையேந்தி உணவுப் பொருட்களைப் பணம் கொடுத்து வாங்கிச் செல்கின்றனர்.

ஏறத்தாழ அறுபதினாயிரம் தொழிலாளர்கள் தொழில் புரியமுடியாமல் நடுத் தெருவில் அலைந்து திரிகிறார்கள். விவசாயிகள் மண்ணெண்ணெய் இல்லாததால் தோட்டங் களுக்கு நீர் இறைக்க முடியாத நிலையில் தங்களது விவசாயங்களைக் கைவிட்டுள்ளனர். இதனால் அநேகமான விவசாயக் காணிகள் காய்ந்துபோய்க் கிடக்கின்றன. யாழ் குடாநாட்டில் கிடைக்கும் விவசாயப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

டீசல் இல்லாததால் சிறிய பட்டறைகள் தொழிற்பட முடியாது பலர் தொழில் இழந்துள்ளனர். சீமேந்து, இரும்பு,

கம்பிகள் இல்லாததால் கட்டுமான வேலைகள் இன்றிப் பலர் வேலை இழந்துள்ளனர்.

டீசல் இல்லாததால் யாழ்ப்பாணத்துக்கு 2 முதல் 3 மணி நேரம் மட்டுமே மின்சாரம் வழங்கப்படுகிறது. இதனால் மின்சாரத்தில் இயங்கும் தொழிற்சாலைகள் மூடப்பட்டு பல தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.

மீன் பிடிப்பதற்குத் தடையிருப்பதால் லட்சக்கணக்கான மீன்பிடித்தொழிலாளர்கள் வேலை இழந்து பட்டினியால் வாடுகின்றனர்.

மொத்தத்தில் அரச ஊழியர்களைத் தவிர வேறு எவருக்கும் தொழில் இல்லை. இதனால் பண வருவாயில்லை. பணம் இல்லாத நிலையிலும் பொருட்கள் இல்லாத நிலையிலும் மக்கள் கொஞ்சங் கொஞ்சமாகச் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சரியான நோய்த்தடுப்பு முறைகள் இல்லாத நிலையில் நோய்கள் பெருகியுள்ளன. நுளம்புகள் பல்கிப் பெருகியுள்ளன. அங்கு 'சிக்கன்குனியா' அதி வேகத்தில் பரவிக் கொண்டிருக்கிறது. நீரழிவு, இரத்த அழுத்தம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் அன்றாடம் பாவிக்கும் மருந்துகள் இன்றிக் கஷ்டப்படுகின்றார்கள். பனடோல் ஒன்று ஐந்து ரூபாவுக்கு விற்கப்படுகிறது. கடும் நோயினால் பாதிக்கப்பட்டவர்களை, வேறு மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைத்தியம் செய்யவும் வழியில்லை. வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஓர் இளம்பெண் போதிய வைத்திய வசதியின்றி மரண மடைந்துள்ளார்.

வெளி மாவட்டங்களில் இருந்து யாழ் மக்களுக்கு உறவினர்களால் தபால் மூலம் அனுப்பப்படும் உணவுப் பொதிகள் திருகோணமலைத் தபாற்கந்தோரில் கிடந்து பழுதடைகின்றன. அவற்றைக்கூட உரியமுறையில் விநியோகிக் காமல் தேக்கி வைத்திருக்கிறார்கள். சென்றடையும் உணவுப் பொருட்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு சிதைந்த

நிலையிலும் பழுதடைந்த நிலையிலுமே உரியவர்களைச் சென்றடைகின்றன.

மக்களைக் குண்டுபோட்டுக் கொல்வது ஒரு வழி என்றால் பட்டினி போட்டுக் கொல்வது இன்னுமொரு வழி. மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள வாகரையிலும் இதுதான் நடைபெறுகிறது. 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து பசி பட்டினியால் வாடுகின்றார்கள். அங்கும் பசிக்கொடுமை காரணமாக பொன்னம்மா என்ற பெயருடைய வயோதிப மாது சமீபத்தில் இறந்துள்ளார்.

உள்ளூரிலும் சர்வதேச ரீதியிலும் ஏ-9 பாதையைத் திறக்குமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே உள்ளிட்ட கூட்டுத்தலைமை நாடுகளின் அறிக்கையிலும் நிபந்தனையின்றி ஏ-9 வீதி உட்பட மக்களுக்கான அனைத்துப் பாதைகளையும் திறந்து மனிதப் பேரவல நெருக்கடிகளைத் தீர்க்க வேண்டும் என்று அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நமது அயல் நாடான இந்தியாவும் இதனை உரத்துக் கூறியுள்ளது. ஆனால் அரசாங்கமோ யார் சொன்னாலும் ஏ-9 வீதியைத் திறக்கப்போவதில்லை என்று பிடிவாதம் பிடிக்கிறது.

யாழ்ப்பாணத்தில் ஒரு பழமொழி உண்டு - 'கெடு குடி சொற்கேளாது'

ஞானம்–79 (டிசம்பர் 2006)

56

கிழக்கிலங்கை வரலாறு காணாத பாரிய இடப்பெயர்வும் மனித அவலங்களும்

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை, வாகரை, திருகோணமலைப் பிரதேசத்தில் சில பகுதிகள் உட்பட்ட கிராமங்களிலிருந்து ஒரு லட்சத்து அறுபதினாயிரத்துக்கும் அதிகமான மக்கள் திடீரென இடம் பெயர்ந்துள்ளார்கள். இடம் பெயர்ந்த அனைவரும் தமிழர்கள். ஆண்டாண்டு காலமாக பரம்பரை பரம்பரையாக இப்பிரதேசங்களில் வாழ்ந்து வந்த மக்கள் கடுமையான ஷெல் தாக்குதல்கள் விமானக் குண்டு வீச்சுக்கள், பல்குழல் ரொக்கட் லோஞ்சர் தாக்குதல்கள், காரணமாகப் பல வந்தமாகத் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். மக்கள் செறிந்து வாழும் இடங்களில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதால் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் உட்பட முந்நூறுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஆயிரத்துக்கும் மேற் பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். மோசமான

இராணுவ நடவடிக்கை காரணமாக வீடுகள், ஆலயங்கள், பாடசாலைக் கட்டடங்கள், அத்தியாவசிய சேவைகள் அழிவடைந்து சின்னாபின்னமாகியுள்ளன. எதிர்காலப் பொருளாதார வளங்கள் சிதறடிக்கப்பட்டுள்ளன.

இடம் பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் வீதியோரங் களிலும் மரங்களின் கீழேயும் பொதுக்கட்டடங்களிலும் உதவிகள் அற்ற நிலையில் தங்கியிருக்கிறார்கள். பலர் காணாமல் போயுள்ளனர். படுவான் கரைப்பிரதேசத்தைச் சேர்ந்த பலர் காடுகளில் தஞ்சமடைந்து பெரும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கிழக்கின் வரலாற்றில் முன்னரும் சிறிய அளவில் இடப்பெயர்வுகள் ஏற்பட்டபோதும் இதுவே முதற்தடவையாக இடம்பெற்ற மாபெரும் இடப்பெயர்வாகும். இடம்பெயர்ந்த மக்களில் பலர் அவசர அவசரமாக வெளியேறியதால் முக்கிய ஆவணங்கள், பொருட்களை கைவிட்டு உடுத்த உடுப்புடன் வெளியேறியவர்கள். இவர்கள் மீண்டும் தமது வீடுகளுக்குச் சென்று அவற்றை எடுத்துவர முடியாது, அனைத்துத் தரைப்பாதைகளும் வாவிப் பாதைகளும் மூடப்பட்ட நிலையில் ஏக்கத்துடன் அலைந்து திரிகின்றார்கள்.

திடீரெனப் பெரும் தொகையான மக்கள் இடம் பெயர்ந்தமையால் நிவாரணப் பணிகளுக்கான நிதிவசதி, ஆளணிவசதியில்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

உணவுப்பற்றாக்குறை, குடிநீர் வசதியின்மை, இரவில் மின்சாரமின்மை, கடும்பனி, தற்போதைய கடும் வெப்பம் ஆகியவற்றால் மக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகியுள்ளார்கள். மலசலகூடங்கள் இல்லாத நிலையில் சுகாதாரச் சீர்கேடு, தொற்றுநோய்கள் பரவும் அபாயம் தோன்றியுள்ளது.

சமைத்த உணவுக்காக மக்கள் வரிசையில் காத்து நிற்பதுடன் முண்டியடித்துக் கொண்டு கையேந்தும் நிலையும் ஏற்பட்டுள்ளது. உணவு கிடைத்தாலும் குழந்தைகளுக்குப் பால்மா கிடைப்பதில்லை.

பசியால் கதறியழும் சிறுவர்களின் குரல் முகாம்களில் கேட்டவண்ணம் இருக்கிறது. மயங்கிவிழும் சிறுவர்கள் மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். இத்தகைய செய்திகள் நெஞ்சை உலுக்குகின்றன.

கர்ப்பிணிப் பெண்கள் சிலர் வீதியோரங்களில் பிரசவித்ததாகவும் அறியப்படுகிறது.

இடம் பெயர்ந்த மக்களுக்கு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவுவதற்கு, தற்காலிக தங்குமிட வசதிகள், சுகாதார வசதிகள் ஏனைய அடிப்படைத் தேவைகளை வழங்குவதற்கு முடியாது திணறுகின்றன. மாவட்ட செயலக அதிகாரிகள் இவர்களுக்கு அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுக்கப் பெரும் சிரமப்படுகின்றனர்.

ஐ. நா. சபை இந்த அகதிகளுக்கு உதவியளிக்கத் தம்மிடம் பணம் இல்லையெனவும் இவர்களுக்கு நிதியுதவி வழங்குமாறும் அவசர அழைப்பு விடுத்திருக்கிறது.

நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்ட மக்களுக்கு உதவ மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் பெரும் அக்கறையுடன் செயற்பட்டுவருகின்றனர். காத்தான்குடி, காங்கேயனோடை, பாலமுனை, கீச்சான் பள்ளம் ஆகிய இடங்களிலுள்ள பள்ளிவாசல்களூடாக அப்பிரதேச முஸ்லிம் மக்கள் நிவாரண உணவுப் பொருட்களைச் சேகரித்து உதவிவருகின்றனர். சமைத்த உணவுகள் பொதிசெய்யப்பட்டு இவர்களால் வழங்கப்படுகின்றன. கிழக்கிலங்கைப் பள்ளிவாசல்கள் ஒன்றியம், காத்தான்குடி பள்ளிவாசல்கள் சம்மேளனம் என்பன இடம் பெயர்ந்த தமிழ்மக்களுக்கான அவசர நிவாரண உதவிகளை வழங்க முஸ்லிம்கள் அனைவரும் முன்வரவேண்டும் என ஒலிபெருக்கிகள் மூலம் பகிரங்கமாக அழைப்பு விடுத்ததையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

இந்த அப்பாவி மக்கள் மீது எந்தத் தவறும் இல்லை. இவர்களின் உயிருக்கும் நலனுக்கும் உத்தரவாதம் அளிப்பது அரசின் கடமையல்லவா!

இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தினால் மட்டுமே அகதிகளின் மனிதாபிமான நெருக்கடிகள் தணியும். அவல நிலை நீங்கும். **ஞானம் –83 (ஏப்பிரல் 2007)**

57



சர்வதேச சமூகத்தின் அறிவுரையை அரசு செவிமடுக்குமா?

நாட்டில் போர் முனைப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. வெறுமனே பேச்சுக்குத் தயார் எனச் சர்வதேச சமூகத்திடம் கூறிக்கொண்டே போரில் முனைப்புடன் செயற் பட்டு வருகிறது அரசு. இந்தத் தவறான போக்கினால் நாடு பெரும் அவலத்துக் குள்ளாகியுள்ளது.

படைக்கு ஆள் திரட்டும் பணி முடுக்கிவிடப் பட்டுள்ளது. இராணுவத்திற்கு 25 ஆயிரம் பேர், கடற்படைக்கு 15ஆயிரம் பேர், விமானப்படைக்கு 10 ஆயிரம் பேர் என எல்லாமாக 50 ஆயிரம் பேரைத் திரட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கை வரலாற்றில் இத்தகைய பெருந்தொகையான படைதிரட்டல் முன்னொருபோதும் நடந்ததில்லை. தற்போது 120,000 ஆயிரமாக உள்ள படையினர் பின்னர் 170,000 ஆக அதிகரிப்பர். போரை முன்னெடுப்பதற்காகவே இவர்கள் திரட்டப்

படுகிறார்கள் என்பதை நினைக்கும்போது நாட்டின் எதிர்காலம் எவ்வளவு பயங்கரமாக இருக்கப்போகிறது என்பது புலனாகிறது.

இராணுவ விடயங்களில் அரசியல் தலையிடக் கூடாது. படையினருக்குச் சகல சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ளது எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆனால் படைத்தரப்பு முற்றுமுழுதாக அரசியல் மயப்படுத்தப்பட்டிருப்பதையே அவதானிக்கமுடிகிறது.

ஏற்றுமதி அபிவிருத்தி சர்வதேச வர்த்தக அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் 'ராய்ட்டர்' செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியொன்றில் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தில் தமிழ் மக்களுக்கு ஏதாவது விட்டுக்கொடுப்புக்களை ஏற்படுத்த வேண்டுமெனில் அரசாங்கம் இராணுவரீதியில் பலம்வாய்ந்த ஒரு நிலையில் இருந்துகொண்டே பேசுகிறது என்ற நம்பிக்கை பெரும்பான்மை மக்களிடம் இருக்கவேண்டும். அப்போதுதான் மக்கள் அதற்கு ஆதரவு தருவார்கள் எனக் கூறியுள்ளார். தாங்கள் தாக்கப்பட்டு பாதிக்கப்படக்கூடிய ஒரு நிலையில் இருப்பதாகப் பெரும்பான்மை மக்கள் மத்தியில் பீதி இருக்கக் கூடாது. மக்கள் மத்தியில் பாதுகாப்பு உணர்வு இருக்கவேண்டும் எனக் கூறியிருக்கிறார். அதாவது தற்போது அரசாங்கம் வடக்கு கிழக்கில் எடுக்கின்ற இராணுவ நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டு இராணுவ ரீதியான மேலாதிக்க நிலையில் இருக்கவேண்டும் என்பதே பேராசிரியரின் கருத்து. முன்பெல்லாம் பேராசிரியர் இராணுவரீதியான முனைப்புகளுக்கு ஆதரவாகப் பேசுவ தில்லை. போரினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களையே பேசிவந்துள்ளார். இப்போது இப்படிப் பேசியிருக்கிறார்.

மூதூர் கிழக்கு சம்பூரை அதியுயர் பாதுகாப்பு வலயமாக அரசாங்கம் வர்த்தமானிப் பிரசுரம் மூலம் அறிவித்துள்ளது. 2006 ஆகஸ்ட் மாதத்தில் மிகமோசமான விமானக் குண்டு வீச்சு, ரொக்கட் தாக்குதல், மோட்டார்த் தாக்குதல் ஆகிய வற்றால் இடம்பெயர்ந்த 16 ஆயிரம் மக்களில் பலர் அகதிமுகாம்களில்

தங்கியுள்ளனர். இவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற்றப்படுவார்கள் என்ற நம்பிக்கையுடன் காத்திருக் கின்றனர். இவர்களுக்குச் சொந்தமான 90 சதுர கிலோ மீற்றர் நிலம் இப்போது அதியுயர் பாதுகாப்பு வலயமாகி இராணுவத்தினர் அப்பகுதிக்குள் நிலைகொள்ளப்போகி றார்கள். இவ்வலயத்துள் அத்துமீறிப் பிரவேசிப்பவர்களுக்கு மூன்று முதல் ஐந்து வருட கடூழியச் சிறைத்தண்டனையும் ஐந்து இலட்சத்துக்கு மேற்படாத அபராதமும் விதிக்கப்படும் என வர்த்தமானி அறிவித்தல் கூறுகிறது. மூதூர் கிழக்கிலுள்ள இலங்கைத்துறைமுகத்துவாரம் 'லங்காப்பட்டுண' எனப் பெயர் மாற்றப்பட்டு அங்கு பௌத்த விகாரை ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கிழக்கு மாகாணம் படிப்படியாக தமிழ் மக்களின் பிடிகளிலிருந்து நழுவிச் செல்வதற்கான செயற்பாடுகளே அரசாங்கத்தால் மேற் கொள்ளப்படுகின்றன.

இப்படியாகத்தான் யாழ் தீபகற்பத்தின் மூன்றிலொரு பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாகி அங்கு வாழ்ந்த 15000 மக்கள் நாடோடிகள் ஆக்கப்பட்டனர்.

50 வருடங்களாகத் தமிழர் பிரதேசங்கள் படிப்படியாகப் பறிக்கப்பட்டன. புலிகளுடனான போரில் வெல்ல முடியாது மனித உரிமைகளைப் பாதுகாத்துச் செயற்படுங்கள். இராணுவ நடவடிக்கையை நிறுத்தி சமாதானப் பேச்சை உடனடியாக ஆரம்பியுங்கள் என அரசாங்கத்திற்கு பிரிட்டன் நேரடியாகவே கூறியுள்ளது. வேறுபல நாடுகளும் இதனை உணர்த்தியுள்ளன.

எவர் பேச்சையும் அரசு கேட்பதாயில்லை. சர்வதேச சமூகத்திற்கு சமாதானம் எனக்கூறிக்கொண்டு தென்னிலங்கை மக்களுக்கு யுத்தம் என்ற முகத்தைக் காட்டிக் கொண்டிருந்தால் பேரழிவுதான் மிஞ்சும். சர்வதேச சமூகத்தின் அறிவுரையை அரசு செவிமடுத்துப் போர் முனைப்பைத் தவிர்த்துப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதுதான் நாட்டுக்கு நல்லது.

ஞானம்–86 (ஜூலை 2007)

58



இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு அரசியல்வாதிகள் அந்தரங்கசுத்தியுடன் செயற்பட வேண்டும்

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வுகாணப்போகிறோம் எனச் சொல்லிக்கொண்டே இராணுவத் தீர்வில் நாட்டங்கொண்டு அரசு இயங்குவதை போர் நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

கிழக்கில் நடைபெற்ற போரில் பெரு வெற்றி பெற்றுவிட்டதாகக் கூறும் அரசு வடக்கிலும் அத்தகைய ஒரு பெருவெற்றியைப் பெற்றுவிடுவோம் எனக்கூறுகிறது.

புலிகளைத் தோற்கடிக்காமல் இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வொன்றைக் காணமுடியாது எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

படையினர் தங்கள் யுத்த நடவடிக்கைகளைப் படிப்படியாகத் தீவிரப்படுத்தி வருகின்றனர். வன்னியில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் கடும் விமானத் தாக்குதல்கள் நடைபெறுகின்றன. பல பொதுமக்கள் படுகாயம் அடைந்துள்ளனர். வீடுவாசல்கள், பாடசாலைகள், வணக்கத் தலங்கள் பலவும் அழிந்துபோயுள்ளன. பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்குப் பெரிதும் அச்சமடைந்துள்ளனர்.

கடும்யுத்தம் காரணமாக நாட்டின் பொருளாதாரநிலை மிகமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. யுத்த நடவடிக்கைகளை முடக்கிவிட்டுத் தென்பகுதி மக்களை யுத்தவெற்றி என்னும் மாயையில் வைத்துக்கொண்டு ஆட்சியாளர் மீதான மக்கள் எதிர்ப்பை சமாளித்து ஆட்சியைத் தொடர முயற்சிக்கிறது அரசு. ஒவ்வொரு வெற்றிக்கும் விழாக்கள் எடுத்துக் கொண்டாடுகிறது. ஏராளமான மில்லியன் டொலர்கள் யுத்தத்திற்காகச் செலவிடப்படுகின்றன. யுத்த விமானங்கள் எறிகுண்டுகள் யுத்தக் கப்பல்கள் வாங்கிக் குவிக்கப்படுகின்றன.

இதனால் என்ன நடக்கிறது? யுத்தப் பேரழிவுகள் ஒரு புறத்தில் நடைபெறுகின்றன. மறுபுறத்தில் மக்கள் பல்வேறு நெருக்கடிக்கும் ஆளாகவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டி ருக்கின்றனர். காஸ் விலையேற்றம், மாவு விலையேற்றம், மின்சாரக் கட்டண ஏற்றம், தண்ணீர்க் கட்டண ஏற்றம், மண்ணெண் ணெய் விலை ஏற்றம் என அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் விஷம் போல் ஏறிக் கொண்டேயிருக்கின்றன. அதனால் நாட்டிலே ஆர்ப்பாட்டங்களும் வேலை நிறுத்தங் களும் தொடர்கின்றன.

நாட்டின் ஒரு பகுதி மக்களை அழிப்பதாலோ ஓரின மக்களை இல்லாமலாக்குவதாலோ அல்லது அவர்களது உரிமைகளைப் பறிப்பதாலோ இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை.

தமிழ் மக்கள் வடபகுதியிலே வாழ்ந்தாலும் சரி, தென்னிலங்கையிலே வாழ்ந்தாலும் சரி அவர்கள் சுதந்திரமாகவும் தமது கலாசாரம் மதம் மொழி ஆகியவற்றைப் பாதுகாத்து வாழ்வதற்கேற்ற வகையிலும் ஓர் அரசியல் அமைப்பு உருவாக்கப்படவேண்டும். உடனடியாகப் போர் நிறுத்தப்படவேண்டும். நாட்டில் அமைதி நிலவவேண்டும்.

'நாட்டைப் பாதுகாப்பவர்கள் நாங்கள்தான்' என வாய்கிழியப் பேசும் அரசியல்வாதிகள் இதய சுத்தியுடன் அரசியல் தீர்வுக்காக ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும். இல்லாவிடில் இந்த நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற முடியாத அவல நிலைதான் தோன்றும்.

ஞானம்–89 (ஒக்டோபர் 2007)

59



கிழக்கு உதயம் ? ! ...

படையினரின் கிழக்கு வெற்றியைக் கொண்டாடும் 'கிழக்கு உதயம்' என்ற தேசிய வைபவம் 19.07.2007இல் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பில் 'குடும்பி மலை' என்ற தமிழ்ப் பெயருடன் விளங்கிய தமிழ்ப் பிரதேசம் இப்பொழுது 'தொப்பிக்கல' என்ற பெயருடன் விளங்குகிறது. இப் பிரதேசத்தை இராணுவத்தினர் கைப்பற்றியதன் மூலம் கிழக்கு மாகாணத்தை முற்று முழுதாகவே விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவித்து விட்டதாகக் கூறியே கிழக்கின் உதயம் என்ற நிகழ்ச்சி நடைபெற்றது.

கிழக்கு கைப்பற்றப்பட்டதை அறிவிக்கும் பிரகடனம் அடங்கிய பத்திரிகைச் சுருளை இராணுவத் தளபதி லெப். ஜெனரல்

சரத் பொன்சேகா உட்பட முப்படைகளின் தளபதிகள் ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

கிழக்கு மாகாணத்தில் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு நூற்றுக்கணக்கான தமிழர்களை கொன் றொழித்து, பல நூற்றுக்கணக்கானோரை காயப்படுத்தி, ஒரு இலட்சம் வரையிலான தமிழர்களை அகதிகளாக்கி, கோடிக்கணக்கான சொத்துக்களை நாசமாக்கியதன் பின்னரே தொப்பிக்கல கைப்பற்றப்பட்டுள்ளது.

பொதுவாக உலகரீதியில் வெளிநாட்டு அரசுகளை போரில் வெல்லும்போதே இவ்வாறான கொண்டாட்டங்கள் நடத்தப்படுவது வழக்கம். இலங்கையின் இன்னுமொரு சுதந்திரதினமாக, இன்னுமொரு எதிரி நாட்டை கைப்பற்றிய விழா போன்று சுதந்திர சதுக்கத்தில் விழாவினை நடாத்தி அரசு புளகாங்கிதம் அடைந்துள்ளது.

கிழக்கின் உதயத்தை கொண்டாட சகலரும் தேசியக் கொடியினை ஏற்ற வேண்டுமென்று அமைச்சர் கரு ஜெயசூரியா கோரிக்கை விடுத்திருந்தார். பாடசாலைகளில் வெற்றிக்கொடி ஏற்றி 'கிரிபத்' கொடுத்து கொண்டாடுமாறு உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

ஆனாலும் மக்கள் தங்கள் இல்லங்களில் ஏனோ தேசியக் கொடியை ஏற்றவில்லை. இந்தக் கொண்டாட்டங்களுக்கு இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, பிரித்தானியா ஆகிய இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை. இது ஒரு இராணுவரீதியிலான நிகழ்வு என வெளிநாட்டுத் தூது வர்கள் தெரிவித்துள்ளனர். இத்தகைய செயற்பாடுகள் பகைமை உணர்வை வளர்த்து மோதல்களை அதிகரிக்கவே செய்யும். இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலேயே தீர்வு காணப்படவேண்டும். இராணுவ வெற்றிகள் மூலம் தீர்வு காணமுடியாது.

யுத்தத்தைக் கொண்டாட வேண்டியதில்லை. யுத்தத்தின் முடிவையே கொண்டாடவேண்டும். யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரவேண்டும். இத்தகைய கொண்டாட்டங்கள் இன நெருக்கடிக்கு இராணுவத் தீர்வையே காண வேண்டுமென்கிற பேரினவாதச் சக்திகளையே பலப்படுத்தும், அரசியல் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம் மழுங்கடிக்கப்படும்.

இதே போன்றதொரு விழா 1995இல் யாழ் குடாநாட்டை இராணுவத்தினர் கைப்பற்றியதன் பின்னர் அந்த வெற்றியைக் கொண்டாடுவதற்கு அன்றைய ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் கொழும்பு காலிமுகத்திடலின் எதிரேயுள்ள ஜனாதிபதி செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. அன்றைய பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜனரல் அனுருத்த ரத்வத்த 'யாப்பா பட்டுன'வை விடுதலை செய்ததை அறிவிக்கும் பிரகடனத்தை திருமதி குமாரதுங்காவிற்கு கையளித்தார். பிற்பட்ட காலங்களில் 'யாப்பா பட்டுன'வின் விடுவிப்பிற்கு என்ன நடந்ததென்பது எல்லோருக்குமே தெரிந்த விடயம்.

ஆறுமாதப் போரில் தொப்பிக்கலவை விடுவிக்க எடுத்த இராணுவ நடவடிக்கையில் தங்கள் வீடுவாசல்களை இழந்து இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் தஞ்சமடைந்து அவலப்பட்டுக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களைப் பற்றி அரசு கவலைப்படவில்லை. இந்தக் கொண்டாட்டங்கள் அம் மக்களின் மனதில் எவ்வளவு வேதனையை உண்டாக்கும். வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவதுபோல் அவர்கள் உணர்வார்கள் என்பதைப் பற்றி அரசு கவலைப்படவில்லை.

தொப்பிக்கல பிரதேசத்தை பாதுகாக்க எட்டுப் படை அணியினர் தேவைப்படுவர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. படைத்தரப்பு அதிகார இறுக்கத்துக்குள்ளேயே கிழக்கு மாகாணத்தை வைத்திருக்க அரசு விரும்புகிறது. அங்கு உயர் பாதுகாப்பு வலையம் ஒன்றினை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதில் பன்னிரண்டு கிராம அலுவலர்

பிரிவுகளும் இருபத்தெட்டுக்கு மேற்பட்ட கிராமங்களும் அங்கு 4249 குடும்பங்களைச் சேர்ந்த 15458 பேர்களின் வாழ்விடங்களும் உள்ளன. அத்தோடு பத்தொன்பது பாடசாலைகளும் அமைந்துள்ளன. இங்குள்ள சிறார்களின் கல்வி, பொருளாதார வளங்கள், இயல்பு வாழ்க்கை யாவும் சீரழியப் போகின்றன. கிழக்கின் எதிர்காலம் கடந்த காலங்களைவிட மோசமான இனப் புறக்கணிப்புகளுக்கும் ஒடுக்கு முறைகளுக்கும் பாகுபாடுகளுக்கும் பலியாகப்போகும் பிரதேசமாக இருக்கப்போகிறது.

அரசு போர் முனைப்பினைக் கைவிட்டு, இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகண்டு இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதே சகல தரப்பினருக்கும் நல்லது.

ஞானம் – 87 (ஆகஸ்ட் 2007)

60



வரலாறு காணாத மனிதப் பேரழிவு!

தமிழினம் வரலாறு காணாத மனிதப் பேரழிவை இப்போது வன்னியில் சந்தித்துக் கொண்டிருக்கிறது.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களைக் கடந்த சில நாட்களில் பாதுகாப்பாக மீட்டெடுத்திருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. 'உலகின் மிகப்பெரிய பணயக் கைதிகள் மீட்பு நடவடிக்கை, என இதனை அரசாங்கம் வர்ணிக்கும்போது, முதல் நான்கு நாட்களில் 2000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாகவும் 4000க்கும் அதிகமானோர் காயமடைந்ததாகவும் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மூன்று மாதங்களில் 6500 பொது மக்கள் வன்னியில் இறந்ததாகவும் 14000 பேர் காயமுற்றிருப்பதாகவும் ஐ.நா.வின் அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

மோதல் பகுதியில் மேலும் ஒன்றரை இலட்சம்பேர் சிக்கியுள்ளதாகவும் அங்கு பாரிய

உணவுத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அறிய முடிகிறது. குழந்தைகளின் பால்மா வகைகளுக்கும் மருந்து வகைகளுக்கும் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. மக்கள் தங்கு வதற்குப் போதிய வசதிகள் இன்றியும் சுத்தமான குடிநீர் இல்லாமையாலும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பசியினால் இறக்கும் நிலைமையும் தொற்றுநோய்கள் பரவும் சூழலும் அங்கு ஏற்பட்டிருக்கிறது. காயமடைந்த அப்பாவிப் பொதுமக்கள் மருத்துவ வசதியின்மையால் இரத்தப் பெருக்கினால் இறப்பதாகவும் அறியமுடிகிறது.

இந்த யுத்தத்தில் சம்பந்தப்பட்ட இரு பகுதியினருக்கும் ஏற்பட்ட இழப்பைவிட இடையில் அகப்பட்ட அப்பாவித் தமிழர்களுக்கு ஏற்பட்ட இழப்பே அதிகமானது. யுத்தத்துடன் சம்பந்தமில்லாத இந்த அப்பாவி மக்கள் படும் அவஸ்தைகளை அறியும்போது நெஞ்சம் பதறுகிறது. எதிர்காலத்திலும் இவர்கள் தொடர்ச்சியான அவஸ்தைகளை அனுபவிக்கப் போகிறார்கள் என்பது நிதர்சனமாகத் தெரிகிறது.

'உடனே யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்பாவி உயிர்கள் அழிவது தடுக்கப்படவேண்டும்' என்ற சர்வதேசத்தின் குரல் செவிடன் காதில் ஒலித்த சங்காகி விட்டது. புலம்பெயர்ந்த தமிழர்களால் மேற்கொள்ளப்பட்ட கவன ஈர்ப்புப் போராட்டங்கள், யுத்தத்திற்கு எதிரான கண்டனப் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதப் போராட்டங்கள், தீக்குளிப்புகள் யாவும் பயனற்றுப் போயுள்ளன.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது 'தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என முன்னர் தந்தை செல்வநாயகம் பாராளுமன்றத்தில் கூறிய வாசகம்தான் நினைவுக்கு வருகின்றது.

நாட்டின் பிரஜைகளைப் பாதுகாப்பது அரசின் கடமை. அதனை உணர்ந்து அரசு செயற்பட வேண்டும். போர்தான் பிரச்சினைக்கான தீர்வு என்பதை விடுத்து மனிதாபிமானச் செயற்பாடுகளில் அரசு இறங்க வேண்டும். அதுவே இன்றைய உடனடித் தேவையாகும்.

ஞானம் 108 (மே 2009)

61

13ஆவது திருத்தச் சட்டமூலமும் இலங்கை அரசியலும்

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்தி தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக அரசாங்கம் கூறிக்கொண்டிருக்கிறது. இந்தச் சட்டமூலம் அரசியல் அமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம் ஆதலால் இதை அமுல்படுத்துவதில் எவ்வித சட்டப் பிரச்சனை களும் இருக்காது என்றும் அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் சிலர் கூறிக்கொண்டிருக் கிறார்கள்.

ஆனால் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்தினால் அதனை எதிர்ப்போம் என அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் சில உரத்துக் கூறிக்கொண்டிருக்கின்றன. ஹெல உறுமய, ஜே.வி.பி. போன்ற இனவாதக் கட்சிகள் இந்தச் சட்டமூலம் அமுல்படுத்தப்படுமானால் அதனை எதிர்ப்பதற்கு எந்த நேரமும் தயாராக இருக்கின்றன.

மாகாண சபைகளுக்கு அதிகாரப்பகிர்வு போன்றவற்றை வழங்கும் இந்த 13ஆவது

திருத்தச் சட்டமூலம் இந்தியாவின் அழுத்தத்தினால் ஏற்படுத்தப் பட்டது. இது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வந்த இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியை இராணுவச் சிப்பாய் ஒருவன் அணிவகுப்பு மரியாதையின்போது துவக்குப் பிடியினால் தலையில் அடிக்க முயன்றது இனவாதக் கடும் போக்களார்களின் அதிருப்தியைத் தெரிவிப்பதாய் அமைந்தது. 'இதனை ஜனாதிபதி ஜே. ஆர். மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புக்கு விடாமல் தந்திரமாக நீதிமன்ற அனுமதிமயைப் பெற்று நிறைவேற்றிக் கொண்டார்' என அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவர் சமீபத்தில் ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் கருத்துத் தெரிவித்திருந்தார். அரசாங்கக் கட்சிக்குள்ளேயே இந்தச் சட்டமூலம் தொடர்பான அதிருப்தியாளர்கள் இருக்கிறார்கள்.

இந்தப் 13ஆவது சட்ட மூலத்தை அமுலாக்கும்படி இலங்கை அரசுக்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்கும். அதற்கான தார்மீகக் கடப்பாடு இந்தியாவுக்கு உண்டு என்பது சில தமிழ்ப் புத்திஜீவிகளின் எதிர்பார்ப்பு. இப்போதுள்ள நிலைமையில் இலங்கை அரசுக்குப் எதிராக எதனையும் இந்தியா செய்யப்போவதில்லை என்பது நிதர்சனமாகிவிட்டது. வடகிழக்கு மாகாணங்கள் சட்டரீதியாகப் பிரிக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றை ஒன்றிணைப்பது தொடர்பாக சமீபத்தில் எழுப்பப்பட்ட ஊடகவியலாளரின் கேள்வியொன்றுக்குப் பதிலளித்த இந்திய உயர்மட்ட இராஜ தந்திரி ஒருவர், அது இலங்கை அரசினது உள்நாட்டு விடயம் என்று பதில் கூறியிருக்கிறார். இலங்கையின் உள்நாட்டு விடயங்கள் எதிலும் இந்தியா தலையிடுவதில்லை என்பது போன்ற கருத்து அவரது பதிலில் இருந்தது தான் பெரும் வேடிக்கை!

இந்த 13ஆவது சட்டமூலம் என்பது தமிழர்களைத் திருப்திப் படுத்துவதாக அமைந்துவிடாது என்பதாலேயே 1987க்குப் பின்னரும் ஆயுதப் போராட்டம் தொடர்ந்தது என்பது வரலாறு. இந்நிலையில் எதிர்ப்புகளுக்கு மத்தியில் அரசாங்கம் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுலாக்கினாலும் தமிழர் உரிமைப் பிரச்சனை தீர்ந்துவிட்டதாக ஆகிவிடாது.

மனமாற்றம், விட்டுக்கொடுப்பு, இன நல்லிணக்கம் என்பன தென்னிலங்கைத் தலைமைகளிடம் ஏற்படும்வரை தமிழர் பிரச்சனை தொடுவானமே!

ஞானம் 110 (ஜூலை 2009)

புரிதல்

✦ இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தம் பற்றிய ஆசிரியர் தலையங்கம் வாசித்தேன். இத்திருத்தத்தை அமுல்படுத்த விடமாட்டார்கள். அமுல்படுத்தினாலும் இனப்பிரச்சினை தீராது என்ற ஆசிரியர் கருத்து உண்மையேயாயினும் இது தொடர்பாக ஒரு சில கருத்துக்களையும் முன்வைக்க விரும்புகிறேன்.

இந்த 13வது திருத்தமானது 1987ஆம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்டது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. இந்த ஒப்பந்தத்தின் மூலம்தான் இலங்கை முழுவதிலும் மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. இன்றுள்ள நிலையில் வடமாகாணம் தவிர்ந்த ஏனைய எல்லா மாகாணங்களிலும் (பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் இன்றி) மாகாண சபைகள் இயங்கி வருகின்றன. முன்பு அமுலில் இருந்த கிராம சபை, பட்டண சபை, நகர சபை போன்ற ஜனநாயக அமைப்புக்கள் இல்லாமல் செய்யப்பட்ட நிலையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் செயலற்றவர்களாக்கப்பட்ட நிலையில் வட மாகாணம் ஏறக்குறைய 25 வருடங்களாக ஜனநாயகமற்ற சூனியப் பிரதேசமாகவே இருந்து வருகின்றது. உழுதுண்டு வாழ்ந்த வன்னி மக்கள் இன்று நடுத்தெருவில் நிற்கின்றனர். இவர்களின் பிரச்சினை மிகவும் அவசரமானது எனவே பேசிப் பேசியே பொழுதைக் கழிக்க நேரம் கிடையாது.

எனது கருத்து என்னவென்றால் வடக்கில் மாகாண சபையை அமைக்க அரசு விரும்பினால் அதனை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதற்கான அங்கீகாரம் அரசியல் அமைப்பில் ஏற்கனவே இருக்கின்றது. எனவே தனிநபர்களின் அல்லது அரசியல் கட்சிகளின் இனவாதக் கூச்சலைப் பொருட்படுத்தத் தேவையில்லை. வட மாகாண சபையை அமைப்பதற்குப் புதிதாக எவரினதும் அங்கீகாரம் தேவைப்படாது. கூடிய விரைவில் அகதி மக்களை மீளக்குடியமர்த்தி தமிழ் மக்களால் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அரசியல் அதிகாரங்களை வழங்கி இயல்பு நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். அதன்பின் வட மாகாண சபையிடம் அரசியல் அதிகாரத்தை ஒப்படைத்த பின்னர் இரண்டாம் கட்டமாக வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பாகவும், மேலதிக அதிகாரங்கள் தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும். இவ்விடயத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாகச் செயற்பட முன்வரவேண்டும். சகோதரர்கள் ஒற்றுமையாக இருக்கும்வரை குடும்பம் இருக்கும். அவ்வாறன்றி ஆளையாள் காட்டிக் கொடுக்க பலமாக முனைந்தால் அந்நியர் புகுந்து விளையாடுவதை தவிர்க்கமுடியாமல் போகும்.

கா. தவபாலன், கண்டி(ஞானம்–111– ஆகஸ்ட் –2009)

62



தீர்வுத்திட்டத்திற்கு முன் தீர்க்கப்படவேண்டியது...

தமிழ் மக்களுடைய பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கு 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்தப் போவதாக அரசாங்கம் உரத்துக் கூறிக்கொண்டிருக்கிறது. சமீப காலமாக 13+ என்கிற ஒரு திட்டமும் ஓங்கி ஒலிக்கப் படுகிறது. அதாவது பதின்மூன்றாவது திருத்தச் சட்டமூலத்திற்கும் சற்று அதிகமாகவே தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வாக சிலவற்றை நடைமுறைப்படுத்தப் போவதாக அரசாங்கத்தில் அங்கம் வகிப்போர் சிலர் கூறத் தொடங்கியுள்ளனர்.

ஆனால் இத்தகைய அரசியல் தீர்வுக்கு முன்னதாகத் தீர்க்கப்படவேண்டிய பாரிய பிரச்சனையாக மூன்று இலட்சம் மக்கள் அகதி முகாம்களில் படும் சோதனைகளையும், வேதனைகளையும் நீக்கப்படவேண்டிய உடனடித் தேவை உள்ளது. படையினரின் முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் வாழும் இந்த மக்களின் வேதனைகளும் ஆதரவற்ற நிலையும் பெற்றோரை இழந்த குழந்தைகளின் நிலையும்

மிகவும் பரிதாபமானவை. இந்த முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களிடையே தோன்றியுள்ள சமூக, கலாசார, உளவியல் பிரச்சனைகள் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்த மக்கள் முகாம்களிலிருந்து விடுபட்டு முகாம்கள் மூடப்படவேண்டியது இன்றைய தேவையாகும். இதனை தென்னிலங்கை மக்களோ, அரசியல்வாதிகளோ உணர்ந்ததாகத் தெரியவில்லை. உண்மையில் இந்த அகதி முகாம் பிரச்சனையும் அதன் நியாய அநியாயங்களும் தமிழ் மக்களுக்கு மட்டுமே ஏற்பட்டிருப்பதால் அதனுடைய பலதரப்பட்ட பரிமாணங்களை துன்ப துயரங்களை சிங்கள மக்கள் உணர்ந்துகொள்ள வாய்ப்பில்லை.

இந்த முகாம்களை தொடர்ந்தும் வைத்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் புலி உறுப்பினர்களைக் களையெடுப்பதற்காகவே என அரசாங்கத்தினால் ஒரு காரணம் முன்வைக்கப்படுகிறது. புலியுறுப்பினர் பலர் கொன்றொழிக்கப்பட்டுவிட்டனர். சிலர் ஏற்கனவே சரணடைந்துவிட்டனர், வேறு சிலர் அடையாளம் காணப்பட்டு விட்டனர். எனவே எஞ்சிய ஒரு சிறுதொகையினரை அடையாளங் காண்பதற்கு சிசுக்களையும் சிறுவர்களையும் வயோதிபர்களையும் முகாம்களில் முடக்கி வைப்பது முறையாகாது. முதற்கட்ட நடவடிக்கையாக இவர்களையாவது அரசாங்கம் இந்த முகாம்களிலிருந்து வெளியேற்றி இவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க முன்வரவேண்டும்.

வேறொரு பிரச்சனையாக இந்த மக்களை மீளக் குடியேற்றுவதற்கு முன்னர் கண்ணிவெடிகள் அப்பிரதேசங்களிலிருந்து அகற்றப்படவேண்டும் எனக் கூறப்படுகிறது. ஆனால் இதுவும் சரியான காரணமாகத் தெரியவில்லை. ஏனெனில் அங்கு பல கிராமங்களில் யுத்தம் முடியும் வரை மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். வன்னியில் உள்ள கிராமங்கள் முழுவதிலும் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்தன எனக் கூறமுடியாது.

இந்த முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களின் மனங்களில் தங்களுக்குச் சொந்தமான நிலங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெறப்போகின்றதோ என்ற வேறொரு அச்சமும் காணப்படுவதாக அறியமுடிகிறது.

முன்னைய காலங்களில் ஏற்படுத்தப்பட்ட திட்டமிடப்பெற்ற சிங்களக் குடியேற்றங்களையும் அதன் காரணமாகப் பல தமிழ்ப் பிரதேசங்கள் பறிபோனதையும் இதற்கு உதாரணமாகக் காட்ட முடியும். எனவே இந்த முகாம்கள் இனவாத நோக்கில் அமைக்கப்பட்டவை என்ற எண்ணமும் இந்த முகாம்களிலுள்ள மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற்றம் செய்யப்படாதவரை அவர்களது மனதில் மேலோங்கியிருக்கும்.

தமிழர்களுக்கான பிரச்சினைகளின் அரசியல் தீர்வு என்பது கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக தென்னிலங்கை அரசியல் வாதிகளால் 'பூச்சாண்டி காட்டப்பட்டு' வரும் விடயம். அரசியல் நடத்துவதற்கு தென்னிலங்கை அரசியல் வாதிகளுக்கு இந்தத் 'தமிழர் பிரச்சினை' என்றுமே தேவையான விடயமாக இருந்தது; இருந்து வருகிறது.

இன்று தமிழ் மக்களுக்கு உடனடித் தேவையாக உள்ளது, இந்த முகாம்களில் இருக்கும் மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கையாகும். இதனை அரசாங்கம் உணர்ந்து செயற் படுவது தேசிய நலனுக்கு உகந்ததாக அமையும் என வலியுறுத்த விரும்புகிறோம்.

ஞானம் III (ஆகஸ்ட் 2009)

புரிதல்

✦ ஞானம் ஆகஸ்ட் ஆசிரியத்தலையங்கம் ஞானம் வாசகர்களை மாத்திரமின்றி ஆட்சியாளர்களையும் கவனத்துக்குட்படுத்தும். சரியானநேரத்தில் சரியான ஆசிரியத்தலையங்கம் எழுதியிருக்கிறீர்கள்.
ஞானம் ஆரோக்கியமான இலக்கியத்தையும் ஆரோக்கியமான அரசிய லையும் வளர்க்கவேண்டும் என்பதில் சிரத்தை காண்பிப்பது தூரதேசத்தி லிருக்கும் எமக்கு நம்பிக்கை அளிக்கிறது.

வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் அவதியுறும் எமது மக்கள் மீண்டும் தமது சொந்த வாழ்விடங்களுக்கு திரும்பவேண்டும் என்றுதான் அயல்நாடான இந்தியாவும் மற்றும் சர்வதேச சமூகமும் ஐ.நா. மன்றமும் தொடர்ந்து வலியுத்தி வருகின்றன.

அரசியல் தீர்வா?, நிவாரணப்பணியா? எது இப்பொழுது மிக முக்கியமானது என்பது தொடர்பாக அவுஸ்திரேலியா உட்பட பல வெளிநாடுகளில் வதியும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களிடமும் வாதப்பிரதிவாதங்கள் தொடர்வதை அவதானிக்கமுடிகிறது.

வெளிநாடுகளில் இருப்பவர்கள் என்னதான் சொன்னாலும் தாயகத்தில் வாழும் தமிழர்கள்தான் தங்கள் தலைவிதியைத் தீர்மானிக்க இயலும். அவர்களுக்கு எத்தகைய அரசியல் தீர்வு தேவை என்பதை தீர்மானிக்கும் உரிமையும் அவர்களைத்தான் இன்று சார்ந்திருக்கிறது.

அதற்கு முன்னர் அகதிகளாக அல்லல்படும் அவர்கள் தொடர்ந்தும் கையேந்தி வாழும் அவலவாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு அரசாங்கம் திடமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். தொடர்ந்தும் கண்ணிவெடிகளையே காரணம்காட்டி அவர்களின் மீள்குடியேற்றத்தை தாமதப்படுத்துவதானது மேலும் மேலும் அரசியல் சிக்கல்களையே உருவாக்கும்.

கடந்த ஜூலை மாதம் இதுதொடர்பாக அரச தலைவர்களுடன் பேச்சவார்த்தை நடத்தவும் புனர்வாழ்வு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள முன்னாள் சிறுவர்போராளிகளை பார்வையிட்டு அவர்களின் அடிப்படைத்தேவைகள் குறித்து ஆராயவும் கனடா, இங்கிலாந்து, மத்திய கிழக்கு, அவுஸ்திரேலியா முதலான நாடுகளில் இருந்து ஐவர்கொண்ட குழு இலங்கை வந்திருந்தது. அவர்களில் இரண்டு எழுத்தாளர்களும் ஒரு பத்திரிகையாளரும் இருந்தனர். இவர்கள் அம்பேபுஸ்ஸ முகாமில் இருக்கும் யுவதிகளுக்கு தேவையானவற்றையும் வழங்கினர் என்பதை இச்சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

எமது மக்களின் துயர் துடைப்பதற்காக இலங்கையிலிருக்கும் தமிழ், முஸ்லிம், சிங்கள எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்கள் ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி அம்மக்கள் மீளக் குடியமர வலியுறுத்துவதுடன் ஆக்கபூர்வமான செயல்திட்டத்தை நிவாரணப்பணிகளுக்காக உருவாக்கவும் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இது சம்பந்தமாக இலங்கையில், கொழும்பில் இயங்கும் கலை, இலக்கிய அமைப்புகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டியதும் காலத்தின் தேவை.

முருகபூபதி, அவுஸ்திரேலியா. (ஞானம்–112– செப்டெம்பர்–2009)

63



வடமாகாணத் தேர்தலும் தமிழரின் எதிர்காலமும்

உள்நாட்டிலும் உலகநாடுகள் பலவற்றிலும் பெரிதாக உற்றுநோக்கப்பட்ட வடமாகாணசபைத் தேர்தல் பல செய்திகளை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் உணர்த்தியிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி எதிர்பார்த்த ஒன்றுதான். ஆனால் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பினரே எதிர்பார்த்திராத முறையில் வரலாற்றில் முதல்தடவையாக ஐந்தில் நான்கு பெரும்பான்மையுடன் தமிழ்தேசியக் கூட்ட மைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு மக்கள் அங்கீகாரம் வழங்கியிருக்கிறார்கள்.

முப்பது வருடகாலம் யுத்தத்திற்கு முகம் கொடுத்து யுத்த இழப்புக்கள், வடுக்கள், துன்பங்கள், சுயமரியாதை இழப்புக்கள், அவ தூறுகள் போன்றவற்றால் கலங்கி நின்ற மக்கள் தம்மை சுதாகரித்துக்கொண்டு எழுந்து தமிழ்க்கூட்டமைப்புக்கு வாக்களித்ததன் மூலம் தமது உள்ளக்கிடக்கைகளை உலகிற்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

தேர்தல்கால யாழ்தேவி ரெயில், லக்சபானா மின்சாரம், 'காப்பெற்' தெருக்கள், தமிழ் எப். எம். வானொலி, அரச வேலை வாய்ப்புகள் போன்றவற்றால் அரசு மக்களைத் தம்பக்கம் இழுக்கமுயன்றதும், தேர்தல்கால இராணுவ அச்சுறுத்தல்களும் மக்களைத் தமது உறுதிப்பாட்டிலிருந்து மாற்ற முடியவில்லை.

யுத்ததில் வெற்றிபெற்ற அரசாங்கத்தால் மக்களின் மனதை வெற்றிகொள்ள முடியவில்லை. சுயகௌரவம் இல்லாத அபிவிருத்தியால் எவ்வித நன்மையும் இல்லை என்பதை மக்கள் அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பிருந்தே தமிழர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடிவந்துள்ளார்கள். ஒவ்வொரு போராட்ட வடிவமும் சர்வதேச சூழலுக்கு ஏற்பவும் எதிர்வினைகளுக்கு ஏற்பவும் மாறிவந்திருக்கின்றன. இந்தப் போராட்டங்கள் தோற்கடிக்கப்பட்டபோதும் போராட்டத்துக்கான காரணங்கள் அப்படியேதான் இருக்கின்றன. தமிழ்மக்கள் அரசியல் ரீதியான போராட்டத்தை மீண்டும் தொடர்வதற்காக வடக்கு மாகாணத் தேர்தலைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்ற செய்தி உலகிற்குத் தரப்பட்டுள்ளது.

'ஐக்கிய இலங்கைக்குள் சுயாட்சி' என்பது தமிழர் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையான செய்தி. இணைந்திருத்தலுக்குள் தமக்கான சுயாட்சி பற்றிய விருப்பமும் தேவையுமே தமிழ் மக்களின் கோரிக்கை யாகவுள்ளது.

கூட்டமைப்பு ஆட்சி அமைக்கும் பட்சத்தில் அவர்களின் முன்னால் அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னெடுக்கப்படவேண்டிய முக்கிய செயற்பாடுகள் உள்ளன.

அதேவேளை போரினால் வடக்கில் அழிந்துபோன தமிழ் அடையாளங்களையும் பாரம்பரியத்தையும் மீள்கட்டமைப்புச் செய்யவேண்டிய பெரும்பொறுப்பும் உள்ளது. வடமாகாணக் கல்வி பொருளாதாரம், கலாசாரம், பண்பாடு ஆகிய விடயங்களில் கவனஞ்செலுத்தி ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டியும் உள்ளது.

அடுத்தது, வடக்கில் அத்துமீறிய குடியேற்றங்களை தடுப்பது. அப்போதுதான் வடக்கின் பாரம்பரிய இன சமநிலையைப் பேணமுடியும். இல்லாவிட்டால் தமிழ் மக்களின் இனச்செறிவு திட்டமிட்டுக் குழப்பப்படும். மாகாண சபைகளின் அதிகாரங்களில் முக்கியமானதாகக் கருதப்படுகின்ற காணி மற்றும் பொலீஸ் அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திலிந்து பெற்றுக்கொள்வது முக்கியமானதாகும். அத்துமீறிய குடியேற்றங்களை இதன்மூலமே தடுக்க முடியும். இதற்கான முயற்சிகளை மேற்கொள்வதும் முதன்மையானதாகும்.

தற்போது உலகநாடுகள் பலவும் இலங்கைத் தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்பதில் அக்கறை காட்டத் தொடங்கியுள்ள. இந்தப் பின்னணியில் தற்போது கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பத்தை தமிழ்க் கூட்டமைப்பினர் புத்திசாதுரியமான முறையில் பயன்படுத்துவதிலேயே தமிழ் மக்களின் எதிர்காலம் தங்கியுள்ளது.

ஞானம் 161 (ஒக்டோபர்2013)

புரிதல்

✦ இம்முறை (ஞானம்- 161)ஆசிரியர் தலையங்கம் காத்திரமான ஒரு விடயத்தை மிகவும் துணிச்சலாகச் சொல்லி நின்றது. தமிழ் மக்கள் எல்லா வகையான அடக்கு முறைகளையும் மீறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தது சர்வதேசத்திற்கு தமது மன நிலையை உணர்த்தவே என்பது துல்லியம். அரசியல் தலையங்கங்கள் சிலவேளைதான் ஞானத்தில் வரும். சமயமுணர்ந்த தலையங்கம் இது. தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பான அக்கறை அதில் தெரிந்தது. யுத்தம் முடிந்து நான்கு வருடங்களின் பின்பும் தமிழ் மக்கள் ஏன் துன்புறுத்தப்படுகிறார்கள்? இதனால் அரசு காணப்போவது என்ன? கௌரவமான பிரஜைகளாக வாழ அவர்களின் உரிமைகள் தொடர்பான கருத்தாடல்களை ஞானம் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.
–இளைய அப்துல்லாஹ் , லண்டன் (162–நவம்பர்2013)

64



‘சர்வதேச விசாரணை வேண்டும்’ என்ற வடமாகாண சபையின் தீர்மானம் ஜெனிவா மாநாட்டில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம்

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், இனப்படுகொலைகள் ஆகி வற்றை விசாரணை செய்வதற்கு, பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணையை ஐக்கிய நாடுகள் சபையின் துணையுடன் உருவாக்க அனைத்துலக சமூகத்தினை வேண்டுகின்ற தீர்மானம், 27 - 01 - 2014 அன்று இடம்பெற்ற வடமாகாண சபையின் ஐந்தாவது அமர்வில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

போர்க்குற்றம் தொடர்பான விடயங்களை இலங்கை அரசாங்கம் விசாரணை நடத்து மாயின் அது பக்கச் சார்பானதாகவே அமையும். இராணுவத்தின் குற்றச் செயல்களை

அரசாங்கம் மூடிமறைக்கும். எனவே இவ்விடயத்தில் சுயாதீனமான செயற்பாடுகள் காணப்படவேண்டும். உண்மை வெளிப்படவேண்டும். இக்காரணங்களுக்காகவே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. யுத்தக் குற்றங்களை மூடிமறைப்பதால் தமிழ்மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடப்போவதில்லை.

தமிழ்மக்களைப் பொறுத்தவரை அரசாங்கம் அபிவிருத்தி களை மேற்கொள்வதிலோ, தெருக்களைச் செப்பனிடுவதிலோ அவர்கள் திருப்தி கொள்ளப்போவதில்லை. தமிழ் மக்களுக்கு வேண்டப்படுவது சுயகௌரவம், சுதந்திரம், சுயாதீனம் போன்றவைதான் என அரசாங்கம் உணர வேண்டும்.

இத்தீர்மானமானது இலங்கை அரசாங்கத்திற்குப் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. மாகாணசபை ஒன்றிற்கு இவ்வாறு சர்வதேச விசாரணைகோரி பிரேரணை நிறைவேற்ற 13ஆவது திருத்தச் சட்டத்தில் இது தொடர்பான ஏற்பாடுகள் எதுவும் கூறப்படவில்லை என்ற கருத்தைச் சில சிங்கள அரசியல்வாதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்விடயமானது சர்வதேச மட்டத்தில், தற்போதைய நிலைமையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கை தொடர்பாக, மூன்றாவது தடவையாகத் தீர்மானம் ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. எதிர்வரும் மார்ச் 28ஆம் திகதி இத்தீர்மானம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்நிலையிலேதான் மேற்படி தீர்மானத்தை வடக்கு மாகாணசபை நிறைவேற்றியுள்ளது.

உலக அரசியலைப் பொறுத்தவரை அதிகாரம் மிக்க ஒரு சில நாடுகளே அதனைக் கட்டுப்படுத்துகின்றன. அமெரிக்கா, பிரிட்டன், கனடா, இந்தியா போன்ற நாடுகளுடனான அரசாங்கத்தின் அணுகுமுறை திருப்திகரமானதாக இல்லை.

அரசாங்கம் கடந்த காலத்தில் இழைத்த பல்வேறு தவறுகள் காரணமாகவே இன்று சர்வதேச சமூகத்திடம்

சிக்கியுள்ளது என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும்.

இலங்கை விடயத்தில் சர்வதேச சமூகம் இன்று அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகிறது. அதேவேளை, பின்புலத்தில் இயங்கும் புலம்பெயர் சமூகமும் செயற் திறனுடனும் தீவிரத் தன்மையுடனும் இயங்கிவருகிறது.

இவையாவும் ஜெனீவா மாநாட்டில் தமிழ் மக்களுக்குச் சாதகமான விடயங்கள் இடம்பெறுவதற்கு சார்பான நிலைமை யையே உருவாக்கியுள்ளன.

ஞானம் 165 (பெப்ரவரி 2014)

65

“மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுகிறது”

யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் கடந்த ஐந்து வருடங்களாக தமிழ் மக்கள் மத்தியில் சுற்றி வளைப்புகள், தேடுதல்கள், கைதுகள் படிப்படியாகக் குறைந்துகொண்டே வந்தன.

ஆனால் தற்போது வடமாகாணத்தின் பல பகுதிகளில் மீண்டும் இராணுவத்தினர் பொலிசாரின் சுற்றிவளைப்புகள், சோதனைகள், தேடுதல்கள், கைதுகள் ஆரம்பமாகியுள்ளன. நூற்றுக்கணக்கான இளைஞர்கள் யுவதிகள் பொதுஇடங்களுக்கு அழைத்துச் செல்லப் பட்டு அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப் படுவதுடன் விசாரணைகளும் மேற்கொள்ளப் படுகின்றன. இரவுபகலாக இந்த நடவடிக்கைகள் தொடர்கின்றன.

மார்ச் 13ஆம் திகதி கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் பொலிசார்மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கோபி என்பவர் தப்பிச் சென்று விட்டதாகவும் அவருக்குப் புகலிடம் கொடுத்த

தாகக் குற்றஞ்சாட்டப்பட்டு பாலேந்திரன் ஜெயக்குமாரி என்பவர் கைது செய்யப்பட்டார். இவரது மகளும் கைது செய்யப்பட்டு பின்னர் சிறுவர்காப்பகத்தில் ஒப்படைக்கப் பட்டார். ஜெயக்குமாரி, போரில் காணாமல் போனோரை மீட்டுத் தருமாறு கோரி நடத்தப்பட்ட போராட்டங்களில் முன்னணிவகித்தவர்.

இவரின் கைதினைத் தொடர்ந்து மனித உரிமைகள் பாதுகாவலர்களாகப் பணிபுரிந்து வரும் திரு. ருக்கி பெர்ணாண்டோ, அருட்தந்தை பிரவீன் மகேசன் ஆகியோர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டபின் விடுதலை செய்யப் பட்டனர். காணாமல் போனோர்களது நலன்களைக் கவனிப் பதற்காக இவர்கள் கிளிநொச்சிக்குச் சென்றபோது கைது செய்யப்பட்டார்கள்.

இத்தகைய கைதுகள் நீதி கேட்பவர்களை வாய்மூடச் செய்வதற்கான அச்சுறுத்தல்களாக அர்த்தப்படுத்தக்கூடிய வாய்ப்புண்டு.

“வடக்கில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கும் நிலைமை தோன்றியுள்ளது. அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. எனவே தேசிய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு பொலிசாருடன் இணைந்து விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளைப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்” என இராணுவப்பேச்சாளர் கூறுகின்றார்.

திட்டமிட்ட வகையில் சம்பவங்கள் சிருஷ்டிக்கப்பட்டு தமிழ்மக்களை மேலும் இன்னல்களுக்கு ஆளாக்கும் செயற் பாடுகள் இடம்பெறக்கூடாது.

ஜெனிவாவில் இலங்கை விவகாரம் சூடுபிடித்து அரசாங்கத் திற்குப் பலதரப்பட்ட நெருக்கடிகள் தோன்றிய நிலையில், வடபகுதியில் இராணுவத்தின் இருப்பை நியாயப்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் உபாய நடவடிக்கையே இந்தச் சுற்றிவளைப்பு எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறுகின்றனர்.

யுத்தகாலத்தின்போது இராணுவத்தினர் மேற்கொள்ளும் சுற்றிவளைப்புப் போலவே மக்களுக்குப் பெரும் அச்சத்தை

ஏற்படுத்துவதாக இச்சுற்றிவளைப்புகள் இருக்கின்றன எனக் கூறப்படுகிறது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது. இனி மேலாவது சொந்த இடங்களில் நிம்மதியாக வாழலாம் என்று எண்ணிய மக்களுக்கு இது பெரும் ஏமாற்றத்தையே ஏற்படுத்தியிருக்கிறது.

இதன் காரணமாக அச்சமும் பதட்டமும் கலந்த சூழ்நிலை வடபகுதியில் ஏற்பட்டுள்ளது.

தமிழ்மக்களின் பிச்சனைகளுக்கு தீர்வு காணப்படாத நிலையில் இப்படியான செயற்பாடுகள் நல்லிணக்கத்திற்கு ஏற்றதல்ல. நடந்து முடிந்தவை நடந்து முடிந்தவையாகவே இருக்கட்டும். இனிமேலாவது நிம்மதியோடும் உரிமையோடும் வாழ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்னும் எதிர்பார்ப்புடனேயே தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். அரசாங்கம் இதனைப்புரிந்து செயற்படவேண்டும். அதுதான் நாட்டுக்கும் நல்லது.

ஞானம் 167 (ஏப்ரல் 2014)

66



இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான இந்தியாவின் அணுகுமுறை ‘பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்’

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் *23-08-2014* அன்று புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து, போருக்குப் பின்னரான வடக்கு - கிழக்கு நிலைமைகளை அவருக்கு விளக்கியுள்ளார்கள்.

‘இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை இலங்கை அரசு தட்டிக்கழித்து வருகிறது. தமிழர் பிரதேசங்களில் இனப்பரம்பலை மாற்றி அமைக்க சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்கிறது. தமிழ் மக்களது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது; அவர்களில் கணிசமானவர்கள் தங்கள் பூர்வீக நிலங்களிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்கிறார்கள். தமிழர்களது பாரம்பரிய தொழில் நடவடிக்கைகளுக்கு

இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதனால் அவர்களது வாழ்வா தாரம் பாதிக்கப்படுகிறது; வடமாகாண சபை சுதந்திரமாகச் செயற்படுவதற்கு அரசு முட்டுக்கட்டையாக இருக்கிறது' போன்ற விபரங்களை எடுத்துரைத்து இவற்றிற்கான அரசியல் தீர்வுக்கு இந்தியா உதவவேண்டும், இதுவே தமிழ்மக்களது விருப்பமாகும் என்றும் கூறியுள்ளனர்.

இதற்குப் பதிலளித்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, 'ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ்மக்களின் சமத்துவம், கௌரவம், நீதி என்பவற்றை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் அரசியல் தீர்வு காணப்படுவது அவசியம். இலங்கை அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தத்தில் கூறப்பட்டுள்ளதைவிட அதிக அதிகாரத்தை தமிழர்களுக்கு வழங்க வேண்டுமென இலங்கை அரசை இந்தியா வலியுறுத்தும்' எனக் கூறியுள்ளார்.

ஆனால், அண்மையில் அலரி மாளிகையில் வெளிநாட்டுச் செய்தியாளர்களுடனான சந்திப்பின்போது 13ஆவது திருத்தச் சட்டம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு விட்ட தாகவும் இனிமேல் நடைமுறைப்படுத்துவதற்கு எதுவுமில்லை என்றும் இலங்கை ஜனாதிபதி கூறியுள்ளார். காணி, பொலீஸ் அதிகாரங்கள் குறித்து அவர் எதனையும் குறிப்பிடவில்லை.

நீண்ட காலமாக இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா தனது மூக்கை நுழைத்து வந்திருக்கிறது. அதிக உயிரிழப்புகளையும் அதிக பொருள் இழப்புகளையும். அதிக வலிகளை ஏற்படுத்தியதுமான இந்தப் பிரச்சினைக்கு இணக்கமானதோர் தீர்வை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது.

ஆனால், இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் அணுகுமுறை, 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்' என்ற நிலையிலேதான் உள்ளது என்பதை கடந்த காலச் செயற்பாடுகள் உணர்த்துகின்றன.

இந்தியா எடுத்த எடுப்பிலேயே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கும் என்று எண்ணமுடியாது. இந்த விடயத்தில் எவ்வாறு செயற்படப்

போகிறது என்பது இலங்கை அரசுடனான உறவுகளை மையப்படுத்தியதாகவே இருக்கும். இலங்கையை எவ்வாறு தனது மூலோபாயப் பங்காளியாக சீனா அரவணைத்துக் கொள்கிறதோ அது போலவே இந்தியாவும் அரவணைத்துச் செல்லவே விரும்பும். இலங்கையுடனான விரோதப்போக்கை வளர்த்துக்கொள்ளும் அளவுக்கு இந்தியாவின் அணுகுமுறை அமையப் போவதில்லை.

இந்தியப் பிரதமருடனான கூட்டமைப்பினரின் சந்திப்பு ஆக்க பூர்வமான விளைவுகளை ஏற்படுத்துமா என்பதை உலகெங்கும் பரந்துவாழும் தமிழ் மக்கள் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த விடயத்தில் இந்தியா நழுவல் போக்கினை விடுத்து, கண்டிப்புடன் செயற்படவேண்டும்; தீர்க்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். தமிழர்களுக்கான உரிமைகளைப் பெற்றுத்தர இதயசுத்தியுடன் முனையவேண்டும் என்பதே தமிழ்மக்களின் எதிர்பார்ப்பாகும்.

ஞானம் 172 (செப்டெம்பர் 2014)

67



நல்லாட்சி மலரட்டும்!

2015ஆம் ஆண்டு எமது நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களுக்கும் விடிவுதரும் ஆண்டாக மலர்ந்திருக்கிறது.

இலங்கை அரசியலில் யாரும் எதிர்பாராத திருப்பமாக ஜனாதிபதி தேர்தல் முடிவு அமைந்துவிட்டது.

தமிழ் மக்களுக்கு எதிரான கொடிய யுத்தத்தையும் அதனைத் தொடர்ந்து தமிழர்தம் அரசியல் பொருளாதார கலாசார இருப்பையும் தமிழர் அடையாளங்களையும் அழித்துவந்த ராஜபக்ஷ ஆட்சியை மக்கள் மாற்றி அமைத்திருக்கிறார்கள்.

இந்த ஆட்சி மாற்றத்தைத் தமிழ்மக்களின் வாக்குகளே தீர்மானித்திருக்கின்றன என்பது சகல தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேன மேற்கொண்டு வரும் அரசியல் காய்நகர்த்தல்கள் நாட்டு மக்களுக்கு

நம்பிக்கையூட்டுவனவாக அமைந்துள்ளன. புதிய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவுள்ள பாரிய அரசியல் அமைப்புத் திருத்தங்களின்போது தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. புதிய அரசாங்கம் சகல கட்சிகளினதும் ஆதரவைப்பெற்றுள்ள நிலையில் இது சாத்தியப்படக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன.

மேலும் முன்னைய அரசாங்கத்தின் ஆட்சியைத் தொடர்ந்து வடக்கில் பெருமளவு நிலம் இராணுவக்கட்டுப்பாட்டில் இருப்பதால் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர முடியாத நிலை, உத்தியோகப்பற்றற்ற இராணுவ ஆட்சி, மாகாண சபையின் செயற்பாடுகளுக்கு இடையூறுகள், மக்களின் அழிக்கப்பட்ட வாழ்வாதாரங்களை மீளக்கட்டியெழுப்பத் தடை விதித்தல், காணாமல் போனோர் பற்றிய அலட்சியப் போக்கு, நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற விடயங்கள் புதிய அரசால் சாதகமாகப் பரிசீலிக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இவையெல்லாம் நல்ல அறிகுறிகள்.

கடந்த அறுபது வருடங்களாக நமது நாட்டைப் பீடித்திருந்த இனவாதமும் மதவாதமும் மறைந்து நல்லாட்சி மலரட்டும்!

ஞானம் 176 (ஜனவரி 2015)

புரிதல்

✦ ஜனவரி மாத ஞானம் இதழ் கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி. நல்லாட்சி மலரட்டும் என்று தலையங்கம் தீட்டியமை எல்லார் வாழ்விலும் குறிப்பாகத் தமிழர் வாழ்வில் நல்லன எல்லாம் நடக்க சொல்லப்பட்ட ... நல்ல காத்திரமான எதிர்வுகூறல் என்றே எண்ணுகின்றேன். கடந்த அறுபது வருடங்களாக நமது நாட்டைப் பீடித்திருந்த இனவாதமும் மதவாதமும் மறைந்து நல்லாட்சி மலரட்டும்!.. இப்படியொரு நல்ல வார்த்தையை உங்கள் தலையங்கம் தாங்கிவந்ததே நல்லாட்சி வரும்.. மலரும்.. என்பதற்கு சாட்சியாக இருக்கும் என்று கருதுகின்றேன். இப்படி வெளிப்படையாகவும், மங்கலமாகவும், மனத்தில் தெளிவோடும், அதேவேளை துணிவோடும் தலையங்கம் தீட்டிய உங்களுக்கு எனது இதயத்தால் நன்றியும் பாராட்டும் தெரிவிப்பதில் மிகவும் திருப்தியடைகின்றேன்.

தங்களின் தலையங்கத்தை வழிமொழிவது போன்று 'ஒரு புதுயுகத்தின் மலர்ச்சி" என மகுடமிட்டு தனது தனித்துவமான தமிழால் யாருக்கும் பயப்படாமல் தனது உள்ளத்து உண்மைகளை எடுத்துவைத்த பேராசிரியர் துரைமனோகரனைக் கட்டாயம் பாராட்டவே வேண்டும்! அவரின் எழுத்துக்கள் அத்தனையும் சத்தியத்தின் வாக்குகளே! அவரின் புலமை வாழ்க!

எம். ஜெயராமசர்மா, மெல்பேண், ஞானம்–178 (மார்ச்–2015)

68



தாய்மொழியில் தேசியகீதம்

தேசியகீதம் என்பது நாட்டு மக்கள் தமது தேசத்தின் மீதுள்ள பற்றை, உயர்ந்த நேசத்தை வெளிப்படுத்த இசைக்கும் கீதமாகும். நாட்டின் சிறப்பு, இயற்கை வளம், நாட்டின் செழுமை, அழகு, தேசிய ஒற்றுமை என்பவற்றை நாட்டு மக்களது மனதில் ஆழமாகப் பதிக்கவும் நாட்டுமக்கள் தமது நாட்டைப்பற்றிப் பெருமை கொள்ளவும் தேசியகீதங்கள் வழிவகுக்கின்றன.

இலங்கையின் தேசியகீதம் 1940ஆம் ஆண்டு ஆனந்த சமரக்கோன் என்பவரால் இயற்றப்பட்டது. சிங்கள மொழியில் இயற்றப்பட்ட இந்தக் கீதம் பின்னர் புலவர்மணி நல்லதம்பியால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆலோசனையின் பேரில், 1951ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி நடந்த சுதந்திரதின நிகழ்வில் முதல்முறையாக உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு இத்தேசியகீதம் அன்று மும்மொழிகளிலும் பாடப்பட்டது.

யமன் கல்யாணி இராகத்தில் சதுஸ்ர ஏகம் தாளத்தில் இத்தேசியகீதம் அமைந்துள்ளது. இத்தேசிய கீதமானது தமிழில்

மொழிபெயர்க்கப்பட்டபோது அதன் பொருள் சிங்கள மொழியில் உள்ளது போன்றே வரிக்குவரி பிசகாமல் அதே இராக தாளத்துடன் அமைந்தது இதன் சிறப்பம்சமாகும்.

அதாவது நமது நாட்டின் தேசியகீதம் ஒன்றே ஒன்றுதான். அதன் மொழிதான் இரண்டு!

ஆனால் 2010ஆம் ஆண்டு சென்ற அரசாங்கம் இனவாத நோக்கில் தேசியகீதம் தமிழில் பாடப்படுவதற்குத் தடைவிதித்தது. தமிழ்பேசும் மக்கள் சிங்களமொழியில் தேசியகீதம் பாடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழ்ப்பிரதேசங்களில், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளிலும் பாடசாலை களிலும் தேசியகீதம் சிங்களத்தில் பாடப்படுவதை இராணுவப் பிரசன்னம் உறுதிசெய்தது. தமிழ்பேசும் மக்கள் தமக்குப் புரியாத மொழியில் தேசியகீதத்தை முணுமுணுக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானார்கள். சிங்களமொழி தெரியாத சநதர்ப்பங்களில் இறுவட்டுக்கள் பாடின.

தேசியகீதத்தை நாட்டு மக்கள் சகலரும் தத்தமது தாய் மொழியிலே பாடவேண்டும். அப்போதுதான் தேசப்பற்று, தேசிய ஒற்றுமை வளரும். தேசிய கீதமானது சகல சமூகங்களையும் ஒன்றிணைக்கின்ற - சகலரும் புரிந்துகொள்ளக்கூடிய மொழி யில் பாடப்படவேண்டும். அதாவது தமிழ்மக்கள் தமிழ் மொழியிலும் சிங்களமக்கள் சிங்கள மொழியிலும் பாட வேண்டும். அப்போதுதான் மொழிவேறுபாடுகளுக்கு அப்பால் இனங்களை இணைக்கின்ற பாலமாகவும் தேசியகீதம் அமையும்.

தற்போதய அரசு நிறுவியுள்ள தேசிய நிறைவேற்றுச் சபை தேசிய கீதத்தினைத் தமிழில் பாடுவதை மீள வலியுறுத்தி அதியுயர் தலைமைப்பீடத்திடம் அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசியகீதத்தைத் தமிழில் பாடுவதற்கு மீண்டும் அனுமதித்துள்ளார். இதன் மூலம் இந்நாட்டுமக்கள் ஒவ்வொருவரும் தேசியகீதத்தைத் தத்தமது தாய்மொழியிலேயே பாடுவதற்கு உரித்துடையவராகின்றனர். புதிய அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகள் நாட்டின் சுபிட்சத்துக்கு வழிவகுப்பதாக அமையும்.

ஞானம் 179 (ஏப்பிரல் 2005)

69



புதிய இனவாதக் கொடி!

1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது. அந்தநாள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளாகவும் இலங்கை மக்களுக்கு சுபிட்சம் கிடைத்த நாளாகவும் நாட்டுமக்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஆனால் 1956ஆம் ஏற்படுத்தப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் இந்த நாட்டில் வாழும் சிறுபான்மையினச் சமூகங்களை இனவாத நோக்கில் அடக்கி ஒடுக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட அரசியல் காய்நகர்த்தலாக அமைந்தது.

அன்றிலிருந்து ஆட்சியைக் கைப்பற்றப் பயன்படுத்தப்படும் ஓர் ஆயுதமாக இனவாதம் மேலோங்கிவிட்டது. இவ்வாறு ஆட்சியைக் கைப்பற்றிய அரசுகள், இலங்கைவாழ் சிறு பான்மையினரான தமிழர் மற்றும் முஸ்லிம் கள் தமது மொழிரீதியாக எதனையும் மேற் கொள்ளமுடியாத கஷ்ட நிலைமைகளைத் தோற்றுவித்தன. அரசியல், பொருளாதார

ரீதியில் அவர்கள் ஓரங்கட்டப்படுவதற்கும் அவர்களது முன்னேற்றங்களை முடக்கவும் அவர்கள்மீது வன்செயல்களைத் தூண்டவும் வகைசெய்தன.

நாட்டில் 30 வருடங்கள் இடம்பெற்ற யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் அதற்குக் காரணமாக விளங்கிய இனவாதம் இன்னும் முடிவுக்கு வந்தபாடில்லை.

கடந்த ஆட்சிக்காலத்தில் இனவாதச் செயற்பாடுகள் மேலோங்கிய காரணத்தினாலேயே அந்த ஆட்சியை மாற்றியமைப்பதற்குக் கடந்த தேர்தலில் நாட்டுமக்கள் வாக்களித்தனர்.

ஒரு தேசிய நல்லிணக்க அரசு ஆட்சியைக் கைப்பற்றிய இன்றைய நிலையில், இலங்கையின் தேசியக்கொடியில் தமிழ் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறங்களை அகற்றிவிடுவது என்பது மீண்டும் இனவாதத்துக்குத் தூபம் இடுவதாக அமைகிறது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் சிங்ஹ - லே (சிங்கத்தின் இரத்தம்) என்ற அமைப்பினர் தேசியக்கொடியில் சிறுபான்மையினரைப் பிரதிபலிக்கும் நிறங்களை நீக்கி உருமாற்றப்பட்ட தேசியக் கொடியை உருவாக்கினர். அக்கொடியுடன் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர்.

இந்தச் சர்ச்சைக்குரிய தேசியக் கொடியை எதிர்த்துப் பல பொதுஅமைப்புகள் கிளர்ந்தெழுந்தன. காவல்துறையினர் கொழும்பு பிரதம நீதவானிடம் முறையிட்டனர். குறித்த கொடி தொடர்பான ஒளிப்படங்களைச் சமர்ப்பிக்குமாறு காவல் துறையினருக்கு நீதவான் கட்டளையிட்டார்.

தொடர்ந்து வந்த காலப்பகுதியில் கொழும்பிலும் சுற்றவுள்ள பிரதேசங்களிலும் உள்ள பொது இடங்களிலும் வாகனங்களிலும் இந்த 'சிங்ஹ-லே' கொடிகள் ஒட்டப்பட்டதைக் காணமுடிந்தது.

இப்படியானதொரு தேசியக் கொடியைத் தயாரிப்பதும் அக்கொடியைக் காட்சிப்படுத்துவதும் தண்டனைக்குரிய குற்றமாகும். ஆனாலும் அதற்கெதிராக எந்தவிதமான சட்ட நடவடிக்கைகளும் இன்றுவரை எடுக்கப்பட்டதாகத் தெரிய வில்லை.

இந்நியைில் 23-01-2016 அன்று இந்த ‘சிங்ஹ - லே’ அமைப்பினர் கொழும்பிலிருந்து கண்டியில் உள்ள தலதா மாளிகைக்கு வாகனப்பேரணி ஒன்றை நடத்தினர். அவர்கள் ஏந்தியிருந்த தேசியக் கொடியில் சிறுபான்மையினரைக் குறிக்கும் பச்சை, செம்மஞ்சள் நிறங்கள் நீக்கப்பட்டு வாளேந்திய சிங்கத்தை மட்டும் காணக்கூடியதாக இருந்தது.

இவ்வாறு தேசியக்கொடியை மாற்றியமைப்பது சட்ட விரோதமானது எனப் பொலிசார் சுட்டிக்காட்டியபோது பெரும் தர்க்கம் ஏற்பட்டது. பிக்கு ஒருவர் “இதுவே உண்மையான தேசியக்கொடி. ‘சிங்ஹ-லே’ கொடிதான் உண்மையான கொடி” எனக்கோஷமிட்டார். பொலிசார் மௌனமாகினர்.

யார் என்ன சொன்னாலும் சட்டத்திலிருந்து தப்புவதற்கான சிறப்புரிமை பெற்றவர்களாக இந்த இனவாதிகள் உள்ளனர்.

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளில் ஒருசில கடும் போக்குவாதிகளும் அரசியல்வாதிகளும் இனவாத பௌத்த குழுக்களும் எடுக்கும் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது இன்றைய அரசு மௌனம் சாதிப்பது ஏன் என்ற ஐயப்பாடு எழுகிறது.

இலங்கையின் அமைதிக்கும், இந்நாட்டுமக்களின் நல்வாழ்வுக்கும் பங்கம் விளைவிக்கும் சகல இனவாத நடவடிக்கைகளையும் முற்றாகவே தடைசெய்ய சட்ட நடவடிக்கை எடுப்பதில் அரசு கவனஞ்செலுத்தவேண்டும் என்பதே நாட்டின் இன்றைய மிகமுக்கிய தேவையாகும்.

ஞானம் 189 (பெப்ரவரி 2016)

புரிதல்

✦ சென்ற 189ஆம் ஞானம் இதழில் ஆசிரியர் குறிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளவை யாவும் முற்றிலும் உண்மையானவை. ஸ்ரீலங்கா கொடியின் வரலாற்றையும் தேசிய கீதத்தின் வரலாற்றையும் அறியாது சிலர் அடாவடித்தனம் புரிகின்றனர். அப்பாவிகள் சிலர் இவர்களின் மாய வலையில் அறியாமல் இனவாதிகளாகச் சிக்கியுள்ளனர். தண்ணீர் தரிப்பை அகற்ற முடியாத நிலையில் டெங்கு நோயை அழிக்க எடுக்கும் நடவடிக்கைபோல இனவாதிகள் பெருகாமல் இருக்க முடிவுகாண்பது அரசாங்கத்தின் கடமை.

– பாணந்துறை. எம். பி. எம்.நிஸ்வான் 191 (ஏப்ரல்–2016)

70



‘எழுகதமிழ்’ ஏன்?

தமிழர்களின் உரிமைக்கான ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட நிலையில், தமிழ் மக்களது உரிமைக்கான தாகம் தீர்ந்ததா? தீராத நிலையில் என்ன செய்யலாம்?

உறங்கு நிலையில் ஏழு வருடங்கள் கழிந்து விட்டன.

தொடர்ந்தும் இவ்வாறு இருக்கவேண்டுமா? மீண்டும் ஓர் ஆயுதப்போர் வேண்டாம். ஆனால் அஹிம்சை வழிப்போராட்டமாவது வேண்டு மல்லவா? அதற்காகத்தான் இந்த ‘எழுக தமிழ்’ பேரணிப் போராட்டம்.

வடமாகாண முதல் அமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் தலைமையில், தமிழ்மக்கள் பேரவை எற்பாடு செய்த ‘எழுக தமிழ்’ எழுச்சிப் பேரணியும் பொதுக்கூட்டமும் 24-09-2016 அன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இதில் பெருந்திரளான மக்கள் கலந்து தமது அரசியல் ஈடுபாட்டினையும் உரிமைப் போராட்டத்தில் தாம் கொண்டுள்ள பற்றுறுதியையும் வெளிப் படுத்தியிருந்தார்கள்.

தமிழ் மக்கள் தமது போராட்டத்தில் உறுதியாக இருக்கிறார்கள், தொடர்ந்து உறுதியாக இருப்பார்கள் என்ற செய்தியை இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேசத்திற்கும் உணர்த்துவதாக இந்த 'எழுக தமிழ்' பேரணி வெற்றிகரமாக நடந்தேறியிருக்கிறது. இந்த எழுச்சிப் பேரணியில் பின்வரும் பிரகடனங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

- வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை சிங்கள மயமாக்கலை நிறுத்தி தமிழரின் அடையாளத்தைக் காக்கவேண்டும்.
- தமிழர் தாயகத்தை பௌத்த சிங்கள மயமாக்கும் நோக்குடன் குடியேற்றங்களும் விகாரைகளும், புத்தர் சிலைகளும் அரசின் அனுசரணையுடன் உருவாக்கப் பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்.
- தமிழர் தாயகப் பிரதேசங்களில் இராணுவம் ஆயிரக் கணக்கான ஏக்கர் காணிகளைச் சுவீகரித்துள்ளது. தொடர்ந்தும் சுவீகரிக்கின்றது. இவற்றில் உல்லாச விடுதிகள், விவசாயப் பண்ணைகள், போன்றவற்றை இராணுவத்தினர் அமைத்ததோடு வர்த்தக நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர். இதன் காரணமாக தமிழர்தம் வாழ்வாதாரம் பாதிக்கப் பட்டுள்ளது.இராணுவப்பிரசன்னம் பல சமூகச் சீரழிவு களையும் ஏற்படுத்துகின்றது. இதனால் இராணுவம் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும்.
- தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட குற்றங்களை விசாரணை செய்ய உள்ளகப்பொறிமுறை பிரயோசன மற்றது. சர்வதேச விசாரணைக்கான ஏகோபித்த நிலைப்பாட்டை இப்பேரணி வலியுறுத்துகிறது.
- இலங்கை அரசின் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்பட்டு சிறையில் வாடுகிறார்கள். இச்சட்டம் நீக்கப்பட்டு சிறையில் வாடும் அரசியல் கைதிகள் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட வேண்டும்.

- போர் நடந்த காலகட்டத்தில் காணாமல்போன தமிழ்மக்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிந்து பகிரங்கப்படுத்தி அவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.
- தென்னிலங்கை மீனவர்கள் வடக்கு கிழக்கு கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்து வடக்கு கிழக்கு மீனவர்களை சொந்த இடங்களில் இருந்து விரட்டிவருகிறார்கள். இவ்வாறான நடவடிக்கையை நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்
- இளம் சந்ததியினரின் எதிர்காலத்தைத் திட்டமிட்டு அழிக்கவும் அவர்களின் விடுதலை வேட்கையை அழிக்கவும் போதைவஸ்த்துப் பொருட்கள் தமிழர் பிரதேசங்களில் ஊடுருவல் செய்யப்படுகின்றன. இவற்றை நிறுத்துவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும்.

புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களின் அபிலாசைகளை அங்கீகரிக்கவேண்டும் என்ற கோரிக்கையும் இந்தத் தமிழ் எழுச்சிப்பேரணியில் முன்வைக்கப்பட்டது.

தமிழ்மக்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்படும்வரை இந்த நாட்டில் அமைதி நிலவப்போவதில்லை என்பதை 'எழுக தமிழ்' பேரணி எடுத்தியம்பியிருக்கிறது. அரசு இதனை உணர்ந்து செயற்படவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறோம்.

ஞானம் 197 (ஒக்டோபர் 2016)

புரிதல்

✦ ஞானம் 197ஆம் இதழ் ஆசிரியத்தலையங்கம் நன்றாக உள்ளது. தமிழர்களின் இன்றைய நிலைமை பற்றிய ஆழமானகருத்துப் பதிவாக அது அமைந்துள்ளது.

போர் முடிந்து 7 வருடங்களும் 5 மாதங்களும் முடிந்துவிட்டன. ஆனால் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையோ சட்டியில் இருந்து அடுப்புக்குள் விழுந்தது போன்று ஆகிவிட்டது. பதவி இழந்த அரசாங்கம் போரால் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றுக்கு வழங்கிய இழப்பீடு வெறும் 25000 ரூபா மட்டுமேயாகும். போரில் அகப்பட்டு இறந்தோரின் மனைவிமாருக்கும் கை கால்களை இழந்தோருக்கும் விசேட வேலைவாய்ப்புத் திட்டங்கள் எதுவும் அறிமுகப்படுத்தப்படவில்லை. இது இவ்வாறு இருக்க....இனப் பிரச்சனைபற்றி உரத்துப் பேசாதீர்கள் இனவாதிகளின் காதில்விழுந்தால் ஆபத்து. என்று தமிழருக்குப் புத்திமதி கூறுகின்றார்கள். ஆனால் 100 பேர்களைக்கூட அங்கத்தவர்களைக் கொண்டிராத இனவாதக் கட்சிகளுக்குப் பயந்து அடக்கி வாசிக்கக் கூடாது என்பதே தமிழ் மக்களின் கருத்தாக உள்ளது. இனவாதிகளைத் தவிர ஏனைய அனைத்து மக்களினதும் ஆதரவு தற்போதைய அரசுக்கு இருப்பதால் இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வொன்றைமுன்வைத்து அமுலாக்குவதற்கு இதுவே தக்க தருணமாகும். அதாவது இரண்டு முக்கியமான தேசியக் கட்சிகளும் ஒரே குரலிற் பேசும் இவ் அரிய சந்தர்ப்பத்தைச் சரியான முறையிற் பயன்படுத்திக் கொள்வது அனைவரதும் கடமையாகும். இனப் பிரச்சனை பற்றி ஆசிரியத் தலையங்கம் தீட்டியதன் மூலம் வாசகர்களையும் இதுபற்றிக் கருத்துக் கூற வைத்தமைக்கு நன்றியும். வாழ்த்துக்களும்

– கலாபூஷணம் கா.தவபாலன் (198–நவம்பர் 2016)

71



தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் அரசுக்கு ஏன் இந்த அசமந்தம்!

தமது நாட்டில், தமது உரிமைக்காகப் போராடியவர்கள் அல்லது அப்போராட்டத்திற்கு ஏதோ ஒரு வகையில் உதவியவர்கள் அல்லது அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களெனச் சந்தேகத்தின்பேரில் பிடிபட்டவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு இலங்கை அரசினால் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டவர்கள்தான் இந்த அரசியல் கைதிகள். வழக்கு தொடரப்படாமலே இவர்களில் பலர் நீண்டகாலம் சிறைகளில் வாடுகிறார்கள்.

கொழும்பு, மகசீன், அநுராதபுரம், தும்பறை, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்ட தமிழ்க்கைதிகள் இவர்கள். பயங்கரவாதச் சட்டத்துக்குள் சிக்குண்டு தமது வாழ்க்கையைச் சிறைக்குள் தொலைத்துக் கொண்டிருக்கும் இவர்கள், தமது உறவுகளைப் பிரிந்து, ஆசைகளைத் துறந்து, உடமைகளை இழந்து, அடிமைகளாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இவர்களில் சிலர் 10 வருடங்களுக்கும் மேலாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

அரசியல் கைதிகளின் விடுதலைக்கான கோரிக்கைகளும் போராட்டங்களும் பலகாலமாக நடைபெற்று வருகின்றன. சிறைக்குள் உள்ளிருந்து பல அரசியல்கைதிகள், காலத்துக்குக் காலம் உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபட்டுவருகிறார்கள். சில சமூக நிறுவனங்கள், அரசியல்கட்சிகள் இவர்களை விடுவிக்குமாறு போராடி வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச அமைப்புகளும்கூட இவர்களது விடுதலை குறித்து அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன. எனினும் இவர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை.

தமிழர்தம் ஆயுதப்போராட்டத்தை நசுக்கவும், தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை இல்லாதொழிப்பதற் காகவுமே பயங்கரவாதச் சட்டம் 1979இல், முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷாவின் காலத்தில் கொண்டுவரப்பட்டது.

எனவே, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காலத்தில், தமக்கான அரசியல் தீர்வையோ மனிதாபிமானப் பிரச்சினை களுக்கான தீர்வையோ காணமுடியாது என்ற நிலையிலேதான் மகிந்தா அரசைத் தோற்கடித்து 2015இல் புதிய அரசை ஏற்படுத்துவதில் தமிழர்கள் முனைப்புடன் செயற்பட்டனர்.

தமிழர்கள் ஆட்சி மாற்றத்திற்கு ஒத்துழைத்தமைக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் அதனோடு இணைந்த மனிதாபிமானப் பிரச்சினைக்குமான தீர்வுகளை புதிய அரசாங்கத்திடம் எதிர்பார்த்தமையே ஆகும். இவற்றுள் ஒன்று தமது உறுவுகளான அரசியல்கைதிகளின் விடுதலையுமாகும்.

நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வரும்போது 200 அரசியல் கைதிகள் சிறைச்லைகளில் அடைத்து வைக்கப் பட்டிருந்தார்கள். பலதரப்பட்ட அழுத்தங்கள் காரணமாக இவர்களில் அரைவாசிப்பேர் இதுவரை பிணையில் விடுவிக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஆனால் இன்று கண்ணீருடனும் கவலையுடனும் வெளி யுலகத்தைக் காணத்துடிக்கும் இவ்வுயிர்களின் சராசரியான கோரிக்கைகளை நிறைவேற்றக்கூட இந்த நல்லாட்சி

அரசாங்கம் தயாராக இல்லை. அரசியல் கைதிகளை நல்லாட்சி அரசாங்கம் விடுவிக்காமைக்குக் காரணம் நாட்டில் தற்போது நிலவுகின்ற சூழ்நிலைதான்.

தேர்தலில் தோற்றுப்போன மகிந்த ஆதரவாளர்கள் தற்போதைய அரசின் வீழ்ச்சியை எதிர்பார்த்துக் காத்திருக் கிறார்கள். அவர்கள் அரசியல் கைதிகளின் விடுதலையை புலிகளின் விடுதலையாகவே பிரசாரம் செய்வார்கள். அரசாங்கத்தின்மீது குற்றம் சாட்டி விடுதலைப்புலிகள் மீளெழுச்சி பெறுவதற்கு வழிசமைத்துவிட்டதாக மக்களிடையே பிரசாரம் செய்வார்கள்.

இலங்கை அரசியலில் ஆட்சியைக் கைப்பற்றவேண்டு மானால் இனவாதம்பேசவேண்டும் என்பது வரலாறாகிவிட்டது. இதன்காரணமாகவே எதிரணியினரின் இனவாதத் தூண்டலுக்கு இடம்கொடுக்காத வகையில் மிகக் கவனமாகச் செயற்படவேண்டிய நிலையில் அரசாங்கம் உள்ளது. இனவாதம் இனப்படுகொலைகளுக்கும் வழிவகுத்துவிடும்.

2009ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதியுத்தத்தில் இடம் பெற்ற யுத்தக்குற்றங்கள் தொடர்பில் தமிழ் மக்கள் எதிர்பார்த்த சர்வதேசவிசாரணை என்ற அம்சத்தை, உள்ளக விசாரணை யாக மாற்றவேண்டிய சூழ்நிலையும் அரசாங்கத்துக்கு ஏற்பட்டது இதனாலேதான்.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில், கழைக்கூத்தாடி ஒருவன் கயிற்றிலே நடக்கும் நிதானத்துடன் அரசாங்கம் செயற்படவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறது.

இத்தகைய அரசியல் சூழ்நிலையில் தொடர்ந்தும் நீதிக்காகவும் உரிமைக்காகவும் போராடி தமது கோரிக்கைகளை உயிர்ப்புடன் வைத்திருப்பதைத்தவிர தமிழர்களுக்கு வேறு மார்க்கம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஞானம் 208 (செப்டெம்பர் 2017)

புரிதல்

✦ கடந்த மூன்று வருடங்களாக ஞானம் சஞ்சிகையின் பிரதிகளை இலவசமாக நல்கி, இரும்புச் சிறையில் இறுகிக் கிடக்கும் எமக்கு ஞான ஒளி பாய்ச்சி வரும் மதிப்பிற்குரிய ஞானசேகரன் ஐயா அவர்களுக்கும், ஞானம் பண்ணையின் பணியாளர்களுக்கும் என் முதன்மை நன்றிகள்.

அது தவிர, எப்போதாவது சிறைக்கம்பிகளுக்கிடையில் கசிந்து வரும் எனது ஆக்கங்களை தேக்கமின்றி, பிரசுரித்தமைக்கும் எனது நூலினை அறிமுகப்படுத்தியமைக்கும், ஞானம் இதழ்களுக்கு தலைசாய்க்கிறேன். கடந்த 208ஆவது ஞானம் இதழின் ஆசிரியர் பக்கத்தில் வெளியான 'தமிழரசியல் கைதிகள் விடயத்தில் அரசுக்கு ஏன் இந்த அசமந்தம்" என்ற கட்டுரையில், தமிழ் அரசியல் கைதிகள் சிலர் சுமார் 10 வருடங்களுக்கு மேலாக சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறு இல்லை. அதற்கும் மேலாக சுமார் 24 வருடங்களாக சிறைவாசம் அனுபவிக்கும் தமிழ் அரசியல் கைதிகள் இன்றுவரை சிறைக்குள் வாடிக்கொண்டிருக்கின்றனர். அடுத்தது, பயங்கரவாதத் தடைச்சட்டம் 1979ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் காலத்தில் கொண்டுவரப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், அது 1979ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்டது.

– விவேகானந்தனூர் சதீஸ், புதிய மகசீன் சிறைச்சாலை.
(ஞானம்211–டிசம்பர்2017)

72



புதிய அரசியல் அமைப்பு– தமிழர்கள் மீண்டும் ஏமாற்றப்படுவார்களா?

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றது. அப்போது மூன்று விடயங்களை முன்வைத்து தமிழர் தரப்பு தற்போதுள்ள நல்லாட்சி அரசாங்கத்தை ஆதரிக்க முன்வந்தது. ஜனாதிபதி ஆட்சிமுறையில் மாற்றம், தேர்தல் முறையில் மாற்றம், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பனவே அவ்விடயங்கள் ஆகும். இதில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தமிழர் தரப்பிற்கு முக்கியமானதாகும்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் புதிய அரசியல் அமைப்புத் தொடர்பாக அரசமைப்பு வழிநடத்தல் குழு அமைக்கப்பட்டு 2016ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் இவ்வாண்டு செப்டெம்பர் வரை 73 தடவைகள் கூடி இடைக்கால அறிக்கையொன்று தயாரிக் கப்பட்டது. இந்த வழிநடத்தல் கூட்டத்தில் பங்குகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பலதரப்பட்ட விட்டுக்கொடுப்புக்களுடன் பேச்சு

வார்த்தைகளை நடத்தியே வந்துள்ளனர். வடக்கு கிழக்கு இணைப்பையோ அல்லது சமஷ்டி ஆட்சி முறையையோ அவர்கள் வலியுறுத்தவில்லை. எப்படியாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டுவிடவேண்டும் என்ற எண்ணத்துடன் தமிழ்த்தரப்பினர் செயற்படுகின்றனர்.

தமிழ்த் தலைமைகளின் விட்டுக்கொடுப்பை இனவாதிகள் கருத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டணியினர் இவ்வளவு தூரம் இறங்கி வந்த பின்னரும் தென்பகுதி இனவாதிகள் சிங்கள மக்களை அச்சுறுத்தும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்கான முயற்சிகளை முறியடிப்பதற்கான செயற்பாடுகள் தென்னிலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

இனவாத சக்திகளால் வெளியிடப்படும் கடும் எதிர்ப்புகள் காரணமாக, அரசாங்கம் அரசியலமைப்பு தீர்வை கைவிட்டு விடுமோ என்று எண்ணத் தோன்றுகிறது. அதன் உக்கிரம் அத்தகையதாக இருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ "வெளிச்சம்" என்ற அமைப்பை ஏற்படுத்தி அதனூடாக பிரசாரங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வருகிறார்.

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச புதிய அரசியல் அமைப்பு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் பாராளுமன்றத்தைக் குண்டு வைத்து தகர்ப்போம் என்கிறார்.

முன்னாள் படைத்தளபதி கமால் குணரட்ண புதிய அரசியல் அமைப்பை ஆதரிப்பவர்கள் துரோகிகள், அவர்கள் கொல்லப்படவேண்டியவர்கள் என்கிறார்.

குறிப்பாக பௌத்த பிக்குகள் பலரும் அரசியலமைப்பு உருவாக்க விடயத்தில் அரசாங்கத்திற்குப் பலத்த தலையிடியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழர் தேசியப் பிரச்சினைக்கு அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய

தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படுவதற்கான சூழல் உருவாகிய போது, இனவாத சக்திகளின் எதிர்ப்புக் காரணமாக அம்முயற்சிகள் கைவிடப்பட்ட வரலாறே காணப்படுகிறது. குறிப்பாக 2000ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தீர்வுப்பொதி பின்னர் கைவிடப்பட்ட சூழ்நிலையை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

கடந்தகால வரலாற்றுப் பதிவுகள் மீண்டும் சுழற்சி பெறுவதற்கான சூழ்நிலையே தற்போது விஸ்வரூபம் எடுத்துக் கொண்டிருக்கிறது. இனியும் தமிழர்கள் அரசாங்கத்தினுடனான பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை வைக்கலாமா?

தற்போது உள்ள காலச்சூழலில், இங்குள்ள தமிழ் பேசும் மக்கள், புலம்பெயர் தமிழர்கள் ஒன்றிணைந்து, இந்தியத் தமிழர்களின் ஆதரவையும் பெற்று எமது உரிமைகளைப் பெறுவதற்கான சர்வதேச நெருக்குதல்களை கூர்மையடையச் செய்ய வேண்டும். சர்வதேசச் சட்டத்தின் கீழ் எமக்கிருக்கும் உரிமைகளைப்பெற நாம் முயற்சிக்க வேண்டும். இதுவே உலக வரலாறு எமக்குக் கற்றுத் தரும் பாடமாகும்.

ஞானம் 210 (நவம்பர் 2017)

73



தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள்

தமிழர்களின் வளம்மிக்க நிலங்களை ஆக்கிரமித்து அவற்றில் சிங்கள மக்களைக் குடியேற்றும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டு வருவது தமிழ் மக்களின் மனங்களில் பெரும் கிலேசத்தை ஏற்படுத்தி யுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின்பேரில் தமிழர் பிரதே சங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்ற நிலையில் கொக்கிளாய் கிராமம் உள்ளிட்ட 34 கிராமங்கள் தமிழ்மக்களிடமிருந்து பறிபோகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மகாவலி அதிகாரசபை தமிழ் மக்களின் நிலங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றும் நடவடிக்கை மிக நீண்ட காலத்துக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டதாகும். அமைச்சர் காமினி திஸாநாயக்கா காலத்தில் நாற்பதினாயிரம் சிங்கள மக்களை இப்பிரதேசத்தில் குடியேற்றும் நடவடிக்கை முதலில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் தந்தை செல்வநாயகத்தின் கடுமையான எதிர்ப்பினால் அது நிறுத்தப்பட்டது. இருந்தபோதும் மூவாயிரம் சிங்கள மக்கள் அப்போது அங்கு குடியேற்றப்பட்டனர். மகாவலி அதிகாரசபையூடாக "எல்" வலயம், "ஜே" வலயம், "கே" வலயம் என அடையாளப் படுத்தப்பட்டு தமிழ் மக்களுக்குச் சொந்தமான பெறுமதிமிக்க நிலங்கள் அரசினால் ஆக்கிர மிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன.

சிறைச்சாலைகளில் இருந்த ஒருசில குற்றவாளிகளைக் கொண்டுவந்து இங்கு குடியேற்றுவதாகவும் கூறப்படுகிறது.

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களில் மகாவலி அதிகாரசபையின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. வனவள திணைக்களம், தொல்லியல் திணைக்களம், கனியவள திணைக்களம் எனப் பல்வேறு அரச நிறுவனங்கள் தமிழர்களுக்குச் சொந்தமான காணிகளை பலதரப்பட்ட காரணங்களைக்கூறி ஆக்கிரமிப்பதாக அறிய முடிகிறது.

2009இல் போர் முடிந்தபின் இந்த ஒன்பது வருட காலத்தில் 6000 சிங்களக் குடும்பங்கள் அங்கு குடியேற்றப் பட்டுள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன. இந்தக் காணிகள், 1984ஆம் ஆண்டில் பலவந்தமாக விரட்டி அடிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகளாகும். இரண்டாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட விஸ்தீரணம்கொண்ட இந்தக் காணிகள் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு காணி உறுதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. அங்கு குடிநீர்வசதி, மின்சாரம், போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, சுயதொழில் வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுக்காக 3000 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதி மகாவலி அபிவிருத்தி சபையினால் மணலாறு செயலாளர் பிரிவில் செலவு செய்யப் பட்டுள்ளது.

கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய், மற்றும் கொக்கிளாய் பகுதிகளில் சட்ட விரோதமாக மீன்பிடித்தலில் ஈடுபட்ட மீனவர்களில் சிலருக்கு மகாவலி அதிகார சபையினால்

காணி அதிகாரப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் அங்குள்ள தமிழ்மக்கள் தமது சொந்தக் காணிகளில் விவசாயம் செய்ய முடியாமல், கடற்தொழில் செய்யமுடியாமல், வாழ்வாதாரத்தை இழந்து தமது நிலத்தினை ஆக்கிரமித்திருக்கும் சிங்கள மக்களிடமே கூலி வேலைசெய்யும் நிலையை எண்ணி துன்பப்படுகிறார்கள். இதைவிடவும் கொடுமையான சம்பவம் வேறேதுமில்லை எனக்கூறி வேதனைப் படுகிறார்கள்.

மணலாறு பிரதேச செயலகப்பிரிவு முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்ட எல்லைகளை உள்ளடக்கியது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதால் வட, கிழக்கு மாகாண எல்லைகள் துண்டாடப்பட்டு வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாகப் பிரிக்கும் அரசின் தந்திரோபாய நடவடிக்கையாக இது கருதப்படுகிறது.

மகாவலி அபிவிருத்திச் சபையால் வடக்கில் இடம்பெறும் ஆக்கிரமிப்புகளை, சிங்களக் குடியேற்றங்களை எதிர்த்து முல்லைத்தீவில் 28-08-2018 அன்று இடம்பெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து ஒட்டுமொத்த எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளார்கள். இறுதியில் மகாவலி அதிகாரசபை சிங்களக் குடியேற்றங்களை நிறுத்தவேண்டும் எனவும் மகாவலிநீர் முல்லைத்தீவுக்கு வேண்டாம் எனவும் கோரும் மகஜர் மக்கள் சார்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நாட்டில் மக்களிடையே நல்லிணக்கத்தையும் தேசிய ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்த வேண்டுமெனில் அரசு மக்களின் இந்த நியாயமான கோரிக்கைக்குச் செவிசாய்க்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

ஞானம் 220 (செப்டெம்பர் 2018)

புரிதல்

✦ சென்ற 220ஆம் இலக்க ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் பக்கம் தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் என்ற தலைப்பில் வந்தவைகள் யாவும் உண்மையான செய்திகளாகும். இவ்வாறான குடியேற்றங்கள் இலங்கை சுதந்திரமடைந்தபின் அதாவது டி.எஸ்.காலம் முதல் இன்றுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரசாங்கங்கள் மாறி, மாறி வந்தாலும் இக்கொள்கை மாறாமல் இருக்கின்றது. சுருக்கமாகச் சொல்வதானால் குரங்குகளுக்கு எல்லாம் ஒருமுகமே. கேட்டால் புண்ணியபூமி, அல்லது புதைபொருள் ஆராய்ச்சியென இல்லாததை உண்டுபண்ணி சாதிக்கின்றனர்.

இறக்காமம் பிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட சிங்களமக்கள் அறவேயில்லாத முஸ்லிம் பிரதேசமான மாணிக்கமடு என்ற இடமிருக்கிறது. அங்கேயுள்ள மாயக்கல்லிமலையில் சுமார் இரண்டரை ஆண்டுகளுக்குமுன்பு புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. சட்டத்தை நீதியையும் கைலெடுக்க முயலுகிறார்களா? சிந்திக்கவேண்டியுள்ளது.

– பாணந்துறை, எம்.பி.எம்.
நிஸ்வான் (221–ஒக்டோபர் 2018)

✦ ஞானம் 220ஆம் இதழில் ஆசிரியர் பக்கத்தில் விலாவாரியாக விபரிக்கப்பட்டுள்ள குடியேற்றப் பிரச்சனை பற்றிச் சிறிது கவனிப்போம். முல்லைத்தீவு மாவட்டத்தின் தென்பகுதியில் பெரும்பான்மையினக் குடியேற்றங்கள் மூலம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வெலிஓயா பிரதேச செயலர் பிரிவு நில வளத்தாலும், நீர் வளத்தாலும், கடல் வளத்தாலும், காட்டு வளத்தாலும் மிகச் சிறந்த பிரதேசமாகும். இங்கிருந்து மதவாச்சிக்கு சாலைகளும், பாலங்களும் அமைக்கப்பட்டு நல்ல போக்குவரத்து வசதி உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோண மலைக்குப் போகும் பாதையிலுள்ள கொக்கிளாய்ப் பாலத்தைக் கட்டுவதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதே பாதையில் முள்ளிவாய்க்காலுக்கும் முல்லைத்தீவுக்கும் இடையில் நந்திக் கடல் இந்து சமுத்திரத்துடன் கலக்கும் முகத்துவாரத்துக்கு அண்மையில் உள்ள வட்டுவாகல் பாலம் ஏறக்குறைய 160மீற்றர் நீளமான ஒருவழிப் பாதையைக் கொண்ட முக்கியமான பாலமாகும். அதுவும் ஆங்காங்கே உடைந்து குமரிக் கண்டம் போலக் கடலில் அமிழ்ந்துவிடும் நிலையில் உள்ளது. தினமும் யாழ்ப்பாணத்திலிருந்தும் பரந்தன் விஸ்வமடு போன்ற பிரதேசங்களில் இருந்தும் வரும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் அரச

உத்தியோகத்தர்களும் முல்லை நகருக்குட் பிரவேசிக்கும் எல்லை வாசல் இதுவேயாகும். வேறு மாற்றுப் பாதை கிடையாது. எனவே நாவற்குழியில் அமைக்கப்பட்டுள்ள புதிய பாலம் போல இரு வழிப் பாதையுடன் கூடிய பாரிய உறுதியான பாலமொன்று வட்டுவாகலில் புதிதாக அமைக்கப்படுவது அவசியம்.

வீடமைப்புத் திட்டத்தைத் துரிதப்படுத்தாமை, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்காமை, பாலங்களை அமைக்காமை, விலைவாசிகளைக் குறைக்காமை, ஜே. வீ. பி. க்கு வழங்கியது போன்று சிறைவாழ் தமிழ் இளைஞர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்காமை, இனப் பிரச்சனைக்குத் தீர்வு வழங்காமை போன்ற விடயங்களில் மக்கள் பலத்த அதிருப்தி அடைந்த நிலையில் உள்ளார்களென்பதைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. இந்த அரசின் பதவிக்காலம் முடிய முன்னர் மேற்கண்ட பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்படுமாயின் மட்டுமே நல்ல பலன்களை எதிர்பார்க்க முடியும்.

தற்போதுள்ள அரசியல் நிலைவரங்களின்படி பாராளுமன்றத்திலே தமிழ் எம். பிமாரின் ஆதரவு அரசுக்கு நிச்சயம் தேவை. எதிர்காலத்தில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இருப்போருக்கும் தமிழ் மக்களின் ஆதரவு நிச்சயம் தேவை. எனவே அரசுடனும் எதிர்க் கட்சியுடனும் பேரம் பேசும் ஆற்றலைத் தமிழர்களாகிய நாம் மென்மேலும் அதிகரித்துக்கொள்வது அவசியம். எத்தனை காலந்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே! சொந்த நாட்டிலே!!

கலாபூஷணம் கா. தவபாலன், கோண்டாவில் கிழக்கு,
(221–ஒக்டோபர் 2018)

74



யுத்தவெற்றியின் கதாநாயகன் யார்?

கடந்த 26-09-2018 அன்று ஐ.நா. பொதுச் சபையின் 73ஆவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி ஆற்றிய உரை தமிழ் மக்களைப் பெரிதும் ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது.

இந்த உரையில் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், தொடர்பான குற்றச்சாட்டு களிலிருந்து படையினரையும் இலங்கை அரசாங்கத்தையும் தப்பவைக்கும் நோக்கம் அப்பட்டமாகவே வெளிப்பட்டிருக்கிறது

"இலங்கையர் என்ற வகையில் தீர்த்துக் கொள்ளவேண்டிய பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்வோம். சுயாதீனமான நாடு என்ற வகையில் எமது உரிமைகளை உறுதிப் படுத்திக்கொண்டு முன்னேறிச் செல்வதற்கு இடமளியுங்கள்" என்ற வகையில் ஜனாதிபதியின்பேச்சு அமைந்திருந்தது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் இலங்கையில் ஜனநாயகம், மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் மீறப்பட்டிருந்தன என்பதைச் சுட்டிக்காட்டி சர்வதேச தலையீடுகள்

அதிகரிக்கப்பட்டு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன.

அப்போது இருந்த சூழல் இப்போது இல்லை. இலங்கையில் தற்போது முன்னேற்றமான மனிதநேயம் மிகுந்த சூழல் நிலவுகிறது. எனவேதான் எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ள இடமளியுங்கள் என்ற காரணத்தை முன்வைத்து ஜனாதிபதி உரையாற்றியிருக்கிறார்.

ஜனாதிபதி நியூயோர்க் செல்வதற்கு முன்னர் ஐ.நா. பொதுச் சபையில் அவர் நிகழ்த்தப்போகும் உரை தொடர்பாக சில விடயங்களைத் தெரிவித்திருந்தார். அதனடிப் படையில் படையினருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு அளித்து அவர்களை விடுதலை செய்வதுதான் அவரது யோசனையாக இருந்தது. ஆனால் அவர் ஐ.நா.வில் ஆற்றிய உரை வேறுவிதமாக அமைந்து விட்டது.

2015இல் தேர்தலில் போட்டியிட்டபோது ஜனாதிபதியால் கொடுக்கப்பட்ட முக்கியமான வாக்குறுதியாக அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் இருந்தது. அதைப்பற்றி ஜனாதிபதி தனது உரையில் எதுவும் குறிப்பிடவில்லை. அதுமட்டுமன்றி சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய போர்க்குற்ற விசாரணை நடத்துவதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் அரசு ஒப்புக்கொண்ட விடயம்பற்றி அவர் பேசுவதைத் தவிர்த்திருக்கிறார். தமிழ் அரசியல் கைதிகள் பற்றியோ காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி பற்றியோ அல்லது தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள இராணுவ ஆக்கிரமிப்பு பற்றியோ அவர் பேசவில்லை.

ஆனால், போரில் ஈடுபட்ட படையினரின் அர்ப்பணிப் பைப்பற்றி ஜனாதிபதி புகழ்ந்துள்ளார். “எமது பாதுகாப்பு படையினரால் உலகின் பிரபல பயங்கரவாதமே தோற்கடிக்கப் பட்டுள்ளது. இன்று எமது நாடு பிரிக்கப்படாத ஒன்றிணைந்த பிரதேசமாகக் காணப்படுவதற்கு எமது இராணுவத்தினரால் நிறைவேற்றப்பட்ட அர்ப்பணிப்புடன் கூடிய பணியே காரணம்” எனவும் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட அந்தப்

பணியை தான் கௌரவத்துடன் நினைவு கூருவதாகவும் கூறியுள்ளார்.

சர்வதேசம் கூறுவதுபோல் தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் நடத்தப்படவில்லை எனவும் ஒரு பயங்கரவாத இயக்கத்துக்கு எதிராகவே போர் நடைபெற்றது எனவும் கூறியுள்ளார்.

இந்த உரையின்பின்னர் நியூயோர்க் நகரில் அமெரிக்கா வாழ் இலங்கையர் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி, இறுதி யுத்தம் நடைபெற்ற வேளையில் புலிகள் சென்னையில் இருந்து விமானம்மூலம் கொழும்பு நகரைத் தாக்கி அழிக்கத் திட்டமிட்டிருந்தார்கள். அதனைத் தெரிந்துகொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோர் தம்மைக் காப்பாற்ற நாட்டைவிட்டு வெளியேறியிருந்தார்கள். போரின் உச்சக்கட்டத்தில் முக்கிய மான மூவரும் ஒரே காலகட்டத்தில் நாட்டைவிட்டு வெளியேறிய தற்கான காரணத்தையும் ஜனாதிபதி கூறியுள்ளார். அவ் வேளையில் இரண்டு வாரங்கள் தானே பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்ததாகவும் கூறியுள்ளார். இதன்மூலம் இறுதிப்போரைத் தானே வழிநடத்தியதான ஒரு பிம்பத்தை ஏற்படுத்த முயல்கிறாரா, தானே யுத்தத்தின் கதாநாயகன் என்று கூறுகின்றாரா என்று எண்ணத்தோன்றுகிறது. போர்வெற்றியில் தனது பங்களிப்பை வெளிப்படுத்தி சிங்கள மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை உயர்த்த முயல்கிறார் ஜனாதிபதி என்ற விமர்சனமும் அரசியல் ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகிறது.

இனவாத அரசியல் நடத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரி பாலாவும் முற்படுகிறாரா?

இப்படியே போனால் இனி தமிழ்மக்களை கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்று தந்தை செல்வாவின் கூற்றுத்தான் மீண்டும் ஞாபகத்தில் வருகிறது.

ஞானம்–221 (ஒக்டோபர் 2018)

75

இலங்கை அரசியல் பிரச்சினையில் சர்வதேசத்தின் தலையீடு அவசியம்

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா, நாட்டின் புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷவை நியமித்துள்ளார். இந்த நியமனம் சட்டபூர்வமானதல்ல என்று ஒருசாராரும் சட்ட பூர்வமானது என்று மறுசாராரும் கூறிவரும் நிலையில் பெரும் அரசியல் நெருக்கடி தோன்றியுள்ளது.

இந்த நிலையில் பாராளுமன்றத்தில் தமது பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் ரணில் தலைமையிலான ஐக்கியதேசியக் கட்சியும் பெரும் பிரயத்த னங்களில் ஈடுபட்டுவருகின்றன. இதனிடையே சில கட்சித் தாவல்களும் நடந்தேறியுள்ளன.

இத்தகையதொரு நிலைமையில் பாராளு மன்றத்தின் 16 அங்கத்தவர்களைக் கொண்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஆதரவைப் பெறுவதற்கு இருசாராரும் கடும்முயற்சி

எடுத்து வருகின்றனர். இந்த இழுபறிநிலைக்குத் தீர்வுகாணும் சக்தியாக தமிழர்கூட்டமைப்பு மாறியுள்ளது.

புதிய பிரதமராக நியமிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ கூட்டமைப்பின் ஆதரவைக் கோரியிருந்தார். அவரது அழைப்பினை ஏற்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கொழும்பு விஜயராம மாவத்தையிலுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷாவின் இல்லத்தில் அவரைச் சந்தித்து விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தின்போது தமிழர்கூட்டணியின் தலைவர் திரு. சம்பந்தன் சில நிபந்தனைகளை விதித்துள்ளார். அரசியல் கைதிகள் விடுதலை, காணிவிடுவிப்பு, புதிய அரசியல்யாப்பு விவகாரம், அரசியல்தீர்வு உட்பட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது தொடர்பான உறுதிமொழியை எழுத்துமூலமாக வழங்கினால் ஆதரவு தருவது தொடர்பில் பரிசீலிக்கமுடியும் எனக்கூறியுள்ளார். அதற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மக்களின் ஆணைபெற்று தாம் அரசாங்கம் அமைக்காத நிலையில் தம்மால் எழுத்து மூலமான உறுதிமொழியைத் தருவது சாத்தியமில்லை எனத்தெரிவித்துள்ளார். இந்நிலையில் பேச்சுவார்த்தை முடிவடைந்துள்ளது.

கடந்தகாலங்களில் மாறிமாறி வந்த அரசாங்கங்களினால் தமிழ்மக்கள் ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர். அந்தக் கடந்த காலவரலாற்று அனுபவங்கள் காரணமாகவே எதிர்க்கட்சித் தலைவர் எழுத்துமூலமான உறுதிமொழியைக் கேட்டுள்ளார்.

எழுத்து மூலமான உறுதிமொழிகளை தமிழர் தரப்புக்கு வழங்குவதும் பின்னர் அதனைக் கிழித்தெறிவதும் பேரின அரசியல்வாதிகளுக்கு ஒன்றும் புதிதான விடயமல்ல.

ஆனால் எழுத்து மூலமான உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டால் அதனை எதிரணியினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி எதிர்ப்பிரசாரத்தில் ஈடுபடுவர் என்பதை மகிந்த ராஜபக்ஷ அறியாதவரல்ல. அது தனக்கு பாதகமான நிலைமையை ஏற்படுத்திவிடும் என்பதை ராஜபக்ஷ நன்றாகவே தெரிந்து வைத்துள்ளார்.

பேரினவாதக் கட்சிகளிடையே தோன்றியுள்ள போட்டி மனப்பான்மை, தமிழர் தரப்பின் ஆதரவு இல்லாமல் அரசாங்கம் அமைக்கமுடியாது என்ற நிலைமையைத் தோற்று வித்துள்ளது.

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா தற்போதைய நிலையில் சர்வதேசத்துடனும் இந்தியாவுடனும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையுடனும் கலந்துரையாடி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தீர்மானம் எடுக்கும் என்று அறிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஐ.நா. பிரதிநிதி ஹனா சிங்கர் அம்மையார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் ஆகியோரைச் சந்தித்து நாட்டில் தற்போது நிலவும் அரசியல் நிலவரம் தொடர்பில் பேசியுள்ளார். வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு முன்னர் சபாநாயகருடன் அவசர சந்திப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளனர். அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பது குறித்து ஜனாதிபதியிடம் அமெரிக்கா கோரிக்கை விடுத்திருக்கிறது.

தற்போதைய அரசியல் குழப்பங்கள் எத்தகைய முடிவை எடுத்தாலும் அது தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினைத் தரும் முடிவாக இருக்கப்போவதில்லை. இனவாதத்தை முதலீடாகக் கொண்டு அரசியல் நடத்தும் எமது நாட்டின் அரசியல் சூழ்நிலையில் உள்நாட்டு அரசியல் காய்நகர்த்தல்கள் தமிழர் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வினை ஏற்படுத்தப் போவதில்லை. தமிழரது பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரமான தீர்வினைப் பெறுவதற்கு சர்வதேசத் தலையீடு இன்றியமையாதது என்பதே கடந்தகால அரசியல் வரலாறு கற்றுத்தரும் பாடமாகும். அதற்கான ஒரு சந்தர்ப்பத்தை நோக்கி இலங்கை அரசியல் நிலவரங்கள் நகர்வதாகவே இதனை நாம் பார்க்கமுடியும்.

ஞானம்–222 (நவம்பர் 2018)

76



இன்றைய அரசியல் பிரச்சினையின் ஆணிவேர்

1978ஆம் ஆண்டில் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறையை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கொண்டுவந்தார். அந்த அதிகாரத்தின்படி "பெண்ணை ஆணாகவும் ஆணைப் பெண்ணாகவும் மாற்றமுடியாதே தவிர மற்ற எல்லாவற்றையும் செயற்படுத்தக் கூடிய அதிகாரங்கள் தன்னிடம் இருப்பதாக" வீராப்புப் பேசினார்.

அவர் இந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையைக் கொண்டுவந்தபொழுது அதற்கு எதிராகக் கடுமையான விமர்சனங்கள் அரசியல்வாதிகளால் முன்வைக்கப்பட்டன. இது சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கும் என்று கூறப்பட்டது. அவ்வாறே ஜெயவர்த்தனாவினதும் தொடர்ந்துவந்த பிரேமதாசாவினதும் ஆட்சிகள் அமைந்தன. யூ.என்.பி. கட்சியினர் கொண்டுவந்த இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கப்போவதாகக்கூறி மக்களிடம் வாக்குப்பெற்று 1994இல் சந்திரிகா குமாரதுங்கா

அம்மையார் ஜனாதிபதியானார். அவரும் பதவிகிடைத்த பின்பு அந்தப் பதவியைச் சுகிப்பதிலேயே காலங்கடத்தினார். மக்களுக்கு அளித்த வாக்கை மறந்துபோனார்.

அதன்பின்பு 2005இல் மஹிந்தா பதவிக்கு வந்தார். அவர் தனக்கு வாலாயமாகச் சட்டங்களை மாற்றத் தொடங்கினார். 18ஆவது திருத்தச் சட்டமூலத்தைக் கொண்டுவந்து ஜனாதிபதியொருவர் மூன்று தடவைகள் பதவியிலிருக்கலாம் என்ற திருத்தத்தைக் கொண்டுவந்தார்.

மூன்றாவது முறையும் தான் ஜனாதிபதியாக இருக்கலாம் என்ற மஹிந்தாவின் கனவைக் கலைக்கக் களமிறங்கி வெற்றிகண்டார் தற்போதய ஜனாதிபதி மைத்திரி. இவர் ஜனாதிபதியின் அதிகாரத்தை ஒழிப்பதாக மக்களிடம் வாக்களித்து ஜனாதிபதியானவர். இவரது காலத்தில் 19ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டு ஜனாதிபதியின் அதிகாரங்கள் பெருமளவு குறைக்கப்பட்டன. ஆனாலும் அரசியலமைப்பை மீறி இப்போது ஜனாதிபதி செயற்பட்டிருக்கிறார். தனக்கு இல்லாத அதிகாரத்தைப் பாவித்து பாராளுமன்றப் பெரு பான்மைக்கு எதிராகச் செயற்பட்டிருக்கிறார். பாராளுமன்றப் பெரும்பான்மைக்கு எதிராகப் போர்தொடுத்திருக்கிறார். தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி சிறுபான்மையாக உள்ள அரசாங்கத்தைப் பாதுகாக்க முனைந்து குட்டை குழப்பியிருக்கிறார்.

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியும் பாராளுமன்றமும் இணைந்து செயற்படாவிட்டால், இந்த நிலைமைதான் ஏற்படும்.

2000ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியாக இருந்த சந்திரிகாவும் பிரதமராக இருந்த ரணிலின் ஆட்சியைக் கலைத்தார். இப்போதைய ஜனாதிபதியும் அதனையே செய்திருக்கிறார்.

ஜனாதிபதி ஒரு கட்சியாகவும் பிரதமர் வேறொரு கட்சி யாகவும் இருந்தால் இத்தகைய பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பு.

ஒக்டோபர் 29ஆம் திகதி ஆரம்பமான இந்த அரசியல் குழப்பநிலை ஒரு மாதம் கடந்த நிலையிலும் தீராதுள்ளது.

நாட்டில் அரசாங்கம் ஒன்று இருக்கிறதா என்பதை நாட்டு மக்கள் அறியமுடியாதவர்களாக இருக்கிறார்கள்.

கட்சி சார்ந்த நலன்களைப்பற்றிச் சிந்திப்பதைவிடுத்து நாட்டு நலன்கருதி அரசியல் தலைவர்கள் சிந்திக்கவேண்டும். அப்போதுதான் இந்நாட்டில் அமைதியும் சுபிட்சமும் ஏற்படும்.

ஞானம் 223 (டிசம்பர் 2018)

பல்துறை

77



நம்மவருக்குத் தமிழக அரசின் விருது

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களுக்கு தமிழக அரசு திரு.வி.க. நினைவுப் பரிசினை வழங்கிக் கௌரவித்துள்ளது. தமிழுக்குப் பெரும் பணியாற்றிய அறிஞர் களுக்கு வழகங்கப்படும் இந்த உயரிய விருது இவ்வருடம் நம்மவரான பேராசிரியருக்கு வழங்கப்படுவதையிட்டு நாமெல்லோரும் பெருமைப்படலாம். ஒரு இலட்சம் இந்திய ரூபாவும் தங்கப் பதக்கமும் விருதும் செம்பர் 24 ஆம் திகதியன்று தமிழகத்தில் பேராசிரியருக்கு வழங்கப்படவிருக்கிறது.

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்று, கல்லூரி ஆசிரியராக இருந்து பின்னர் பாராளுமன்ற மொழிபெயர்ப்பாளராகச் சிலகாலம் தொழில் புரிந்து அதன்பின்னர் வித்தியோதயா பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணி யாற்றியவர். பின்னர் பர்மிங்காம் பல்கலைக்

கழகத்தில் பேராசிரியர் தாம்ஸனின் வழிகாட்டலில் Drama in ancient tamil society என்ற ஆய்வினை மேற்கொண்டு கலாநிதி பட்டம் பெற்றவர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும் உப்சலா பல்கலைக்கழகத்திலும் அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா, பேர்க்கிலி, விஸ்கான் சியன், ஹாவாட் பல்கலைக்கழகங்களிலும் சென்று பணியாற்றியவர். யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும், அதன் பின்னர் அங்கு நுண்கலைப்பீடத் தலைவராகவும் பணியாற்றியவர். கடைசியாக கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கௌரவப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

அறுபதுகளின் ஆரம்பத்தில் ஈழத்தமிழ் இலக்கியத்தின் திருப்புமுனையாக அமைந்த முற்போக்கு எழுத்தாளர் சங்கம், மரபு பற்றிய விவாதங்கள், நாடக மறுமலர்ச்சி ஆகியவற்றில் பேராசிரியரின்பங்கு கணிசமானது. மார்க்சிய ஒளியில் தமது விமர்சனப் பார்வையை செலுத்தும் பேராசிரியர், தமிழ் விமர்சனத்துறையில் பல புதிய கோணங்களுக்கு வெளிச்சமிட்டுக் காட்டியவர். பழந்தமிழ் இலக்கியம் முதல் நவீன இலக்கியம்வரை தமது பார்வையின் வீச்சைப் பதிவு செய்துவரும் பேராசிரியர் தமிழ்கூறு நல்லுலகில் தமக்கென ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளார். இவர் முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். தமிழாராய்ச்சி மாநாடுகள் உலகில் எப்பகுதியில் நடந்தாலும், அங்கு பேராசிரியர் கா.சிவத்தம்பியின் பங்களிப்பும் இருக்கும்.

பேராசிரியருக்குக் கிடைத்த இந்த உயர் கௌரவம் ஈழத்தமிழ் இலக்கிய முயற்சிகளுக்குக் கிடைத்த ஒரு பெரும் கௌரவமாகும்.

ஞானம்–07 (டிசம்பர் 2000)

78



மானுடத்தின் தமிழ் செய்வோம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம் நிதர்சனம் நிறுவனத்துடனும் தமிழ்த்தாய் வெளியீட்டகத்துடனும் இணைந்து நடத்திய 'மானுடத்தின் தமிழ்க் கூடல் 2002' யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் அக்டோபர் 19முதல் நான்கு நாட்கள் மிகவும் சிறந்த முறையில் நடந்தேறியுள்ளது. இந்த மாநாட்டிலே தமிழ், சிங்கள, முஸ்லிம் என்று மூவினமக்களும் கலந்துகொண்டு தமது உள்ளக்கிடக்கைகளை வெளியிட்டுள்ளார்கள்.

தமிழகத்திலிருந்து, தென்னிலங்கையிலிருந்து, மலையகத்திலிருந்து, புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து, வடக்குக் கிழக்கின் சகல பிரதேசங்களிலிருந்தும் ஏறக்குறைய மூவாயிரம் பேராளர்கள் இந்த மாநாட்டிலே கலந்துகொண்டனர். இவர்கள் யாபேரும் மானுடம் தழுவிய ஒரு விடுதலையை நோக்கி ஒன்றிணைந்து நின்றார்கள்.

இந்த மாநாடு 'மானுட விடுதலை நோக்கிய திசையில் ஈழத்தமிழர் உரிமைப்போராட்டமும்

கலை, இலக்கிய, ஊடகங்களின் வகிபாகமும்' என்னும் மையப்பொருள் பற்றி நடைபெற்றது. தொடக்கவுரை நிகழ்த்திய பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார் :-

'தமிழரின் விடுதலைப் போராட்டத்தை சிங்கள மக்களுக்கு எதிரான போராட்டமென சில ஊடகங்களே தவறாகச் சித்தரித்துக்காட்டின. தமிழர் போராட்டத்தின் நியாயத் தன்மையை சிங்கள மக்களிடம் தெளிவாக எடுத்துக்கூற ஊடகத்துறை முன்வரவேண்டும்.

ஈழத்தமிழர்களுடைய உரிமைப்போரானது மானிட விடுதலை நோக்கிய திசையில் வந்தது, வருவது, வரப்போவது என்பதாகும். இது ஈழத்தமிழர்களின் உரிமைகளுக்கான ஒரு போராட்டமும், தேடுதலுமே தவிர, இந்த உரிமைப் போராட்டத்தினுடைய - அது எடுக்கும் வடிவங்களை வைத்துக் கொண்டு, அதற்கு எதிராகக் கூறப்படுவதை வைத்துக்கொண்டு இந்த உரிமைப்போராட்டத்தை மதிப்பிடக் கூடாது என்பது மிக முக்கியமானது.

மானுடத்தின் குரல் என்பது தனியே தமிழ் மக்களுக்குரிய தல்ல. அது உலகத்துக்குப் பொதுமையானது. அடக்குமுறை எங்கு ஓங்குகிறதோ அங்கெல்லாம் மானுடத்தின் குரல் ஒலித்துக்கொண்டிருக்கும். ஒவ்வொரு நாட்டிலும் மனிதர்கள் நசுக்கப்படும்போது மானுடத்தின் குரல் ஒலிக்கும். அது மொழியால் வேறுபடுவதல்ல. மானுடத்தின் குரலானது எப்பொழுதும் தனது கருத்தியலை, தனது வடிவத்தன்மையை வெளிப்படுத்தவேண்டும். அது தன்னுடைய ஆத்மார்த் தமான மனித உணர்வுகளை வெளிக்காட்டவேண்டும். அவை எப்பொழுது செயற்படுகின்றதோ அப்பொழுதுதான் மானுடத்தின் குரலாகிறது.

அந்த மானுடக் குரலானது மனித உணர்வுகளை மதிக்கின்ற, மனிதனை மனிதனாக மதிக்கின்ற இயல்புகளுடன் பொருந்திக் காணப்படவேண்டும். மானுடத்தின் உணர்வுகளை நசுக்கும்போது போராட்டம் தோற்றம் பெறுகிறது. போராட்டம்

என்பது வெறுமனே போரைக் குறிப்பதல்ல. போராட்டம் என்பது பல்வேறு வகையிலானது. உரிமைப்போர் என்பது 'War' அல்ல; அது 'Fight' அல்ல. அது 'Struggle' ஆகும். அதாவது 'Struggle for human liberation' என்பதாகும். 1920இலிருந்து அரசியல் வடிவில் தமிழர்களின் உரிமைகளைப் பற்றி எடுத்துக் கூறுகின்ற குரல் ஒன்று காணப்படுகின்றது. அதிலிருந்து தமிழ் மக்களுடைய குரல், குறிப்பாக ஈழத்தமிழருடைய குரல் நடைபோடத்தொடங்கியது. இளைஞர்களுடைய வருகை யும் போரினுடைய உக்கிரமும் இந்தப்போராட்டத்தில் ஒரு மானுடப்போராகிவிட்டது. ஒரு போராட்டம் வரலாற்றில் எப்போதும் அழியாது இருக்கவேண்டும். அப்போதுதான் அது தர்மப்போர். மனித உணர்வுகள் நசுங்கும்போது விடுதலை வேண்டி எழும் போராட்டமாக இருக்கும். எமது தமிழ் மக்களின் போர் அந்த வகையானதுதான். இந்தப்போர் பல வழிகளில் நிகழ்ந்து வந்துள்ளது. அகிம்சை வழியிலானது, ஆயுதம் ஏந்திய போர்வழியிலானது, எழுத்து வடிவிலானது எனப் பல்வேறு பரிமாணங்களில் இது நிகழ்ந்து வந்துள்ளது.

ஈழப்போர் மானுட விடுதலைக்கான போர். இந்தக் கட்டுக்கோப்பிலிருந்து விடுபடக்கூடாது.

தமிழ் மரபில் இதுவரை இல்லாத புதிய இலக்கியங்கள் கடந்த இருபத்தைந்து வருட காலமாக ஈழத்தில் எழுந்து கொண்டிருக்கின்றன. அனுபவங்களின் ஆழத்தை, உறவுகளின் மென்மையை, சோகத்தை தெளிவாக வெளிப்படுத்துபவை காத்திரமான இலக்கியங்களே.

இலக்கியங்கள் மொழி கடந்தாலும் மதிப்பிறக்கம் அடைவ தில்லை. தமிழர் உரிமைப்போரின் அதிர்வுகள் கலை இலக்கியங்களில் தக்க சான்றுகளாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இன்று தமிழ் ஊடகங்களுக்கு ஒரு முக்கியமான பொறுப்பு உள்ளது. அதாவது இந்தப்போராட்டம் மானுட விடுதலையின் அடிப்படையில் வருவது என்பது பற்றிச் சொல்லும் அந்த மையக்கருத்தை மக்களிடையே கொண்டுசெல்வதும்,

மக்களிடையே பேணுவதும் மிக முக்கியமான ஒரு விடயமாகும்'.

பேராசிரியரின் இக்கருத்து இன்றைய சூழலில் மிக முக்கியமானது.

1974இல் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு இதே வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அப்போது நடந்த அராஜகங்கள், மனித உயிரழிவுகள் இளைஞர்களை ஆயுதமேந்த வைத்தது. இப்போது 28 ஆண்டுகளுக்குப் பின்னர் இதே மண்டபத்தில் நடைபெற்ற மானுடத்தின் தமிழ்க்கூடல் படைப்பாளிகளை மனித விடுதலைக்காக பேனா ஏந்தும் தேவையினை மிக அழுத்தமாக உணர்த்தியுள்ளது.

ஞானம் –30 (நவம்பர் 2002)

79



புத்தகக் கலாசாரத்தை வளர்த்தெடுப்போம்

ஒரு மொழியின் கலாசாரச் செழுமையை மதிப்பிடுவதற்கு அம்மொழியில் வெளியாகியுள்ள நூல்களின் தொகையை ஓர் அளவிடும் அலகாகக் கொள்ளலாம். நூலும் நூலகங்களும் பெறுமானமுள்ள அறிவு வளங்களாகும். நூலகங்கள் அறிவு பரப்பும் கலங்கரைவிளக்கம் மட்டுமன்றி நாட்டின் அருஞ்செல்வமுமாகும்.

நமது நாட்டில் தமிழ்மொழியின் கலாசாரத்தை வலுவிழக்கச் செய்வதற்குப் பேரினவாதிகள் போட்ட பயங்கரச் சதித்திட்டமே 1981ஆம் ஆண்டு தென்கிழக்காசியாவில் அதிகளவு நூல்களைக் கொண்டதெனப் பெருமையுடைய யாழ். நூலகத்திற்கு இட்ட தீ.

கலை கலாசார சமூகமேம்பாடு உயர்வடையப் புத்தகக் கலாசாரம் (Book Culture) மிக அவசியமானதாகும். இன்று கல்வி அறிவு பெற்றோர் தொகை அதிகமிருந்தும், வாசிப்போர் தொகை விகிதாசாரத்தில் குறைந்து வருவதைக் காண்கிறோம்.

சிந்தனை வளம் மிகுந்த தகவல் யுகமாகிய இன்றைய காலகட்டத்தில், தகவல் தொழில்நுட்பத் துரித வளர்ச்சியின் காரணமாக, தேடல்களுக்கும் அறிவு பெறும் மார்க்கங்களுக்கும் சுலபமானதும் வேகமானதுமான வாயில்கள் தோன்றியுள்ளன. இதன் தாற்பரியம், ஆரோக்கியமாகக் குழந்தையை வளர்ப் பதற்குத் தாய்ப்பால் கொடுப்பதற்குப் பதிலாகப் புட்டிப்பால் கொடுப்பதைப் போன்றதாகும்.

நல்லதொரு நூல் அருகிலிருந்து அறிவூட்டும் ஆசானைப் போன்று செயற்படும். வாசிப்பதனால் மனிதன் பூரண மடைகிறான் என்பது ஆங்கில முதுமொழி.

'தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு' - என்றார் வள்ளுவர்.

ஜவஹர்லால் நேரு நூல்களை வாசிப்பதிலும் அவற்றைச் சேகரித்து வைப்பதிலும் அக்கறை கொண்டவராக இருந்தார். மகாத்மா காந்தி காலைக்கடன்களைக் கழிக்கும்போதும் நூல் வாசிப்பாராம். நெப்போலியனுக்கு நூல்வாசிப்பது மிக விரும்பிய பொழுதுபோக்காக இருந்தது. லெனினும் மாசேதுங்கும் கருத்துக்களைப் பரப்ப நூல்களையும் நூலகங்களையும் சாதனங்களாகக் கொண்டனர். 'ஒவ்வொரு புத்தகமும் என் முன்னே மக்களைப்பற்றியும் அவர்களின் ஆசாபாசம், இதயஉணர்வு, கருத்தோட்டம் ஆகியவற்றைப் பற்றியும் அறிந்துகொள்ளத் திறந்துவிடப்பட்ட சாளரங்களாகத் திகழ்கின்றன' என்றார் ஆக்க இலக்கிய மாமேதை மார்க்சிம் கார்க்கி.

பிரான்ஸ் புரட்சி, சோவியத்துப் புரட்சி, தமிழ்நாட்டில் தி.மு.க. ஏற்படுத்திய கலாசார மாற்றம் ஆகியவற்றுக்கெல்லாம் நூல்களின் பங்கு மகத்தானதாக இருந்தது.

அன்று கையில் நூல்களுடன் உலாவுவதைப் பெருமையாகக் கொண்டனர் இளைஞர்கள். மேலை நாடுகளில் மக்கள் பிரயாணம் செய்யும்போது சூழல் சுற்றுப் புறங்களை மறந்து பத்திரிகைகள், புத்தகங்கள் படிப்பதை இன்றும் காணக் கூடியதாக இருக்கிறது. ஆனால் நமது இளைஞர்களோ

இன்று வீடியோ - சீ.டி. தட்டுகளுடன் பவனி வருவதை நாகரிகமாகக் கொள்கின்றனர்.

வாசிப்புப் பழக்கம் சிறுவயதிலேயே ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆரம்பப் பாடசாலை மட்டத்திலேயே ஊக்குவிக்கப் படவேண்டும். பிறந்தநாள், திருமணப்பரிசுகள் நூல்களாக வழங்கப்படலாம். வீடுகளில் பூஜைஅறை இருப்பது போல ஒவ்வொரு வீட்டிலும் சிறு நூலகமாவது இருக்க வேண்டும். அது எதிர்காலச் சந்ததியினருக்கும் 'முதுசொம்' ஆக அமையவேண்டும்.

புத்தகக் கலாசாரத்தை வளர்த்தெடுப்பது மொழியினதும் கலாசாரப் பண்பாட்டினதும் வளர்ச்சிக்கு மட்டுமன்றி மானுடத்தின் வளர்ச்சிக்கும் பெரிதும் வேண்டற்பாலதாகும்.

ஞானம்43 (டிசம்பர் 2003)

80

அவுஸ்திரேலிய நான்காவது தமிழ் எழுத்தாளர் விழா

இனப்பிரச்சினையினால் ஏற்பட்ட வன்முறைகளின் பாதிப்பினால் இலங்கையை விட்டுப் புலம்பெயர்ந்து ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலியக் கண்டங்களில் வாழ்பவர்களால் படைக்கப்படும் இலக்கியங்கள் 'புலம் பெயர்ந்தோர் இலக்கியம்' என வழங்கப் படுகின்றன. இதனால் இவ்விலக்கியங்கள் ஈழத்து இலக்கியத்தின் ஒரு பகுதியாகவும் கொள்ளப் படுகின்றன.

ஆரம்பத்தில் புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தின் கருப்பொருளாக, பிரிந்துவந்த மண்ணின் ஏக்கம், பிரிந்துவந்த உறவுகள் பற்றிய ஏக்கம், பிரிந்துவந்த சுற்றாடல் சமூகம் பற்றிய ஏக்கம், அவற்றால் ஏற்பட்ட இழப்புகள் ஆகியவை இடம்பெற்றன. அவற்றின் சித்திரிப்பை இவ்விலக்கியங்களில் தத்ரூபமாகக் காணமுடிந்தது. சொந்த மண்ணில் இருக்கும் போது தெரியாத பலவிடயங்கள் தூர இருந்து பார்க்கும்போது படைப்பாளிகளின் கண்களில்

துலாம்பரமாகத் தெரிந்தன. இவை புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் முதற்கட்ட எழுத்தாக அமைந்தன.

இரண்டாவது கட்டத்தில் புலம்பெயர்ந்தோர் இலக்கியம் 'புகலிட இலக்கிய'மாகப் பரிணாமம் பெற்றது. வேறுபட்ட ஒரு கலாசாரச் சூழலில் தம்மைப் பொருத்திக் கொள்ளப் போராடும்போது எப்படியெல்லாம் பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்பதை இந்த இரண்டாவது கட்ட இலக்கியங்கள் பேசுகின்றன. இந்தப் 'புகலிட இலக்கியம்' என்ற சொற்பிரயோகம் புலம் பெயர்ந்தவர்களாலேயே ஏற்படுத்தப்பட்டது.

புலம் பெயர்ந்தோர் இலக்கியம் என்று கூறும்போது, அதில் மக்கள் முன்னிலைப்படுகின்றனர். 'புகலிட இலக்கியம்' என்று கூறும்போது அங்கு வாழ்விடம் முக்கியத்துவம் பெறுகிறது. இந்த நிலை - மக்கள் பிற மண்ணில் வேரூன்றுகிறபோது அவர்களுக்கு வாழ்விடம் முக்கியத்துவம் பெறுவது - அவர்களை அறியாமலே அத்தகைய மனநிலை ஏற்படுவது இயல்பானதாகிவிடுகிறது.

புகலிடத்தில் குடியுரிமை பெற்றவர்கள் எவ்வளவுதான் மாற்றங்களை ஏற்றுக்கொண்டு அந்நாட்டு வாழ்க்கை முறையில் வாழ்ந்தாலும் அந்நாட்டு வெள்ளைக்காரப் பிரஜைக்கு ஈடாக முடியாது. இவர்களது நிறம் பரம்பரை பரம்பரையாக இவர்களில் ஒட்டிக்கொண்டே இருக்கும். இவர்கள் வேற்று மனிதர்கள் என்பதைப் பறைசாற்றிக் கொண்டே இருக்கும். இவர்களது சந்ததியினர் நாங்கள் யார்? எங்கிருந்து வந்தோம்? எங்களது தாய்மொழி யாது? என்று கேட்கின்ற காலம் ஒன்று வரும்.

இவற்றின் காரணமாக இவர்கள் பற்றிய இலக்கியங்கள் தொடர்ந்தும் ஈழத்துப் புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தின் பகுதியாகவே இருக்கும்.

இத்தகைய பின்னணியில், பண்பாட்டு ரீதியிலும் வேறு காரணங்களினாலும் தமிழ் மொழியின் தேவையை, அதன் முக்கியத்துவத்தை உணர்ந்த நம்மவர்கள், அவர்கள் வாழும் நாடுகளில் பல்வேறு முறைகளில் தமிழ்ச் செயற்பாடுகளில் ஈடுபடுவதோடு தழிழைக்கட்டிக்காக்கும் பணிகளிலும் முயன்று வருகின்றனர். இம்முயற்சிகளில் புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் பங்கு மிக முக்கியமானதாகக் காணப்படுகிறது.

புகலிட இலக்கியவாதிகளால் ஏராளமான கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் எழுதப்படுகின்றன. புகலிட நாவல்களாக ஏறத்தாழ பதினைந்து நாவல்கள் வெளிவந் துள்ளன. புலம்பெயர் நாடுகளிலிருந்து கையெழுத்துப் பத்திரிகைகள்முதல் அச்சுப்பத்திரிகைகள்வரை நூறு இதழ்கள் வெளி வந்துள்ளதாக ஒரு கணிப்புக் கூறுகிறது. (இவற்றுள் பல இப்போது நின்றுவிட்டன.) இவை, புகலிட இலக்கியம் ஓர் ஆரோக்கியமான நிலையில் இருப்பதைக் காட்டுகின்றன. இந்த இலக்கியங்கள் தமிழ் இலக்கியத்திற்குப் புதிய புலத்தை, புதிய சிந்தனைகளை, புதிய பொருட்பரப்பினை, புதிய வெளிப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்தி நிற்கின்றன.

இத்தகைய முயற்சிகளின் பிறிதொரு அங்கமாக புலம்பெயர் நாடுகளில் அவ்வப்போது எழுத்தாளர் விழாக்கள், ஒன்று கூடல்கள் புத்தகக் கண்காட்சிகள் முதலியனவும் நடைபெற்று வருகின்றன. அவுஸ்திரேலியாவில் கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு கோடை விடுமுறையிலும் தமிழ் எழுத்தாளர் விழாக்கள் பெரிய அளவில் கொண்டாடப்பட்டு வருகின்றன. இதில் இலக்கிய ஆய்வரங்கம். புத்தகக் கண்காட்சி, ஓவியக் கண்காட்சி. கவியரங்கம், இசையரங்கம், கலை அரங்கம் என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஏறத்தாழ ஒவ்வொரு வருடமும் நூறு எழுத்தாளர்கள்வரை இந்த விழாக்களில் பங்கு கொள்கின்றார்கள் என அறிகின்றோம்.

இந்த வருடமும் 25-01-2004இல், கன்பரா மாநிலத்தில் இவ்விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துள்ளார்கள். ஒவ்வொரு வருடமும் இந்த விழாக்களைச் சிறப்பாக ஒழுங்கு செய்து நடத்திவரும் விழாஅமைப்பாளர் திரு லெ. முருகபூபதி பாராட்டுக்குரியவர்.

இவ்விழா சிறப்புற வாழ்த்தி, இந்த இதழை 'அவுஸ்திரேலிய நான்காவது தமிழ் எழுத்தாளர் விழா'ச் சிறப்பிதழாக விழாவிலே வெளியிடுவதில் 'ஞானம்' பெருமை யடைகிறது.

ஞானம்–45 (பெப்ரவரி 2004)

81

சிறுபான்மை இனத்தின் கலை இலக்கிய மேம்பாட்டுக்கான ஊக்குவிப்பினைப் புறக்கணிப்பதும் மனித உரிமை மீறலே.

நமது நாட்டில் தேர்தல் முடிந்து புதிய அரசாங்கம் ஒன்று உருவாகியுள்ளது. ஒரு ஜனநாயக நாட்டில் தேர்தல் மக்களின் தீர்ப்பு என்பர். மக்களின் அரசியல் உணர்வு அலைகளின் வெளிப்பாடு எனவும் கூறலாம். தேசிய ரீதியில் நோக்கும்போது, நடந்த தேர்தலும் அதன் பெறுபேறுகளும் சில விடயங்களை நமக்கு உணர்த்தி நிற்கின்றன. ஆழ்ந்து நோக்கும்போது சில சிந்தனைக்குரிய அவதானிப்புகள் தெரிகின்றன. இருவருட காலமாக சமாதான முயற்சியை முன்னெடுத்த ஆட்சியாளர்கள் அந்த முயற்சியில் பெரும் பான்மையின மக்களின் ஆதரவைத் திரட்டுவதற்கு வெகுஜன இயக்கங்களை முன்னெடுக்கவில்லை. அதேவேளை பதவி மோகமும் இனவாதமும் கொண்டு இயங்கிய எதிர்த்தரப்பினர் தமது ஒத்துணர்வை ஒன்று

திரட்டி, விடுதலை வேண்டிநின்ற தமிழ் மக்களின் குரலைப் பிரதிநிதிப்படுத்திவந்த இயக்கத்திற்கு எதிராக இனவாத உணர்வைத் தூண்டினர். அரை நூற்றாண்டு காலமாக எதிர் நோக்கிவரும் பிரச்சனைக்குத் தீர்வு தேடும் முயற்சிகளுக்கு எதிரான உணர்வுகளை வளர்த்தெடுத்தனர்.

ஆட்சி செய்தவர்கள்மேல் கசப்பு உணர்வு பெருகு வதற்குச் சமாதான முயற்சிகளுக்கப்பால் வேறு சில காரணிகளும் தொழிற்பட்டன. அதிகரித்துவந்த வாழ்க்கைச் செலவுகள் காரணமாக மக்கள் அல்லலுடன் அனுபவித்து வந்த நிலைமையினை உணராத நிர்வாக அமைப்பு கொழும்பை மையமாகக் கொண்டியங்கும் பெரு முதலாளிவர்க்கத்தின் பிரதிநிதியாகச் செயற்பட்டமை, மேற்குலக வல்லரசுகளின் அதி விசுவாசியாகத் தன்னைக் காட்டிக் கொண்டமை, நாட்டுப்புற மக்களுடன் அத்தியந்த உறவின்றி அந்நியப்பட்டு நின்றமை போன்றவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம். தேர்தல் பெறுபேறுகள் இன்று இந்நாட்டின் எதிர்காலம் எப்படி அமையுமோ என்ற கேள்விக்குறியுடன் நிற்கின்றன. அரசியல் வானில் ஆரோக்கியமான காலநிலை இல்லையென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். மப்பும் மந்தாரமும் எவ்வேளையிலும் மின்னலும் இடியுமாக முடியலாம்.

இக்காலகட்டத்தில், இந்நாட்டின் சிறுபான்மை இனமக்கள் தமது கலை, கலாசாரத் துறைகளில் ஊறு ஏற்படாதவாறு கவனித்துக்கொள்ள வேண்டும். மாறுபட்ட கருத்தியல்களை ஒதுக்கிவைத்துவிட்டு ஒன்றுதிரண்டு ஓர் அணியில் ஒரு குரலில் ஒலிக்கவேண்டும். தமிழ் பேசும் கலை இலக்கிய வாதிகள் தேசிய ரீதியில் ஓரம் கட்டப்படுவதையும், மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுவதையும் அனுமதிக்கலாகாது. கடந்தகாலங்களில் தமிழ் பேசும் கலைஞர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டமையை சமீபத்தில் ஒரு கலை இலக்கிய அமைப்பு சுட்டிக்காட்டியதை நாம் நினைவுபடுத்த விரும்புகிறோம்.

வருடந்தோறும் தேசிய நாடகவிழா, சிறுவர்நாடகவிழா, குறுநாடக விழா என அரச மட்டத்தில் நாடக விழாக்கள் நடைபெறுகின்றன. ஆனால் 2001ஆம் ஆண்டு நடைபெற வேண்டிய தமிழ் நாடகவிழா 2002ஆம் ஆண்டு நடைபெற்று 2003ஆம் ஆண்டே பரிசளிப்பு நடைபெற்றது. நாடகப் பரிசுத் தேர்வுகளிலும் ஊழல்கள், குளறுபடிகள், மோசடிகள், அரசியல் தலையீடுகள் நடைபெறுவதாக இத்துறையில் சம்பந்தப்பட்டவர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். நலிவுற்ற கலைஞர்களுக்கு ஒதுக்கிய நிதியைக்கூட தமிழ்க்கலைஞர்கள் பெறமுடியாத நிலை இருக்கின்றது. இன்னும் பல கூறலாம்.

கலாசார அமைச்சு நியமிக்கும் தமிழ் இலக்கிய ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட துறைகளில் ஆற்றல் உள்ளவர்களாக இருக்கவேண்டும். ஆலோசனைக் குழுவினரால் ஆண்டுதோறும் அரச விருதுகளுக்கு நூல் களைத் தெரிவு செய்வதற்காக நியமிக்கப்படும் தேர்வுக்குழு உறுப்பினர்களும் சம்பந்தப்பட்ட துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர்களாக இருக்கவேண்டும். இவர்கள் அரசியல்வாதிகளின் தலையீடு இன்றி இயங்க வேண்டும். அரசு, தமிழ்க்கலை கலாசார விவகாரங்களை செவ்வனே கவனித்து, எல்லாவற்றையும் ஒன்றிணைத்து முன்னெடுத்துச் சிறப்புறச் செயற்படவேண்டும். கலை இலக்கியவாதிகளுடன் காலத்துக்குக் காலம் கலந்துரையாடி புதிய செயற்திட்டங் களைத் தீட்டி நடைமுறைப் படுத்தவேண்டும்.

ஒவ்வொரு இனமக்களும் தத்தமது கலை கலாசார மேம்பாட்டினை அடைய வழிவகுத்துக் கொடுக்க வேண்டி யது அரசின் கடமையாகும். அது நாட்டின் ஒவ்வொரு பிரஜை யினதும் பிறப்புரிமையாகும்; மீறப்படுவது மனித உரிமை மீறலாகும்.

ஞானம்–48 (மே 2004)

82



செம்மொழியாகும் தமிழ்

“யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்’ எனப் பாரதி பாடினான். பாரதி பன்மொழி கற்றவன். பலமொழிகளின் சிறப்புகளை அறிந்தவன். தமிழ் மொழியின் தகைமைகளை உற்றுணர்ந்தவன். தெளிந்த சிந்தனையும் தீர்க்கதரிசனமும் கொண்ட பாரதி, தமிழ் மொழிக்கு இத்துணை சிறப்பளித்துக் கூறயமை, வெறும் தாய்மொழிப் பற்றால் அல்ல. உலக மொழிகளை அறிவு பூர்வமாக ஒப்புநோக்கியே கூறினான்.

இன்று உலகில் தமிழ் வழங்குகின்ற மிகப் பெரும் நிலப்பரப்பினை ஒரு மாநிலமாகக் கொண்ட இந்திய உப கண்டத்தில், புதிய அரசின் அங்குரார்ப்பண வைபவத்தில், அரசின் வேலைத்திட்டத்தை வெளியிட்ட ஜனாதிபதி, தமிழ் மொழியைச் செம்மொழியாக்கும் திட்டத் தைப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

ஒரு மொழி செம்மொழியாவதற்கான தகுதிகளாக, அதன் தொன்மை, பொதுமைப் பண்பு, நடுவு நிலைமை, தாய்மை, பண்பாட்டு வெளிப்பாடு, பிறமொழித் தாக்கமற்றதன்மை, இலக்கிய வளம், உயர்சிந்தனை, மொழிவளம் போன்ற காரணிகள் கொள்ளப்படுகின்றபோதிலும், அம்மொழியில் உள்ள இலக்கியங்கள்தான் அடிப்படையாக அமைகின்றன. பண்டைய மொழிகளான கிரேக்கம், லத்தீன், போன்றவை முதலில் செம்மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டமைக்கு அவற்றில் உள்ள இலக்கியங்கள்தான் அடிப்படையாக அமைந்தன.

தமிழ் மொழிக்குச் செம்மொழியாகும் தகைமைகள் இருந்த போதிலும், சர்வதேசரீதியில் மொழி கற்பிக்கப்படும் பல்கலைக்கழகங்களில் குறிப்பாக மேலைத்தேயங்களில் தமிழ்மொழி ஒரு தனித்துறையாக இல்லாது கீழைத்தேய மொழிகளில்- சமஸ்கிருதம் போன்ற மொழிகளுடன்- கிளைத்துறையாகவே இயங்குகிறது. தமிழ் செம்மொழியாகிய பின், அது தனித்துறையாக இயங்கும். ஆய்வுப்பணிகளை ஆய்வாளர்கள் முனைப்போடு மேற்கொள்வர். இதுவரை வெளிப்படாத தகவல்கள், ஆராய்ச்சிகள், முடிவுகள் வெளிக்கொணரப்படும். தமிழ் மொழியின் கலை இலக்கியப் பண்பாட்டு வளர்ச்சிக்கும் ஆய்வுக்கும் 'யுனெஸ்கோ' போன்ற பன்னாட்டு அமைப்புக்கள் ஆவனசெய்யும். செம்மொழி என்ற வகையில் தமிழ்ப் படைப்புக்கள் உலக மொழிகளில் பெயர்க்கப்படும் வாய்ப்புகள் பெருகும்.

தமிழகத்திலும் உலகளாவிய ரீதியிலும் ஆரவாரமின்றி அர்ப்பணிப்போடு தமிழ்வளர்க்கும் பேரறிவாளர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த அங்கீகாரம் ஒரு உந்துசக்தியாக அமையும். ஈழத்தமிழர்கள் பலர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியிருக்கிறார்கள். ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, விபுலானந்த அடிகள் போன்றோரும் இன்னும் பலரும் தமிழ் செம் மொழியாகத் திரண்டுவர வளம் சேர்த்தவர்கள். தமிழை

உலகத்தமிழாக்கி, உலக மொழிகளின் புலமை மரபுகளுடன் தொடர்புபடுத்தி ஆய்வு முயற்சிகளுக்கு அளப்பரிய பணி புரிந்தவர் தனிநாயகம் அடிகள். இன்று நம்நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் அபிமானிகள் பலர் தமிழ்த் தூதுவர்களாக விளங்குகின்றனர். செம்மொழி ஆக்கச் செயற்பாட்டிற்கு இத்தூதுவர்களின் பங்கும் பணியும் அளப்பரியன. நவீன உலகில் அறிவியல் துறை பெருவளர்ச்சிகண்டுள்ள இக்காலகட்டத்தில், கலைச் சொற்கள் ஆக்கம் பற்றிய செயற்பாடுகளில் ஈழம்தான் இன்று முன்னணியில் இருக்கிறது.

செம்மொழித் தகைமை பெறும் தமிழியல் புதிய பரிமாணச் செழுமை பெறவேண்டும். இன்று இணையத்தின் மூலம் உலகளாவிய ரீதியில் தமிழ்படிக்கலாம். தமிழுக்குச் சேவை செய்யலாம். அறிவியல், தொழில் நுட்பம், தகவல்-கணினித் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் தமிழியல் வளர்ச்சி பெறவேண்டும். காலத்துக்கு ஏற்ற வகையில் சர்வதேசச் சிந்தனை நமது மொழியினூடாக வளர்த்தெடுக்கப் படவேண்டும்.

இவற்றையெல்லாம் செயல்வடிவமாக்கத் தமிழ் அறிஞர்கள், கல்விமான்கள், கலை இலக்கியவாதிகள் யாவரும் முனைப்புடன் செயற்பட்டுத் தமிழை உலக தரத்துக்கு உயர்த்தவேண்டும் என ஞானம் வேண்டுதல் செய்கிறது.

ஞானம்–51 (ஆகஸ்ட் 2004)

83

கொழும்புக் கம்பன் கழகத்தினரின் இசைவேள்வி

கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்க்கும் கம்பன் கழகத்தினர் கடந்த சில ஆண்டுகளாக இயல், இசை, நாடகம் என்னும் தமிழின் முப்பிரிவுகளுக்கும் தனித்தனியாகத் தலை நகரிலே விழாவெடுத்துச் சிறப்பித்து வருகின் றனர். இவ்விழாக்கள் ஒவ்வொரு ஆண் டிலும் முன்னைய ஆண்டுகளைவிட ஒரு படி மேலாக அமைவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

முன்னரெல்லாம் கர்நாடக இசையில் மூழ்கித் திளைப்பதற்கு இசைப்பிரியர்கள் தமிழகத்தை நோக்கிப் படையெடுப்பர். அத்த கைய நிலைமையை மாற்றி தமிழக இசை ஜாம்ப வான்களை நமது நாட்டுக்கு அழைத்து வந்து இசைமழை பொழிய வைத்து, தமிழ்நாடு செல்ல வசதியற்ற இசைப்பிரியர்களையும் ஏனையோரையும் இசையிலே திளைக்கும் வகைசெய்து வருகின்றனர் கம்பன் கழகத்தினர். இவ்வாண்டு நடைபெற்ற இசைவிழாவில் தமிழ்

நாட்டிலிருந்து ஸ்ரீமதி. சுதா ரகுநாதன், ஸ்ரீமதி குலபூஷணி கல்யாணராமன், நெய்வேலி ஆர். சந்தானகோபாலன். ரி.வி. சங்கரநாராயணன், திருச்சூர் வி. இராமச்சந்திரன், ஸ்ரீமதி. பம்பாய் ஜெயஸ்ரீ, திரு. ஓ.எஸ். தியாகராஜன், மதுரை ரி.என்.சேஷகோபாலன் ஆகியோர் தத்தமக்கே உரிய தனித்தன்மையுடன் தமது வித்துவத்தை வெளிக்காட்டினர். வயலின் வித்துவான் ராகவேந்திரராவ், மிருதங்க வித்துவான் நெய்வேலி எஸ். ஸ்கந்த சுப்பிரமணியன் ஆகியோர் இவர்களது கச்சேரிகளுக்கு மெருகூட்டி சபையோரின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றனர்.

நம் நாட்டு இளங்கலைஞர்களும் தாம் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபித்தனர்.

இன்று நம் இளம் சந்ததியினர் மேலைநாட்டு இசைகளினால் கவரப்படுவதற்கு கர்நாடக இசை பற்றிய போதிய அறிவும் ஈர்ப்பும் இல்லாமையையே காரணமாகக் கொள்ளலாம். கம்பன் கழகத்தினரின் இசைவிழா கர்நாடக இசையின் சிறப்பையும் பெருமையையும் அதன் வல்லபத்தையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்தது. 'சங்கீத மும்மூர்த்திகளென தியாகராஜையர், முத்துச்சாமிதீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகியோர் கர்நாடக இசைப் பிரியர்களால் போற்றப்படுவர். கர்நாடக இசை தமிழ்மொழி மூலமே தோற்றம் பெற்றது. தேவார முதலிகளே முதன் முதலில் கர்நாடகப் பண்களிலே தமிழோடு இசை பாடினார்கள். பழந்தமிழ் இசையில் வழங்கிய 106 பண்களின் தோற்றத்தினையும் தேவாரத்தின் பண்களையும் சுவாமி விபுலானந்தர் தமது யாழ்நூலிலே விளக்கியுள்ளார். இசை இறைவனை, மனிதனை, விலங்குகளை மட்டுமன்றி இயற்கையையும் வசப்படுத்த வல்லது. இசை மனிதனுக்கு மனச்சாந்தி தருவது. இசையைக் கேட்பதினால் சில நோய்கள் கட்டுப்பாட்டுக்குள் வருகின்றன. இன்று புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களாலேயே கர்நாடக இசை உலகளாவிய ரீதியில் வியாபகம் பெறுகிறது' போன்ற இன்னோரன்ன கருத்துக்கள் அவ்வப்போது தொடக்கவுரை நிகழ்த்திய அறிஞர்களால் எடுத்தியம்பப்பெற்றன.

வடபுலத்தில், 50களில் ரசிகரஞ்சனசபாவும், 70களை ஒட்டிய காலப்பகுதியில் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம், இளங்கலைஞர் மன்றம் ஆகியனவும் ஆற்றிய இசைப்பணிகள் குறிப்பிடத்தக்கவை. அக்காலகட்டத்தில் நம்நாட்டு இசைக்கலைஞர்கள் சிலர் தமிழகம் சென்று இசைக் கச்சேரிகள் செய்து அங்குள்ளோரின் பாராட்டைப் பெறும் தகைமை பெற்றிருந்தனர். இன்று நமது நாட்டில் இராமநாதன் இசைக்கல்லூரி, விபுலாநந்தர் இசைக்கல்லூரி, பல்கலைக்கழகங்களின் நுண்கலைத் துறைகள் உருவாக்கும் இசைப்பட்டதாரிகளால் உருப்படியான கச்சேரி செய்ய முடிவதில்லை. அவர்கள் பெறுவது வெறும் ஏட்டுக் கல்வியாகவே முடிந்துவிடுகிறது. அத்தோடு இந்நிறு வனங்கள் ஆற்றிவரும் இசைப்பணியென்பது 'தமக்குள் தாம்' என்பதாகவே அமைந்துவிடுகிறது. பொதுமக்களைச் சென்று சேர்வதில்லை. அரசசார்பற்ற நிறுவனங்கள் சில பணத்தினை முதன்மைப்படுத்தியே இசைப்பணியாற்று கின்றன. இவ்வகையில் கம்பன் கழகத்தினர் இலவ சமாக மக்கள் அனைவரும் பயனடையத்தக்கவகையில் பணியாற்றுவது போற்றுதற்குரியதாகும். இராமநாதன் இசைக்கல்லூரி, விபுலானந்தர் இசைக்கல்லூரி முதலி யனவும் பல்கலைக்கழகங்களின் நுண்கலைத் துறைகளும் தமிழ்நாட்டு இசைமேதைகளிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பலவிடயங்கள் இருக்கின்றன. காலத்துக்கு காலம் தமிழ்நாட்டிலிருந்து இசைமேதைகளை வரவழைத்து கருத்தரங்குகள் நடத்தியும் அளிக்கைகள் மூலமும் நமது நாட்டின் இசைத்தரத்தினை மேம்படுத்திக் கொள்ளவேண்டிய தேவையை கம்பன் விழாவில் மதுரை ரி.என்.சேஷகோபாலன் ஆற்றிய சிறப்புரை உணரவைத்தது. 'சங்கீத சாகரம்' என்ற தலைப்பிலான அவரது உரையும் அதனைத் தொடர்ந்து நிகழந்த - ஐயம் தெளிதல் நிகழ்வும் சங்கீத மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், நம்நாட்டு இசைக்கலைஞர்களுக்கும் மிகவும் பயனுடையதாக அமைந்தன.

எட்டு நாட்களாக நடந்த இசைவிழாவில் கலந்து கொண்ட அத்தனை கலைஞர்களுக்கும் அவர்களது குழுவினருக்கும் பயண ஏற்பாடுகள், தங்குமிட வசதி, உணவு, ஏனையவசதிகள் ஆகியவற்றைக் கவனித்ததோடு பல்லாயிரக் கணக்கான இசைரசிகர்களின் வசதிகளையும் கவனித்து உரிய நேரத்தில் நேரக்கட்டுப்பாட்டுடன் விழாவினைத் திறம்பட நடத்திமுடித்த கம்பன் கழகத்தினரின் செயல்திறன் பிரமிப்பை ஏற்படுத்துகிறது. அதற்காக அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். கம்பன் கழகம் ஒன்றுதான் நமது நாட்டில் இத்தகைய பணியினை பாரிய அளவில் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. கம்பன் கழகத்தினர் அனைவரையும் ஞானம் பாராட்டுவதோடு மென்மேலும் அவர்களது பணிசிறக்க வாழ்த்துகிறது.

ஞானம் 55 (டிசம்பர் 2004)

84



எழுத்து, பதிப்பு, விநியோகம்.

இலங்கையில் ஆக்க இலக்கியத்துறை விரிவு கண்டுள்ளது. வாரந்தோறும் வெளிவரும் நூல்களும் அவற்றிற்கான வெளியீட்டு விழாக்களும் இதனை உறுதிசெய்கின்றன. ஒவ்வொரு வாரமும் நாட்டின் எங்கோ ஒரு பகுதியிலாவது நூல் வெளியீடுகள் நடந்த வண்ணம் இருக்கின்றன. பதிப்புத் துறையும் வளர்ச்சி கண்டுள்ளது. வெளிவரும் நூல்கள் பலவும் சிறந்த முறையிலே அச்சிட்டு வெளியிடப் படுகின்றன. ஆனால் இந்நூல்களின் விநியோக முறையானது படுமோசமான நிலையிலேயே உள்ளது. இதுகுறித்து கடந்த பலவருட காலமாகப் பலரும் பலசந்தர்ப்பங்களில் கூடிக்கதைத்த போதும் உருப்படியான எந்தவிதச் செயற் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப் படவில்லை. அவை எல்லாம் ஆண்டிகள்கூடி மடம் கட்டிய கதையாய்ப் போயின.

படைத்தல், பதிப்பித்தல், விநியோகித்தல் ஆகிய மூன்று செயற்பாடுகளும் கைகோர்த்த

நிலையில் முன்செல்லவில்லை யென்றால் குறித்த படைப்பினால் சமூகத்திற்கு எவ்விதப் பயனுமில்லை. படைப்பின் நோக்கமும் நிறைவேறப் போவதில்லை. படைப்பினால் ஒரு சமூகம் அடைகின்ற பயன் விழலுக்கிறைத்த நீராகிவிடுகின்றது. எழுத்தாளனும் சோர்ந்துவிடுகிறான். எனவே இதுகுறித்த விழிப்புணர்வும் திட்டமிடுதலும் அவசியமாகின்றன.

ஆக்க இலக்கியத்தைப் படைப்பது எழுத்தாளனின் தனி முயற்சி. இன்றைய பதிப்பு முறையும் எழுத்தாளனின் எண்பது சதவீத தனிமுயற்சியாகவே இருக்கிறது. விநியோகத்தின் நிலையும் அதுவே. ஒருபடைப்பாளியின் நீண்டகால முயற்சி வெளியீட்டு விழாவில் அதனை விநியோகம் செய்வதோடு முடிவடைந்து நூல்களின் பெரும்பகுதி வீட்டிற்குள் முடங்கிவிடும் நிலையே இன்று காணப்படுகிறது. இதில் விசித்திரம் என்னவென்றால், இன்று விழுந்தடித்துக்கொண்டு இலங்கை எழுத்தாளர்களின் நூல்களை வெளியிடும் இந்தியப் பதிப்பகங்கள் நூல்வெளியீட்டு விழாக்களைத் தாமே நடத்தி விழாக்களில் வெளியிடும் சிறப்புப் பிரதிகளின் வருமானத்தைக்கூட உரிய படைப்பாளிகளுக்கு வழங்காமல் தாமே எடுத்துச் செல்லும் பரிதாபத்துக்குரிய நிலையைக் காண்கிறோம். அத்தோடு இந்த வெளியீட்டாளர்கள் அந்நூல்களைத் தாமே உள்ளூரிலும் விநியோகம் செய்து படைப்பாளிகள் தமது நூலை உள்ளூரில் விற்பனை செய்து முதலீட்டின் ஒரு பகுதியையாவது பெறக்கூடிய சந்தர்ப்பத்தையும் இழக்கச்செய்து விடுகின்றனர் எனவும் எழுத்தாளர்கள் குமுறுகின்றனர். ஆனாலும் இந்த இந்தியப் பதிப்பகத்தினர் குறைந்த செலவிலே நூல்களைத் தரமாக வெளிக் கொணர்கிறார்கள் என்பதும் மறுப்பதற்கில்லை. அத்தோடு அச்சுக்கூடத்தை நோக்கி அல்லும்பகலும் அலைய வேண்டிய கஷ்டமும் எழுத்தாளனுக்கு ஏற்படுவதில்லை. இவர்களால் பதிப்பிக்கப்படும் நூல்கள் இந்தியாவிலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் நாடுகளிலும் விநியோகம் பெறுகின்றன என்பதும் இன்னுமோர் சாதகமான விடயம்.

எது எவ்வாறாக இருப்பினும் இந்தியப் பதிப்பாளர்களுக்கு எதிராக வெறுமனே உணர்ச்சிகரமாகப் பேசுவதிலும் எழுதுவதிலும் வெற்று வேட்டுக்களைத் தீர்ப்பதிலும் எவ்வித பயனுமில்லை. இப்படிப் பேசுபவர்களால் எவ்விதமான மாற்றுத் திட்டங்களையும் தரமுடிவதில்லை. மாற்றுத் திட்டம் தேவை என்பது எல்லோருக்கும் புரிகிறது. திட்டம் எப்படி இருக்கவேண்டும் என்பதுதான் மூன்று தசாப்தங்களுக்கு மேலாகப் புரியாத புதிராக இருக்கிறது. பிரச்சினையின் ஆணிவேர், விநியோகம் எவ்வாறு பரந்துபட அமைய வேண்டும் என்பதுதான்.

செயற்திறன்மிக்க ஒரு விநியோகஸ்தர் குறைந்தது ஒரு நூலின் இருநூற்றைம்பது பிரதிகளையாவது விற்பனைக் கழிவுடன் எழுத்தாளரிடம் பெற்று அதற்குரிய பணத்தை மூன்று மாதத்திற்குள் எழுத்தாளருக்குக் (பதிப்பாளருக்கல்ல) கொடுக்க முன்வருவாரானால் அது ஓர் ஆக்கபூர்வமான செயற்பாடாக அமையலாம்.

எமது திட்டங்களும் நடைமுறைகளும் எமது படைப்பாளி களுக்கு ஆக்கபூர்வமான வழிசமைப்பவையாக இருந்தால், அவர்கள் வேறெங்கும் தாவிக்கொண்டு ஓடமாட்டார்கள். இது குறித்துத் தீவிரமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டிய காலத்தின் நிர்ப்பந்தம் இப்போது ஏற்பட்டுள்ளது என்பதனை அழுத்திக் கூறவிரும்புகிறோம்.

ஞானம் 59 (ஏப்ரல் 2005)

புரிதல்

- சென்ற இதழில் (ஏப்ரல் 2005)வெளியான 'எழுத்து பதிப்பு விநியோகம்' என்ற ஆசிரியர் தலையங்கம் பிழையானது. நீங்கள் வெளியீட்டாளர் சார்பாக நின்று இதனை நோக்கியுள்ளீர்கள். படைப்பாளியின் நிலையில் நின்று பார்த்தால் இந்தியப் பதிப்பாளர் செய்யும் நன்மைகள் புரியும். ஒரு படைப்பாளிக்குத் தேவையானது அவனது நூல் குறைந்த செலவில் சிறந்த முறையில் நூலுருவம் பெறவேண்டும் பரந்த அளவில் விநியோகம் பெறவேண்டும். அச்சுவாகனம் ஏற்றுவதில் சிரமங்கள் இழுத்தடிப்புகள் இருக்கக்கூடாது. இவையாவற்றையும் இந்தியப் பதிப்பாளர்கள் சிறப்பாக நிறைவேற்றுகின்றார்கள். இதனாலேதான் இன்று பெரும்படைப்பாளிகள், விமர்சகர்கள்கூட இந்தியப் பதிப்பாளர்களை நாடுகின்றனர். ஒரே மேடையில் இருபதுக்கும் மேற்பட்ட ஈழத்தவர்களின் நூல்கள் வெளியாகின்றன. இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளுங்கள்.

  – ந. சுந்தரமூர்த்தி, கொழும்பு.

- 59வது இதழ் (ஏப்ரல் 2005) பலவகைப்பட்ட விடயங்களை உள்வாங்கிக் கனதியுடன் பூத்துக் குலுங்குகின்றது. 'எழுத்து, பதிப்பு, விநியோகம்' என்று தலையங்கத்தின்கீழ் ஆசிரிய தலையங்கம் தீட்டியிருப்பது மனங்கொள்ளக் கூடியதாக இருந்தாலும், நடைமுறைச் சாத்தியமான விடயமாக வியாபாரச் சந்தையில் எடுபடுமா? என்பது கேள்விக் குறியாகவே நிற்கின்றது

  –அனவரதரூபன்

- 'ஞானம்' 59 ஆவது இதழ் ஆசிரியத் தலையங்கம் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளது. படைப்பாளிகள் தமது நூலைப் பதிப்பிலும் விநியோகிப்பதிலும் எதிர்நோக்கும் இடர்ப் பாடுகளைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளீர்கள்.

  ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களைப் பொறுத்தவரை நூல்களைச் சந்தைப் படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள் என்பதைத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளீர்கள்.

  சந்தைப்படுத்தல் தொடர்பான எனது அனுபவங்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

  வவுனியாவிலுள்ள ஒரு புத்தகசாலைக்கு எனது பண்டாரவன்னியன் நூற் பிரதிகளைக் கொண்டு சென்றேன். இந்த நாடக நூல் இலங்கையில் மட்டுமன்றி ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலிய நாடுகளில் கூடப் பிரபல்யமானது. புத்தகசாலை நிர்வாகி புத்தகத்தைக் கையில் ஏந்தினார்.

அதன் எடையை கணிப்பது போலக் கையை அசைத்தார். “புத்தகம் சிறிதாக இருக்கிறது நூறு ரூபா விலை போட்டிருக்கிறீர்கள். விலைப்படாது” என்றார். ஒன்றும் பேசாமலே திரும்பி விட்டேன்.

புத்தகசாலைகள் புதிதாக வரும் நூல்களைக் காட்சிக்கு வைப்பதில்லை. எங்கோ ஒரு மூலையில் வைத்துவிடுவார்கள்.

மேலே குறிப்பிட்டதைப் போன்ற அனுபவம் ஏனைய எழுத்தாளருக்கும் இருக்கும் என்று நினைக்கிறேன். இந்த நிலையிலும் எழுத்தாளர்கள் சொந்த முதல் போட்டுப் புத்தகங்களை வெளியிட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஒருவர் சொன்னார் நாங்கள் குழந்தைகளைப் பெற்று வளர்க்கும்போது கணக்குப் பார்ப்பதில்லை. வெளியிடும் புத்தகங்களும் எங்களுக்குக் குழந்தைகள்தான். இதனால் லாபநட்டக் கணக்கு பார்க்கக் கூடாது.

– முல்லைமணி, வவுனியா. (ஞானம் 61 ஜுன் 2005)

✦ அனுபவமும், திறமையும் வாய்ந்த எழுத்தாளர் முல்லைமணி இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களுடைய நூல்களின் விற்பனை தொடர்பாக மிகவும் தெளிவானதும் துயரமானதுமான கதையை சொல்லியிருக்கிறார். (ஞானம்-61)

தமிழ்நாட்டுப் பதிப்பகங்கள் கனகச்சிதமாக விற்பனை எனும் விடயத்தை செய்து வருகின்றன என்பதில் சந்தேகமேயில்லை. தமிழ்நாடு அரசு நூலகங்களுக்காகக் கொள்வனவு செய்யும் 600 நூல்கள் பதிப்பகக்காரரின் செலவு சித்தாயம் எல்லாம் தாண்டி பெரிய லாபத்தை பெற்றுக் கொடுக்கக் கூடிய ஒரு தொழிலாகவே மாறிவருகிறது.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு பதிப்பகங்களும் தினமும் நூல்களை எழுத்தாளர்களிடம் பணம் வாங்காமல் பிரதிகளை மட்டும் வாங்கி அச்சுப் பதித்து வெளியிடுகின்றன.

ஒரு நூல் உதாரணத்துக்கு 150ரூபா எனில் 90,000 ரூபாக்கள் இந்தியப் பணத்தில் பதிப்பாளருக்கு கிடைக்கின்றன.

நூலகங்களுக்கு அனுப்பக்கூடியவர்களுடைய தரமான நூல்களையே தமிழ்நாட்டு பதிப்பகங்கள் பதிப்பிக்கின்றன. தாராளமான லாபமும் அடைகின்றன. இதில் கணிசமான தொகையை எழுத்தாளர்களுக்கும் கொடுக்கின்றன.

இலங்கை எழுத்தாளர்களுடைய பிரதிகளையும் தமிழ்நாட்டு பதிப்பகங்கள் நூலகங்களுக்கு அனுப்பி தாராளமாகப் பணம் சம்பாதிக்கின்றன. ஆகவே சிறிய முதலில் அதிகமான லாபத்தை தமிழ்நாடு பதிப்பகங்கள் பெற்று வருகின்றன.

இலங்கை எழுத்தாளர்களிடம் இருந்து மணிமேகலை போன்ற பிரசுரங்கள் ஏன் 25,000/= பணம் வாங்குகின்றன என்று புரியவில்லை. உண்மையில் அவர்கள் எழுத்தாளருக்கு பணம் கொடுக்கும் பழக்கத்தை பழக்க வேண்டும். எழுத்தாளர்களிடம் பணமும் வாங்கி அவர்களுக்கு புத்தகங்கள் சரியாக வழங்கப்படுவதில்லை என்ற குறையும் அரசல் புரசலாக வருகிறது.

இலங்கை எழுத்தாளர்கள் தமது சொந்த செலவில் புத்தகங்களை அச்சடித்து வெளியிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் வெளியீட்டு விழாக்களோடு மட்டும் திருப்திப்பட்டு விடுகிறார்கள். ஏன் இலங்கையில் விநியோகம் செய்ய முடியாமல் இருக்கிறது என்பதனைப்பற்றியோ அல்லது எங்கெல்லாம் கொடுக்கலாம் விற்கலாம் என்பதனைப் பற்றியோ அறிந்தவர்கள் தெரிந்தவர்கள் எமது வாரப் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் தொடர்ச்சியாக விளங்கப்படுத்தினால் நல்லது.

நுகர்வோரை ஊக்குவிக்க விளம்பரங்களைக் குறைந்த செலவில் பிரசுரிக்க எமது வாராந்த பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் முன்வரவேண்டும்.

– இளைய அப்துல்லாஹ்

ஞானம் 63, (ஆகஸ்ட் 2005)

85

பவளவிழாக்காணும் வீரகேசரி

ஈழத்தின் முதலாவது நாளிதலான வீரகேசரி 1930ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6ஆம் திகதி வெளிவரத் தொடங்கியது. தமிழ்நாடு ஆவணிப் பட்டியைச் சேர்ந்த திரு பெரி. சுப்பிர மணியம் செட்டியார் அவர்களால் ஆரம்பிக்கப் பட்ட வீரகேசரி கொழும்பு செட்டியார் தெரு 196 ஆம் இலக்கத்திலிருந்து முதலில் வெளிவந்தது.

வீரகேசரி தோன்றுவதற்கான எண்ணக் கரு செட்டியார் மனதில் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தது காந்திஜியின் இலங்கை விஜயமாகும். 1927இல் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காந்திஜி, ராஜாஜி, சத்தியமூர்த்தி ஆகியோர் இலங்கைக்கு வந்திருந்தனர். அவர்களுக்கு ஜிந்துப்பிட்டியில் மாபெரும் வரவேற்புவிழா நடைபெற்றது. அந்த விழா தொடர்பான நிகழ்ச்சிகளை வெளியிடுவதற்கு அப்போது நாளேடுகள் எதுவும் இருக்கவில்லை. அப்போது ஆங்கிலப் பத்திரிகைகளும், நடேசையரின் தேசபக்தன் உள்ளிட்ட சில வாரப்பத்திரிகை

களுமே வெளிவந்து கொண்டிருந்தன. அவை காந்திஜியின் வரவேற்புவிழா நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகளை முக்கியத்துவம் கொடுத்து வெளியிடவில்லை என்ற மனக்குறை சுப்பிரமணியம் செட்டியாருக்கு ஏற்பட்டது. அவர் தனது ஆப்த நண்பரான திரு. எச். நல்லையாவுடன் கலந்தாலோசித்து ஒரு நாளிதழைத் தொடங்கத் திட்டமிட்டார். அவரது எண்ணம் மூன்று வருடங்கள் கழிந்தே செயலாக்கம் பெற்றது.

வீரகேசரியின் முதலாவது தலையங்கத்தில் செட்டியார் பின்வருமாறு எழுதியிருந்தார்: 'தன்னால் இயன்றளவு பொதுமக்களுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்ற அவாவினால் தூண்டப்பட்டே வீரகேசரி தோன்றுகிறான். அசாத்தியமான காரியங்களைச் செய்துமுடிக்கும் திறன் படைத்தவன் என்று அவன் வீறு பேசத்தயாராக இல்லை. நியாய வரம்பை எட்டுணையும் மீறாமல், நடுநிலையில் இருந்து, உலகத்தின் முன்னேற்றத்துக்கான இயக்கங்களையும் பிரச்சினைகளையும் பரிவுடன் ஆராய்ந்து பொதுமக்கள் கருத்தை நல்ல முறையில் உருவகப்படுத்த வேண்டும் என்பதையே வீரகேசரி தன் முதல் கடனாகக் கொண்டுள்ளான்.

தாராள சிந்தனையும், பரந்த நோக்கும் சமரச உணர்வும் பெற்ற வீரகேசரி சாதி சமயச் சண்டைகளில் கலந்து கொள்ள மாட்டான். நியாயமே அவன் வீற்றிருக்கும் பீடம். அவனது கருத்துக்கள் நியாயத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கும். மிகப் பெரிய பொறுப்பைத் தாங்கிக் கொண்டு உயர்ந்த நோக்குடன் வெளிவரும் வீரகேசரி தமிழ் மக்களின் அன்பையும் ஆதரவையும் நாடுகிறான்'.

சில வருடங்களிலேயே வீரகேசரி பெருவளர்ச்சி கண்டு தற்போதுள்ள கிராண்ட்பாஸ் தெரு 185ஆம் இலக்கத்தில் உள்ள கட்டிடத்துக்கு மாற்றப்பட்டது. அது ஜே.ஆர். ஜெயவர்தன குடும்பத்துக்குச் சொந்தமானது. ஜே.ஆர். பிறந்த இடம்கூட அதுதான் எனக் கூறப்படுகிறது.

வீரகேசரியின் வரலாறு, இலங்கைவாழ் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றோடு பின்னிப்பிணைந்தது.

ஆரம்பத்தில் இந்தியர்களின் நாளேடு என்ற கருத்துடன் வெளிவந்த வீரகேசரி, இன்று இலங்கைவாழ் தமிழ்மக்கள் அனைவரின் உரிமைக்குரலாக மட்டுமல்லாமல் தேசிய நலன்காக்கும் தினசரியாகவும் உயர்ந்துள்ளது. செய்திகளைத் தருவதுமட்டுமன்றி கலை, இலக்கிய விடயங்களையும் பண்பாட்டு அம்சங்களையும் தரும் இதழாக வீரகேசரி தனது சுவடுகளைப் பதித்துள்ளது.

சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் எனப் பலதிறத்தினருக்கும் பயன்பெறும்வகையில் பல்வேறு இணைப்பிதழ்களையும் வீரகேசரி வெளியிட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சிக்கு வீரகேசரி ஆற்றிய பங்கு மகத்தானதாகும். எழுத்தாளர்கள் பலருக்குக் களம் அமைத்துக் கொடுத்ததுடன் எழுத்தாளர் பலர் உருவாகு வதற்கும் வீரகேசரி காரணமாக அமைந்தது. குறிப்பாக நான்கு மலையகச் சிறுகதைப் போட்டிகளை நடத்தி மலையக எழுத்தாளர்கள் நாற்பதுபேர்வரை ஈழத்து இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தியதுடன் பலபேரை எழுத்து உலகில் ஆர்வம் கொள்ளச் செய்யவும் வைத்தது. இப்பணியில் முன்னர் உதவி ஆசிரியராக இருந்த திரு.எஸ். எம். கார்மேகம் நினைவுகூரப் படவேண்டியவர். அதேபோன்று வீரகேசரி வாரவெளியீட்டின் பொறுப்பாசிரியராக நீண்டகாலம் பணியாற்றிய திரு. பொன் இராஜகோபால் அவர்களும் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் எழுத்தாளர்களை இனங்கண்டு வீரகேசரியினூடாக வளர்த்தெடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழத்து நாவல் இலக்கிய வளர்ச்சிக்கு வீரகேசரி ஆற்றியபணி ஈடிணையற்றது. மாதம் ஒரு நாவல் என்ற முறையில் பல நாவல்களை வெளியிட்டு பல நாவல் ஆசிரியர்களை உருவாக்கியதுடன், பிரதேச நாவல் இலக்கியப் போட்டியை ஏற்படுத்தி ஈழத்தின் பல்வேறு

பிரதேசங்களையும் இலக்கிய வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த பெருமையையும் வீரகேசரியையே சாரும். ஈழத்தின் தரமான நாவல்கள் வீரகேசரிப் பிரசுரங்களாகவே வந்தன என்பது குறிப்பிடத்தக்கது. நாவல் பிரசுரமுயற்சியில் முன்னின்று உழைத்த திரு. எஸ். பாலச்சந்திரனின் பணியும் முக்கியத்துவம் வாய்ந்தது.

எதிர்வரும் காலத்திலும் வீரகேசரி ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்ற வேண்டும். அத்தோடு இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களின் நலன்களுக்காகவும் பயன் மிக்க சேவையாற்ற வேண்டும் என ஞானம் வாழ்த்துகிறது.

ஞானம்–64 (செப்டெம்பர் 2005)

86

சர்வதேசப் புத்தகக் கண்காட்சி –2005 ஈழத்து இலக்கிய நூல்களின் விநியோகம் பற்றிய ஒரு விசாரம்

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் கடந்த செப்டெம்பர் 10ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை ஒன்பது நாட்கள் சர்வதேசப் புத்தகக் கண்காட்சி நடைபெற்றது.

பிரமாண்டமான முறையில் நடைபெற்ற இக்கண்காட்சியில் 500க்கும் மேற்பட்ட புத்தக வெளியீட்டாளர்களும் இலக்கியவாதிகளும் பலநாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி இவ்வைபவத்தில் கலந்து கொண்டார்கள். இதில் 36 வெளிநாட்டுப் புத்தக வெளியீட்டாளர்களும் அடங்குவர்.

சர்வதேசப் புத்தகக் கண்காட்சியின் முதலாவது ஆண்டு நிகழ்வு 1999இல் இலங்கையில் நடைபெற்றபோது 30 புத்தக நிலையங்கள் இருந்தன. ஆனால் இவ்வருடம் 382 நிலை

யங்கள் கலந்துகொண்டன. ஏழாவது வருடமாக இக்கண்காட்சி இங்கு நடைபெற்றது.

யாழ்ப்பாணம் தொட்டு தெவுந்தரமுனை வரையில் பரந்துவாழும் மக்கள் இக் கண்காட்சியில் கலந்து நூல்களைக் கொள்வனவு செய்தது சிறப்பு நிகழ்ச்சி. இந்நிகழ்வு ஒரு புத்தகக் கண்காட்சி மட்டுமன்றி தேசிய நிகழ்வாகவும் அமைந்தது. சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்ற மொழிவேறுபாடின்றி நாடளாவிய/ சர்வதேச மட்டத்தில் குறைந்த விலைகளில் நூல்களைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தது.

மண்டப வாசலில் நெருக்கடி காணப்பட்டதால் உள்ளே செல்பவர்களை கியூவரிசையில் நிற்கவைத்துப் பகுதிபகுதியாக அனுப்பிக் கொண்டிருந்தார்கள். உள்ளேயும் சனநெரிசல் அதிகமாக இருந்தது.

நூல்களை வாங்குவதற்கு இவ்வளவு கூட்டமா? வாசிப்புக் கலாசாரம் நமது நாட்டில் அதிகரித்து விட்டதா? என்றெல்லாம் எண்ணத்தோன்றியது.

தமிழ்ப் புத்தக நிலையங்களிலும் அதிக கூட்டம் காணப்பட்டது. பூபாலசிங்கம் புத்தகசாலை விற்பனை நிலையத்தில் ஈழத்து நாவல்கள் சிறுகதை நூல்களுக்கெனத் தனியான ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது, பார்ப்பதற்கு மகிழ்ச்சியைத் தந்தது. ஆனால் நூல் விற்பனையாளர்களிடம் பேச்சுக் கொடுத்தபோது அங்கு வருபவர்கள் பாடசாலைப் புத்தகங்களையும் பயிற்சிக் கொப்பிகளையும் படிப்புடன் தொடர்பான நூல்களையுமே வாங்குகின்றனர் என்ற செய்தி கிடைத்தது.

தற்போது அநேகமான பாடசாலைகளில் நூல்நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. அந்நூல் நிலையங்களில் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்வதற்கு ஏற்ற நூல்களை இடம்பெறச் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இலக்கிய நூல்களும் பெருமளவில் இங்கு விற்பனையாகும் என்ற எதிர்பார்ப்பு பலரிடம் இருந்தது.

பாடசாலைகள் இலக்கிய அபிவிருத்தி நூலகப் பிரிவு அமைச்சின் பணிப்பாளர் திரு. குருப்பு ஆராச்சி கருத்துத் தெரிவிக்கையில் ஒவ்வொரு பாடசாலைகளின் வாசிகசாலை நிர்வாகசபை உறுப்பினர்களும் இங்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பாடசாலைகளுக்கு உகந்த தரமான நூல் களைத் தெரிவுசெய்வார்கள் என்று கூறினார்.

பாடப் புத்தகங்களையும் பயிற்சிக் கொப்பிகளையும் வாங்குவதற்கு நாட்டின் நாலாபுறப் பாடசாலைகளிலிருந்தும் ஆசிரியர்களும் மாணவர்களும் இங்குதான் வரவேண்டுமா!

முன்பெல்லாம், கல்வி அமைச்சு எழுத்தாளர்களிடம் இருந்து நூல்களைப் பெற்று பாடசாலைகளுக்கு விநியோ கிக்கும் முறை இருந்தது. தற்போது அது நடைமுறையில் இல்லை. பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலைக்கு வேண்டிய நூல்களைக் கொள்வனவு செய்துவிட்டு அதற்குரிய ரசீதினை கல்வி அமைச்சிடம் சமர்ப்பித்தால் அதற்கான கொடுப்பனவுகள் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப் படுகின்றன.

பாடசாலைகளில் இருக்கும் நூல்களின் பட்டியல் தெரியவில்லை. பாடசாலைகளுக்கு என்ன நூல்கள் தேவைப்படுகின்றன என்பதும் தெரியவில்லை. எனவேதான் மேற்குறிப்பிட்ட தற்போதைய நடைமுறை பேணப்படுகிறது என்று அறியக்கூடியதாக இருக்கிறது.

பெரும்பாலான பாடசாலை அதிபர்களுக்கு இலக்கிய உணர்வோ இலக்கிய நூல்கள்பற்றிய அறிவோ இருப்பதாகத் தெரியவில்லை.

அவர்கள் தமது பாடசாலையின் பரீட்சைப் பெறுபேறுகளை மேம்படுத்தக்கூடிய நூல்களையே கொள்வனவு செய்வதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கல்வி உயர்கல்வி அமைச்சு முன்னைய காலங்களில் செய்ததுபோன்று ஒவ்வொரு வருடமும் வெளிவரும் சிறந்த நூல்களை ஒரு குழுவின் மூலம் தெரிவு செய்து அவற்றை

கொள்வனவுசெய்து பாடசாலைகளுக்கு விநியோகிக்க ஆவன செய்யலாம். ஒவ்வொரு வருடமும் புதிதாக வெளிவரும் நூல்கள் கொள்வனவு செய்யப்படும்போது அந்நூல்கள் பாடசாலைகளில் இருக்க வாய்ப்பில்லை. இந்த முறையை ஈழத்தில் வெளிவரும் இலக்கிய நூல்களுக்கு மட்டுப்படுத்தி நூல் கொள்வனவுக்கு ஒதுக்கும் பணத்தில் இருபத்தைந்து விகிதத்தினை இதற்கு ஒதுக்கலாம். மிகுதி எழுபத்தைந்து விகிதத்தை அதிபர்களின் விருப்பத்தெரிவுக்கு விட்டுவிடலாம். இது தொடர்பாக உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? எடுக்கவேண்டுமென ஞானம் வேண்டுதல் செய்கிறது

ஞானம்–65 (ஒக்டோபர் 2005)

87



ஊடக சுதந்திரம் எதை நோக்கிச் செல்கிறது?

ஊடகங்கள் ஒரு நாட்டின் ஜனநாயகத்தைத் தாங்கிப் பிடிக்கும் நான்காவது தூணாக விளங்குகின்றன. மக்களுக்குப் பாதகமான செயல்களை, அவர்களுக்கு எதிராக இழைக்கப் படும் - மேற்கொள்ளப்படும் அநீதிகளை, நேர்மை யீனங்களை புறக்கணிப்புகளை அஞ்சாமல், அதிகாரங்களுக்கு அடிபணியாமல் துணி கரமாக வெளிப்படுத்தும் கடமை உண்மையான ஜனநாயகம் நிலவுகின்ற நாட்டில் ஊடகங் களுக்கு உண்டு.

ஆனால், பல்லின மக்கள் காலாதி காலமாக வாழ்ந்துவரும் எமது நாட்டில், தேசிய இனங்களுக்கிடையே இன்று ஏற்பட்டுள்ள விரிசல் - முறுகல் - பிளவு - சந்தேகம் முதலியவற்றிற்கான வித்து அரை நூற்றாண்டுக்கு முன்னரே சிங்கள - ஆங்கில ஊடகங்களால் விதைக்கப்பெற்று விஷ விருட்சமாக உருவெடுத்து நிற்கிறது எனக் கூறுவது மிகையானதல்ல.

தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட சிறுபான்மை இன மக்களும் இந்நாட்டின் புதல்வர்களே - அவர்களுக்கும் சமத்துவமான உரிமைகள் - தனித்துவமான கலை, கலாசாரங்கள் உண்டென்பதை, மறந்து - மறுத்து - அடக்குமுறைகளை மேற்கொண்ட பேரினவாதத்தின் மேலாண்மைப் போக்கு - செயற்பாடுகள், நாட்டை அதல பாதாளத்துக்கு இட்டுச் சென்றுள்ளன. நியாயத்தைச் சுட்டிக் காட்டி, நீதிக்காகக் குரல் எழுப்பாமல், பேரினவாதத்துக்குத் துணையாக - பக்கபலமாக நின்று, அவர்களை உசுப்பி விட்டுப் பேயாட்டம் புரிய வைத்ததில் ஊடகங்களுக்குப் பெரும்பங்கு உண்டு என்பது வரலாற்றுண்மை.

பாவம், தமிழ் ஊடகங்களும், தமிழ் ஊடகவிய லாளர்களும், தமிழினத்தைப் போலவே அவர்களும் அடக்கி ஒடுக்கப்பட்டு, ஓங்கிக்குரல் எழுப்ப முடியாமல் தடுக்கப்பட்டு தமது இனத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கொடுமைகளை - தமிழ்ப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அட்டூழியங்களை - நிஷ்டூரங்களை - சித்திரவதைகளை வெளிச்சம் போட்டு வெளியுலகத்துக்குக் காட்ட முனையும் போது - எத்தனிக்கும் போது, ஊடகநிலையங்கள் அடித்து நொருக்கப்படுகின்றன. செய்தி சேகரிக்கச் செல்பவர்கள் - புகைப்படமெடுக்கச் செல்பவர்கள், அநாவசியமாக அச்சுறுத்தப்படுகின்றனர். அநாகரிகமாகக் கைது செய்து காவலில் வைத்து விசாரிக்கப்படுகின்றனர். குறிவைத்துத் தாக்கப்படுகின்றனர். ஏன் உண்மைகளை காரசாரமாக எழுதிவந்த தமிழ் ஊடகவியலாளர்கள் சுட்டுக் கொலையே செய்யப்பட்டுள்ளனர். நிமலராஜன் முதல் அண்மையில் கொலை செய்யப்பட்ட சுகிர்தராஜன்வரை, அவர்களைக் கொலை செய்தவர்கள் யார் என்பது மர்மமாகவேயுள்ளது. இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட கொலை எனக்கூறி விட்டு மௌனமாகவே இருக்கிறது காவல்துறை!

இந்நிலையில் ஊடகசுதந்திரம் எங்கு நோக்கிச் செல்கிறது? தமிழ் ஊடகங்களுக்கும், ஊடக வியலாளர்களுக்கும் உரிய பாதுகாப்பளிக்க அரசு இனியாவது முன்வரவேண்டும்.

ஞானம்–69 (பெப்ரவரி 2006)

புரிதல்

✦ 69வது இதழ் கிடைக்கப் பெற்றேன். ஊடக சுதந்திரம் எதை நோக்கிச் செல்கிறது? என்ற ஆசிரிய தலையங்கத்தில் தமிழ் ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் உரிய பாதுகாப்பு அளிக்க அரசு இனியாவது முன்வரவேண்டும் என்ற கருத்து பலராலும் பலதடவைகள் முன்வைக்கப்பட்ட கருத்துத்தான். ஆனாலும் செவிடன் காதில் ஊதிய சங்குபோலவே அரசு இதனைக் கையாள்கிறது. கடவுள்தான் தமிழ் ஊடகவியலாளர்களைக் காப்பாற்ற வேண்டும்.

–செ. தம்பிரட்னம், சுன்னாகம் (ஞானம்–70– மார்ச்–2006)

88

போரினால் சீரழியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்மாணவர் கல்வி

யாழ் பல்கலைக்கழகம் முப்பத்திரண்டு வருடத் தொன்மைமிக்கது. தமிழ் மாணவர்களின் கல்விக் களஞ்சியமாகத் திகழும் இப் பல்கலைக்கழகம் போர் நிலைமை காரணமாகக் கடந்த ஐந்து மாதங்களாக மூடப்பட்டிருக்கிறது. இப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது பதின்னான்கு மாணவர்களே அனுமதிக்கப் பட்டனர். ஆனால் தற்போது 6000 மாணவர்கள் இங்கு உள்ளனர். ஆண்டொன்றுக்கு ஆயிரத்து இருநூறு தமிழ் முஸ்லிம் சிங்கள மாணவர்கள் இங்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

முன்பெல்லாம் குழப்பமான சூழ்நிலை களிலும் பலகஷ்டங்களுக்கு மத்தியிலும் இப் பல்கலைக்கழகம் இயங்கிவந்திருக்கிறது. 1987இல் இந்திய அமைதிப்படை நடவடிக் கையின் போதும், பின்னர் 1995இல் குடா நாட்டு மக்களின் இடப்பெயர்வின் போதும், இப்பல்கலைக்கழகம் தற்காலிகமாக சிறிது

காலம் மூடப்பட்டாலும் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப் படவில்லை.

கடந்த ஆகஸ்ட் 11ஆம் திகதி ஏ9 வீதி மூடப்பட்டபின் யாழ் பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகள் முடக்கமடையத் தொடங்கின. உணவுத் தட்டுப்பாடு காரணமாக பல்கலைக்கழக மாணவர்கள் பசியால் மயங்கினர்.

2005 டிசம்பர் 19ஆம் திகதி யாழ் பல்கலைக்கழகச் சமூகத்தினர் நடத்திய அமைதிப் பேரணியின் போது படையினர் மேற்கொண்ட தாக்குதலின் பின் முறுகல்நிலை ஏற்பட்டது. பல்கலைக்கழக மாணவர்கள் என்றால் பயங்கரவாதிகள் என்றே படைத்தரப்பினர் எண்ணுகின்றனர். இதனால் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது. மாணவர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாகம் ஆகிய மட்டங்களில் பெரும் அச்சமும் பயப்பிராந்தியும் நிலவுகிறது. உயிருக்கு உத்தரவாதமில்லாத நிலை.

கடந்த 3ஆம் திகதி நிருபராஜ் என்ற மாணவன் கொக்குவிலில் உள்ள அவரது வீட்டில் வைத்துக் கடத்தப்பட்டு பின்னர் சிலநாட்களின் பின் பலத்த காயங்களுடன் விடுவிக்கப் பட்டுள்ளான்.

சிங்கள மாணவர்களுக்கு அரசாங்கம் தென்பகுதிப் பல்கலைக் கழகங்களுக்கு மாற்றம் கொடுத்துள்ளது. அவர்கள் இடையூறின்றித் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்கிறார்கள்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மாணவர்கள் உரிய பாதுகாப்பு இல்லாத காரணத்தால் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுவிட்டார்கள். தற்போது உள்ள சூழ்நிலையில் தாங்கள் பல்கலைக்கழகத்திற்குத் திரும்ப முடியாது எனவும் தெரிவித்துள்ளனர்.

வெளிமாவட்டப் போக்குவரத்து, உணவு வசதி, கற்றல் உபகரண வசதி இல்லாத நிலையில் 6000 மாணவர்கள் கல்விகற்கும் பல்கலைக் கழகத்தை திறந்துவிட முடியாது.

இம்மாணவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது. பாடநெறிகளை நிறைவு செய்யமுடியுமா என்ற கேள்வி மாணவர்களின் மனதில் பெருங்கேள்வியாக எழுந்துள்ளது.

மாணவர்கள் குறித்த வயதெல்லைக்குள் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்யாவிடில், அவர்கள் பல இழப்புக்களை எதிர்கொள்ளவேண்டி நேரிடும். பட்டதாரி நியமனத்தில் மூப்பு நிலை பின்னடைவை ஏற்படுத்தும். பதவி உயர்வுகள் வயதெல்லை காரணமாக இழக்கப்படலாம். வெளிநாட்டுக் கல்வி வாய்ப்புகள் இழக்கப்படலாம். அவர்களது கல்வித் தரமும் பாதிக்கப்படும்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி பற்றி அரசு கிஞ்சித்தும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

கொடூர யுத்தம் தொடர்ந்து கொண்டே இருக்கும். மாணவர்களின் நிலை என்னாவது? இது தமிழினத்தின் வேரை அறுக்கும் முயற்சி.

ஞானம் 81 (பெப்ரவரி 2007)

புரிதல்

✦ 'ஞானம்' பெப்ரவரி 2007 இதழ் கிடைத்தது. நன்றி 81வது இதழ் - மிகுந்தமகிழ்ச்சி. வடிவமைப்பு நன்று "போரினால் சீரழியும் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்மாணவர் கல்வி" என்ற தலையங்கம் காத்திரமானது. இதே நிலைதான் இன்று கிழக்குப் பல்கலைக் கழகத்துக்கும் ஏற்பட்டுள்ளது. யாரோ கிளைமோர் குண்டு வைத்துவிட்டுத் தலைமறைவாகிவிட கி.ப. மாணவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்.

– இ. நாகலிங்கம் (அன்புமணி)

89



மீண்டும் ஆங்கிலமா ?

தம் அறிவு ஆராய்ச்சி அனுபவம் ஆளுமை போன்றவற்றின் விளைவாக -

சர்வதேசப் புகழ்பெற்ற கல்விமான்களும் உளவியலாளர்களும் காலத்துக்குக்காலம் வெளியிட்ட -

தாய்மொழி மூலம் கல்வியூட்டப்படுவது, குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டுவதைப் போன்று இலகுவானது; இயல்பானது. இன்றியமையாதது -

சிறுவர்களின் - மாணவர்களின் பூரண வளர்ச்சியைத் தாய்மொழிக் கல்வியே உறுதிப் படுத்தும் -

வேறு மொழி மூலம் கல்வி கற்பிப்பது இயற்கைக்கு மாறானது. இடர்களை ஏற்படுத்துவது.

என்ற அறிவுரைகளின் அச்சாணியான உண்மையின் வலிமையாலும்

தாய்மொழி மூலக் கல்வி காரணமாக விஞ்ஞான - மருத்துவ - தொழில் நுட்பத்துறைகளில் மிகவும் வேகமாக வளர்ச்சியடைந்து முன்னணிக்கு வந்த

சோவியத் ரஷ்யா, சீனா, ஜப்பான் போன்ற முன்னுதாரணங்கள் உருவாக்கிய நம்பிக்கையின் உறுதியாலும்-

சுதந்திரமடைந்த எங்கள் நாட்டிலே சுதேச மொழிகள் மூலமே கல்வியூட்டப்படல் வேண்டும் என்ற சுயமரியாதையின் உந்துதலாலும் -

பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம்வரை சிங்களம், தமிழ் ஆகியவை போதனா மொழிகளாக கல்வியூட்டும் மொழிகளாக ஆக்கப்பட்டுப் பல்லாண்டுகள் நிறைவாகிவிட்ட நிலையில் -

அதன் விளைவாக-

வசதிபடைத்த, மேற்தட்டுப் பெற்றோரின் பிள்ளைகளுடன் ஏழை விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள் போன்றவர்களின் பிள்ளைகளும் பல்கலைக் கழகங்களிலும் தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் கற்றுத் தேர்ந்து உயர் அதிகாரிகளாகவும், தொழில்துறை நிபுணர்களாகவும் ஆராய்ச்சி வல்லுநர்களாகவும் புத்தாக்கச் சிற்பிகளாகவும் சமூகத் தலைவர்களாகவும் பரிண மித்துள்ள நிலையில் -

தெற்காசியாவில், கல்வி வளர்ச்சியில் முன்னணியில் இருக்கின்ற நாடுகளுள் ஒன்றாக நமது நாடும் கணிக்கப்பட்டுவரும் நிலையில் -

ஆங்கில மொழியை நன்றாகப் பேச, எழுத, வாசிக்கத் தெரியாவிட்டால் ஆங்கில மொழியில் எல்லாக் கருமங்களையும் ஆற்றும் ஆற்றல் இல்லாவிட்டால் -

இனிவரும் காலங்களில் - மாறிவரும் உலகில் இந்நாட்டு இளைஞர்களின் வேலை வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டுவிடும் மறுக்கப்பட்டுவிடும் -

என்ற சாரப்பட இந்த நாட்டின் நீதித்துறையைச் சேர்ந்த பிரமுகர்கள் சிலரும், பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் சிலரும் கருத்து வெளியிடத் தொடங்கியிருப்பதும் -

ஆங்கில மொழி மூலமான முன் பள்ளிகள் நடத்தப்படுவதை வரவேற்று ஊக்கப்படுத்திய அரசாங்கம் -

ஆங்கில மொழிமூலம் சகல பாடங்களையும் போதிக்கும் சர்வதேசப் பாடசாலைகளை இந்நாட்டில் நடத்துவதற்கும்

இந்நாட்டு மாணவர்களும் அவற்றிலே கல்வி கற்பதற்கும் அனுமதி அளித்த அரசாங்கம் -

குறிப்பிட்ட சில அரசாங்கப் பாடசாலைகளிலே குறிப்பிட்ட சில பாடங்களை ஆங்கிலத்திற் போதிப்பதற்கு அனுமதியும் வசதியும் அளித்த அரசாங்கம் -

அதே பாடசாலைகளிலே மேலும் மூன்று பாடங்களை ஆங்கிலத்திற் போதிப்பதற்கு அனுமதி அளித்த அரசாங்கம் -

எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்திலே போதிக்கக்கூடிய வகுப்புக்களை உருவாக்குவதற்குச் சில கல்லூரிகளுக்கு அனுமதி அளித்திருப்பதும் -

போதனாமொழி சம்பந்தமாகப் பல்வேறு ஊகங்களையும் சந்தேகங்களையும் கல்விமான்களிடம் ஏற்படுத்தியுள்ளன.

போதனாமொழியாக மீண்டும் ஆங்கிலமே அரசோச்சப் போகின்றதா?

அல்லது

ஆங்கிலத்தைப் போதனாமொழியாகச் சில கல்லூரி களில் மட்டும் அனுமதிப்பதின்மூலம் கல்வி வேலை வாய்ப்பு போன்றவற்றில் ஒருவித ஏற்றத்தாழ்வையும் சமவாய்ப் பின்மையையும் அரசாங்கமே ஏற்படுத்தப்போகின்றதா?

ஆங்கிலத்தின் அவசியத்தை நாம் உணர்ந்துதான் இருக்கின்றோம். அம்மொழியைப் போதனாமொழி ஆக்குவதன் மூலம், அம்மொழியிற் பாண்டித்தியம் அடையலாம் என்பதை நாம் முற்றாக மறுக்கவுமில்லை.

ஆனால், விஷய ஞானம் - பாட அறிவு எல்லோருக்கும் கிடைக்குமா?

தாய் மொழியைத் தொடர்ந்தும் போதனாமொழியாக வைத்துக் கொண்டே பொருத்தமான புதிய சுவையான உத்திகளைப் பயன்படுத்தி சக்தி வாய்ந்த இரண்டாம் மொழியாக ஆங்கி லத்தைப் போதிக்க முடியாதா?

ஆட்சி அதிகாரத்தில் இருப்போரையும் கல்விமான்களையும் ஆழ்ந்து சிந்திக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஞானம் 95 (ஏப்பிரல் 2008)

புரிதல்

✦ ஞானம் ஏப்ரல் இதழின் 'மீண்டும் ஆங்கிலமா' என்ற ஆசிரியர் தலையங்கம் பிரமாதம். தமிழ்ப் பிள்ளைகள் பலர் சர்வதேசப் பாடசாலைகளில் ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்பதன் ஊடாக 'தமிழ் மொழி மூலம் கல்வி கற்றவர்கள்' 'ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றவர்கள்' என்ற வேறுபாடு நிச்சயமாக உருவாவது மட்டுமன்றி தர்மப்பாடசாலையில் இலவசமாகக் கற்றவர்கள் தனியார் பாடசாலைகளில் சுளைசுளையாகக் காசு கொடுத்துப் படித்தவர்கள் என்ற பேதமும் நிச்சயம் உருவாகும். புலம்பெயர்ந்து வெளிநாடு சென்றவர்களின் பிள்ளைகளும் அந்தந்த நாட்டு மொழி மூலமே கல்வி கற்கின்றார்கள். அவர்களும் ஏறக்குறைய தமிழை மறந்தவர்கள் ஆகிவிட்டார்கள். ஆகவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டுள்ள அனைவருக்கும் தெளிவான ஆலோசனை ஒன்றை முன்வைத்த ஞானம் ஆசிரியரைப் பாராட்டுவதோடு தமிழர் எங்கு வாழ்ந்தாலும் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் உயர்ந்த அறிவைப் பெறவேண்டும் என்ற கருத்தையும் கூறிக்கொள்கிறேன்.

கா. தவபாலச்சந்திரன் (ஞானம் 96 – மே 2008)

90



தேமதுரத் தமிழோசை உலகமெலாம்...

தமிழ் மக்கள் தங்கள் பாரம்பரியத் தாயகமான இந்தியா இலங்கை ஆகிய நாடுகளில் மட்டு மல்லாமல்-

சிங்கப்பூர், மலேஷியா, பிஜித்தீவுகள், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளிலும்-

பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, நோர்வே, சுவீடன், அவுஸ்தி ரேலியா முதலிய இடங்களிலும் வாழ்ந்து வருகின்றார்கள்.

தங்கள் சொந்த நலனை- பொருளாதார முன்னேற்றத்தை- சொகுசான வாழ்க்கையை- நோக்கமாகக் கொண்டு அவ்வப்போது, தாமாகவே வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறியவர்களை விட-

அரசியல் அடக்குமுறை- ஒடுக்குமுறை- இனவாதம் உள்நாட்டுப் போர் முதலியவற்றால் சொந்த வீட்டில்- சொந்த நாட்டில் வாழ முடியாமல் வெளிநாடுகளுக்குச் சென்று வாழ நிர்ப்பந்திக்கப் பட்டவர்களின் தொகை பெரிது; மிகப் பெரிது.

இவ்வகையில்- இலட்சக்கணக்கான இலங்கைத் தமிழ் மக்கள் இன்று உலகெங்கும் பரந்து வாழ்கின்றார்கள்.

'உலகத் தமிழர்கள்' என்பது வெறும் சொல்லடுக்காக அல்லாமல், கருத்துச் செறிவுடைய- உண்மையைப் பிரதிபலிக்கும் ஒரு சொற்றொடராக உயர்ந்து விட்டது!

புலம் பெயர்ந்து- புகலிடம் கோரிப் பெற்று அந்தப் புதிய நாடுகளிலே புதுவாழ்க்கையை மேற்கொண்ட இந்தத் தமிழ் மக்கள்-

தாம் புகுந்த நாடுகளிலே-

தமிழ்ப் பாடசாலைகளை உருவாக்கியுள்ளார்கள்-

அறநெறிப் பாடசாலைகளை ஏற்படுத்தியுள்ளார்கள்- பிள்ளைகள் பரதநாட்டியம், வாய்ப்பாட்டு, வயலின், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் கற்பதற்கு வசதி செய்து கொடுத்துள்ளார்கள்-

இசைவிழா- கலை விழா- நாடக விழா- தமிழ் விழா- எழுத்தாளர் விழா போன்றவற்றைப் பெரிய அளவிலே நடத்துகின்றார்கள். புதினத் தாள்கள், சஞ்சிகைகள், புத்தகங்கள் வெளியிடுகின்றார்கள். வானொலி, தொலைக்காட்சிச் சேவைகளை நடத்துகின்றார்கள்- கோவில்களைக் கட்டிக் கோலாகலமான முறையிலே திருவிழாக்களைச் செய்கின்றார்கள்-

இவைகள் எல்லாம் மகிழ்ச்சிக்குரிய செயற்பாடுகள்தாம்- பெருமைக்குரிய சாதனைகள்தாம்.

இவை அனைத்துமே நீடித்து நிலைக்கவேண்டும்- தமிழ் மொழியும் தமிழ்ப் பண்பாடும் அந்தந்த நாடுகளிலே தடையேதுமின்றி- இடையீடு இன்றித் தழைத்தோங்க வேண்டும் என்றே எல்லோரும் விரும்புகின்றனர்-

அதே வேளையில்-

இந்த நிலை நீடிக்குமா என்ற பயம் கலந்த சந்தேகம் பலரிடம் இருப்பதையும் நாம் புறக்கணிக்க முடியாது-

பிறந்து வளர்ந்த மண்ணிலிருந்து திடீரென்று பெயர்ந்து- பெயர்க்கப்பட்டு-

நெருங்கிப் பழகிய உறவினர்கள் நண்பர்களிடமிருந்து திடீரென்று பிரிந்து- பிரிக்கப்பட்டு-

அந்நிய நாடுகளில்- அந்நிய மொழிகளைப் பேசுவோர் மத்தியில்- அந்நிய கலாசாரக் சூழலில்-

வாழவேண்டிய 'நிர்ப்பந்தம்' உடையவர்களால்தான்

- உப்பில்லாவிட்டால் தான் உப்பின் அருமை தெரியும்-

அப்பன் இல்லாவிட்டால்தான் அப்பனின் அருமை தெரியும்-

என்பதைப்போல-

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்

நற்றவ வானினும் நனிசிறந்தனவே-

என்ற உண்மையைத் தெளிவாக- முழுமையாக உணர்ந்து கொள்ள முடியும்-

அதனால்-

தாய் மண்ணுடனான தொடர்பை - தம் மண்ணில் வாழ்கின்ற உறவினர்- நண்பர்களுடனான நெருக்கத்தை- மென்மேலும் பெருக்குவதற்கும், பலப்படுத்துவதற்கும் அவர்கள் முயல்வார்கள்- முயல்கிறார்கள்.

முன்னர் குறிப்பிட்ட அவர்களின் நடவடிக்கைகளை- செயற்பாடுகளை- அந்த நல்முயற்சியின் பிரதிபலிப்பாகவே கொள்ளலாம்.

ஆனால்-

அந்நிய மண்ணிலே பிறக்கும் அவர்களின் பிள்ளைகளிடம்-

பிறந்த நாள் தொடக்கம் வேற்று மொழிகளை அடிக்கடி கேட்டு- அந்நியப் பண்பாட்டுச் சூழலில் வளர்கின்ற அந்தப் பிள்ளைகளிடம்-

அந்தப் பிள்ளைகளின் பிள்ளைகளிடம்- தமிழ் மொழிப் பற்றையும் தமிழ்ப் பண்பாட்டின் பிரதிபலிப்பையும் முழுமையாக எதிர்பார்க்க முடியுமா?

'முடியாது' என்பதுதான் தெளிவான பதிலாக இருந்தாலும்-

அதை மாற்றவேண்டிய ஒரு வரலாற்றுக் கடமை- தட்டிக் கழிக்க முடியாத ஒரு தனித்துவமான பொறுப்பு தங்களிடம் இருக்கின்றது என்பதை அந்தப் பெற்றோர் உணர்ந்துகொள்ள வேண்டும்-

எந்த நாட்டில் வாழ்ந்தாலும்- வீட்டு மொழியாக- குடும்ப மொழியாக- உறவினர்களுடன் தொடர்பு கொள்ளும் மொழியாகத் தமிழ் மொழி மட்டுமே இருந்தால்-

வீட்டிலோ- வெளியிலோ- வீதியிலோ- விளையாட்டிடத்திலோ- கோவிலிலோ-

தமிழிலேயே பேசுவதைத் தமிழ் மக்கள் ஒரு விரதமாகவே கடைப்பிடித்தால்-

தமிழ்ப் பண்பாட்டைப் பேணுவதிலே பெற்றோரும்- பெரியோரும்- கற்றோரும்- மற்றோரும்- இளைஞர்களுக்கும் சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் முன்மாதிரியாக நடந்துகொண்டால்-

விஞ்ஞானம், மருத்துவம், தொழில்நுட்பம், பொருளியல், வர்த்தகம் போன்ற பல்வேறு துறைகளில் நடைபெறுகின்ற ஆராய்ச்சிகள்- ஏற்படும் முன்னேற்றங்கள்- சாதனைகள் சம்பந்தமான விரிவான தகவல்களை- விளக்கங்களை, துறைசார் நிபுணர்கள் உடனுக்குடன் தமிழிலேயே தெளிவாக எழுதுவதன் மூலம், உலகிலே எந்த விஷயத்தையும் சரியாகவும் தெளிவாகவும் சொல்லும் ஆற்றல் தமிழ் மொழிக்கு உண்டு என்பதை நிரூபித்தல்-

உலகத் தமிழர் வாழும் நாடுகளில்-

தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்காதா?

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவிக் கொண்டி ருக்காதா?

'வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ'

- என்ற பாரதியின் கோபக் கனலை- சாபக் குரலை- உங்கள் உள்ளங்களில் உரைத்துப் பார்த்து- உலகத் தமிழர்களே! உடடினயாகச் செயற்படுவீர்களா? ஒன்றுபட்டு நடந்துகொள்வீர்களா?

ஞானம் 99 (ஆகஸ்ட் 2008)

91

ஸ்ரீசுமண கொடகே வழங்கும் நவீன தமிழ் இலக்கியப் பணியாளருக்கான கௌரவம்

ஓர் இனத்தை அடையாளப்படுத்துவதில் மொழியின் பங்கு பெரும்பங்கு எனலாம். மொழியின் வளர்ச்சியோடு, இலக்கியம், கணிதம், சமூகவியல், விஞ்ஞானம், தொழில்நுட்பம் எனப் பலவகைப்பட்ட துறைகளிலும் அறிவையும் திறனையும் மக்கள் மத்தியில் வளர்த்தெடுப் பதற்கெனப் பல்லாண்டு காலமாக கொ/ மருதா னையில் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் கொடகே புத்தக விற்பனை ஸ்தாபனம், கொடகே சகோதரர்கள் புத்தகசாலை என்பன இயங்கு கின்றன.

இந்த ஸ்தாபனம் மக்களுக்குத் தேவை யான சகல நூல்களையும் - பாடசாலை மாணவர்களுக்கான நூல்கள், குழந்தை களுக்கானவை எனப் பல தளங்களிற்கும் தேவையான நூல்களை விற்பனை செய்வதோடு ஏராளமான நூல்களைப் பதிப்பித்தும் வெளிக் கொணருகின்றது. இவற்றுள் சிங்கள மொழி

சார்ந்த நூல்கள் மாத்திரமின்றி தமிழ் மொழி சார்ந்த நூல்களும் அடங்கும்.

இத்தகைய உயர்ந்த அரும்பணியாற்றி வருவதனால் ஸ்ரீசுமண கொடகே அவர்கள் நம்நாட்டின் ஜனாதிபதி தொடக்கம், புத்த குருமார்கள், அமைச்சர்கள், கல்விமான்கள், அறிஞர்கள், பேராசிரியர்கள் இலக்கிய வல்லுனர்கள் என அறிவுப்புலம் சார்ந்த யாவரது பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்ட பெருமைக்கு உரியவர்.

'எளிமையான வாழ்வு உயர்ந்த சிந்தனை' என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டுவாழும் ஸ்ரீசுமண கொடகே என்ற இப் பெரியார் புன்முறுவல் பூக்கும் சிரித்த முகத்துடன் தூய வெள்ளை ஆடையில் எப்பொழுதும் தோற்றமளிப்பார் அன்பாகவும் இனிமையாகவும் யாவருடனும் பழகும் பண்பு வாய்ந்தவர்.

நாட்டு மக்களுடைய அறிவு மேம்படவும் இலக்கிய ரசனை வளர்ந்தோங்கவும் வேண்டுமெனப் பேரவாக் கொண்டு உழைக்கும் இப்பெருமகன் வருடாவருடம் செப்ரம்பர் 3ஆந் திகதியான தனது பிறந்ததினத்தன்று இதுவரை காலமும் சிங்கள மொழியில் ஆக்க இலக்கியக் கர்த்தாக்களுக்கு கவிதை, கதை, நாவல் என்ற 3 பிரிவில் ஒவ்வொன்றிற்கும் ஐம்பதாயிரம் ரூபா வீதம் கொடுத்து கௌரவித்து ஊக்குவித்து வருகிறார்.

இவ்வாண்டு முதல் சிங்கள மொழித்துறைக்கு மாத்திர மின்றி, தமிழ் மொழிக்கும் ஆக்க இலக்கியத்துறையில் உழைத்தவர்களைப் பாராட்டிக் கௌரவிக்க முன்வந்துள்ளார்.

இச்செய்தி தமிழ் மக்கள் அனைவருக்கும் சிறப்பாக நவீன ஆக்க இலக்கியத் துறையில் ஈடுபட்டுள்ளோருக்கெல்லாம் மிகமிக மகிழ்வான செய்தியாகும். இவ்வாண்டு தமிழ் மக்கள் சார்பில் ஆக்க இலக்கியகாரரையும் ஊக்குவித்துப் பெருமை சேர்க்க முன்வந்துள்ள ஸ்ரீசுமண கொடகே பெரியாரின் விசாலித்த மனப்பான்மையைப் பாராட்டுவதோடு நன்றியையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

ஸ்ரீசுமண கொடகே அவர்கள் இவ்வாண்டு முதல் தமிழில் ஆக்க இலக்கியத்திற்காக உழைத்தவர்களையும் கௌரவிக்க முன்வந்துள்ள சிந்தனை, நாட்டில் ஒற்றுமையையும் சமாதானத்தையும் நிலைநாட்டவும், சிங்கள தமிழ் ஒற்றுமை மேன்மேலும் செழிப்புறவும் பெரிதும் உதவும். இத்திட்டம் இப்பெரியாரின் இலக்கிய தாகத்தையும் பரந்த மனப்பாங்கையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இத்தகைய தாராள மனத்தோடு இலக்கிய கைங்கரியத்தில் கவனம் செலுத்தியுள்ள கொடைவள்ளல் ஸ்ரீசுமண கொடகே அவர்களை ஞானமும் பாராட்டி, வாழ்த்தி மகிழ்வதில் பெருமைகொள்கிறது.

ஞானம் 112 (செப்ரெம்பர் 2009)

92



முரளியின் அரும் பெரும் சாதனை

டெஸ்ட் கிரிக்கட் போட்டிகளில் எண்ணூறு விக்கட்டுகளைக் கைப்பற்றிய முதல் வீரர் என்ற இமாலயசாதனையை ஏற்படுத்தி அரும்பெரும் சாதனையொன்றை ஏற்படுத்தியிருக்கிறார் முத்தையா முரளிதரன்

1992இல் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக தனது முதல் டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய முத்தையாமுரளிதரன் 18 வருடங்கள் தொடர்ச்சியாக விளையாடி 133ஆவது டெஸ்ட் போட்டியில் இந்த மாபெரும் உலகசாதனையை உருவாக்கியதுடன் ஓய்வு பெறுகிறார். இந்தச் சாதனை இலங்கை மண்ணில் நிகழ்த்தப்பட்டது இலங்கை மக்கள் அனைவரினதும் சாதனையாக உணரப்படுகிறது. குறிப்பாக முரளி தமிழ் மகன் என்றவகையில் தமிழ் மக்களுக்கு இந்தச் சாதனை பெரிதும் தெம்பூட்டுவதாக அமைந்தது.

அவர் இலங்கை அணியின் தேசியச் சொத்தாக கடந்த ஒன்றரை தசாப்த காலம்

விளங்கி வந்துள்ளார். இத்தகைய மதிப்பு மரியாதையை வேறு எந்த வீரரும் பெற்றிருக்கவில்லை என்பதும், உலகின் எந்தவொரு அணியும் இப்படியான தனிநபர் திறமையை தனது நிலைப்புக்காக நம்பியிருந்ததில்லை என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

காலியில் நடந்து முடிந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியுடன் முரளி ஓய்வு பெறப் போவதாக அறிவித்திருந்தார். அப்போது அவர் 792 விக்கட்டுகளைக் கைப்பற்றியிருந்தார். தனது கடைசி டெஸ்ட்டில் மேற்கொண்டு 8 விக்கெட்டுகளைக் கைப்பற்றி புதிய மைல்கல்லைத் தொடுவாரா? என்ற எண்ணமே அவரது கடைசி ஆட்டத்தில் பெரும் எதிர்பார்ப்பாக இருந்தது. அவரை அந்தச் சாதனை செய்ய விடமாட்டோம் என்று இந்திய அணித்தலைவர் டோனி சவால் விட்டிருந்தார்.

ஆனால் மாயாஜாலப் பந்து வீச்சாளரான முரளி மன ஓர்மத்துடன் தான் நினைத்த சாதனையைச் செய்துமுடித்தார். இந்திய அணி வீரர் ஓஜாவின் விக்கட் முரளி வீழ்த்திய 800ஆவது விக்கட்டாக அமைந்தது.

டெஸ்டில் முரளிதரன் விளையாடும் கடைசிநாள் என்பதால் ரசிகர் கூட்டமும் பிரமுகர்கள் கூட்டமும் மைதானத்தில் நிரம்பி வழிந்தது. இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முரளிதரனுக்கு உற்சாகமான வாழ்த்துக்களைக் கூறவந்திருந்தார். மைதானத்தின் நான்கு புறத்திலும் முரளியின் மெகா கட்-அவுட்டுகள் வைக்கப்பட்டிருந்தன. முரளி கடைசிநாள் களம் இறங்கியபோது அவருக்குச் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. முரளிதரன் 800 விக்கட் இலக்கை அடைந்ததும் மைதானத்தில் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடியது. இரு அணி வீரர்களும் எழுந்து நின்று கைதட்டி அவரை உற்சாகப் படுத்தினர். மைதானத்தின் நான்குபுறமும் பட்டாசுகள் வெடிக்கப்பட்டன.

முரளியின் இந்தச் சாதனையை யாரும் முறியடிப்பது கடினம். இந்தியாவின் 30 வயதான ஹர்பஜன்சிங் இதுவரை

84 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 355 விக்கட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். முரளியின் சாதனையை இவராலும் நெருங்க முடியாது என்பதே பலரது கணிப்பாகும். முரளியின் இந்தச் சாதனைதான் கடைசிவரை நீடிக்கப்போகிறது என்பது கிரிக்கட் நிபுணர்களின் ஏகோபித்த முடிவாகும்.

முரளி 337 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 515 விக்கெட்டுகளைக் கைப்பற்றி ஒருநாள் போட்டியிலும் சாதனை வீரராகவே நீடிக்கிறார் என்பதும் மேலும் ஒரு சிறப்பாகும். முரளி தனது கிரிக்கட் வாழ்வில் பல்வேறு சோதனைகளுக்கு ஆளாகவேண்டியிருந்தது. 1995இல் மெல்பேர்ணில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்டில் முரளி பந்தை எறிவதாகச் சர்ச்சை கிளம்பியது. இதன் பின்னரும் அவ்வப்போது இதுபோன்ற சர்ச்சைகள் கிளப்பப்பட்டன. ஆனால் முரளி நான்குமுறை அறிவியல் சோதனைகள் மூலம் தனது பந்துவீச்சு முறைமையின் தூய்மையை நிறுவினார். முரளியின் பந்துவீச்சு முறையை ஆராய்ந்து பத்துக்கும் மேற்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இவை அவரது பந்து வீசும் பாங்கு விதிமுறைகளுக்கு உட்பட்டது என்று சான்று பகர்ந்தன. இந்த ஆய்வு முடிவுகளால் ஐ. சி. சி என்னும் உலகக் கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையும் முரளியின் பந்து வீச்சு சரியானதே என்று அறிக்கை வெளியிட்டது. முரளியின் பந்துவீச்சுமுறை 'துஸ்ரா' எனும் பிரமாஸ்திரமாக வர்ணிக்கப்படுகிறது. முரளி கிரிக்கட் உலகின் முடிசூடா மன்னன். முரளியின் இந்த மாபெரும் சாதனையால் மகிழ்ந்திருக்கும் உலகக் கிரிக்கட் ரசிகர்களுடன் இணைந்து ஞானமும் முரளிக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

ஞானம்–123 (ஆகஸ்ட் 2010)

93



பதினைந்தாவது அகவையில் தினக்குரல்

இலங்கையின் தமிழ்த் தேசியப் பத்திரிகைகளில் ஒன்றான தினக்குரல் தனது பதினைந்தாவது அகவையில் இம்மாதம் ஆறாம் திகதி காலடி எடுத்துவைக்கிறது என்ற செய்தி தமிழ்ப் பேசும் மக்கள் யாபேருக்கும் மகிழ்ச்சிதரும் செய்தியாகும்.

1997ஆம் ஆண்டு ஏப்ரல் ஆறாம் திகதி தினக்குரலின் முதல் இதழ் வெளியாகியது. இலங்கையில் இருவேறு நிறுவனங்களிலிருந்து இரு தேசிய தமிழ்ப்பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்த நிலையில் இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்களின் அடையாளத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஒரு தமிழ்ப்பத்திரிகை வெளிவரவேண்டும் என்ற நோக்குடன் மிகத் துணிவுடன் தினக்குரலை ஆரம்பித்தவர் திரு. எஸ். பி. சாமி அவர்கள்.

தமிழ்ச் சமூகம் பொருளாதாரத் தடைகள், இடப்பெயர்வுகள், இராணுவக் கெடுபிடிகள் போன்றவற்றால் அல்லலுற்றுக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் அவர்களது பிரச்சினை

களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தக் கூடிய ஒரு பத்திரிகையின் வருகை அப்போது அவசியமாக இருந்தது. தணிக்கை காரணமாக அக்காலகட்டத்தில் நாளிதழ்கள் சிலவற்றின் பயவுணர்வுகளால் வடபுலச் செய்திகள் கொழும்புவாழ் மக்களை வந்தடைவதில் தடைகள் இருந்தன. இனமேலாதிக்கம் தலைவிரித்தாடுவதை அன்றாடம் ஊடகங்களில் காணக்கூடியதாக இருந்தது. ஆங்கில ஊடகங்கள் குறிப்பாகப் பத்திரிகைகள் மேலாதிக் கச் சிந்தனையிலேயே செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்தன. இந்நிலையிலேதான் தினக்குரல் தோற்றம் பெற்றது.

தமிழ்பேசும் மக்களது ஒற்றுமை, அவர்களது பிரச்சினை பற்றிய விளக்கம், அவர்களது பாதுகாப்பு, அவர்களது வாழ்விடங்களில் அவர்கள் அமைதியாக வாழ்வதற்கான வழிவகைகள் போன்றவற்றை எய்துவதற்கான தெளிவையும் மனப்பாங்கையும் உருவாக்குவதில் தினக்குரல் தெளிந்த சிந்தனையோடு செயற்பட்டுவருகிறது. தமிழ்ப்பேசும் சமூகம், தமிழ்மொழி பாதுகாக்கப்படவேண்டும், தமிழினம் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்ற இலட்சியத்துடன் தினக்குரல் செயலாற்றிவந்திருக்கிறது.

தினக்குரலின் முக்கியத்துவம் தமிழ்பேசும் மக்கள் தொடர்பான செய்திகளை அவர்களது கண்ணோட்டத்தில் நின்று தெரிவித்து வருகின்றமையே ஆகும். இதன் காரணமாக காலத்தால் முந்திய மற்றைய தினசரிகளை விடவும் தினக்குரல் முன்னணிநிலையை இன்று எய்தியுள்ளது.

தேசிய இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வொன்று காணப்படவேண்டும். தமிழ்பேசும் சிறுபான்மை மக்களது அரசியல் அபிலாசைகள் பூர்த்திசெய்யப்படவேண்டும் என்பதை ஆரம்பகாலந்தொட்டே பல இக்கட்டான சூழ்நிலை களிலும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் துணிச்சலுடன் வலியுறுத்தும் ஒரு தமிழ்த்தேசிய நாளிதழாகத் தினக்குரல் தன்னை இனங்காட்டி வந்திருக்கிறது.

சமூகப் பொறுப்புடன் நேர்மை நியாயத்தின் பக்கம் நின்று சமூகத்துக்குப் பயனுள்ளவற்றை முதன்மைப் படுத்துவதும் செய்திகளை வெளியிடும்போது எவ்வித திரிபுமின்றி அதன்

சமூகப்பயன்பற்றிய கணிப்புடன் செயற்படுவதும் சமுதாய வாழ்வுக்குத் தேவையான செய்திகளைத் தேர்வுசெய்து தருவதும் சமுதாயத்தின் வருங்கால வளத்துக்கான வழிகாட்டலும் தினக்குரலின் இயங்குதளமாக இருக்கிறது.

தினக்குரல் செய்திகளை மட்டும் தருவதோடு அமையாது பல்துறை அறிவையும் மக்களுக்கு வழங்கும் பணியையும் செய்துவருகிறது. இனப்பிரச்சினை பற்றிய கண்ணோட்டம், கல்வி, பொருளாதாரம், சமயம், இலக்கியம், கலாசாரம், கலைகள், சுற்றாடல் பாதுகாப்பு, அரசியல், வணிகம், உலக விவகாரங்கள், சினிமா, பெண்களுக்கான பகுதி, சோதிடம், மருத்துவம், மலையகப்பார்வை போன்ற பலதரப்பட்ட தமிழ்பேசும் மக்களுக்குத் தேவையான விடயங்கள் தினக் குரலில் வெளிவருகின்றன.

கலை இலக்கியம் தொடர்பான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும், கலை இலக்கியவாதிகளைக் கௌரவிப்பதும், மேன்மைப்படுத்துவதும் தினக்குரலின் இன்னுமொரு பணியாக அமைகிறது.

தினக்குரல் பதினைந்தாவது அகவையில் காலடி எடுத்துவைக்கும் இச்சந்தர்ப்பத்தில், அது மென்மேலும் வளர்ந்தோங்கி சிறப்புடன் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டுமென 'ஞானம்' மனப்பூர்வமாக வாழ்த்தி மகிழ்கிறது.

ஞானம் 131 (ஏப்ரல் 2011)

புரிதல்

✦ ஞானம்131 ஆம் இதழின் ஆசிரியர்தலையங்கம் படித்தேன். பதினைந்தாவது அகவையில் காலடி பதிக்குந் 'தினக்குரல்' தினசரிக்கு நல்லதொரு விமர்சனத்தை தந்துள்ளார் ஆசிரியர். டீன் ஏஜ் பருவத்திலுள்ள தினக்குரல் முதிய பருவத்திலுள்ள சில பத்திரிகைகளை விடவும் தரமாக உள்ளது. அறிமுகமில்லாத புதுமுகங்களுக்கு விஷேடமாக கலை இலக்கியவாதிகளுக்கு களமமைக்கிறது. புது புத்தக மதிப்புரைகளுக்கு முக்கியத்துவமளிக்கின்றது. இதில் பாகுபாடின்றி விமர்சிப்பது அதன் தனித்தன்மையைக் காட்டுகின்றது. தொடந்து மன ஆரோக்கியத்துடன் நடுநிலை தொடர வாழ்த்துகிறேன்.

எம்.பி.எம்.நிஸ்வான், பாணந்துறை (ஞானம்–132– மே –2011)

94



தலைநகரில் தமிழ்மக்களின் கலாசாரக் கேந்திரம்

தலைநகர் கொழும்பில் தமிழர்தம் தலையாய நிறுவனமாக இன்று கொழும்புத் தமிழ்ச் சங்கம் விளங்குகிறது. 1942இல் ஆரம்பிக்கப் பட்ட இச்சங்கம், 69 ஆண்டுகாலச் சேவையை நிறைவுசெய்து தற்போது எழுபதாம் அகவையில் காலடி எடுத்து வைத் துள்ளது. தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, மற்றும் கலைகள்சார் துறைகளில் வளர்ச்சி யையும் செழுமையையும் இலக்காகக் கொண்டு இந்நிறுவனம் இயங்கிவருகிறது. சேவை அர்ப் பணிப்பாளரின் ஒருமித்த உழைப்பை உள்வாங்கித் தமிழ்ப் பண்பாட்டின் பன்முகத் தன்மைக்கு மதிப்பளித்து அவை ஒவ்வொன்றின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் தமிழ் ஆய்வுக்கும் ஊக்கமளித்து வருவதோடு ஏனைய கல்விப் புல நிறுவனங்களின் தகவல் பரிமாற்று நிறுவன மாகவும் கொழும்புத் தமிழ்ச்சங்கம் இயங்கு கிறது.

இலக்கியச் சந்திப்புகள், நூல் அறிமுக விழாக்கள், அறிவோர் ஒன்றுகூடல் இலக்கியக்களம், அற்றைத்திங்கள் என இந்நிறுவனத்தின் வாராந்த மாதாந்த நிகழ்வுகள் பலதரப் பட்டனவாய் விரிந்துள்ளன. ஒவ்வொரு மாதமும் இருபதுக்கும் குறையாத கலை இலக்கிய நிகழ்வுகள் இச்சங்கத்தில் இடம்பெறுகின்றன. இலங்கையில் வேறெந்த நிறுவனங் களிலும் இடம்பெறாத அளவுக்கு அதிகமான கலை இலக்கிய நிகழ்வுகள் இங்கு இடம்பெறுகின்றன.

இதேவேளை சமூக அக்கறையுள்ள விடயங்களை முன்னெடுப்பதிலும் இச்சங்கம் தம்மாலான பணிகளை அவ்வப் போது செய்து வருகிறது. கடந்த காலங்களில் நாட்டில் பலதரப் பட்ட நெருக்கடிகள், போரின் அவலங்கள் ஏற்பட்டவேளைகளில், பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பொருட்களைச் சேகரித்து வழங்கியதோடு நிவாரண உதவிகளையும் பகிர்ந்தளித்து சீரிய பணியாற்றியிருக்கிறது.

தமிழ்ச்சங்கத்தின் பெரும் சொத்தாகத் திகழ்வது அதன் நூலகமாகும். இந்த நூலகத்தில் தற்போது 45,000க்கும் அதிகமான நூல்கள் இருக்கின்றன. உயர்நிலை ஆய்வு, உசாத்துணை உட்பட தேவைகள் பலவற்றைப் பூர்த்தி செய்வதாகவும் தமிழ் மொழியின் வாசிப்பின் தளத்தை விரிவுபடுத்துவதாகவும் இந்நூலகம் இயங்கிவருகிறது. இலங்கையின் மற்ற நூலகங்களில் இல்லாத சில அரிய நூல்களை இந்நூலகத்தின் உசாத்துணைப்பிரிவு கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இந்நூலகம் இடையறாது தன்னைப் புதுக்கிக் கொள்கிறது.

இலக்கிய ஆர்வலர்களின் இரசனையை மேம்படுத்த 'சங்கத்தமிழ்' என்ற சஞ்சிகை இச்சங்கத்தால் வெளியிடப் படுகிறது. இவை தவிர இச்சங்கத்தின் செயற்பாடுகளை விளக்கும் 'செய்திமடல்' பிரசுரமும் மாதாந்தம் வெளியிடப் படுகிறது. இச்சங்கத்தின் செயற்பாடுகள் பல்வேறு குழுக் களால் மேற்கொள்ளப்படுகின்றன. இலக்கியக் குழு, கல்விக்

குழு, நூலகக்குழு, உறுப்புரிமைக்குழு, நிலைய அமைப்புக் குழு, பரிசில் நிதியக்குழு, பதிப்புத்துறைக்குழு, சமூக மேம்பாட்டுக்குழு என்பன அவற்றுள் சிலவாகும்.

1942இல் இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டபோது அது ஒரு சிறிய குடிசையில் அமைந்திருந்தது. தமிழ் ஆர்வலர்கள், புரவலர் களின் அன்பளிப்புகளாலும் தொடர்ந்துவந்த காலங்களில் இச்சங்கத்தில் பணிபுரிந்த தலைவர்கள், செயற்குழு உறுப்பி னர்கள் ஆகியோரின் அயராத உழைப்பாலும் படிப்படியாக இச்சங்கம் வளர்ச்சிபெற்று மூன்று மாடிகளைக்கொண்ட நிறுவ னமாக உயர்ச்சி பெற்றிருக்கிறது. சமீபகாலங்களில் இச்சங் கத்தின் வளர்ச்சியில் துரித முன்னேற்றம் காணப்படுகிறது. 42பேர்ச்சில் அமைந்துள்ள இந்தச் சங்கக் கட்டிடத் தொகுதியின் கட்டுமான வேலைகள் மூன்றாவது தளத்தில் அமைக்கப்பட்ட 'விருந்தினரகம்' அறைத்தொகுதியுடன் நிறைவெய்தியுள்ளது. இந்த விருந்தினரகத்தின் கட்டிடத் திறப்புவிழா தற்போதைய தலைவர் மு. கதிர்காமநாதன் தலைமையில் 24-06-2011 அன்று வெகு சிறப்பாக நடந்தேறியது. பல்வேறு தேவைகளுக்காக நாட்டின் நாலா பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் கொழும்புக்கு வரும் தமிழர்கள் எவ்வித பயமோ கெடுபிடிகளோ இன்றி குறைந்த கட்டணத்தில் தங்கிச் செல்லக்கூடிய வசதியை இந்த விருந்தினரகம் கொண்டுள்ளது.

இன்று சர்வதேச ரீதியில் அறியப்பட்ட நிறுவனமாக வளர்ச்சிகண்டுள்ள கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பணிகள் மென்மேலும் சிறந்தோங்க வேண்டுமென ஞானம் வாழ்த்துகிறது.

ஞானம் 134 (ஜூலை 2011)

95

இலண்டனில் நடைபெற்ற உலகத் தமிழியல் ஆய்வு மாநாடு 2013

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டில் அன்னாரது தமிழ்ப்பணிகளைப் போற்றும் வண்ணம் உலகின் பல்வேறு நாடுகளிலும் மாநாடுகள், தமிழ் விழாக்கள், மலர்வெளியீடுகள், சொற்பொழிவுகள் நடை பெற்றவண்ணம் உள்ளன. அந்த வகையில் இதுவரை இலங்கை, இந்தியா, அவுஸ் திரேலியா, கனடா, இலண்டன் ஆகிய நாடுகளில் தமிழ் மாநாடுகள் நடந்தேறியுள்ளன.

தமிழியலின் பல்வேறு கூறுகளையும் உள்ளடக்கிய ஆய்வுகளை ஒருங்கிணைப்பதை மையமாகக் கொண்டு இலண்டனில் உள்ள உலகத் தமிழியல் ஆய்வு நடுவம் ஏற்பாடு செய்த உலகத் தமிழியல் மாநாடு *14-08-2013* முதல் *18-08-2013* வரை இலண்டன் பல்கலைக்கழகத்தில் சிறந்தமுறையில் நடந்தேறியிருக்கிறது.

இம்மாநாட்டின் அமைப்பாளராக திரு. செல்வா செல்வராஜா அவர்களும், தலைவராக

எமது நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும் பணிபுரிந்தார்கள்.

இந்த மாநாட்டிற்கு தமிழியல் தொடர்பான பதினைந்து விடயப் பரப்புகளிலும் உட்பிரிவுகளிலும் விடயங்கள் கோரப்பட்டிருந்தன. கிடைக்கப்பெற்ற ஆய்வுக் கட்டுரைகளில் 124 கட்டுரைகள் தேர்வின் பின்னர் மாநாட்டில் சமர்ப்பிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப் பெற்றன.

இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், நியூசிலாந்து, கனடா, ஐக்கிய இராச்சியம், டென்மார்க், சுவீடன், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து ஆய்வுக்கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

இலங்கையில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 38 ஆய்வுக் கட்டுரையாளர்களில் 15க்கும் மேற்பட்டவர்கள் மாநாட்டில் கலந்து தமது கட்டுரைகளை நேரில் சமர்ப்பிப்பதற்குத் தயாராக இருந்தனர். இவர்களில் 10 பேராளர்கள் இலண்டன் சென்று மாநாட்டிலும் கலந்து கொண்டனர்.

மாநாடு ஆரம்பமாகிய வேளையில் இந்த மாநாட்டின் நோக்கத்திற்கு எதிராக இனவாத சக்திகளால் அரசியல் சாயம் பூசப்பட்டது. அவர்களுக்கு அதற்கான ஒரு தேவை இருந்தது. இங்குள்ள ஊடகங்கள் பல அதனைப் பூதாகரமாக ஊதிப்பெருப்பித்தன.

குறிப்பாக பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தமிழ் அறிஞர்களே இதனால் பெரிதும் சங்கடத்துக்கு உள்ளானார்கள்.

இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் நூல் வடிவம் பெற்றுள்ளன. உரைகள் ஒலிப்பேழைகளாகவும் உள்ளன. இவற்றை ஆராய்ந்து பார்ப்பதன் மூலம் உண்மையில் இந்த மாநாட்டுக்கும் பிரிவினைவாத அரசியலுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்பதை எவரும் அறிந்துகொள்ள முடியும்.

இத்தகைய இனவாத விஷமச்செயல்கள், எதிர்காலத்தில் தமிழாய்வாளர்கள் வெளிநாடுகளில் இடம்பெறும் மாநாடுகளில் கலந்து தமிழியல் ஆய்வு முயற்சிகளில் ஈடுபடுவதற்குத் தயக்கத்தை ஏற்படுத்தும்.

பொதுவாக பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினரே தமிழியல் மேம்பாட்டுக்கான ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களது பணியும் அதுவே.

இந்நிலையில் எதிர்காலத்தில் இத்தகைய விஷமச் செயல்கள் ஏற்படாதவண்ணம் உரிய நடவடிக்கைகளை உரியகாலத்தில் மேற்கொள்ளல் முக்கியமானதாகும். இது பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினர் எதிர்காலத்தில் தமது தமிழ்ப் பணிகளை வெளிநாடுகளிலும் மேற்கொள்ளச் சிறந்த வழியாக அமையும் என நாம் கருதுகிறோம்.

ஞானம் 160 (செப்டெம்பர் 2013)

96



மாமனிதன் மண்டேலாவிடமிருந்து அரசியல்வாதிகள் கற்றுக்கொள்ளவேண்டிய அணுகுமுறைகள்

20ஆம் நூற்றாண்டின் மாமனிதரும் மகத்தான அரசியல் வாதியுமான நெல்சன் மண்டேலாவின் பேராற்றல் மிக்க பெரும் பயணம் 2013 டிசம்பர் மாதம் ஆறாம் திகதி முடிவுக்கு வந்தது.

வெள்ளையரின் இன ஒடுக்கல் ஆட்சி முறைக்கு எதிராகப் போராடி தென்னாபிரிக்க மக்களை விடுதலை செய்த மாபெரும் மனிதர், அவர்.

மண்டேலா, ஆபிரிக்க தேசிய இளைஞர் அணியை 1944இல் உருவாக்கி இன ஒடுக்கலுக்கான சட்டமறுப்புப் போராட்டம் ஆரம்பித்த போது, அந்நாட்டு அரசாங்கம் அவரை நகரை

விட்டு வெளியேறக்கூடாது' கூட்டங்களில் பங்கு கொள்ளக் கூடாது என்று தடைவிதித்தது. இந்நிலையில் மண்டேலா தனது சகாக்களுடன் சேர்ந்து காங்கிரஸின் கெரில்லாப் போராட்டத்தை ஆரம்பித்தார். அதுதெடர்பான திட்டங் களை விபரிக்கும் ஆவணங்கள் அரசாங்கத்தின் பிடியில் அகப்பட்டபோது அவரைப் பயங்கரவாதி எனப் பிரகடனப் படுத்தி மண்டேலாவுக்கும் அவரது ஏழு தோழர்களுக்கும் ஆயுள் தண்டனை விதித்தனர். சிறையில் இருந்தவண்ணமே மண்டேலா தனது போராட்டத்தை வெளியேயிருந்த சகாக்களின் உதவியோடு நடத்திக்கொண்டிருந்தார். ஈற்றில் வெள்ளையரின் ஒடுக்கல் ஆட்சி அடிபணிந்தது. 27 வருடங்கள் சிறையில் இருந்த 46664 இலக்கக் கைதியான மண்டேலா 1990 பெப்ரவரி 11ஆம் திகதி விடுதலையாகி வெளியே வந்தார்.

அடுத்த வருடம் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற சகல இனங்களுக்குமான தேர்தலில் மண்டேலா அமோகமான ஆதரவுடன் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். தென்னாபிரிக்காவின் கடைசி வெள்ளையின ஜனாதிபதி டபிள்யூ.டி. கிளார்க் அவர்கள் மண்டேலாவை 20ஆம் நூற் றாண்டின் மகத்தான தலைவர்களில் ஒருவர் என விதந்து குறிப்பிட்டார்.

மண்டேலாவின் தலைமைத்துவப் பண்பின் சிறப்பம் சமாகக் கருதப்படுவது, அவர் ஜனாதிபதியாகி ஐந்து வருட காலம் பதவி வகித்தபின் மீண்டும் பதிவிவகிக்க ஆசைப் படாது அதிகாரத்தில் இருந்து இறங்குவதற்கு அவர் எடுத்த முடிவாகும். அவர் விரும்பியிருந்தால் அவரது ஆயுட் காலம்வரை அவரே ஜனாதிபதியாக இருக்க மக்களின் ஆதரவு இருந்தது. தனது நாட்டின் ஜனநாயக மரபு ஆரோக்கியமான வழியில் செல்வதற்கு தனிமனித ஆளுமை, புகழை மையமாகக்கொண்ட செயற்பாடு ஆகியவை தடையாக இருக்கக் கூடாதென அவர் விரும்பினார்.

குறிப்பிடத்தக்க மற்றொரு விடயம், மண்டேலா, தனது கொள்கையில் இருந்து விலகாமலே அரசியல்

சூழ்நிலைக்கேற்ப தனது செயற்பாடுகளை மாற்றிக்கொண்டார். அவரது இந்த ஆற்றலே இன ஒதுக்கலை முடிவுக்குக் கொண்டுவருவதில் முக்கிய காரணியாக விளங்கியது.

அடுத்ததாக, நல்லிணக்கத்தைக் காண்பதற்கு அவர் கையாண்ட அணுகுமுறைகளும் கடந்தகாலத்தை மறந்து புதிய சிந்தனையுடன் முன்னோக்கி நகர்வதற்கு அவர் மேற்கொண்ட திடசங்கற்பமும் விதந்து பாராட்டத்தக்கவை. இவை நவீன யுகத்தின ஓர் அதிசயம் என வர்ணிக்கப்படுகிறது.

தனது முன்னாள் ஒடுக்கு முறையாளர்களை மன்னிப்பதில் அவர் பெருந்தன்மையுடன் செயற்பட்டார். மண்டேலா தன்னைச் சிறைக்கனுப்பிய சட்டத்தரணியுடன் மதிய விருந்துண்டு மகிழ்ந்தார். தனது ஜனாதிபதி பதவிப்பிரமாண வைபவத்தின்போது தேசிய கீதம் பாடும் வைபவத்திற்கு முக்கிய அதிதியாக தனது சிறைக்காவலரை அழைத்திருந்தார். தன்னைச் சிறையில் அடைத்த வெள்ளை இனப் பிரதமரின் விதவை மனைவிக்கு தேநீர் விருந்தளிக்க நூறுமைல்கள் பயணம் செய்தார்.

இதயத்திலிருந்து வெறுப்புணர்வை நீக்கிவிட்டால் நல்லிணக் கத்தையும் அமைதியையும் காணமுடியும் என உலகத்துக்கு நிரூபித்துக்காட்டிய பெருமகனார், அவர்.

இன்று நல்லிணக்கத்தை வேண்டிநிற்கின்ற, நெருக்கடிகள் நிலவுகின்ற, நாடுகளுக் கெல்லாம் வழிகாட்டும் முன்னுதாரண புருஷராக விளங்குகிறார் மண்டேலா. அவரது கொள்கைகளும் அணுகுமுறைகளும் உலக அரசியலுக்கு மட்டுமல்ல இலங்கை அரசியலுக்கும் வழிகாட்டியாக அமையும்.

ஞானம் 164 (ஜனவரி 2014)

புரிதல்

✦ இல.164ம் “ஞானம்” இதழின் ஆசிரியர் பக்கம் என்றும் போல் இன்றும் என்னைக் கவர்ந்தது. இந்த நூற்றாண்டின் எழுச்சிமிக்க ஒரு தலைவர் நெல்ஸன் மண்டேலா என்பதை ஆசிரியர் நல்ல முறையில் விளக்கி யிருப்பதைக் காண்கின்றேன். பேராசிரியர் துரை மனோகரன் அவர்களும் தனது புத்தியெழுத்தில் இதையே பகர்கின்றார். அவர் அருகேயிருக்க தகுதியில்லாத தலைவர்கள் அவர் மரணத்தைக் காணச்சென்றுள்ளதைப் பற்றி பேராசிரியரின் ஆதங்கம் வரவேற்கத்தக்கது. அத்துடன் தலைவர் மண்டேலா கற்றுக்கொடுத்த ‘பலவீனமான நிலையில் சரணடையாதே பலமான நிலையில் பழிவாங்காதே’ என்ற தாரக மந்திரத்தை இன்னொரு புரட்சித் தலைவராக உலகம் கண்ட அரபாத் மறந்தார். யாஸிர் அரபாத்தின் அந்திம காலம் இதை எண்பிக்கின்றது என்பதையும் நான் நினைவு கூர்கின்றேன்.

– பாணந்துறை எம்.பி.எம்.நிஸ்வான் (165–பெப்ரவரி2014)

97



‘பாரதரத்னா’ அப்துல் கலாம்

உலகப் பெருந்தலைவர்களில் ஒருவராகக் கணிப்புப் பெற்றிருந்த இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் ‘பாரதரத்னா‘ அப்துல் கலாம் 26-07-2015 அன்று தனது 83ஆவது வயதில் காலமானார் என்ற செய்தி உலகின் பலபாகங்களிலும் வாழும் மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

2002-2007 காலப்பகுதியில் இந்தியக் குடியரசின் பதினோராவது குடியரசுத் தலைவராக விளங்கிய அபதுல்கலாம் அடிப் படையில் ஒரு தலைசிறந்த அணு ஆயுத விஞ்ஞானி. அவரது துறைசார்ந்த உழைப்பும் அர்ப்பணிப்பும் அணு ஆயுத சாதனைத்திறனிலும் செயற்கைக்கோள் ஏவுதிறனிலும் இந்தியாவைச் சர்வதேச அளவில் தலைநிமிர வைத்தது. அதன்பயனாக அவர் இந்தியாவின் குடியரசுத் தலைவராக உயரமுடிந்தது.

அப்துல்கலாம் 1931ஆம் ஆண்டு அக்டோபர் 15ஆம் திகதி ஜைனுலாப்தீனுக்கும் ஆஷயம்மா

வுக்கும் மகனாகத் தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராமேஸ்வரத்தில் பிறந்தார். இவரது தந்தை ஒரு கடலோரப் படகுக்காரர்.

தனது உயர்கல்வியான விண்வெளி பொறியியல் பட்டப்படிப்பை சென்னையில் உள்ள எம். ஐ. டி. கல்லூரியில் பயின்று முதுமாணிப்பட்டம் பெற்றார். 1960ல் வானூர்தி அமைப்புப் பிரிவில் விஞ்ஞானியாகத் தனது ஆராய்ச்சிப் பணியைத் தொடங்கிய கலாம் பின்னர் இந்திய விண்வெளி ஆராய்சிக்கூடத்தில் தனது ஆராய்ச்சிப்பணிகளைத் தொடர்ந்து செயற்கைக்கோள் ஏவுதலில் முக்கிய பங்கு வகித்தார். 1980ல் ரோகினி-1 என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச்செய்து இந்தியாவுக்குப் பெருமை சேர்த்தார். தொடர்ந்தும் ஐந்து ஏவுகணைத் திட்டங்களில் பணிபுரிந்தார். இந்தியாவை ஓர் அணு ஆயுத வல்லரசாக்கிய பெருமையும் அப்துல்கலாமையே சாரும்.

இவர் தனது ஜனாதிபதிக்காலத்திலும் அதன்பின்னரும் பல சமூகப் பொருளாதார முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டார். தனது பதவிக்காலத்தில் பல இலட்சம் மாணவர்களைச் சந்தித்த முதல் குடியரசுத் தவைராக இவர் போற்றப்படுகிறார். கால் பழுதுபட்டவர்களுக்கு எடைகுறைந்த மாற்றுக்கால்களை வழங்கும் திட்டத்தை அமுல்படுத்தினார்.

அப்துல் கலாம் ஓர் சிறந்த ஆசிரியர். அனைவராலும் மதிக்கப்பெற்ற சிறந்த பேச்சாளர். வருங்கால இளைஞர்களின் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். 83வயதிலும் துவண்டு போகாமல் தமிழகம் முழுவதும் பல மாவட்டங்களுக்குப் பயணம் செய்து இயற்கையின் அவசியத்தையும் மரங்களின் முக்கியத்துவத்தையும் எடுத்தியம்பியவர்.

கடந்த ஜுன் மாதம் அப்துல்கலாம் இலங்கை விஜயத்தை மேற்கொண்டு தென்னிலைங்கையில் நடைபெற்ற மின்சக்தி எரிசக்தி மாநாட்டில் கலந்து சிறப்புரை ஆற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் தனது உரையில் “சூரியக் கலம் நூறு வீதம் பாதுகாப்பானது. நவீன காலகட்டத்துக்கு இது

மிகவும் முக்கியமானது. இலங்கையில் ஒவ்வொரு கூரைக்கும் ஒரு சூரியக்கலம் என்ற ரீதியில் பயன்படுத்தப்பட்டால் பசுமையான இலங்கையைக் கட்டியெழுப்ப முடியும்" என்ற முக்கியமான செய்தியொன்றையும் தெரிவித்தார்.

பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்திலும் யாழப்பாணம் இந்துக்கல்லூரிலும் இளந்தலைமுறையினர் மத்தியில் பல ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கூறிச் சென்றார்.

இவரது சுயசரிதை 'அக்கினிச் சிறகுகள்' என்ற மகுடத்தில் நூலுருவம் பெற்றுள்ளது.

ஒரு நாட்டின் தலைவர் எவ்வாறான பண்புகளைக் கொண்டவராக இருக்க வேண்டும் என்பதற்கு முன்னு தாரணமாகத் திகழ்ந்தவர் அப்துல்கலாம்.

ஞானம் – 183 (ஆகஸ்ட் 2015)

புரிதல்

✦ பாரத ரத்தினா அப்துல்கலாம் மறைந்த செய்தியையும் அவரைப்பற்றிய முக்கியமான குறிப்புகளையும் ஆசிரியர் தலையங்கமாகத் தந்திருப்பது சிறப்பானது. அதேவேளை அப்துல் கலாமின் படத்தையும் அட்டைப்படத்தில் போட்டிருப்பது மேலும் சிறப்பானது.

–சதீஷ், சுவிஸ். ஞானம்–184 (செப்டெம்பர்–2015)

98



யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கொலை இனவாதத்தைத் தூண்டும் தீயசக்திகளின் திட்டமிட்டசெயலா?

பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பலியாகி இருக்கிறார்கள். கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் 21.10.2016 வியாழக்கிழமை நள்ளிரவு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த கந்தரோடையைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் (24), கிளிநொச்சி இரணைமடுவைச் சேர்ந்த நடராஜா கஜன் (23) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். இச்சம்பவம் நாடு முழுவதிலும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கிறது. யாழ். பல்கலைக்கழகத்தின் இயக்கம் ஸ்தம்பித்துள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் சென்ற மாணவர்கள்மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யக் காரணமென்ன?

மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் பொலிசாரின் அறிவுறுத்தலை மீறி நிறுத்தாமல் சென்றால், அவர்கள்மீது சுடுவதற்கு பொலிசாருக்கு அதிகாரம் இல்லை. அவர்கள் தப்பிச்செல்ல முயற்சித்தால் அவர்களை துரத்திச் சென்று, நிறுத்தியிருக்க வேண்டும். துப்பாக்கிப் பிரயோகம் செய்வ தானால் முதலில் ஆகாயத்தை நோக்கி சுட்டுவிட்டு, அதன் பின்னர் தப்பியோட முயன்றவர்களின் முழங்காலின் கீழே சுட்டிருக்கவேண்டும்.

பொலிசாரின் அறிவுறுத்தலை மீறி மாணவர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் தப்பிச் செல்ல முயன்றால் முதுகிலேயே சூடுபட்டிருக்கும். கொல்லப்பட்ட மாணவன் ஒருவனது மார்பிலே சூடுபட்டு, துப்பாக்கிச் சன்னம் துளைத்துச் சென்றிருப்பதைச் சட்ட மருத்துவப் பரிசோதனை அறிக்கை கூறுகிறது.

நெஞ்சிலே சூடுபட்டதென்பது கொலை செய்யும் நோக்கிலேயே சுடப்பட்டது என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

பொலிசாருக்கு வழங்கப்படும் துப்பாக்கிகள் தொடர் பாகவும், தோட்டாக்கள் தொடர்பாகவும் பொலிஸ் நிலையத்தில் தரவுகள் பேணப்படும் நிலையில், பொலிசாரால் சம்பவம் மூடிமறைக்க முயன்றமையும், மறுநாள் காலையில் சம்பவம் நடந்த இடத்தில் பொலிசார் குவிக்கப்பட்டமையும் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன. பொலிசார் இக்கொலைச் சம்பவத்தை மூடிமறைக்க முயன்றதன் காரணம்தான் என்ன?

குற்றங்களைக் கட்டுப்படுத்துகிறோம் என்ற போர்வையில் பொலிசாரின் வரம்புமீறிய செயல்களை ஏற்றுக்கொள்ள முடியாது. தான்தோன்றித்தனமாக ஈவிரக்கமற்ற கொலை களைச் செய்வதற்கு எவருக்கும் உரிமையில்லை.

பொலிசாரின் அத்துமீறிய சம்பவங்கள் குடாநாட்டில் அடிக்கடி இடம்பெறுவதும், அதனால் பெருங் கலவரங்கள் ஏற்படுவதும் வரலாறாகிவிட்டது. தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ்ப் பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டால் இத்தகைய அசம்பாவிதங்கள் இடம்பெற வாய்ப்பில்லை.

எதிர்காலம்குறித்த நம்பிக்கையுடன் இருந்த இரு இளம் உயிர்கள் அநியாயமாகக் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன. அவர்களை நம்பியிருந்த குடும்பங்களும் பெரும் சோகத்தில் மூழ்கியுள்ளன. இந்த ஈடுசெய்ய முடியாத இழப்பை அவர்கள் எவ்வாறுதான் தாங்கிக் கொள்வார்கள்?

இதேவேளை இனவாதத்தை உருவாக்கி, ஊதிப் பெருக்கும் சக்திகளின் திட்டமிட்ட சதியாகவும் இது இருக்கலாம் என்ற எண்ணம் தமிழ்மக்கள் பலரது நெஞ்சில் கேள்விக்குறியாகி உள்ளது.

தீயசக்திகளைக் கட்டுப்படுத்தி நாட்டின் அமைதியை ஏற்படுத்துவது அரசின் தலையாய கடமையாகும். உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதியும் பொலிஸ்மா அதிபரும் உறுதிமொழி அளித்துள்ளார்கள். இந்த உறுதி மொழிகளுக்கும் அப்பால், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதவாறு பார்த்துக்கொள்வதே அரசின் தலையாய கடமையாகும்.

ஞானம்–198 (நவம்பர் 2016)

99



உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு 2016 ஆய்வுப் பொன்விழா

1966ஆம் ஆண்டு இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துக்கான ஆய்வுவிழா முதன்முதலில் இலங்கையில் மருதமுனை அல் - மனார் மஹாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. இவ் விழா நடைபெற்று 50 வருடங்கள் கழிந்த நிலையில் இம்மாதம் 11,12,13ஆம் திகதிகளில் கொழும்பில், உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு - 2016, ஆய்வுப் பெருவிழா இடம் பெறவுள்ளது.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்று ஒன்று உண்டு என்பதனைத் தமிழ் உலகுக்கு எடுத்துக்காட்டியவர் சுவாமி விபுலாநந்தர் ஆவார்.

1945ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் ஒரு நேர்முகப்பரீட்சை இடம்பெற்றது. அந்த நேர்முகத் தேர்வுக்குழுவில் சுவாமி விபுலாநந்தர் ஓர் உறுப்பினராக இருந்தார். நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய இளைஞர்

உவைஸிடம் சுவாமி விபுலாநந்தர், இஸ்லாமிய அடிப்படையில் தோற்றிய ஒரு காப்பியத்தைக் குறிப்பிடும்படி கேட்டார். உவைஸிற்குப் பதில் தெரியவில்லை. இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய ஒரு சிறந்த காப்பியம் **சீறாப்புராணம்** என்பதை அன்று உவைஸ் அறிந்திருக்கவில்லை. இந்தச் சிறுசம்பவம் முதன்முதலில் உவைஸை இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் தொடர்பாகச் சிந்திக்க வைத்தது. பிற்காலத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு அவரை முழுமூச்சுடன் ஈடுபட வழிவகுத்தது. இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு உவைஸ் என்னும் வாய்க்கால் வழியாக ஓடி பெருவளம் பெருக்கியது. அதன்பேறாக தமிழின் முதலாவது இஸ்லாமியத் தமிழ்ப் பேராசிரியராக (1979) அவர் உயர்வு பெற்றார். அதுவும் கடல்கடந்த புகழாக அது விளங்கிற்று. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் அவர் அப்பதவியை வகித்தார்.

14ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'பல்சந்தமாலை' என்ற சிற்றிலக்கியத்துடன் இஸ்லாமிய இலக்கியப் பதிவுகள் தமிழ் இலக்கியத்தில் இடம்பெறத் தொடங்கின. தமிழ் இலக்கியத்தை ஆய்ந்து அடையாளப்படுத்திய அறிஞர் எஸ். வையாபுரிப்பிள்ளை பல்சந்தமாலை என்னும் நூலில் காணப்பட்ட எட்டுச் செய்யுள்கள் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தின் முதலாவது பதிவு எனக்கண்டு பதிவுசெய்தார்.

அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட இஸ்லாமியத் தமிழ் இலக்கிய நூல்கள் உலகுக்குக் கிடைத்துள்ளதாகப் பதிவுகள் உள்ளன.

1973ஆம் ஆண்டிலிருந்து 2014 வரை தமிழ்நாடு, இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளில் பத்து உலக இஸ்லாமிய மாநாடுகள் நடந்தேறியுள்ளன.

தற்போது நடக்கவிருக்கும் மாநாடு பதினோராவது மாநாடாகும், இம்மாநாட்டின் தலைவராக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பணியாற்றவுள்ளார். இம்மாநாட்டில்

இலங்கை, இந்தியா, மலேஷியா, துபாய் ஆகிய நாடுகளி லிருந்து அறிஞர்கள் பங்குபற்றி ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கவுள்ளனர். உரையரங்கு, கவியரங்கு, கலையரங்கு, இசையரங்கு என்பனவும் இடம்பெறவிருக்கின்றன. மேலும் இந்த மாநாட்டின் மூலம் பின்வரும் செயற்திட்டங்களை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ள தாக அறியமுடிகிறது

1. தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் ஒரு இஸ்லாமியக் கற்கைநெறிக்கான பீடத்தை அமைத்தல்
2. உயர்கல்விப் பாடத்திட்டத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தை ஒரு பாடமாகச் சேர்த்துக் கொள்ளல்.
3. பிரதி வருடமும் முஸ்லிம் படைப்பிலக்கியங்களுக்கு விருதளித்தல்
4. சிறந்த இஸ்லாமிய நூல்களைப் பதிப்பித்தல்
5. நான்கு வருடங்களுக்கு ஒருமுறை உலக மாநாடுகளை நடத்துதல்

இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம் நடத்தவிருக்கும் இந்த இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு-2016, ஆய்வுப் பொன்விழா இஸ்லாமிய இலக்கிய ஆய்வு சிறந்தோங்க மேலும் பல வெளிகளைத் திறந்துவிடும் எனத் திடமாக எதிர்பார்க்கலாம்.

ஞானம்–199 (டிசம்பர் 2016)

100

அரசுகளின் அலட்சியத்தால் குப்பைக்குள் புதையுண்ட மனித உயிர்கள்

தமிழ் சிங்கள புதுவருடமான 14-04-2017 அன்று கொலன்னாவை நகரசபைக்குட்பட்ட பிரதேசமான மீதொட்டமுல்லையில் குப்பை மேடு சரிந்ததில் இதுவரை 32 பேர் இறந்துள் ளார்கள். 8 பேர்வரை காணாமல் போயுள்ளனர். 11பேர் பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். 50 வீடுகள் புதையுண்டுள்ளன. 100 மீட்டர் உயரத்துக்கும் அதிகமான இந்தக் குப்பை மேட்டுக்கு மேலாகச் சென்ற அதிசக்திவாய்ந்த 132,000 வோட் மின்சாரக்கம்பி அறுந்து விழுந்தும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பு மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் சேகரிக்கப்படும் குப்பைகள் மீதொட்டமுல்லையில் சுமார் 28 ஏக்கர் நிலப்பரப்பில் கொட்டப்பட்டு வந்துள்ளன. இலங்கையில் அதிக குப்பை சேருமிடமாக மீதொட்டமுல்லை இருந்து வந்துள்ளது.

இந்தக் குப்பைமேடு சரிந்து விழுந்து ஆபத்தை ஏற்படுத்தப்போகிறது என்பதை மூன்று வருடங்களுக்கு முன்னர் பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் அனுருத்த கருணாரத்தின எச்சரித்திருந்தார். அச்செய்தி ஞாயிறு 'லங்காதீப' பத்திரிகையில் முன்பக்கச் செய்தியாக வந்திருந்தது.

இந்தக் குப்பைகள் உருவாக்கும் விஷவாயு, கிருமிகள் என்பன விதம்விதமான நோய்களை உருவாக்குகின்றன. இவற்றிற்கு அந்தப் பிரதேச மக்கள் முகம்கொடுக்கின்றனர். அங்கு வாழும் மக்களுக்கு ஏற்படும் நோய்கள் பற்றி விசேட கட்டுரை ஒன்றை 'திவய்ன' பத்திரிகை 29-05-2016இல் வெளியிட்டிருந்தது.

'இறுதின' என்ற பத்திரிகை 05-06-2016 வெளியிட்ட கட்டுரைக்கு இட்ட தலைப்பு "என்றாவது இந்தக் குப்பை மலை சரிந்துதான் சாவோம்" என்பதாகும். அதனைக் கூறியவர் அப்பிரதேசத்தைச் சேர்ந்த தாயொருவர்.

மீதொட்டமுல்லை ஸ்ரீராகுல பாடசாலைச் சிறுவர்களால் குப்பை மேட்டிலிருந்து பரவிய துர்நாற்றத்தை சகிக்க முடியாமல் போனதால் 2013 ஜனவரி முதல் மார்ச் வரை மூன்று மாதம் அப்பாடசாலை மூடப்பட்டது

தமக்கு நேரப்போகும் அழிவைப்பற்றி பத்தாண்டுகளுக்கு மேலாக அப்பகுதி மக்கள் அரசுக்கு எடுத்துக்கூறி தம்மைக் காப்பாற்றுமாறு போராடி வந்துள்ளனர். ஆட்சியில் இருந்த அரசு தனது இரும்புக் கரங்களைக்கொண்டும் சண்டியர்களைக்கொண்டும் அப்போராட்டங்களை நசுக்கி வந்துள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தில், கொழும்பு மாநகரசபை ஆட்சி ஐக்கிய தேசியக்கட்சியிடமும் நாட்டின் ஆட்சி ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணியிடமும் இருந்ததால் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாதிருந்ததாக முன்னர் கூறப்பட்டது. ஆனால் 2015 ஆம் ஆண்டு ஜனவரியில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டபின்னரும் இப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

இந்த அனர்த்தம் நடந்த பின்னரும் கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பைகளை பிலியந்தலை கரதியான மற்றும் வத்தளை போப்பிட்டியா போன்ற பகுதிகளில் கொட்டுவதற்கு எதிராக மக்கள் நடத்தும் போராட்டங்கள் கலகத்தடுப்பு பொலிசாரால் தாக்குதல் நடத்தி அடக்கப்படுகின்றன.

மக்களின் கோரிக்கைகளை உதாசீனம் செய்து மக்களைப் பலிகொள்ளும் நிலை ஏற்படுவதை அரசு மாற்றிக் கொள்ளவேண்டும். பொதுவாகவே குப்பைகளை அகற்றுவது என்பது ஓர் உலகளாவிய பிரச்சினை. ஆனால் வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளில் இது ஒரு பிரச்சினையே அல்ல.

குப்பைகளை, திண்மக்கழிவுகளை இரண்டு வகையாகப் பிரிப்பர். பிளாஸ்டிக், பேப்பர், கண்ணாடி, உலோகங்கள் போன்றவை ஒருவகை. அவற்றை மறுசுழற்சி (Recycle) செய்து மீண்டும் பாவிக்க முடியும்

காய்கறி, உணவு, தாவரம் போன்றவை மறுசுழற்சி செய்ய முடியாதவை. அவை உக்கக்கூடிய கழிவுகள். அவற்றிலிருந்து உரம், மீதேன் வாயு போன்றவற்றைத் தயாரிக்கலாம்.

இத்தகைய ஒரு வழிமுறையைக் கையாண்டு எதிர்காலத்தில் நமது நாட்டிலும் இந்தக் கழிவகற்றும் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்.

இத்தகைய வழிமுறைகளைக் கையாள்வதற்கு உலக நாடுகளின் தொழில்நுட்ப உதவியைப் பெறவேண்டும். அரசு இதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளவேண்டும். அதற்கான துரித நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுவே இப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வாக அமையும்.

ஞானம் 204 (மே 2017)

புரிதல்

✦ இல. 204 மே மாத ஞானம் இதழ் 'ஆசிரியர் பக்கம்' குறிப்பிட்டுள்ள குப்பை மேட்டின் விபரங்கள் 'குப்பை மேட்டின் வரலாறு" என்றே கூறவேண்டும். இன்று நாட்டில் குப்பை மேடுகள் அரசியலாகிவிட்டது. அத்துடன் நாட்டின் கழிவுகளின் குப்பை மேட்டை விட இனவாத குப்பை மேடுகளும் பெருகிக் கொண்டு வருகின்றது. நாற்றமெடுக்கும் இக்குப்பை மேடுகளை அழிக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் பாரிய விபரீதங்களை சந்திக்க நேரிடும். டெங்கு அழிக்க எடுக்கும் நடவடிக்கைகளை விட இனவாதம் என்ற நோயை தடுக்க சம்பந்தப்பட்டோர் முன்வரவேண்டும்.

எம்.பி.எம்.நிஸ்வான், பாணந்துறை (205–ஜூன் 2017)

101

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் வெள்ளிவிழா

புலம்பெயர் தமிழர்களின் கலை இலக்கிய பண்பாட்டு நிறுவனங்களில் பழைமை வாய்ந்த தொன்றாக கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் திகழ்கிறது. இந்நிறுவனம் 19-06-1993இல் ஆரம் பிக்கப்பட்டது. அளவெட்டி ஸ்ரீஸ்கந்தராசா, மொன்றியல் க. தெ. சண்முகராசா, கவிநாயகர் கந்தவனம் ஆகியோரது எண்ணக்கருவில் தோன் றிய இந்நிறுவனம் தொடர்ச்சியாகப் பலதரப் பட்ட கலை இலக்கியப் பணிகளை ஆற்றி வருகின்றது.

ஆரம்ப காலந்தொட்டு இந்நிறுவனத்தின் தலைவர்களாக முறையே திரு. க.தெ. சண்முக ராசா, திரு. திருமாவளவன், கவிஞர் கந்தவனம், திரு. லோகேந்திரலிங்கம், திரு. சின்னையா சிவ னேசன், திரு. த.சிவபாலு, மீண்டும்திரு. சின்னையா சிவனேசன், கலாநிதி எஸ்.சிவநாயகமூர்த்தி, பேராசிரியர் இ.பாலசுந்தரம் ஆகியோர் பணி யாற்றியுள்ளார்கள்.

இந்நிறுவனத்தின் பணிகளாக இலக்கியக் கருத்தரங்குகள், நூற்பதிப்பு, நூல்வெளியீட்டு விழாக்கள், எழுத்தாளர் சந்திப்பு, நாடகப் பயிற்சிப்பட்டறை, கவிதைக் கருத்தரங்கு, மரபுக்கவிதைச் செயன்முறை வகுப்பு, சிறுகதைப் பயிற்சிப் பட்டறை, சிறுகதைப்போட்டி, எழுத்தாளர் கௌரவிப்பு, நாடகக் கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள், கவியரங்குகள், பிறநாட்டிலிருந்து வரும் தமிழ் இலக்கிய எழுத் தாளர்களையும் கலைஞர்களையும் வரவேற்றுக் கௌர வித்தல், அவர்களுக்கு விருந்துபசாரங்கள் வைத்தல், கனடா வாழ் தமிழ் எழுத்தாளர்களைக் கௌரவித்தல், மறைந்த எழுத்தாளர்களுக்கு இரங்கல் கூட்டம் வைத்தல் போன்றவை உட்பட மேலும் பல பணிகளைச் சிறப்பாக ஆற்றிவருகிறது.

1993இல் கனடாவின் பன்னிரு எழுத்தாளர்களின் சிறுகதை களைத் தொகுத்து 'அரும்பு' என்ற பெயரில் ஒரு சிறுகதைத் தொகுப்பினையும் இந்நிறுவனம் வெளியிட்டது.

இந்நிறுவனத்தின் உறுப்பினர்களில் பலர் எழுத்துப் பணிகளுடன் பிற கலைப்பணிகளிலும் கல்வித் தொண்டு களிலும் சமூகசேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

பத்தாவது ஆண்டு நிறைவு விழா 20-12-2003இல் சிறப்பாக நடைபெற்றபோது நிறுவனத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட அறிஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இருபதாவது ஆண்டுவிழா 27-03-2013இல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று முன்னாள் தலைவர்கள் யாபேரும் சிறப்புக் கௌரவம் பெற்றனர். அத்துடன் 'சங்கப் பொழில்' என்ற 170 பக்க சஞ்சிகையும் வெளியிடப்பெற்றது. 'சங்கப் பொழில்-2' மலர் 2016இல் ஆண்டுமலராக வெளியிடப்பட்டது.

இந்நிறுவனத்தின் வரலாற்றில் முதற்தடவையாக 10-10-2016இல் ஒரு நாடகவிழா வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. ஒரு நாட்டுக்கூத்தும் நாட்டிய நாடகமும் அன்று மேடையேற்றப்பட்டன. அத்துடன் ஒரு மலரும் வெளியிடப் பட்டது.

இந்நிறுவனத்தின் வெள்ளிவிழா 28-04-2018இல் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் இன்னிசை

விருந்து, வரவேற்பு நடனம், வாழ்த்துரைகள், சிறப்புரைகள், வாழ்நாட்சாதனையாளர் கௌரவிப்பு, இலங்கையில் இருந்து வந்திருந்த பேராசிரியர் சிவஞானம் சிவசங்கரின் பிரதம விருந்தினர் உரை, சிறப்புரைகள், முன்னாள் தலைவர்கள் கௌரவிப்பு, வீணாகானம் இசைநிகழ்ச்சி, நாட்டிய நாடகம், வெள்ளிவிழா மலர் வெளியீடு ஆகியன இடம்பெற்றன.

புலம்பெயர் மண்ணில் இத்தகையதொரு பெரும் விழாவை நடத்தியவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

இத்தகைய பல்துறைப் பணிகளை நீண்டகாலம் தொடர்ச்சியாக ஆற்றிவரும் நிறுவனங்களை புலம் பெயர்நாடுகளில் காண்பது சிறப்புக்குரியது.

'கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்' நிறுவனத்தினரின் தொடர்ச்சியான கலை இலக்கியப்பணி மென்மேலும் தொடர்ந்து சிறக்கவேண்டும் என ஞானம் வாழ்த்தி மகிழ்கிறது.

ஞானம் –216 (மே 2018)

புரிதல்கள் சில....

✦ இரண்டு குறிப்புகள்

1. கழிவிரக்கப்படுதல்

செ.யோகநாதனின் பேட்டி படித்தேன் (ஞானம் இதழ் - 4). வழக்கம்போல தமிழ் இலக்கிய உலகின் சக்கரவர்த்தியாக முடிசூடிக் கொண்டு, இலக்கிய சிம்மாசனத்தில் அவர் கொலுவீற்றிருக்கும் காட்சி அற்புதமாக இருக்கிறது. இலங்கை இலக்கிய உலகில் வெற்றிக்கொடி நாட்டியபின், தமிழகத்துக்குப் படைகொண்டு சென்று அதனையும் வெற்றிகொண்டு 14 ஆண்டுகள் தன் ஆட்சியை அங்கும் நிலைநாட்டி, தாயகம் மீண்டு இங்குள்ள பத்திரிகைகளிலெல்லாம் தன் சிம்மாசனத்தின் புகழ் ஒளியை வீசிக் கொண்டிருப்பவர் அவர்.

அறுபதுக்கும் அதிகமான புத்தகங்கள் - இருபதாயிரம் பக்கங்கள் எழுதிக்குவித்திருக்கிறார். இது அசுர சாதனை இல்லையா? இச் சாதனைக்காக 'தமிழகத்தின் அனேகமாக எல்லாப் பரிசுகளையும் பெற்று', ஈழத்திலும் எத்தனையோ பரிசுகளையும் விருதுகளையும் வென்று, தன் யுத்த தந்திரங்களால் இன்னும் எத்தனையோ பரிசுகளையும் விருதுகளையும் வெல்வதற்கான தாகத்துடன் காத்திருப்பவர் அவர். உலகில் அதிக விருதுகள் வென்ற எழுத்தாளர் என்று அவரது பெயர் கின்னஸ் புத்தகத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட இருக்கிறது.

இத்தகைய பெருமைக்கும் புகழுக்கும் உரிய எழுத்துலகச் சக்கரவர்த்தியை, அவரது எழுத்தின் மகிமையைப் புரிந்துகொள்ளாது 'நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே' என்ற, ஏற்கனவே தமிழகத்தில் இருபெரும் விருதுகள் பெற்ற, அவரது மகத்தான நாவலுக்கு இலங்கையில் கிடைக்கவிருந்த பரிசை, 'அந்த நாவலின் தளத்தையோ, அந்த

மக்களின் வாழ்வையோ, அவர்களின் பேச்சு வழக்கையோ கூட அறியாத" அறிவிலித்தனமான, விடலைத்தனமான அற்ப விமர்சகனான நான் தடுத்திருக்கிறேன். இது எத்தகைய படுபாதகச் செயல்!

இலங்கையில் 'ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தைச் சைவர்களே நடத்தினார்கள்' என்ற அடிப்படை வரலாற்றை அறியாத நான், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக - வெள்ளைக்காரன் யாழ்ப்பாணத்தில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்ட புகையிரதப்பாதை அமைத்ததிற்கு எதிராக - கிராமப்புறத்து சைவத் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தாங்கிப் போராடினார்கள் என்ற அடிப்படை வரலாற்றை அறியாத நான், நூறு ஆண்டுகளுக்கு முன்னரே ஆட்சியாளரின் அடக்குமுறை காரணமாக யாழ்ப்பாணக் கிராமப்புறத்து இளைஞர்கள் அனைவருமே தங்கள் வீடுகளைத் துறந்து அயலூர்களிலும் காடுகளிலும் அன்னிய நாட்டிலும் தலைமறைவு வாழ்க்கை வாழ நேர்ந்த சரித்திரம்பற்றி எதுவும் அறியாத நான், யாருக்கும் அடங்காத காளை மாட்டைத் தன் உடற்பலத்தாலும் நெஞ்சுரத்தாலும் அடக்கி, காதலுக்கு அஞ்சித் தயங்கும் இளைஞன் ஆறுமுகத்தை வலுக்கட்டாயமாக கொவ்வம் பற்றைக்குள் இழுத்துச் சென்று அவனைப் புணர்ந்து மகிழும் ருக்குமணி போன்ற பதின்மூன்றே வயதுச் சிறுமிகள் வாழும் யாழ்ப்பாணக் கிராமப் பண்பாடுபற்றி ஏதும் அறியாத நான் இவற்றையெல்லாம் உண்மைக்கு உண்மையாகச் சித்திரிக்கும் 'உண்மையான வரலாற்று நாவலின்' மகிமையைப் புரிந்துகொள்ளாது, அதைக் காமமும் வன்முறையும் கொண்டு பின்னப்பட்ட போலி வரலாற்றுப் புனைவு என்றும் அதனால் அது பரிசுக்குத் தகுதியற்றது என்றும் தீர்ப்பு வழங்கியதும், தமிழகத்தில் அதற்குப் பரிசு வழங்கியவர்களை அனுதாபத்துக்குரியவர்களாக்கியதும் எவ்வளவு வெட்கக் கேடு! இதைவிடக் கொடுமை, இந்த எழுத்துலகச் சக்கரவர்த்தியின் 500 பக்க மகத்தான நாவலைப் புறக்கணித்து, நேற்று எழுதத் தொடங்கிய, ஊர்பேர் தெரியாத தாமரைச்செல்வியின் 93 பக்கங்களையே கொண்ட மிகச்சிறிய தாகம் நாவலைப் பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுத்தது. அதுமட்டுமன்றி வளவளா என்று எழுதும் சிரேஷ்ட எழுத்தாளர்கள் தாமரைச்செல்வியிடம் கற்றுக்கொள்வதற்கு அதிகம் உண்டு என்று விடலைத்தனமாகக் குறிப்பும் எழுதியது. இவ்வாறு அறிவிலித்தனமாக, விடலைத்தனமாக விமர்சித்து ஈரேழு பதினாலு உலகத்திலும் வெற்றிக்கொடி நாட்டிய எழுத்துலகச் சக்கரவர்த்தியின் மனதைப் புண்படுத்தி அவரது வெஞ்சினத்துக்கும் ஆளாகி விட்டேனே என்று இப்போது கழிவிரக்கப்படுகிறேன். எழுத்துலக வேந்தர் யோகநாதனின் 'பெருமைகளை' எல்லாம் நன்கறிந்த தமிழ் இலக்கிய உலகு என்னை மன்னிக்குமாக.

(விசயம் தெரியாத வாசகர்களுக்காக ஒரு மேலதிகக் குறிப்பு: விபவி சுதந்திர இலக்கிய விழா தொடர்பாக 1993ல் வெளிவந்த ஈழத்து நாவல்களுள் பரிசுக்குரியதைத் தெரியும் நடுவர் குழுவில் நானும் ஒருவனாகச் செயற்பட்டேன். இன்னும் ஒருவர் சித்திரலேகா மௌனகுரு. 1993ல் வெளிவந்த நாவல்களுள் தாமரைச்செல்வியின் தாகம் பரிசுக்குரியதென

நடுவர் குழு ஏகமனதாக தெரிவு செய்தது. செ.யோகநாதனின் 'நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே' நாவல் தெரிவு செய்யப்படவில்லை. நடுவர் குழுவின் அறிக்கையை நானே எழுதினேன். அது விழாவில் வாசிக்கப்பட்டது. பின்னர் சரிநிகரிலும் (1994) வெளிவந்தது. 1993ல் வெளிவந்த நாவல்கள் பற்றிய மதிப்பீடு அந்த அறிக்கையில் உண்டு. செ.யோ.வின் நாவல்பற்றிய சுருக்கமான விமர்சனமும் அதில் உண்டு. சுயகாதலில் (Narcissism) மூழ்கியுள்ள நண்பர் செ.யோ.வின் கோபம் புரிந்து கொள்ளத்தக்கதே)

2. மஹாலட்சுமி யாருடைய புனைபெயர்?

'மஹாகவியின் ஆறு காவியங்கள்' நூலுக்கு நான் எழுதிய முன்னுரையிலும், ஞானம் மூன்றாவது இதழில் வெளிவந்த எனது பேட்டியிலும் 'மஹாலட்சுமி' என்ற புனைப்பெயரில் வெளிவந்த 'ஐயா மஹாகவி' என்ற கவிதையின் ஆசிரியர் பற்றி நான் எழுதியுள்ள குறிப்பைச் சரியாகப் படித்துப் பார்க்காமல் நண்பர் இக்பால் என்னைக் குறைகூறியிருக்கிறார். அக்கவிதையை எழுதியவர் மஹாகவி என்பது நான் ஆராய்ந்து கண்டுபிடித்த உண்மையல்ல. மஹாகவியே என்னிடம் நேரில் கூறியது. இதன் அடிப்படையிலேயே அன்னம் வெளியிட்ட மஹாகவி கவிதைகள் (1984) நூலுக்கு எழுதிய முன்னுரையிலும் 'மஹாலட்சுமி' என்பது மஹாகவியின் புனைபெயர்களுள் ஒன்று எனக் குறிப்பிட்டுள்ளேன். இப்போது நண்பர் இக்பால் கூறுவது ஒரு புதிய செய்தி. சில்லையூர் செல்வராசனுக்கும் இக்பாலுக்கும் இடையில் இருந்த நெருங்கிய உறவு எனக்குத்தெரியும். எனினும் இக்கவிதை வெளிவந்த காலகட்டத்தில் (1954/55) இக்பாலுக்குச் சில்லையூருடன் நேர்ப்பழக்கம் இல்லை என்றே நினைக்கிறேன். பிற்காலத்தில், என்னிடம் மஹாகவி சொன்னதுபோல் மஹாலட்சுமி என்ற புனைபெயரில் அக்கவிதையை தானே எழுதியதாகச் சில்லையூரார் தன்னிடம் கூறினாரா என்பது பற்றி இக்பால் வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை. எனினும் அவ்வாறு கூறியிருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. அப்படியென்றால் மஹாலட்சுமி என்ற புனைபெயரில் எழுதிய கவிதைக்கு மஹாகவி, சில்லையூர் செல்வராசன் இருவருமே உரிமை கோரியிருக்கிறார்கள் என்று ஆகின்றது. இது மிகுந்த சங்கடமான நிலைமை. ஒன்று மஹாகவி என்னிடம் பொய்சொல்லி இருக்கவேண்டும்; அல்லது சில்லையூர் இக்பாலிடம் பொய்சொல்லி இருக்கவேண்டும். இவ்வாறு பொய் சொல்லவேண்டிய தேவை அவர்கள் இருவருக்குமே இல்லை என்பதுதான் என் எண்ணம். இப்பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது? நான் எனது பேட்டியில் குறிப்பிட்டதுபோல இதுபற்றி மேலும் தகவல் தரக்கூடிய ஒருவர் கவிஞர் முருகையன். அவர் இதனைத் தீர்த்து வைக்கக் கூடும். இதுபற்றி அவருடன் தொடர்புகொள்ள முயன்றுள்ளேன்.

இது எவ்வாறாயினும் நான் எழுதியதைச் சரியாகக் கிரகித்துக் கொள்ளாது எனது நிதானம், ஆய்வு நேர்மை, தகுதி என்பன பற்றி நண்பர் இக்பால் கேள்வி எழுப்புவது கவலைக்குரியது. மேலும் மஹாகவி, முருகையன்

இருவரையும் சில்லையூரே இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தினார் என இக்பால் எழுதுவது (சில்லையூரே அவரிடம் அவ்வாறு கூறியிருந்தாலும்) வேடிக்கைக்குரியது

கலாநிதி.எம்.ஏ.நுஃமான் (ஞானம்–5 ஒக்டோபர்2000)

✦ தி.ஞானசேகரன் வெளியிடும் கலை இலக்கிய சஞ்சிகை மிகச் சிறப்பாக உள்ளது. டொமினிக்ஜீவா தன் பேட்டியில் கூறும் கருத்து என் உள்ளத்தில் ஆழமாகச் சென்று தைத்தது - "மாறுதல் என்பது இருவகையானது. ஒன்று, ஆரோக்கியமான திசையை நோக்கி தன்னை வளர்த்துக் கொள்வது. அதற்கு முற்போக்கு ஈடு கொடுக்கும். மற்றது, முற்போக்கைக் கொச்சைப்படுத்துவது. இது, தான் வளர்ந்த பாதையையே நச்சுப்படுத்துகிறது."

பேராசிரியர் செ.போத்திரெட்டி, தமிழ்நாடு. ஞானம்–06 (நவம்பர்2000)

✦ ஞானம் சஞ்சிகையின் அமைப்பும் பொருளும் உடனடி வாசிப்பைக் கோருவனவாக உள்ளன. மிக்க சுவாரசியமான கருத்துப் பரிமாறல்கள் இடம்பெறுகின்றன. ஏறத்தாழ முப்பது, நாற்பது வருடகால இலக்கிய வரலாறு மீள்பரிசீலனைக்கு உள்ளாகின்றது. அது நல்லது. ஆனால் இவற்றினூடே புதிய வருகைகள் இனங்காணப்படுவதும் ஊக்குவிக்கப்படுவதும் மிக மிக முக்கியம். இலக்கிய வரலாற்றில் தொடர்ச்சியான செழுமைக்குப் புதிய வருகைகள் முக்கியம். இதழ்களின் விடய வீச்சுக்கள் பன்முகப்பட்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. தங்கள் முயற்சி சிறக்க வேண்டுகிறேன்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி, கொழும்பு – 06 (ஞானம்–7 டிசம்பர்2000)

✦ மூன்று குறிப்புகள்

நுஃமான் இரண்டு குறிப்புக்கள் எழுதினார். எனவே நான் மூன்று எழுதப்போகிறேன்.

1-நான் அப்பவே சொன்னேன், இந்த நேர்காணலை வைத்து பத்திரிகையை நடத்தாதீர்கள் என்று. கேட்டீர்களா? ஜீவா, செ.யோ, இப்போ வ.அ.,இ எல்லாரும் தங்கள் மன அவசங்களைக் கொட்டித் தீர்க்கத்தான் நேர்காணலை பாவிக்கிறார்கள். எவரும் ஒரு பெரிய படைப்பாளியென்று தன்னை விளம்பரப் படுத்தும் தேவை, தனது படைப்பாற்றல் பற்றிய சந்தேகம் எழும்போதே உருவாகிறது என்பது என் எண்ணம்.

2-மஹாலக்ஷ்மி என்றபெயரில் எழுதியவர் யார் என்ற தீர்ப்பை முருகையனிடம் விடுவது பற்றி நுஃமானும், மாவை வரோதையனும் எழுதியுள்ளனர். முருகையனின் மௌனம் பற்றியும் கேள்வி எழுந்துள்ளது. முருகையன் எழுதிவிட்டுப்போனதை மஹாகவியும் சில்லையூர் செல்வராசனும் உரிமை கொண்டாடினார்களா என்ற சந்தேகம் இன்னும் யாருக்கும் ஏன் எழவில்லை? முருகையன் மகா குறும்புக்காரர். அதை விட 'ம' வரிசையில் அவர் பேர் தொடங்குகிறது. மஹாகவி உண்மையில்

உருத்திரமூர்த்தி. சில்லையூர் பெயரிலோ 'ம' இல்லையே இல்லை. எனவே நமது ஆய்வாளர்கள் மெல்லுவதற்கு மேலும் ஒரு சட்டி நிறைய அவல் உள்ளது. முருகையன் மேலும் மௌனம் காத்து விவாதத்தை வளர்க்க உதவவேண்டுகிறேன்.

03 - கே.எஸ்.சிவகுமாரன் குறிப்பிட உகந்த கவிஞர் அல்ல என்ற என் கருத்தை ஆதரித்து மேலும் ஏழு காரணங்களை வழங்கியதற்கு அவருக்கு என் நன்றிகள். நகைச்சுவை உணர்வுக்கும், கனதியான விமர்சனத்துக்கும் மிகுந்த உறவு உண்டு என்பதையும் அவர் உறுதிப்படுத்த முனைவது பற்றி என் மகிழ்ச்சி.

சி.சிவசேகரம் – பேராதனைப் பல்கலைக்கழகம்
(ஞானம்–6 நவம்பர்2000)

✦ சி.சிவசேகரம் என்பார் ஞானம் ஜூலை 2001 இதழில் "ஆ.சதாசிவம் போன்றோரின் பத்தாம் பசலித்தனத்தையும், கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய தமிழ் அமீபா உயிர்களின் பெருமை கூறும் மரபையும் அவர் பிரதிபலிக்கின்றது" என ஆய்வறிஞராகிய பேராசிரியர் ஆ.சதாசிவம் அவர்களை மனம்போனவாறு சிலேடையாக, வசைத்தாக்கொன்றினை நிகழ்த்தியிருந்தார். இங்கு 'பத்தாம் பசலி' எனும் மரபுத் தொடருக்கு வழக்காற்றில் "அறிவில் குறைந்தவன்" எனும் பொருளை உணர்த்தும் வகையில், பல பொருள்தரும் சொல்லாக அது வழக்கில் இருந்து வருகிறது. அவற்றை மனங்கொண்டு ஞானம் பெப்ரவரி இதழில் யான் "பேராசிரியர் ஆ.சதாசிவம் ஒரு பத்தாம் பசலியா?" எனும் தலையங்கத்தில், பேராசிரியரின் கல்விப்புலத்தையும் ஆளுமையையும் வெளிப்படுத்தியிருந்தேன். அதற்கு எதிர்வினையாகச் சி.சிவசேகரம் என்பார் தனது புலமைச்செருக்கோடு நழுவலாக, ஞானம் மார்ச் 2002 இதழிலில் 'நான் சதாசிவத்தின் பத்தாம் பசலித்தனமான கருத்துக்கள் என்று சொன்னது பற்றிப் பின்வரும் விளக்கம் போதுமானது : மு.சண்முகம்பிள்ளை அவர்களது தொகுப்பில் வந்த தமிழ் - தமிழ் அகராதியில் பத்தாம்பசலி என்பதன் பொருள் காலத்துக்கு ஒவ்வாத பழஞ்சிந்தனை உடையவர் என்று தரப்பட்டுள்ளது' எனக் குறிப் பிட்டுள்ளார். சி.சிவசேகரம் என்பாரின் மேற்படி கூற்றினை அவதானிக்கும் பொழுது அவர் மிகுந்த சிரமப்பட்டு புதிய வாசிப்பொன்றினைத் தந்துள்ளார். 'மு.ஆ.சதாசிவத்தின் பத்தாம் பசலித்தனத்தையும்' எனக் குறிப்பிட்டவர் பின்பு 'பத்தாம் பசலித்தனமான கருத்துக்கள்' எனவும் அதன் பொருள் காலத்துக்கு ஒவ்வாத பழஞ்சிந்தனை உடையவர் என அகராதிப் பொருளை உள்வாங்கிக் குறிப்பிடுவதும் அவரது புதிய வாசிப்பினை உணர்த்தும். முன்னையது வசைத்தாக்காகும். பின்னையது நயத்தக்க நாகரிகமாகவும் அமைந்துள்ளது. இவரது புதிய வாசிப்புக்கு எது காரணமாயிற்று. பேராசிரியர் ஆ.சதாசிவம் ஒரு பத்தாம் பசலியா என்னும் கட்டுரைதானே. அப்படியானால் இக்கட்டுரை பற்றி 'இரங்கற் சொற்களும் என் எழுத்துக்குத் தொடர்பற்றி விளக்கங்களும்

கண்டேன்' என்று எழுதவேண்டும். இக்கட்டுரை தங்களைப் புதிய சிந்தனைக்கும் புதிய வாசிப்புக்கும் தேடுதலுக்கும் நல்ல உளப்பாங்குக்கும் உட்படுத்தியுள்ளமையை மேற்படி கூற்றுக்கள் புலப்படுத்தியுள்ளன. வேண்டுமென்று பொய்சொல்லல் ஆகாது. தமிழ் வழக்காற்றில் ஆடியாத.... என வரும் மகாவாக்கியம் பொருள் பொதிந்ததொன்றே. யான் ஓரிடத்தில் குறிப்பிட்டிருப்பதுபோல "மார்க்சியவாதிகளின் கட்டுரைகளில் தொடர்ச்சித் தன்மை காணும் அளவிற்கு உண்மைத்தன்மையை காண்பது கடினம் என்பதற்கு சி.சிவசேகரத்தின் எதிர்வினை விதிவிலக்கல்ல.

இரா.வை. கனகரத்தினம் (ஞானம்–25 ஜூன்2002)

✦ ஞானம் மூன்றாவது ஆண்டுமலர் கிடைத்தபொழுது மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். ஞானம் எப்படி அமையவேண்டுமென என் மனத்துள் எண்ணியிருந்தேனோ அதே வடிவமைப்பிலே மூன்றாவது ஆண்டுமலர் கைக்குக் கிடைத்தபொழுது வியப்படைந்தேன்.

ஞானம் இதழின் கலை இலக்கியப் பங்களிப்பு வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. மிகச்சிறந்த இதழாக இது விரைவிலே உயர்நிலை அடையும் என நான் எண்ணுகிறேன். ஞானத்துக்கு என் வாழ்த்துக்கள்.

அ.சண்முகதாஸ் (பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், யாழ் பல்கலைக்கழகம்) (ஞானம்27ஆகஸ்ட்2002)

✦ ஞானம் ஜூலை 2002 இதழில் கம்பவாரிதியின் 'கிளாக்கர்ப் புத்தி' என்ற கட்டுரை தரும் செய்தியைப் பற்றி நானும் பலமுறை சிந்தித்தது உண்டு. ஆனாலும் அதற்குள் நுழையுமுன் அவரது முன்னுரை பற்றிய ஒரு யதார்த்த பூர்வமான ஓர் எதிர்வினை. டாக்குத்தரையும் லெக்சரரையும் அந்த மனைவி நிராகரிப்பதற்கு அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சீதனமின்மை காரணமாக இருக்குமேயன்றி அம்மனைவி முன்வைக்கும் காரணங்கள்தான் என்று ஏற்றுக்கொள்ள முடியாது. அது யதார்த்தமாக இல்லை. தமிழ் மக்களின் மத்தியதரவர்க்கப் புத்தி சீதனமிருந்தால் டாக்குத்தரையும் லெக்சரரையும் மறுத்திருக்காது என்று நான் நினைக்கிறேன். அது யதார்த்தத்திற்கு அப்பாற் பட்டது.

அடுத்து அவர் தரும் செய்தியைப் பற்றியது. இலங்கைப் பெண்களின் இலக்கியத்தைத் திரட்டி ஆய்வு செய்யும் ஒரு முயற்சியில் அவற்றைத் தேடத் தொடங்கிய பொழுது வரலாற்றின் தொடக்க காலம் தொடங்கி, வெளிநாட்டவர் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய காலம்வரை, ஒரு வறுமை தென்பட்டது. பெண் எழுத்தாளர்கள் மட்டுமல்ல இலக்கியகர்த்தாக்கள் இருக்கவில்லை. இந்தியாவில் ஔவை தொடங்கி காரைக்கால் அம்மையார் வரை பெண்களின் இலக்கிய முயற்சிகளில் ஒரு தொடர்ச்சி நிலை இருந்தது. சிங்கள மக்களிடையேயும் பழம்-சிங்களமொழி என்று கூறப்படும் ஹெலபாசையில் பெண் இலக்கியவாதிகள் இருந்துள்ளார்கள். போர்த்துக்கேயர் காலத்தில் வசித்த கஜமன்நோனா என்ற பெண்மணி ஒரு புரட்சி எழுத்தாளர்.

இலங்கையில் தோன்றிய முதல் இலக்கியம் 1310ஆம் ஆண்டுக்குரியது. சரசோதிமாலை எனும் சோதிடநூல் தம்பதெனிய இராச்சியத்திலிருந்து வெளிவந்துள்ளது. இதுவே இலங்கைத் தமிழரின் முதற் படைப்பு.

1985ஆம் ஆண்டு அசன்பே சரித்திரம் என்ற நாவலென்று கூறமுடியாத ஒரு அந்நிய நாட்டுக் கதை இலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் இலங்கைத் தமிழரின் முதல் நாவலாகக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆகவே கிளாக்கர் புத்திக்கும் அப்பால் பல காரணங்கள் உள்ளன. இந்த இலக்கிய வறுமையை அக்காரணங்களின் ஊடாகவே நாம் கண்டறிய முயல வேண்டும்.

அதற்குமுன் இலங்கைத் தமிழர் ஏன் இலக்கியம் படைக்கவில்லை. படைத்தார்களா? அவை அழிந்து விட்டனவா? படைக்கவில்லை என்றால் அதற்குரிய சமூக அரசியல் பொருளாதாரக் காரணங்கள் யாவை என்பது போன்ற கேள்விகளை உள்ளடக்கிய ஒரு கேள்விக் கொத்தைச் சில இலக்கியப் பேராசிரியர்களுக்கும் வரலாற்றுப் பேராசிரியர்களுக்கும் நான் அனுப்பிவைத்து எனது ஆய்வுத் தரவுகளைத் தந்துதவுமாறு கேட்டிருந்தேன். ஆனால் ஒருவரும் விடைகள் தர முயலவில்லை. கடிதம் கிடைத்ததாகவும், முக்கிய கேள்விகள் அவை என்றும் கூறி மெச்சினார்கள். ஆனால் அவற்றிற்குரிய விடைகள் இன்னும் கிடைக்கவில்லை.

வரலாற்றின் தொடக்ககாலத்தில் தமிழர்கள் என்ற ஒரு இனம் இலங்கையில் இருந்தது என்று நிறுவமுற்படுகிறார்கள் வரலாற்றாசிரியர்கள். ஆனால் எந்த இனமாவது இலக்கியம் படைக்காமல் இருந்திருக்குமா? என்ற கேள்வி முக்கியமானது.

Leisure என்ற வேலையின்றிச் சும்மா இருக்கும் நேரம் கிடைத்த பொழுதுதான் வரலாற்றில் மனிதன் கவிதை படிக்கத்தொடங்கினான். அந்த உல்லாசநேரம் கடின வாழ்க்கையின் காரணங்களினால் இலங்கைத் தமிழர்களுக்கு அக்காலகட்டத்தில் கிடைக்கவில்லையா?- சீதோஷ்ணநிலை கூட அதற்குக்காரணமாக இருக்கலாம். கம்பவாரிதியின் கொள்கைகள் கருத்தியல்கள் போன்றவற்றுடன் பெரும்பாலும் வேறுபடும் நான் அவரது இக்கட்டுரை தரும் கருத்துக்களை ஏற்றுக்கொள்கிறேன். ஆனாலும் இந்த இல்லை என்ற நிலைப்பாட்டை அது இல்லை, இது இல்லை, கம்பன் இல்லை காளிதாசன் இல்லை, ஔவை இல்லை, பாரதி இல்லை என்ற இன்மைத்தன்மையைப் பிரித்துப்பார்க்கக் கூடாது. அக்கால இக்கால சமூக பொருளாதார அரசியல் காரணிகளுடன் இந்நிலை பின்னிப் பிணைந்துள்ளது. இலக்கியம் எப்பொழுதும் சமூகவியலுள் சமூகநிலைகளுடன் இணைந்தே வெளிப்படும். அச்சமூகத்தில் சில காரணிகளும் கருத்தாக்கங்களை ஊக்குவிக்கும், தோற்றுவிக்கும். போர் தற்போது கவிதைக்கு, நாவலுக்கு சிறுகதைக்குக் கருப்பொருளாகியது. என்று நாம் விளக்கத் தேவையில்லை. பெண்ணிலைவாத கருத்தியலை அடிப்படையாகக்கொண்டு ஆண்களும் இப்போது இலக்கியம் சமைக்கிறார்கள் - மிகச்சுவையாக. ஆகையால் நாம் அக்கால வரலாற்றைத் தெரிந்து கொண்டால் ஒருவேளை அவர் எழுப்பும் கேள்விகளுக்கும் விடைகாணலாம்.

செல்வி திருச்சந்திரன், கொழும்பு. ஞானம் –28 (செப்டெம்பர் 2002)

✦ உங்கள் பணியும் முயற்சிகளும் மேலும் வளர எனது வாழ்த்துக்கள் ஞானத்தின் எழுத்துக்கள் தெளிவாக, நன்றாக உள்ளன. கலைவாதி கலீல் குறிப்பிட்டிருந்த Layout விடயத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன்.

எம்.அனஸ், பேராதனைப் பல்கலைக்கழகம் (ஞானம்–32 ஜனவரி2003)

✦ எழுத்தளர் கே.கணேஷ் சிறப்பு மலர் கிடைக்கப்பெற்றேன். எனக்கு உடன் 6 பிரதிகள் அனுப்பிவைக்கவும். என்னிடம் தமிழ்பயிலும் இறுதியாண்டு மாணவர்களின் வேண்டுதல் இது. பாடத்திட்டத்தில் கே.கணேஷ் இடம்பெறுகிறார். மொழிபெயர்ப்பு இங்கு தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு தனி வினாப்பத்திரம். முற்போக்கு எழுத்தாளர் வரிசையும் நோக்கற்பாலது.

கே.நாகேஸ்வரன், (சிரேஷ்ட விரிவுரையாளர்,சப்ரகமுவ பல்கலைக்கழகம்)
(ஞானம்–32 ஜனவரி2003)

✦ சுதர்மமகாராஜன் ஜீன் 2003 இதழில் எழுதிய 'விடுபடல்' சிறுகதை கணவன்மாரின் பாலியல்வன்முறையின் (Domestic Rape) கொடுமையை நன்கு உணர்த்துகிறது.
அப்படியான ஆண்களின் மரண முகத்தில்தான் மனைவிமார் ஆறுதல்காண முடியும். விதவை நிலை விடுதலைதான்.
சுதர்மமகாராஜன் தேடிப்படிக்க வேண்டிய எழுத்தாளர்போல் தோன்றுகிறது

நந்தி (பேராசிரியர்–மருத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
(ஞானம்39 ஒகஸ்ட்2003)

✦ ஆய்வுநெறியாளர் எனும் நிலையில் கடந்த ஓராண்டாய் 'ஞானம்' இதழ்களோடு இரவு பகலாய்ப் பழகி வருகிறேன். என் ஆய்வு மாணவி ஷீலாவின் உழைப்பு ஒரு நல்ல ஆய்வேடாக மலரும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. நண்பர் மகேஸ்வரன் அவர்களின் வழி தங்களைப் பற்றியும் தங்கள் படைப்புகளைப் பற்றியும் பெரிதும் அறிந்தேன். சென்ற ஆண்டு அயல்நாட்டுத் தமிழ்ச் சிறுகதைகள் குறித்துக் கருத்தரங்கம் நடந்ததையும் அக்கட்டுரைகள் நூல்வடிவம் பெற்றதையும் தாங்கள் அறிவீர்கள். இந்த ஆண்டு அயல்நாட்டுத் தமிழ் நாவல்கள் குறித்துக் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. அதில் தங்களின் 'குருதிமலை' நாவல் குறித்து ஷீலா கட்டுரை வழங்கவுள்ளார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தங்கள் 'விடைகள்' வந்தவுடன் ஆய்வேடு முழுவடிவம் பெற்றுவிடும். ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வு ஓராண்டு கால எல்லையை உடையது என்பதால் பார்வைக்கு வேலியிட்டுச் சில கோணங்களில் மட்டும் ஆய்வு நிகழ்ந்துள்ளது. இருப்பினும் ஆய்வு மனநிறைவை அளிக்கிறது. இந்த ஆய்வேட்டை 'ஞானம்' மூலம் தாங்களே நூலாக வெளியிடவேண்டும் என்பது என் விருப்பம்; அதுதான் பொருத்தமுங் கூட. ஷீலா தேர்ச்சிபெற்றபின் பல்கலைக்கழக அனுமதி வாங்கியபின் இது குறித்து விரிவாக எழுதுவேன்.

முனைவர் சா.உதயசூரியன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
(ஞானம்39 ஒகஸ்ட்2003)

✦ தரமான அளவான இதழாக, ஒழுங்காக வெளிவரும் ஞானத்திற்கு என் பாராட்டுக்கள். ஒரு சமூகத்தைப் பிரதிபலிக்கும் இலக்கிய இதழாக ஞானம் பரிமளிப்பது மனதிற்கு நிறைவாக உள்ளது. சாயங்களைப் பூசி மற்றவரைக் கடிக்கும் சிறு சஞ்சிகைகள் மத்தியில் மக்கள் உணர்வுகளையும், வாழ்வையும், அவலங்களையும் ஏன் எதிர்க்குரலையும் வெளிப்படுத்துவது கணிப்புக்குரியது. ஈழத்து நம்பிக்கைகள், அஞ்சலிகள், சமகால இலக்கிய நிகழ்வுகள், நேற்றைய கலைஞர்கள் பதிவுக்கும் இரசனைக்கும் உரியவை. தஞ்சைக்கடிதம் இன்னும் ஆழமாக தமிழக மணத்துடன் வருவது விரும்பத்தக்கது. பேராசிரியர் சிவத்தம்பி எதிர்கால இலக்கியவாதிகள் ஆழமாக உருவாகும் சூழலை ஏற்படுத்துகிறார். தொடரட்டும் உங்கள் பணி.

க.ஸ்ரீகணேசன், விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழக வவுனியா
(ஞானம்41 ஒக்ரோபர்2003)

✦ ஞானம் இதழ் பேரா.முனைவர் உதயசூரியன் அவர்கள் மூலம் எனக்கு அறிமுகமானது. மாணவி ஷீலாவின் எம்ஃபில் ஆய்வேட்டின் புறத் தேர்வாளராக நான் அதைப் படிக்கும்போது வியப்படைந்தேன். முதல் இதழ் தொடங்கி இம்மாத இதழ்வரை (ஒருசில இதழ்கள் தவிர) பெரும்பான்மையான இதழ்களைப் படித்தேன்.

50 சிறுகதைகளைப் படித்தேன். ஒருசில கதைகள் விழிகளின் ஓரம் ஈரத்தை எட்டிப் பார்க்கச்செய்தன. கதைகளில் உயிர்ப்புத் தன்மை இருந்தன. 'ஒருபிடிசோறு' என்றகதை வாசித்தபின் மனம் கனத்தது. பாதிப்புகள் என்பவை பாதிக்கப்பட்டவர்களால் மட்டுமே உணர முடியும் என்ற உணர்வு முன்பு என்னுள் இருந்தது. ஆனால் முகம் தெரியாத சண்முகம், கனகம், சங்கர், கமலன்- இவர்களின் வயிற்றுத்தீயின் வெம்மை மனதைச் சுட்டது. இதன்பெயர் மனிதநேயமா! அல்லது இரத்தத்தால் எழுதப்பட்ட வரிகளோ அவை

ஞானம் இதழ்ச் சிறுகதைகளில் கதைமாந்தர்கள் ஒரு மதிப்பீடு என்ற தலைப்பில் எம்கல்லூரியில் நிகழவிருக்கும் கல்லூரி ஆசிரியர் கருத்தரங்கில் கட்டுரை வழங்கவிருக்கிறேன்.

ஆசிரியர் அவர்களே! இதழியல் தகவல் தொடர்பியல் துறையில் எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு என்னிடம் ஆய்வு மேற்கொள்கின்ற ஆய்வுமாணவர்கள் அனைவரும் தகவல் தொடர்பியல் மற்றும் இக்கால இலக்கியம் தொடர்பாக ஆய்வுசெய்கின்றனர்

முனைவர் இரா. விஜயராணி தமிழாய்வுத்துறை, பிஷப் ஹிபர் கல்லூரி,
திருச்சி–17 (ஞானம் – 45 பெப்ரவரி 2004)

✦ ஞானம் சிறுகதை தொடர்பாக திருச்சி பிசப் ஹிபர் கல்லூரி விரிவுரையாளர் ஒருவர் கட்டுரை வாசித்தார். அவர் உங்களிடம் தொடர்பு கொண்டிருப்பார் என்று நினைக்கிறேன். அடிக்கடி இலக்கியச் சர்ச்சைகளை ஏற்படுத்துங்கள். அது ஆழமான கருத்தாடலுக்கு இடமளிக்கும். தனிமனித சாடல்கள்

தவிர்த்து). கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களின் சிறுகதை படித்தேன். தேன் பழையது. பாத்திரம் புதிது. யாழ்ப்பாணத்தின் கலாசாரத்தின் உட்கூறுகள் பல மொழியுடனும் உணர்வுடனும் சித்திரிக்கப்பட்டுள்ளன. வேரறுந்துபோன யாழ்ப்பாணத்து நினைவுகளை அச் சிறுகதை மீட்டது. செல்.சுதர்சனின் பத்தி எழுத்து பல தகவல்களைத் தருகின்றது. மகிழ்ச்சி. இங்கு என்ன - பரபரப்பான வணிகப் பத்திரிகை உலகுள் சிறு சஞ்சிகைகள் பகீரதப் பிரயத்தனத்துடன் வெளிவருகின்றன. எனினும் என்ன, அகவயமான சித்தாந்தங்களுள்ளும் கோஷ்டிப் பூசல்களுள்ளும் அவை போராடிக்கொண்டிருக்கின்றன. இலங்கைத் தமிழ் இலக்கியம் குறித்த பிரக்ஞை பலரிடையே இன்று வளர்ந்துள்ளமைக்கு சிறுசஞ்சிகைகளின் பங்கு கணிசமானது.

வ. மகேஸ்வரன், தஞ்சையிலிருந்து...
ஞானம் 46 (மார்ச் 2004)

✦ இலங்கை பல்கலைக்கழகங்கள் பற்றி, கம்பவாரிதி திரு ஜெயராஜ் கடந்த சில மாதங்களாக எழுதிய கட்டுரைத் தொடர் படித்தேன். மூன்று தசாப்தங்களாக பிற நாட்டு பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் எனக்கு 'இப்படி எல்லாம் நடக்குமோ?' என்ற வியப்பும் ஆச்சரியமும் ஏற்பட்டது. தான் கூறிய விடயங்களுக்கான தக்க ஆதாரங்கள் தன்னிடம் உள்ளதாக திரு. ஜெயராஜ் குறிப்பிட்டுள்ளார். அவர் எழுதிய விடயங்கள் உண்மையானால், இது கவலைக்குரியதும் சம்பந்தப்பட்டவர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதும் இன்றைய காலத்தின் கட்டாயம். இது உயர் கல்விப் பீடத்தின் வளர்ச்சிக்கு அவசியமும்கூட. இல்லையேல், நாம் குண்டுச்சட்டிக்குள் குதிரைகள் ஓட்டிக்கொண்டிருப்போம்.

நான்சார்ந்த கல்வித்துறைக்கப்பால், தமிழிலும், தமிழ்ப்பிரதேச பல்கலைக் கழகங்கள் மீதும் ஆர்வமும் பற்றும் அக்கறையும் உள்ளவன் என்ற முறையில், இவ் வாசகர் கடிதத்தை எழுதியுள்ளேன். யாரையும் குறைகூறுவது என் நோக்கமல்ல.

பேராசிரியர் ஆசி. கந்தராஜா,
உயிரியல் தொழில் நுட்ப பீடம், மேற்கு சிட்னி பல்கலைக்கழகம்,
அவுஸ்திரேலியா
(ஞானம் 77, ஒக்ரோபர் 2006)

✦ **உரியவரோடு மட்டும் சர்ச்சை செய்யுங்கள்!**

ஞானம் டிசம்பர் இதழில் வீ. கே. இராஜநரேந்திரனின் கடிதம் கண்டேன். கம்பவாரிதி தொடங்கிய சர்ச்சைக்குள் வீணாக என்னை இழுத்துள்ளார். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர்களுக்கு என கம்பவாரிதி எழுதியுள்ள கடிதத்தால் ஒரு பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளன் என்ற வகையில் நானும் பாதிப்புறுவதை ஏனோ அவர் அறிந்தாரில்லை.

எனது குருநாதர் கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள் எனது ஆசிரியர்களுள் ஒருவரான கலாநிதி. வ. மகேஸ்வரன் அவர்களுக்கு பகிரங்கமாக

ஞானத்தில் எழுதிய கடிதத்தின் பின்னணியில் நான் இருப்பதாக அவர் தமது ஊகத்தை வெளியிட்டுள்ளார். ஊகக் கருத்துகளை நிச்சயமான முடிவுகளாக எழுத்தில் வெளியிடக்கூடாதென்கிற பாலபாடம்கூட அறியாத அப்பட்டதாரி "தனது சிஷ்யனுக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் பதவியொன்று கிடைக்கும்வரை காத்திருந்துவிட்டு கம்பவாரிதி தமது தொடரை எழுதியுள்ளாரென்பது மறுக்கமுடியாத உண்மை" என உறுதிபடச் சொல்கிறார்.

பாவம் இந்தச் சொல்லுகை அவருடைய வாசிப்பு வறட்சியைத்தான் எடுத்துக் காட்டுகிறது. ஏனெனில் கம்பவாரிதி பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினர் தொடர்பான விமர்சனத்தை இப்பொழுதுதான் முதன்முதலில் முன் வைப்பதாக அந்தப் பட்டதாரி நினைத்துள்ளார் போலும். நான் உயர்தர வகுப்பு மாணவனாக இருந்த காலத்திலேயே அவரால் தமிழ்த்துறை பற்றிய மிகக்கட்டமான விமர்சனம் "மாற்றம்" சஞ்சிகையில் வெளிவந்து ஒரு காரசாரமான விவாதத்தையே தோற்றுவித்தது. பின்பு நான் பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலத்திலேதான் பேராசிரியர் சிவத்தம்பிக்கு அவர் எழுதிய பகிரங்கக் கடிதம் தினக்குரலில் வெளிவந்தது. அக்கடிதத்திலும், கலைத்தாய்க்கு அவர் எழுதிய கடிதத்திலும்கூட பல்கலைக்கழகக் கல்வியாளர்கள் மீதான விமர்சனம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவற்றையெல்லாம் வாசித்தறியாத ஒருவர் திடீரென முளைத்து ஏதோ எனக்கு நிரந்தரப்பதவி வந்துவிட்டதற்குப் பின்புதான் அவர் இவ்விமர்சனத்தை முன்வைப்பதாக அறியாமையோடு தெரிவிக்கிறார். அவர் சொல்வது உண்மையாயின், விரைவில் நடைபெறவிருக்கிற பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் பதவிக்கான நேர்காணல் முடிந்ததற்குப் பின்பல்லவா இந்தக் கடிதத்தை கம்பவாரிதி எழுதியிருப்பார். எனவே எனது பரீட்சை, பட்டம், பதவி ஆகியவற்றை கருத்திற்கொண்டு அவரோ அன்றேல் பிற கம்பன்கழகத்தினரோ எவ்விதமான கலை இலக்கிய முயற்சிகளிலும் ஈடுபடுவதில்லை என்பதை அப்பட்டதாரி தெரிந்துகொள்ள வேண்டும். மேற்படி பட்டதாரி, தான் அறிந்த பிற சங்கங்களைப் போலவே கம்பன்கழகமும் இருப்பதாகவே நினைத்து ஏமாற்றமுற்றிருக்கிறார் போலும். கம்பன்கழகத்தில் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய சுய கருத்தியலோடேயே இயங்குவதற்கான அனுமதி உண்டு. அதனாலேதான் கம்பன்கழகம் பதவிப் பிரச்சினைகள், துதிபாடல்கள், குழிபறிப்புகள் இல்லாமல் ஆரோக்கியமாக இயங்கிவர முடிகிறது. அந்தவகையில் கம்பவாரிதி என் ஆசிரியர்கள் குறித்து எழுதிய கருத்துகள் அவருக்கே சொந்தமானவை. அவற்றில் என் உடன்பாடுகளையும், உடன்பாடின்மைகளையும் அவருக்கே நான் சொல்லியிருக்கிறேன்.

மற்றபடி அந்தக் கடிதத்தின் பின்னணி நான் என்றோ, கடிதத் திரைப்படத்தின் மூலக்கதை என்னுடையது என்றோ ஊகிப்பது அறியாமை. எவராலும் அறியப்படாத இப்பட்டதாரி கடிதம் எழுதியுள்ளமையின் பின்னணி குறித்து சுவாரசியமான ஊகங்களை என்னாலும் முன்வைக்கமுடியும். ஆனால் நான் ஊகங்களை உறுதிகளாய் அறிவித்து முட்டாள்த்தனமாய் எழுதவிரும்பவில்லை.

மற்றது, எனது விமர்சனக் கருத்துகளை வேறு எவருடையதும் பெயரில் மறைந்து நின்றுதான் அல்லது புனைபெயரில் ஒளித்து நின்றுதான் வெளியிட வேண்டுமென்கின்ற தேவை எனக்கில்லை. நான் பல்கலைக் கழகத்தில் தற்காலிக விரிவுரையாளர் பதவி நீடிக்கப்பட வேண்டியிருந்த நிலையிலேதான் சர்ச்சைக்குள்ளான 'போட்டிப்பரீட்சை' கவிதையை எழுதி என் சொந்தப்பெயரிலேயே வெளியிட்டிருந்தேன். அக்கவிதை விரிவுரையாளர்கள் பெரும்பான்மையினர்களால் படிக்கப்படும் 'ஞானம்' சஞ்சிகையிலேதான் பிரசுரமாயிருந்தது. பதவியைத் தேடிக்கொண்டிருந்த காலத்திலேயே சொந்தப்பெயரில் விமர்சனத்தை முன்வைத்த எனக்கு, இன்றைக்கு ஒளித்துப் பின்னணியாக நின்று செயற்படவேண்டிய தேவையில்லை. என் கருத்தை வெளிப்படச் சொல்லும் துணிவை என் குருநாதரும் என் ஆசிரியர்களும் எனக்குத் தந்திருக்கின்றனர். அக்கவிதையை நான் எழுதிய பின்பும் எனது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் என்னைத் தற்காலிக விரிவுரையாளராய் தேர்ந்தெடுத்தமையையும் இங்கு நான் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

அவ்வாறே இன்னொருவரின் பின்னணித் துணையோடு விமர்சனங்களை எழுதுகிறவர் அல்லர் கம்பவாரிதி. அவரின் சொந்த எழுத்தாளுமையை நிரூபிக்கிற பல படைப்புகள் முன்னே வெளிவந்துள்ளன. பெரும் சர்ச்சைக்குள்ளான புலம்பெயர்ந்தோர்க்கான கடிதம் எழுத அவருக்கு பின்னணியாக நின்ற புலம்பெயர்ந்தவர் யார்? 'கிளார்க்கர் புத்தி' எழுத பின்னணியாக நின்ற 'கிளார்க்' யார்? - ஊகப்பட்டதாரியே முடிந்தால் உரையும்.

மற்றபடி என்குருநாதரின் இந்தக் கடிதத்தை - ஒரு விரிவுரையாளராக - என்மீது முன்வைக்கப்பட்ட விமர்சனமாகவே கருதுகிறேன். அவர் எதிர்பார்ப்புகள் பற்றிய எனது முரண்பாடுகளை பலதரம் அவரோடு மோதி முன் வைத்திருக்கின்றேன். இதனை யாருக்கும் பயந்தோ? யாரையும் திருப்தி செய்யவோ? எழுதவில்லை. கம்பவாரிதியை அவரது எண்ணங்களை அருகிருந்து முழுமையாக அறிந்தவன் என்ற வகையில் யாரோடும் தனிப்பட்ட பகை காரணமாக அவர் எதையும் எழுதுவதில்லை என்பதை என்னால் உறுதியாய்ச் சொல்லமுடியும். அறிவை எங்கு கண்டாலும் மகிழ்வதும் மதிப்பதும் அவரது இயல்பு. முன்பு ஒருமுறை எனது விரிவுரையாளர் துரை மனோகரனின் எழுத்தை இழிவாய் யாரோ விமர்சனம் செய்தபோது அதைக் கண்டித்து அவர் எழுதிய பதில் ஞானத்திலேயே வெளிவந்திருக்கின்றது. பல்கலைக்கழகத்தோடு அவருக்குப் பகை என்ற கருத்து ஒரு சிலரால் உருவாக்கப்பட்டது. பல்கலைக்கழகம் சார்ந்தவர்கள் ஆழமான அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என்பதில் அவர் உறுதியான கருத்தோடு இருக்கிறார். அக்கருத்தினால் என்னையே உன் கல்வி போதாது எனப் பலதரம் கண்டித்திருக்கிறார்.

அதனால், அவர் கடிதம் சுட்டும் குறைபாடுகள் இல்லாத ஒரு கல்வியாளனாக வளருதே என் நோக்கமும் பிரார்த்தனையும். அதுவே ஆரோக்கியமானதும் ஆகும். இதே போன்று எனது பல்கலைக்கழக விரிவுரையாளர்களிடமிருந்தும்

பெற்றுக்கொண்ட கல்வியியல் முன்னுதாரணங்கள் பல. எனது குருநாதரில் நான் வைத்திருக்கும் அன்பைப் போலவே எனது விரிவுரையாளர்களிலும் எந்த எதிர்பார்ப்புமின்றி உண்மை அன்பும், மரியாதையும் நான் வைத்திருக்கிறேன். அதை அவர்கள் அறிவார்கள். மற்றவர்களுக்கு அதை நிரூபிக்க வேண்டிய தேவை எனக்கில்லை. இதை எழுதிய பட்டதாரியின் நோக்கம் தெரிகிறது. இவ்வாறான ஊகக் கடிதங்களை வெளியிடுவதன் மூலம் எனது ஆசிரியர்களை மதியாத ஒருவனாக என்னைக்காட்ட எவரும் வலிந்து முனையவேண்டியதில்லை. என்னைப் பற்றி எனக்குத் தெரிந்தபடியால் அவர்கள் முயற்சி பற்றி நான் கவலைப்படவும் தயாராகவில்லை.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை என்றும் என் தாய்வீடே. அத்தாய் வீட்டுக்கு அவப்பெயர் ஏற்படக்கூடியதாக இருந்த வேளைகளிலெல்லாம் கற்ற நன்றிக்கடன் மறவாமல் தொழிற்பட்டவன் நான் என்பதை எனது ஆசிரியர்கள் நன்றாக அறிவார்கள்.

எனவே ஊகங்களைக் கடிதங்களாக வரைகிற பட்டதாரியிடம் எனது வேண்டுகோள் இதுதான். கம்பவாரிதி தொடக்கியுள்ள சர்ச்சையை நேரே சந்திப்பதுதான் ஆரோக்கியமானது. அதைவிட்டு உங்கள் தேவைகளுக்காக என் போன்றவர்களை அதற்குள் இழுக்க நினைப்பது கோழைத்தனம்.

– ஸ்ரீ. பிரசாந்தன், கொழும்பு – 06. (ஞானம் 80 ஜனவரி 2007)

✦ கடந்த மாத ஞானம் இதழில் READERS DIGEST சஞ்சிகை பற்றிய தவறான விளக்கம் ஒன்றினை வாசகர் கடிதம் பகுதியில் ஓர் அன்பர் குறிப்பிட்டிருந்தார். அந்தச் சஞ்சிகை பொதுமக்களுக்குரிய ஓர் ஆய்வுச் சஞ்சிகை அன்று. கனதியான விஞ்ஞான விடயங்கள் அதிற் பேசப்படுதல் இல்லை. அவை பற்றிய மேலோட்டமான கருத்துக்களே வாசகர்களுக்குத் தரப்படுகின்றன என்பது வெளிப்படையான உண்மை. அச்சஞ்சிகையை வாசிப்பவர்களுக்கு இது நன்கு தெரியும்.

–சபா ஜெயராசா.கொழும்பு (ஞானம்–141–பெப்ரவரி 2012)

✦ தாங்கள் அனுப்பிய ஞானம் இணையத்தள முகவரி பெற்றேன். மிக்க நன்றி.150 ஆவது இதழைத் தரவிறக்கம் செய்து வாசிக்க முடிந்தது.

மிகுந்த பொறுப்புணர்வோடும் அதிகபட்ச முயற்சித் திறனுடனும் தாங்கள் தயாரித்துள்ளமை முதற்பார்வையிலேயே தெரிகிறது.

இது உங்களது வாழ்நாட் சாதனையாகக் கணிக்கக் கூடியது.

ஈழத்தின் போர்ச்சூழலின் இலக்கியச் செல்நெறியை மையப்படுத்தி இப்படியொரு பாரிய மலரை வெளிக்கொணர முடிந்தமைபற்றித் தாங்கள் மனநிறைவடையலாம்.

கலாநிதி நா. சுப்பிரமணியன் (கனடா) (ஞானம் 152 ஜனவரி 2013)

✦ மின்னஞ்சல்வழி நீங்கள் அனுப்பிய 'ஞானம்' ஜூலை மாத இதழ் கிடைக்கப்பெற்றேன். மிக்க நன்றி. ஞானம் இதழ் இணையவழி

வெளிவருவது கண்டு மகிழ்கிறேன். இங்கு மலாயாப் பல்கலைக்கழகத்தில் இலங்கைத் தமிழ் இலக்கியம் போதிக்கும் எனக்கு இஃது ஓர் இனிப்பான செய்தியாகும். இஃது இலங்கைத்தமிழ் இலக்கியம் பயிலும் என்மாணவச் செல்வங்களுக்கும் மிகவும் பயன்தரும் ஒரு வரலாற்று நிகழ்வு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஐயா, உங்களுக்கு மீண்டும் என் நன்றி மலர்கள் உரித்தாகுக.!

முனைவர் வே. சபாபதி, இந்திய ஆய்வியல்துறை, கோலாலம்பூர், மலேசியா (ஞானம்161 ஒக்டோபர்2013)

✦ 'அங்கோர் - உலகப் பெருங்கோவில்" நூலிற்கு அரச சாகித்யவிருது பெற்றுள்ள ஞானம் நிர்வாக ஆசிரியர் ஞா.பாலச்சந்திரன் அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பிலும் தமிழக மக்களின் சார்பிலும் வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அன்புடன், முனைவர் கு.சிதம்பரம்.
உதவிப் பேராசிரியர், அயல்நாட்டுத் தமிழர் புலம். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை – 600 113.
(ஞானம்173அக்டோபர்2014)

✦ என்னைத் தங்கள் உலகப் புகழ்பெற்ற ஞானம் மாசிகையின் 2015 மார்கழி இதழின் அட்டைப்பட அதிதியாகத் தெரிந்தெடுத்துக் கௌரவித்ததற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அத்துடன் நான் எழுதிய, தொகுத்த, பல நூல்களிலிருந்தும் மற்றும் கட்டுரைகள், கவிதைகளில் இருந்தும் ஞானத்தில் முன் வெளிவந்த சில சிறுகதைகள், கவிதைகளிலிருந்தும், எமது இலண்டன் பேட்டியிலிருந்தும் மிகச் சிரமத்துடன் ஆய்ந்தெடுத்த உண்மைகளைத் தங்கள் மூன்றுபக்கக் கட்டுரையினுள் மிகத்திறமையாக அடக்கியதற்கும் ஞானத்தின் கண்ணியமான தலைமையாசிரியர், இலக்கிய முன்னோடி, வைத்திய கலாநிதி தி. ஞானசேகரன் அவர்களை விசேடமாகப் பாராட்டுகிறேன்.

– பேராசிரியர் கோபன் மகாதேவா, இலண்டன்
(ஞானம் 188, ஜனவரி 2016)

✦ ஞானம் சஞ்சிகையை விருப்புடன் படிக்கும் வாசகன் யான். நவம்பர் மாத இதழுக்காகக் காத்திருந்தேன். ஏனெனில் அ. முத்துலிங்கத்தின் நேர்காணல் பிரசுரமாகுமென்று அறிவித்திருந்தீர்கள்.

திரு. அ. முத்துலிங்கம் தனது இலக்கியப் பயணத்தைப்பற்றி மிக முக்கியமான குறிப்புகளை வழங்கியுள்ளார். அவர் தனது வளர்ச்சிக்கு வழிகாட்டியவர்கள் பலரைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு படித்த யாழ்ப்பாணக் கல்லூரியைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை. 'இள ஞாயிறு' என்று ஒரு காலாண்டுப் பத்திரிகையை நடத்திவந்தது. இதன் முதலாவது ஆசிரியர் அப்பொழுது

மாணவராகவிருந்த கே.லட்சுமண ஐயர். அதன் 23ஆவது ஆசிரியராக விருந்தவர் அ. முத்துலிங்கம். அப்பொழுது இப்பத்திரிகையின் ஆசிரிய ஆலோசகராகவிருந்தவர் ஆர். பாலசுப்பிரமணிய ஐயர். திரு. அ. முத்துலிங்கம் அவர்கள் இலக்கிய உலகில் சிற்றில் இழைத்தும் சிறுதேர் உருட்டியும் விளையாடியது யாழ்ப்பாணக் கல்லூரியிலேதான்.

இம்மாணவப்பத்திரிகையின் ஐந்தாவது ஆசிரியராகவிருந்தவர் எஸ். எம். கமால்தீன். எட்டாவது ஆசிரியர் ஆ. சதாசிவம் (பின்னாள் தமிழ்ப் பேராசிரியர்) இருபத்திரண்டாவது ஆசிரியர் விக்னேஸ்வர கடாட்சம் (பின்னாள் பல்வைத்தியர்) இருபத்தி மூன்றாவது ஆசிரியர் திரு. அ. முத்துலிங்கம் அவரைத் தொடர்ந்து அப்பதவியை அலங்கரித்தவர் கா. இந்திரபாலா (பின்னாள் வரலாற்றுப் பேராசிரியர்)

இயக்குநர் பாலுமகேந்திரா அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியல் படித்த காலத்திலேதான் புகைப்படத்துறையில் காலடி எடுத்து வைத்தார். திரு. பாலுமகேந்திராவுக்கு இலங்கைத் தொடர்புகளை மறைக்கவேண்டிய தேவை இருந்தது.

திரு. அ. முத்துலிங்கம் எனது மூத்த சகோதரனின் இணைபிரியா நண்பன். அவரின் மகோன்னத வளர்ச்சிகண்டு குதூகலமடைகிறேன்.

– கலாநிதி எஸ். ஜெபநேசன்.
முன்னாள் பேராயர், தென்னிந்திய திருச்சபை.
(ஞானம் 199 டிசம்பர் 2016)

✦ உங்களது மண்புழு, செ.ஆ.வின் காங்கேயம் ஆகியவை இதழுக்குச் சிறப்புச்சேர்க்கும் சிறுகதைகள். உங்களது மண்புழு இதுவரை ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைத்துறையில் பேசப்படாத ஒரு விடயத்தைப் பேசியிருக்கிறது. கதைகூறும் திறனும் நன்றாக இருக்கிறது. செ.ஆ. வின் காங்கேயமும் ஒரு தரமான படைப்பு.

– கலாநிதி துரை.மனோகரன் (ஞானம் 46 மார்ச்2004)

✦ ஜூலை 2017 (206) ஞானம் இதழில் மானா மக்கீன் அவர்கள் 'கங்காணி மகனான' கார்மேகம் பின்னர் வீரகேசரியிலும் தமிழ்நாட்டில் தினமணியிலும் பணியாற்றியதைப் பற்றிச் சிலாகித்து எழுதி இருந்தார்.

கார்மேகத்தின் ஒரு பிரதான பங்களிப்பு அவருடைய ஈழத்தமிழர் எழுச்சி என்னும் நூலாகும். 380 பக்கங்களுடாக 19 அத்தியாயங்களில் சென்னையில் வெளியிடப்பட்ட (2001) இந்நூலுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. அனேகமாக வடக்கு கிழக்கில் வாழும் தமிழர் பிரச்சினை, 30 ஆண்டு காலப் போராட்டம் பற்றி ஒரு மலையகத்தவரால் எழுதி வெளியிடப்பட்ட முதலாவது நூல் இதுவாகும். அவர் தினமணியில் பணியாற்றிய காலத்தில், பிரதானமாக இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிய செய்திகளைச் சரியாக வெளியிட அவர் பெரிதும் உதவினார். அக்காலத்தில் தமிழ்நாட்டின் பல்வேறு மட்டங்களில் (தற்போதும் தான்?) இப்பிரச்சினை பற்றிய சரியான புரிந்துணர்வு இருக்கவில்லை. பல சந்தர்ப்பங்களில் தவறான புரிந்துணர்வுகளும் இருந்தன.

கார்மேகம் ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் நேரடியாக வடபுலம் சென்று, தமது நூலுக்கான ஆதாரங்களைத் தேடிக்கொண்டார். தமிழரின் போராட்டம் பற்றி ஒரு மலையகத்துப் பத்திரிகையாளர் எழுதிய விரிவான ஒரே நூல் என்பதோடு, கண்டி ஒப்பந்த விதிகளை (1815) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குமாரசாமி என்பார் கண்டியரசன் விக்கிரம ராஜசிங்கனுக்கு விளக்கிக் கூறியதையும் நூலில் குறிப்பிடுகின்றார். சிறிமாவோ அம்மையாரின் மூதாதையர் உட்பட ஏழு கண்டியப் பிரதானிகள் அவ்வொப்பந்தத்தில் தமிழில் கையெழுத்திட்ட விபரமும் நூலில் உண்டு.

பேராசிரியர் சோ.சந்திரசேகரம்
(ஞானம் 207, ஆகஸ்ட் 2017)

✦ அன்பின் ஞானம் -குடும்பம் வணக்கம்!
அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நூற்றாண்டுச் சிறப்பிதழாக
மலர்ந்துள்ள இவ்விதழ்,
சுதேச இலக்கிய பாரம்பரியத்தின் ஊற்றுக்களை
ஆழத்தேடி
இன்றைய தலைமுறையினரிடம்
கையளிக்கும்
உயரிய காலப்பணி என்பேன்.

ஒரு சஞ்சிகையின் இதழுக்குள்
ஒரு பெரும் ஆளுமை முழுமையை
பதிந்து பகிர்ந்த நின் ஆற்றலை
வியந்து வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
பேராசிரியர் என் சண்முகலிங்கன் (ஞானம் 218 ஜூலை2018)

✦ அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நூற்றாண்டுச் சிறப்பிதழாக வெளிவந்த தங்களின் ஞானம் சஞ்சிகையின் 217ஆம் இதழ் நேற்றுக் கிடைத்ததும் உடனே வாசிக்கத் தொடங்கினேன். இச்சிறப்பிதழ் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் பற்றிய ஓர் அரும்பெரும் தொகுப்பாகும். அப்புலவர் பெருமான் பற்றி ஏற்கனவே நான் அறிந்திருந்தாலும் இம்மலர் அவரை முழுமையாகக் காட்டிற்று. ஈழத்து இஸ்லாமியப் பெரும்புலவரைத் தமிழ் உலகுக்கு முழுமையாக அறிமுகப்படுத்திய தங்களுக்கு என் நன்றி.

பேராசிரியர் இ.பாலசுந்தரம் (கனடா) ஞானம், 220செப்டெம்பர்2018)

மேலும் சில புரிதல்கள்...

✦ ‘பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்’ என்ற உங்கள் இதழ்க்கொள்கை எனக்கு ரெம்பப் பிடித்துப்போய்விட்டது. இலக்கியப் பகிர்வு - ஞானத்தில் ஆரோக்கியமாக உள்ளது. இந்தப் பகிர்தலில் ஆர்வத்தைத் தூண்டும் விமர்சனங்களும் எதிரொலிகளும் நம்பிக்கை தருகின்றன. முதுபெரும் எழுத்தாளர் வ.அ. நேர்காணல் சுவையாக உள்ளதுடன் விரிவான பல விடயங்களை சுருக்கமாக அறியவும் வாய்ப்பளித்துள்ளது. நமது இலக்கியச்சூழல் எப்போதும் மாற்றுக் கருத்துக்களை உள்வாங்கி ஜீரணித்துக் கொள்ளத்தக்கதாய் அமைய வேண்டும். நம்மிடம் உள்ள மகத்தான குறை இதுதான் என்பது என் கருத்து. நாம் விமர்சனங்களுக்கு அஞ்சுபவர்கள். நம்மைப்பற்றி யாரும் எதுவும் சொல்லிவிடக்கூடாது என்பதில் மிகுந்த குறியாய் உள்ளவர்கள். இத்தகைய அபாயகர சூழலை ஞானம் ஓரளவு உடைத்துக் கொண்டு கருத்துச் சுதந்திரத்துக்கு மதிப்பளிக்கிறதுபோல் தெரிகிறது. இது பாராட்டத்தக்க அம்சம் மட்டுமன்றி ஓர்மமான விசயமும்தான்.

– ஒட்டமாவடி அறபாத். ஞானம்–06 (நவம்பர்2000)

✦ நான், கடந்த வாரம் ஞானம் சஞ்சிகையின் முதல் ஐந்து இதழ்களையும் ஒன்றாக வைத்து ஒரே தொடராகப் படித்துப் பார்த்தேன். அது பெரும்பாலும் எனக்கு இரண்டாவது வாசிப்பு. இதில் ஞானம் சஞ்சிகையின் பொருட்செறிவும் இலக்கியத் தரமும் எனக்கு மேலும் புதிய இலக்கிய அநுபவத்தைத் தந்தன.

ஞானம் சஞ்சிகையில் வந்துள்ள நேர்காணல், சிறுகதை என்பனவற்றின் தரமேம்பாடு என்னை

மிகவும் கவர்ந்தது. நேர்காணலென்பது பசுவில் பால்கறப்பது போன்ற ஒரு செயற்பாடு. நீங்கள் இந்த நேர்காணல்களில் வெகு பக்குவமாகவும் சாமர்த்தியமாகவும் வினாக்களைத் தொடுத்து, கறக்கவேண்டிய இலக்கியக் கருத்துக்களை எல்லாம் கறந்து எடுத்திருக்கிறீர்கள். இவற்றுள் சில பேட்டிகள் மீண்டும் படித்துப் பார்க்க வேண்டியவை.

ஞானம் சிறுகதைகளில் நயத்தகு வித்தியாசம் தென்படுகிறது. கருவில் புதுமை உணர்வு வெளிப்பாட்டுச் சிறப்பு, உருவ நேர்த்தி - இவை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவை. கலாநிதி துரை.மனோகரனது சிந்தனைச் சரம் நன்றாக இருக்கிறது. நூல் மதிப்புரைகளின் நீளம் ஒரு பக்கத்துள் அடங்க வேண்டுமென்று வரையறை செய்துகொள்ளல் நல்லது.

ஞானம் சஞ்சிகை இலக்கிய ஆர்வலர்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை நன்கு உணர முடிகிறது. ஞானத்திற்குச் சிறந்த எதிர்காலமுண்டு.

– வ.இராசையா – கொழும்பு – 06 ஞானம்–06 (நவம்பர் 2000)

✦ ஞானம் ஒரு இதழை முற்று முழுதாய்ப் படித்து முடிப்பதற்குள் அடுத்த இதழ் வந்துநிற்கிறது..... நேர்காணல்கள் மிகவும் அருமையாக இருக்கின்றன. எஸ்.பொ, டொமினிக்ஜீவா, எம்.ஏ.நுஃமான், செ.யோகநாதன், வ.அ.இராசரத்தினம் என்று ஐந்து இதழ்களையும் கனப்படுத்துபவைகளாக இந்த ஐந்து நேர்காணல்களையும் கொள்ளலாம். குறிப்பாக எம்.ஏ.நுஃமானின் நேர்காணல் ஆழமானதாக இருந்தது. தேசியம், தமிழ்த்தேசியம், மார்க்சியம், தலித்தியம், பெண்ணியம், பின்நவீனத்துவம், மஜிக்கல் ரியலிசம், சர்லியலிஸம் போன்ற இலக்கியக் கொள்கைகள் பற்றிய எளிமையான எடுத்துக்கூறல்கள் சிறப்பாக இருந்தன. உங்களது உழைப்பையும் ஈடுபாட்டையும் கண்டு ஆனந்திக்கும் அதேவேளை தி. ஞானசேகரன் எனும் ஒரு இலக்கியப் படைப்பாளனை 'ஞானம்' இல்லாமல் செய்துவிடுமோ என்னும் ஆதங்கமும் ஏற்படுகிறது.

–தெளிவத்தை ஜோசப், வத்தளை. ஞானம்–06 (நவம்பர் 2000)

✦ உடப்பு மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களுக்கு நன்னீர் வழங்க வேண்டுமெனக் கோரும் தனியுறுப்பினர் பிரேரணையை 4.7.2001ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து பேசும் நல்லதொரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது, தமிழ்பேசும் மக்களின் அவலங்களை எடுத்தியம்புவதில் நான் பின்னிற்கவில்லை. அவ்வேளை தங்கள் சஞ்சிகையின் ஜூன் மாத இதழின் பின் அட்டையில் பிரசுரிக்கப்பட்டிருந்த (பெனி எழுதிய) 'காரணங்கள்' என்ற தலைப்பிலான பொருத்தமான கவிதையை ஏற்றமுறையில் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. அக்கவிதைகளை ஹன்சாட்டின் 1661,1662 ஆம் பக்கத்தில் வாசிக்கலாம்.

அல்ஹாஜ், ஏ.எச்.எம். அஸ்வர், பாராளுமன்ற உறுப்பினர். ஞானம்–17 (ஒக்டோபர்2001)

✦ (1) கலாநிதி துரை.மனோகரன் அவர்களின் 'எழுதத் தூண்டும் எண்ணங்கள்' பகுதியில் ஒரு குறிப்பை நமது இலக்கியப் பரப்பின் கவனத்திற்கு தரவேண்டும். திரு.வ.இராசையா அவர்கள் ஓர் ஒலிபரப்பாளர், விமர்சகர் என்பவற்றிற்கு அப்பால் அவர் ஒரு கவிஞர், சிறுவர் இலக்கியப் படைப்பாளி. நல்ல ஆசிரியரும் கூட. ஆனால் 'தகவம்' அவரது பெயருடன் ஒட்டினாலும் அது அவரது முழு முயற்சியில் ஆரம்பித்து நடத்தப்பட்ட அமைப்பு அல்ல.

தகவத்தைத் தோற்றுவித்து நடத்தியதில் மூத்த எழுத்தாளர் வேல் அமுதனுக்கும் பங்கு உண்டு. ஆனால் இடையில் எழுந்த ஒரு கால அலை 'தகவத்தைப்' புரட்டிவிட்டது.

(2) ஒரு தேசிய பத்திரிகையில் எனது கவிதை ஒன்று பிரசுரமாகும் போது அது பற்றிய விமர்சனங்களை நானே தேடிச் செல்ல நேரிடும். 'படிக்கவில்லை' என்ற மறுமொழியால் ஏமாறவும் நேரிடும். ஆனால் 'ஞானம்' இதழில் ஒரு படைப்பு வெளியானதுமே அதுபற்றிய விமர்சனமும் எம்மைத் தேடிவருகின்றது. இதை எண்ணும்போது 'ஞானம்' நம் வாசகர் தரப்பில் ஏற்படுத்தும் பாதிப்பு காத்திரமானது என்பதை உணரமுடிகின்றது.

– மாவை வரோதயன். ஞானம் 17 (ஒக்டோபர்–2001)

✦ அட்டைப்படப் பொலிவுடன் தோன்றிய ஆண்டுமலரைத் தொடர்ந்து ஜூலை இதழும் மேலாடை அலங்காரத்துடன் 26ஆவது இதழ் கிட்ட மகிழ்ந்தேன். சிற்றிதழ் நடத்தி சூடுபட்ட பூனையாகிய நான், சிற்றிதழ்கள் காணும்போது இவை சிரஞ்சீவியாக வாழவேண்டுமே என்ற ஆதங்கத்தில் இதழுக்கு உயிர் நாடியான விளம்பரங்கள் கணிப்பை நோக்குவேன். அவ்வகையில் அத்தகைய துணையேதும் இன்றி 26 இதழ்களைக் கொணர்ந்துள்ளமை பகீரத சாதனைதான். செய்தொழிலின் வருவாயில் ஒருபகுதியைத் தியாகம் செய்துதான் நடத்தி வருகிறீர்கள் என மதிக்கிறேன்.

இவ்விதழில் ஸ்ரீ கம்பவாரிதி இ.ஜெயராஜ் ஒரு நீண்ட கிண்டற் கட்டுரை நீண்ட காவியமாக மலர்ந்துள்ளது. குளவிக் கூட்டில் கல்லெறிபட குளவிகள் சீற்றமடையத் தொடங்கிவிடும். இதன் விளைவாக நீண்ட இலக்கிய சர்ச்சைகள் தோன்ற வாய்ப்புண்டு. இதற்கு வழிவகுத்துள்ளீர்கள். மருத்துவராகிய நீங்கள் நோயாளியின் புண்ணின் பகுதியையோ வீக்கத்தையோ சிகிச்சைக்காக அழுத்தியதும் நோயாளி சீற்றமடைந்து தன்னையறியாது ஏக வசனத்தில் சொல்மாரிகள் பொழிவதை உணர்ந்திருப்பீர்கள். நோயாளியின் நலன் நாடிச் செயல் புரிவதைப்போல் இக்கட்டுரையை வெளியிட்டமை உங்களுடைய கடமையுணர்வைக் காட்டுகிறது. காய்தல் உவத்தல் அற்ற ஆக்க பூர்வமான சர்ச்சையாக அமைதல் இலக்கியத்திற்கு வளம்தரும். வசைமாரிகளும், தனிநபர் தாக்குதலும் தவிர்த்து தரமான வாதப் பிரதிவாதங்கள் வளம் தரும். இத்தகைய நாரதப் பணிகள் நம் மொழிவரலாற்றில் ஒன்றும் புதிதல்ல.

கே.கணேஷ், தலாத்துஓயா. (ஞானம்27ஆகஸ்ட்2002)

✦ கம்பவாரிதி ஜெயராஜ், 'ஞானம்' (ஜூலை 2002) இதழில் எழுதிய கட்டுரைக்காகப் பல எதிர்க்கணைகள் வரும் என்று அவரே எதிர்பார்க்கிறார் என்பதும் அக்கட்டுரையிலேயே தெரிகிறது. வரலாம், வரட்டும். யாரென்ன சொன்னாலும் அந்தக்கட்டுரையின் மூலக்கருத்து எனக்கு மிகவும் பிடித்துக் கொண்டது. பலர் சொல்லத் தயங்கிக் கொண்டிருந்த கருத்தை அவர் நேர்மையுடனும் துணிச்சலுடனும் சொல்லியிருப்பதைப் பாராட்டவேண்டும். தமிழுக்குப் 'புதிதாக' ஏதும் செய்தவர்கள் ஈழத்தில் யார்? - புதிதாக வேண்டாம். தமிழ் கூறும் நல்லுலகெங்கும் போற்றிப் புகழத்தக்க ஒரு கல்கியோ, புதுமைப்பித்தனோ, டாக்டர் மு.வரதராசனாரோ, ஏன் ஒரு ஜெயகாந்தன் கூட - ஈழத்தில் யாருடைய பெயரைச் சொல்லக்கூடும்?

இது எனக்குமுள்ள ஒரு மனக்குறைதான். யாராவது ஒருவர் தமிழ் உலகம் முழுவதும் பேசக்கூடியதாக ஈழத்தில் தோன்றவேண்டும் என்ற ஆசை எனக்குள்ளேயும் உண்டு. 'அப்படி ஒருவர் இங்கிருந்து முளைப்பதற்குப் போதிய வசதி வாய்ப்புகள் இல்லை' என்று ஒரு காரணம் சொல்லக்கூடும். - அந்த வசதி வாய்ப்புக் குறைகளையெல்லாம் உடைத்துக்கொண்டு மேலெழும்புகின்ற ஒரு இலக்கிய சாதனையாளர் வரவேண்டுமென்றுதான் நான் ஆசைப்படுகிறேன். அரசியல் உலகில் ஒரு பிரபாகரன் எழுந்து நிமிரவில்லையா? - அதைப்போல!

– 'வரதர்', யாழ்ப்பாணம் ஞானம்–28 (செப்டெம்பர்2002)

✦ நான் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறையில் ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வினை மேற்கொண்டுள்ளேன். தங்களின் ஞானம் இதழில் வெளிவந்துள்ள சிறுகதைகளை 1-24 இதழை என் ஆய்வுப் பொருளாகத் தேர்வு செய்துள்ளேன். இத்துறையில் பணிபுரியும் முனைவர் சா.உதயசூரியன் அவர்கள் எனக்கு ஆய்வு நெறியாளராக இருந்து வருகிறார். அவரினது அறிவுரையின் பேரில் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

மேற்குறிப்பிட்ட 24 இதழ்களையும் எனக்கு அனுப்பிவைத்து என் ஆய்வு சிறக்க உதவி செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆய்வு நிறைவடையும்வரை தங்களின் தொடர் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. ஆய்வு குறித்த சிக்கல்களை அவ்வப்போது தங்களுக்கு எழுதுவேன். சிக்கல்கள் தீர துணைநிற்க வேண்டுகிறேன். என் ஆய்வுத் தலைப்பு 'ஞானம் இதழின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு' என்பதாகும். இச்செய்தியை தங்கள் இதழில் வெளியிட்டு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

–செல்வி மா.ஷீலா எம்.ஏ.

ஆய்வியல் நிறைஞர் பட்டமாணவி, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

(ஞானம் 30, நவம்பர் 2002)

✦ ஞானம்' வெளியான பின்னர், நான் எழுதும் முதற்கடிதம் இது. கடிதம் எழுதாவிட்டாலும் ஞானம் இதழ் பற்றிப் பல தடவைகள் 'நவமணி'யிலும்,

'தினகரனி'லும் எழுதியிருக்கிறேன். சிற்றிலக்கிய ஏடுகளின் சீரான பங்களிப்பைப் பற்றித் தினகரன் 'மகரந்த'த்தில் எழுதியபோது ஞானம் பற்றி விசேடமாகக் குறிப்பிட்டிருந்தேன்.

நவமணி வார ஏட்டில் நான் நடத்திவரும் பகுதியாகிய 'மணியார'த்தில் ஞானம் பற்றிப் பலதடவைகள் விதந்துரைத்திருக்கிறேன். தாங்களும் அறிந்திருக்கலாம்.

தற்போது வெளிவந்துகொண்டிருக்கும் ஒரு சில சிற்றேடுகளில் ஞானம் முதன்மை பெறத்தக்கது என்பது எனது கருத்து. ஆயினும் ஞானத்தின் தளக் கோலம் (Lay out) மாற்றப்படவேண்டியது. இன்னும் மெருகூட்டப்பட வேண்டியது.

- கலைவாதி கலீல், (உப பீடாதிபதி),
தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரி.
ஞானம் –31 (டிசம்பர் 2002)

✦ 'இலக்கியக் கடல்' என வர்ணிக்கக்கூடிய கே.கணேஷ் அவர்களின் இலக்கியப்பணி இலக்கிய ஆழ்கடல் என அதீதமாக வியந்து கூறுமளவிற்கு உயர்ந்தது. தற்கால நவீன இலக்கியத்துள்ளாழ்வோருக்கு கணேஷ் போன்றோரை எடுத்துக்காட்டுதல் மிகமிக அவசியம். அந்தப்பணியைச் செய்த ஞானத்தின் ஞானம் போற்றத்தக்கதே!

ஏற்கனவே அ.ந.கந்தசாமி, சில்லையூர் செல்வராஜன், எம்.எஸ்.எம்.இக்பால், பி. இராமநாதன் ஆகியோரைச் சந்திக்கும் போதெல்லாம் ஸ்ரீகணேஷ் பற்றியும் அவரது இலக்கியஉயர்வு பற்றியும் என்னிடம் நிறையக் கதைப்பார்கள். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ருஷ்ய, சீன சித்தாந்தப் பிளவுகளுக்குப் பின் ஒளியிலிருந்து நிழல்பெறலாயிற்று. அதனால் கணேஷ் போன்றோரின் விதந்துரைகளும் மங்கிப்போய்விட்டன. மிகப்பிந்தியாவது கே.கணேஷ் அவர்களின் உயர்வை இலக்கிய உலகிற்கு 'ஞானம்' வெளிச்சம் காட்டியது பாராட்டுக்குரியதே.! வாழ்க ஞானம் வளர்க அதன் இலக்கியப் பணி.

கவிஞர் ஏ.இக்பால் –தர்தாநகர். ஞானம்32 (ஜனவரி 2003)

✦ ஞானம் சஞ்சிகை ஒழுங்காக எனக்குக் கிடைத்து வருகிறது. ஈழத்து சஞ்சிகைகளில் ஒருசிலவற்றையாயினும் சேர்த்து வைத்திருக்கும் எனக்கு ஞானம் சஞ்சிகையின் கலை இலக்கியச் செறிவு மகிழ்வூட்டுகின்றது. வாசகர் ஒருவர் படித்துப் பயனுற பல ஆக்கங்களும் ஞானத்தில் வெளிவருகின்றன. ஞானம் மார்ச் இதழில் 'பாக்கு' கவிதை மிகவும் பக்குவமாக ஒரு வளர்ச்சியைக் குறிப்பிட்டு நிற்கிறது. படிக்கும்போது சிந்தனையைத் தூண்டும் கவிதை 'பாக்கு'.

ஈழத்தில் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் 'சிற்பி' சிவசரவணபவன் எழுத்தில் கலை நயத்தையும் பண்பு நயத்தையும் இயல்பாகவே எழுதிவருபவர். அவரது பேட்டியில் சிற்பி என்ற எழுத்தாளரின் முழுவடிவமும் தெரிகின்றது.

கேட்ட கேள்விகளும் இவர் தந்துள்ள பதில்களும் இன்றைய இளம் தலைமுறையினருக்கு அவரை அப்படியே படம் பிடித்துக் காட்டி நிற்கின்றன. இப்படியான மூத்த எழுத்தாளர்களைப் பேட்டி கண்டு ஞானம் வெளியிடுவது வளரும் எழுத்தாளர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தும். ஞானம் Excellant getup and Good Printing.

– புத்தொளி, ஆனைக்கோட்டை
(ஞானம் 35, ஏப்ரல் 2003)

✦ எனது கவிதைகளைத் தாங்கள் பிரசுரித்த நாளிலிருந்து எனது எழுத்து முயற்சியில் ஒரு உந்தல் தெரிவதை உணர்கிறேன். நண்பர்கள், பெரியவர்கள் பார்த்துவிட்டு பாராட்டுவதும் விமர்சிப்பதும் எனது எழுத்து முயற்சியை மேலும் தட்டிக்கொடுத்து கவிதை வீறாய்ப் பிறக்கிறது. அனைத்து நன்றிகளும் உங்களுக்கே உரியவை. என்றும் உங்கள் அன்பும் ஆசியும் வேண்டி நிறைக்கிறேன்.

செல்.சுதர்சன், பேராதனைப் பல்கலைக்கழகம்.
(ஞானம் 35, ஏப்ரல் 2003)

✦ **ஞானப்பாத்தியுள் நல்லவை விளையட்டும் !.**

ஞானம் ஆசிரியர் அவர்கட்கு,
வணக்கம்.
நலம் வேண்டிப்பிரார்த்திக்கிறேன்.
ஞானம் இதழ்கள் தொடர்ந்து கிடைக்கின்றன.
நன்றி.
ஆக்கங்களின் தேர்விலும்,
சார்பற்று வெளியிடப்படும் சர்ச்சைகளிலும்,
மாண்பு கெடாமல் வெளியிடப்படும் மாற்றுக்கருத்துக்களிலும்,
அறிவுலகை ஊக்குவிக்கும் உங்கள் அக்கறை தெரிகிறது.
மகிழ்கிறேன்.
கனவான் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு,
ஒருவரை ஒருவர் ஒப்பேற்றி, பொய்வளர்க்கும்,
அறிவுலக ஆக்கங்களால்,
சோர்ந்து சுருண்டிருந்த இலக்கிய உலகு,
சற்று சுறுசுறுப்படைந்திருக்கிறது.
தங்கள் “ஞானத்தின்” அறுவடை இது.
சர்ச்சைக்குரிய என் ஆக்கங்களையும் தக்கபடி அங்கீகரிக்கிறீர்கள்.
எதிர்ப்போர் கருத்தையும் இழிவின்றி வெளியிட்டு,
என்னையும் என் சிந்தனையையும் சமநிலைப்படுத்துகிறீர்கள்.
நன்றியுடையேன்.
“வேறு வேறுருவும் வேறு வேறியற்கையும்” தக்கார் கைச்சேருமோ என அஞ்சினேன்.

தக்கபடி ருசித்து, தட்டித்தந்த இரு கைகளும் பெருங்கைகள்.
சிற்பி ஐயா, வரதர் ஐயா இருவர்தம்,
பாராட்டுக்களால் பரவசம் கொண்டேன்.
வசிட்டர் வாயால் பிரம்ம ரிசிப்பட்டம்.
பொருத்தப்பாடுடையேனோ ? அறியேன்.
எனினும்
பொங்கி மகிழ்கிறது மனம்.
இளையோரை ஏற்றம் செய்யும் ஏந்தல்கள்.
திசை நோக்கித்தொழுகின்றேன்.
தாங்கள் அனைவரும் தரும் ஊக்கம் என் ஆக்கம்.
கலாநிதி துரை மனோகரனின்
"எழுதத்தூண்டும் எண்ணங்கள்" பற்றிய
திருமலை அபிப்பிராயத்தில் எனக்குடன்பாடில்லை
எல்லோர்க்கும் விளங்க எழுதும் தகுதி பெற்ற விரிவுரையாளர்,
பலரும் படிக்கும் சஞ்சிகைகளில்
பாடத்திட்டங்களைப்பதிவு செய்யாமல்,
மண்தொட்டு பலபட எழுதுகிறார்.
சில மிகைகள் தவிர்ந்தவை
சுவைக்கவே செய்கின்றன.
பேராசிரியரின் பேட்டி, ஐயம் பலவற்றை தீர்க்கவும் எழுப்பவும் செய்கிறது.
முடிந்ததும் தொடர்வேன்.
களமமைத்து இளையோர்க்கு கைகொடுக்கிறீர்கள்.
தம்மில் தம்மக்கள் அறிவுடைமை கண்டு மகிழும்
அறிவுலகில் அருகிவரும் உயர்பண்பினை
உங்களில் கண்டு மகிழ்கிறேன்.
இளம் கவிஞர்கள், சொல்லுக்கும் பொருளுக்கும் இன்னும் சுவையூட்டலாம்.
ஞானப்பாத்தியுள் நல்லவை விளையட்டும்.
பிரார்த்திக்கிறேன்.

அன்பன் இ. ஜெயராஜ், கம்பன் கழகம்.
ஞானம்45 (பெப்ரவரி2004)

✦ வணக்கம் 'ஞானம்' (50 ஆவது இதழ்) பொன்மலர் உரிய காலத்தில் கிடைக்கப்பெற்றேன். அனுப்பியதற்கு நன்றி: மகிழ்ச்சி. 'ஞானம்' இலக்கியச் சஞ்சிகை, நல்ல தரமான இதழாக, 50 இதழ்கள் மலர்ந்து, பொன் மலரை பொலிவோடும் மணத்தோடும் வெளிக்கொணர்ந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சிக்கும் பாராட்டுதலுக்கும் உரியது. 'ஞானம்' ஈழத்து இலக்கியம் பற்றிய உணர்வோடும், தரம்பற்றிய அக்கறையோடும் தயாரிக்கப்பட்டு வருவது உங்கள் இலக்கிய ஆர்வத்தையும் இலட்சிய தாகத்தையும் எடுத்துக் காட்டுகிறது. இம்முயற்சியில் நீங்கள் நல்ல வெற்றி கண்டிருப்பதை 'ஞானம்' இதழின் மலர்ச்சியும் வளர்ச்சியும் புலப்படுத்தும். பொன் மலரில்

இடம்பெற்றுள்ள 'ஞானம் சஞ்சிகையின் நான்கு ஆண்டு அறுவடை' என்ற வ. இராசையா கட்டுரை 'ஞானம்' இதழின் சாதனைகளை நன்கு எடுத்துக்காட்டுகிறது. 'நேர்காணல்' மூலம் 'ஞானம்' நற்பணி ஆற்றி வருகிறது. பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் கருத்துக்களை வரலாற்றுப் பதிவுகளை தொடர்ந்து வெளியிட்டு வருவது மிகமுக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். இந் நேர்காணல் பதிவுகள் மூலம் பழந்தமிழ் இலக்கியம், நவீன இலக்கியம், தமிழ் நாடகம், இலக்கிய வரலாறு, தமிழர் பண்பாடு, ஈழத்தின் (இலங்கையின்) கலை இலக்கிய நாடகங்களின் வளர்ச்சி தற்கால நிலைமைகள் பற்றி எல்லாம் அரிய செய்திகளை வாசகர்கள் தெரிந்து கொள்ளமுடிகிறது. வேறு எந்தத் தமிழ் சஞ்சிகையும் இப்படி 'நேர்காணல்' ஒன்றை தொடர் அம்சமாக வெளியிட்டதில்லை. இது 'ஞானம்' இதழுக்கு தனிப் பெருமை சேர்ப்பதாகும். 'இன்றைய இலக்கியக் கோட்பாடுகள்' பற்றிய அறிமுகக் கட்டுரை பயனுள்ளது. 'ஞானம்' இலக்கிய நண்பர் கே. கணேஷ் பற்றி சிறப்பிதழ் வெளியிட்டு, அவரது நேர்காணலை விரிவாகப் பதிவு செய்தது ஒரு நற்பணி ஆகும். அம் 'மலை விளக்கு அணைந்தது' பற்றிய குறிப்பு உள்ளத்தைத் தொடுகிறது. கவிதைகள் நன்று. இதர கட்டுரைகளும் சிறுகதைகளும் படித்து ரசித்து பாராட்டப்பட வேண்டியவை. 'ஞானம்' தனது கலை இலக்கியப் பணியில் மேலும் சிறப்புடன் முன்னேறுவதற்குக் காலம் துணைபுரியட்டும். வாழ்த்துக்கள்.

அன்பு, வல்லிக்கண்ணன், தமிழ்நாடு. (ஞானம்52 சேப்டெம்பர்2004)

✦ ஜீன் 2005 இதழில் எனது படத்தையும் அட்டையில் இடம்பெறச்செய்து கட்டுரையையும் வெளியிட்டுள்ளீர்கள் நன்றி. எஸ். பொ. அவர்களின் செவ்வியையும் தொடர்ந்து படித்து வருகின்றேன். இப்பொழுது அடிக்கடி பேசப்படும் ஒரு விடயம் முட்டை அடித்த, எறிந்த சம்பவம். அந்த நிகழ்வினை, சபையில் இருந்து நேரில் பார்த்தவன் நான். இன்று அதுபற்றிக் கருத்துச் சொல்பவர்களின் வெளிப்பாடுகள் வெகு சுவாரசியமாக இருக்கின்றன. தங்களையே ஒவ்வொருவரும் வெளிபடுத்துகின்றார்கள் போலத் தோன்று கின்றது. ஜீன் இதழ் நேற்றுக் கிடைத்தது. முழுமையாக இன்னும் படிக்க வில்லை. நந்தி அவர்களின் மரணச்சடங்கில் நேற்றைய தினம் கலந்து கொண்டேன் இன்னும் மனப்பாரம் தீரவில்லை. நந்தி அவர்களின் மறைவு மனதுக்குத் துன்பமாக இருக்கின்றது. இறுதிச் சடங்கு நடந்த சமயம் அங்குசென்று கலந்து கொண்டேன்.

–தெணியான் ஞானம் 63 (ஆகஸ்ட்2005)

✦ ஞானம் நவம்பர் 66ஆவது இதழில் வாசகர் பேசுகிறார் பகுதியில் கோணேசன் என்பவர் வெளிப்படுத்தியுள்ள அறியாமை பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். கார்த்திகேசு சிவத்தம்பி - இலக்கியமும் வாழ்க்கையும் நூல் வெளியீட்டுவிழா பற்றி அவரது கட்டுரையையும் நான் வாசித்துள்ளேன். அந்தக் கட்டுரையிலும் ஞானத்தில் வந்த கடிதத்திலும் கோணேசன் கவிஞர்

ஏ. இக்பால் பற்றியே துதிபாடியிருக்கிறார். இதற்காக அவர் கலாநிதி துரை. மனோகரனைச் சாடவேண்டியதில்லை. அவரது கடிதத்தில் "கேட்பார் சொற்கேட்டுத் தெரியாததைத் தயவுசெய்து எழுதாமலே இருப்பது நல்லது. 1962ஆம் ஆண்டு திரு சு. நடேசபிள்ளை தலைமையில் எழுத்தாளர் மாநாடு மட்டுமே நடைபெற்றது என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். அது சாகித்தியமண்டல விழா அல்ல" என்று குறிப்பிட்டுள்ளார். இதை வாசித்தபொழுது கேட்பார் சொற்கேட்டு எழுதுவது கோணேசன்தான் என்பது தெளிவாகத் தெரிகிறது. அவருக்கு நாகரிகமாகவும் எழுதத்தெரியவில்லை. சொந்தப் பெயரிலும் எழுதுவதற்குத் துணிவில்லை.

சாகித்திய விழாவில் முட்டை எறிந்தது சம்பந்தமாக சுதந்திரன் 20.10.1963, பக். 6 இல் உள்ள ஒரு செய்தியைக் கீழே தருகிறேன்.

..... "1963 ஒக்டோபர் 5, 6ம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இலங்கைச் சாகித்திய மண்டல தமிழ் விழா நடைபெற்றது. கலாநிதி ஆ. சதாசிவம் இந்த விழாவிற்குத் தலைமை வகித்தார். இலக்கியத்தைப் பொறுத்தவரையில் வேறுபட்ட கொள்கை உடையோர் பலர் விழாவிற்குப் பேச்சாளராக அழைக்கப்பட்டிருந்தனர். ஈழத்திலுள்ள தமிழ் அறிஞர்களுக்கும், எழுத்தாளர் மன்றங்களுக்கும் கலை மன்றங்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டது. சாகித்திய மண்டல தமிழ் இலக்கிய விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியில் பரிசுபெற்றோரைப் பாராட்டும் நிகழ்ச்சி இடம்பெற்றது. அவ்வாண்டு சாகித்தியமண்டலப் பரிசுகளைப் பெற்ற படைப்பாளிகளும் பல அறிஞர்களும் மேடையில் அமர்ந்திருந்தனர். 'பரிசு பெற்றோர் பாராட்டப்படுவர்' எனத் தலைவர் அறிவித்ததும் முற்போக்கு எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளர் பிரேம்ஜி சபையிலிருந்து ஏதோ பேசத்தொடங்கவே தலைவர் அவரை மேடைக்கு அழைத்தார். வித்துவான் வேலன் ஆட்சேபம் தெரிவித்தார். அவ்வேளை ஜனாப் முகம்மது சமீம் மேடையில் ஏறி சாகித்திய மண்டலம் முஸ்லிம் மக்களைப் புறக்கணித்துவிட்டது என்றார். சபையில் இருந்த மார்க்ஸிய முற்போக்கு எழுத்தாளர்கள் கூச்சலிட்டனர். டொமினிக் ஜீவாவும் சுப்பிரமணியமும் கதிரைகளைத் தூக்கி வீசினர். கூழ் முட்டைகள் மேடையை நோக்கிப் பறந்தன. கலாநிதி சதாசிவம், சம்பந்தன், தேவன்- யாழ்ப்பாணம் உட்பட சகலரும் கூழ் முட்டையால் அர்ச்சிக்கப்பட்டனர். இளங்கீரன், நீர்வைப் பொன்னையன், ரகுநாதன், பெனடிக்ற் பாலன், பிரேம்ஜி, சில்லையூர் செல்வராசன், அகஸ்தியர், டானியல், யோகநாதன் முதலானோர் கூச்சலிடத்தொடங்கினர். நந்தி, சொக்கன், ஈழத்துச் சோமு முதலியோர் குழப்பம் விளைவித்து கூச்சல் போட்டவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்துக்கொண்டிருந்தனர். கலாநிதி கா. சிவத்தம்பி இவற்றை அவதானித்துக் கொண்டு நின்றிருந்தார்....."

மேலே தரப்பட்ட சுதந்திரன் செய்திக்கும் கோணேசனின் கூற்றுக்கும் எத்தனை வித்தியாசம் இருக்கிறது என்பதைக் கணக்கிட்டுப் பார்க்கலாம்.

'கேள்விச் செவியன் ஊரைக் கெடுப்பான்'

–அ. சிவபாலச்சந்திரன், திருமலை ஞானம்67 (டிசம்பர்2005)

✦ ஞானம் ஜனவரி வெளியீடு கிடைக்கப்பெற்றேன் மிக்க நன்றி. சுடச்சுட பல செய்திகளை வெளியிட்டுள்ளீர்கள். பல நூல்கள் பற்றிய தகவல்கள், வெளியிட்டு விழாக்கள் வரலாற்றுப் பதிவாக இடம் பெற்றுள்ளன. நான் எஸ். பொ வின் பேட்டிகளை மிக விரும்பி வாசிப்பவன். அதைத் திறம்பட முழுமையயாக வெளியிட்டு வருகிறீர்கள்.

எமது செந்தமிழ் வளர்த்த செம்மல்கள், புதுயுகத் தமிழர் ஆகியன பற்றிய செய்திகளை சிறப்பாக வெளியிட்டுள்ளீர்கள். எமது நன்றியும். பாராட்டும். 18-02-06 அன்று இலண்டனில் நடைபெறவுள்ள இருநூல்களின் வெளியீட்டுவிழாவின் போது தங்கள் சஞ்சிகை பற்றி அறிமுகம் செய்வேன்.

சிறந்த நல்ல இலக்கியப் பணியாற்றி வரும் தங்களுக்கும், தங்களுக்கு உறுதுணையாக செயற்பட்டு வரும் தங்கள் துணைவியாருக்கும் எமது பாராட்டுக்கள்

ஐ. தி. சம்பந்தன், ஆசிரியர் – சுடரொளி, லண்டன்.

(ஞானம் 69, பெப்ரவரி 2006)

✦ ஞானம் 73ஆவது இதழைப்பார்த்தேன். “ஞானம் தனது ஏழாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது என்ற வரிகளை வாசித்தபோது என்னால் நம்பமுடியாமல் இருக்கின்றது. அதற்குள் ஏழு வருடங்கள் ஓடி மறைந்துவிட்டனவா? அது எப்படி? நேற்றுத்தானே இதன் வெளியீடுவந்தது.

நா. பார்த்திபன் அவர்கள் ஒரு நாள் காலை என் இல்லம் வந்திருந்தார். முன்பின் அறிமுகமில்லை அன்றுதான் முதல் சந்திப்பு. தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அதன்பின் பேசத்தொடங்கினார்.

“கண்டியில் Dr. ஞானசேகரம் என்ற பிரபல எழுத்தாளர் “ஞானம்” என்ற மாத சஞ்சிகையை வெளியிடப்போறார். மூன்றுமாத காலத்திற்கு வாசகர்களுக்கு இலவசமாக அனுப்பி வைக்கப் போகின்றோம். அதன்பின்புதான் சஞ்சிகைக்கு ஒருவிலையைக் குறித்து அதன் பின்புதான் வாசகர்களிடமிருந்து பணம் வசூலிக்கப்போறோம் என்றும், மேலும் சஞ்சிகையின் வளர்ச்சிக்குரிய வழிவகைகளையும் வேறு விடயங்களையும் பேசினார். இருவருக்கிடையே பல கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றன. இடையிடையே சூடாகவும் இருந்தது, அப்போது நான் ஒன்றை மட்டும் வலியுறுத்திக் கூறினேன்.

நீங்கள் வாசகர்களுக்கு பிரதிகளை இலவசமாகக் கொடுப்பதைப்பற்றி நான் ஒன்றும் கூறமாட்டேன். அது உங்கட கார், உங்கட றோட், உங்கட பெற்றோல் மூன்றுமாதமென்ன ஆறுமாதமென்றாலும் கொடுங்கள். அது உங்கட இஸ்டம் ஆனால் குறிப்பிட்ட மாதத்திற்குப் பிறகு வாசகர்களிடம் பணம் வசூலிக்கும் போதுதான் அவர்கள் முகம் சுருங்கும். இவ்வளவு காலமும் சும்மா தந்தவர் இப்ப என்ன காசு கேட்கிறார். நல்லா பிழைக்க வழி கண்டிட்டார் என்று பலர் இல்லாவிட்டாலும் சிலராவது கூறுவார்கள். எனவே வாசகர்களிடமிருந்து பணம்பெறும் நோக்கமிருந்தால் தயவு செய்து முதலில் இருந்தே - ஆரம்பத்தில் இருந்தே அதற்கொரு விலையை குறித்துவிட்டு இலவசமாக அனுப்புங்கள். அப்போதுதான் வாசகர்களும் தாங்கள் இவ்வளவு ரூபா பெறுமதியான சஞ்சிகையைத்தான், இலவசமாகப் பெற்றிருக்கின்றோம்

என்ற உணர்வை அடைவது மட்டுமன்றி, தாங்கள் இலவசமாகப் பெறுவது சரி இல்லை என்றும் உணர்வார்கள். அஃதன்றி விலையே இல்லாமல் கொடுத்துப் பழகிவிட்டால், பின்னால் விலை போடும்போது அது ஒரு சுமையாகப்படும். சிலர் அதை ஏற்றுக் கொள்ளவும் விரும்பமாட்டார்கள்" என்று கூறினேன்.

மற்றவர்களும் இதை வலியுறுத்தி இருப்பார்கள் என்றே நினைக்கிறேன்.

சில மாதங்களின் பின் ஞானத்தின் முதல் இதழ் என் கைக்கு கிட்டியபோது முதலில் அதன் விலையைத்தான் பார்த்தேன். விலைபோடப்பட்டிருந்தது. அந்த முதல் இதழிலேயே என்னைப் பற்றிய காரசாரமான கட்டுரையும் இடம் பெற்றிருந்தது.

சில மாதங்களின்பின் ஞானம் கலந்துரையாடலை இங்கு ஏற்பாடு செய்திருந்தோம். அதுதான் ஞானத்தின் முதல் கலந்துரையாடல் வெளி மாவட்டத்தில் நடந்தது என்று நினைக்கின்றேன்.

அண்மையிலும் ஒரு ஞானம் கலந்துரையாடல் இங்கு நடைபெற்றது.

காலம் எவ்வளவு வேகமாக ஓடிவிட்டது.

ஞானத்திற்கு ஏழு வயது

நான் அதன் தொடர்ச்சியான வாசகர்களுள் ஒருவன் என்பதை நினைக்கும்போது சந்தோசமாகவும் இருக்கிறது. மனம் நிறைவாகவும் இருக்கிறது.

ஒரு சிறுமியின் வளர்ச்சிபோன்ற உணர்வும்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு நீடூழிவாழ எம்பெருமான் கோணை நாயகரையும் பத்ரகாளியையும் மனமார வேண்டுகிறேன்.

த. சித்தி அமரசிங்கம், திருகோணமலை. (ஞானம் 74, ஜூலை 2006)

✦ திருமிகு ஞானம் ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். கடந்த மூன்று மாத ஞானம் இதழ்களில் வெளிவந்த பல்கலைக்கழக தமிழ்த்துறையினர் மீது கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களின் பகிரங்க குற்றச்சாட்டுக்கள் படித்தேன். மனது கனத்துப் போனது. குற்றச்சாட்டுக்கள் எல்லாம் சரிதான் என்று சான்று பகிர்வது போல் கடந்த இதழில் வாசகர்களின் கடிதமும். இவற்றுக்கெல்லாம் பல்கலைக்கழக தமிழ்த்துறையினர் பதில் சொன்னால் மிகவும் நன்றாக இருக்கும். பதில் ஞானத்தில் வந்தால் வாசகர்கள் படித்து தெரிந்து தெளிவு பெற வாய்ப்பாக அமையும். பல்கலைக்கழக தமிழ்த்துறையினர் மௌனம் காத்தால் மௌனமே சம்மதத்துக்கும் அடையாளம் ஆகிவிடலாம்.

எம். எம். பீர் முகம்மது, மாத்தளை. (ஞானம் 78, நவம்பர் 2006)

✦ இதழ் 79 கிடைத்தது, நன்றி, கையில் இதழ் கிடைப்பதற்கு முன்பாக இணையத்தில் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. அதுவும் இணையத்தில் பக்கங்கள் வர்ணமயமாக உள்ளன. அட்டைப்பட அதிதி 'அன்னலட்சுமி ராஜதுரை' பற்றிய விளக்கங்கள் போதாமல் உள்ளன. எடுத்துக்கொண்ட விடயதானத்தை விட்டு கட்டுரை எங்கோ விலகிச் செல்கின்றது. பரிசுச் சிறுகதை 'சிறைப்பட்டிருத்தல்' மிகவும் நன்றாக உள்ளது. இன்றைய அவலத்தை,

அதுவும் பெண்கள் படும் துயரத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றது. மேலும் அவரிடமிருந்து படைப்புக்களை எதிர்பார்க்கின்றோம். நீண்ட நாட்களின் பின்பு ஒரு நேர்காணல் வந்துள்ளது. எஸ்.பொ. வின் 'செங்கை ஆழியானின் குறுநாவல்கள்' பற்றிய பார்வை, இளைய அப்துல்லாவின் 'மற்றவை நேரில்' பயனுள்ள கட்டுரைகள். 'பார்த்து வியந்த வெப்சைட்'டின் இணைய முகவரியை இளைய அப்துல்லா தந்திருந்தால் நாங்களும் பார்த்து வியந்திருக்கலாம். மற்றும் வாகரைவாணனின் 'வடக்குக் கிழக்கு', கல்வயல் வே. குமாரசாமியின் கவிதைகள் ரசிக்கும்படியாக உள்ளன.

ஞானத்தில் வெளிவந்த 'புனைகதை இலக்கியம் : அறிவோம், கற்போம், படைப்போம்' போன்ற சில கட்டுரைகள் முடிவடைந்து விட்டனவா அல்லது இன்னும் வருமா என்பது தெரியவில்லை.

ஓவியங்களை மிகவும் நன்றாக வரையும் கௌதமனுக்கு எனது பாராட்டுக்கள்.

ஞானம் சஞ்சிகை பற்றி, அதன் படைப்புக்கள் பற்றி பலரும் ஆராய்ந்து பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறுவதற்காக ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிக்கின்றார்கள் என்பதில் மகிழ்ச்சி. அந்த ஆய்வுக் கட்டுரைகளை அவர்களின் அனுமதியுடன் இணையத்தில் வெளியிடுவார்களாயின் பலருக்கும் பயன்படும்.

கலாநிதி துரை மனோகரனின் "எழுதத் தூண்டும் எண்ணங்கள்" தொடரை ஏன் சமீபத்திய இதழ்களில் காணமுடியவில்லை. பல பயனுள்ள தகவல்களை அத்தொடரில் பெறக்கூடியதாக இருந்தது. அவர் தொடர்ந்தும் எழுதவேண்டும்.

அன்புடன், கே. எஸ். சுதாகர், அவுஸ்திரேலியா

ஞானம் –80 (ஜனவரி 2007)

✦ 'ஞானம்' பிப்ரவரி - இதழில் அடியேனின் படத்தை வெளியிட்டு தமிழ் எழுத்துலகிற்கு அறிமுகப்படுத்தியமைக்கு எனது உளங்கனிந்த நன்றி! நன்றி! நன்றி!.

இதற்கு உறவுப்பாலம் அமைத்துக் கொடுத்த அன்பர் ஆ. குணநாதன் அவர்களுக்கும் எனது நன்றி.

தமிழ் இதழ் என்ற பெயரில் தமிழுக்குத் தீங்கு விளைவித்துக் கொண்டிருக் கின்றன பெரும்பாலான தமிழ் இதழ்கள். இவற்றுள் 'ஞானம்' தமிழைத் தற்காத்து நிற்கின்றது என்பது அடியேனின் பணிவன்பான கருத்து. ஞானத்தின் பணி தொடர்க! வளர்க! என வாழ்த்துகிறேன்.

அ. ரெங்கசாமி, கோலலங்காட், மலேசியா.

(ஞானம் 82, மார்ச் 2007)

✦ நான் அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித் துறையில் கடந்த சில ஆண்டுகளாக "ஞானம்" இதழைப் படித்து வருகிறேன். கடந்தகாலங்களில் இத்துறையில் நடைபெற்ற ஞானம் ஆய்வுகளையும் படித்தறிந்துள்ளேன். நான் தற்பொழுது முனைவர் சா. உதயசூரியன் அவர்களின் வழிகாட்டுதலின்

கீழ், ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்காக ஞானம் **கவிதைகளை** ஆராய்ச்சி செய்யத் தொடங்கியுள்ளேன். இந்த ஆய்வுக்கு தங்களின் ஒத்துழைப்பும் உறுதுணையும் தேவைப்படுகின்றன. இத்துறையில் நடக்கும் ஈழத்தமிழி லக்கிய ஆய்வுகளுக்கு பெருந்துணையாக இருந்துவரும் தாங்கள் இந்த ஆய்வுக்கும் துணைநிற்க வேண்டும் என வேண்டுகிறேன். ஞானம் இதழில் வெளிவந்த கவிதைகள் குறித்து ஆராய்ச்சி நூல்களோ ஆராய்ச்சிக் கட்டுரைகளோ வெளிவந்திருப்பின் அவற்றை எனக்கு அனுப்பி, என் ஆய்வு செழிக்க உதவிட வேண்டும் எனப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

என் ஆய்வு நெறியாளர் ஞானம் இதழின் இலக்கியப் பணிகளில் பெருமதிப்பு கொண்டவர். எனவே இந்தக் கவிதை ஆய்வும் சீரும் சிறப்புடனும் அமைய தங்களின் மேலான ஒத்துழைப்பை என் ஆய்வுக்காலம் முழுவதும் எதிர்பார்க்கிறேன்.

மு. மகேஸ்வரி, தஞ்சாவூர், பல்கலைக்கழம்.
(ஞானம் 82,மார்ச் 2007)

✦ தங்களின் ஞானம் மார்ச் 2007 இதழ் கிடைத்தது. திரு. அந்தனிஜீவா கண்டியிலிருந்து அனுப்பியிருந்தார். அதனில் பக்கம் 53இல், 20ஆம் நூற்றாண்டு ஈழத்துக் கவிதைகள் குறித்து சில மனப்பதிவுகளை அந்தனி ஜீவா எழுதியிருந்தார். 20ஆம் நூற்றாண்டு ஈழத்துக்கவிதைகள் நூலில் மலையகத்து இந்திய வம்சாவழியினரின் கவிதைகளைப் பதிப்பிக்கவில்லை என்பதைக் சுட்டிக் காட்டியுள்ளார். ஈழம் என்பது முழு இலங்கைக்கும் உரிய பெயராயினும் இப்போது வடக்கு கிழக்குப் பிரதேசங்களே ஈழம் என்பது உறுதியாகியுள்ளது. அந்தக் கருத்துடன் இந்த நூல் வெளியாயிருப்பின் தவறில்லை.

ஆயினும் மலையக இந்திய வம்சாவளித் தமிழ் மக்களை பேதங்களின்றி தமிழினம் என்றே ஒருமைப்படுத்தி கூறுவர். அவர்களின் தமிழ்ப்பற்றும் எவ்வகையிலும் தாழ்ந்ததல்ல. அந்த எண்ணத்துடன்தான் எனது கவிதைகள் 20 ஆம் நூற்றாண்டு கவிதைகள் அடங்கிய நூலில் இடம்பெறவில்லை என்று மனம் கலங்குகிறார் அந்தனிஜீவா.

நான் எழுபது ஆண்டுகளாக ஓவியக்கலையையும் கவிதையூற்றையும் கொண்டுள்ளவன். கவிதை நூலுக்கு விளம்பரம் கொடுத்தனர். நானும் 'சொந்த நாட்டிலே' என்ற மகுடமுடைய கவிதைத்தொகுதியை அனுப்பினேன். தமிழர் உரிமைக்காகவும் தமிழர் சத்தியாக்கிரக நிதிக்காகவும் பிரசுரிக்கப்பட்ட 'சொந்த நாட்டிலே' கவிதைத்தொகுதியை அனுப்பினேன். ஆனால் அது 20ஆம் நூற்றாண்டு ஈழத்துக்கவிதை நூலில் பதியப்படவில்லை. மலையகத்தான் என்ற மனச்செருக்காக இருக்கலாம். எனது கவிதைகளை இப்போது புறக்கணித்தாலும் எதிர்காலத்தில் பத்திபத்தியாக எனது கவிதைகளைப் போற்றும் காலமும் வரும்.

மகாகவி பாரதியாரை அவரது இனத்தவரே புறக்கணித்தனர். பாரதி மறைந்தபின் மகாகவி பாரதி என அவர்களது இனத்தவர்களே புகழ்ந்து போற்றினர். அதுபோன்று நான் கவலைப்படவில்லை.

கவிஞர் சக்தீ பால – ஐயா, கொழும்பு ஞானம்–83 (ஏப்பிரல் 2007)

✦ பேராசிரியர் கா.சிவத்தம்பி மலர் சிறப்பாக இருக்கிறது. சில கட்டுரைகள் பாராட்டப்படவேண்டியவை. ஒவ்வொரு கட்டுரைக்கும் ஊடாக பேராசிரியரை மாத்திரமன்றி கட்டுரை ஆசிரியரையும் பார்க்கமுடிகிறது.....பேராசிரியருக்கு இப்படியொரு மலரினை வெளியிட்டுவைத்த உங்களை உளமாரப் பாராட்டுகிறேன்.

ஏ. ரி. நித்தியகீர்த்தி, அவுஸ்ரேலியா
(ஞானம் 86,ஜூலை 2007)

✦ கலை, இலக்கியச் சஞ்சிகை ஞானம் இதழ் ஒன்றினை கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் வழி பெற்றுப் படித்தேன். முற்றிலும், கலை, இலக்கியம் சார்ந்த இப்படி ஓர் ஏடு அண்மையில் படிக்கக் கிடைத்ததில்லை. முயற்சி அரியது. உள்ளடக்கம் சீரியது. வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

R.D. **அன்வர், மலேசியா. (ஞானம் 88, செப்டெம்பர் 2007)**

✦ நூல் விமர்சனப்பகுதி மிகவும் பயனுள்ள பகுதி. இப்போது வெளிவந்து கொண்டிருக்கும் தமிழ்ச் சஞ்சிகைகளுள், "ஞானம்" போல் விரிவான பயனுள்ள நூல் விமர்சனங்களுடன் வெளியாகும் இதழ் ஏதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. "ஞானம்"செய்யும் இலக்கிய சேவைகளுள் இந்த விமர்சனப்பணி மிகவும் முக்கியமானது. "ஞானம்" பெயரை என்றும் நிலைநிறுத்தக்கூடிய பயனுள்ள அம்சம்!

– சிவசரவணபவன் (சிற்பி) (ஞானம் 90, நவம்பர் 2007)

✦ "ஞானம்" - இதழ் அநேகமாக என் தோழியாகவே மாறிவிட்டது. படைப்புகள் மிக நன்றாக, காத்திரமாக உள்ளன. உங்கள் தலையங்கங்கள் நேர்மையாய் பளீரென்று இருக்கின்றன. நேர்காணல் - புதிய பரம்பரைக்கு பழைய வரலாறுகளை தெளிவாகச் சொல்கின்றன. வஞ்சகமில்லாமல் சகலருக்கும், சமதளம் கொடுக்கும் தங்கள் நோக்கு பெரிதும் பாராட்டுக்குரியது.
'ஃப்' பயன்மிக்க கட்டுரை. கட்டுரையாளர் உங்கள் மகன் - அற்புதம் நானும், படிக்கிறேன். நிறைய!
Like Father, Like Son!
உங்கள் "ஞானம்" மென்மேலும் சிறக்க மனமார்ந்த வாழ்த்துகள்.

யோகா பாலச்சந்திரன், கனடா (ஞானம் 96, மே 2008)

✦ மலையக எழுத்தாளர் கே. கணேஷ், மறுமலர்ச்சி வரதர், பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி ஆகியோருக்குச் சிறப்பு மலர்களை வெளியிட்ட

ஞானம் இப்போது சிற்பி அவர்களுக்குச் சிறப்புமலர் வெளியிட்டு அவரை இன்றைய வாசகர் அறிய வைத்துள்ளது. மானா மக்கீன் எழுதிய "என்னைப் படைப்பிலக்கியவாதியாக அடையாளம் கண்டார் சிற்பி அய்யா" என்ற கட்டுரையில் "சிறுகதை விமர்சகர்கள், கொழும்பு இலக்கியப் பிரமுகர்கள் பலர் 'கலைச் செல்வி'யை மறந்துள்ள நிலையில்" எனச் சிற்பி அவர்களால் தொடுக்கப்பட்ட எழுத்துக்களைப் குறிப்பிட்டிருந்தார். அரைநூற்றாண்டுகளுக்கு முந்திய ஒரு தமிழ் எழுத்தாளன், இதழாளனின் இதயக்கமலத்தில் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கின்ற தீச்சுவாலையைப் பெரிதாகப் படரவிடுகிறது. பெரும் பெரும் அமைப்புகள் சிந்தித்துச் செயல்பட்டிருக்க வேண்டிய ஒன்றை 'கலைச் செல்வி' போன்ற இலட்சியத் தாகமும் இலக்கிய வேட்கையும் கொண்ட ஞானம் போன்ற இதழே நிறைவேற்ற முனைந்திருப்பது அந்தப் பரம்பொருளின் எண்ணப்படியும் திட்டப்படியுமா? என்று வியப்படைவது எத்தகைய உண்மையாகப்படுகிறது. ஞானத்தின் சிறப்பான பணி தொடரட்டும்.

– எச். ஏ. எம். நவாஸ், ஏறாவூர்– 02 ஞானம்98 (ஜூலை2008)

✦ முதலில் 100ஆவது ஞானம் கண்ட தங்களுக்கு நூறு ஆண்டுகள் வாழ எனது வாழ்த்துக்கள். 100ஆவது ஞானம் கிடைக்கப் பெற்றேன். ஒன்றும் விடாமல் வாசித்து முடித்து விட்டேன். பத்து ஞானங்களை ஒன்றாக சேர்த்து, வாசித்த அனுபவம். படைப்புகளின் ஒன்று திரட்டலுக்காக தங்களின் உழைப்பு அதன் உள்ளடக்கத்தில் தெரிகிறது.

இலக்கியத்தின் பல பக்கங்களை வெளிப்படுத்தும் கட்டுரைகள். முக்கியமாக ஈழத்து இலக்கியத்தின் பல்வேறு முகங்களை பிரதிபலிக்கும் காத்திரமான நாற்பத்தியொரு கட்டுரைகள். புதியவர்கள் முதல் பெரும் அனுபவசாலிகள் வரை புகுந்து விளையாடியிருக்கிறார்கள். கட்டுரைகள் அனைத்தும் பாதுகாக்க வேண்டியவை. சிறுகதைகளில் சிவனு மனோகரனின் "சக்தி கரகம்" நல்லதொரு படைப்பு. இப்போதெல்லாம் சிவனுவின் சிறுகதைகளில் ஒரு கனதி தென்படத் தொடங்கியிருக்கிறது. அது அத்துறையில் அவரது சிறப்பான எதிர்காலத்தை காட்டுகிறது. மலையகத்தின் மிகச் சிறந்த சிறுகதைகள் அவரிடமிருந்து வரும் என்பது என் நம்பிக்கை.

அ. முத்துலிங்கத்தின் "குருவும் சீடர்களும்" மிக அருமையானதொரு கட்டுரை. இது பரவலாக அனைத்து ஆசிரியர்களுக்கும் போய்ச் சேர வேண்டும். இன்றைய ஆசிரிய சமூகத்தை நோக்கும்போது அநேகமான ஆசிரியர்களின் இருப்பும், செயற்பாடும் எதிர்கால சமுதாயத்தை நினைக்க பயமாக இருக்கிறது. அதிலும் மலையக சமூகம்???.... அ. முத்துலிங்கத்தை தொடர்ந்து எழுதவைக்கலாமே?

100ஆவது இதழில் நவீன இலக்கிய சிறப்பிதழாக இருக்கையில் நவீன ஓவியங்களுக்கு இடமளித்திருக்க வேண்டும். நவீன ஓவியங்கள் அடங்கியிருப்பின் இதழில் அழகு இன்னும் மெருகேறியிருக்கும்.

ஞானம் தன் 100ஆவது இதழோடு இன்னும் ஒரு படி மேலே போயிருக்கிறது.

இனி வரும் ஞானங்களில் இந்த காத்திரமும், கனதியும் தொடர வேண்டும். புதியவர்களில் பரிசோதனை முயற்சிகளுக்கு இடம் கொடுத்து இதழியல் வரலாற்றில் புதிய பரிமாணத்தோடு வளர என் வாழ்த்துக்கள்.

சுதர்மமகாராஜன் (ஞானம் 101, ஒக்டோபர் 2008)

✦ **"சாஹித்யரத்னா விருதுபெறும்" செங்கை ஆழியான்**

தகுதி வாய்ந்த இலக்கிய வாதிகளை "ஞானம்" நேர்காணல், தனிக்கட்டுரை மூலம் கனம் பண்ணி வருவதை நாம் அறிவோம்.

அந்த வகையில் இவ்வாண்டு சாஹித்யரத்னா விருதுபெற்ற செங்கை ஆழியான் பற்றி 'ஞானம்' ஒக்டோபர் இதழில் வெளிவந்த கட்டுரை குறிப்பிடத்தக்கது.

செங்கை ஆழியானின் இலக்கிய சாதனைகள் மகத்தானவை. அவை அனைத்தையும் உள்ளடக்கி ரத்தினச் சுருக்கமாக வரையப்பட்டிருந்த இக் கட்டுரை பாராட்டத்தக்கது. வாழ்த்துக்கள்.

இரா. நாகலிங்கம் (அன்புமணி) (ஞானம் 114, நவம்பர் 2009)

✦ வணக்கம், எனது தந்தைக்கு (செங்கை ஆழியான்.) சாஹித்தியரத்னா விருது கிடைத்த மகிழ்ச்சியிலும் பார்க்க இம்மாதம் (ஒக்டோபர் 2009) ஞானத்தைப் பார்த்தபோது அதிக மகிழ்ச்சி ஏற்பட்டது. எனது தந்தையை தகுந்த நேரத்தில் தகுந்தவிதமாக தங்களது இதழில் கௌரவித்துள்ளீர்கள். நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

திருமதி. Dr. ரேணுகா பிரதீப்குமார் (ஞானம் 114, நவம்பர் 2009)

✦ **'ஞானம்' வெளியிட்ட 'எஸ்.பொ.' சிறப்பு மலர் ஈழத்து தமிழ் படைப்பாளிகட்கு கிடைத்த நோபல் பரிசு**

தி.ஞானசேகரன்-ஞானம் 115 ஆவது இதழை 'இலக்கியஞானி' எஸ்.பொ. சிறப்பு மலரை வெளியிட்டுள்ளார். இதனை ஈழத்தமிழ் படைப்பாளிகட்கு கிடைத்த நோபல் பரிசாக தலையில் சுமக்கிறேன்.

எஸ்.பொ. பிறந்த வீட்டின் பின்வேலியில் யாழ். இளங்கலைஞர் மன்றமும், முன்வேலியில் பண்டாரக்குளம் மருதவளவுப் பிள்ளையார் கோயிலும் வாழ்தலின் வரலாறாகி வளர்கின்றன. அதே குறிச்சியில் சிறியேனும் பிறந்து வளர்ந்து வாழ்ந்து அரச அதிகாரியாக ஓய்வுபெற்றாலும் எஸ்.பொ. என்ற படைப்பாளி நடந்த மண்ணில் பிறந்தேன் என்ற பெருமையினால் தலை நிமிர்த்தி எழுதுகிறேன்.

அமரர் இராமசாமி அய்யர், அமரர் மணி அய்யர், தோழர் கார்த்திகேசன், தோழர் நவரட்ணம் (EX. MP) என்போரை பாதுகாவலராக கொண்டு இயங்கிய நல்லை தமிழ்ச் சங்கம் 'இலக்கிய ஞானி' என்ற பட்டத்தை அண்ணன் எஸ். பொ.வுக்கு ஆபரணமாக அணிவிப்பதில் தன்னை அலங்கரிக்கின்றது. அண்ணாவின் 80ஆவது பிறந்தநாள் விழாவை அவர் பிறந்த வீட்டு

மண்ணிலே நடத்த, நல்லூர் மக்கள்-நண்பர்கள், ஊடகவியலாளர்கள், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள் இன்றே நிமிர்தல் வேண்டும். 'புத்ர' 'மித்ர' சிங்கக்குட்டிகளை இழந்துவிட்ட எஸ்.பொ இதயம் துடிப்பது, என் இதயத்திலும் இடிக்கின்றது.

எஸ்.பொ. பற்றி 26பேர் கட்டுரைகள் வரைந்துள்ளனர். எஸ்.பொ எழுத்துக்களே எஸ்.பொ வை அர்ச்சனை செய்கின்றன. 'தீ' 'சடங்கு' 'வீ' பற்றி திரும்பக் கூறுவதில் உள்ளே ஏதோ இருப்பதை உணர்த்துகின்றது. கட்டுரை அர்ச்சனைகள் அழகாக இருக்கின்றன.

எஸ்.பொ. என்கின்ற தலைமைப்படைப்பாளி என்ற 'ஞானம்' ஆசிரியத் தலையங்கம் மலரின் முழுமைக்கும் முத்துப்பந்தலாக முத்துமழை பொழிகின்றது. எஸ்.பொ.வின் 'வரலாற்றில் வாழ்தல்' நூல் ஆங்கிலத்தில் எஸ்.பொ.வால் எழுதப்பட்டு நோபல் பரிசு கமிட்டிக்கு அனுப்பப்பட வேண்டும். இலங்கை தமிழ்ப் பல்கலைக் கழகங்கள் 'சைவவேளாளர்' நிலைக்குள் இன்றும் முடக்கப்பெற்றுள்ளதால் எஸ்.பொவுக்கு டாக்டர் பட்டமோ, அவரின் நூல்களை பாடநூலாக்கவோ, ஆய்வு செய்யவோ அறம் தடுக்கின்றது - சுவர் தடுக்கின்றது. மிடுக்கில் துயில்வது நாங்கள் பின்னோக்கி நகர்வதை - காவடி 'செடில்' ஆக்கிவிட்டது.

நல்லை அமிழ்தன் ஞானம்116 (ஜனவரி2010)

✦ கடந்த மே மாதம் ஞானம் இதழ் எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்பின் பவளமலராக வெளிவந்தது கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். தெளிவத்தை ஜோசப்பைப் பற்றிய முழுமையான தகவல்களை அறியக்கூடியதாக இருந்தது. ஒரு படைப்பாளி வாழும்போதே அந்தப் படைப்பாளியை கௌரவித்து, அவரது இலக்கியப் பணிகளை சமூகத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியதன் மூலம் ஞானம் தனது வரலாற்றுக் கடமையைச் செய்திருக்கிறது. இறுதிப் பக்கத்தில் அவரைப் பற்றிய சுயவிபரக் குறிப்புக்களைத் தந்து பவளமலரை முழுமையுறச் செய்திருக்கிறீர்கள். தொடரட்டும் ஞானத்தின் செவ்விய பணி.

ஞானம் சஞ்சிகை வெளிவரத் தொடங்கி பத்து ஆண்டுகள் நிறைவடைந் துள்ளமையை அறிந்தபோது மகிழ்ச்சியாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. ஆசிரியரது அயாரத முயற்சியும், இலக்கிய ஆர்வமுமே இச்சஞ்சிகையின் வளர்ச்சிக்கு காரணம்.

புலம்பெயர்ந்து வாழும் என் போன்ற எழுத்தாளர்களை ஒன்றிணைத்து அவர்களது படைப்புக்களுக்கும் களம் சமைத்துக் கொடுக்கிறது ஞானம் சஞ்சிகை. ஈழத்து படைப்புக்களையும் கலை, இலக்கிய நிகழ்வுகளையும் ஞானம் சஞ்சிகை ஊடாக அறியக் கூடிய அரிய வாய்ப்பும் எமக்குக் கிட்டுகிறது. அதேவேளை புதிய இளந்தலைமுறைப் படைப்பாளிகளையும் அறிமுகம் செய்து வருகிறது. தரமான சிறுகதை, கவிதை, கட்டுரை ஆக்கங்களோடும், முதிர்ந்த எழுத்தாளர்களை கௌரவிக்கும்முகமாக அவர்களது எழுத்துப் பணிகள், ஆக்கங்கள் அடங்கிய சிறப்பு மலராகவும் ஞானம் சஞ்சிகை அவ்வப்போது வெளிவருகிறமை குறிப்பிடத்தக்கது. இலக்கியப் பிரக்ஞையோடு

தரமான சஞ்சிகையாக மிளிர்கிறது ஞானம் சஞ்சிகை.

ஞானம் சஞ்சிகை இன்னும் பல தசாப்தங்கள் கடந்து தன் இலக்கியப் பணியைத் தொடரவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

பிரியமுடன், அகில்.கனடா ஞானம்–122 (ஜூலை 2010)

✦ ஒரு தசாப்தத்தின் நிறைவில் 'ஞானம்' தனது 121வது இதழை மாதந்தவறாது முன் வைத்துள்ளது. ஞானத்தின் 78 ஆவது இதழிலிருந்து இதுவரையும், கலை இலக்கியக் காட்டுக்குள் ஒரு 'டோற்ச்லைற்'றாக நான் ஞானத்தைப் பயன்படுத்தி வந்துள்ளேன். அந்த வெளிச்சத்தில் நான் கண்ட ஞான தரிசனங்கள் பல.

ஞானம் நடத்திய சிறுகதைப் போட்டிகளில் முகமே தெரியாதவனாக கலந்து கொண்டு, 2006இல் 'மீள்தகவு' சிறுகதைக்கும், 2007இல் 'கல்லடிப் பாலம்' சிறுகதைக்கும், 2008இல் 'தாய்மொழி' கதைக்கும், 2009இல் 'வதனமார்' சிறுகதைக்கும், பரிசுகள் பெற்றேன். ஒரு சிற்றெறும்புக்கும் நிழல் இருப்பது போல எனது பெயரையும் சிறுகதைத் துறையில் ஞானத்தில் பதித்து வைத்துள்ளேன், என்பதில் பெருமை எனக்கு.

தவிர 121 ஆவது இதழில் வாகரைவாணருக்கு மானாமக்கீன் கொடுத்த சவுக்கடியை கண்ட தமிழ் முஸ்லிம் நெஞ்சங்கள் மன திருப்தியுற்றன. இதனைப் பிரசுரித்த ஞானம் ஆசிரியரின் நடுநிலைத்தன்மையையும் துணிச்சலையும் வியந்து நோக்குகின்றேன். எப்போதும் இருபக்க கருத்துக்களையும் பிரசுரித்து வாசகருக்கு விடயத்தை 'உணர்த்து'கின்ற ஞானம், 'பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது' என்பதிலிருந்து ஒரு போதும் தவறவில்லை.

121ஆவது ஆசிரியர் தலையங்கத்தில், ஞானம் ஆசிரியரின் தன்னடக்கமான உரை நெஞ்சைத் தொட்டது. கவலையே வேண்டாம்! ஞானத்தின் தொடர் வளர்ச்சிப்பாதையில் படிக்கட்டுகளாகக் கிடக்க வாசகர்கள் தயாராகவிருக்கிறோம்! எப்போதுமே!

தீரன், ஆர். எம். நௌஸாத், சாய்ந்தமருது (ஞானம்–123– ஆகஸ்ட்–2010)

✦ வணக்கம், என் பெயர் ரேணுகாதேவி. தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் **முனைவர்** பட்ட ஆய்வினை மேற்கொண்டுள்ள மாணவி. தங்களின் இதழான ஞானம் இதழே என் ஆய்வின் தலைப்பு. 1-50 வரையிலான இதழ்களில் முதல் 36 இதழ்கள் என்னிடம் உள்ளன. மீதமுள்ள இதழ் எண் 37 முதல் 50 வரையான 14 இதழ்கள் தேவைப்படுகின்றன.

சா.உதயசூரியன், உதவிப்பேராசிரியர், அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கு மாறும், தங்களுடன் தொடர்புகொள்ள தொலைபேசி எண், E-Mail முகவரி ஆகியவற்றை அனுப்பிவைக்குமாறும் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கு.ரேணுகாதேவி (கும்பகோணம்) (ஞானம் 137, ஒக்ரோபர் 2011)

✦ ஞானம் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரன் அவர்களும் நிர்வாக ஆசிரியர் ஞா.பாலச்சந்திரன் அவர்களும் இணைந்து ஞானம் ஈழத்துப் போர் இலக்கிய சிறப்பிதழை அழகுறவும் கனதியாகவும் வெளிக்கொணர்ந்தமையை ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் ஏராளமான கல்விமான்களும் இலக்கிய கர்த்தாக்களும் இலக்கிய இரசிகர்களும் பாராட்டி இருப்பது ஞானத்திற்கு கிடைத்த பெரும் வெற்றி என்றே கூறவேண்டும்!

அதைக்காட்டிலும் 2012 நவம்பர் 25ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச்சாங்கத்தில் நூலை வெளியீடு செய்த ஞானம் குழுவினர் 07.12.2012இல் தமிழ்நாட்டில் பாரதிதாசன் பல்கலைகழகத்திலும் அதே தினம் தஞ்சைப் பல்கலைக்கழகத்திலும் 08.12.2012இல் நாமக்கல் செல்வம் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலும் திருச்சியில் பல இடங்களிலும் 09.12.2012இல் கோயம்புத்தூரிலும் மேலும் பல முக்கிய ஆங்கில தமிழ் பத்திரிக்கையாளர் சந்திப்பிலும் 12.12.2012இல் சென்னையில் பல இடங்களிலும் நூலை அறிமுகம் செய்ததுடன் ஈழம் திரும்பி 27.12.2012இல் மட்டக்களப்பிலும் 28.12.2012இல் திருக்கோணமலையிலும் அதனைத் தொடர்ந்து 29.12.2012இல் வவுனியாவிலும் 30.12.2012இல் யாழ்.தேவரையாளி இந்துக்கல்லூரியிலும் அறிமுக விழாக்களை துரித வேகத்துடன் சிறப்புற நடாத்தி முடித்ததுடன் அனைத்து நிகழ்வுகளையும் நிழல்படங்கள் சாட்சியாக ஞானத்தின் டிசம்பர் 2012 இதழில் பதிவு செய்த திறனை எப்படிப் பாராட்டினாலும் தகும்!

தவிர, ஓவியர் ஆசை. இராசையா ஒரு சிறந்த ஓவியர். இலங்கையில் இலைமறைகாயாக இருக்கும் அவரது புகழை வெளிக்கொணர்ந்து, பாராட்டவும் செய்த ஞானத்துக்கு நண்பர் ஆசை இராசையாவின் பள்ளித் தோழன் என்ற முறையில் நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளேன்.

கலாபூஷணம் வீ.என்.சந்திரகாந்தி,
திருகோணமலை ஞானம்152 (ஜனவரி2013)

✦ **ஞானத்துக்கு இந்தியாவில் பரிசு – சுஜாதா அறக்கட்டளை – உயிர்மை இணைந்து வழங்கும் சுஜாதா விருதுகள் –2013**

மேற்படி விருது வழங்கலில் ஞானம் சஞ்சிகை சிறந்த சிறுபத்திரிகைக்கான சுஜாதா சிற்றிதழ் விருதினைப் பெறுகிறது என்பதனையும் அதற்கான விருதுவழங்கல் சுஜாதாவின் பிறந்தநாளான மே 3ஆம்திகதி சென்னையில் நடைபெறுகிறது என்பதனையும் அறிந்து மகிழ்ந்தேன். ஞானம் பரிசுக்கு முழுத்தகுதிபெற்ற இதழ் என்பதில் ஐயமில்லை. 'ஞானம்' இதழ் மீதான மதிப்பும் மதிப்பீடும் அதிகரிக்கிறது. பலஆண்டுகளாக ஒரு தவத்தைப்போன்று இதழ்நடத்தி வருகிறார் ஐயா டாக்டர் ஞானசேகரன் அவர்கள். இலங்கையின் மூத்த இதழாளர்களில் ஒருவர். அவருக்கு என் நல்வாழ்த்துக்கள்.

–கவிஞர் வதிலை பிரபா,
தலைவர், உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம்
(ஞானம் 156, மே 2013)

✦ **கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் வாழ்த்து**

ஞானம் சஞ்சிகைக்கு சிறந்த சிற்றிதழுக்கான விருது தமிழகத்தில் வழங்கப்பட்டமைக்கு கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் 28-04-2013 ஆம் திகதி நடைபெற்ற ஆட்சிக் குழுக் கூட்டத்தில் வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது என்பதைத் தங்களுக்கு அறியத்தருவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

–ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி,
பொதுச் செயலாளர் –கொழும்புத் தமிழ்ச்சங்கம்
(ஞானம் 157, ஜூன் 2013)

✦ 157 ஆவது சஞ்சிகை வாசிக்கக் கிட்டியது.

மாதம் ஒருதடவை வார இறுதிஞாயிற்றுக்கிழமைகளில் கூடும் நம் உயர்திணை அமைப்பினர் நடாத்திவரும் இலக்கியச் சந்திப்பில் புத்தக வாசிப்பினை ஊக்குவிக்கும் முகமாகவும் படித்துரசித்த புத்தகங்களைப் பரிமாறிக்கொள்ளும் முகமாகவும் புத்தகப் பேரேடு ஒன்று அறிமுகம் செய்யப்பட்டு இருக்கிறது. அடுத்த சந்திப்பில் ஞானம் சஞ்சிகை அறிமுகம் செய்யப்பட இருக்கிறது என்றதகவலையும் தங்களோடு பகிர்ந்துகொள்வதில் பெருமகிழ்வடைகிறேன்.

அதேநேரம் ஞானம் சஞ்சிகைக்கு சுஜாதா விருது கிடைத்தமையை இட்டு என் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் சொல்லிக்கொள்வதிலும் மகிழ்ச்சியடைகிறேன்.

வாழ்க உங்கள் பணி! சிறந்தோங்கட்டும் தமிழ்ச் சேவை!

அன்போடு, வாசகி யசோதா பத்மநாதன் – அவுஸ்திரேலியா
(ஞானம் 160, செப்ரெம்பர் 2013)

✦ ஆகஸ்ட் மாத ஞானம் இதழ் கண்டேன். மிகவும் மகிழ்ச்சி. தனிநாயகம் அடிகளாரைப்பற்றிய அற்புதமான தகவல்களை அனைவரும் இதழில் பதித்திருந்தார்கள். அனைவருக்கும் வாழ்த்துக்கள். இந்தக்கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டால் எதிர்கால சந்ததியினருக்கு இது பயன் தரும் நூலாக அமையும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. வாழ்த்துக்கள்

–சரவணையூர் விசு. செல்வராசா,
சர்வதேச தமிழ் வானொலி, பிரான்சு
(ஞானம் 161 , ஒக்டோபர் 2013)

✦ தங்களின் இதழை திரு. கே. பொன்னுத்துரை அண்ணன் மூலமாக இணையத்தில் வாசித்து வருகிறேன். ஆக்கங்கள் மட்டுமன்றி இதழும் தரமாக இருக்கிறது. பலன்பாரா இம்முயற்சிக்கு எனது வாழ்த்துக்கள். மு. பொ. வின் விமர்சனங்கள் விரும்பிப் படிப்பேன். உ. நிசாரின் மரம் மனிதன் சிறுகதைக்கு மு. பொ. எழுதிய விமர்சனத்தில் வானியல் விஞ்ஞானி Stephen Hawking அமெரிக்க நாட்டவர் எனக்குறிப்பிட்டிருந்தார்; அது தவறு. அவர் இங்கிலாந்தைச்சேர்ந்தவர் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இதழ்

161ல் வெளியாகிய கலாநிதி அகளங்கனின் வன்னி நாட்டார்பாடல் பற்றிய கட்டுரை பார்த்து வியந்து விட்டேன். அவருக்கு எனது நன்றிகள்.

ப. இ. சசிகரன், யூ.கே.

(ஞானம் 163, டிசம்பர் 2013)

✦ இதழாசிரியர் அவர்களுக்கும், மற்றும் சக ஆசிரியர் குழுவிற்கும் வணக்கங்கள்.

நேற்று (19-01-2014 அன்று) என்னுடைய பாரதி ஆய்வு நூலகத்தில், எழுத்தாளர் திரு. அந்தனி ஜீவா அவர்களும், கவிஞர், திரு. த. துரைசிங்கம் அவர்களும் என்னைச் சந்தித்து உரையாடியது மட்டுமல்லாது, ஞானம் இதழை (ஜனவரி 2014) எனக்கு அறிமுகப்படுத்தினார்கள். அவ்விதழில் தமிழகச் செய்திகள் பகுதியில் (பக்கம்50), எனது பாரதி ஆய்வு நூலகம் பற்றியும், என்னைப் பற்றியும், திரு.கே.ஜி. மகாதேவா அவர்கள் எழுதிய ஆக்கம் கண்டு மகிழ்ச்சியடைந்தேன்.

உங்களைப் போன்ற ஒரு சிலரின் அன்பும் அரவணைப்புமே என்னுடைய உழைப்பிற்கும் தமிழ்ப்பணிக்கும் கிடைத்த மாபெரும் அங்கீகாரமாகும்.

ஈழத்து அறிஞர்களும் இலக்கியவாதிகளும், தமிழுக்கு செய்த தொண்டு மகத்தானது. போற்றுதற்குரியது. யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுகநாவலர், தென்புலோலியூர் கணபதிப்பிள்ளை, க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, ஆனந்தகுமாரசாமி, இந்திரபாலா, சி.பத்மநாதன், புஷ்பரட்னம், டொமினிக் ஜீவா, மு. தளையசிங்கம், மஹாகவி, டானியல், செ. கணேசலிங்கன், காத்தான்குடி அப்துல்காதர் லெப்பை, இஸ்லாமிய அறிஞர் அனஸ், முதலான எண்ணற்ற அறிஞர்களும் கலைஞர்களும் கவிஞர்களும் இலக்கியவாதிகளும் தங்களின் படைப்புகளால் தமிழன்னையை அழகுபடுத்தினார்கள். இஸ்லாமிய திருமறையான அல்குர்ஆனுக்கு முதன்முதலாக தமிழ் மொழிபெயர்ப்பு கண்டவர்கள் ஈழத்து அறிஞர்களே என்பதும் போற்றுதலுக்குரியது.

இமாம் ஷிஹாபுத்தீனுர் ரம்லி அவர்களுடைய ஃபைதாஹ் குர்ஆனை இலங்கையைச் சேர்ந்த அறிஞர் ஷைக் உதுமான் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்து கி.பி. 1863இல் வெளியிட்டுள்ளார். இதுவே குர்ஆனுக்கான முதல் (அரபுத்) தமிழ் மொழிபெயர்பு என்று அறிஞர்களால் ஏற்கப்பட்டுள்ளது.

நான் எப்பொழுதுமே ஈழத்து அறிஞர்களின் தமிழ்ப் பணியை வியந்து போற்றி வருபவன்.

தங்களுக்கும், தங்களைச் சார்ந்தோருக்கும் தமிழ்ப்பணி சிறக்க, என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னை, என்னுடைய தமிழ்ப்பணிகளை தங்களின் ஞானம் இதழ் மூலம் ஈழத்துத் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்துவைத்தமைக்காக மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்து இக்கடிதத்தை முடிக்கிறேன். நன்றி! வணக்கம்!அன்புடன்,

–பழங்காசு. ப. சீனிவாசன், திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.

(ஞானம் 165,பெப்ரவரி 2014)

✦ எனது பெயர் மிகிராணி மதுசங்கிகா. ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கலைமாணி சிங்கள மொழி விசேடதுறை மாணவி. ஞானம் சஞ்சிகையில் வெளிவந்த கவிதைகளில் போருக்குப்பின்னரான தமிழ்மக்களின் நிலைமை மற்றும் அவர்களது உணர்வுகள் சார்ந்த விடயங்கள் எவ்வாறு பிரதிபலித்துள்ளன என்பதைப்பற்றிய ஓர் ஆய்வை மேற்கொண்டு எனது பட்டப்படிப்பை நிறைவேற்றவுள்ளேன். இதற்கு 2009முதல் 2013வரையான காலப்பகுதியில் வெளிவந்த ஞானம் இதழ்கள் தேவைப்படுகின்றன. அவற்றைத்தந்து உதவுவதோடு ஞானம் போர்இலக்கியச் சிறப்பிதழ் ஒன்றையும் தந்து உதவுமாறு வேண்டுகிறேன். எனது ஆய்வு நிறைவேறிய பின்னர் தங்களிடம் பெற்றுக்கொண்ட இதழ்களைத் திருப்பித்தருவேன் என உறுதி கூறுகிறேன். எனது ஆய்வு தொடர்பாகத் தங்களை நேர்காணல் செய்யவேண்டியுள்ளது. அதற்கான நேரத்தையும் ஒதுக்கித்தருமாறு வேண்டுகிறேன்.

மிகிராணி, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், நுகேகொட.
(ஞானம் 171, ஆகஸ்ட் 2014)

✦ ‘உடலொன்றே உடமையா” ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் சிறுகதை படித்தேன். ஆங்கில உரையாடல்களை அப்படியே ஆங்கிலத்தில் வைத்திருந்தது புதுமையாக இருந்தது. தமிழ்நாட்டில் அதற்கான முயற்சியில் யாரும் இறங்கியதாகத் தெரியவில்லை.
தன்மனைவியை அடுத்தவன் குறை சொல்வதை ஏற்றுக்கொள்ள மனத்திடம் வேண்டும். .மனைவி அப்படியாகத்தான் இருப்பாளோ..?, இருக்கமாட்டாள்.... என கதையில் கதைமாந்தரின் தவிப்பும் அழுத்தமும் நிரம்பி இருந்தது. நல்லநடையில் ஒரு வித்தியாசமான கதை.

அண்டனூர்சுரா – தமிழ்நாடு (ஞானம் –174, நவம்பர் 2014)

✦ **175 ஈழத்துப் புலம்பெயர் இலக்கியச் சிறப்பிதழ்**
தங்களின் ‘ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம்’ என்ற மாபெரும் படைப்பு எங்களின் கைகளில் கிடைத்தது. பார்த்தவுடன் பிரமித்தோம். மகிழ்ச்சியடைந்தோம். இது ஒரு மிகப்பெரிய வேலைத்திட்டம். புதிய ஆக்கங்களுடன் எத்தனையோ எழுத்தாளர்களின் தொகுப்புகளை வாசித்து அதிலிருந்து சிறந்தவற்றை வடிகட்டி எடுத்து தொகுப்பாக்குதல் என்பது நீண்ட பயணங்களின் பெருமுயற்சி. தங்களின் இந்த முயற்சிக்கு காலமே நற்சான்றிதழை வழங்கும். இலக்கியம் என்பது காலத்தைப் பிரதிபலிப்பதாகும். இன்று நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கையின் பெரும்பகுதி இத்தொகுப்பில் பதிவாகி இருப்பதைப் பார்க்கும்போது தங்கள் இலக்கிய முயற்சியை நாம் மனதாரப் பாராட்டுகின்றோம். வரலாறுகள், இலக்கியங்கள் அந்தந்தக் காலங்களில் பதிவாகவேண்டும். இப்படி இருந்திருக்கலாம் என்று ஊகிப்பதற்குப் பெயர் வரலாறல்ல! இப்படித்தான் இருந்தது என்று அறுதியிட்டுக் கூறவேண்டும். நாம் வாழும் கால இலக்கியங்கள் வருங்காலத்தில் உண்மைகளைப்

பேசவேண்டும். இது எங்கள் கடமையும் கூட. வரலாறுகளை இன்றுநாம் தேடிக்கொண்டிருக்கிறோம்.

தங்களின் இந்த முயற்சி வரலாற்று முக்கியம் வாய்ந்த தொன்றாகும். தமிழ் இனத்தையும், தமிழ் இலக்கிய உலகத்தையும் பெருமைப்பட வைத்திருக்கிறது. தங்கள் எண்ணத்திற்கும் செயற்பாட்டிற்கும் இனியும் பூரண வெற்றிகிடைக்கும். இதற்கான வாழ்த்துக்களை எமது எழுத்தாளர்சங்கம் மீண்டும் மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றது. எங்களைப் பொறுத்தமட்டில் இது எல்லாவற்றாலும் கனதியானது. தங்கள் முயற்சிக்கு உதவுமுகமாக எமது எழுத்தாளர் சங்கம் பத்துப்பிரதிகளை எழுத்தாளர் திரு. ஜீவகுமாரனிடம் இருந்து பெற்றுக்கொண்டது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம்.

தமிழ் எழுத்தாளர் சங்கம், யேர்மனி – தலைவர் சிவராசா,
செயலாளர் பொன். புத்திசிகாமணி.
ஞானம்–178 (மார்ச்–2015)

✦ ஞானத்தின் பக்கங்கள் என்றும் போலவே கருத்தாழமாக இருந்தன. கீதா கணேஷின் 'மீண்டும் துளிர்க்கும் குருத்து' சிறுகதை அருமை. முடிவுக்கு பாராட்ட வேண்டும். அங்கதம் மற்றும் செறிவான சிறு வரிகள் என வாசிக்க சுவாரசியமாக இருந்தது. பல படைப்புகள் பிரசுரத்திற்கு வரும்போது எதைப் பிரசுரிப்பது என்பது கடினமே. ஆயினும் அப் படைப்புகளை பிற ஊடகங்களுக்கு அனுப்பாமல் எவ்வளவு காலத்திற்கு காத்திருப்பது என்பது எழுத்தாளர்களுக்கு எழும் சங்கடமே. இதை ஞானமும் அறியும் என நம்புகி றேன்.

– பசுந்திரா சசி, இலண்டன் (ஞானம் 179, ஏப்ரல் 2015)

✦ 179ஆவது ஞானம் இதழ் பார்த்தேன், பரவசித்தேன். 'முந்தையோர் ஈழத்தவரே" என்ற தலைப்புடன் ஒளிரும் குறிப்புகள் எமது தேடலுக்கு ஊக்கம் தரும் அருமையான பக்கங்களாயின. சிந்தனையை முன்னோக்கி நகர்த்தித் தேடலுக்குத் தீனி போடும் அவற்றின் உண்மைகள் ஈழத்தவரைப் புளகாங்கிதம் அடையச் செய்கின்றன.

'மேன்மக்கள் சரித்திரம்" தந்த இரத்தினசாமி ஐயர், 'இரகுவம்சம்" தந்த அரசகேசரி, 'காலக்குறிப்பு அகராதி" தந்த க.சி.கந்தையாபிள்ளை, தட்டச்சின் தந்தையான இரா.முத்தையா, இந்தியக் கலைகளை உலகறியச் செய்த கலாயோகி ஆனந்த குமாரசாமி ஆகியோர் ஈழத்தவரே என்கின்றபோது எழுகின்ற பெருமிதம் மேலும் ஈழத்தவரின் அயரா இலக்கியத் தேடலுக்கு ஊக்கம் தருகின்றது.

இத்தகைய உளம் பூரிக்கச் செய்யும் உண்மைகளை ஞானம் சஞ்சிகை ஊடாக எமக்குப் பதிவு செய்த ஞா.பாலச்சந்திரன் பாராட்டுக்கு உரிமையுடையவராவார். ஞானம் மேற்கொள்ளும் இலக்கியப்பணிகளில் மகிழ்வும் பெருமையும் கொள்ளும் நாம், ஞானம் வழங்கும் இலக்கியப் பதிவுகளையும் காலத்தை விளக்கும் வரலாற்றுப் பொக்கிசங்களாகவே மதிக்கின்றோம்.

இலக்கியங்களுக்கும் இலக்கிய கர்த்தாக்களுக்கும் ஞானம் மதிப்பளிக்கும் சிறப்புக்கள் தொடரவும் ஞானம் எமது இலக்கிய வானிலே ஒளிரவும் வாழ்த்து கிறேன்.

– நெடுந்தீவு மகேஷ் (ஞானம் 180, மே 2015)

✦ மதிப்புக்குரிய ஞானம் இதழாசிரியருக்கு, தங்களின் வெளியீடான ஞானத்தில் இம்முறை (185) எனது ஆக்கமும் வெளிவந்தமை கண்டு மகிழ்வுற்றேன். இளம் எழுத்தாளராய் இப்பொழுதுதான் பிரசவமாகிய என்னை உடனே தூக்கி உலகிற்கு அறிமுகப்படுத்திவிட்டீர்கள். தங்களுடைய சீரிய பணியினூடு என்போன்ற எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்கு மிக்கநன்றி.

– க.கனகதுர்க்கா, யாழ்ப்பாணம். (ஞானம் 186, நவம்பர் 2015)

✦ ஞானம் இதழில் (188) கனடிய தமிழர் இலக்கியம் - குரு அரவிந்தனின் பங்களிப்பு என்ற தலைப்பில் 25 வருடகால கனடிய இலக்கிய சேவைப் பாராட்டு நூல் பற்றிய ஆக்கபூர்வமான குறிப்பை எழுதியமைக்காக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பல இலக்கிய ஆர்வலர்கள் அதை வாசித்துவிட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் மின்னஞ்சல் மூலமும் பாராட்டியிருந்தார்கள். சிலர் என்னை ஒரு ஈழத்தமிழர் என்று தெரிந்து கொண்டதில் பெருமைப்படுவதாகப் பாராட்டினார்கள். தங்கள் அன்பிற்கும், ஆதரவிற்கும் எனது இதயம் கனிந்த நன்றி.

அன்புடன் குரு அரவிந்தன், கனடா (ஞானம் 189, பெப்ரவரி 2016)

✦ தங்களைப்பற்றி ஏழைதாசன் இதழில் அட்டைப்படத்துடன் வந்த கட்டுரை படித்தேன். பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. கடல்கடந்து இருந்தாலும் அன்னை தமிழுக்கு மகுடம் சூட்டிவரும் தங்களைப் போன்றவர்களால்தான் தமிழ் உலகெங்கும் பரவி வளர்ந்து வருகிறது. இதயம் நிறைந்த வாழ்த்துக்களை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

– கவிஞர் சா. அரிராசு, எழுத்தாணி மாதஇதழ், சென்னை – 45
(ஞானம் 193, ஜூன் 2016)

✦ ஹாவாட் பல்கலைக்கழகத்தில் தமிழ்ச்சங்கப் பேராசியர் இருக்கை அமைவது பற்றிய செய்தி மிக முக்கியமானது. இராமர் பாலத்துக்கு அணில் தன்பங்காக ஒரு சிறுகல்லைப்போட்டதுபோல தமிழர்கள் தம்மாலான பொருளுதவி வழங்கி ஹாவாட் பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்றல் செயற்பாடுகள் இடம்பெறச் செய்யவேண்டும்.

– Dr. உமாபதிசிவம், முள்ளியான் (ஞானம் 195, ஆகஸ்ட் 2016)

✦ 195வது ஞானம் இதழில் வெளிவந்த நான்காம் தொழிற்புரட்சி (Fourth Industrial Revolution) தொடர்பான கட்டுரை மிகப் பிரமாதம். இது என்னை 1980களில் மின்கலத்தின் (Battery) உதவியுடன் கறுப்பு - வெள்ளை தொலைக்காட்சியில் பார்த்து ரசிக்கும் “Beyond 2000” என்ற நிகழ்ச்சிக்கு மீட்டுச் சென்றது, அது 2000ஆம் ஆண்டிற்குப் பின் நடக்க இருக்கும்

புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பான நிகழ்ச்சிகள் தற்போது உண்மையாகி இருப்பதை காணமுடிகின்றது. இங்கு முக்கிய விடயம் என்னவெனில் எந்த ஒரு சமுதாயமும் நிகழ்கால வாழ்க்கைமுறைக்கு பழக்கப்பட்டுவிடும். நாம் எப்படி பழக்கப்பட்டு இருக்கின்றோமோ அப்படியே 2030 / 50ம் ஆண்டுகளில் உள்ளவர்களும் அதற்குள் உள்வாங்கப்படுவர். இக்கட்டுரை எம்மைப் போன்ற தொழில்துறைகளோடு சம்பந்தப்பட்டோருக்கு புலப்படக்கூடிய விடயம் என்றாலும் வேறு துறையைச் சேர்ந்தோருக்கும் பயனுள்ள விடயமாகும். இத்தருணத்தில் கட்டுரையாளருக்கு மிகுந்த நன்றியைத் தெரிவிக்க வேண்டும், ஏனெனில் தகவல் தொழில்நுட்பத்தை எப்படி தமிழ் இலக்கிய மேம்பாட்டிற்காக அவர் பயன்படுத்துகிறார் என்பதை நினைக்கும்போது மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. இது ஞானம் ஆசிரியர் தமது வைத்தியத்துறையில் நின்றுகொண்டு தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றும் அளப்பரிய பங்கைப் போன்றதாகும்.

நிகழ்காலத்திலும் சரி, எதிர்காலத்திலும் சரி ஒவ்வொரு துறையும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுவதென்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். உதாரணமாக இயந்திரவியலும் (Mechanical), மின்னணுவியல் (Tronics) துறையும் தற்போது Mecatronics என்னும் இணைந்த பொறியியல் துறையாக உள்ளது போல முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் எல்லாத் துறைக்கும் மிகவும் அத்தியாவசிய ஒன்றாக மாறியிருக்கின்றது. எனவே தமிழ் இலக்கியச் செயற்பாடுகளும் புதிய மாறுதல்களுக்கு ஏற்ப உட்படுத்திக் கொள்ளும்போது மொழிகள் வரலாற்றில் தமிழ் மொழியும் தனக்கு உரித்தான செழுமையை மேலும் நிலைநிறுத்திக் கொள்ளமுடியும். இதற்கான முயற்சிகளைத்தான் கட்டுரையாளர் ஞானம் பாலச்சந்திரன் போன்றோர் தமது அளப்பரிய பங்களிப்புகளைச் செய்துகொண்டிருக்கின்றனர்.

கட்டுரையில் குறிப்பிட்ட நான்காம் தொழிற்புரட்சி தமிழ் மக்களுக்கு நன்கு பழக்கப்பட்ட விடயமாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் எல்லா வளர்ச்சியடைந்த நாடுகளிலும் எமது மக்கள் புலம்பெயர்ந்து வாழ்கின்றார்கள். இதில் முக்கியவிடயம் என்னவெனில் வெவ்வேறு நாடுகளில் வாழும் வெவ்வேறு துறையைச் சேர்ந்தவர்களும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஒத்துழைப்புகளை வழங்கும்போது சிறந்த இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெறும் சிறந்த தமிழ் இலக்கியம் உருவாவது தவிர்க்க முடியாததாகும். அப்படி ஒரு தருணம் வந்தால் அதற்கான உந்துதலை அளித்ததில் 'ஞானத்'தின் பங்கு பெரிதாக இருக்கும்.

– எம். ராஜ், களனியா.

(ஞானம் 196, செப்டெம்பர் 2016)

✦ ஞானம் இதழ்களை இணையத்தில் வாசிக்கக் கிடைக்கிறது. ஒவ்வொரு மாதமும் முதலில் நான் வாசிப்பது எமது நாட்டில் என்ன நூல்கள் வெளிவந்துள்ளன. என்ன இலக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன போன்ற விடயங்களையும் மற்றும் உள்நாட்டு அரசியல் கலை இலக்கியத் தகவல்களைத் தரும் பத்தி எழுத்துக்களையும்தான். புலம்பெயர்ந்த

எம்மவருக்கு சொந்த நாட்டின் கலை இலக்கிய நிகழ்வுகளைத் தரும் சமகாலத் தகவல் களஞ்சியமாக ஞானம் உதவுகிறது.

–இரா. சிவபாலன், நோர்வே (ஞானம் 197, ஒக்டோபர் 2016)

✦ ஞானம் 200 சிறப்பிதழ், 1000 பக்கங்களில் எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், கலைஞர்கள், 60 பேரின் நேர்காணல்கள், பல்வேறுபட்ட சிந்தனைகள், கருத்துக்கள், ஈழத்து நவீன கலை இலக்கியங்கள் பற்றிய அற்புதமான தொகுப்பு. ஒவ்வொருவரும் ஒவ்வொரு உலகம், பல்வேறுபட்டு மோதும்போது புதிய சிந்தனைகள் நமக்குள். சிலரின் ஆளுமைகள் சரித்திரம் படைக்கிறது உன்னதம் தொட்டு.

சிறு குறிப்பு: சிற்பியின் நேர்காணலில் (பக்கம் 127)

'ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கொண்ட கலைநயம் மிக்க ஆக்கங்களால் ஈழத்து தமிழ் இலக்கியத் துறையை செழுமைப்படுத்தி வரும் செங்கைஆழியான், செம்பியன் செல்வன், செ. யோகநாதன், யாழ். நங்கை, ச.வே. பஞ்சாட்சரம், பெனடிக்ற் பாலன், சாந்தன், வே.குமாரசாமி, மயிலன், பொ. சண்முகநாதன், மு. பொன்னம்பலம், தி. ஞானசேகரன், மு. கனகராஜன், பா. சத்தியசீலன் மட்டுவிலான், கவிதா, பாமா இராஜகோபால், கான மயில்நாதன், து. வைத்திலிங்கம், வி.க. ரட்னசபாபதி, இளையவன், செ. கதிர்காமநாதன், முனியப்பதாசன், க. பரராஜசிங்கம், மணியம், முகிலன், பெரி.சண்முகநாதன் என்பவர்கள் கலைச்செல்விப் பண்ணையில் வளர்ந்தவர்களே" என்ற குறிப்பு தரப்பட்டுள்ளது.

இதில் 'இமையவன்" என்ற எனது புனைபெயரே 'இளையவன்" என்று தவறாக அச்சிடப்பட்டுள்ளது என்றே நினைக்கிறேன். என் ஆரம்ப எழுத்துக்கள் கலைச்செல்வியிலேயே வந்தன.

அன்று கலைச்செல்வி செய்த சேவையை இன்று இன்னும் விரிவாக, பெரிய அளவில் ஞானம் செய்து வருகிறது.

– இ. ஜீவகாருண்யன் (ஞானம் 201, பெப்ரவரி 2017)

✦ படைப்பாளியின் நெஞ்சகத்திலிருந்துவரும் கவிதை எளிதாகத் தன்னை இனங்காட்டிவிடும். புனைவு இன்றி, சத்தியத்தின் குரலாய் ஒலிக்கும் ஒரு கவிதை ஞானம் (201) இல் வந்துள்ளது. எதேச்சையாகத்தான் கண்ணில்பட்டது. தாண்டிப்போயிருப்பேன், நல்லவேளை. ஜெஸீமா ஹமீட் எழுதிய 'வாப்பா'வைத்தான் குறிப்பிடுகிறேன். குடும்பத்துக்காக உழைத்து, உழைத்து ஓடாய்ப் போன வாப்பாவின் நினைவு 'அவர் வேர்வை' நினைக்கும் போதெல்லாம் மணக்கிறது. உண்மை அன்புள்ளவர்கள் தாம் செய்வதைப் பிரகடனப்படுத்துவதில்லை. 'நீங்கள் வாய்திறக்காமல் வாழ்ந்த வாழ்க்கை எனக்குப் பாடம் கற்பிக்கிறது' என்கிறார் கவிஞர். இருபத்தைந்து வருடங்களின் பின்னரும் வாப்பாவின் நினைவு சுமந்து வாழ்வது கூடப் பெரிதில்லை. 'உலகின் அத்தனை தந்தையர்களுக்காகவும் கண்ணீர் வருகிறது' என்ற கூற்றில் ஒலிக்கும் மானுடம் மகத்தானது. ஜெஸீமாவுக்கு என் வாழ்த்து.

புலம்பெயர்ந்த தமிழர்கள், தாம் இழந்த, சொந்த மண் குறித்த ஏக்கங்களை ஒதுக்கிவிட்டு, புகலிடத்து வாழ்க்கை பற்றி - அந்நிய நாட்டு மக்களோடு, வாழ்க்கையோடு, பண்பாட்டோடு ஏற்படும் இடைவினை பற்றி எழுத வேண்டும் என வலியுறுத்தி வந்திருக்கிறேன். ஸ்ரீரஞ்சனியின் (ஞானம் 201) சிறுகதை புதிய அநுபவம் ஒன்றை வாசகருக்குத் தருகின்றது. வயதில் மூத்த ஆண்களுக்கு இளம்பெண்கள் மீதுண்டாகும் ஈர்ப்பும், இளம் பெண்கள் தம் தந்தையர்க்குப் பதிலிகளாக மூத்த ஆண்களைக் கொள்வதும் உளவியல் சார்ந்த மனப்பாங்குகள். நெருடலான இக் கருப்பொருளை விரசம் ஏற்படாமல் கையாண்டுள்ள ஆசிரியைக்கு என் பாராட்டு!

– சோ.ப. (ஞானம் 202, மார்ச் 2017)

✦ ஞானம் அ. முத்துலிங்கத்தின் சிறப்பு மலரிலே (215) இருவேறு சிறப்புகளைக் காணமுடிகிறது.

(1) முதலாவது சிறுகதையிலேயே வாசகர்களின் நெஞ்சத்தைப் பிழிந்தெடுத்த முதுபெரும் எழுத்தாளர் அ. முத்துலிங்கத்தின் எழுத்தை யானை பார்த்த குருடர்களைப்போல தரிசித்திருந்த என்போன்றவர்களை, அனுபவமிக்க எழுத்தாளர்களைக்கொண்டு அவரது பல்வேறு பரிமாணங்களைத் தரிசிக்க வைத்துச் சாதனை புரிந்திருக்கிறது 'ஞானம்'. அதிலும் முனைவர் சரவணபவன் க(ா)ட்டிய உலா ஊர்தி ஒரு புதிய அனுபவத்தில் எம்மைச் சஞ்சரிக்க வைக்கிறது.

(2) ஒரு காலத்திலே தமிழக சஞ்சிகைகளில் எமது ஆக்கங்கள் வந்தாலே எமக்கு விடிவுகாலம்என்றமாயைக்குநாம்ஆட்பட்டிருந்தோம். இருபதுஆண்டுகளுக்கு முன்னர் எனது சிறுகதை ஆனந்த விகடனில் பிரசுரமானபோது, எமது பேச்சுத்தமிழில் கை வைத்திருந்தமையும், கதைக்குரிய வெகுமதியாகிய நூற்றியம்பது ரூபாவை இந்திய நாட்டுச் சட்டத்துக்கமைய எனக்கு அனுப்ப முடியாதெனவும் தமிழ்நாட்டு முகவரி ஒன்று தருமாறும் விகடன் ஆசிரியர் கேட்டமையும் என்னை மனக்கசப்புக்குள்ளாகினாலும், நானும் அதைச் சுகானுபவமாகக் கருதிய துண்டு. இன்றைக்கு நிலைமை மாறி 'ஞானம்' தமிழக எழுத்தாளர்களின் படைப்புகளைத் தாங்கி வருகிறது. பரிசுபெற்ற ஆக்கத்தைத் தந்த அண்டனூர் சுரா ஒரு கடன்பட்ட நெஞ்சத்தின் சோகச் சுமையையும் கடன் கொடுத்தோரின் அராஜகத்தையும் மறைமுகமாகக் காட்டும் உத்தி என்னை வெகுவாகவே கவர்ந்திழுக்கிறது.

ஞானத்தின் பணி தொடரட்டும்.

– வே. தில்லைநாதன், திருகோணமலை. ஞானம்216(மே2018)

✦ ஞானம் புலம்பெயர் எழுத்தாளர் சிறப்பிதழ் வெளியீட்டின்போது உங்கள் சார்பில் நன்றி சொல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. பின்னர் இலக்கியத் தோட்டம் உங்களுக்கு வழங்கிய விருதினை உங்கள் சார்பில் பெறும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது மேலும் இனிமையான மகிழ்ச்சி. இதை என்னவெனலாம்?

– ஸ்ரீரஞ்சனி, கனடா. (ஞானம் 218, ஜூன் 2018)

ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையின் ஆசிரியராகத் தொடர்ந்து இலக்கியப்பணி ஆற்றிவரும் ஞானசேகரன் அவர்களால் மாதாந்தம் எழுதப்பெற்றுவந்த ஆசிரியத் தலையங்கங்களை தெரிவுசெய்து இலக்கியம், சமூகம், அரசியல், மற்றும் பல்துறை எனும் நான்கு தலைப்புக்களின்கீழ் தொகுத்துத்தரும் "பகிர்தலும் புரிதலும்" எனும் இந்த நூலில் எல்லாமாக நூற்றொரு ஆசிரியத் தலையங்கங்கள் தொகுக்கப்பெற்றுள்ளன.

பொதுவாகவே ஞானத்தின் ஆசிரியத் தலையங்கங்கள் ஒவ்வொன்றிலும் ஒருவகை பல்துறைசார்ந்த அலசல் வந்தமைந்துவிடுவது குறிப்பிடத்தக்கது. இலக்கியம்பற்றி எழுதும்போது அரசியலும், அரசியல்பற்றி எழுதும்போது சமூக விவகாரங்களும், சமூகம்பற்றி எழுதும்போது இலக்கியகர்த்தாக்களின் பொறுப்புணர்வு பற்றியும் துறையிடைத்தொடர்புடன் வெளிவந்த தலையங்கங்களாகவே அமைந்துள்ளன. இதனால் ஞானசேகரனின் ஆசிரியத் தலையங்கம் வெளிப்படுத்தும் கருத்துக்களின் அடிப்படையில் அவரின் சமூக, பண்பாட்டு, அரசியல், இலக்கிய, கல்வி, கலைகள் தொடர்பான சிந்தனைகளை பாரம்பரியமான வாழ்வின் தடத்தில் ஆழமாகக் கால்பதித்தநிலையில் இருந்தவாறே, அதனைக் கடந்த உலக ஓட்டங்களின் தடங்களைத்தொட எத்தனிக்கும் ஈழத்து இலக்கியகாரர் ஒருவரின் கருத்து நிலைகளாக நோக்கலாம்.

புரிதல்கள் எனும் பகுதியில் அமைந்த பெரும்பாலான குறிப்புக்களில் ஞானத்தின் ஆசிரியத் தலையங்கங்களில் பகிரப்பட்டுள்ள விடயங்களுக்கான பாராட்டுக்களும், அவற்றை முன்வைத்த கருத்துக்களும் அடங்கியுள்ளன. உலகளாவியரீதியில் நன்கறியப்பட்ட எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், கலைஞர்கள், வாசகர்கள் என்று பல தரப்பினரதும் கருத்துக்கள் "பச்சையாகவே" தொகுக்கப்பட்டுள்ளன. வரதர், சிற்பி, நந்தி, கே.கணேஷ், வல்லிக்கண்ணன், கா.சிவத்தம்பி முதலான அமரராகிப்போன படைப்பாளிகள், விமர்சகர்கள் வாழும் காலத்தில் எழுதிய கருத்துக்கள் பதிவாகியுள்ளன. மேலும், தமிழகத்து ஆய்வாளர்கள், புலம்பெயர்நாடுகளின் படைப்பாளிகள் போன்றோரின் கருத்துக்களும் இதனுள் அடங்குகின்றன. இவை யாவற்றையும் ஞானத்தின் ஆசிரியத் தலையங்கங்களுடன் சேர்த்துப் படிக்கும்போது அத்தலையங்கங்களின் கனதியை மேலும் அதிகரிக்கச்செய்கின்றன.

இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன்
முதுநிலை விரிவுரையாளர்,
துறைத்தலைவர், சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஞானம் பதிப்பகம்

ISBN 978-955-8354-84-1
9 789558 354841